# மாணிக்க மாலை

வித்வான்
ல. சண்முகசுந்தரம்

சண்முகம் பதிப்பகம்
8, பழனியாண்டவர் தெரு
சிந்தாதிரிப் பேட்டை-சென்னை, 600002

மாணிக்க மாலை
முதல்பதிப்பு
உரிமை ஆசிரியருக்கே

| | | |
|---|---|---|
| நூல் | : | மாணிக்க மாலை |
| பதிப்பாண்டு | : | 1986 |
| ஆசிரியர் | : | ல. சண்முகசுந்தரம் |
| பதிப்பாளர் | : | சண்முகம் பதிப்பகம்<br>8, பழனியாண்டவர் தெரு,<br>சிந்தாதிரிப்பேட்டை சென்னை-600002 |
| | : | தொலைபேசி 566119 |
| அச்சிட்டோர் | : | நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்<br>137, ஜானி ஜான்கான் தெரு<br>சென்னை-600014<br>தொலைபேசி : 82731 |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| விலை | : | ரூபாய் 50 |
| நூல்வகை | : | இலக்கியம் |
| பக்கம் | : | 16+416=432 |
| தாள்—நிறை | : | 16 கிலோ |
| அச்சு | : | 10 பாயின்ட் |
| பைண்டிங் | : | ஆய்காலிகோ |

# முகவுரை

சுத்தமான பசுவின் நெய், பாதாம் பருப்பு, ஜீனி, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், முந்திரிப் பருப்பு இவைகளைக் கொண்டு அல்வா தயாரிக்கிறோம். ஒரு துண்டு அல்வாவை எடுத்து வாயில் போட்டால் போதும். தண்ணீராய்க் கரைந்துவிடும் அல்வா. நாக்கு மட்டுமா, உடம்பெல்லாம் இனிக்கும். வாய்க்கு ருசி, மனத்துக்கும் ருசி, உடம்புக்குத் தெம்பூட்டும் சஞ்சீவி என்று சொல்லலாம் அல்வாவை—பாதாம் அல்வாவை.

ஆனாலும் பதினைந்து நாட்கள் ஆகிவிட்டால் அல்வாவின் ருசி இறங்கிவிடுகிறது. மேலும் பத்து பதினைந்து நாட்கள் ஆகி விட்டால் புளிப்புத் தட்டிவிடுகிறது. சளிப்பு வாடை அடிக்கிறது. அல்வாவுக்கு ஆயுள் அவ்வளவுதான்.

இனி, தங்கக் கரைபோட்ட பட்டாடையைப் பார்க்கிறோம். பளபள என்று கண்ணைப் பறிக்கிறது பட்டாடை. ஆனாலும் உடுத்த உடுத்த—துவைக்கத் துவைக்க பட்டாடை பிரிந்து விடுகிறது. நைந்து போகிறது. தும்பு தும்பாய் நார்நாராய் போய் விடுகிறது பொன்னாடை. அதற்கு ஆயுள் ஒரு வருஷம் அல்லது இரண்டு வருஷந்தான்.

தேவாமிர்தத்திற்குப் போட்டியாக நமது பெண்டுகள் வைக்கிறார்களே, அவியல், பொரியல், பச்சடி, குழம்பு, ரசம் இவைகளுக்கு ஆயுள் ஒரு பொழுதுதான். பகல்ப் பொழுது போய் இரவு வந்துவிட்டால்ப் போதும். இவைகளுக்குக் கிறுக்குப் பிடித்து விடும். ஊசிப்போகும். பாயசமும் அப்படித்தான். மோர், பால்

இவைகளும் அப்படியே. அமிர்தம் அப்படி நஞ்சாகி விடுகிறது. அதாவது குடலை உருவுகிற அளவுக்கு கள்ளாய்ப் புளித்துப் போகிறது.

காய் என்ன, மதுரமான கனி என்ன எல்லாம் நாளாக நாளாக வேஷம் கலைந்து அழுகிவிடுகின்றன.

உணவும் உடையும் அப்படி இருக்கட்டும். கல்கோட்டை என்று சொல்லும்படி கட்டிய மாடமாளிகை கூடகோபுரம் கூட வயது ஏற ஏற தள்ளாடிவிடுகின்றன. நிற்கவும் முடியாமல், உட்காரவும் முடியாமல் தத்தளிக்கின்றன கோட்டை கொத்தளங்கள்.

இனி, வயிரம் பாய்ந்த மரங்கள் கூட வயதாகிவிட்டால் பொந்து விழுந்து பொடிப் பொடியாய் உதிர ஆரம்பித்து விடுகின்றன. தோலுரிந்து உளுத்து விடுகின்றன கல்லுளியாய் நின்ற மரங்கள்.

யானை எவ்வளவு பெரிய பிராணி, அது தன் காலைத்தூக்கித் தரையில் வைக்கிற பொழுது பூமியே குலுங்கும். ஆனாலும் யானைக்கு வயதாக வயதாக நடக்க முடியவில்லை. கால் தள்ளாடுகிறது.

நாமும் நம்மைச் சுற்றி உள்ளவர்களும் வாலிபப் பருவத்தில் எவ்வளவு அழகு? கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அதை விடக் குழந்தைப் பருவம். அள்ளி எடுத்து மடியில் வைத்து ஒவ்வொருவரும் கொஞ்சி மகிழ்ந்தார்கள். ஆனால் அந்த வாலிபம்' முறுக்கு, இளமை, பொலிவும் எல்லாம் எங்கே போயின! ஒன்றுமே இல்லையே! அறுபது எழுபது என்று வயது வந்தாலே போதும். கட்டிவயிரமாய் இருந்த உடம்பே உருமாறிப் போய்விடுகிறது.

எல்லாவற்றுக்கும் இப்படி ஒரு காலக்கெடு இருக்கிறது. கவி ஒன்றுக்கு மட்டும் காலக்கெடு என்று ஒன்று இல்லை. உண்மையான கவி என்றால் அது என்றென்றும் அழியாத் தன்மை பெற்றது தான். ஆயிரம் வருஷமானாலும், இரண்டாயிரம் வருஷமானாலும், அன்று போல் இன்றும், இன்று போல் என்றும் ஜொலித்துக் கொண்டே இருக்கும் கவி.

வயதாக வயதாகக் கவிக்கு இளமை கூடுகிறது. பொலிவு ஏறுகிறது. ஊக்கம் உண்டாகிறது. அதிகாரம் பெருகுகிறது. மற்றப் பொருள்களைப் போல் கவியானது காலப் போக்கில் அழுகி விடுவதில்லை. புளித்துப்போவதில்லை. ஊசிக்கெடுவதும் இல்லைதான்.

இப்படி ஒரு அழியாத் தன்மை கவியில் இருக்கிறது. அது மட்டுமா, ஒரு உண்மை, அது எது பற்றியதாக இருந்தாலும் சரி, உணர்ச்சி மயமான உண்மை ஒன்று நம் கண் எதிரில் வந்து நிற்க வேண்டும் என்றால் அது கவியின் மூலமாகத்தான் முடியும்.

மற்றவை மூலம் உண்மை தெளிவாகத் தெரியாது. உண்மையைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்துவிட்டு வெறும் விஷயம் மட்டுமே முன்வந்து நிற்கும். கவியின் துணை இல்லாமல் ஒன்றைப் பார்க்கிற பொழுது நம் ஆணவம் செயல்படுகிறது. அறிவு என்கிற பெயரோடும், அனுபவம் என்கிற பெயரோடும் ஆணவம் செயல் படுகிறது. ஆணவம் என்ன செய்கிறது? உணர்ச்சிமயமான உண்மையை அதட்டி உட்கார வைக்கிறது. வெறும் விஷயத்தை, புள்ளி விபரங்களோடு கூடிய நிகழ்ச்சியை, சம்பவத்தை முன்னே வந்து நிற்கும்படி தள்ளிவிடுகிறது.

கவி வருகிறது என்று தெரிந்தால் போதும். ஆணவம் பம்மி விடும், வாலைச் சுருட்டிக் கொண்டு ஒளிந்து கொள்ளும். அப்பொழுது உண்மையானது உணர்ச்சிமயமாகப் பொங்கி, அருவி கொட்டுவது போலக் கொட்டும்.

ஒரு இளைஞனும் யுவதியும் பழகுகிறார்கள். உறவாடுகிறார்கள். திளைக்கிறார்கள். மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் விஷயம் இன்னதென்று தெரியும். கூடவே எரிச்சல் வரும். பொறாமை காரணமாகவே எரிச்சல் வரும். பகை கூட உண்டாகும். நான் என்னும் ஆணவம் இருக்கும்வரை அப்படித் தான். அடிப்படையான அன்பு இன்னதென்று தெரிய விடாது ஆணவம். உண்மையை மறைத்து விடுவதால் விஷயம் ஒன்றே—குழப்பம் ஒன்றே நிற்கிறது.

இனி, இளைஞனும் யுவதியும் ஒருவர் மேல் ஒருவர் வைத் திருக்கிற ஆசையையும் மோகத்தையும் கவியானது எடுத்துச் சொல்கிற பொழுது அது நம் மனதைக் குளிர வைக்கிறது. அமைதியை உண்டாக்குகிறது. ஆனந்தத்தால் அப்படியும் இப்படியும் துள்ளுகிறது நம் இதயம். காரணம் என்ன? கவியானது விஷயத்தை ஒதுங்கி நிற்கும்படி செய்கிறது. உணர்ச்சியை—அன்பை அப்படியே நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. பிறகு, காதலின் மேல் நமக்கு எரிச்சல் இல்லை. கல்கண்டாய் இனிக்கிறது காதல்.

கீழான அம்சங்களை எல்லாம் சுட்டெரித்துவிட்டு சொக்கத் தங்கமாய் மனிதனை உயர்த்திவிடுகிறது கவி. சிறிது யோசனை செய்து பார்த்தால் மனிதர்களை மட்டுமல்ல, பாஷையையே அப்படி உயர்த்தி விடுகிறது கவி என்று தெரியும். ஏன்? கடவுளைக் கூட—எல்லாம் வல்ல இறைவனைக் கூட கோடி சூரியப் பிரகாச மாய் ஜொலிக்க வைக்கிறது கவி.

அதனால் நமக்கு மட்டும் அல்ல, பாஷைக்கே லட்சியம் கவி தான். கடவுளுக்குக்கூட கவிதான் லட்சியம்.

பக்தர்கள் பாடும் பாடல்களைக் கேட்டுக்கேட்டு இறைவனுக்கு ஊக்கம் உண்டாகிறது. அந்த ஆனந்த வெள்ளத்தில் இறைவன் உருகிக் கரைந்து விடுகிறான். அதற்காகவே பக்தர்களைத் தேடி வருகிறான். பக்தர்கள் எங்கெங்கு போவார்களோ அங்கங்கு போய் அவர்களைச் சுற்றிச் சுற்றி வருகிறான் பெருமான்.

இனி, ஒரு குழந்தையிடம் அடம் இருக்கலாம். பிடிவாதம் இருக்கலாம். திமிர்கூட இருக்கலாம். ஆனாலும் குழந்தையைப் பார்த்த மாத்திரத்தில் தாயின் உள்ளம் உருகிவிடும். ஏன், குழந் தையை நினைத்த மாத்திரத்திலேயே உருகிவிடும் தாயின் உள்ளம். கோளாறுகளை விலக்கி வைத்து விட்டு குழந்தையை அன்போடு பார்ப்பாள். ஆர்வத்தோடு எடுப்பாள். கட்டிஅணைத்து முத்தம் கொடுப்பாள்.

கடவுளும் அப்படித்தான். பக்தர்களிடம் கோளாறுகள் பல இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். அவை பற்றி அவருக்குக் கவலை இல்லை. அவருக்குப் பாட்டுதான் முக்கியம். பாட்டுக்காக ஓடிவருவார். எங்கிருந்தாலும் ஓடி வந்து விடுவார். மேலும் மேலும் பாடும்படி பக்தர்களைத் தூண்டுவார். உற்சாகப் படுத்துவார்.

பாட்டைக் கேட்டுக் கேட்டுப் பரவசம் அடைவான் பெரு மான். தன்னுடைய பரவசத்தை பக்தர்களுக்குக் காட்டியும் விடு வார். அந்த ஆனந்தத்தைப் பார்க்கப் பார்க்க நம் மனதிலுள்ள அழுக்கு முழுவதும் கரைந்துவிடும். அப்படித் தோன்றாத் துணை யாய் நின்று இறைவனையும் அடியார்களையும் ஒன்று படுத்துகிறது கவி. இது மாணிக்கவாசகர் கண்ட அனுபவம். மாணிக்கவாசகர் போல இந்த அனுபவத்தை பக்தர்கள் ஒவ்வொருவரும் கண்டிருக் கிறார்கள்.

மாணிக்கவாசகர் தம் அனுபவத்தை எப்படி எடுத்து வழங்குகிறார் என்று பாருங்கள்.

நாயேனைத் தன்னடிகள்
பாடுவித்த நாயகனைப்,
பேயேன(து) உள்ளப்
பிழைபொறுக்கும் பெருமையனை,
சீஏதும் இல்லாதென்
செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே
சென்றூதாய் கோத்தும்பீ,

தம் அனுபவத்தை அற்புதமாய் எடுத்துச் சொல்லிவிட்டார் மாணிக்கவாசகர். கவியின் தெய்வாம்சத்துக்கு இதைவிடவேறு என்ன அத்தாட்சி வேண்டும்.

இனி, மேலும் தன் அனுபவம் பற்றி மாணிக்கவாசகர் சொல்வதைப் பார்ப்போம்.

அண்ட பிண்டசராசரங்களாய் விளைந்து அவை ஒன்றுக்கும் அகப்படாத இறைவன் மனிதர்களைத் தேடிவருகிறான். வீட்டுக்கு வீடு, தெருவுக்குத்தெரு, ஊருக்கு ஊர் என்று எழுந்தருளி நிற்கிறான்.

அவன் கோவில் கொண்டு மூர்த்தியாய் எழுந்தருளியதும், தேரேறி வீதி உலாவருவதும் பக்தர்கள் பாடும் பாடல்களைக் கேட்டு இன்புறுதலுக்குத் தான். பாடல்களைக் கேட்டுக்கேட்டு ருசி கண்டு விட்டான் பெருமான். அந்த ருசியை அவனால் மறக்க முடியவில்லை.

மாணிக்கவாசகர் சொல்கிறார். "பாடு, பாடு, என்று என்னை உத்சாகப் படுத்திக் கொண்டே இருக்கிறான் பெருமான். என் முதுகை அவன் தட்டிக் கொடுக்கத் தட்டிக் கொடுக்க எனக்குப் பாட்டு வருகிறது. அந்தப் பாடல்களை அவன் கேட்டுக் கேட்டு சொக்கி விடுகிறான். அவனுடைய ஆனந்தத்தைப்

---

(பாடுவித்த நாயகன் - கவிபாடும் படி உத்சாகப் படுத்திய இறைவன். உள்ளப் பிழை - பொய், பித்தலாட்டம் முதலிய கொடுமைகள். சீ ஏதும் இல்லாது - அருவருப்போ, வெறுப்போ அணுவளவுகூட இல்லாமல். செய்பணிகள் கொண்டருளும் - என் பாடல்களை உவந்து ஏற்றுக் கொண்ட.)

பார்க்கப் பார்க்க எனக்கு ஊக்கம் உண்டாகிறது. என்னுடைய பேதைமை, மயக்கம், பயம் எல்லாம் கரைந்து விடுகின்றன. புடம் போட்டெடுத்த சொக்கத் தங்கமாய்ப் பிரகாசிக்கிறேன் நான்'' என்று அதிசயப்படுகிறார் மாணிக்கவாசகர்.

மேலும் சொல்கிறார் மாணிக்கவாசகர்.

''நறுமணம் கமழும் கொன்றைமாலை அணிந்த சிவபெருமான் என்னைத் தேடிவந்து விட்டான். அழுகிக் குளுகுளுத்துப் போன என் ஊன்வழிபுகுந்து, என் உணர்ச்சியோடு கலந்து விட்டான். ஊரறிய, உலகறிய, அவ்வளவுபேரும் மூக்கின் மேல் விரல்வைத்து அதிசயிக்க வெட்ட வெளிச்சத்தில் என்னை அவன் வந்து கலந்தான். இதில் ரகசியம் ஒன்றும் இல்லை.

''தேன்ஆடு கொன்றை
சடைக்கணிந்த சிவபெருமான்
ஊன்நாடி நாடிஎன்
உள்புகுந்தான் உலகர்முன்னே''

எல்லோரும் கண் கொட்டாமல் பார்த்துநிற்க என்னை அவன் தேடி வந்தானே! அது எதற்காக? தேடிவந்தது மட்டுமா! என்னை விட்டுப் பிரியாமல் என்னுடனேயே அவன் தங்கிவிட்டானே, அது எதற்காக?

''அவனுடைய அருமையையும் எளிமையையும் நினைந்து நினைந்து நான் உருகுகிறேன். உருகிக் கரையக் கரைய அது பாடலாய் வருகிறது. அந்தப் பாடல்களைக் கேட்டு அனுபவிக்கவே அவன் என்னைத் தேடிவந்தான். என்னோடு சேர்ந்து உடகார்ந்தான். உட்கார்ந்தது மட்டுமா? ''ஆடலரசே, அம்பலத்தரசே'' என்று நான் கதறிப் பாடுவேன். அந்தப் பாடல்களில் உள்ள இசையும் தாளமும் அவனை உருக்கிவிடும். அவன் ஆட ஆரம்பிப்பான். தாளத்தின் நெளிவுசுளிவுகளுக்கு ஏற்றபடி அவன் அபிநயம் பிடித்து ஆடிக் காட்டுவான். தாண்டவக்கலையையே என்னிடம் படிக்க வந்தவனைப் போல, சீருக்குச்சீர், வரிக்கு வரி, நின்று நின்று, முத்திரை பிடித்து ஆடிக் காட்டுவான் (நடம் பயிலும் சிவபெருமான்)

''நான்நாடி ஆடி
ஓலம்இட நடம்பயிலும்
வான்நாடர் கோ...''

''இப்படியாக, பாட்டுக்காகவே சுற்றிச் சுற்றிவருகிறான் இறைவன் தோழமை கொள்கிறான் இறைவன். அக்கம் பக்கம் நான் விலகி விடாதபடி என் கூடவே இருக்கிறான் இறைவன்.

''அந்த இறைவனுக்கு மாலை தொடுக்க, பூப்பறிக்கவேண்டும் என்கிறார் மாணிக்கவாசகர்''

இனிப் பாடலை முழுவதும் பார்க்கலாம்.

தேனாடு கொன்றை
சடைக்கணிந்த சிவபெருமான்
ஊன்நாடி நாடிஎன்
உள்புகுந்தான் உலகர்முன்னே;
நான்நாடி ஆடி
ஓலமிட நடம்பயிலும்
வானாடர் கோவுக்கே
பூவல்லி கொய்யாமோ.

கவிஞனைத் தேடிக் கடவுள் வருகிறார். கவிஞனோடு சேர்ந்து விடுகிறார். பிறகு கவிஞனிடமிருந்து கவியாகவே அவதாரம் எடுக்கிறார். ஒவ்வொரு கவியும் கடவுளின் ஒவ்வொரு அவதாரந்தான். அந்தக் கவியை இறைவனும் கவிஞனும் போட்டி போட்டுக் கொண்டு அனுபவிக்கிறார்கள். சந்தோஷமிகுதியால் இரண்டு பேருமே துள்ளிக் குதிக்கிறார்கள். இது ஒரு அற்புதமான அதிசயந்தான்.

பிறகு அந்தக் கவி எப்படிச் சும்மா இருக்கும்? அது நம்மைப் பாடவைக்கிறது. தாளம் போட்டு ஆடவைக்கிறது. எந்தக் கல்லுளி மங்கனையும் கவியானது கரைத்துவிடும். கரைத்து கவிமயமாகவே மனுசனை ஆக்கிவிடும்.

இப்படியாக மண்ணையே பொன்னாக்கி, மனிதனைத் தெய்வமாக மாற்றிவிடும் கவிகள் தமிழில் ஏராளம். தமிழே கவி மயந்தான். இப்படி ஒருவளமான கவிச் செல்வத்தை இதர மொழி எதிலும் பார்க்கமுடியாது.

---

(தேன் ஆடு கொன்றை - தேன் சொட்டும் கொன்றைப்பூ ஊன் - மாமிசம். உள்புகுந்தான் - உணர்ச்சிமயமாய்ச் சேர்ந்து விட்டான். உலகர்முன்-எல்லோரும் சாட்சியாய் நிற்க. நான் நாடி ஆடிஓலமிட நான் அனுபவித்துப் பாடப் பாட. நடம்பயிலும்-என் பாட்டை வைத்து ஆட்டத்தை ஆடிப் பழகுகிறான்.)

கம்பர், வள்ளுவர், காரைக்காலம்மையார், ஐயங்கொண்டார். திருநாவுக்கரசர், பெரியாழ்வார், ஆண்டாள், திரிகூடராஜப் பக்கவிராயர், முத்தொள்ளாயிரத்தார், ஔவையார், பட்டினத் தார், இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். சொல்லச் சொல்ல கவிஞர்கள் வந்து கொண்டே இருப்பார்கள்.

இவர்கள் எல்லோரும் அருளாளர்கள். ஞானிகள், பக்தர்கள். சந்தேகத்துக்கே இடம் இல்லாமல் எல்லாவற்றையும் கண்டு தெளிந்த உத்தமர்கள் தமிழ்க் கவிஞர்கள்.

இவர்களுடைய பாடல் ஒவ்வொன்றும் சிருஷ்டிதத்து வத்தோடு கூடிய கலைச் செல்வங்கள். இறைவனே புதுப் புதுக் கோலங்களில் பாடல்களாக அவதாரம் எடுத்து நடைபழகுகிறான் என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது.

மாணிக்கவாசகர் பரம பக்தர். உத்தமஞானி. கருணாகர மூர்த்தி என்றுதான் அவரைச் சொல்ல வேண்டும். ஆனால் மாணிக்கவாசகரின் வரலாறு என்று நம்மிடம் ஒன்றும் இல்லை.

மதுரையை அடுத்த திருவாத ஊரில் மாணிக்கவாசகர் பிறந் தார் என்று தெரிகிறது. தமிழ் நாடு முழுவதும் மாணிக்கவாசகர் போய் வந்திருக்கிறார் என்றும் தெரிகிறது. கோயில், மூர்த்தி, வழிபாடு, தேர், திருவிழா, ஆடல், பாடல், அடியார் கூட்டம் இவையே மாணிக்கவாசகருக்கு வாழ்க்கையாக இருந்திருக்கிறது.

மாணிக்கவாசகர் ஒரு நிமிஷங்கூடச் சும்மா இருக்கவில்லை. யோசித்துக் கொண்டே இருந்திருக்கிறார். உலகில் உள்ள நல்லது கெட்டது ஒவ்வொன்றைப் பற்றியும் யோசித்தவண்ணமாகவே இருந்திருக்கிறார்.

அறிவிலிருந்து உண்டானது இல்லை அவருடைய யோசனை. அருளிலிருந்து உண்டானது அவர் யோசனை. யோசிக்க யோசிக்க அந்த யோசனை மாணிக்கவாசகரை நன்றாகப் பிசைந்திருக்கிறது. பிசைந்து குழைத்திருக்கிறது. கனிந்து தேன் சொட்டும் அருள்க் கனியாக - சிவப்பழமாகவே மாணிக்கவாசகர் ஆகிவிட்டார். இவ்வளவு மட்டுமே அவர் வரலாறு என்று நமக்குத் தெரிகிறது. ஆயிரம் வருஷத்துக்கு முன்னிருந்தவர் மாணிக்கவாசகர் என்றும் தெரிகிறது. இவ்வளவும் மாணிக்கவாசகருடைய பாடல்கள் மூலம் கிடைக்கிற குறிப்புகள்தாம். மாணிக்கவாசகருடைய ஆசை,

தவிப்பு, ஆறுதல், தெளிவு, வீரம், தியாகம் ஆகியவை என்னென்ன என்பதும் அவர் பாடல்கள் மூலம் தெளிவாய்த் தெரிகின்றன.

இனி, பாண்டிய மன்னனிடம் மாணிக்கவாசகர் அமைச்சராக இருந்தார் என்றும், போர்க்குதிரைகள் வாங்க கீழக்கரைத் துறைமுகப் பட்டினம் போனார் என்றும், குதிரைகளுக்கு விலையாக நிறையப் பணம் கொண்டு போனார் என்றும், எங்கெங்கோ சுற்றிவிட்டுத் திருப்பெருந்துறைவந்தார் என்றும், அங்குஇறைவனே குருமூர்த்தமாக எழுந்தருளி மாணிக்க வாசகரை ஆட்கொண்டாரென்றும். குதிரை வாங்கக் கொண்டுபோன பணத்தை வைத்து மாணிக்கவாசகர் கோயில் கட்டி விட்டார் என்றும், இது தெரிந்த பாண்டியன் கோபம் கொண்டு மாணிக்கவாசகரைத் தண்டித்தான் என்றும், சிவபெருமானே, பாண்டியனிடம் குதிரைச் சேவகனாய் வந்து, குதிரைகளை எண்ணிக்கொடுத்தான் என்றும், மாணிக்கவாசகர் விடுதலை ஆனவுடன் அந்தக் குதிரைகள் ஊளையிட்டு, காட்டுநரிகளாய் ஓடிவிட்டன என்றும் கதை இருக்கிறது.

மாணிக்கவாசகரைப் பற்றிய இந்தக் கதை திருவிளையாடல் புராணத்தில் மிக எடுப்பாய் அலங்காரத்தோடு சொல்லப்பட்டிருக்கிறது.

மாணிக்கவாசகருடைய தெய்வப்பாடல்களை அனுபவிக்க அனுபவிக்க, இப்படியும் கதைவரும். இதற்கு மேலேயும் கதை வரும். அவ்வளவும் அனுபவத்திலிருந்தும், ஆனந்தத்தில் இருந்தும் உண்டாகிற உணர்ச்சிகள்தாம்.

கடவுளே மாணிக்கவாசகருக்குப் பணிவிடை செய்கிறார் என்று சொல்கிறபொழுது அது மாணிக்கவாசகரின் பாடல்களை நோக்கிச் சொல்கிற சொல். அந்தப் பாடல்களுக்குரிய உண்மையான விமரிசனம் அது.

மாணிக்கவாசகர் பாடிய பாடல்கள் எவ்வளவென்று நமக்கு தெரியாது. ஆனால் அறுநூற்றுஐம்பதுக்கு மேல்பட்ட பாடல்களைத் தொகுத்து திருவாசகம் என்று பெயரிட்டு வைத்திருக்கிறார்கள். சைவத்திருமுறை பன்னிரண்டனுள் எட்டாம்திருமுறையாக திருவாசகத்தைச் சேர்த்து வைத்திருக்கிறார்கள்.

முப்பது முப்பத்தைந்து வருடகாலமாகத் திருவாசகத்தை அனுபவிக்க முடிகிறது. ஆனந்த பரவசத்தில் திளைக்கவும் முடிகிறது. அனுபவத்தையும் ஆனந்தத்தையும் நண்பர்களிடம் சொல்லநேர்கிறது. கட்டுரைகளாகவும் எழுத நேர்ந்தது.

அறுநூற்றைம்பது பாடல்களிலும் என்னால் ஊடாட முடிய வில்லை. சுமார் நூற்றைம்பத்துமூன்று பாடல்கள் வரைதான் உறவாட முடிகிறது. அன்றிலிருந்து இன்றுவரை இந்த நூற்றைம் பத்துமூன்று பாடல்களே என்னைக் கரைத்து உருக்குகின்றன.

எனக்கு விளங்கிய பாடல்களையே இங்கு கொடுத்திருக்கிறேன் இந்தப் பாடல்களுக்கு என் அனுபவத்தையும் ஆனந்தத்தையுமே விளக்கமாகத் தந்திருக்கிறேன். விளக்கத்தைப் பார்த்துவிட்டுப் பாடலைச் சாவதானமாக நிறுத்திப் படிக்கவேண்டும். பக்தி, ஆனந்தம் எல்லாம் நம் கண்முன் வந்து நிற்கும். கையில் வந்துகூட நிற்கும்.

பாடலை நன்றாகவே பாடவேண்டும். சங்கீதத்துக்கு நிறைய இடம் கொடுக்கக் கூடாது. பாட்டுக்குக் கட்டுப்பட்டு, அடக்க ஒடுக்கமாய்ச் செயல்பட வேண்டும் சங்கீதம். பாடலை எப்படி எப்படிப் பாடவேண்டும் என்பதற்குச் சந்தம் கொடுத்திருக்கிறது. கொடுத்திருக்கிற சந்த இயல்படி இரண்டிரண்டு சீராக எடுத்து நிறுத்திப் பாடினால் போதும். நம்முடைய சொந்தக்குரல் எப்படி இருந்தாலும் சரி, அந்தக் குரலில் பாடவேண்டும்.

பாடப்பாட அற்புதமாக இருக்கும் பாட்டு. அந்த அற்புதத் தில் முதலில் கொடுத்திருக்கிற விளக்கம் மறந்து விடும். உருகிக் கரைந்தேபோய்விடும். அப்படி அதுபோய் விடவேண்டும். அப்படிப் போனால்தான் பாடலானது நம் உணர்ச்சிதத்தோடு சேர்ந்து நம்மை வேறொரு வஸ்துவாக மாற்றும்.

ஒவ்வொரு பாடலுக்கும் கீழே, அடிக்குறிப்பில் சில சொற் களுக்குப் பொருள் கொடுத்திருக்கிறது. சில பாடல்களுக்கு குறிப்பும் கொடுத்திருக்கிறது. குறிப்பு மிக முக்கியம். அதை வைத்துக் கொண்டு பாடலை மாறி மாறிப் பார்க்கவேண்டும்.

நூற்றைம்பத்துமூன்று பாடல்களையும் விளக்கம், அடிக் குறிப்பு, குறிப்பு இவைகளுடன், மாணிக்சமாலை என்னும் பெய ருடன் வெளியிடுகிறோம்.

மாணிக்கவாசகர் பாடல்கள் நூற்றைம்பத்துமூன்று தானா என்று ஏங்கிப் பெருமூச்சுவிடத் தோன்றும். அப்படி ஒன்றும் பயப் படத்தேவை இல்லை. ஒரு பாடலை நன்றாக உணர்ந்து பாடி அனு பவித்தால் போதும். அனுபவிக்க அனுபவிக்க பாடல் நம்மை உருக்கிவிடும். உருக்கிக் கரைத்தே விடும். நம்முடைய ஆணவம் கரையக் கரைய ஆனந்தம் பெருக்கெடுக்கும். வெள்ளமாய்ப் பெருக் கெடுத்து கரைபுரண்டு ஓடும்.

ஒருபாடலை அனுபவிக்கவே நமக்கு பிரமன் கொடுத்த ஆயுள் நாள் போதாதென்று தெரியும். இனி எவ்வளவோ நாள் நம் ஆயுளில் சேரவேண்டும் என்றும் புரியும்.

அப்படித் தெய்வாம்சம் பொருந்தியவை மாணிக்கவாசகர் பாடல். நூற்றைம்பத்துமூன்று பாடல்களையும் அனுபவிக்க எத்தனை ஜென்மம் வேண்டுமானாலும் எடுக்கலாம். அவ்வள வையும் அனுபவித்த பிறகு யோசிக்கலாம் அல்லவா பிற பாடல் களை?

ஆனால் பக்தர் ஒருவர் சொல்கிறார். மாணிக்கவாசகர் பாடல்களைப்பாடி அனிபவித்தவர்கள் மாறி மாறிப் பிறப்பதற்கு வழியே இல்லை என்று சொல்கிறார்.

எப்படி என்று பாருங்கள்.

''பிறவி என்னும் செடியை சுற்றிப் பின்னிக்கிடக்கிற பாச பந்தக் கொடிகளை வெட்டி எறிந்து விடுமாம் மாணிக்கவாசகர் பாடல். கவலையை விரட்டி ஆனந்தத்தில் புரட்டிப் புரட்டி எடுத்து விடுமாம் படிக்கிறவனை'' இப்படிக் கும்மாளி போட்டுச் சொல்கிறார் பக்தர்.

வெண்பா

தொல்லை இரும்பிறவிச்
சூழும் தளைநீக்கி
அல்லல் அறுத் து) ஆனந்தம்
ஆக்கியதே; — எல்லை
மருவா நெறி அளிக்கும்
வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னும்
தேன்.

ஒட்டக்கூத்தன் பாடலுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பார் களே அப்படி ஆகி விட்டது நம் கதி. மாணிக்கவாசகர் பாடல் களைப் படிப்பதால் இனி, புதிய ஜென்மம் இல்லை என்றாகி விட்டது. இந்த ஜன்மத்தில் இருக்கிற நாளும் சுருக்கந்தான். ஆனாலும் பாடல்களோ நூற்றைம்பது உள்ளன. இவ்வளவையும் எப்படி அனுபவிக்க? காலதாமதம் கூடாது. அதுதான் வழி.

இப்படிக்கு

**ல. சண்முகசுந்தரம்**

---

[தளை - பாசம். அல்லல் - துன்பம். எல்லை மருவாநெறி - பிறவி யின் பக்கம் சாய்ந்து விடாதபடி பார்த்துக்கொண்டிருக்கிற உண்மை நெறி]

# பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| 1. திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை | 1 |
| 2. அன்பு ஒன்றுதான் உண்மை | 8 |
| 3. ஆசை மயமானவர் கடவுள் | 25 |
| 4. வெறும் தீவட்டித் தடியன் நான் | 40 |
| 5. என்னத்தைப் பார்த்தேன் நான் | 44 |
| 6. எல்லாம் பாவலாப் பண்ணுகிற காரியந்தான் | 64 |
| 7. ஞான நாடகம் | 73 |
| 8. ஏமாற்ற முடியாது என்னை | 81 |
| 9. உடையவனிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட வேண்டும் | 94 |
| 10. தந்தை மட்டும் அல்ல, பெற்றெடுத்த தாயும் அவன்தான் | 102 |
| 11. வாசனைப் பொடி இடிக்க வேண்டும் நாயகனுக்கு | 116 |
| 12. புத்தியைக் கொடுத்தது மட்டும் அல்ல, தெளிய வைத்ததும் அவன்தான் | 122 |
| 13. என்னைப் பாடவைத்துக் கேட்பதில் அவனுக்கு ஒரே ஆசை | 134 |
| 14. அம்மையப்பனாய் நின்று அருள் பாலிக்கிறான் | 143 |
| 15. என்னை அல்லவா தேடி வந்தான் | 156 |
| 16. அவன் ஒருவன்தான் மிச்சம் | 167 |
| 17. காதலும் பக்தியும் | 182 |
| 18. நாயகன் வருவானே அவனுக்கு மாலை தொடுக்க வேண்டாமா? | 189 |
| 19. மதம் என்னத்துக்கு பக்தியல்லவா வேண்டும் | 200 |
| 20. காதலாய்க் கனியும் பக்தி | 203 |
| 21. புன்முறுவலில் பூத்த நெருப்பு | 212 |
| 22. அவன் பாதம் பட்ட இடம் எல்லாம் தங்கமயந்தான் | 216 |
| 23. விடிந்தது தெரியவில்லையா | 225 |
| 24. எங்கே இருக்கிறது இடம் ஒதுங்க | 227 |

25. எனக்கு வேண்டியது இதுதான் 238

26. ஏமாந்து போனான் நாயகன் 245

27. அழைத்தால் வர வேண்டாமா 256

28. யார் இருக்கிறார்கள் கேட்பதற்கு 261

29. தாயாகிறாள் பெண் 267

30. தட்டாத கதவில்லை 274

31. குடும்பமே கோயில் 284

32. கருணை மயமான நீதி—கடவுள் 292

33. எங்கோ தொலைந்தது எங்கோ கிடைத்தது 302

34. தில்லையில் நின்றேன் எல்லையைக் கண்டேன் 306

35. ஒன்றும் இல்லை என்பதுதான் என்னிடம் உள்ளது 314

36. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும் 322

37. உடம்பு ஒன்று போதும் இறைவனைப் பார்ப்பதற்கு 328

38. உணர்ச்சி மயமாய்ப் பார்த்தால் உண்மை பிரகாசிக்கும் 342

39. அழிய வேண்டியது ஆணவம் அல்லவா 346

40. கட்டிப் பிடித்தான் முத்தம் கொடுத்தான். ஆனாலும் பார்க்க முடியவில்லை அவனை 354

41. நில்லுங்கள் நில்லுங்கள் நன்றாக நில்லுங்கள் 359

42. பயத்தை விட்டால் போதும் 373

43. நம்முள் நாம் 375

44. என்ன செய்வேன் நான் 382

45. என்னை இழந்தேன் அவனானேன் 388

46. கவியாய் அவதாரம் எடுக்கிறார் கடவுள் 393

47. நாமாவது ஒன்றாவது 399

48. பார்த்தால் போதும் பிறகு ஆசை உண்டாகி விடும் 402

49. எனக்கு நாயகன் அவனே 406



திரு. B. நாகி ரெட்டியார் அவர்கள்
உழைப்பால் உயர்ந்த உத்தமர்

# மாணிக்கமாலை

## திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை

### 1

குளத்திலும் குட்டையிலும் தேங்கிக் கிடக்கிறபொழுது நீருக்கு உருவம் இல்லைதான். பள்ளத்தை நோக்கிப் பாய்ந்தோடி வருகிறபொழுது நீருக்கு உருவம் கிடைக்கிறது. நீரின் வேகமும் ஆவேசமும் நீருக்கு உருவம் கொடுத்து விடுகிறது. பார்க்கிறவர் களின் கண்களுக்கு விருந்து என்று சொல்லும்படி அழகிய உருவம் நீருக்குக் கிடைத்து விடுகிறது.

அருவியாகக் குதிக்கிறபொழுதும், ஆறாக நடக்கிறபொழுதும் ஓடையாக ஓடுகிற பொழுதும், மடைகளில் ஏறித் துள்ளிப் பாய்கிற பொழுதும் தண்ணீருக்கு எத்தனையோ வடிவங்கள்! எத்தனையோ தோற்றங்கள்! ஏரியிலும் மடுவிலும் சிறைப்பட்டுக் கிடக்கிற பொழுது அந்த அழகிய உருவங்கள் தண்ணீருக்கு இல்லைதான்.

உண்மையின் கதையும் அப்படித்தான். ஓட்டசாட்டம் இல்லாமல் ஒரு இடத்தில் ஒடுங்கிக் கிடக்கிறபொழுது உண்மைக்கு உருவம் கிடையாது. நாலும் நாலும் எட்டு என்னும் கணக்குக்குள் அடைபட்டுக் கிடக்கிற பொழுது உண்மைக்கு உருவம் ஏது? தோற்றம் ஏது? பிரகாசம் ஏது? ஒன்றுமே கிடையாது.

வெறும் உண்மையினால் பிரயோசனம் இல்லை. அது விஷயமாகத் தோன்றலாம். ஆனால் அது கலையாகவோ, கவியாகவோ பரிமளிக்காது. உண்மையோடு சேர்ந்து உண்மையை அனுபவிக்கிற அனுபவம் ஒட்ட வேண்டும். அப்படி ஒட்டுகிற பொழுதுதான் உண்மையானது உணர்ச்சிமயமாகப் பொங்கும்.

உண்மையானது உணர்ச்சிமயமாக அவதாரம் எடுப்பதை நெடுகிலும் அனுபவித்து வருகிறது மனித இனம். அது காரண மாகவே உணர்ச்சிமயமான உண்மையை "கடவுள்" என்று வழி பட்டு வருகிறது மனித இனம்.

வழிபாட்டுக்குரிய அந்த தெய்வாம்சத்தையே கலை என்றும் கவி என்றும் உருவகப்படுத்தி பாதுகாக்கிறோம்.

* * * *

ஆடம்பரமும் அகம்பாவமுமே பொய்யின் காரியங்கள். ஆதிக்கம் பண்ணுவதுதான் பொய்யின் லட்சியம். அப்படியானால் உண்மையானது என்ன செய்ய வேண்டும்? அகம்பாவம், ஆடம் பரம், ஆதிக்கம் இவற்றைச் செயலிழக்கச் செய்ய வேண்டும்? அப்பொழுது பொய்யின் வேஷம் கலைந்துவிடும். ஆதரவில்லாமல் அநாதையாகி விடும் பொய்.

பொய்யை அழிப்பதுதான் உண்மைக்கு லட்சியம். பொய்யைத் தொலைத்துக் கட்டுவதற்காக உண்மையானது ஆவேசமாக எழுந்து நிற்கும். அப்பொழுதுதான் உண்மையின் வேகமும் நயமும் ஜொலிக்கும். அதன் மிடுக்கும், கம்பீரமும், கருணையும், தியாகமும் தெய்வஒளியாய்ப் பிரகாசிக்கும். மாணிக்கவாசகர் உணர்ச்சிமயமானவர். உண்மையானவர். பொய்யை வேரோடு வெட்டி எறியத் துடியாய்த் துடிக்கிறவர். அதற்காகத் தவிக்கிறவர் என்று கூடச் சொல்லலாம்.

மாணிக்கவாசகருடைய உணர்ச்சியும் வேகமும் தமிழில் எப்படி வந்து பேசுகிறது என்று பாருங்கள்.

"பொய்தான் தவிர்ந்துன்னைப்
போற்றி சயசய
போற்றி என்று
கைதான் நெகிழ
விடேன்; உடை யாய்! என்னைக்
கண்டுகொள் ளே"

"ஒளிவந்து விட்டால் போதும். இருள் ஓடிவிடும் - சொல்லாமல், கொள்ளாமல் ஓடிவிடும்" என்பார்கள். ஆனால் இருட்டுக்குள் கிடக்கிறோம் என்னும் உணர்ச்சி வேண்டாமா? ஒளியை எதிர் பார்க்கும் ஆத்திரம் வேண்டாமா? அந்த ஆத்திரமும் உணர்ச்சியும் இருந்தால்தான், இருள் ஓடுவது தெரியும். ஒளி பிரகாசிப்பது

தெரியும். பிறகு கைதட்டி ஆரவாரம் பண்ணாமல் இருக்க முடியுமா? அந்த ஆரவாரத்தில் பக்தியானது மேலும் மேலும் ஊறிப்பெருகும்.

மாணிக்கவாசகருக்கு ஒளி ஊற்றாய் ஊறுகிறது பக்தி.

உன்னை வாழ்த்திக் கொண்டே இருப்பேன்! என்கிறார். குவித்த கையைப் பிரிக்கவே மாட்டேன் - பிடித்த பிடியைத் தளர்த்தவே மாட்டேன் என்கிறார். இறைவனின் நேருக்கு நேர் நின்றே சொல்கிறார்.

எல்லாம் இறைவனுடைய திருவருள்தான் என்பது மாணிக்க வாசகருக்குத் தெரிந்துவிட்டது. நான் என்னும் ஆணவம் - பொய் தொலைந்து விட்டது.

அப்புறம் என்ன? ஒரே கும்மாளிதான். ஆனந்தந்தான். ஆனந்தத்தின் முழு உருவத்தையும் பாடலில் பார்க்கலாம்.

தானன தான
தானன தானன
தானன தன்

மெய்தான் அரும்பி,
விதிர்விதிர்த்(து), உன்விரை
யார்கழற்(கு) என்
கைதான் தலைவைத்துக்,
கண்ணீர் ததும்பி,
வெதும்பி, உள் ளம்
பொய்தான் தவிர்ந்துன்னை
போற்றி சயசய
போற்றிஎன் று,
கைதான் நெகிழ
விடேன்;உடை யாய்! என்னைக்
கண்டுகொள் ளே. (1)

2

கடலைப் பார்க்கிறோம். அனுபவிக்கிறோம். எல்லை இல்லாதபடி விரிந்து பரந்து கிடக்கும் சமுத்திரத்தை வானமே

(மெய்தான் அரும்பி - புளகாங்கிதம் அடைந்து உடம்பு வியர்த்து. விரையார்கழல் - மணம் கமழும் மலர் போன்ற திருப்பாதம். உடையாய் - பெருமானே)

வளைத்து அணைத்து ஆலிங்கனம் செய்வது போலத் தெரிகிறது. கண் கொள்ளாத இந்தக் காட்சியைக் கரையில் நின்றே பார்த்து அனுபவிக்கிறோம். தண்ணீருக்குள்ளே இறங்கிப் போக வேண்டும் என்று தோன்றுவது இல்லை.

மலையின் காரியம் வேறுதான். அடிவாரத்தில் நின்று பார்ப்பதோடு முடிந்துவிடாது காரியம். அடுக்கடுக்காக அமைந்துள்ள அத்தனை உச்சிகளிலும் ஏறத் தோன்றும். இறங்கத் தோன்றும். பச்சைப் பசேல் என்ற இருண்ட காட்டுக்குள் அங்கும் இங்கும் நடக்கத் தோன்றும். பாறைக்குப் பாறைத் தாவிக் குதிக்கும் அருவிகளோடு போட்டி போட்டு விளையாடத் தோன்றும். சுனைகளிலும் தடாகங்களிலும் முங்கி முழுகி நீராடத் தோன்றும்.

மலையில் - காட்டின் உள்ளேயே சமைத்து வனபோஜனம் செய்யாமல் வந்தால், என்னவோ போல் இருக்கும்!

ஒவ்வொரு வருடமும், ஏன்? வருடத்தில் பல தடவைகூட மலைவளங் காண புறப்படுவதற்கு ஆசை உண்டாகும். அப்படி நமக்கு உற்ற இடமாக - வீட்டோடு வீடாக ஒட்டிக் கொள்கிறது. மலை - மலையின் உள்ப்பகுதி. குற்றாலம், பாவநாசம், ஊட்டி சொல்லிமலை, ஏலக்காய்மலை, ஆனைமலை, ஜவ்வாது மலை, பச்சைமலை, பவளமலை என்று எத்தனையோ இடங்கள் இருக்கின்றன. உல்லாசப் பயணத்துக்கென்றே திருத்தி வைத்துள்ளவை போல் அவை அமைந்திருக்கின்றன.

நண்பர்களோடு சேர்ந்து ஒரு மலையின் உள்ப்பகுதிக்கே போய்ச் சேர்கிறோம். பார்த்துவிட்டு வரவேண்டும் என்று திட்டம் போட்டுப் போன இடங்களில் பலவற்றைப் பார்த்தோம். சந்தர்ப்ப வசமாகவும் ஒன்றிரண்டு இடங்களைப் பார்க்க நேர்ந்தது. அப்படி ஏற்பட்ட இடங்களில் ஒன்று ஒரு பெரிய குகை.

கையில் டார்ச்லைட் இருந்ததால் உபயோகமாக இருந்தது. குகை முழுவதையும் பார்க்க முடிந்தது. நீண்டு அகன்ற பெரிய குகை. அதனுள் அடுக்கடுக்காக பல கட்டுகள். ஒவ்வொரு கட்டிலும் பீடங்களும், மூர்த்திகளும், சிலைகளுமாக இருக்கின்றன. பெரிய ஓவிய கூடமாகவே இருக்கிறது குகை.

குகையைப் பார்த்து அனுபவித்தது எதிர்பாராத பெரிய ஆனந்தந்தான். மறக்க முடியாத ஆனந்தந்தான்.

மலையிலிருந்து இறங்கி ஊருக்கு வந்து விட்டோம். வீட்டுக்கே வந்து விட்டோம்.

போனவர்கள் இன்னும் வந்து சேரவில்லையே என்று எதிர் பார்த்துக் காத்து நிற்கின்றன பல பிரச்சனைகள், வேண்டியவர் கள் காரியம், வேண்டாதவர்கள் காரியம், குடும்ப காரியம், உடம்பு படுத்துகிற பாடு, மனம் படுத்துகிறபாடு இப்படி எத்தனையோ தொல்லைகள். லாபங்கள், நஷ்டங்கள்.

அத்தனை காரியங்களோடும் உருண்டு புரண்டு மல்லுக்கட்டு வதே பிழைப்பாய் இருக்கிறது. பகல், இரவு, வாரம், மாதம் என்றெல்லாம் வேஷம் போட்டு வருஷங்களும் ஓடிக் கொண்டிருக் கின்றன.

இத்தனை காரியங்களுக்கு ஊடேயும் குகையும், அதில் கண்ட காட்சிகளும் மனசோடு மனசாய் நிற்கின்றன. மஞ்சாடிகூட நிறம் மாறாமல் அழகு குலையாமல் அப்படி அப்படியே கண்முன் வந்து நிற்கின்றன மலையும் குகையும்.

இளமை போய்விட்டது. அழகு போய்விட்டது. ஊக்கமும் எழுச்சியும்கூட நம்மை விட்டு ஓடிவிட்டன என்று! சொல்லலாம். வேண்டியவர்களில்ச் சிலர் விரோதிகள் ஆகிவிட்டார்கள். வேண் டாதவர்களில்ப் பலர். நண்பர்களாகி விட்டார்கள். இத்தனை மாற்றங்கள் ஏற்பட்டபிறகும் குகையும் அதன் வனப்பும் நம் முடன் அப்படியே இருக்கின்றன.

உணர்ச்சியோடு ஒன்று சேர்ந்து கலந்துவிட்டால் பிறகு அது உணர்ச்சியை விட்டுக் கழன்று போவது இல்லை.

என்னதான் அழகுமயமாக இருந்தாலும் மலை வேறு நாம் வேறுதான். நம்மோடு இரண்டறக் கலந்த காரியம் அல்ல மலை. அப்படி இருந்தும் மலையானது நம்மோடு சேர்ந்துவிடுகிறது. அப்படி அது சேர்ந்து இருப்பதனாலேயே நமக்கு ஒரு விடுதலை (இன்பம்) கிடைக்கிறது.

வேறு வேறான மலையும் நாமும் இப்படி ஒன்றுபட முடிகிற தென்றால் நம் உணர்ச்சியில் துளிர்த்து முளைத்த பக்தி நம்மைச் சும்மா இருக்க விடுமா?

பக்தியானது நம் உணர்ச்சியை உருக்குகிறது. நம் செயல்களில் பரிமளிக்கிறது. எத்தனையோ சோதனைகளையும் வேதனைகளையும் ஊடுருவி நம்மை உருவாக்கிக் கொண்டு இருக்கிறது.

அந்தப் பக்தியையும் ஆனந்தத்தையும் விட்டுவிடு என்றால் அது நடக்கிற காரியமா? சாமான்ய மக்களுக்கே அது முடிகிற காரியம் இல்லை. மாணிக்கவாசகர் போன்ற ஞானிகளால் அது எப்படி முடியும்?

கடவுள்த் தத்துவத்தோடு சதா ஒன்றித் திளைக்கிறவர் மாணிக்கவாசகர். ஏதோ கண்ணுக்குப் புலனாகாத சூனியத்தில் நின்று மயக்கத்தில் ஏமாறுகிறவர் அல்லர் மாணிக்கவாசகர்.

அமைதியும் ஆனந்தமும் கொஞ்சிக் குலாவும் பூம்பொழில்கள். தெளிந்த நீரோடைகள், படித்துறைகள், கோவில், மூர்த்தி, அடியார் திருக்கூட்டம், பாடல், ஆடல் இப்படி எத்தனையோ காரியங்கள் மாணிக்கவாசகரோடு சேர்ந்து இருந்தன. இத்தனை அம்சங்களோடும் சேர்ந்து நின்றே மாணிக்கவாசகர், ஆனந்தத்தில் திளைத்தார். கடவுள்த் தத்துவத்தோடு கலந்து தோய்ந்தார்.

''இவ்வளவையும் விட்டுத் தொலையும்'' என்றால் அது நடக்கிற காரியமா?

இந்திரலோகம் பிரம்மலோகம் வைகுந்த பதி இவற்றை எல்லாம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தினாலும் மாணிக்கவாசகர் பிடிபடமாட்டேன் என்கிறார். அடியார் கூட்டந்தான் உயிர் என்கிறார். ''உன்னை அனுபவிக்க எவ்வளவு காலம் வேண்டுமானாலும் இருக்கிறேன்'' என்கிறார்.

அவருடைய உறுதியை எப்படி எடுத்துப் பரிமாறுகிறது தமிழ் என்று பாருங்கள்.

கொள்ளேன் புரந்தரன்
மால்அயன் வாழ்வு;
குடிகெடி னும்
நள்ளேன் நினதடி
யாரொடல் லால்; நர
கம்புகி னும்

எள்ளேன்; திருஅரு(ள்)
ளாலே இருக்கப்
பெறின், இறை வா!
உள்ளேன் பிறதெய்வம்
உன்னைஅல் லாதெங்கள்
உத்தம னே! (2)

---

(புரந்தரன்-இந்திரன். மால்-திருமால். அயன்-பிரம்மா. கொள் ளேன்-ஏற்றுக் கொள்ளமாட்டேன். நள்ளேன்-உறவாட மாட் டேன். திருஅருளால் இருக்கப் பெறின்-உன்னை அனுபவிக்க வாய்ப்பு அமையுமானால். எள்ளேன் - வெறுக்கமாட்டேன். உள்ளேன்-நினைக்க மாட்டேன். உன்னைத் தவிரவேறு யாரையும் நான் நினைக்க மாட்டேன். உன்னை மறந்தால் அல்லவா மற்றவர்களைப் பற்றிய நினைப்பு வரும்)

குறிப்பு- அற்புதமான பாட்டு. ஒரு பெண்ணுக்கு கணவன், குடும்பம், குழந்தை எல்லாம் லட்சியமாக இருக்கின்றன. அதாவது பெண்ணானவள் தனித்து இல்லாமல் குடும்ப உணர்வோடு சேர்ந்தே இருக்கிறாள். இப்படிச் சேர்ந்திருப்பதையே ஒருமை உணர்ச்சி என்கிறோம்.

மாணிக்கவாசகரும் இறைவனோடு, எப்போதும் சேர்ந்தே இருக்கிறார். அவருடைய ஒருமை உணர்ச்சியை வார்த்தைகள் தாளத்தில் வைத்து அலங்காரத்தோடு எடுத்துச் சொல்கின்றன.

உற்றார் உறவினர் நண்பர் எல்லோரையும் மதிக்கிறவள் தான் பெண். ஆனாலும் கணவனும் குடும்பமுமே அவளுக்கு லட்சி யம். மாணிக்கவாசகரும் அப்படித்தான். உல்லாசமும் சந்தோஷ மும் நிறைந்த காரியங்களை மதிக்கிறவர்தான். ஆனாலும் லட்சியத்தை விட்டு விலகமுடியவில்லை அவரால்.

பக்தியானது அப்படிக் கரைத்துவிடும்.

# அன்பு ஒன்றுதான் உண்மை

1

நம்மைப்பற்றியும் நம் காரியங்களைப் பற்றியும் நாம் யோசித்தால் போதும். நமக்குப் புத்தி வந்துவிடும்.

நம்முடைய குழந்தைகளிடம் நமக்கு ஏன் அன்பு உண்டாகிறது? கோபம் உண்டாகிறது? பயம் ஏன் வருகிறது? உல்லாசம் எங்கிருந்து வருகிறது?

விழுந்து விழுந்து சம்பாதிக்கிறோமே எதற்காக? எவ்வளவு சம்பாதித்தாலும் திருப்தி உண்டாக மாட்டேன் என்கிறதே அது ஏன்?

இப்படி நம்மைப் பற்றி யோசித்தாலே போதும். யோசிக்க யோசிக்க விஷயமானது கொஞ்சம் கொஞ்சமாக விடுபடும். உண்மையானது தெளிவுபடத் தெளிவுபட மனதுக்கு நிம்மதி ஏற்படும். ஆறுதல் கிடைக்கும்.

யோசிக்கிற பழக்கம் வந்துவிட்டால் மனசு சும்மா இருக்காது. நாம் யார்? எங்கிருந்து வந்தோம்? ஏன் வந்தோம்? எங்கு போகிறோம்? என்றெல்லாம் யோசிக்க வைத்துவிடும்.

யோசித்தவுடன் உண்மையானது அப்படியே நேரில் வந்து பழுத்துத் தொங்கும் என்று எண்ணிவிடக் கூடாது. யோசிக்க யோசிக்க முடிச்சு அவிழும். சிக்கல் விலகும். யோசிக்கிறதுக்காகத்தான் மனசையும் மூளையையும் மனிதர்களாகிய நமக்குக் கடவுள் கொடுத்திருக்கிறார் என்பதும் விளங்கும்.

உண்மையானது விளங்கினால் போதும். மெள்ள மெள்ள விளங்கினாலே போதும். பித்தலாட்டம் இருக்காது. பாவலா இருக்காது. பம்மாத்தும் இருக்காது.

வெறுப்போ பொறாமையோ கோபமோ ஒன்றும் பக்கத்தில் வராது. எதுவும் உண்மையாக இருக்கும். அன்பு உண்மையான அன்பாக இருக்கும். காதலும் உண்மையான காதலாக இருக்கும். பக்தியும் உண்மையான பக்தியாகவே இருக்கும்.

பிழைப்புக்காக அவனைச் சமாளிக்கிறது, இவனைச் சமாளிக்கிறது என்கிற அல்ப்பத்தனம் இருக்காது.

"நீ தான் கண்கண்ட தெய்வம் என்று ஆவேசம் வந்தவன் போல் கத்துகிறேன். அப்படிக் கத்தாதவர்களை எல்லாம் "சீ, இவர்கள் என்ன மனிதர்கள்" என்று புலம்புகிறேன்.

"எல்லாம் உன்னை வசப்படுத்துவதற்காகப் போடுகிற வேஷந்தான். ஆணவம் என்னை அப்படி ஆட்டிப் படைக்கிறது. என் ஆணவத்தை உரித்து எடுத்து விட்டு, என் உள்ளத்தில் உண்மையானது அன்பாய் ஊறிப் பெருகும்படி செய்ய வேண்டும். அதற்கு அருள்பாலிக்க வேண்டும்" என்று கேட்கிறார் மாணிக்கவாசகர்.

(தானான தன்னான
தன்னன— தன்னனனன)

நாடகத்தால் உன்அடியார்
போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான்
மிகப்பெரிதும் விழைகின்றேன்;
ஆடகச்சீர் மணிக்குன்றே!
இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத்
தந்தருள்எம் உடையானே! (3)

2

"மரணம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று" அந்த உண்மையை அனுபவபூர்வமாக தெள்ளத் தெளியக் கண்டு கொண்டார்கள், இந்தியர்கள். அதிலும் தமிழர்கள், வாழ்க்கையின் ஒரு அங்கமாகவே மரணத்தைப் பற்றி தீர்மானம் பண்ணி இருக்கிறார்கள்.

---

(புகுந்திடுவான்-புகுந்து விட. விழைகின்றேன்- ஆசைப்படுகிறேன். என் ஊடகத்து-என்னிடம்.)

குறிப்பு:— பக்தியின் உண்மையான தொனி பாடலில் கண கண என்று ஒலிக்கிறது.

மரணம் இயல்பானது - அவசியம் ஆனதும் ஆகும் என்பது விளங்கிவிட்டது. அதனால்தான் வாழ்க்கையை மதித்தார்கள். நன்றாக அனுபவிக்கிறார்கள். எளிமையாவும் அருமையாகவும் வாழ்க்கைய அலங்காரப்படுத்தினார்கள், எல்லாவற்றுக்கும் மேலாக வாழ்க்கையைப் பக்தியோடு உபசரிக்கவும் செய்தார்கள்.

மற்றவர்கள் காரியம் அப்படி இல்லை. மரணத்தை வேண்டாத ஒன்று என்று நினைத்தார்கள். எதிரி என்றுகூட மரணத்தைப் பற்றி நினைத்தார்கள். அதனால் மரணத்தை நினைத்து நினைத்துப் பயந்தார்கள்.

வெறுப்பும் பயமும் கூடிக் குலாவி அவர்களை வஞ்சம் தீர்த்தன. எப்படி? 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்னும் கணக்கில் தாறுமாறாக அவர்களை விரட்டி அடித்தன. நிலை கொள்ள விடாதபடி அங்கும் இங்கும் அவர்களைக் கொண்டு போய் இழுத்தடித்துவிட்டன.

மரணத்தைப் பற்றி சரியாக எடை போட்டுப் பார்க்காதது தான் கோளாறுக்குக் காரணம். மரணத்தை ஏமாற்றிவிட முடியாது. சலாம் போட்டோ, லஞ்சம் கொடுத்தோ நழுவிவிட முடியாது என்பது விளங்கவேண்டும். அதுதான் உண்மை.

உண்மை தெளியத் தெளிய அன்பு பெருகும். மரியாதை ஜொலிக்கும். அருள் கனிந்து பழுக்கும். உடம்பில் ரத்தம் ஊறுவது போல் உள்ளத்தில் பக்தி ஊறும். கற்பு, வீரம், மானம், தியாகம் முதலிய பண்புகள் புதுப்புது வர்ணங்களில் துள்ளிப் பிரகாசிக்கும்.

வாழ்க்கையில் வளமும் ஊக்கமும் உண்டாவதற்கு மரணத்தைப் பற்றிய மெய்யுணர்வு சாதனமாக இருக்கிறது.

அதனால் ஒரு இடையூறும் வருகிறது. உல்லாசமும் சந்தோஷமும் நிறைந்த வாழ்க்கையை விட்டு விட்டுப் பிரிவதற்கு தயக்கம் உண்டாகிறது. மனைவி என்றும் மக்கள் என்றும் உற்றார் என்றும் உறவினர் என்றும் மனிதர்களைக் கொண்டு வந்து நிறுத்துகிறது. பிரிந்து போவதற்கு இடம் கொடுக்காமல் மனசைக் குழப்புகிறது.

மாணிக்கவாசகர் மெய்யுணர்வில் திளைக்கிறவர். மரணத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர். அதனால் அவருக்கு மரணத்தைப் பற்றிப் பயம் இல்லை.

இறுதி இல்லாதபடி எங்கும் நிறைந்திருக்கிறது, இறைவனுடைய செயல். அதாவது திருவருள். மாணிக்கவாசகர் கடவுள்த் தத்துவத்தோடு ஒன்றி தன்வசம் அற்று, பரவசத்தில் திளைக்கிறவர்.

கடவுள்த் தத்துவத்தோடு எப்பொழுதும் ஈடுபட்டுத் திளைக்கிற காரணத்தினால் ஞானிகளுக்கு மூர்த்தியாக எழுந்தருளிக் காட்சி கொடுக்கிறது திருவருள்.

மூர்த்தி வழிபாட்டில் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் அர்ப்பணித்து விடுகிறார்கள் ஞானிகள்.

மாணிக்கவாசகரும் அப்படி அர்ப்பணித்து ஆனந்தத்தில் திளைக்கிறவர்தான்.

மூர்த்தி, கோவில், அபிஷேகம், ஆராதனை, அடியார் கூட்டம், ஆட்டம், பாட்டம், தேர். திருவிழா இவைகளை அனுபவிக்க அனுபவிக்க ஆனந்தம் பொங்குகிறது.

இவற்றை அனுபவிப்பதற்காக எத்தனை பிறவிகள் எடுக்க வேண்டுமானாலும் தயார் என்கிறார் மாணிக்கவாசகர். ஆனால் சாவு என்பது - இறப்பு என்பது, மேலே சொல்லிய ஆனந்தத்தை அனுபவிக்க விடாதபடி செய்துவிடுமே, அதற்கு நான் என் செய்வேன் என்று கலங்குகிறார் மாணிக்கவாசகர்.

அவருடைய கலக்கம் - தெளிவிலிருந்து பிறக்கிற கலக்கம். அது,

> ''யான்ஏதும் பிறப்பஞ்சேன்;
> இறப்பதனுக்(கு) என்கடவேன்''

என்று அதிகாரத்தோடு கேட்கிறது.

மோட்சலோகம் என்று ஒன்றைப் பற்றிச் சொல்லுகிறார்கள். அங்கு தொட்ட தொட்ட இடம் எல்லாம் இன்பமயந்தான்என்றும் சொல்லுகிறார்கள். அந்த மோட்சமே - வானுலகமே கிடைத்தாலும் எனக்கு தேவை இல்லை என்கிறார் மாணிக்கவாசகர். இனி "இந்த பூலோகத்திலேயேகோவிலும், கோபுரமும், மூர்த்தியும் வழிபாடும் இல்லாத ஒரு பிரதேசத்தில் சக்கரவர்த்தியின் பட்டத்து வாரிசாகப் பிறக்க வைக்கிறோம்'' என்று சொன்னாலும் அதுவும் எனக்கு வேண்டாம் என்று சொல்கிறார் மாணிக்கவாசகர்.

மூர்த்தி வழிபாட்டில் அப்படி ஒரு ஈடுபாடு மாணிக்கவாசருக்கு.

வானேயும் பெறில்வேண்டேன்
மண்ணாள்வான் மதித்தும்இரேன்

யாரிடம் சொல்கிறார் மாணிக்கவாசகர். இறைவனே அலங்காரத்தோடு எழுந்தருளி இருக்கும் மூர்த்தியை நோக்கியே சொல்கிறார். "பெருமானே! உன்னைவிடாமல் உன்னுடனேயே இருந்து நான் திளைக்க வேண்டும். அதுதான் எனக்கு ஆனந்தம்!

"வேறு ஒன்றும் எனக்கு வேண்டாம். அது இது என்று சொல்லி என் ஆனந்தத்தைக் கலைத்து விடக்கூடாது நீர். மறந்து விடக்கூடாது. ஜாக்கிரதை" என்கிறார் மாணிக்கவாசகர்.

பாடலின் முழு உருவத்தையும் பார்க்கலாம்.

"யான்ஏதும் பிறப்பஞ்சேன்.
இறப்பதனுக்(கு) என்கடவேன்!
வானேயும் பெறில்வேண்டேன்;
மண்ஆள்வான் மதித்தும்இரேன்;
தேன்ஏயும் மலர்க்கொன்றை
சிவனே! எம் பெருமான்! எம்
மானே!உன் அருள்பெறும்நாள்
என்றென்றே வருந்துவனே! (4)

மரணத்துக்குப் பயப்படுகிற மனிதர்களைக் கொண்ட சமூகம் அநாதையாகிவிடும். தன்னைப் பற்றிய உணர்வே இல்லாத செத்த பிணமாகிவிடும் அந்தச் சமூகம்.

---

(இறப்பதனுக்கு என் கடவேன் - மரணமானது பிடி வாரண்டோடு தலைவாசலில் வந்து நின்று கூப்பிட்டால், அதற்கு என்ன பதில் சொல்ல நான்? வானேயும் பெறில் வேண்டேன்-மோட்சமும் தேவை இல்லை. தேன்ஏயும் மலர்க்கொன்றை-வண்டு மொய்க்கும் கொன்றை மலர்களால் தொடுக்கப்பட்ட மாலை அணிந்த. பெருமான்-பெருமானே)

குறிப்பு:— நான் என்பது இருக்கும்வரை, நான் வேறு மற்றவர்கள் வேறு என்னும் பேதம் இருக்கும்வரை, மரணம் மனிதனைப் பயமுறுத்தவே செய்யும். மரணத்தைவிட மரணத்தைப் பற்றிய எண்ணம் தொந்தரவுபடுத்தும். வானத்துக்கும் பூமிக்குமாக நாக்கைத் தொங்கப் போட்டபடி சாவின் நிழல் படுபயங்கரமாக எதிரில் வந்து நிற்கும்.

நான் என்னும் ஆணவம் கழன்றுவிட்டால் போதும். பிறகு மனிதனைப் பார்த்து மரணம் பயப்படும். சமுதாயத்தில் பிரிக்க முடியாத அங்கம் என்று தன்னைப் பற்றி தெரிந்து கொண்டால் போதும். உயிரை விடுவதற்கு எப்பொழுதும் தயாராக இருப்பான். உயிரை விட்டுப் புகழை நிலைநிறுத்துவான். எவ்வளவு பெரிய ஆபத்து வந்தாலும் எதிர்த்துச் சமாளித்து விடும் சமுதாயம்.

இறந்தும் உயிர் வாழ்தல் என்பது இதுதான்.

மாணிக்கவாசகர் நான் என்னும் தனிமையிலிருந்து விடுபட்டவர். மரணத்தைக் கதி கலங்க அதட்டுகிறவர். இல்லாவிட்டால்,

மூர்த்தி, வழிபாடு இவற்றை அனுபவிக்க எத்தனை பிறவி வேண்டுமானாலும் எடுக்கிறேன் (யான் ஏதும் பிறப்பு அஞ்சேன்) என்று தைர்யமாகச் சொல்ல முடியுமா?

ஆனால் இறந்தபின் 'மூர்த்தியையும் வழிபாட்டையும் அனுபவிக்க விடாமல் "உன்னை மோட்சத்துக்கு அதிபதி ஆக்கி இருக்கிறேன், பூமியில் பெரிய சாம்ராஜ்யம் ஒன்றுக்குச் சக்கரவர்த்தி ஆக்கி இருக்கிறேன்" என்று ஏமாற்றிவிட்டால் என் கதி என்னாவது என்று கேட்கிறார் மாணிக்கவாசகர்.

பக்தியிலும் ஆனந்தத்திலும் உள்ள உறுதியைப் பாடல் எடுத்துச் சொல்கிறது.

3

வானத்தை ஏறிட்டுப் பார்த்தால் போதும். நம்நிலை என்ன என்பது தெரிந்துவிடும். பக்தி உண்டாகிவிடும். சூரியன், சந்திரன், தகதக என்று ஜொலிக்கும் செவ்வாய் இவ்வளவும் ஒரு கணக்கில் சுழன்று கொண்டிருக்கின்றன. பூமியும் ஒருகணக்கில், ஒரு பாதையில் மஞ்சாடிகூடப் பிசகாமல் சுற்றிக் கொண்டே இருக்கிறது.

சூரியனை வைத்துப் பார்க்கிறபொழுது நமது பூமி சாதாரணம் என்று தெரியும். சூரியன் ஒரு ஆலமரம் என்றால் பூமி ஒரு எறும்பு மாதிரிதான். சிற்றெறும்பு மாதிரியேதான்.

இனி பூமியையே சுற்றி வளைத்து நிற்பதுபோல் தென் வடலாகக் கிடக்கிறதே ஒரு நட்சத்திரக் கூட்டம், அதில் லட்சக் கணக்கான நட்சத்திரங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு நட்சத்திரமும் சூரியனைவிடப் பலபல லட்சம் மடங்கு பெரியவை. ஒன்றுக்கு ஒன்று பல ஆயிரம் கோடிமைல் தூரம். அவ்வளவு

நட்சத்திரமும் சேர்ந்து கொலு இருப்பதுபோல் தெரிகிறது. கோடி சூரியப் பிரகாசத்தோடு ஜொலிக்கும் இந்த நட்சத்திர வட்டத்தை "பாலாறு" என்கிறோம். 'ஆகாய கங்கை' என்றும் சொல்கிறோம்.

வானவெளியில் இதுபோன்ற நட்சத்திர வட்டங்கள் கோடான கோடி.

இவ்வளவும் கண்ணுக்குத் தெரியாத வானவெளியில் மிதக் கின்றன. மிதந்து கொண்டே இருக்கின்றன.

போகப் போக போய்க் கொண்டே இருக்கிறது வானவெளி. ஆரம்பம் எது, நடுஎது, முடிவு எது, என்னும் எல்லையே இல்லாதபடி போய்க் கொண்டே இருக்கிறது வானம்.

சொல்லுக்குக் கட்டுப்படாமல், கணக்கை உதறி எறிந்து விட்டு, சிந்தனைக்குப் பிடிபடாமல், விரிந்து பரந்து போய்க் கொண்டே இருக்கிறது வானம்.

வானவெளியில் எத்தனை கோடி அண்டங்கள். எத்தனை கோடி அகண்டங்கள். ஒன்றுக்கு ஒன்று சம்பந்தம் இல்லை என்று சொல்லும்படி இருக்கின்றன.

ஆனால் அவ்வளவும் ஒரே மூலத்திலிருந்து உண்டானவைதாம்.

இனி நமது பூமியை எடுத்துக் கொண்டால் ஒரே பாறை மயம். மண்தான். ஆனால் இந்த மண்ணிலிருந்துதான் கோடான கோடி வஸ்துக்கள் உண்டாகின்றன. தானியங்களில் எத்தனை, வகை, பருப்புகளில் எத்தனை வகை, நெய் என்ன, தேன் என்ன புஷ்பங்கள் என்ன, கனிகள் என்ன, புல்பூண்டுகள் என்ன, பிராணி கள் என்ன, அவ்வளவும் மண்ணிலிருந்து உண்டானவைதாம்.

மணம், ருசி, எல்லாம் மண்ணிலிருந்து உண்டானவையே. நாமும் மண்ணிலிருந்து தான் உண்டானோம். நம் உணர்ச்சியும் மண்ணிலிருந்துதான் உண்டாகியது. உயிரும் அப்படித்தான். நம் உடம்பில் எத்தனையோ ஆயிரம் அம்சங்கள் சேர்ந்து செயல் படுகின்றன. ஒன்றுக்கு ஒன்று சம்பந்தமே இல்லை என்று சொல்லும்படி அவை வேறுபட்டுத் தோன்றுகின்றன. கரடு முரடான எலும்புக்கும் வெண்ணெயைவிட மெதுமெது என்றிருக் கும் நாக்குக்கும் ஒற்றுமை காண முடியுமா? கருவிழி என்னும் பெயரோடு இருக்கிற கண்மணிக்கும், கன்னங்கரேல் என்றிருக்கிற ரோமத்துக்கும் ஒற்றுமை சொல்ல முடியுமா?

வஸ்துக்கள் கோடான கோடி! வேறுபாடுகளும் கோடான கோடி!

எறும்பு எங்கே? யானை எங்கே? புல்லுக்கும் ஆலமரத்துக்கும் எவ்வளவு வேற்றுமை? இரும்புக்கும் தங்கத்துக்கும் உள்ள முரண், சுண்ணாம்புக்கல்லுக்கும் முத்துக்கும் உள்ள முரண், அப்பப்பா சொல்லி முடியாது.

ஆனால் தோற்றத்திலும் வடிவத்திலும் குணத்திலும் உள்ள வேறுபாடு முழுவதும் மாயைதான். உண்மையில் அவை எல்லாம் ஒன்றுதான் என்பது ஆராய்ந்து பார்க்கப் பார்க்கத் தெரிகிறது.

ஒரே மண்ணிலிருந்துதான் கோடிக்கணக்கில் விதவிதமாகப் பொருள்கள் உண்டாகின்றன. அப்படி உண்டாவதற்குக் காற்று, நீர், தீ முதலியவை ஒத்துழைக்கின்றன. இனி, காற்று, நீர், தீ, மண், சூரியன், செவ்வாய், நட்சத்திரம் அவ்வளவும் அதிநுட்பமான ஆகாயத்திலிருந்தே பிறந்தன.

அந்த ஆகாயம் எதிலிருந்து உண்டானது? ஏதோ ஒன்றிலிருந்துதான் உண்டாகி இருக்க வேண்டும். வெறும் சூனியத்திலிருந்து எதுவும் உண்டாவதில்லை.

சகல சக்திகளுக்கும் ஆதாரமாக இருக்கும் ஆகாயம் உண்டானது ஒரு சக்தியிலிருந்துதான். பரிபூரணமான அந்த சக்தியையே கடவுள் என்கிறோம்.

இனி எல்லா வஸ்துக்களும் அணுமயம் என்றும் அணுவில் வேற்றுமை இல்லை என்றும் தற்காலத்து நிபுணர்கள் சொல்கிறார்கள்.

அணுவுக்கு அப்பால் இருப்பது ஒரே சக்திதான் என்றும் சொல்கிறார்கள்.

பேதம் இல்லாத அந்த ஒரே சக்தி, கோடி கோடி பேதங்களையுடைய வஸ்துக்களாக உண்டாக்குகிறது, வைத்திருக்கிறது, மாற்றுகிறது என்றும் சொல்கிறார்கள்.

அந்த அற்புத சக்தியை இறைவன் என்றும், இறைவனுடைய செயல் என்றும் சொல்கிறோம்.

இறைவனுடைய செயலை - எங்கும் நிறைந்த இறைவனுடைய செயலை திருவருள் என்றும், திருவடி என்றும் உபசாரமாகச் சொல்கிறோம்.

மாணிக்கவாசகரும் அப்படியே சொல்கிறார்.

தம் அனுபவத்தை இறைவனிடமே நேருக்குநேராக எக்களிப்போடு சொல்வதாகப் பாடல்.

''பெருமானே! நீர்தான் சகலமும். உம்மைத்தவிர வேறு ஒன்றும் இல்லை. இத்தனை வேஷங்களைத் தாங்கி ஆடுகிற ஆட்டம் பெரிய நாடகந்தான். அதையும்விட ஒரு மர்மமான நாடகத்தையும் அல்லவா நீர் நடத்துகிறீர்! அதாவது ஒவ்வொரு வஸ்துவும் நாம்தான் அதிகாரி, ஆக்குவதும் நாம்தான், அழிப்பதும் நாம்தான் என்று நம்பி மகிழும்படி செய்து விடுகிறீரே!

இது என்ன வேடிக்கை!

இனிப் பாடலைப் பார்க்கலாம்.

வான்ஆகி, மண்ஆகி,
வளிஆகி, ஒளிஆகி,
ஊன்ஆகி, உயிராகி,
உண்மையுமாய் இன்மையுமாய்
கோன்ஆகி; யான்எனதென்(று)
அவர்அவரைக் கூத்தாட்டு
வான்,ஆகி நின்றாயை!
என்சொல்லி வாழ்த்துவனே? (5)

---

(வான் - ஆகாயம். வளி - காற்று. ஊன் - ஜடம். உயிர் - ஆன்மா· உண்மையும் இன்மையும் ஆய் - இறைவனுடைய செயல்தான் எல்லாம் என்று நம்பும்படியாகவும் இருக்கிறார். இறைவனாவது ஒன்றாவது என்று நம்பாதபடி அலையவும் அவர் இடம் கொடுக்கிறார். கோன்ஆகி -எல்லாம் அவருடையசெயல்தான். நடத்துகிற நாயகன் அவர் ஒருவர்தான். ஆனாலும் ஒவ்வொருவரையும் நான் தான், எனதுதான் என்று மயங்கிக் கூத்தாடும்படி செய்கிறவரும் அவரே.

இப்படி எல்லாம் திருவிளையாடல் புரியும் இறைவனைப் பார்த்து, ஐயனே! உன்னுடைய அற்புதத்தை எப்படி வார்த்தைகளால் புனைந்து சொல்ல முடியும் என்று தத்தளிக்கிறார் மாணிக்கவாசகர்.)

குறிப்பு : ''என் சொல்லி வாழ்த்துவனே'' என்று தனித்த முறையில், முடிப்பில் வைத்து அபிநயம் பிடித்துக் காட்டுகிறது செய்யுள்.

(4)

உண்மையைக் கண்டு கொண்ட அதிசயம் பக்தி பரவசத்தோடு பாவரூபம் எடுத்து நிற்பதைச் செய்யுளில் பார்க்கலாம்.

கடவுளுடைய அருள் எங்கும் எப்பொழுதும் ஒரு தன்மைத்தாய் நிறைந்திருக்கிறது. குறை என்பது இல்லை. குறை இருந்தால்தான் பேச்சுக்கு இடம் உண்டு. குறைவே இல்லாத பரிபூரணத்தைப் பற்றி பரவசம் உண்டாகும். பேச்சுக்கு அங்கு இடம் இல்லை.

இந்த உண்மையை மாணிக்கவாசகர் மூலம் தமிழ் எடுத்துச் சொல்கிறது. இசையோடும் தாளத்தோடும் எடுத்துச் சொல்கிறது.

மாணிக்கவாசகருடைய காலம் என்ன? அவர் இப்பொழுது இருந்தால் அவருக்கு வயது எவ்வளவு இருக்கும் என்பது நமக்குத் தெரியாது. அதற்குரிய குறிப்பு ஒன்றும் நம்மிடம் இல்லை. ஆனால் மாணிக்கவாசகர் ஆயிரத்து நூறு வருஷங்களுக்கு முன் இருந்திருக்கலாம் என்று தெரிகிறது. அவருடைய பாடல்களின் அமைப்பு அப்படி இருக்கிறது.

மாணிக்கவாசகர் அவர் காலத்திய இலக்கியங்களைப் படித்திருக்கலாம். இலக்கண நூல்களை வாசித்திருக்கலாம். அரசியல், வானியல், கணக்கு, மருந்து முதலிய துறைகள் சம்பந்தமான ஏடுகளையும் புரட்டிப் பார்த்திருக்கலாம்.

ஏட்டுக்கல்வியை விட அனுபவ ஞானம் நிறைந்தவர் மாணிக்கவாசகர். அனுபவமானது உண்மையோடும் உணர்ச்சியோடும் சேர்ந்து பழுக்கப் பழுக்க, 'புத்தகங்களைப் படித்து வியாக்யானம் பண்ணுவது பிரயோசனம் இல்லை' என்று அவருக்குத் தெரிந்துவிட்டது.

உலகத்தைப் பார்த்தார். காட்சிகளும் சம்பவங்களும் லட்சக்கணக்கில் குறுக்கும் நெடுக்குமாய் ஓடி ஆடுகின்றன உலகில். அப்படி விளையாடும் உலகமே மாணிக்கவாசகருக்குப் பள்ளிக்கூடம். மனிதர்களே சாஸ்திரங்கள். அதாவது பாடப் புத்தகங்கள்.

மனிதர்களுடைய நடை, உடை, பாவனை, வாழ்க்கை, உணர்ச்சி, வெற்றி, தோல்வி எல்லாம் அந்தப் புத்தகங்களில் பக்கம் பக்கமாய் இருந்தன. காட்டுமிராண்டித்தனம், நாகரிகம், தடித்தனம், பண்பாடு இவை எல்லாம் மனிதர்கள் போட்டுக்கொண்ட வேஷங்கள். வேஷங்களைக் களைந்துவிட்டு மனிதர்களைப் பார்த்தால் எல்லா மனிதர்களும் ஒன்றுபோலவே இருக்

கிறார்கள். ஒவ்வொரு மனிதனும் ஆணவமயமாகவே இருக்கிறான். மாணிக்கவாசகர் மனிதர்களை நேருக்கு நேராகப் பார்த்தார். தன்னையும் மற்றவர்களையும் பார்த்தார்.

நான் என்கிற ஆணவம் ''நான்தனி'' என்று திமிரோடு நிற்கிறது. நானும், என்னுடைய காரியமுந்தான் முக்கியம் என்று கொழுத்துப்போய் அலைகிறது. இந்த அலங்கோலத்தை நேருக்கு நேராகப் பார்த்துவிட்டார் மாணிக்கவாசகர்.

மனிதர்களை ஆட்டி வைப்பது ஆணவந்தான். ஆணவம் சொல்கிறபடியே மனிதன் நடக்கிறான். அழவேண்டுமானால் அழுகிறான். சிரிக்க வேண்டும் என்றால் சிரிக்கிறான். அணைக்க வேண்டும் என்றால் அணைக்கிறான். உதைக்கவேண்டும் என்றால் உதைக்கிறான்.

காரியம், பிழைப்பு இவைதான் பிரதானம். அதற்காகவே பழகுகிறான். அதற்காகவே வெறுக்கிறான்.

கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் அன்பு, வெறுப்பு, கோபம், பொறுமை, வீரம், காதல் எல்லாமே காரியத்துக்காகப் போடுகிற வேஷங்களாகத்தான் இருக்கின்றன. உண்மையான பண்போடு இல்லை.

தான், தன் காரியம், தன் பிழைப்பு, தன்னுடைய அதிகாரம் இவற்றைக் காப்பாற்றிக் கொள்ள, எங்கெங்கு, எந்தெந்த வேஷம் போடவேண்டுமானாலும், அங்கங்கு அந்தந்த வேஷங்களை மனிதன் போட்டுக் கொண்டே இருக்கிறான்.

மனிதன் தானாகப் போடவில்லை வேஷங்களை. ஆணவத்தின் கட்டளைகளுக்கு உட்பட்டே போடுகிறான்.

எத்தனையோ அரியபெரிய செயல்களைச் செய்து முடித்திருக்கிறான் மனிதன். இப்பொழுதும் தொடர்ந்து பல அற்புதங்களைச் செய்து கொண்டுதான் இருக்கிறான். இனியும் எவ்வளவோ செய்யப் போகிறான்.

பூமியை உழுது பயிரிட்டு தானியங்களை விளைவிக்கிறான். தானியங்களை வேகவைத்துச் சாப்பிடுகிறான். பலபல பொருள்களைச் செய்கிறான். அதற்குக் கருவிகளையும் உண்டாக்கி இருக்கிறான்.

நெருப்பைக் கண்டுபிடித்திருக்கிறான். நீரை உபயோகப் படுத்தி இருக்கிறான். மருந்துகளைக் கண்டு பிடித்திருக்கிறான். உலோகங்களை உருக்கி விடுகிறான். வீடுகட்டி இருக்கிறான். அணை கட்டி இருக்கிறான். ஊரை உண்டாக்கி இருக்கிறான். கோவில், குளம், தேர், திருவிழா என்றெல்லாம் ஏற்படுத்தி இருக்கிறான்.

குடும்பம் என்று ஒன்றை கண்டுபிடித்து நடத்தி வருகிறான். சேர்ந்து வாழ்ந்து வருகிறான். இன்றளவும் தொடர்ந்து அவ்வளவு காரியங்களையும் ஞாபகமாகச் செய்து வருகிறான்.

எல்லாவற்றுக்கும் மேலாக யோசனை செய்ய முடிந்திருக்கிறது. யோசிக்க யோசிக்க விஷயம் ஒவ்வொன்றாய் அவிழ்ந்து விடுபட்டிருக்கிறது. தெளிவு உண்டாகி இருக்கிறது. உணர்ச்சிகள் விளைந்திருக்கின்றன. உணர்ச்சிகளை எடுத்துச் சொல்ல வார்த்தைகளையும் உண்டாக்கி இருக்கிறான். கவி, கலை எல்லாவற்றையும் உண்டாக்கி வீற்றிருக்கிறான் மனிதன். மனிதனைத் தவிர வேறு எந்தப் பிராணியாலும் இப்படி முடியாது. மனிதனை விட யானை எவ்வளவோ பெரியதுதான். ஆனால் மனிதனைப் போல யோசிக்க முடியுமா? செயலாற்ற முடியுமா? ஆலமரம் யானையை விடப் பெரியது. அதனாலும் முடியாதுதான். பெரிய பெரிய நட்சத்திரங்களால்கூட மனிதன் போல ஒன்றும் செய்ய முடியாது.

பேரண்டத்துக்கே மணிமுடியாக விளங்குகிறான் மனிதன்.

ஆனாலும் மனிதன் சுதந்திரமாக இல்லை. ஒரு காரியத்தில் கூட சுதந்திரமாக இல்லை. எல்லா அம்சங்களிலும் ஆணவத்துக்கு அடிமையாகவே இருக்கிறான்.

உண்மைக்கும் தனக்கும் சம்பந்தமே இல்லை என்று சொல்லும் படி பொய்யாகவே வாழ்கிறான்.

மனைவியிடம் ஒருவிதம், மக்களிடம் ஒருவிதம், நண்பர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதம். அதிகாரியிடம் ஒருவிதம், பணியாளரிடம் ஒருவிதம், யார் யாரிடம் எப்படி எப்படித் தோன்ற வேண்டுமோ, அப்படி அப்படித் தோன்றிச் சமாளித்துக் கொள்கிறான். வாழ்க்கையே இப்படிச் சமாளிக்கிறமயமாகப் போய்விட்டது மனிதனுக்கு.

மனிதனுடைய இந்த நிலையைப் பார்த்தால் பரிதாபமாகத் தான் இருக்கிறது. ஒழுங்கில்லாமல் தாறுமாறாய்க் கிடக்கிறது மனித காரியம்.

இதை எப்படி உயிருள்ள வாழ்க்கை என்று சொல்லமுடியும். ஒளியே இல்லாமல் இருளில் உழல்கிற இந்த மாயவாழ்வைச் செத்த வாழ்க்கை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆணவம் என்பது கண்ணுக்குப் புலனாகாத ஒன்றுதான். ஆனாலும் அதை எப்படியோ பார்த்து விட்டார் மாணிக்கவாசகர்.

அதனுடைய அட்டகாசம் பித்தலாட்டம் அயோக்கியத்தனம் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் பார்த்துவிட்டார் மாணிக்கவாசகர்.

அடடா! பொல்லாத ஒன்றாக அல்லவா இருக்கிறது இந்த ஆணவம்? அநாதியான தத்துவமாகவும் இருக்கிறதே இந்த ஆணவம்? எத்தனை எத்தனை திருவிளையாடல்களை நடத்திக் கொண்டு இருக்கிறது இந்த ஆணவம்? என்று திகைத்து விட்டார் மாணிக்கவாசகர்.

இறைவனோடு போட்டி போட்டு நடத்துகிற மாதிரி அல்லவா இந்து ஆணவம் செயல்படுகிறது என்று அதிசயப்பட்டார் மாணிக்கவாசகர்.

வியப்பையும் திகைப்பையும் இறைவனிடத்திலேயே கொண்டு போய்க் கொட்டுகிறார் மாணிக்கவாசசர்.

''வண்டுகள் சதா சுற்றிச் சுற்றி வந்து ரீங்காரம் பண்ணுகிற கொன்றை மாலையை அணிந்த பெருமானே! உன்னை நான் சதா சுற்றிச் சுற்றி வருகிறேன். வாழ்த்துகிறேன். போற்றுகிறேன். ஏன்? இந்தப் பாழாய்ப் போன ஆணவம் இருக்கிறதே! அதை என்னிடம் இருந்து வேரோடு வெட்டி எடுத்துவிட வேண்டும் நீர்'' என்பதற்குத்தான்.

''சூழ்த்துமது கரம்முரலும்
துணர்க்கொன்றைத் தாரோயை
பாழ்த்தபிறப்(பு) அறுத்திடுவான்
யானும்உன்னைப் பரவுவனே''

---

(சூழ்த்து - சூழ்ந்து. மதுகரம் - வண்டு. பாழ்த்த - உண்மை இல்லாது வறண்டுபோன.) பிறப்பு - உடம்போடு ஒட்டிப் பிறந்ததனால் வந்த ஆணவம். பரவுவன் - போற்றுகிறேன்.

வெட்டொன்று துண்டிரண்டு என்று சொல்லும்படி கேட்டு விட்டார் மாணிக்கவாசகர். "உம்மை நம்பி வழிபடுவது "அது வேண்டும், இதுவேண்டும்" என்பதற்கு அல்ல. "என்னைக் குரங் காட்டம் ஆட்டிக் கொண்டிருக்கிற ஆணவத்தை விட்டுத் தொலைப்பதற்காகத்தான்". என்று பிட்டுப் பிட்டுச் சொல்லி விட்டார் மாணிக்கவாசகர்.

ஆணவம் கழன்றபிறகு ஒன்றைப் புகழ்வதுதான் உண்மை யான புகழ்ச்சி. அன்பு காட்டுவதிலும் சரி, கோபித்துக் கொள் வதிலும் சரி, மதிக்கிறதிலும் சரி ஆணவம் அற்ற நிலையில்தான், உண்மை இருக்கும். ஆணவம் இருக்கும்வரை எந்த உணர்ச்சியிலும் உண்மை இருக்காது.

கடவுளே கதி என்று வழிபடுகிற பக்தியிலும் கூட ஆணவம் கழலாத நிலையில் உண்மை இருக்காது. "பரம பக்தன் இவர், இறைவனுக்கு ஏற்ற இனியவர் இவர்" என்று மற்றவர்கள் பயப்படும்படி செய்கிற காரியந்தான் அந்தப் பக்தி. மற்றவர் முன்னிலையில் நான் தனி என்று உயர்வதற்கு உரிய சூழ்ச்சிதான் அது. உண்மையில் கரைந்து ஒன்றுபடுகிற பக்தி அல்ல அது. அப்படி ஒன்றுபட ஆணவம் ஒழிய வேண்டும். 'அதற்கு அருள் பாலியும் பெருமானே' என்கிறார் மாணிக்கவாசகர்.

பாடலின் முழு உருவத்தையும் பார்க்கலாம்.

வாழ்த்துவதும் வானவர்கள்
தாம்வாழ்வான்! மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து
தமைஎல்லாம் தொழவேண்டி!
சூழ்த்துமது கரம்முரலும்
துணர்க்கொன்றைத் தாரோயை
பாழ்த்தபிறப்(பு) அறுத்திடுவான்
யானும்உன்னைப் பரவுவனே" (6)

(வானவர் - உணர்ச்சிமயமான ஞானிகள் கூட. தாம் வாழ்வான் - தங்கள் காரியமாகத்தான். பிழைப்புக்காகவே வாழ்த்துகிறார்கள். தாழ்த்துவதும் - சாஷ்டாங்கமாக விழுந்து கும்பிடுவதுகூட உண்மை இல்லை. தாம் உயர்ந்து தமை எல்லாம் தொழவேண்டி- மற்றவர்களை விட எனக்குத்தான் இறைவன் நெருக்கம் என்று பிறர்முன் உயரவும் அதனால் எல்லோரும் பயந்து தன்னைப் போற்றவும் செய்கிற மோசடிதான்.)

குறிப்பு :- நம் காலத்து மனிதர்களைப் பற்றிச் சொல்வது போல் இருக்கிறது விஷயம்.

தங்கள் காரியம் ஒன்றுதான் முக்கியம் என்று அலைகிறார்கள் மனிதர்கள். அதைக் காட்டி விளக்குகிறது பாடல்.

அதிகாரம் ஒருவனிடம் இருந்தால் போதும். அவனை எப்படி 'காசு, பணமாக' மாற்றலாம் என்று யோசிக்கிறான். மனிதன், அதற்காக அவனைக் கண்கண்ட தெய்வம் என்று புகழ்கிறான்.

அதிகாரம் உடையவன் எனக்கு வேண்டியவன் என்று காட்டு வதற்காகவே அவனிடம் பம்மிப் பம்மி நெருங்குகிறான்.

அவனிடம் இனி ஒரு காரியமும் இல்லை என்றால் போதும்; கன்னா பின்னா என்று அவனைத் திட்டுகிறான்.

புகழ்கிறது இகழ்கிறது எல்லாமே காரியத்துக்காகத்தான்! உண்மையைத் தெரிந்து அல்ல!!

அரசியல், வியாபாரம், தொழில் இவைகளில் மட்டும் அல்ல. கல்வியிலும் அப்படித்தான். பொறுப்பு வாய்ந்த பதவியிலும் அப்படித்தான் பேரின்பமயமான பக்தித் துறையிலும் அப்படித் தான் இருக்கிறது. இந்த அலங்கோலத்தைக் கையில் எடுத்துக் காட்டுகிறது பாடல்.

(5)

கூரையில் மூங்கில் வளையில் எலி வந்து நிற்கும். கீழே மூலை யில் படுத்திருக்கும் பூனை பார்த்துவிடும். அவ்வளவுதான், பூனை யின் உடம்பு முழுவதும் ஒரு சிலிர்ப்புச் சிலிர்க்கும். காது படபட என்று அடித்து விறைத்து நிற்கும். கண்கள் தகதக என்று எரியும். நாக்கில் ஜலம் சொட்டுச் சொட்டாக ஊறும். அப்படியே பாய்ந்து எலியைக் கவ்விக் கொண்டு வர பூனைக்கு ஆவேசம் உண்டாகும்.

இவ்வளவும் உண்டானால்தான் பூனை. இல்லாவிட்டால் மரத்தில் செய்த பொம்மைதான். பொம்மைப் பூனையேதான்.

காதலியைப் பார்க்கிறான் காதலன். அவளைப் பார்த்தவுடன் என்ன நடக்கும்? உடம்பு முழுவதும் வெலவெலத்துவிடும். முகம், நெற்றி, கால், கை, முதுகு, மார்பு, உச்சி, உள்ளங்கால்கூட வேர்த்துக் கொட்டிவிடும். மனது ஆசைக் கடலாகத் தத்தளிக்கும். அதில் காதல் அலைகள் எழுந்து எழுந்து புரளும்.

கையும் ஓடாது, காலும் ஓடாது அவனுக்கு. பேச்சும் முன்னுக்குப்பின் தடுமாறிக் குழறும்.

அப்படி ஆளையே உருமாற்றிவிடும் காதல். அப்படி மாறினால் தான் அவன் காதலன். கருங்கல் தூண்போல அப்படியே நிற்கிறான் என்றால் அவன் காதலன் இல்லை. மரப்பொம்மை தான்.

பக்தர்கள் காரியமும் அப்படித்தான். இறைவனுடைய அருளை நினைத்த மாத்திரத்தில் அவர்கள் புளகாங்கிதம் அடைவார்கள். பேரானந்தத்தில் உருகுவார்கள். திளைப்பார்கள். ஏன்? ஆடிக் குதிக்கக் கூடச் செய்வார்கள். பக்திமயமான பாடல்களைப் பாடி, பாடல்களுக்கு ஏற்றபடி ஆடி ஆடி மகிழ்வார்கள்.

ஆனந்தக்கண்ணீர் அவர்களுக்கு மாலை மாலையாகக் கொட்டும். அணையில் சிறைப்படுத்தப்பட்ட வெள்ளம் திமிறிக் கொண்டு நிற்கும். மடையின் சீப்பைத் திறந்தவுடன் பாறை, கல், திரடு எல்லாவற்றிலும் ஏறிக்குதித்து பள்ளத்தை நோக்கித் தாவித் தாவி ஓடிவிடும்.

ஞானிகளின் உள்ளம் உருகி அப்படித் துள்ளிக் குதிக்கும்.

அப்படிக் குதித்தால்தான் அவர்கள் ஞானிகள். அதாவது பக்தர்கள்.

பேரண்டம் முழுவதும் கடவுளுடைய செயல்தான். இறைவனுடைய செயல் தவிர வேறு ஒன்றும் இல்லை. இறைவனுடைய செயலில் ஒன்றை நினைத்தால் போதும். இல்லைஅது பற்றிப் பிறர் சொல்லக் கேட்டாலே போதும். மனம் உருகிவிடும் பக்தர்களுக்கு

கண்ணுக்குத் தெரியாத நுட்பமான உருவில் ஆவியாகி மேலே போய்விடுகிறது நீர். மேகப்படலமாய் - புகைமண்டலமாய் அந்த ரத்தில் அது நிற்கிறது. பூமியைச் சுற்றி நாலா திசைகளிலும் மலைமலையாய் அது படர்ந்து நகர்ந்து கொண்டே இருக்கிறது.

வானமே கண் கூசும்படி மின்னல் அடிக்கிறது. திசைகளே கதிகலங்கும்படி இடிமுழங்குகிறது. பூமி முழுவதும், மலை, கடல், காடு, மேடு, பள்ளம் எல்லாவற்றிலும் வெள்ளம் திரளும்படி மழை கொட்டிவிடுகிறது. புல் பூண்டுகள், தாவரங்கள் எல்லாம் தளிர்த்துத் துளிர்க்கின்றன. பூமிக்குள்ளிருந்து மலைமலையாய் வந்துவிடுகிறது தானியம். பிராணிகளுக்கு உயிர்ச்சத்தாய் இருந்து காப்பாற்றுகிறது அந்தத் தவசம்.

இவ்வளவும் ஒழுங்காக நடக்கின்றன. இவற்றில் ஒன்றுகூட நம் செயல் இல்லை. எல்லாம் இறைவனுடைய செயல்தான்.

எல்லாம் இறைவனுடைய செயல்தான் என்னும் உண்மை தெரிய வேண்டாமா மனிதனுக்கு? தெரிந்து வாழ்வதுதானே வாழ்க்கை? ஆனால் மனிதனோ,

வாழ்வது போலக் காட்டிக் கொண்டே சதா செத்துக் கொண்டிருக்கிறான்.

இந்த அலங்கோலம் மாணிக்கவாசர் கண்ணில் பட்டுவிட்டது. பதறிவிட்டார். பாம்பை மிதித்தவன் எப்படிப் பதறுவான். அப்படிப் பதறிப் போனார் மாணிக்கவாசகர்.

மனதைப் பார்த்து சொல்வதாக விஷயம்.

"மனமே! கொடிய ஆணவத்தின் பிடியில் சிக்கிவிட்டாய்! ஒழிந்து போனாய்! இறைவனை மறந்துவிட்டாய். அவன் உண்மைமயமாக இருக்கிறான். நீயோ பொய்யில் விழுந்துவிட்டாய். விழுந்து மூழ்குகிறாய். என்ன சொல்லி என்ன பலன்? வசமாக மாட்டிக் கொண்டாய். மீண்டு வருவது என்பது எளிதான காரியம் இல்லை. பொய்யின் பித்தலாட்டம் தெரிந்தும் அதன் பொறியில் விழுந்துவிட்டாயே! உன்னை நீயே கெடுத்து விட்டாய்!

இனிப்பாடலைப் பார்க்கலாம்.

வாழ்கின்றாய் வாழாத
நெஞ்சமே! வல்வினைப்பட்(டு);
ஆழ்கின்றாய் ஆழாமல்க்
காப்பானை ஏத்தாதே;
சூழ்கின்றாய் கேடுனக்குச்
சொல்கின்றேன் பல்காலும்;
வீழ்கின்றாய் நீஅவலக்
கடலாய வெள்ளத்தே. (7)

ஆணவமும் அதன் கொடுக்குகளும் செய்கிற கொடுமைக்கு எல்லை கிடையாது. ஆணவத்தின் பல்லைப் பிடுங்கிட வேண்டும், இல்லாவிட்டால் பக்தி துளிர்க்காது. உண்மையான பக்தியைத் தூக்கி நிறுத்துகிறது செய்யுள்.

---

(வல்வினைப்பட்டு - கொடிய ஆணவத்திடம் சிக்கி. ஆழ்கின்றாய் - மூழ்குகிறாய். அவலக்கடல் - துன்பக்கடல்)

குறிப்பு :- நோயும் அதன் அம்சங்களும் பலபல. அத்தனையையும் வேரறக் களைவதுதான் ஆரோக்கியம். நோயும் நோய்க் கூறுகளும் உடம்பை அரித்துத் தின்று கொண்டிருக்கின்றன. அங்கு எப்படி ஆரோக்கியம் வந்து தங்க முடியும்?

# ஆசைமயமானவர் கடவுள்

(1)

அண்டத்தில் எத்தனையோ காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் நெறிமுறை பிசகாமல் நடக்கின்றன. அண்டத்தில் நடப்பது போலவே பிண்டத்திலும் நடக்கின்றன. நம் உடம்பில் சதா நடைபெறுகிற காரியங்கள் பலப்பல. நூறு என்றும் சொல்ல முடியாது. ஆயிரம் என்றும் சொல்ல முடியாது லட்சம் என்றுதான் சொல்ல வேண்டும். அத்தனை காரியங்களும் பிசகாமல் ஒழுங்காக நடக்கின்றன.

இனி உள்ளத்தில் நடக்கிற காரியங்களைப் பார்த்தால் நம்பவே முடியவில்லை. அத்தனை காரியங்களும் சொல்லி வைத்ததுபோல் உடனுக்குடன் நடக்கின்றன. பார்த்தல், சிந்தித்தல், அடையாளம் காணல், ஞாபகத்தில் வைத்தல்' மறுத்தல், யோசித்தல், இனம் கண்டு கொள்ளுதல் எல்லாம் அதிசயந்தான்.

சிந்தனையைக் கையில் எடுத்து ஒவ்வொன்றாக உதறி உதறி உணர்ச்சிகளாக ஜொலிக்க வைக்கிறது மனம். அதுவும் அற்புதந் தான்.

இவ்வளவும் ஒரு நியதிப்படியே நடக்கின்றன. நமக்கு யாதொரு செயலும் இல்லாதபடி தானாக நடக்கின்றன.

தேகத்தில் நடக்கிற காரியம், மனதில் நடக்கிற காரியம் இவைகளுக்கே நாம் அதிகாரி இல்லை என்று ஆனபிறகு, பக்தி, ஞானம், ஆனந்தம் இவற்றுக்கு நாம்தான் அதிகாரி என்று எப்படிச் சொல்ல முடியும்?

இறைவனுடைய கருணைதான் காரணம். அவனுடைய அருள்தான் நமக்கு உண்மையைக் காட்டுகிறது. உள்ளத்தை உருக்குகிறது. பரவசத்தில் திளைக்க வைக்கிறது.

மனைவி என்றும், மக்கள் என்றும், தொழில் என்றும், பிழைப்பு என்றும், வேண்டியவர்கள் என்றும், வேண்டாதவர்கள் என்றும், எத்தனையோ பிரவர்த்திகளோடு மல்லுக்கட்டிக் கொண்டு கிடக்கிறோம் நாம். ஒவ்வொன்றும் சூழ்ச்சி செய்து நம்மைவிழத் தட்டி விடுகின்றன. அவற்றில் மாட்டிக் கொள் கிறோம். விடுபடமுடியாதபடி மாட்டிக் கொள்கிறோம்.

காலையும் உதற முடியாமல் கையையும் உதறமுடியாமல் சிக்கித் தவிக்கும் நம்முன், உண்மை வந்து பிரகாசிக்கிறது என்றால் அது அதிசயம் அல்லவா? அந்த உண்மையைப் பார்த்து உள்ளம் உருகுகிறது. ஊக்கம் உண்டாகிறது, எழுச்சி பிறக்கிறது என்றால் அது அற்புதம் அல்லவா? பொய்யை உதறி எறிந்து விட்டு மெய் யோடு மெய்யாய் திளைக்க முடிகிறது என்றால் அது எத்தனை பெரிய அற்புதம்?

இறைவனுடைய கருணை அத்தனை பெரிய அற்புதத்தைச் செய்துவிடுகிறது.

பொய்யிலும் பித்தலாட்டத்திலும் மயங்கிக் கிடக்கும் மனிதனைத் தேடி வருகிறது அந்தக் கருணை. தட்டிக் கொடுக் கிறது, கையைப் பிடிக்கிறது, ஆசையோடு பார்க்கிறது. ''யாரென்று என்னை நீ இனம் காணமுடியவில்லையா? நன்றாக என்னை உற்றுப்பார். என் பின்னால் வா! இன்னும் காலதாமதம் செய்யாதே' என்று பரிவு காட்டுகிறது. மணமகளை அழைத்துக் கொண்டு போகும் மணமகன்போல் அது முன்னே நடக்கிறது. திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே அது நடக்கிறது. மாயப் பிடிகளை எல்லாம்உதறி எறிந்துவிட்டு அதன் பின்னே அடிமேல் அடிவைத்து நடக்கிறோம் நாம்.

சேற்றுக்குள்ளிருந்து செந்தாமரை முளைப்பதைப் போல் நம்முடைய காரியங்களுக்கு உள்ளிருந்தே ஞானம் பூத்து விடுகிறது.

உலகம் முழுவதையும் காப்பாற்றுகிற மழை ஒன்றை நினைத் தாலே போதும். இறைவனுடைய ஞாபகம் வந்துவிடும். பேரண்டம் முழுவதும் வெந்து அழிந்துவிடாமல் காப்பாற்ற கங்கையை-ஆகாய கங்கையை அல்லவா இறைவன் தலைமேல் வைத்துச் சுமந்து கொண்டிருக்கிறான்? அதற்காகத்தானே சடையை வளர்த்திருக்கிறான் இறைவன்?

மழையைப் பார்த்தாலே போதும். இறைவன் நமக்காக தண்ணீரைச் சுமந்து கொண்டிருப்பது தெரியும். சடையாகிய குடத்தில் தண்ணீரை நிறைத்துச் சுமந்து கொண்டிருப்பது தெரியும்.

இறைவனுடைய அருள் இப்படி கோடிக்கணக்கில் அலைஅலையாய் - சத்திமயமாகச் செயல்படுகிறது. சகல சத்திகளுக்கும் ஆதாரமாய் இருக்கிறான் இறைவன். அந்தப் பரிபூரணத்தின் அடையாளந்தான் அவனுடைய ரிஷப வாகனம் (விடை).

இறைவனுடைய பேரருளை, நினைந்து உருகுகிறவர்களும், கேட்டு மயங்குகிறவர்களும் அணி அணியாய் இருக்கிறார்கள்.

எங்கும் அடியார் கூட்டம் நிறைந்திருக்கிறது.

அந்த மெய்யடியார்களை எல்லாம் விட்டுவிட்டு என்னைத் தேடி வந்து ஆட்கொண்டு விட்டானே இறைவன்! இது என்ன அற்புதம் என்று அதிசயத்துக்கு ஆளாகிறார் மாணிக்கவாசகர்.

இப்படி என்னை வலிய வந்து சேர்த்துக் கொண்ட பிறகும் என் உள்ளம் உருகவில்லையே? என் கண்கள் கசியவில்லையே? இது என்ன கொடுமை என்று திகைக்கிறார் மாணிக்கவாசகர்.

அவருடைய ஆனந்தமயமான வியப்பையும் திகைப்பையும் பாடலில் பார்க்கலாம்.

(தானான தானான
தானான தன்
தனனான தனனான
தானன தன்)

வெள்ளம்தாழ் விரிசடையாய்!
விடையாய்!விண் ணோர்
பெருமானே! எனக்கேட்டு
வேட்டநெஞ் சாய்ப்
பள்ளம்தாழ் உறுபுனலில்க்
கீழ்மேல்ஆ கப்
பதைத்துருகும் அவர்நிற்க
என்னைஆண் டாய்க்கு!
உள்ளம்தாள் நின்றுச்சி
அளவும்நெஞ் சாய்
உருகாதால்; உடம்பெல்லாம்
கண்ணாய்க்கண் ணீர்

**வெள்ளம்தான் பாயாதால்;**
**நெஞ்சம்கல் லாம்**
**கண்இணையும் மரமாம்;தீ**
**வினையினேற் கே.** (8)

(2)

வட்டமாக நான்குபேர் சேர்ந்து உட்காருகிறோம். சீட்டுக் கட்டைக் கலைக்கிறோம். போடுகிறோம். ஆட்டம் ஆரம்ப மாகிறது. ஆட்டத்தில் சூடுபிடிக்கிறது. ராஜா வருகிறார். ராணி யம்மா வருகிறார். ஜோக்கர் வருகிறார். ஐந்து, ஆறு என்று நம்பர்க்காரர்கள் அங்கங்கு சிதறிக் கிடக்கிறார்கள். அவர்களை ஒழுங்குபடுத்தி நிறுத்துகிறோம். அணிவகுத்து நிற்கிறார்கள். சேனாதிபதி (துருப்பு) இருக்கிறாரே, அவர் பெரியவருக்கும் சின்ன வருக்கும் மத்தியில் வருகிறார். இணைந்து நிற்கிறார்.

மளமளவென்று சீட்டுகள் ஒன்றோடொன்று சேர்கின்றன. அதாவது இனத்தோடு இனம் கூடிக் குலாவ ஆத்திரத்தோடு வருவது போல் வருகின்றன. பிறகு வராமல் சண்டித்தனம் பண்ணுகின்றன. சந்தோஷத்தைக் கொடுக்கிறது. எரிச்சலையும் உண்டுபண்ணுகிறது. அழஅழப்படுத்துகிறது சீட்டு.

வெற்றி என்றும் தோல்வி என்றும் உண்டாக்கி அதில் ஒரு வெறியை மூட்டிவிடுகிறது சீட்டு.

ஆட்டம் முடிந்து சீட்டுக்களை அடுக்கி பெட்டியில் சொருகி மூடிவிட்டால் ஒன்றும் இல்லை. வெறும் அட்டைதான்.

வெறும் அட்டைமயமான சீட்டா இவ்வளவும் செய்கிறது; இல்லை. நம்முடைய விளையாட்டு உணர்ச்சியே இவ்வளவும்

---

(வெள்ளம் தாழ்விரிசடையாய் - ஆகாய கங்கை தேங்கி நிற்கும் பெரிய சடையை உடைய இறைவனே! விடை - காளை, சத்திமய மான பூரணம். வேட்ட நெஞ்சாய் - வசமழிந்த மனதோடு. உள்ளம் உருகாதால் - உச்சிமுதல் உள்ளங்கால்வரை உடம்பு முழு வதும் மனமாக இருக்க வேண்டும். இருந்து உருகவேண்டும். அப்படி இல்லாமல் போய்விட்டதே! உடம்பெல்லாம்...பாயா தால் - அதேபோல உடம்பு முழுவதும் கண்ணாகிவிடவேண்டும். கண்ணீர் பெருகவேண்டும். அதுவும் வாய்க்கவில்லை. காரணம் என் நெஞ்சு நெஞ்சல்ல. கருங்கல். கண்ணும் கண்ணல்ல - பட்ட மரப்பாச்சி. தீவினையினேற்கு - பாவியாகிய எனக்கு வாய்த்தவை எல்லாம் அப்படியே.)

செய்கிறது? ராஜா, ராணி, ஜோக்கர், துருப்பு, பத்து, ஒன்பது என்றெல்லாம் உறவாட வைப்பதும், ஒதுங்க வைப்பதும் நம் உணர்ச்சிதான். விளையாட்டு உணர்ச்சிதான்.

நம் உணர்ச்சியில் ஒரு உலகம் உண்டாகிறது. ஒரு மாயா உலகமே உண்டாகிவிடுகிறது. அந்த உலகத்தோடு ஊடாடுகிறோம். திளைக்கிறோம். விட்டுப் பிரிய மனம் இல்லை நமக்கு. அந்த உலகத்தோடு உருண்டு புரண்ட வண்ணமாக இருக்கிறோம் நாம்.

கடவுளுடைய உணர்ச்சியில் - ஆனந்தமயமான உணர்ச்சியில் பேரண்டங்கள் உண்டாகின்றன. பெரிய பெரிய அண்டங்கள் கூட்டம் கூட்டமாய் உண்டாகி மிதக்கின்றன. சுற்றுகின்றன, சுழல்கின்றன. கோடான கோடி வஸ்துக்களும் அந்த விளையாட்டில் விளைந்து கொண்டே இருக்கின்றன.

மாசற்ற காட்சியினை உடைய ஞானிகளின் யோசனைக்குக் கூட எட்டாமல் மேலே மேலே போய்க் கொண்டிருக்கிறது இறைவனுடைய திருவிளையாடல் - பேரண்ட வெளிகளின் பெருக்கம்.

இறைவனுடைய செயல் ஒன்றுதான் எங்கும். நாம் என்பது இல்லை. சீட்டு விளையாட்டில் வருகிற ராஜா ராணி தான் நாம்.

எங்கும் நிறைந்த கடவுளிடத்தில் ஈடுபடுகிறார்கள் ஞானிகள். ஈடுபாட்டின் காரணமாக கடவுளுக்கு அடையாள உருவங்களை வைத்து வழிபடுகிறார்கள். பிறகு அடையாள உருவங்களின் ஈடுபாடு உண்டாகிறது. அந்த ஈடுபாடு உருவவழிபாட்டில் திளைக்கவைக்கிறது. உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் தத்தம் பண்ணி உருவ வழிபாட்டில் திளைக்கச் செய்கிறது. அப்படித் திளைப்பதற்குக் காரணம் எங்கும் நிறைந்த கடவுள் தத்துவத்தை உணர்ந்து அனுபவிப்பது தான்.

எல்லையற்ற கருணை காரணமாக இறைவனே தன்னைக் காட்டுவதற்கு எழுந்தருளி நிற்பதாக மூர்த்தியை அனுபவிக்கிறார்கள் ஞானிகள். கோயில், கோபுரம், தேர், திருவிழா, தீர்த்தம், அலங்காரம், அபிஷேகம், பாடல், ஆடல் எல்லாவற்றையுமே அப்படி இந்த அதிசயத்தைப் பார்க்கிறபொழுது இதை நம் செயல் என்று சொல்லமுடியுமா? இறைவனுடைய செயல் என்று தான் சொல்ல வேண்டும்.

இப்படித் திருவிளையாடல் புரியும் இறைவனை நான் மறந்து விடுகிறேனே! இது என்ன கொடுமை! என்று கலங்குகிறார் மாணிக்கவாசகர்.

''இறைவனே! உன்னுடைய கருணையைச் சொல்லிப் பாடுவதற்கும் ஆடுவதற்கும்கூட எனக்குப் புத்தி இல்லையே! நான் ஒரு மனிதனா? இரும்பில் செதுக்கிய உருவந்தான் நான்'' என்று அலறுகிறார் மாணிக்கவாசகர்.

இனிப் பாடலைப் பார்ப்போம்.

வினையிலே கிடந்தேனைப்
புகுந்துநின் று,
போதுநான் வினைக்கேடன்
என்பாய்போ ல,
இனையன்நான் என்றுன்னை
அறிவித்(து)என் னை
ஆள்க்கொண்டெம் பிரானாய்க்கு
இரும்பின்பா வை
அனையன்நான் பாடேன்;நின்(று)
ஆடேன்;அந் தோ!
அலறிடேன்; உலறிடேன்
ஆவிசோ ரேன்;
முனைவனே முறையோநான்
ஆனவா று
முடிவறியேன்; முதல்அந்தம்
ஆயினா னே! (9
(3)

மாணிக்கவாசகருக்கு உண்மை தெரிந்துவிட்டது. ''நாம் என்பது வெறும் தோற்றந்தான். உண்மையில் நாம் என்பதாக ஒன்றும் இல்லை'' என்னும் பேருண்மையே விளங்கிவிட்டது.

சிற்பி ஒருவன் இருந்தான். கருங்கல் ஒன்றைப் பார்த்தான். அழகிய பெண்ணை அக்கல்லில் செதுக்கிவிட்டான்.

சிற்பி வடித்த பெண் நடக்க ஆரம்பித்து விட்டாள். எதை எதையோ படித்தாள், வேலைக்குப் போனாள். திருமணம் நடந்தது. குழந்தைகள் பெற்றாள். பெரிய குடும்பத்துக்கு அதிபதியே ஆகிவிட்டாள்.

---

(இரும்பின்பாவை அனையன் நான் - இரும்பில் வடித்த உருவம் போன்றவன் நான். முனைவன் - தலைவன்)

சிற்ப சாஸ்திர வித்யாலயமே வைத்து நடத்த ஆரம்பித்து விட்டாள். அதில் அவள் பெரிய விரிவுரையாளர் பதவியே பெற்று விட்டாள்.

பிறகு சிற்பியைப் பற்றி நினைப்பு எங்கிருந்து வரும்? சிற்பி யாவது ஒன்றாவது என்றுகூட எண்ணத் தோன்றும்.

''சிற்பியின் ஆனந்த உணர்ச்சிதான் நான். என்னுடைய ஒவ்வொரு அணுவும் அவனுடைய செயல்தான். சிற்பியின் காரியந்தான் எல்லாம். நான் என்பது உண்மை இல்லை'' என்பது அந்த பெண்ணுக்கு விளங்காது. விளங்கினாலும் அதில் நிற்க முடியாது.

உண்மை விளங்கிவிட்டது. அதில் நிற்க முடிகிறது என்றால் ஆனந்த பரவசந்தான்.

மாணிக்கவாசகர் அப்படி ஒரு ஆனந்த பரவசத்தில் திளைக் கிறவர். சதா திளைத்த வண்ணமாகவே இருக்கிறவர்.

''எல்லாவற்றையும் இறைவனே உண்டாக்குகிறான், ஒவ்வொன்றையும் நான் நான் என்று ஆடும்படியும் செய்கிறான்'' இது என்ன நாடகம் என்று வியக்கிறார் மாணிக்கவாசகர்.

உண்மையே தெரியாமல் பொய்யில் கிடந்து உழல்கிற ஒரு பெரிய மந்தைதான் மனிதக் கூட்டம். இந்த மனிதக்கூட்டத்தில் நான் ஒரு சாதாரணம். விஷயம் தெரிந்தவர்கள்-நாலும் தெரிந்த வர்கள் என்று மதிக்கப்படுகிறவர்கள் எவ்வளவோ பேர் இருக் கிறார்கள்.

சாஸ்திரம் படித்தவர்கள், பாராயணம் பண்ணுகிறவர்கள், யோக சாதனங்களாலும் விரதங்களாலும் உடம்பைச் சுக்காய் உலர்த்துகிறவர்கள், உள்ளத்தை ஒடுக்கிக் கைப்பிடிக்குள் வைக்கிறவர்கள் இவர்கள் வீதிக்குவீதி உட்கார்ந்திருக்கிறார்கள்.

இறைவனைக் கண்டுவிட வேண்டும். பிடித்துவிட வேண்டும். 'கபக்' என்று அமுக்கிவிட வேண்டும் என்றெல்லாம் உஷாராய் இருக்கிறார்கள்.

"அவ்வளவு பேரையும் விட்டு விட்டு ஒன்றும் தெரியாத என்னிடம் வந்துவிட்டான் இறைவன் என்று துள்ளிக் குதிக்கிறார் மாணிக்கவாசகர். வந்து என் தோளைத் தட்டிக் கொடுத்தான்.

ஆலிங்கனம் பண்ணினான். நீயும் நானும் வேறு வேறல்ல, ஒன்று தான் என்று காட்டி விட்டான். நான் யார் என்பதையே எனக்குக்காட்டிவிட்டான். என்னைப்பற்றிய முழுவிபரத்தையும் எனக்கு விளக்கமாகச் சொல்லிவிட்டான்.

வலியத் தேடி வந்து என்னை உபசரிக்கிறானே எம்பெருமான். அவன் கருணையை நான் வார்த்தைகளால் எப்படி வருணிக்க முடியும்? என்று மயங்குகிறார் மாணிக்கவாசகர். எக்களிப்போடு மயங்குகிறார்.

மாணிக்கவாசகருடைய மயக்கமும் எக்களிப்பும் எப்படிப் பாடலாய் உருவெடுக்கிறது என்று பார்க்கலாம்.

கேட்டாரும் அறியாதான்;
கேடொன்(று)இல் லான்,
கிளைஇலான்; கேளாதே
எல்லாம்கேட் டான்;
நாட்டார்கள் விழித்திருப்ப,
ஞாலத்துள் ளே.
நாயினுக்குத் தவிசிட்டு,
நாயினேற் கே
காட்டா தனஎல்லாம்
காட்டிப், பின் னும்
கேளா தனஎல்லாம்
கேட்பித்தென் னை
மீட்டேயும் பிறவாமல்க்
காத்தாள்க் கொண்டான்;
எம்பெருமான் செய்திட்ட
விச்சைதா னே. (10)

---

(கேட்டு யாரும் அறியாதான் - அவனைப் பற்றி ஒருவரும் கேள்விப் பட்டது இல்லை. கேள்விப்பட்டதெல்லாம் அவனைப் பற்றிய வன்னியாசங்களைத்தான். அப்படி அப்பாலைக்கு அப்பால் உள்ளவன் அவன். கேடு ஒன்று இல்லான் - யாதொரு குறையும் இல்லாத பூரணன் அவன். கிளைஇலான் - சொந்தம் என்று அவனுக்கு இல்லை. அப்படி ஒரு ஏகநாயகம். கேளாதே எல்லாம் கேட்டான் - என்னிடம் ஒன்றும் அவன் விசாரிக்கவில்லை. ஆனால் என்னைப் பற்றி முழுவதும் அவன் தெரிந்து வைத்திருந்தான்.

தரித்திரன் ஒருவன். பசியை ஆற்றிக் கொள்வதே அன்றாடப் பிரச்சனை அவனுக்கு. இந்த நிலையில் அவன் வேறு என்ன செய்யமுடியும். ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்தான் அவன்.

எப்படியோ ஒரு காரியத்தில் நுழைந்தான். செல்வம் வந்து குவிந்துவிட்டது. பெரிய முதலாளி ஆகிவிட்டான். எத்தனையோ காரியங்கள் அவன்மூலம் நடக்கின்றன.

அரண்மனைபோல பெரிய பெரிய கட்டிடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறான். மாடுகளை மந்தை மந்தையாக வாங்கி விடுகிறான். பால் பண்ணையே நடத்துகிறான். விவசாயம் பண்ணுகிறான். பொன்னாய்ச் சொரிகிறது பூமி. வியாபாரம் நடத்துகிறான். கரியைத் தொட்டாலும் மஞ்சளாகிறது. தொழில் பல செய்கிறான்.

பள்ளிக்கூடம் நடத்துகிறான். ஆஸ்பத்திரி கட்டுகிறான், அன்னதானம் சொர்ணதானம் எல்லாம் செய்கிறான்.

பணம் இருந்தால் காரியங்கள் மளமள என்று நடக்கும். பணத்தைப் பெற்றவன் காரியங்களை நடத்துவதோடு பணத்தை மதிக்கவேண்டும்.

''கையும் விளங்காமல் காலும் விளங்காமல் முடங்கிக் கிடந்தேன் நான். இந்தப் பணம் வந்து என்னை நிமிர்ந்து நிற்க வைத்து விட்டது. துறுதுறுவென்று என்னை ஓடி ஆடி விளையாட வைத்திருக்கிறது இந்தச் செல்வம்'' என்று பணத்தை மதிக்க வேண்டும். பணத்தை முன்னும் பின்னும் நன்றாகப் பார்க்க வேண்டும். அதன் அருமையைப் பார்க்க வேண்டும். அதன்

---

நாயினுக்கு தவிசு இட்டு - எளியவனாகிய என்னை உடனிருத்தி உட்காரவைத்து. மீட்டேயும் பிறவாமல் காத்து ஆள்கொண்டான்- பொய்யிலும் பித்தலாட்டத்திலும் மறுபடி நான் விழுந்துவிடாமல் என்னைத் தன்னவன் ஆக்கிக் கொண்டான். எம்பெருமான் செய்திட்ட விச்சை - அடடா! அவன் என்மேல் வைத்த கருணையை என்னென்று சொல்வேன்)

குறிப்பு - எல்லோரையும் விட்டுவிட்டு என்னை அவன் தேடி வந்தது அதிசயமாக இருக்கிறது. என்னையே நான் நம்பமுடியாத அதிசயமாக இருக்கிறது'' என்னும் வியப்பு பாடலில் பளிச்சிடு கிறது.

அதிகாரத்தைப் பார்க்கவேண்டும். அதன் செயல் திறன் ஒவ்வொன்றையும் பார்க்கவேண்டும். பார்க்கப் பார்க்க அதனிடம் மரியாதை உண்டாகும்.

பணத்தை மதிக்கிறவன் - பணத்தின் அருமை தெரிந்தவன் என்ன செய்வான், அந்தப் பணம் இல்லாமல் செயலற்றிருப்பவனுக்கு உதவுவான். உதவி அவனைச் செயல்பட வைப்பான்.

அன்பும் பண்பும் நிறைந்த பெண். அழகான பெண். கல்யாணப் பருவம் வந்து நாளும் பொழுதும் போய்க் கொண்டிருக்கிறது. பணம் இல்லாத காரணத்தால் அவளுக்குத் திருமணம் நடக்கவில்லை.

மேலே சொல்லிய விபரம் தெரிந்தவுடன் பணத்தை மதிக்கிறவன் என்ன செய்வான்? அந்தப் பெண்ணின் பெற்றோர்க்குப் பணம் கொடுத்து உதவுவான். திருமணம் நடக்கும். மங்களம் பெருகும் காரியத்தில்.

"பணம் இல்லாமல் என்ன காரியம் எங்கு தவிக்கிறது" என்று பார்ப்பான். அங்கு உதவுவான்.

இது பணத்தை மதிக்கிறவன் செயல். பணத்தை மதிக்கத் தெரியாதவன் பணத்தைக் கண்டு பயப்படுவான். இருளடைந்து போய் இருப்பான். உதவமாட்டான்.

பணத்தை மதிக்கிறவனிடம் ஊதாரித்தனம் இருக்காது. திருட்டுத் தனமும் இருக்காது. பணத்தின் அருமையைப் பார்த்து அதை மதிக்கத் தெரியாதவனிடம் படாடோபம் இருக்கும். கருமித் தனமும் இருக்கும்.

பணத்தின் அருமை தெரிந்து மதிக்கிறவன் போலவே உண்மையான பக்தனும் நடந்து கொள்வான்.

எல்லோரும் பக்தியில் திளைக்க உதவுவான். எளிமையாக வாழ்வான்.

மாணிக்கவாசகர் உண்மையான பக்தர்.

தன்னைப்பார்த்து உதவுவதற்காகவே இறைவன் ஒரு உருவம் எடுத்து வந்திருக்கிறான் என்று நம்புகிறார் மாணிக்கவாசகர்.

தன்னைக் கண்டு பிடிப்பதற்காக இந்த உலகில் நாலாபக்கமும் இறைவன் தேடி அலைந்தான் என்கிறார். தனக்கு எப்பொழுதும்

துணையாக இருப்பதற்காகவே ஒவ்வொரு ஊரிலும் மூர்த்தியாய் எழுந்தருளி இருக்கிறான் என்கிறார். கோவில்கட்டி வீற்றிருக் கிறான் என்கிறார்.

இறைவனுடைய அருளை உணர்ந்து அனுபவிக்கிறவர்கள் அப்படித்தான் சொல்வார்கள்.

என் உள்ளம் மட்டும் அல்ல, உச்சி முதல் உள்ளங்கால் வரை என் உடம்பு முழுவதும் புளகாங்கிதம் பெற என்னுள் கலந்து மருவி விட்டாயே பெருமானே என்கிறார் மாணிக்கவாசகர்.

என்னை ஆதரிப்பதற்கென்றே என்னைத்தேடி விசாரித்து நடந்து வந்திருக்கிறாயே! என்று கரைகிறார் மாணிக்கவாசகர்.

ஐம்புலன்கள் ஆர
வந்தெனைஆள்க் கொண்டுள்ளே
புகுந்தஇச் சை
மாலமுதப் பெருங்கடலே
மலையேஉன் னைத்
தந்தனை''

என்று கூவி அழைக்கிறார் மாணிக்கவாசகர். வலியவந்து ஆள்க் கொண்ட பெருமானை உண்மையோடு மதிக்கிறார். தன்னுடைய ஆனந்தம் மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று அள்ளி அள்ளி வழங்குகிறார்.

ஒன்றும் இல்லாத என்னுடைய மனம் வாக்கு காயம் என்னும் போலிச் சரக்கை, நீ எடுத்துக் கொண்டாய். உன் அருளை, உன் திருமேனியோடு, உன்னையே எனக்குக் கொடுத்து விட்டாய் என்கிறார் மாணிக்கவாசகர்.

இனிப்பாடலைப் பார்க்கலாம்.

சிந்தனைநின் தனக்காக்கி,
நாயினேன் தன்
கண்ணிணைகள் திருப்பாதப்
போதுக்காக் கி,
வந்தனையும் அம்மலர்க்கே
ஆக்கி,வாக்(கு) உன்
மணிவார்த்தைக்(கு) ஆக்கி, ஐம்
புலன்கள்ஆ ர,

வந்தெனைஆள்க் கொண்டுள்ளே
புகுந்தஇச் சை!
மாலமுதப் பெருங்கடலே!
மலையே! உன் னைத்
தந்தனை;செந் தாமரைக்கா(டு)
அனையமே னித்
தனிச்சுடரே! இரண்டும்இல்இத்
தமியனேற் கே! (11)

சமுத்திரத்தைப் பார்க்கிறோம். ஒரே தண்ணீர்மயமாக இருக்கிறது. வானத்தையும் பூமியையும் தொட்டுக் கொண்டிருப்பது போல் இருக்கிறது. உலகில் உள்ள நாடுக்ளை-உலகம் முழுவதையும் சுற்றிச் சுற்றிக் கிடக்கிறது சமுத்திரம். விடாமல் கட்டிப் பிடித்து பின்னிக்கொண்டு உலகை வளைத்தவண்ணம் இருக்கிறது சமுத்திரம்.

நெடுந்தூரம் பூமியைப் பிளந்து-அது ஒரு நாடு, இது ஒரு நாடு என்று பிரித்து வைக்கிற கடல்கள்-விரிகுடாக்கள் எல்லாம் சமுத்திரந்தான். நாட்டுக்கு உள்ளே ஊடுருவிப் போகிற நெடுங் கழிகளும் சமுத்திரந்தான். அதாவது தண்ணீர்தான்.

சமுத்திரந்தான் ஆவியாக மேலே போகிறது. மேகமாகத் திரளுகிறது. மழையாகப் பொழிகிறது. அருவியாகக் குதிக்கிறதும் ஆறுகளாய் ஓடுகிறதும், குளம் குட்டைகளில் தேங்கி நிற்கிறதும், எல்லாம் சமுத்திரந்தான். அதாவது தண்ணீர்தான்.

அந்த நீர் தான் புல்பூண்டுகளில் வேர் முதல் தளிர்வரை உள்ளே போய் நிறைகிறது. நமது உடம்பிலும் அந்த நீர் வந்து நிறைந்து நிற்கிறது. ரத்தமாக ஓடுகிறது, தண்ணீராகக் கொட்டுகிறது. வேர்வையாகப் பொழிகிறது. எல்லாம் சமுத்திரந்தான். அதாவது நீர்தான்.

மலர்களில் இருக்கிற தேனும், கனிகளில் இருக்கிற சாறும், வித்துகளுக்குள் இருக்கிற நெய்யும், பசுவில் சுரக்கிற பாலும், நாவில் ஊறுகிற நீரும் எல்லாம் தண்ணீர்தான். சமுத்திரந்தான்.

அதே சமுத்திர நீரை வாளியிலும் பிடித்து வைக்கலாம். பானையிலும் விட்டு வைக்கலாம். தொட்டியிலும் நிறைத்து வைக்கலாம்.

சமுத்திரமானது அப்படி பூமி, வானம், புல்பூண்டுகள், பிராணிகள் எல்லாவற்றிலும் நிறைந்து நிற்கிறது.

அப்படியானால் ஒரு மரத்தை சமுத்திரம் என்று சொல்லலாம். சமுத்திரம் இல்லை, மரந்தான் என்றும் சொல்லலாம். நீர் மயமாகவும் பொருள்கள் இருக்கின்றன. நீர் மயமாக இருந்தாலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக - தனித்தனிப் போக்கிலும் இருக்கின்றன.

இத்தனை பொருள்களில் நிறைந்து நின்றும் சமுத்திரம் தனியாக இருக்கிறது. அந்தச் சமுத்திரமாகிய நீருக்கு உருவம் இல்லை, நிறமும் இல்லை.

கடவுள்த் தத்துவமும் அப்படித்தான். கடவுள் அண்டமாய் இருக்கிறார். சூரியனாய் இருக்கிறார். சந்திரனாய் இருக்கிறார். புல்பூண்டாய் இருக்கிறார். பிராணிகளாய் இருக்கிறார். நீராய் இருக்கிறார். நெருப்பாய் இருக்கிறார். ஆணாகவும் இருக்கிறார். பெண்ணாகவும் இருக்கிறார். எல்லாவற்றிலும் கடவுள்தான் இருக்கிறார்.

ஒரு மலையைக் கடவுள் என்றும் சொல்லலாம். இல்லை இல்லை, இது மலைதான். கடவுளாவது ஒன்றாவது என்றும் சொல்லலாம்.

அண்டபிண்ட சராசரம் அவ்வளவாகவும் விளைந்து கொண்டிருக்கிற பரம்பொருள் தனியாகவும் இருக்கிறார்.

அப்படித் தனியாக இருக்கிற பரம்பொருள் ஆணாகவும் இல்லை. பெண்ணாகவும் இல்லை. கல்லாகவும் இல்லை. மண்ணாகவும் இல்லை. ஒரே கருணைமயமாய், ஞானமயமாய், சக்தி மயமாய் இருக்கிறது. அதாவது, கடவுள் எல்லாமாய் இருக்கிறார். தனியாக இல்லை. ஆனாலும் பக்தர்களுக்காக தனியே வந்து-மூர்த்தியாக எழுந்தருளி அருள் பாலிக்கிறார்.

இறைவனுடைய இந்த ஒப்பற்ற கருணையை பக்தர்கள் பரவசத்தோடு அனுபவிக்கிறார்கள்.

நமக்காக எழுந்தருளி அமர்ந்திருக்கிறான் இறைவன் என்றே ஈடுபடுகிறார்கள்.

இது சம்பந்தமாக பட்டினத்தார் சொல்கிறதை முதலில் பார்ப்போம்.

ஆசையோ பக்தியோ ஒன்றும் இல்லாத என்னிடம் உண்மையைக் கொண்டு வந்து கொட்டினார். ஆசையும் பக்தியும் என்னிடம் ஊறிப் பெருகச் செய்துவிட்டார். (பூட்டி வைத்தார்)

ஆசைபெருகப் பெருக என்னையே அவருக்குத் தத்தம் பண்ணத் தோன்றுகிறது. நான் வழிபடுவதற்காக ஒரு உருவத்தில் என்முன் வந்து எழுந்தருளி இருக்கிறார். (காட்டி வைத்தார்)

அவரை அனுபவிக்கிற என் ஆனந்தத்தை அபிஷேகமாய்க் கொட்டுவதற்காக என்னைப் பாட வைத்துவிட்டார். (பாட்டி வைத்தார்)

இறைவனுடைய கருணையை என்னென்று சொல்வேன்.

இதோ பட்டிணத்தார் பாடல்.

காட்டிவைத் தார்தமை;
யாம்கடிப் பூப்பெய்யக்
காதல்வெள்ளம்
ஈட்டிவைத் தார்;கச்சி
ஏகம்பர் ஏதும்
இலாதஎம் மை,
பூட்டிவைத் தார்;தமக்(கு)
ஆம்அன்பன் என்று
பதிற்றுப்பத் தும்
பாட்டிவைத் தார்;பர
வித்தொழு வாம் அவர்
பாதங்க ளே.

(கடிபூபெய்ய - வாசனையோடு கூடிய மலர்களைச் சொரிய. ஈட்டி வைத்தார் - ஊறிப்பெருகச் செய்தார். பதிற்றுப்பத்தும் - நூறு பாடல்களை - ஏன் நூற்றுக்கணக்கில் பாடல்களை, பரவிதொழு வாம் - வாழ்த்தி வணங்குவோம். பாதம் - திருவருள். அதாவது இறைவனுடைய செயல்.

பட்டிணத்தார் பாடலைப் பாடப்பாட நாம் யார் என்னும் உண்மை விளக்கும். அந்த உண்மை ஒளியை வைத்துக்கொண்டு மாணிக்கவாசகர் பாடலைப் பார்க்கவேண்டும்.

ஒரே சக்திமயந்தான் கடவுள். சக்தி என்றால் உஷ்ணந்தான், காந்தந்தான், மின்சாரந்தான். அப்படியானால் அக்கினி சொருபி யாக - செம்மேனியனாக இருக்கிறான் இறைவன் என்று மனது

உருவகம் பண்ணுகிறது. உஷ்ணமயமான அந்த சக்தியிலிருந்தே அண்டபிண்ட சராசரங்கள் தோன்றின. இருள்மயமான தண்ணீரி லிருந்து வெள்ளை வெளேர் என்று தாமரைப் புஷ்பங்கள் வருவது போல் ஜட தத்துவங்கள் வந்தன. அண்டபிண்ட சராசரங்களாய் கோடான கோடி பேதங்களில் இருக்கிறான் இறைவன். பேதங் களில் இல்லாமல் தனித்த முறையிலும் இருக்கிறான் இறைவன்.

ஞானிகள் (விண்ணோர்கூட்டம்) இப்படி எல்லாம் அனுபவித்து ஏதேதோ சொல்கிறார்கள். ஆனால் வாக்கு, மனம் எல்லாவற்றை யும் தாண்டி பிடிபடாத நிலையில் இருக்கிறான்.

அப்படி நிற்கும் பெருமானே; என்மேல் கருணைவைத்து என் முன்னர்ல் வந்து எழுந்தருளி இருக்கிறார். ஆஜானபாகுவாய் அலங்காரத்தோடு எடுப்பாய் எழுந்தருளி அமர்ந்திருக்கிறார். என்னைப் பாதுகாத்து அருள்பாலித்த வண்ணமாய் என்கூடவே இருக்கிறார் எம்பெருமான்.

இனிப்பாடலைப் பார்க்கலாம்.

வண்ணந்தான் சேயதன்று;
வெளிதேஅன் றால்;
அனேகன்ஏகன்; அணுவணுவில்
இறந்தாய்என் றாங்(கு);
எண்ணம்தான் தடுமாறி
இமையோர்கூட் டம்
எய்தும்ஆ(று) அறியாத
எந்தாய்!உந் தன்
வண்ணந்தான் அதுகாட்டி,
வடிவுகாட் டி
மலர்க்கழல்கள் அவைகாட்டி,
வழிஅற்றே னை,
திண்ணம்தான் பிறவாமல்
காத்தாட்கொண் டாய்;
எம்பெருமான் என்சொல்லிச்
சிந்திக்கே னே! (12)

---

(சேயது -சிவப்பு. வெளிது-வெள்ளை. அனேகன்- எல்லாம் அவன். ஏகன் - அவன் தனியன். அணுவணுவில் இறந்தாய் - அணுவுக்குள் அணுவாக, பரமாணுவுக்குள் பரமாணு வாய் ஒரே சக்திமயமாக நிறைந்து நிற்கிறான்.

# வெறும் தீவட்டித் தடியன் நான்

உண்மை என்றால் அது எப்பொழுதும் ஞாபகத்தில் இருக்கும். மறப்பதற்கு ஞாயம் இல்லை. பொய் என்றால் அது மறந்து போகும். உடனுக்குடன் மறந்து போகும். பொய்யானது மறக்காமல் நிற்பதற்கு ஞாயம் இல்லை.

கடவுள்த் தத்துவம் ஒரு உண்மை. அது ஒன்றுதான் உண்மை. அது எப்படி மனசைவிட்டு அகலும்? எத்தனையோ பிரவர்த்திகளில் மனம் போய்க்கொண்டிருந்தாலும், கடவுள்த் தத்துவமானது அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கும். தன்னை இனம்காட்டிக் கொண்டே இருக்கும்.

படிப்பு, பரீட்சை, உத்தியோகம், விவசாயம், வியாபாரம், கல்யாணம், கிரஹப் பிரவேசம், பிரயாணம், மருத்துவம், என்று காரியங்கள் அடுக்கடுக்காய் வந்து கொண்டிருந்தாலும், கடவுள்த் தத்துவம் பற்றிய நினைப்பு மறந்து விடாது. பிரச்சனைகளை அதட்டி உட்கார வைத்துவிட்டு எழுந்து நிமிர்ந்து முன்வந்து நிற்கும் கடவுள் சம்பந்தமான நினைப்பு.

ஒன்றை எப்பொழுதும் பார்த்துக் கொண்டே இருந்தால் அதில் வேகம் இருக்காது விட்டுவிட்டு, இடை இடையே ஒன்றைப் பார்க்கும் பொழுது அதில் வேகம் உண்டாகும்.

குழந்தைகள் சிறிதுநேரம் விளையாடப் போய்விட்டு வந்தால், பெற்றோர்களுக்கு குழந்தைகள் பற்றிய நினைப்பு ஆவேசமாக இருக்கும். எப்பொழுதும் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தால் ஆவேசம் இருக்காது. இடை இடையே மனைவியானவள் தாய் வீட்டுக்குப் போய் வருவாள்.

அப்போதெல்லாம் கணவனுக்கு மனைவியின்மேல் ஆசை யானது பொங்கிப் பூரிக்கும். கூடவே இருந்தால் என்னவோ சப் பென்றுதான் இருக்கும்.

பக்தியும் அப்படித்தான். காரியங்கள், விவகாரங்கள், ஓட்ட சாட்டங்கள் இப்படி வாழ்க்கை போய்க் கொண்டிருக்க வேண்டியது. இடைஇடையே கடவுளைப் பற்றிய ஞாபகம் வர வேண்டியது.

மறக்காமல் இருப்பதால் அது அடிக்கடி வந்து கொண்டிருக் கும். அப்படி இடை இடையே கடவுளைப் பற்றிய நினைப்பு வந்தவுடன் பக்திக்கு ஆவேசம் உண்டாகும். உள்ளம் உருகும். நான் என்னும் ஆணவம் கரையும். அதனால் உடம்பெல்லாம் புளகாங்கிதம் அடையும். ஆனந்தம் பாட்டாக வரும். அதற்குத் தக்கப்படி ஆட்டமும் வரும்.

இறைவனுடைய அருள் - எங்கும் நிறைந்த செயல் கண்முன் வந்து நிற்கும். ஆனாலும் ஆசை மிகுதியால் அவனைத் தேடி அங்கும் இங்கும் ஓடத் தோன்றும். அப்படி ஒரு பரபரப்பு, வேகம், பக்தியில் இருக்கிறது.

மாணிக்கவாசகர் உண்மையைக் கண்டவர். கடவுள்த் தத்து வத்தோடு ஊன்றித் திளைக்கிறவர். ஆனாலும் ஏதேதோ காரியங் கள். அவற்றில் ஈடுபடுகிறார். அப்படிச் செயலில் ஈடுபட்டு ஆற்று கிறபொழுதே இறைவனுடைய காரியம் - திருவருள் கண்முன் வந்து நிற்கிறது.

பரவச நிலைக்கு ஆளாகிவிடுகிறார் மாணிக்கவாசகர். பரவச நிலை உச்சத்திற்குப் போய்விடுவதால் தன்னுடைய ஈடுபாடு சாதாரணம் என்று நினைக்கிறார். தன்னுடைய ஆசையில் உயிர் இல்லை. உணர்ச்சி இல்லை என்று தவிக்கிறார். தவிப்பை மனதைப் பார்த்தே சொல்கிறார்.

எப்படி என்று பார்ப்போம்.

“என்னோடு ஒத்துழைக்க மாட்டேன் என்கிறாயே மனமே! உணர்ச்சியே இல்லாத மரமட்டை நீ! குழைத்து வைத்த களி மண்ணாய் இருக்கிறாய் நீ” என்று மனதிடம் சொல்வதாக விஷயம்.

(தானன தன்னன
தானன தானன
தானன தானன
தன்)

ஆடு கின்றிலை;
கூத்துடை யான்கழற்(கு)
அன்பிலை; என்புரு
கிப்
பாடு கின்றிலை;
பதைப்பதும் செய்கிலை;
பணிகிலை; பாதம
லர்
சூடு கின்றிலை;
சூட்டுகின் றதும்இலை;
துணைஇலை; மடநெஞ்
சே!
தேடு கின்றிலை;
தெருவுதோ(று) அலைகிலை;
செய்வ(து)ஒன் றறியே
னே! (13)

---

(கூத்து உடையான் கழற்கு அன்பு இலை- ஆனந்த நடனம் ஆடிக் கொண்டிருக்கும் இறைவனிடம் உனக்கு ஆசை இல்லை. என்பு- உடம்பு. தேடுகின்றிலை-அங்கே இருக்கிறானா, இங்கே இருக் கிறானா என்று நீ தேடவில்லை. தெருவுதோறும் அலைகிலை- எங்கே எங்கே என்று மூலை முடுக்கெல்லாம் போய் தேடவில்லை.

துணை இலை-என்னுடன் நீ ஒத்துழைப்பதில்லை. மட நெஞ்சே-அறிவு கெட்ட மனமே! செய்வது ஒன்று அறியேன்- உன் தொல்லையை விட்டுத் தொலைய வழி இல்லாமல் இருக்கி றேன்)

குறிப்பு :- மேயப் போன மாடு மாலையில் வீடு வந்து சேரா விட்டால், மாட்டுக்கு உரியவர்கள், நாலா பக்கமும் தேடிப் போவார்கள். பரபரப்போடு அங்கும் இங்கும் போய்த் தேடு வார்கள்.

விளையாடப் போன பையன் வீட்டுக்கு வரவில்லை என்றால் பெற்றோர்கள் பதறி அடித்துத் தேடுவார்கள். அவர்களுக்குச்

சாப்பாடு இறங்காது தூக்கம் வராது. வேறு எதுவும் ஞாபகத்துக்கு வராது. பையன் மேலேயே ஞாபகம் நிற்கும்.

மாடு திரும்பினவுடன் ஆனந்தம் அடைவார்கள். பையன் வீடு வந்து சேர்ந்தவுடன் பெற்றோர்களுக்கு உண்டாகிற சந்தோஷத்துக்கு அளவே இல்லை.

இறைவனை அப்படி நாடித் தேட வேண்டும். அவன் அருளைப் பார்த்துப் பார்த்து ஆனந்தத்தில் ஊறவேண்டும்.

இந்த ஆதங்கத்தைப் பாடலின் கடைசி வரியில் வைத்து உயரே தூக்கி நிறுத்துகிறது தமிழ். "தேடுகின்றிலை தெருவு தோறலை கிலை" என்று தூக்கி நிறுத்துகிறது தமிழ்;

ராமன் காட்டுக்கு வந்தான். முனிவர்கள் ராமனைப் பார்த்தார்கள். தியாக மூர்த்தியாகிய ராமனைக் கடவுளின் அம்சமாகவே பார்த்து அனுபவித்தார்கள்.

காணாமல்ப் போன குழந்தையைக் கண்ட பெற்றோர் போல ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தார்கள் முனிவர்கள். ராமனை பர்ணகசாலைக்குள் அழைத்துப் போனார்கள்.

"மனையின் நீங்கிய
மக்களை வைகலும்
நினையும் நெஞ்சினர்
கண்டிலர் நேடுவார்;
அனையர் வந்துற
ஆண்டெதிர்ந் தார்களின்
இனிய மாதவப்
பள்ளிகொண்(டு) ஏகினார்"

குழந்தையைப் பெற்றோர்கள் தேடுவது போலத் தேட வேண்டும். கண்டு மகிழ்வது போல மகிழவேண்டும்.

பக்தியின் இந்த அரிய உண்மை பாடலில் தெளிவாய்க் கிடக்கிறது.

ஆடுகின்றிலை, பாடுகின்றிலை, சூடுகின்றிலை, தேடுகின்றிலை, என்று சொல்லிக் கொண்டே இருக்கலாம், சொல்லச் சொல்ல நாவில் தேனூறும்.

# என்னத்தைப் பார்த்தேன் நான்

நமக்கு வேண்டியவர் - நமது உறவினர் நம் விருந்தினராக வருகிறார். குடும்பத்தோடு வருகிறார். அவர் வருகிற ரயில் காலை பத்து மணிக்கு நிலையம் வந்து சேர வேண்டும். ஒன்பதரை மணிக்கே ரயில் நிலையம் வந்து விடுகிறோம். ஒவ்வொரு நிமிஷமும் சண்டித்தனம் பண்ணுவது போல இருக்கும். ஒரு நிமிஷம் கழிவது ஒரு மணி கழிவது போல இருக்கும். நேரம் ஆக ஆக ஒவ்வொரு நாள்கழிவது போல இருக்கும்.

மணி பத்து ஆகிறது. ரயில் வரவில்லை. விசாரித்தால் வண்டி வர இன்னும் அரைமணி நேரம் ஆகும் என்று சொல்கிறார்கள். தாமதம் என்கிறார்கள். காரணம் தெரியாது என்கிறார்கள்.

அதன் பிறகு ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு வருஷம் போலத் தெரியும். ஒரு யுகத்தைக் கழிப்பது எப்படியோ அப்படி முடிவே இல்லாமல் தோன்றும் ஒவ்வொரு நிமிஷமும்.

ஒவ்வொரு விநாடியும் முள்கொண்டு குத்துவது போல் நம்மைக்குத்தும். வெந்த புண்ணில் வேலைச் சொருகுவது என்பார்களே அப்படி இருக்கும், காத்துக் கிடக்கும் ஒவ்வொரு நிமிஷமும்

நமக்குக் கோபம் கோபமாக வரும். கடிகாரத்தைப் பார்த்தாலும் எரிச்சல். ரயில் நிலையத்தைப் பார்த்தாலும் எரிச்சல். போகிறவர்கள் வருகிறவர்கள் யாரைப் பார்த்தாலும் எரிச்சல். தெரிந்தவர்கள் யாராவது நம்மைப் பார்த்தாலும் எரிச்சல். அவர்கள் ஏதாவது கேட்டு விசாரித்து விட்டால் போதும், அவர்கள் தலையைப்பியித்து எறிந்து விடத் தோன்றுகிறது. அப்படி முட்டி அலைமோதுகிறது ஆங்காரம்.

பத்தரை மணிக்கு ரயில் வந்தது. விருந்தினர்கள் வந்தார்கள். அவர்களை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போகிறோம். உபசரிக்கிறோம். சிரிப்பும் கும்மாளியும் வியப்புமாய் ஓடிக்கொண்டிருக்கிறது பேச்சு நேரம் போவதே தெரியவில்லை. ஒவ்வொரு மணிநேரமும் ஒவ்வொரு நிமிஷம் ஓடுவது போல் ஓட விடுகிறது. பகலும் பேசுகிறோம், இரவும் பேசுகிறோம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணி நேரம் போல் போய்விடுகிறது.

விருந்தினர்கள் வந்து ஒருமாதம் ஆகிறது. ஒருவார காலம் ஆனது போலத்தான் இருக்கிறது. பத்து வருடங்களுக்கு முன்பு இதே விருந்தினர்களைச் சந்தித்து இதே போல் பலநாட்கள் சேர்ந்திருந்தோம். அதை நினைத்துப் பார்த்தால் ஏதோ பத்து நாட்களுக்கு முன்பு தான் உபசரித்து சேர்ந்திருந்து மகிழ்ந்தது போலத் தெரிகிறது.

உல்லாசத்தோடும் சந்தோஷத்தோடும் உருண்டு ஓடிக் கொண்டிருக்கிறது, காலம். அது நம் கழுத்தை நெறிப்பதில்லை. ஒரே அழுக்காக அமுக்கி நம் மேல் ஏறி உட்காருவதில்லை.

காலத்தைப் பற்றிய நினைப்பே இல்லாவிட்டால் இன்பமாய் இருக்கிறது. காலத்தைப் பற்றிய நினைப்பு வந்து விட்டால் துன்பமாய் இருக்கிறது.

நொடி, நிமிஷம், மணி, பகல், இரவு, நாள், வாரம், மாதம், பருவம், வருடம் என்றெல்லாம் சொல்கிறோம். இவை எல்லாம் உண்மையில் இருக்கின்றனவா? இல்லை வெறும் தோற்றம் தானா? இது சம்பந்தமாகப் பார்க்கலாம்.

பிரபஞ்ச வெளிக்கு எல்லை என்பது இல்லை. அது எங்கு ஆரம்பிக்கிறது? எங்கு முடிகிறது? என்று இல்லை. எல்லையற்ற பேரண்டவெளியில் அண்டங்கள் உருண்டு ஓடிக் கொண்டிருக்கின்றன. அண்டங்களிலோ நட்சத்திரங்கள் உருண்டோடிய வண்ணம் இருக்கின்றன. போகப் போகப் போய்க் கொண்டே இருக்கிறது பிரபஞ்சவெளி.

எண்ணற்ற நட்சத்திரங்களில் சூரியனும் ஒன்று. சூரியனில் ஒரு நெருக்கடி உண்டாகியது. அதனால் சூரியன் முக்கித் திணறியது. குமுறி வெடித்தது. வெடிப்பில் பத்துப் பன்னிரண்டு துண்டுகள் சிதறின. ஒவ்வொரு துண்டும் சூரியனை விட்டு ஒவ்வொரு கோணத்தில் வேகமாக ஓடின. அப்படிச் சிதறி ஓடிய துண்டுகளில் நாம் வாழும் பூமியும் ஒன்று.

ஒவ்வொரு துண்டும் பலகோடி மைல்கள் ஓடின. ஒரு துண்டு ஐம்பது கோடி மைல், ஒரு துண்டு இருபது கோடி மைல், ஒரு துண்டு ஐந்து கோடி மைல் என்று இப்படி வேறு வேறு தூரத்தில் ஓடின. ஒவ்வொன்றையும் எவ்வளவு எவ்வளவு தூரம் ஓடவிட வேண்டுமோ அவ்வளவு தூரம் ஓடவிட்டது. சூரியன்-அதற்கு மேல் ஓடவிட வில்லை. அங்கங்கு தடைப்பட்டு நின்றன துண்டுகள். வியாழன், வெள்ளி, சனி, செவ்வாய், புதன் முதலிய துண்டுகளால் பின்னும் போகமுடியவில்லை முன்னும் போக முடியவில்லை. நின்ற இடத்திலிருந்தே சூரியனை வட்டமிட்டுச் சுற்றிவரத் தொடங்கின.

அன்று முதல் இன்று வரை அதனதன் பாதையில், வேகத்தில் பிசகில்லாமல் ஒழுங்காகச் சுற்றி வருகின்றன.

பூமியும் சூரியனைச் சுற்றி வருகிறது. கிட்டத்தட்ட ஒன்பது கோடி மைல் தூரம் சூரியனை விட்டு ஒதுங்கி நின்று சுற்றி வருகிறது பூமி. ஐம்பத்தாறு கோடி மைல் நீள்வட்டப் பாதையில் சுற்றி வருகிறது பூமி.

தன்னைத்தானே சுற்றிய வண்ணம் சூரியனைச் சுற்றி வருகிறது பூமி. தன்னைதானே பூமி சுற்றுவதால் பூமியின் முன் பாகம் வெளிச்சம் பட்டும், பின்பாகம் வெளிச்சம் படாமலும் சுற்று கிறது.

வெளிச்சம் பகல் என்றும், வெளிச்சம் விழாத பகுதி இரவு என்றும் ஆகிறது.

இரவும் பகலும் தொடர்ந்து, மாறிமாறி வருவதால் ஒரு இரவையும் ஒரு பகலையும் சேர்த்து நாள் என்று சொல்ல நேர்கிறது.

நாளின் கதை இப்படி; இனி, சூரியனைச் சுற்றி வருகிற பொழுது சூரிய ஒளியும் வெப்பமும் பூமியின் மேல் கூடியும் குறைந்தும் விழுகிறது. அதன் மூலம் பருவ வேறுபாடுகள் உண்டா கின்றன. வெயில், மழை, பனி, வாடை என்று பருவங்கள் உண்டா கின்றன.

அறுபது நாட்கள் இளவெயிலாக இருக்கின்றது. அடுத்த அறுபது நாட்கள் கடுங்கோடையாக இருக்கின்றது. அப்படியே மழை, வாடை, முன்பனி, பின்பனி, ஒவ்வொரு பருவமும் அறுபது

நாட்கள் இருப்பதைப் பார்த்தார்கள். பருவங்கள் ஆறு என்று குறித்துக் கொண்டார்கள். அனுபவத்தில் வந்த குறிப்பு இது.

இந்த ஆறு பருவங்களும் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்றன. சொல்லி வைத்தது போல ஒழுங்காக வந்து கொண்டே இருக்கின்றன. அதனால் ஆறு பருவங்களும் சேர்ந்ததை ஒரு வருடம் என்று வைத்துக் கொண்டார்கள்.

பூரணசந்திரனை அனுபவித்தார்கள். முழுநிலவு ஒரு தடவை வந்து மறுதடவை வருவது வரை உள்ள நாட்களைக் கூட்டி ஒரு மாதம் என்று எடுத்துக் கொண்டார்கள்.

நாள், மாதம், பருவம், வருடம், எல்லாம் அனுபவத்திலும் கணக்கிலும் உள்ள அம்சங்கள் தாம். உண்மையில் அவை இல்லை.

இனி, மனிதர்கள் சும்மா இருப்பதில்லை. செயல்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். பலன் விளைந்து கொண்டே இருக்கிறது. அதனால் உணர்ச்சி வசப்பட்ட வண்ணமாக இருக்கிறார்கள். இயற்கையில் எல்லா வஸ்துக்களும் எல்லாத் தத்துவங்களும் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. பலன் விளைகின்றன. அதாவது, வெளிப்படுகின்றன. மறைகின்றன.

அறிவு வேலை செய்கிறது. கணக்குப் போடுகிறது. உணர்ச்சியை வந்து அறிவும் கணக்கும் அழுத்துகின்றன. அதனால் நொடி, நிமிஷம், மணி என்றெல்லாம் தோன்றி நிற்கின்றன.

பொருள்களின் இயக்கங்களிலும் உணர்ச்சிகளிலும் வருஷம் மாசம் நாள் மணி என்று இருக்கின்றன. மற்றப்படி அவை சுயமாக இல்லை.

வெறும் உருவெளித் தோற்றமாகிய நாள், மணி, மாதம், வருஷம் இவற்றையே காலம் என்று நாம் நினைக்கிறோம்.

இவை உண்மையில் காலம் இல்லை.

நண்பர்கள் சிலர் கூடி இருந்து சீட்டு விளையாடுகிறார்கள். கலைத்துப் போட்ட சீட்டை ஒவ்வொருவரும் அடுக்கிப் பார்க்கிறார்கள். ஒருவருக்கு எடுத்த எடுப்பிலேயே சீட்டுகள் சேர்ந்து வந்திருக்கின்றன. ஒரு சுற்று இரண்டு சுற்று வருவதற்குள் அவ்வளவும் வரிசை தவறாமல் சேர்ந்து விடுகின்றன. விரித்து விடுகிறார். இப்படி ஒவ்வொரு தடவையும் அவருக்கு மளமள என்று சீட்டுச் சேர்கிறது. சொன்னால் சொன்னபடி வருகிறது.

அவருக்குச் சீட்டு. கூப்பிட்டால் என்ன என்று கேட்கிறது அவருக்குச் சீட்டு. பல நாட்கள் இப்படி அவருக்கு பிடித்து வரு கிறது சீட்டு. அவருடைய யோகம் என்கிறோம். அவருடைய ராசி என்கிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக இது அவருடைய நேரம் - அவருக்கு நல்லநேரம் என்கிறோம்.

மற்றவர்கள் நிலை அப்படி அல்ல. கலைத்துப் போட்ட சீட்டை விரித்துப் பார்த்தால் ஒவ்வொரு சீட்டும் ஒவ்வொரு திசை யில் இருக்கிறது. ஒன்றோடொன்று ஒட்டுகிறதாகவே இல்லை. சிலசமயம் சேர்ந்து பல சீட்டுகள் வந்தாலும் விரிப்பதற்கு வேண்டிய ஒரு சீட்டு வருவது இல்லை. ஆட்டம் எத்தனை சுற்றுச் சுற்றினாலும் அவருக்கு அந்த ஒருசீட்டு வராமல் சண்டித்தனம் பண்ணிவிடுகிறது. விரிக்கமுடியாமலே போய்விடுகிறது.

விடிய விடிய முண்டிப்பார்த்தாலும் சரி. ஆட்டம் அவருக்குப் பிடிக்காமலே போய்விடுகிறது. இந்தநிலை பலநாள் தொடர்ந்து நீடிப்பதும் உண்டு. சீட்டாட்டம் பிடிக்காமல், சாதித்துவிட்டால் அது மனிதனை அழஅழ வைத்து விடுகிறது.

இப்படி ஒரு சோதனைக்கு உள்ளாகிற மனிதனை யோகம் இல்லாதவன் என்கிறோம். ராசி இல்லாதவன் என்கிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக அவனுக்கு நேரம் சரி இல்லை என்று சொல்லி விடுகிறோம்.

சீட்டாட்டத்துக்கும் காலத்துக்கும் சம்பந்தம் உண்டா? இல்லைதான். ஆனாலும் காலத்தை இழுத்துப் போட்டு பேசாமல் இருக்கமுடிகிறதில்லை.

இனி, மந்திரி பதவி போன்ற ஒய்யாரத்தை இழந்தவன், காதலில் தோற்றவன், நஷ்டப்பட்டவன், வயதானவன், வேலை சோலி இல்லாதவன் அடிக்கடி என்ன சொல்கிறான்? நேரமே போக மாட்டேன் என்கிறது! சங்கடமாக இருக்கிறது என்கிறான்.

ஆடம்பரமான பதவியைப் பிடித்தவன், அங்கும் இங்கும் போய்க் கொண்டிருக்கிறவன், அதுஇது என்று ஏதாவது செய்து கொண்டிருக்கிறவன், பலபேரோடு பழக்கம் வைத்து உறவாடு கிறவன் என்ன சொல்கிறான்? நேரமே காணமாட்டேன் என்கிறது சார்? முடிக்க முடிக்க காரியங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. உற்சாகமாக இருக்கிறது'' என்கிறான்.

நேரம் என்று ஒன்று உண்டா? அது சிலரிடம் நகராமல் சப்பணம் போட்டு உட்கார்ந்து கொள்கிறதா? சிலரிடம் சிட்டாய்ப் பறந்து ஓடிக் கொண்டிருக்கிறதா?

அப்படி எதுவுமே இல்லை.

ஒரு வீட்டில் நான்கு பெண் (குழந்தை)கள் இருக்கிறார்கள். பெண்கள் அப்படி ஒன்றும் பிரமாதம் இல்லை. சுமார்தான். ஆனாலும் அவர்களுக்கு மளமள என்று கல்யாணம் நடந்து விடு கிறது. வீடு கலகல என்றிருக்கிறது.

இன்னொருவர் வீட்டில் இரண்டொரு பெண்கள்தாம். அழகான பெண்கள். அம்சமான பெண்கள். பருவத்துக்கு வந்து வருஷம் பல ஆகிவிட்டது. ஆனாலும் திருமணம் நடைபெற வில்லை.

ஒருவன் வாழ்க்கையில் நல்லகாலம் என்கிறான். இன்னொரு வன் கெட்டகாலம் என்கிறான்.

காலத்தோடு ஒட்டிச் செயல்படவேண்டும் என்பதை குறளா சிரியர் வலியுறுத்திச் சொல்கிறார். 'காலம் அறிதல்' என்று ஒரு அதிகாரத்தை வகுத்து வைத்திருக்கிறார் தெய்வப்புலவர்.

கடவுளைக் காலம் கடந்தவர் என்று சொல்கிறோம்.

மனிதர்களாகிய நம்மைப் பற்றிச் சொல்கிற பொழுதோ ''நாம் காலத்துக்குக் கட்டுப்பட்டவர்கள்'' என்கிறோம். இடத்துக் கும் கட்டுப்பட்டவர்கள் என்கிறோம்.

காலம் என்பது இருந்தால் அல்லவா கட்டுப்பட? ஆனாலும் சொல்லிக் கொண்டே இருக்கிறோம்.

உண்மையில் நாம் நினைக்கிறபடி காலம் என்பது இல்லை. நாள் என்றோ, வாரம் என்றோ, மாதம் என்றோ, வருஷம் என் றோ ஒன்றும் இல்லை.

மணி, நிமிஷம், நொடி என்றும் இல்லை. நாம் என்று ஒன்று இல்லை. நாம் என்று இருப்பதாகத் தோன்றுகிறது. நமது செயல் என்பதாகவும் ஒன்று தோன்றுகிறது. செயலில் வெற்றி, தோல்வி என்பதாகவும் தோன்றுகின்றன. லாபம், நஷ்டம், இன்பம், துன்பம் இவை உண்டாகின்றன. இவற்றுக்கு நாம் கட்டுப்பட்டுக்

கிடக்கிறோம். இதுதான் நமக்குக் காலமாகத் தெரிகிறது. இதைத் தான் காலத்துக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கிறது என்று சொல் கிறோம்.

இடத்திற்குக் கட்டுப்பட்டிருக்கிறோம் என்பதும் அப்படித் தான். நமது அறிவு குறித்து வைத்திருக்கிற பழக்கவழக்கங்கள், சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகள், முறைகள் ஆகியவற்றுக்கு உட் பட்டு நடக்கிறோம். மனைவி, மக்கள், உற்றார், உறவினர், வேண்டியவர், வேண்டாதவர், அதிகாரி, பணியாள், சமூகம், இவர்கள் தாம் இடம் இவர்களை விட்டு மீறமுடியவில்லை. இவர் களை அனுசரித்துத்தான் வாழ வேண்டி இருக்கிறது. மற்றப்படி தெற்கு, வடக்கு, என்னும் திசைகளோ, மேல் கீழ் என்னும் நிலை களோ, வட்டம், சதுரம், என்னும் உருவங்களோ இல்லைதான்.

உணர்ச்சிக்கும் அறிவுக்கும் கட்டுப்பட்டு நடக்கிறதையே, காலத்துக்கும் இடத்துக்கும் கட்டுப்பட்டு நடக்கிறது என்று சொல் கிறோம்.

நம் உடம்பில் எத்தனையோ காரியங்கள் நடக்கின்றன. பல ஆயிரம் தத்துவங்கள் சேர்ந்து ஒன்றாய் நின்று செயல்படுகின்றன. எல்லாம் கடவுளுடைய காரியந்தான். ஒன்றுகூட நமது செயல் அல்ல. உடம்பே கடவுள்மயந்தான்.

நம் உணர்ச்சியும் அப்படித்தான். அற்புதத்திலும் அற்புத மான காரியங்கள் உணர்ச்சியில் நடந்த வண்ணம் இருக்கின்றன, எல்லாம் கடவுளுடைய செயல்தான். உணர்ச்சியும் கடவுள் மயந் தான்.

ஆன்மாவும் கடவுள்மயந்தான். உடம்பு, ஆன்மா, உணர்ச்சி மூன்றும் கடவுள் மயமாக இருந்தாலும், மூன்றும் ஒன்று சேர்ந்து நிற்பதால் ஒன்றுக்கும் உண்மை தெரிவதில்லை.

உடம்போடு ஒட்டிப் பிறந்த காரணத்தால் உண்மையைத் தெரிய வழி இல்லை.

பூமி உண்டானது எப்பொழுது என்று தெரியாது. யூகத்தில் ஒரு மாதிரி தெரிந்தாலும் சூரியன் உண்டானது எப்பொழுது என்று தெரியாது. பல கோடி சூரியன்களைக் கொண்ட அண்டம் எப்பொழுது பிறந்தது என்று தெரியமுடியுமா? முடியாதுதான்.

கோடான கோடி அண்டங்களை வைத்திருக்கிற பேரண்டம் தோன்றியது எப்போது? அப்படிப் பலபல பேரண்டங்களை உடைய பிரபஞ்சம் உதித்தது எப்போது?

இவ்வளவும் உண்டாவதற்குமுன் என்ன இருந்தது? ஒன்றே. ஒன்றுதான் இருந்தது. அதுதான் கடவுள். அது சக்திமயமாக இருந்தது. அப்பொழுது இடம் ஏது? காலம் ஏது?

ஒன்றே ஒன்றுதான். சக்திமயமான பரம்பொருள் ஒன்றே ஒன்றுதான். அதுதான் உண்மை.

அந்தப் பரம்பொருளே மின்சாரம், காந்தம், உஷ்ணம், ஆகர்ஷணம் முதலிய ஆற்றல்களாகக் கிளம்பின. பேரண்டங்களாக வடிவெடுத்தன. அண்டங்களாகவும், நட்சத்திரங்களாகவும் வஸ்துக்களாகவும் அவதரித்தன.

அண்டபிண்ட சராசரங்களாக விளைய விரும்பிய பரம்பொருளின் ஆசைதான் காலம். ஆசையில் விளைந்த வஸ்துக்களும், வஸ்துக்களின் வேற்றுமைகளுமே இடம்.

கடவுள் போட்ட வேஷம் காலம். காலம் போட்ட வேஷம் இடம்.

பேரண்டங்களும், பேரண்டங்களில் உள்ள சகல கோடி தத்துவங்களும் உதித்து வர மூலமாய் இருந்த பரம்பொருளைப் பற்றி,

1. அகளமாய் யாரும்
அறிவரி(து) அப்பொருள்;
சகளமாய் வந்ததென்(று)
உந்தீ பற;
தானாக வந்ததென்(று)
உந்தீ பற.

என்று திருஉந்தியார் பாடுகிறார்.

---

(அகளமாய் - நீளம் அகலம் என்றோ, உயரம், ஆழம் என்றோ, நேற்று இன்று என்றோ. அறிவு அரிது - அப்பொருள் ஒருவராலும் காணமுடியாதது. காலம், இடம் ஒன்றும் இல்லாதது பரம்பொருள்.
சகளமாய்வந்தது - அந்தப் பரம்பொருளே சகல தத்துவங்களாகவும், காலத்தோடும், இடத்தோடும் தோற்றம் எடுத்தது.
தானாக வந்தது-தன் சொந்த விருப்பப்படி அவதாரம் எடுத்தது.)

இந்த உண்மையை மாணிக்கவாசகர்.

''ஞால மே!விசும்
பே!இவை வந்துபோம்
கால மே''

என்று இறைவனைப் பக்தியோடு கூப்பிடுவதன் மூலம் தெரிவிக்கிறார். ''அண்டங்களாக நீ இருக்கிறாய். அண்டங்கள் சுழல இடம் கொடுக்கும் வெளியாக நீ இருக்கிறாய். அண்டங்களையும் வெளியையும் உதறிப் போட்டகாலமாகவும் நீ இருக்கிறாய்.''

இறைவனின் ஆசை என்னும் ஆனந்தக்கனவுதான் காலம். அந்தக் காலத்தின் கர்ப்பத்தில் தவம் கிடந்தது இடம். அதாவது பேரண்டங்களும் அவை சுழலும் வெளியும்.

இந்த உண்மை அதிசய பாவத்தோடு தமிழில் குதித்துக் கொண்டு வருகிறது.

''ஞால மே!விசும்
பேஇவை வந்துபோம்
கால மே!உனை
என்றுகொல் காண்பதே.''

இனிப் பாடலின் முழுஉருவத்தையும் பார்க்கலாம்.

2. ''மேலை வானவ
ரும்அறி யாததோர்
கோல மே!எனை
ஆள்க்கொண்ட கூத்தனே!
ஞால மே!விசும்
பே!இவை வந்துபோம்
கால மேஉனை
என்றுகொல் காண்பதே'' (14)

---

(மேலை வானவரும் அறியாதது ஓர் கோலமே - நுட்பமான பேருண்மையையும் கண்டு தெளியும் ஞானி (வானவர்) களாலும் தெரியமுடியாத அற்புதனே! எல்லாமாய் விளைந்த அழகிய பெருமானே! ஞாலமே விசும்பே - அண்டங்களாக தோன்றுகிற பெருமானே! அவை இயங்கும் விஸ்வ வெளியாகக் காட்சி கொடுக்கும் பெருமானே!

இவை வந்துபோம் காலமே - அண்டங்களும் அவை சுழலும் பேரண்டவெளிகளும் உதித்து வர இடம்கொடுக்கும் காலம் எனும் பெருவெளியாய் விளங்குகிற இறைவனே!

3

குறை ஒன்றும் இல்லாமல் நிறைந்து நிற்கிறவன் மனிதன். உடம்பு, ஆன்மா, உணர்ச்சி என்னும் மூன்று தத்துவங்களும் பக்குவமாய் விளைந்து பூரணமாய் பிரகாசிப்பது மனிதனிடந்தான் பேரண்டம் முழுவதிலும் இப்படி ஒரு அற்புதம் வேறு எங்கும் இல்லைதான்.

மனிதனுடைய உடம்பு பார்க்கப் பார்க்க அழகானது. நுட்பமும் அருமையும் எளிமையும் ஒன்றாய் நின்று செயல்படுகிற விந்தையை எடுத்துக் காட்டுகிறது மனிதனுடைய உருவ அமைப்பு.

முகம் என்றும், மூக்கு என்றும், நெற்றி என்றும், புருவம் என்றும், கன்னம் என்றும், இதழ் என்றும், பல்வரிசை என்றும் மனித உருவில் அமைந்து அழகு கொலுவீற்றிருக்கிறது.

அழகுத் தத்துவம் ஒய்யாரமாக அமர்ந்து எடுப்போடு அரசோச்சுகிற அற்புதத்தை வேறு எங்கு பார்க்கமுடியும்? மனிதனிடம் மட்டுமே பார்க்கமுடியும்.

நெற்றிக்கு கீழே மூக்கின் உச்சியை ஒட்டி வலப்பக்கமும் இடப் பக்கமும் வாய்ப்பாய் அமைந்திருக்கின்றன கண்கள்?

---

உனை என்று கொல் காண்பது - அதிசயத்திலும் அதிசயமான உன்னை நான் என்று கண்ணாரக் காண்பது.)

குறிப்பு:- எக்களிப்பும் வியப்பும் ஹாஸ்ய பாவத்தோடு பாடலில் ஒலிக்கின்றன. பக்திரசம் பாடலாய் எழுந்து வர தமிழ் இடம் கொடுப்பதை கவி உருவத்தில் பார்க்கலாம்.

பொய்கையாள்வாரும் இறைவனுடைய எல்லையற்ற திருவருள்ப் பிரகாசத்தை அனுபவித்து வியக்கிறார்.

அவருடைய வியப்பு

"உணர்வார்யார் உன்பெருமை?
ஊழிதோ(று) ஊழி
உணர்வாரார் உன்னுருவம்
தன்னை — உணர்வாரார்?
விண்ணகத்தாய்! மண்ணகத்தாய்
வேங்கடத்தாய்! நால்வேதப்
பண்ணகத்தாய்! நீகிடந்த
பாங்கு"

என்று தாளம் போட்டுக் கொண்டு நடனமே ஆடிக் கொண்டு வருகிறது.

முகத்தின் முகப்பில் நேருக்கு நேராக அமைந்திருக்கின்றன கண்கள்.

மிருகங்களைப் போலவோ, பறவை முதலிய வேறு பிராணி களைப் போலவோ பக்கவாட்டில் அமையவில்லை மனிதனுக்குக் கண்கள்.

எதையும் மனிதனால் நேருக்கு நேராகப் பார்க்கமுடியும். ஊடுருவிப் பார்க்கமுடியும். இயல்பாகவே பார்க்கமுடியும். 'பளிச்' என்றே பார்க்கமுடியும்.

இந்த உலகில் உள்ள பொருள்களைத் தொடுவதற்கும், பற்று வதற்கும், எடுத்துக் கண்முன் கொண்டு காட்டுவதற்கும் பொருத்த மாய் அமைந்துள்ளன மனிதனுக்குக் கைகளும் விரல்களும்.

கைகள் மூலமாகத்தான் மனிதன் பொருள்களைப் பக்குவப் படுத்துகிறான். உழவு, வணிகம், தொழில், சட்டம், ஓவியம், நெசவு, கலை, சமையல், சாப்பாடு, போர், காதல் எல்லாம் மனிதனுக்குக் கையின் மூலமே நடக்கின்றன.

மற்றப் பிராணிகளுக்கு மனிதனைப் போல வசதி இல்லை. கை என்று தனியாக இல்லை தான்.

தேக சம்பந்தப்பட்ட காரியம் இருக்கட்டும். மனிதனுடைய அறிவு, ஆராய்ச்சி, சிந்தனை, பாஷை, இலக்கியம், ஞானம், பக்தி, அன்பு, மரியாதை, பொறுமை முதலிய உணர்ச்சி சம்பந்தப்பட்ட காரியத்தைப் பார்த்தால் ஒரே வியப்பாக இருக்கிறது.

மனிதன் என்றால் சாதாரணம் இல்லை. அவன் ஒரு மா மனிதன்தான். செல்வம், கல்வி, புகழ், அதிகாரம், அழகு, அலங்காரம், சந்தோஷம், உல்லாசம் எல்லாம் சேர்ந்து பரிமளிக்கும் கல்யாண புருஷன்தான் மனிதன்.

ஆனால் மனிதனிடம் ஒன்று மட்டும் இல்லை. உண்மை என்கிற ஒன்று மட்டும் இல்லை. சோதித்துப் பார்த்தால் எல்லாம் காரியமயமாகத்தான் இருக்கும். அன்பும் காரியமாகத்தான் இருக்கும். வெறுப்பும் காரியமாகத்தான் இருக்கும். பணிவிலும் பாவலாத்தான். திமிரில்க்கூட பம்மாத்துத்தான்.

காரியம் என்றால் கெஞ்சுவான், கூத்தாடுவான், கையைப் பிடிப்பான், காலைப் பிடிப்பான், அது மட்டுமா! வாழ்க வாழ்க

என்று கத்துவான், "அவருடைய ஆள் நான், அவருக்காக உயிரையே கொடுப்பேன்" என்று உருட்டுவான். "அடடா! அவர் எப்பேர்ப்பட்டவர்! மனிதனா அவர்! இதயதெய்வம், வாழவைத்த தெய்வம்" என்றெல்லாம் மிரட்டுவான்.

ஒன்றுக்கும் பிரயோசனம் இல்லைஎன்று தெரிந்தால் போதும். "ஏறிட்டுக் கூடப் பார்க்க மாட்டான். "என்ன மனிதன்! மட்டமான பிறவி! கயவாளிப்பயல்" என்று அங்கங்கே ஓதுவான். திரும்பிக்கூடப் பார்க்கமாட்டான்.

அன்பிலோ மரியாதையிலோ உண்மை என்பது இல்லாமலே போய்விடுகிறது. பிறகு பக்தியில் மட்டும் எப்படி உண்மை வந்து உட்கார முடியும்? அன்று தொட்டு இன்றுவரை மனித காரியம் அப்படி அப்படித்தான்.

இந்த அலங்கோலத்தை மாணிக்கவாசகர் கண்ணாரப் பார்க்கிறார். எங்கெங்கு போனாலும் அங்கெல்லாம் இந்த அலங்கோலமாகத்தான் இருக்கிறது. என்ன செய்வார், பாவம் மாணிக்கவாசகர்?

மனிதன் கெட்டிக்காரனாக அல்லவா இருக்கிறான்? அவன் அன்பும் கெட்டிக்காரத்தனமாக அல்லவா இருக்கிறது? என்று தவிக்கிறார். உண்மை இல்லையே! வெறும் கெட்டிக்காரத்தனந் தானே மேலே வந்து ஆதிக்கம் பண்ணுகிறது என்று தவிக்கிறார்.

மார்க்கண்டனைப் பிடிக்க ஆவேசத்தோடு வந்தான் எமன். மார்க்கண்டன் லிங்கத்தையே அணைத்துப் பிடித்துக்கொண்டான். "சட்டம் என்றால் சட்டந்தான். யாராக இருந்தாலும் பயப்படமாட்டேன்" என்று மூர்க்கத்தனத்தோடு பாசக் கயிற்றை விசிறி எறிந்துவிட்டான் எமன்.

மார்க்கண்டனையும் சிவலிங்கத்தையும் இறுக்கி நெறித்தது கயிறு.

சிவபெருமானுக்குக் கோபம் வந்துவிட்டது. ஆங்காரத்தோடு வெளிப்பட்டார். ஒரே மிதியாக மிதித்து எமனை எருமைக் கடாவோடு உருட்டிவிட்டார்.

எமனுடைய திமிரும் கொழுப்பும் ஓடிவிட்டன. சிவபெருமான் பாதங்களைப் பிடித்து அடியேனை நீர்தான் காப்பாற்ற வேண்டும் என்று கெஞ்சினான்.

இந்தக் காட்சி மாணிக்கவாசகர் கண்முன் நிற்கிறது.

மனிதனுடைய காரியம் இவ்வளவுதானா? கெஞ்சினால் மிஞ்சுகிறான். மிஞ்சினால் கெஞ்சுகிறான்! எல்லாம் பித்தலாட்டமாக அல்லவாஇருக்கின்றன, என்று மாணிக்கவாசகர் தவிக்கிறார்.

நானும் மனிதர்களில் ஒருவன்தானே என்று யோசிக்கிறார்.

கெட்டிக்காரத்தனம் விலகி உண்மையானது முன்னால் வந்து ஜொலிக்க வேண்டுமே? அப்படி ஜொலிப்பது என்றோ என்று உருகுகிறார் மாணிக்கவாசகர்.

மாணிக்கவாசகருடைய உணர்ச்சி - உண்மை உணர்ச்சி ஆனந்தமாய் கவிஉருவம் எடுக்கிறது.

போற்றி என்றும்,
புரண்டும், புகழ்ந்தும்நின்(று),
ஆற்றல் மிக்கஅன்
பால்அழைக் கின்றேன்காண்;
ஏற்று வந்தெதிர்
தாமரைத் தாள்உறும்
கூற்றம் ஒப்பதோர்
கொள்கைஎன் கொள்கையே (15)

4

கடவுள்த் தத்துவம் எங்கும் எப்பொழுதும் ஒரே படித்தாய் நிறைந்து நிற்கிறது. அது ஒன்றுதான் இருக்கிறது. காலம், இடம் என்று இல்லாமல் அது ஒன்றே இருக்கிறது. அதாவது இடையீடு இல்லாமல் ஒரே தொடர்ச்சியாய் வரம்பில்லாமல் எங்கும் வியாபித்ததாய் இருக்கிறது கடவுள்த் தத்துவம்.

நாமும் நம்முடைய செயல் ஒவ்வொன்றும் அந்தத் தத்துவத்துக்குள் அடங்கி உள்ளதுதான். எள்ளில் எண்ணை நிறைந்திருப்பது போல, எல்லாவற்றிலும் நிறைந்திருக்கிறது கடவுள்த்தத்துவம்.மாணிக்கவாசகருக்கு இந்த உண்மை நன்றாகத் தெரிகிறது. பரவசத்துக்கு ஆளாகிறார்.

மனிதர்களைப் பற்றியும் நன்றாகத் தெரிகிறது மாணிக்க வாசகருக்கு.

உண்மையான பக்தி இல்லையே! எல்லாம் காரியமாகத்தானே இருக்கிறது! என்பதும் தெரிகிறது. பதறிவிடுகிறார் மாணிக்க வாசகர்.

உண்மையான பக்தர் குழாத்துள் நுழைய எனக்கு அனுமதி கிடைக்குமா? என்னை அங்கீகரித்து தொண்டர் கூட்டத்துள் போவதற்கு அருள்பாலிப்பானா? வண்டு மொய்த்துத் தேனுண்ணும் கொன்றைமாலை அணிந்த பெருமான், நான் தொண்டு புரிய இடம் கொடுப்பானா? என்று மறுகுகிறார் மாணிக்கவாசகர்.

கொள்ளும் கில்எனை
அன்பரில் கூய்ப்பணி!
கள்ளும் வண்டும்
அறாமலர்க் கொன்றையான்;
நள்ளும் கீழ்உளும்
மேல்உளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும்
போல்நிற்கும் எந்தையே. (16)

5

நம்மைப் பற்றி யோசிக்கிறபொழுது நமக்கு ஆச்சர்யமாக இருக்கிறது. நம் தாயையும் தந்தையையும் துணைக்கு வைத்துக் கொண்டு யோசிக்கிற பொழுது இன்னும் ஆச்சர்யமாக இருக்கிறது.

நாம் எப்படி வந்தோம்? நம்மை எப்படி இவர்கள் எடுத்துக் கொடுத்தார்கள்? எங்கிருந்து எடுத்துக் கொடுத்தார்கள்? என்று யோசிக்க யோசிக்க ஒரே வியப்புத்தான்.

இனி, நம் தாயையும் தந்தையையும் கொடுத்தவர்களைப் பற்றி யோசித்தாலும் அப்படித்தான். மேலும் மேலும் அதாவது நமது பாட்டன், பாட்டியைக் கொடுத்தவர்கள். இன்னும் அவர்களை இப்படிப் போகப்போக ஒரே அதிசயந்தான்.

எல்லோருக்குமே ஒருவர்தான் தந்தை என்று தெரிகிறது. அவர்தான் தாய் என்றும் தெரிகிறது. உலகம், அண்டம், பேரண்டம் எல்லாவற்றுக்குமே அவர் ஒருவர்தான் தாயும் தந்தையும் என்று தெரிகிறது.

---

(கொள்ளும்கில் - ஏற்றுக் கொள்வானா?, அன்பரில்- உண்மையான பக்தன்தான் என்று அங்கீகரித்து. கூய் - இங்கே வா என்று என்னைக் கூப்பிட்டு. பணி - தொண்டு செய்ய இடம் கொடுப்பானா? கள் - தேன். அறா - நீங்காத. நள் - நடு. கீழ், மேல், நடு எல்லாவற்றிலும் நிறைந்திருக்கிறான் இறைவன். எள்ளில் நிறைந்திருக்கும் எண்ணெய் போல் நிறைந்திருக்கிறான் இறைவன்)

அப்படியானால் அவருக்குத் தாயும் தந்தையும் இருக்கமுடியாது தானே!

''தாயும் இல்லாத தந்தையும் இல்லாத ஒரு தனிப்பெரும் உண்மை-தத்துவங்கள் எல்லாவற்றுக்கும் தாயாகவும் இருக்கிறது. தந்தையாகவும் இருக்கிறது.

எனக்குத் தந்தையும் தாயும் உண்மையில் இறைவன்தான். இதை நான் தெரிவதற்குமுன்பே அவன் என்னுள் இருக்கிறான். என்னோடு இருக்கிறான். நானாகவே இருக்கிறான்.

''இறைவனுடைய திருவருளல்லவா எல்லாம் என்னும் நினைப்பு உண்டான போதே, ''ஆம்ஆம்! உண்மைதான்! நீ நினைப்பது சரிதான்'' என்று என்னுள்ளிருந்து அவன் சொல்லிவிட்டான்.

என்னுள் அவன் எப்படி வந்து புகுந்தான் என்பது எனக்குத் தெரியாது. மற்றவர்கள் யாருடைய கண்களிலும் படாமல் அப்படி மாயமாய் வந்து என்னுள் அமர்ந்துவிட்டான் எம்பெருமான்'' இப்படிப் பார்த்து அனுபவிக்கிறார் மாணிக்கவாசகர்.

மாணிக்கவாசகருடைய அனுபவம் பாடலாய் உருவெடுக்கிறது.

எந்தை, யாய், எம்
பிரான், மற்றும் யாவர்க்கும்
தந்தை தாய், தம்
பிரான் தனக்(கு) அஃதிலான்;
முந்தி என்னுள்
புகுந்தனன்; யாவரும்
சிந்தை யாலும்
அறிவரும் செல்வனே. (17)

6

கண்ணுக்குப் புலனாவதில்லை அன்பு. ஆனாலும் அதனுடைய வேகத்தையும் நயத்தையும் நாம் பார்க்க முடிகிறது. எங்கிருந்தோ குதித்தோடி வருவது போல வருகிறது அன்பு. தகுதி உடையவர்

(எந்தை-தந்தை. யாய்-தாய். எம்பிரான்-தலைவன். தனக்கு அஃது இலான்-தாயும் தந்தையும் இல்லாதவன். ஏகநாயகன். முந்தி-நினைப்பதற்கு முன்பே. யாவரும் சிந்தையாலும் அறிவரும் செல்வன்-ஒருவருடைய யோசனைக்கும்-அதாவது ஆராய்ச்சிக்கும் பிடிபடாதவன் இறைவன்.)

கள், தொடர்புடையவர்கள் எல்லோரையும் விலக்கிக் கொண்டு-தடைகளை எல்லாம் தட்டி நொறுக்கிவிட்டு, பாய்ந்தோடி வருகிறது அன்பு.

அன்பு உண்மையாக இருப்பதோடு அதிசயமாகவும் இருக்கிறது. இன்றும் இவ்வுலகில் நாம் கண்ணாரக் காணுகிற காட்சி இந்த அன்பின் விசித்திரந்தான்.

ஆனாலும் அந்த அன்பை நம்மில் வைத்துக் கொள்ள முடியவில்லை. பார்த்ததோடு சரி காரியம்.

கடவுளுடைய கருணையையும் ஏதோ மேலெழுந்தவாரியாக-புறம்போக்காகப் பார்த்துவிடுகிறோம். பார்ப்பதோடு சரி காரியம்.

தெளிவில்லாத புழு, பூச்சி, மரம், மட்டை தான் இறைவனுடைய அருளை அனுபவிக்க முடியவில்லை என்று தீர்மானிக்கக் கூடாது. தெளிவிலே உயிருள்ளவர்கள், உணர்ச்சி உள்ளவர்கள், ஒளி உள்ளவர்கள் கூட அனுபவிக்க முடியவில்லைதான்.

வசதி இல்லாதவர்கள் மட்டும் அல்ல, வசதி நிறைந்தவர்களாலும் திருவருளை அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை தான்.

''செல்வம், நல்குர(வு)
இன்றி, விண் ணோர், புழு,
புல்வரம்(பு) இன்றி,
யார்க்கும் அரும்பொருள்;
எல்லை இல்கழல்
கண்டும் பிரிந்தனன்
கல்வ கைமனத்(து)
என்பட்ட கட்டமே! (18)

7

உண்மைக்குள்ளும் உணர்ச்சிக்குள்ளும் இறங்கி வெகுதூரம் போய் அவற்றின் ஆழங்களை அளந்து பார்க்கிறவர்கள் ஞானிகள். அறிஞர்களின் காரியம் அப்படி அல்ல.

---

(நல்குரவு-வறுமை. விண்ணோர்-ஞானிகள். வரம்புஇன்றி-எல்லை இல்லாமல் விரிந்து பெருகி உள்ள சராசரம் எல்லாவற்றுக்கும். அரும்பொருள்-அரிய உண்மை இறைவன். எல்லைஇல் கழல்-அளவிட முடியாத பெருமைமிக்க இறைவனுடைய திருவருளை. எங்கும் நிறைந்த செயலை. கல்வகைமனத்து-கல்போன்றகுருட்டு மனதை வைத்துக்கொண்டு. என்பட்டகட்டம்-என்ன தொல்லைக்கெல்லாம் ஆளாகிறேன் நான்.)

காரண காரியங்களைப் பார்த்து அது அப்படி இது இப்படி என்று பெயர் வைக்கிறவர்கள் அறிஞர்கள்.

உலகம் முழுவதும் அறிஞர்கள் இருக்கிறார்கள். மந்தை மந்தையாகவே இருக்கிறார்கள். மாணிக்கவாசகருக்கும் இந்த படாடோபமான அறிவுக்கும் சம்பந்தம் இல்லை.

எதிர்பார்த்து நிற்கும் அறிஞர்களை எல்லாம் விட்டுவிட்டு வெறும் மடையனாகிய என்னை அங்கீகரித்து விட்டானே இறைவன்! இது எப்படி என்று வியக்கிறார் மாணிக்கவாசகர்.

விஷயம் தெரிகிறது மாணிக்கவாசகருக்கு. அதைப் பற்றிய விபரம், இதைப்பற்றிய விபரம், அந்த ஆராய்ச்சி, இந்த ஆராய்ச்சி என்னும் குப்பை கூளங்கள் தன் மண்டைக்குள் இல்லை என்பது அவருக்குத் தெரிந்துவிடுகிறது. புள்ளிவிபரம், இலக்கணம், சூத்திரம் முதலிய சண்டு சருகு ஒன்றும் மூளைக்குள் இல்லை.

அறிவின் கையில் சிக்கவில்லை யோசனை. "ஒன்றும் இல்லாதவன், அப்பாவி என்று இரக்கப்பட்டல்லவா என்னை அங்கீகரித்திருக்கிறான் பெருமான்!" என்று தெளிகிறார் மாணிக்கவாசகர்.

தெளிவு வந்தவுடன் உத்ஸாகம் வருகிறது. உத்ஸாகத்தோடு இறைவனிடமே கேட்கிறார். "என்னை நீர் ஏற்றுக் கொண்டது என் அறிவைப் பார்த்தா? அறிவின்மையைப் பார்த்தா?

அறிவே இல்லாத நிலையைப் பார்த்துத்தானே ஏற்றுக் கொண்டீர்?"

இப்படி வருகிறது கேள்வி.

அறிவ னே! அமு
தே! அடி நாயினேன்
அறிவ னாகக்கொண்
டோ எனை ஆண்டது?

---

(அறிவனே-ஞானமயமான பெருமானே. அமுதே-தெவிட்டாத அமிர்தமாய் இருப்பவனே. அறிவனாகக் கொண்டோ என்னை ஆண்டது-நான் அறிஞன்என்று நினைத்தா சேர்த்துக்கொண்டாய்? அறிவு இலாமைகண்டது அன்றே-ஆராய்ச்சித் திறனோ அறிவின் நுணுக்கமோ ஒன்றும் இல்லாத என் நிலையைக் கண்டு இரங்கி அல்லவா என்னை நீ சேர்த்துக் கொண்டாய்! பெருமானே! நான் புத்திசாலியா? மூடனா? என்னைப்பற்றி உனக்குத்தான் தெரியும். தாராளமாகச் சொல் பெருமானே.)

அறிவி லாமைஅன்
றேகண்ட(து) ஆண்டநாள்
அறிவ னோஅல்ல
னோஅருள் ஈசனே! (19)

8

அரியபெரிய நுட்பமான விஷயங்களைப் பற்றி எல்லாம் ஆராய்ந்து கண்டவர் மாணிக்கவாசகர். தன்னைப்பற்றி தீவிரமாக ஆராய்ந்து பார்த்தவர் அவர்.

''ஒன்றும் தெரியாதவன் நான்'' என்று தன்னைப் பற்றி அவர் தெரிந்து கொண்டார். எட்டும் இரண்டும் எத்தனை என்று கேட்டால் பத்து என்று சொல்வது எளிதுதான். அந்த எளிதான காரியங்கூட தனக்குத் தெரியாது என்றும், அவ்வளவு மட்டமான பேர்வழி என்றும் தன்னை இனம்கண்டு கொண்டார் மாணிக்க வாசகர்..

அறிவுதான் இல்லை, பண்பாடாவது இருக்கிறதா என்றால்- அதுவும் இல்லை தன்னிடம், என்று தன்னைப் பற்றி நினைக்கிறார். புத்தியும் இல்லை. பண்பாடும் இல்லை என்றால் வெறும் காட்டுமிராண்டி தானே. காட்டுமிராண்டியாகிய தன்னையே தன்னுடைய சந்நிதானத்துக்கு வரவழைத்தான் இறைவன் என்று பெருமைப்படுகிறார்.

தன்னை அன்போடு 'வா' என்று கூப்பிட்டு, உட்கார வைத்து உபசரித்து விட்டான் இறைவன் என்கிறார். மெய்யடியார் கூடி இருக்கும் கூட்டத்தில் தன்னையும் சேர்த்து வைத்தான் இறைவன் என்றும், அதற்காக என்னைத் தயார் செய்தான் அந்த இறைவன் என்றும் உருகுகிறார் மாணிக்கவாசகர்.

இவ்வளவு உபசாரமும் இறைவன் எனக்கு வலியவந்து செய்தான். ஊர் அறிய உலகறியப் பகிரங்கமாகவே செய்தான். ரகஸ்யம் ஒன்றும் இல்லை என்கிறார் மாணிக்கவாசகர்.

தன்னுடைய வியப்பையும் எக்களிப்பையும் அந்த இறைவனிடமே நேருக்கு நேர் நின்று சமர்ப்பிக்கிறார் மாணிக்கவாசகர்.

தமிழ்ப் பாஷையானது அதை வாங்கி இசையிலும் நடனத்திலும் வைத்துக் காட்டுகிறது.

கட்ட றுத்தெனை
ஆண்டுகண் ணாரநீ(று)
இட்ட அன்பரோ(டு)
யாவரும் காணவே

பட்டி மண்டபம்
ஏற்றினை ஏற்றினை;
எட்டி னோடிரண்
டும்அறி யேனையே (20)

9

வானம், பூமி, யானை, பூனை, புல்பூண்டு, மனிதர், காற்று, நெருப்பு இப்படிக் கோடான கோடி வடிவங்களில் கடவுள் தோன்றிக் கொண்டிருந்தாலும், அவர் தனித்த நிலையிலும் இருக்கிறார்.

இதை ஞானிகள் பார்க்கிறார்கள். தங்களை ஆட்கொள்வதற்காக அவர் வந்ததையும் வந்து ஆட்கொண்டதையும் வைத்துப் பார்க்கிறார்கள். கடவுள் தனியாக இருக்கிறார். நமக்காகவே இருக்கிறார் என்று உணர்கிறார்கள்.

அன்பர்களைத் தன்வயப்படுத்த அவர் விதவிதமாக வருவார் மனைவியாகவும் வருவார். மக்களாகவும் வருவார். நண்பர்களாகவும் வருவார். விரோதிகளாகவும் வருவார்.

லாபமாகவும் வருவார். நஷ்டமாகவும் வருவார். அரசனாகவும் வருவார். ஆண்டியாகவும் வருவார்.

அவிழ்க்க முடியாத சிக்கலாகவும் வருவார், நோயாகக்கூட வந்து நிற்பார்.

மாணிக்கவாசகரிடம் இப்படி எத்தனையோ முறை இறைவன் வலிய வலிய வந்திருக்கிறார்.

விவரம் தெரிந்தபின் தான், மாணிக்கவாசகருக்கு யோசனை வருகிறது. அடடா! எத்தனையோ தடவை ஏமாறிவிட்டோமே! முன்னமேயே இந்த உண்மை தெரியாமல் போய் விட்டதே? எவ்வளவு பைத்தியகாரத்தனமாக இருந்துவிட்டோம்? கவனிக்காமலே போய் விட்டோமே? என்று வெட்கப்படுகிறார். வெட்கமும் நாணமும் பாட்டாய் வருகிறது.

(தான தானன
தானன தானன)

---

(கட்டு அறுத்து எனைஆண்டு-என்னுடைய பித்தம் மயக்கம் முழுவதையும் தெளியச் செய்து, உண்மையை எனக்குக் காட்டி. கண்ணார நீறு இட்ட அன்பரோடு மண்டபம் ஏற்றினை-கண் குளிரத் திருநீறு அணிந்த அடியவர்களுடன் உன்சன்னிதானத்தில் இருக்க உதவினாய். பட்டிமண்டபம்-இறைவன் கொலுவிருக்கும் இடம்.)

உண்டோர் ஒண்பொருள்
என்றுணர் வார்க்கெலாம்
பெண்டிர் ஆண்அலி
என்றறி ஒண்கிலை;
தொண்ட னேன்கொள்ள
வாவந்து தோன்றினாய்
கண்டும் கண்டிலேன்
என்னகண் மாயமே! (21)

உளன்கண்டாய் நன்நெஞ்சே!
உத்தமன்;எஞ் ஞான்றும்
உளன்கண்டாய்; உள்குவார்
உள்ளத்(து)— உளன்கண்டாய்;
வெள்ளத்தின் மேயானும்,
வேங்கடத்தின் உள்ளானும்,
உள்ளத்தின் உள்ளான்என்(று)
ஓர்.

என்னும் பொய்கையாள்வார் பாசுரத்தை வைத்துப் பார்த்தால் மாணிக்கவாசகரை அனுபவிக்க வசதிப்படும்.

---

(உண்டு ஓர் ஒண்பொருள் என்று உணர்வார்க்கு எலாம் - பரம் பொருள் என்பது உண்மைதான். அது ஒன்றுதான் உண்மை. அது தான் எல்லா உருவங்களிலும் தெரிகிறது என்று விவரம் தெரிந்தவர்கள்கூட.

பெண்டிர் ஆண் அலி என்று அறிவுஒண்கிலை - உன்னை ஒரு குறிப்பிட்ட நிலையான வடிவில் பார்க்க முடியாது, ஏன்? நீ ஆணாகவும் இல்லை, பெண்ணாகவும் இல்லை. அலியாகவும் இல்லை. எல்லாம் ஆகவும் இருக்கிறாய். அதனால் ஒன்றாக இல்லை. ஆனால் நீதான் உண்மை. தொண்டனேன் கொள்ள-அடியவனாகிய என்னை அன்பனாக அங்கீகரிக்க. ஆவந்துதோன்றினாய் - அடடா! என்னைத் தேடி வலிய வந்து நின்றாய்! மாறிமாறி வந்தாய்!!

கண்டும் -என்னடா இது என்று அதிசயப்பட்டும். கண்டிலேன்- நீதான் என்னை தேடிவந்தாய் என்பதை நான் உணரவில்லை.

என்ன கண் மாயமே - என்னுடைய கண்ணே என்னை ஏமாற்றிவிட்டது. இதை நான் யாரிடம் சொல்ல)

குறிப்பு:- அற்புதமான பாடல். கடவுளை நாம் கண்ணால் பார்க்க வேண்டாம். பாடலைப் பாடி அனுபவித்தால் போதும். கடவுள் நம்மைப் பார்த்துப் பார்த்து மகிழ்வார். பக்தி ரசம் பாடலில் நிறைந்து நிற்கிறது.

# எல்லாம் பாவலாப் பண்ணுகிற காரியந்தான்

கவியைப் பற்றிச் சொல்கிற பொழுது கடவுளைப் போன்றது கவி என்று நிபுணர்கள் சொல்வார்கள். கடவுள் எப்படி அழியாத் தன்மையோடு இருக்கிறாரோ அப்படியே கவியும் இருக்கிறது. கடவுள் எப்படி எளிமையாக இருக்கிறாரோ அப்படியே கவியும் இருக்கிறது.

இலக்கணத்தோடு கட்டிப் புரள்கிறவர்கள், சூத்திரங்களையும் விதிகளையும் புரண்டுகிறவர்கள், வியாக்யானத்தோடு மல்லுக் கட்டுகிறவர்கள், ஆராய்ச்சி ஆராய்ச்சி என்று அடித்துக் கொள்கிற வர்கள் இவர்களுக்கெல்லாம் கவி விளங்காது. மனம் ஒவ்வாத பெண்போல இவர்களிடம் கவியானது முகத்தைத் திருப்பிக் கொள்ளும். கடவுளும் அப்படித்தான். பண்டிதர்கள் சாஸ்திரிகள், பாராயணர்கள், விற்பன்னர்கள் இவர்களிடம் கடவுள் பழக மாட்டார். இவர்களை விட்டுத் தள்ளியே நிற்பார் கடவுள்.

கெட்டிக்காரத்தனத்துக்கும் கடவுளுக்கும் வெகுதூரம். அப்படியே கவிக்கும் சௌடால் தனத்துக்கும் தூரம் அதிகம்.

கவிக்கும் கடவுளுக்கும் அப்படி இருக்கிறது ஒற்றுமை.

கவியை அனுபவிக்க அனுபவிக்க அது மனதைப் பிசையும், உணர்ச்சியோடு கலந்துவிடும். வேறொரு பிறவியையே கொடுத்து விடும். கவியை அனுபவிக்கிறதன் மூலம் புதிய பிறவியே எடுத்து விடுகிறோம்.

கடவுளை அனுபவிக்கிறதும் அப்படியே. வேறொரு பிறவியே கிடைத்துவிடுகிறது. பழையன எல்லாம் போய்விடுகின்றன. புதியன பிறக்கின்றன.

மாணிக்கவாசகருடைய பாடல்கள் தெய்வாம்சமானவை. ஒளிமயமானவை. உணர்ச்சிமயமானவை. உணர்ச்சியானது பாஷையோடு சேர்ந்து எடுக்கிற புதுப்புது அவதாரங்கள் தான் மாணிக்கவாசகர் பாடல்கள்.

மாணிக்கவாசகர் பாடலை அனுபவிக்கிறது கடவுளை அனுபவிக்கிறதுதான்.

இதோ ஒரு பாடல்.

மாணிக்கவாசகர் இறைவனைக் கண்குளிரப் பார்க்கிறார். ஆனந்த பரவசத்தோடு அனுபவிக்கிறார். ஆனந்த பரவசத்தோடு அனுபவிக்கிறார் என்றால் என்ன? நாம் கண்குளிரப் பார்த்து இறைவனை அனுபவிக்க இடம் கொடுக்கிறார் என்பதுதான் பொருள்.

எப்படி என்று பாருங்கள்.

(தானன தானன தன்
தானன தானன தன்)

தரிக்கிலேன் காயவாழ்க் கை;
சங்கரா! போற்றிவா னோர்
விருத்தனே போற்றி!மாறா
விடலையே போற்றி!ஒப்பில்
ஒருத்தனே போற்றி!உம் பர்
தம்பிரான் போற்றிதில் லை
நிருத்தனே போற்றிஎங் கள்
நேயனே போற்றிபோற் றி. (23)

---

(தரிக்கிலேன் காயவாழ்க்கை - பொய்யோடும் பித்தலாட்டத்தோடும் சேர்ந்து, அவற்றை எப்பொழுதும் தாஜா பண்ணிக் கொண்டே வண்டியை ஓட்டுகிற பிழைப்பு போதும். காயம் - உடம்பு. அதாவது ஆணவம். ஆணவத்தின் லீலாவிநோதங்கள் தான் பொய், பித்தலாட்டம் எல்லாம்.

நமது வாழ்க்கையை, சற்றே பின் நோக்கித் திரும்பிப் பார்க்க வேண்டும். பார்க்கப் பார்க்க வியப்பாக இருக்கும். நாம் செய்த காரியங்களே நமக்குக் கனவுபோல இருக்கும். விபரம் இல்லாத புதிராகவுந் தெரியும். சில காரியங்கள் நமது கெட்டிக்காரத் தனத்தின் முதுகைத் தட்டிக் கொடுக்கும். சிலகாரியங்கள் நமது அவமானத்தின் முகத்திலேயே கரியைப் பூசிவிடும்.

மாணிக்கவாசகர் சிறுகுழந்தையாக இருந்தபொழுது எப்படித் தவழ்ந்தார்? எப்படி ஓடி விளையாடினார்? என்பது நமக்குத் தெரியாது. அவர் இளைஞராக இருந்தபொழுது யாரிடம் படித்தார்? என்னென்ன பாடங்களைப் பிரியமாகப் படித்தார்? என்னென்ன பாடங்கள் அவருக்கு மண்டையில் ஏறவில்லை என்பதும் நமக்குத் தெரியாது. சிப்பிக்குள் முத்து விளைவது போல ஞானமுத்தாக விளைந்துவிட்டார் மாணிக்கவாசகர். அவருக்கு வயது ஐம்பது ஆகிவிட்டது. இந்த நிலைமையில் அவருக்கு மேலே குறிப்பிட்ட இளமைப் பருவத்து நிகழ்ச்சிகள் வருகின்றனவோ என்னவோ?

ஆனாலும் தன்காரியங்களை - விபரந்தெரிந்ததிலிருந்து இது நாள்வரை உள்ள காரியங்களைப் பின்னோக்கிப் பார்க்கிறார் மாணிக்கவாசகர். அவருக்கே அவருடைய காரியங்கள் வேடிக்கையாக இருக்கின்றன. வேடிக்கையாக மட்டும் அல்ல கோமாளித்தனமாகக் கூட இருக்கின்றன.

---

சங்கரா போற்றி-மாயை முழுவதையும் சுட்டுச் சாம்பலாக்கும் சங்கார மூர்த்தியே என்னைக் காப்பாற்றும். போற்றி - காப்பாற்ற வேண்டுதல்.

வானோர் விருத்தனே - எல்லா சக்திகளுக்கும், தத்துவங்களுக்கும் அதிநாயகனே - பழைமைக்கும் பழைமையான மூல புருஷனே. விருத்தம்-அநாதிதத்துவம். மாறாவிடலையே - அன்று தொட்டு இன்றுகாறும் என்றென்றும் ஒருதன்மைத்தாய் இருப்பவனே. காலம் கடந்த பெருமானே.

ஒப்பில் ஒருத்தன் - இணை இல்லாதவன்.

தில்லை நிருத்தன் - மனம் எனும் ஆகாயவெளியில் ஆனந்த நடனம் ஆடுகிற பெருமானே, அண்ட பிண்ட சராசரங்களாக நாடகம் போடும் நடராஜமூர்த்தியே.)

சிவபெருமானிடமே இவற்றைச் சொல்லி முறையிடுகிறார் மாணிக்கவாசகர். எப்படி என்று பார்ப்போம். பெருமானே! உலகம் முழுவதும் உன் அடியார்கூட்டம் நிறைந்திருக்கின்றது. அடியார்களின் கோலங்களும், நடைஉடை பாவனைகளும், என்னை இளமைக்காலத்தில் எப்படியோ கவர்ந்துவிட்டன. நானும் அவர்களைச் சுற்றிச்சுற்றி வந்தேன். அவர்களைப் போல் நானும் ஆகவேண்டும் என்பதற்காக என்னென்ன வழிகளை எல்லாம் நான் கையாண்டிருக்கிறேன்? பலகாலும் முயன்று பாடு பட்டதால் மாணிக்கவாசகன் என்னும் பெயர் ''சிவனடியான் மாணிக்கவாசகன்'' என்று ஏற்பட்டுவிட்டது. அது மட்டுமா? சிவனடியார் தரிக்கும் சின்னம் ஒவ்வொன்றையும் - சடைமுடி, ருக்திராட்சம், விபூதிப்பூச்சு, பஞ்சாட்சரஜபம் ஒவ்வொன்றையும் உயிரைக் கொடுத்தல்லவா கவனமாகக் கையாண்டு வந்தேன்!

என் போக்கைப் பார்த்து அக்கம்பக்கத்திலுள்ள எல்லோரும் என்னைப் பைத்தியம் என்றே விலகினர். கிறுக்கு என்று ஒதுங் கினார். எப்பொழுது பார்த்தாலும் ''தெய்வம் தெய்வம்'' என்று புலம்பும் ஞானக்கோட்டி என்றே என்னைத் தூற்றினார்கள். இதற்குமேல் ஒன்றும் நான் செய்வதற்கில்லை. ஏன் இப்படிப் பைத்தியம் பிடித்து நான் அலையவேண்டும்?

பெருமானே இனி அந்தப் பைத்தியக்காரத்தனங்கள் ஒன்றும் வேண்டாம். நீர் ஒருவர்தான் என்னும் உண்மை எனக்கு விளங்கி விட்டது. அவ்வளவும் உம்முடைய மயந்தான். பிறகு நீர் என்ன? நான் என்ன? இப்படியாகப் பழைய சம்பவங்கள் மாணிக்க வாசகரைப் பார்த்து கண்ணடிக்கின்றன. அதனால் சிவஐக்கியம் என்னும் ஆனந்தப்பரவசத்தில் ஒரு புதிய உல்லாசமே உண்டாகி விடுகிறது மாணிக்கவாசகருக்கு.

இதோ வருகிறது பாடல்.

(தான தான
தன்ன தான
தனன தன்)

பேசப் பட்டேன்
நின்அடி யாரில்த்;
திருநீ றே

பூசப் பட்டேன்;
பூதல ரால்உன்
அடியான் என்(று)
ஏசப் பட்டேன்;
இனிப்படு கின்ற(து)
அமையா தால்!
ஆசைப் பட்டேன்;
ஆள்ப்பட் டேன்; உன்
அடியே னே. (24)

அற்புதமான பாடல். பாடப்பாட பக்தியின் வேகந் தெரியும். மாணிக்கவாசகரின் ஞானவேட்கை பாடலில் அப்படியே கிடக்கிறது. அதுவும் நன்றாகத் தெரியும்.

2

இத்தாலிதேசத்து அறிஞர் ஒருவர் பாஷையைக் குறிப்பிடும் போது சொன்னார். ''வார்த்தைகள் போல இனிமையானவை, வேறு ஒன்றும் இல்லை. அவற்றைப்போல கொடுமையானவையும் வேறு ஒன்றும் இல்லை'' என்று. உண்மைதான். மனிதர்களின் பிரதிநிதிகளாக இருக்கின்றன வார்த்தைகள்.

''வாருங்கள்! வாருங்கள்! உங்களைப் பார்க்கவே முடியவில்லை. இப்பொழுதாவது வந்தீர்களே! மிக்க மகிழ்ச்சி! என்று அழைத்துப் போய் ஒருவரை உபசரிக்கலாம். உபசாரம் பெறுவோர், வார்த்தைகளை நினைந்து நினைந்து உருகுவார். ''வாருங்கள் வாருங்கள்... என்று அழைத்துப்போய்; குழியிலும் தள்ளலாம். குழியில் விழுந்து எழுந்தவரோ அந்த வார்த்தைகளை நினைக்க நினைக்க வேதனைப்படுவார். எப்படி எல்லாமோ கொடுமைப்படுத்தும் வார்த்தைகள் அவரை, மனிதர்களை வைத்தே வார்த்தைகளுக்கு நிலைமை உண்டாகிறது.

மனிதர்கள் நல்லவர்கள். கெட்டவர்களும் மனிதர்கள் தாம். மனைவிமக்கள், உற்றார், உறவினர், நண்பர், தெருக்காரர், ஊர்க்காரர், நாட்டுக்காரர் என்று மனிதன் சேர்ந்து வாழ்கிறான். அன்பைப் பொழிகிறான். ஆதரவைக் கொட்டுகிறான். கதை, இலக்கியம், சமயம், சட்டம், ஒழுங்கு, திருவிழா, என்றெல்லாம் ஏற்படுத்தி ஆனந்தம் அடைகிறான். ஆனந்தத்தை அள்ளி அள்ளி வழங்குகிறான்,

மனிதனையும் அவனுடைய காரியங்களையும் பார்க்கிற போது எவ்வளவு நல்லவனாக இருக்கிறான்? ஆனால் தான் என்னும் சிறையுள் அகப்பட்டு, மனிதன் நான் என்று நிமிர்ந்து நிற்கிறபொழுது, என்ன வேண்டுமானாலும் செய்வான். கொடுமையும் வஞ்சகமும் அவனுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும். தன்னலத்தில் சிக்கி உழலும்பொழுது மனிதனைப்போல கெட்ட பிராணி வேறு ஒன்றுமே இல்லை. நல்லவனாக இருக்கிறபொழுது மனிதன் உண்மையானவனாக இருப்பான். கெட்டவனாக இருக்கிறபொழுதோ வெறும் பொய்யனாகவே இருப்பான். பித்தலாட்டக் காரனாகவே இருப்பான் மனிதன்.

கொஞ்சம் உள்நோக்கி ஊடுருவிப் பார்த்தால் மன்பதைக் கூட்டம் முழுவதுமே தன்னலப் பிடியில் சிக்கித் தவிப்பது தெரியும். கோடியில் ஒருவர் அதிலிருந்து விடுதலை பெற்றுவிட்டாலே போதும். அது மனித குலம் செய்த தவப்பலனேதான். ஒவ்வொரு மனிதனும் பொய்யனாக இருக்கிறான். ஒவ்வொருவனும் மற்றவனுக்கு பொய்யையே சொல்லிக் கொடுக்கிறான். பிழைக்கும் வழியே பொய்தான் என்று நம்பும்படி, எதை எதையோ சொல்லிக் கொடுக்கிறான். தந்தையிடம் பொய்சொல்லும்படி தாய் குழந்தைகளைப் பழக்குகிறாள். தந்தையோ தாயிடம் பொய் சொல்லும்படி பழக்குகிறான். இருவரும் சேர்ந்து பக்கத்து வீட்டுக்காரர், வேண்டியவர், வேண்டாதவர், ஆசிரியர்கள், பள்ளித்தோழர்கள் ஒவ்வொருவரிடமும் நைசாக பொய் சொல்லி ஊடாடும்படி பழக்கி விடுகிறார்கள். அண்ணன் தம்பிக்குப் பொய் சொல்லக் கற்றுக் கொடுக்கிறான். தம்பியும் அண்ணனுக்கு அப்படித்தான், அக்காள் தங்கைகள் கதைகளும் அப்படி அப்படியே.

வகுப்பை நோக்கி ஆசிரியர் வருகிறார். 'டமார், டமார்' என்று சப்தம் கேட்கிறது. மேஜைகளையும் பெஞ்சுகளையும் தள்ளி எறிகிறார்கள், மாணவர்கள். ஆசிரியரைப் பார்த்தவுடன் எதுவுமே நடக்காதது போல் அமைதியாக உட்கார்ந்திருக்கிறார்கள் மாணவர்கள். "யார் தள்ளியது பெஞ்சுகளை" என்று ஆசிரியர் கேட்கிறார். மாணவர்கள் அவ்வளவு பேரும் என்ன சொல்கிறார்கள்? எனக்குத் தெரியாது சார்! எனக்குத் தெரியாது சார்!

ஆசிரியருக்குத் தெரியும், வேறுயாரும் வந்து பெஞ்சை உருட்டவில்லை என்று. ஆனாலும் மாணவர்களில் ஒருவனாவது ஒப்புக்கொள்கிறானா? இல்லை, உருட்டியவனையாவது இன்னான்

என்று சொல்கிறானா? படிக்கிற பொழுதே பொய்க்கு ஆளாக்கப் பட்டு விடுகிறான் பையன்.

பண்ணையாருக்குப் பெரிய தென்னந்தோப்பு ஒன்று. அதில் காவலர் நால்வர். பண்ணையார் இடையிடையே தோப்புக்கு வரு கிறார். காய்கள் குறைவதற்குக் காரணம் என்ன என்று கேட் கிறார். ஒருவனாவது உண்மையைச் சொல்வானா? நான்கு பேரும் எனக்குத் தெரியாது என்று சத்தியம் பண்ணிவிடுகிறார்கள். கடைக்காரனிடம் ஒருபொருளைக் கேட்கிறோம். அது அவனிடம் இல்லை. நம்மிடம் இல்லை என்று சொல்லிவிடமாட்டான். நாளை வாருங்கள், நாளை வாருங்கள் என்று அலைய வைத்துக்கொள் வான். பொய் சொல்லாமல் இருக்க முடியவில்லை. பொய்யில் ஒரு இன்பமே இருக்கிறது.

உழவுத் தொழில் புனிதமான தொழில். உணவும் உடையும் கொடுத்து மனித வர்க்கத்தைக் காப்பாற்றும் மங்களமான தொழில். அமிர்தமான இளநீரையும், நுங்கையும், பதனீரையும், கரும்பையும், கற்கண்டையும், தேனையும், மலர்களையும், கனி களையும், அள்ளி அள்ளி கொடுக்கும் தொழில். இவ்வளவு உன்னத மான பணியில் ஈடுபடுகிறவர்கள் பொய் சொல்லலாமா? ஆனால் பண்ணையார் நாழியால் பொய்யை அளந்தால், பணியாளர்கள் அதை மரக்காலால் அளப்பார்கள். மஞ்சளை அவர்கள் கரியாக்கு வார்கள். அமிர்தத்தை நஞ்சாக்கிவிடுவார்கள்.

பொய் அப்படிச் சர்வ வியாபகமாக நிறைந்து நிற்கிறது. வெளுத்துக் கொண்டுவர அழுக்கை எடுத்துப் போகிறானே வண்ணான். அவன் சொல்லுகிற பொய்க்கு கணக்கு வழக்கு உண்டா? தச்சனும் கொத்தனும் எத்தனை எத்தனை பொய்யைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கடன் கொடுக்கிறேன் என்று சொன்னவன் பணம் கேட்டவனை அலைய வைக்கிறதும், கடன் வாங்கியவன், "தருகிறேன் தருகிறேன்" என்று பணம் கொடுத்த வனைச் சீரழிப்பதும் உலகம் எல்லாம் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன.

மருத்துவம் முதலிய துறைகளில் பயிலவிரும்பும் மாணவர்க்கு இதோ வாங்கித் தருகிறேன் இடம், அதோ வாங்கித் தருகிறேன் இடம் என்று ஏமாற்றுகிற கூட்டம் தெருத்தெருவாய் அலைகிறது. படித்தவர்களுக்கு வேலை தருவதில் நடமாடுகிற பொய்யை

அளக்க முடியுமா? வீட்டை வாடகைக்குக் கொடுக்கப் போகிறவன் எத்தனை பேரிடம் எவ்வளவு பொய்யை அவிழ்த்து விடுகிறான்? ரிசர்வேஷன் டிக்கெட் கொடுப்பவன்கூட உண்மையைச் சொல்வ தில்லை.

தொழிலாளர், முதலாளி, குமாஸ்தா, அதிகாரி எல் லோருடைய காரியமும் பொய்மயமாகவே உள்ளது.

பொருளாதாரத்தில் எம். ஏ . , படித்துத் தேறியவர் ஒருவர். அவரை உருட்டி உருட்டி உச்சத்திற்கே கொண்டு போய்விட்டது யோகம். ரிசர்வ் பேங்க் கவர்னராகவே ஆகிவிட்டார். அரண்மனை போன்ற வீடு, ஆடம்பரமான வாழ்க்கை. தன்னுடைய இரண்டு பையன்களும் மந்த புத்திக்காரர்கள்தாம். ஆனாலும் அவர் தன் னுடைய அதிகார தோரணையால் ஒரு மகனை விமானக் கம்பெனிக்குள் நுழைந்துவிட்டார். அவன் பிராந்திய மேனேஜ ராகவே உயர்ந்து விட்டான். இன்னொருவன் உலக பேங்கில் நுழைந்து உல்லாச வாழ்க்கை நடத்துகிறான். பெண் குழந்தை களையும் பெரிய பெரிய அதிகாரிகள் கையில் பிடித்துக் கொடுத்து விட்டார். அவருக்கு ஒருகுறையும் இல்லை.

ஆனாலும் ரிட்டையர் ஆகிவிடுவோமோ என்று பதறுகிறார். ரிட்டையர் ஆகிவிட்டால் என்ன செய்கிறது என்று கலங்குகிறார். அதற்காக மந்திரிகளைச் சுற்றிச் சுற்றி வருகிறார். கண்கண்ட தெய்வம் நமது நிதி மந்திரிதான் என்கிறார். தெய்வத்திற்குத் தெய்வம் பிரதமர் என்கிறார். மந்திரிகளை மட்டுமா வழிபடு கிறார் அவர்களுடைய மனைவிமார்கள், குழந்தைகள், பணியாட் கள், ஏவலர்கள் எல்லோரையும் வழிபடுகிறார். அமைச்சர் எந்த மதத்தைச் சேர்ந்தவரோ? அந்த மதத்து மறைநூல்களிலிருந்து மேற்கோள் காட்டி வழிபடுகிறார். இனி மந்திரிமார்கள் கதையும் அப்படித்தான். ஒன்றுக்கும் உதவாத கயவர்கள் மூலந்தான் ஓட்டுச் சேகரிக்க வேண்டுமென்றால், அக்கயவர்களை அவர்கள் வானளாவப் போற்றுகிறார்கள்.

அப்படிப் பூரணமாய் நிறைந்துவிட்டது, பொய். மனிதன் நல்லவன், ஆகாயம் போலச் சுத்தமாக நிறைந்து நிற்கிறான். ஆனால் அவனை உசுப்பி விடுகிற பொய்யோ படலம் படலமாய் எழுந்து அவனை மறைத்துவிடுகிறது. மனிதனை மூடிவிடுகிறது. பொய்யை உதறி எறியவேண்டும். இறைவன் அப்பொழுது நேரில்

வந்து நிற்பான். பொய்யை வைத்துக் கொண்டு, வழிபாடு நடத்துவதால் புண்ணியம் இல்லை. சர்க்கரைப் பொங்கல் போட்டு நைவேத்தியம் பண்ணினால் இறைவன் வந்துவிடுவானா? காணிக்கைக்கு கட்டுப்படுவானா? இல்லை. முட்டி மோதி அழுதுவிட்டால் மட்டும் அவன் அகப்பட்டுவிடுவானா? அவன் அகப்பட வேண்டுமானால் பொய் தொலைய வேண்டும்.

மாணிக்கவாசகர் இறைவனிடமே வேண்டுகிறார்.

(தான தான
தான தான
தான தன்)
"யானே, பொய், என்
நெஞ்சும், பொய், என்,
அன்பும், பொய்.
ஆனால், அடியேன்,
அழுதால், உன்னைப்
பெறலா மே(ா)?
தேனே! அமுதே!
கரும்பின், தெளிவே!
தித்திக் கும்
மானே! அருளாய்,
அடியேன், உனைவந்(து)
உறும்ஆ றே" (25)

---

(யானே - என்னுடைய காரியம் அவ்வளவும், மான் - பெருமான்.)

குறிப்பு : அற்புதமான பாடல். மாணிக்கவாசகருடைய முத்திரை பாடலில் அப்படியே கிடக்கிறது. மலைக்குமலை தாவி வரும் அருவிபோல, மாணிக்கவாசகருடைய உற்சாகம் பாடலில் குதித்துக் குதித்து வருகின்றது.

# ஞான நாடகம்

சிறு குழந்தைகளாக இருக்கிறபொழுது ஆண் பெண் வித்தியாசம் தெரிகிறதில்லை. வளர வளரத்தான் குழந்தைகளுக்கு "நாம் ஆண்" "நாம் பெண்" என்னும் வேற்றுமை தெரிகிறது.

பெண் குழந்தை மளமளவென்று வளர்ந்து வருகிறது. பெண்ணின் வளர்ச்சியைப் பார்த்து பெற்றோர்கள் பூரிப்படைகிறார்கள். ஆடை இல்லாமல் தவழ்ந்த காலத்தில் இருந்து, பாவாடை கட்டிய பருவம், சட்டை போட்ட பருவம், தாவணி (மேலாடை) போட்ட பருவம், கொய்சகம் வைத்துப் புடவையை வரிந்து வரிந்து கட்டிப் புள்ளிமான் போலத் துள்ளி நடமாடும் மங்கைப்பருவம் - இப்படி பெண்ணின் வளர்ச்சியைக் கூடவே இருந்து பார்த்துத் தான் வருகிறார்கள். தங்கச்சிலை, போல அழகு பூத்துக் குலுங்கும் தம்முடைய பெண்ணின் வனப்பைப் பார்த்து ஒவ்வொரு பெற்றோரும் மகிழ்ந்து நிறைகிறார்கள்.

இவ்வளவு அழகு நிறைந்த பெண்ணை ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்துவிட வேண்டும் என்னும் கவலை பெற்றோர்களிடம் இருக்கவே செய்கிறது. மகிழ்ச்சியும் கவலையும் சேர்ந்து பெற்றோர்களை ஒரு மயக்கத்தில் வைத்து விடுகிறது.

பெண்ணுக்கு ஏற்ற மாப்பிள்ளை கிடைத்து விடுகிறான். முகூர்த்தம் நடைபெறுகிறது. கல்யாணத்தைப் போல மக்களை ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தக் கூடிய திருவிழா வேறு என்ன இருக்கிறது? ஆண், பெண், குழந்தைகள், வயோதிகர்கள் எல்லோர் உள்ளத்திலும் உற்சாகம் கரைபுரண்டு ஓடுகிறது. மேள தாள

முழக்கமும், வரவேற்பு ஆரவாரமும், நிறைந்து நிற்க, பெண்ணை அலங்காரம் பண்ணி மணவறைக்கு அழைத்து வருகிறார்கள் தோழிமார்கள்.

கோவிலில் உள்ள அம்மனையே அலங்காரம்செய்து ஜோடித்து எழுந்தருளப் பண்ணினது போல இருக்கிறது மணப்பெண்ணின் கோலம். நாளும் பொழுதும் வளர்த்துக் கவனித்து வந்த பெற்றோர்களே மருண்டு திகைத்து விடுகிறார்கள்.

கூந்தலின் நெளிவு, மூக்கின் முனைப்பு, இடுப்பின் ஒடுக்கம், நடையின் சொகுசு என்று காட்டி, பெண்மையின் பெருமையை அறிவு மறைத்துவிடுகிறது. அப்படியே கடவுள்த் தத்துவத்தையும் மறைத்துவிடுகிறது அறிவு.

அறிவு வளர வளர ஒவ்வொன்றுக்கும் 'காரணம் இது' என்று, எதை எதையோ கண்டுபிடிக்கிறது. அவை ஒவ்வொன்றுக்கும் நாமகரணமும் சூட்டிவிடுகிறது. பெயர் கிடைத்துவிட்டால் போதாதா? ஒவ்வொரு பெயரையும் இறுகப் பிடித்துக்கொண்டு கரணவித்தைகள் அடிக்கிறது ஆணவம். பேயாட்டமே ஆடிவிடு கிறது ஆணவம்.

பிறகு, கடவுளைப் பார்க்க முடியுமா? மாணிக்கவாசகர் பெயரை ஒதுக்கி வைத்துவிட்டார். ஆணவ அறிவைத் துப்புரவாகத் துடைத்து எறிந்துவிட்டார். ஒரே ஆனந்தமயமாக இருக்கிறார். ஞானமயமாகவே இருக்கிறார். கடவுள் அப்படியே அவர் கண்முன் வந்து நிற்கிறார். அண்டபிண்ட சராசரம் அவ்வளவிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும். இறைவனின் திருவிளையாடல், நேருக்கு நேராகத் தெரிகிறது மாணிக்கவாசகருக்கு.

கத்தரி விதை சிறியதுதான். கடுகுப் பிரமாணம் உள்ளது தான். ஆனாலும் உயிர் மயமாக இருக்கிறது. கத்தரிவிதையை மண்ணில் ஊன்றி வைத்துவிட்டால், கல், மண், குப்பை கூளம் முதலிய ஜடங்கள் எல்லாம், கத்தரி விதையை நாடி ஓடோடி வருகின்றன. ''எங்களையும் உன்னைப் போல ஆன்ம சொரூபமாக மாற்று'' என்று ஒவ்வொரு ஜடமும் கத்தரி விதையிடம் கெஞ்சுகிறது. கத்தரி விதையும் அருள் பாலித்து விடுகிறது. அவ்வளவு தான், கல்லும், மணலும், சரளும், சாணமும், காற்றும் வெயிலும் நீரும் எல்லாமுமே கத்தரிக்காய்களாகக் காய்த்துச் சொரிகின்றன.

மண் கத்தரிக்காய் ஆகிவிடுகிறது. பிறகு அந்தக் கத்தரிக்காய் மனிதனோடு சேர்ந்து ரத்தமும் சதையும் எலும்புமாக அதாவது மனிதனாகவே மாறிவிடுகிறது. பிறகு மனிதனுடைய சிந்தனை, யோசனை, அனுபவம், ஆனந்தம், கோபம், வருத்தம் இப்படி உணர்ச்சிகளாய் பூத்துக் குலுங்குகின்றன. அது மட்டுமா, அந்த உணர்ச்சி எத்தனையோ காரியங்களாக கலைகளாகவே வடிவெடுத்து விடுகின்றன. இப்படி ஒரு நாடகம் பிரபஞ்சம் முழுவதும் நடந்து கொண்டே இருக்கிறது.

இந்த நாடகத்தை அல்லவா மனிதன் பார்த்து அதிசயிக்க வேண்டும். அதிசயத்தில்தான் ஆனந்தம் இருக்கிறது. பெயர் சூட்டு விழாவில் ஆனந்தம் வராது. ஆணவந்தான் வாலை ஆட்டும்.

மாணிக்கவாசகர் இறைவனுடைய திருவருள் ஒவ்வொரு அணுவிலும் - பேரண்டம் முழுவதுமே நீக்கமற நிறைந்து நிற்பதைக் கண்ணாரக் கண்டுவிட்டார்.

காட்சியை நமக்கு எப்படிக் காட்டுகிறார்.

"ஊனை நாடகம்
ஆட்டுவித்த வா"

என்று இசையிலும் தாளத்திலும் வைத்து ஊஞ்சலாட்டியே காட்டுகிறார்.

அவர் கண்ட காட்சி பெரிய பெரிய அறிவாளிகளுக்கும் அதாவது வான நாடர்களுக்கும் விளங்கவில்லை. விஞ்ஞான சாஸ்திரங்களுக்கு - வேத வேதாந்தங்களுக்கே விளங்கியபாடாக இல்லை. சாதாரண மக்களைப்பற்றி என்ன சொல்ல இருக்கிறது?

"அறிவின் காதையே கிள்ளி மிரட்டுகிற விஞ்ஞானிகளுக்குக் காட்டாத விந்தையை என்னிடம் வலியவந்து காட்டிவிட்டாயே பெருமானே!" என்று ஆனந்தக் கூப்பாடு போடுகிறார் மாணிக்க வாசகர்.

இனிப் பாடலைப் பார்ப்போம்.

வான நாடரும்
அறியொ ணாதநீ;
மறையின் ஈறும்முன்
தொடரொ ணாதநீ;

ஏனை நாடரும்
 தெரியொ ணாத நீ;
 என்னை இன்னிதாய்
 ஆண்டு கொண்டவா?
ஊனை நாடகம்
 ஆடு வித்தவா!
 உருகி நான்உனைப்
 பருக வைத்தவா!
ஞான நாடகம்
 ஆடு வித்தவா!
 நைய வையகத்(து)
 உடைய இச்சையே. (26)

மாணிக்கவாசகருக்கு 'ஜே' போட வேண்டியதுதான். காணாதவற்றையெல்லாம் அவர் கண்டு கொண்டார். அப்படி கண்டு கொண்ட அற்புதத்தை எல்லாம் நமக்கு அவர் காட்டியும் விடுகிறார். தமிழ்ப் பண்பும், கவிப்பண்பும் சேர்ந்து இசைமயமாய் உருவெடுத்து விடுகிறது. உண்மையை அப்படி உருவெடுக்க வைக்கிறது கவி - தமிழ்க்கவி.

2

இனி வேறொரு பாடலைப் பார்ப்போம்.

தண்ணீரில் குமிழ்கள் தோன்றுகின்றன. தோன்றித் தோன்றி மறைகின்றன. தண்ணீரே அப்படிப் புதிய புதிய வேடம் போடுகின்றது. மற்றப்படி கொத்தனோ தச்சனோ தண்ணீரில் இறங்கி நின்று குமிழ்களை உண்டாக்கவில்லை. இது நமக்கு நன்கு தெரியும்.

கடவுளுடைய காரியமும் அப்படியே. பேரண்டம் முழுவதும் எறும்பு முதல் யானை வரை, புல் முதல் நட்சத்திரம் வரை, கொசு முதல் ஆலமரம் வரை, மனிதனிலிருந்து சூரியன் வரை எல்லாத் தத்துவங்களும் கடவுளிடமே உருவாகின்றன. கடவுளிடமே மறைகின்றன. கடவுளின் ஆனந்தமயமான கனவுகள் - உல்லாச நினைப்புகளே கோடான கோடி அண்டங்களாகவும் பிண்டங்களாகவும் தோன்றி மறைகின்றன.

அப்படி எல்லாம் உண்டாவதற்கும், மினுங்குவதற்கும், மறைவதற்கும் கடவுள்தான் காரணம். காரியமும் அவர்தான். காரணமும் அவரே தான்.

வேறு எதுவுமே இல்லைதான். இது தெரிந்துவிட்டது மாணிக்கவாசகருக்கு. ஒரே உற்சாகம் அவருக்கு, உற்சாகத்தை எப்படி வாங்கிக் கொடுக்கிறது தமிழ் என்று பாருங்கள்.

''விச்ச(து) இன்றியே
விளைவு செய்குவாய்,
விண்ணும் மண்ணகம்
முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய்''

அற்புதமாய் எடுத்துப் பரிமாறுகிறது தமிழ். எதுகையிலும் மோனையிலும் பொருளோடு ஒட்டிய தாள இயலில் வைத்தே பரிமாறுகிறது தமிழ்.

ஜன்னல் வழியாக சூரியனுடைய ஒளிக்கிரணம் அறைக்குள் ஒரு கற்றையாக வருகிறது. வந்து நிற்கவே செய்கிறது. வெள்ளை வெளேர் என்று தூய்ய பஞ்சுத் தூண்போலக் காட்சி தருகிறது ஒளிக்கற்றை. அதனுள் நுண்ணிய துகள்கள் ஆயிரக்கணக்கில் தும்பும் தூசியுமாக ஆய்ந்து கொண்டிருக்கின்றன.

பசுவினுடைய மடி இருக்கிறதே, அதனுள்ளும் இதுபோன்ற நுண்துகள்கள் - ஒளித்துகள்கள். ஆய்ந்துகொண்டே இருக்கின்றன. தேனடையில் தேனீக்கள் மொய்த்துக் கிடப்பதுபோல நுண்ணிய துகள்கள் ஆடிய வண்ணம் மொய்த்துக் கிடக்கின்றன பசுவின் மடியுள்.

வைக்கோல், புண்ணாக்கு, புல், பருத்திக்கொட்டை எல்லாம் பசுவுக்கு ஆகாரந்தான். அவை பசுவின் தேகம் முழுவதும் ரத்த மாக ஊறுகிறது. ரத்தத்திலிருந்து தேன்போல சாறு ஒன்று சுரக்கிறது. அதுவும் கிட்டத்தட்ட ரத்தம் போலவே இருக்கும்.

ரத்தத்திலிருந்து வடிந்து வெளியேறுகிற சாறு பசுவின் தேகம் முழுவதும் பரந்து, மடியை நோக்கி ஓடிவருகிறது. மடியினுள் சொட்டுச் சொட்டாக விழுகிறது. அதுவரை ரத்தமாக முடை நாற்றமாக இருந்த சாறு மடியின் ஒளித்துகள்களோடு சேர்ந்த உடனேயே பாலாகி விடுகிறது. பாலின் தூய வெள்ளை நிறத்திற்கு இணையாக எதைச் சொல்லமுடியும்? பாலின் ருசிக்கும், மணத்திற்கும், உயிருட்டத்திற்கும் இணையாக

எதைச் சொல்லமுடியும்? மதுரம் என்றால் பால்தான். அமிர்தம் என்றால் பசுவின் பாலேதான்.

புண்ணாக்கு ரத்தமாக மாறுவது அதிசயந்தான். ரத்தம் அமிர்தமாக மாறுவதும் அதிசயந்தான். அப்படி மாறுவதற்கு மடியினுள் என்னதான் இருக்கிறதோ? மடியினுள் ஆய்ந்து கொண்டிருக்கும் நுண்துகளின் அற்புதத்தை நினைந்து நினைந்து உருகுவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும் நாம். கடவுளின் ஆனந்த நடனம் பசுவின் மடியினுக்குள் நின்று அற்புதமாய் நிகழ் வதைப் பார்த்துப் பார்த்து பரவசப்படுவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும் மனிதர்களால்?

மாணிக்கவாசகர் செய்தது அது ஒன்றைத்தான். அதிசயப் பட்டார், ஆனந்தப்பட்டார், அவ்வளவுதான்.

ஒவ்வொரு துறையிலும்; புத்தியைச் செலுத்தி அவற்றின் காரண காரியங்களுக்கெல்லாம் பெயர் சூட்டிய அறிஞர் குழாம் ஏராளமாக இருக்கிறது. தத்துவம், விஞ்ஞானம், சாஸ்த்திரம், ஆகமம், சித்தாந்தம், வேதம் என்றெல்லாம் கரைத்துக் குடித்து ஏப்பம் போடுகிற புலிகள் எத்தனை எத்தனையோ உள்ளன. இது மாணிக்கவாசகருக்கு நன்றாகத் தெரியும். ''நாம் அப்படி ஒன்றும் படிக்கவில்லையே, அறிவாளிகளின் பக்கம் நிற்கக்கூட நமக்கு அருகதை இல்லையே'' என்று நினைக்கிறவர் தான் மாணிக்க வாசகர்.

ஒவ்வொன்றையும் பகுத்துணர்ந்து விபரம் சொல்கிறவர் களுக்கு வார்த்தைகளும் பெயர்களுமே தெரிகின்றன. கடவுள் தெரியவில்லை. ஆனால், ஆராய்ச்சிக்குள் சிக்காமல், ''அடடா, இது என்னஅதிசயம்! ஒன்றும் தெரியவில்லையே'' என்று வியக்கிற மாணிக்கவாசகருக்கு ஒரே பிரகாசமாக இருக்கிறது. ஆனந்தமய மாகவே தெய்வ தரிசனம் கிடைத்துவிடுகிறது. அதுமட்டுமா?

இறைவனே வலியவந்து மாணிக்கவாசகரைத் தம்மவராக ஏற்றுக்கொள்கிறார். மெய்யடியார் கூட்டத்துள் வைத்துக் கவனித்தும் கொள்கிறார். இதை.

''வஞ்ச கப்பெரும்
புலைய னேனைஉன்
கோயில் வாயிலில்

பிச்சன் ஆக்கினாய்
பெரிய அன்பருக்கு
உரியன் ஆக்கினாய்''

என்று வியக்கிறார்.

ஒருவரின் உணர்ச்சிக்கு ஒத்த உணர்ச்சி உடையவனாக ஒருவன் அமைகிறான். அப்படி அமைந்தவனைக் கண்டு ஆனந்தம் அடைவது மனித இயல்பு. நம் உணர்ச்சியில் ஒரு அம்சம் நம்முடன் ஒத்திருந்தாலும், அப்படி இருப்பவனைப் பல வழியிலும் நாம் பாராட்டுகிறோம். அவனுக்கு வேண்டும் உதவி செய்து ஆளாக்கி யும் விடுகிறோம்.

உதவி பெற்றவன் காலூன்றி நிற்கிற நிலைவந்தால் போதும். அவன் நிலை மாறிவிடும். ஆளாக்கி விட்டவரையே பதம் பார்க்க ஆரம்பித்து விடுவான். ''என் உறவு காரணமாகத் தானே இவருக்கு இது இது தெரியவந்தது'' என்று பிரசாரம் வேறு பண்ணுவான். அதுமட்டுமல்ல, இவருக்கு என்ன தெரியும்? ஒன்றுக்கும் இவர் லாயக்கில்லை. வயதுதான் ஆகிவிட்டதே? ஓய்வு எடுத்துத் தொலைவதற்கு என்ன? இல்லை, செத்துத்தான் தொலையக் கூடாதா? இருந்துகொண்டு எல்லாவற்றையும் பாழாக்குகிறாரே என்று கூடக் கிளப்பி விடுவான்.

மனிதனுடைய காரியம் அப்படித்தான். இது விளங்கிய காரணமாகவே அத்தகைய புல்லர்களையும் அழிக்காமல் வைத்துக்கொள்கிறது உலகம்.

முள் மரமாக இருந்தாலும் 'விறகுக்காவது இருக்கட்டும்' என்றுதான் உலகம் நினைக்கிறது, வெட்டி எறிந்து விடுவது இல்லை.

மனிதனை எவ்வளவு சிரமப்பட்டு உண்டாக்கி இருக்கிறார் கடவுள். திருத்தித் திருத்தி உண்டாக்கப்பட்ட செல்வம் அல்லவா மனிதன்? ஆனால் மனிதனுக்குக் கடவுளிடம் நன்றி உணர்ச்சி இருக்கிறதா? இல்லவே இல்லை. ''கடவுளுக்கு என்ன தெரியும்? இப்படி ஒரு கம்ப்யூட்டரை அவரால் உண்டாக்க முடியுமா? கடவுளாவது ஒன்றாவது. கடவுளா வீட்டைக் கட்டினார்? நானல்லவா இவ்வீட்டைக் கட்டினேன் என்றும் சொல்லி விடு கிறான்.

அதற்காக மனிதனைக் கோவித்துக் கொள்ள முடியுமா? எவ்வளவு கஷ்டப்பட்டு உண்டாக்கிய செல்வம் மனிதன். அமிர்தமயமானவனல்லவா மனிதன். அவனிடம் நச்சுத்தன்மை இருந்தாலும் அவனை அழித்துவிட முடியுமா?

இப்படிக் கருணைமயமாக நின்று உலகைப் பரிபாலிக்கிறார் கடவுள்.

இனிப் பாடல் முழு உருவத்தில் பார்ப்போம்.

விச்ச தின்றியே
விளைவு செய்குவாய்;
விண்ணும் மண்ணகம்
முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய்;
வஞ்ச கப்பெரும்,
புலைய னே னைஉன்
கோயில் வாயிலில்
பிச்சன் ஆக்கினாய்
பெரிய அன்பருக்கு
உரியன் ஆக்கினாய்;
தாம்வ ளார்ததோர்
நச்சு மாமரம்
ஆயினும் கொலார்,
நானும் அங்ஙனே
உடைய நாதனே. (27)

---

(விச்சதுஇன்றி - அறிவின் கட்டுக்கு அடங்காமல். பிச்சன் - பைத்தியம். நச்சு - நஞ்சு.

# ஏமாற்ற முடியாது என்னை

1

ரத்தம், சதை, நரம்பு, எலும்பு, தோல், கொழுப்பு மூளை ஆகிய பல தத்துவங்கள் கலந்து கிடப்பதுதான் மனிதஉடம்பு. எலும்பு, நரம்பு முதலிய அம்சங்கள் சேர்ந்து மனிதனாகக் காட்சி தருகின்றன. அப்படியே அன்பு, பொறுமை, வீரம், சோகம், நேர்மை, நீதி முதலிய பண்புகள் பலவும் ஒன்றுபட்டு மனித தத்துவமாக நிற்கின்றன. மனித தத்துவம் என்றால் அன்பு வீரம் முதலிய பண்புகள் ஒன்றாய்க் கலந்துசேர்ந்து கிடக்கிற நிலைதான்.

மனிதனிடம் பல பண்புகள் சேர்ந்து கிடப்பது இயல்புதான். ஆனால் ஒவ்வொரு மனிதனையும் ஏதாவது ஒரு பண்புதான் ஆட்டிப் படைக்கும். அப்படி ஆட்டிப் படைக்கும் பண்பு, நிமிர்ந்து செயல்படுகிற பொழுது, ஏனைய பண்புகள் ஒதுங்கி நிற்கும். மாணிக்கவாசகர் நம்மைப் போன்ற மனிதர்தான். சாதாரண மனிதர்கள் ஒவ்வொருவரும் எப்படியோ? அப்படித்தான் மாணிக்க வாசகரும். வித்தியாசம் அவ்வளவாக இல்லைதான்.

மாணிக்கவாசகரிடமும் பல பண்புகள் விரவியே கிடந்தன. அன்பு வீரம் பொறுமை குடும்ப பாசம் கோபம் முதலிய தத்துவங்கள் பலவும் சேர்ந்தே இருந்தன. ஆனாலும் மாணிக்கவாசகரை பக்தி என்னும் தத்துவமே ஆட்டிப்படைத்தது. அது ஒன்றே மாணிக்கவாசகரிடம் அடிப்படையாய் நின்று அவரை ஆட்டிப் படைத்தது.

தங்கத்தை உலை நெருப்பில் வைத்து எடுப்பார்கள். அடிகல்லி வைத்து, அடித்து அடித்துத் துவைப்பார்கள். புடம்போடப்புடம் போட-அடிக்க அடிக்க தங்கமானது 'தகதக' வென்று ஜொலிக்கும். தகடாக விரியும். கம்பியாக நீளும்.

தட்டார்கள் தங்கத்தை என்ன செய்வார்களோ அதையே பக்தியானது மாணிக்கவாசகரைச் செய்தது. புடம்போட்டு எடுத்தது. சோதனை செய்து செய்து அவரைக் கட்டித் தங்கமாக ஒளிவிடச் செய்தது. பக்தியின் கையில் மாணிக்கவாசகர் அகப் பட்டுக் கொண்டார். மாணிக்கவாசகரைக் கையில் வைத்துக் கொண்டு பக்தியானது பந்தாடுகிறது. எப்படி எல்லாமோ விளை யாடுகிறது.

சில சமயம் ஆனந்தப் பரவசத்தில் திளைத்துக் கும்மாளி போடுவார் மாணிக்கவாசகர். இறைவனைக் கண்டுவிட்டது போலவும், இறைவனே அவர் கையில் வந்து சிக்கிவிட்டது போல வும் ஒரு எக்களிப்பு. அந்த எக்களிப்பில் அப்படி ஒரு கும்மாளி. சில சமயம் கையில் இருந்த பொருள் தொலைந்து விட்டது போல மறுகுவார். இறைவனைக் காணமுடியவில்லையே? காணவே முடியாதோ? என்றெல்லாம் கலங்குவார்.

சில சமயம் இறைவனோடு பிகு பண்ணுவார். சில சமயம் இறைவனுடைய கருணையை நினைத்து உருகுவார். சில சமயம் இறைவனோடு சண்டை போடுவார். 'இரும், இரும் உம்மை ஒரு கை பார்க்கிறேன்.' என்று அதட்டுகிற பாவனையில் இறைவனை மிரட்டவும் செய்வார். எல்லாம் பக்தி படுத்துகிற பாடு. இப்படி எல்லாம் மாணிக்கவாசகரைப் பாடாய்ப் படுத்துகிற பக்திக்கு லட்சியம் என்ன? கவியாக உருவெடுப்பதுதான் அதற்கு லட்சியம்.

கவியாக அவதாரம் எடுப்பதற்காக அந்தப் பக்தி தவியாய்த் தவிக்கிறது. மாணிக்கவாசகருக்கும், அவருடைய பக்திக்கும், லட்சியம் கவிதான். ஏன், இறைவனுக்குக்கூட லட்சியம் கவி ஒன்று தான்.

உத்தரகோச மங்கை என்னும் ஸ்தலத்தில் எழுந்தருளி இருக்கும் பெருமானைப் பார்த்து உருகுகிறார் மாணிக்கவாசகர்.

மாணிக்கவாசகரும் அவருடைய பக்தியும் எப்படிக் கவியாய் விளைகிறார்கள் என்று பாருங்கள்.

"அன்னையொப் பாய் எனக்(கு)
அத்தன்ஒப் பாய்என்
அரும்பொரு ளே"

உதரத்தோடு உதரமாக வைத்திருந்து என்னைப் பெற்றெடுத்த தாயல்லவா நீ? என்னைப் பாதுகாத்து வளர்க்கும் என் தந்தை அல்லவா நீ? பார்க்கப் பார்க்கப் பரவசப்படுத்தும் செல்வம் அல்லவா நீ?

"அன்னையொப் பாய் எனக்(கு)
அத்தன்ஒப் பாய்என்
அரும்பொரு ளே"

தந்தையாகவும் தாயாகவும் இருக்கிற இறைவனுக்கு நிகராக யாரைச் சொல்ல முடியும்? கருணாகர மூர்த்தியாகிய பெருமானுக்கு இணையாக உலகில் எதைச் சொன்னாலும் அது திருப்தியாய் இருக்காது. இறைவனுக்கு நிகராக இறைவனைத் தான் சொல்லவேண்டும். இந்த எக்களிப்பை எப்படி உல்லாசமாய்க் கொட்டுகிறது தமிழ் என்று பாருங்கள்.

"உவமிக் கின்மெய் யே
உன்னையொப் பாய்மன்னும்
உத்தர கோசமங்
கைக்கர சே"

ஆனாலும் அவன் மேனியின் பிரகாசத்திற்கு—செம்பவளம் போல ஒளிவீசும் மேனியின் பளபளப்பிற்குக் கண்ணைப் பறிக்கும் மின்னலைத்தான் சொல்ல முடியும். காரணம் என்ன? மின்னலைத்தவிர வேறு ஒன்றுமே உவமையாகச் சொல்வதற்கு இல்லை என்பதுதான். அப்பேர்ப்பட்ட இறைவனிடம் 'என்னைக் கைவிட்டு விடாதே' என்று கெஞ்சுகிறார் மாணிக்கவாசகர்.

'மின்னையொப் பாய்விட்
டிடுதிகண் டாய்!'

நீ கைவிட்டுவிட்டால் எனக்கு வேறு யார் ஆதரவு.

"எவ்வளவு பெரிய உலகம் இந்த உலகம்? எத்தனை பேர் இருக்கிறார்கள் உலகில்? கணக்கெடுக்க முடியுமா மக்கள் தொகையை?

எவ்வளவு இருந்து என்ன பலன்? எனக்கென்று நாதி இல்லை—இறைவனே உன்னைத்தவிர." உன்னுடைய சந்நிதானம் ஒன்றைத்

தவிர எனக்குப் புகலிடம் வேறு ஏது? நீ என்னை விட்டு விட்டால் என் கதி என்ன ஆவது? ''மாணிக்கவாசகா! பயப்படாதே'' என்று ஒரு வார்த்தை சொல்வதற்குக் கூட எனக்கு ஒருவரும் இல்லையே. அப்படி அனாதைக்கும் அனாதையாய் அலையும் என்னை நீ கை விட்டு விட்டால், நான் எங்கு போவேன்? விட்டுவிடாதே'' என்று மறுகுகிறார் மாணிக்கவாசகர். என்னைவிட்டு விட மாட்டாயே என்று ஏங்கிப் பெருமூச்சும் விடுகிறார் மாணிக்கவாசகர்.

அப்படி பயந்து பயந்து கேட்டவுடன் அவருக்கு ஒரு ஆறுதல் கிடைக்கிறது. தெளிவே வந்துவிடுகிறது. இனிப் பாடல் முழுவதை யும் பார்க்கலாம்.

என்னை 'அப் பா! அஞ்சல்'
என்பவர் இன்றிநின்(று)
எய்த்தொழிந் தேன்;
மின்னைஒப் பாய்!விட்
டுடுதிகண் டாய்?உவ
மிக்கின்மெய் யே
உன்னைஒப் பாய்!மன்னும்
உத்தரகோச மங்
கைக்கர சே!
அன்னைஒப் பாய்!எனக்(கு)
அத்தன்ஒப் பாய்!என்
அரும்பொரு ளே. (28)

அற்புதமான பாடல். இப்படி ஒரு கவியாக உருவெடுப்பதற்கு பக்தியானது எத்தனையோ வருடங்கள் தவம் பண்ணி இருக்க வேண்டும். ஆயிரக்கணக்கான வருடங்களாகவே தவம் பண்ணி இருக்கவேண்டும்.

பக்தி மட்டும் அல்ல. உண்மையானது எந்தக் கோலத்தில் தரி சனம் கொடுத்தாலும் சரி, அது உணர்ச்சிமயமாகப் பொங்கும். அதோடு அதன் காரியம் முடிந்து விடுவதில்லை. கவியாக வடி வெடுத்த பிறகே அதற்கு அமைதியும் ஆனந்தமும் கிடைக்கும்.

பக்தியானது கனிந்து பழுத்து அமைதியாய் ஆனந்தத்தேன் சொட்டுவதை, கவியில் பார்க்கலாம்.

---

(அப்பா அஞ்சல் - தம்பி பயப்படாதே. எய்த்து ஒழித்தேன் - தவிதுத்திகைத்துவிட்டேன். மன்னும் - நிலைத்தது.)

இறைவனைப்பற்றிய நினைப்பிலேயே சதா திளைத்திருப்பவர் மாணிக்கவாசகர். அதுகாரணமாக எப்பொழுதும் அவர் தனித்து இருந்தது இல்லை. இறைவன் கூடச் சேர்ந்தே இருக்கிறவர் மாணிக்கவாசகர். தன்னுடைய காரியம், மற்றவர் காரியம், என்னும் பாகுபாடு மாணிக்கவாசகரிடம் இல்லை. எல்லாக் காரியங்களுமே இறைவனுடைய காரியமாகத் தெரிந்தது மாணிக்கவாசகருக்கு. ஒவ்வொன்றையும் அபாரமாய் அனுபவித்துக் கொண்டிருந்தார் மாணிக்கவாசகர்.

மாணிக்கவாசகருக்கும் இடை இடையே சோதனை வரத்தான் செய்தது. தத்துவ சாஸ்திரங்களை, மூட்டு வேறு, பூட்டு வேறாகப் பிரித்தெடுக்கும் விற்பன்னர் ஒருவர், மாணிக்கவாசகரின் ஊருக்கு வந்து சேர்ந்தார்.

2

உவமான உவமேயங்களோடும், கதை கண்ணிகளோடும் கடவுள் தத்துவத்தைப்பற்றி அவர் பிட்டுப் பிட்டு வைத்தார். தர்க்கரீதியாக அவர் வ்யாக்யானம் பண்ணுகிற திறமையையும் சாதுர்யத்தையும் மக்கள் கேட்டார்கள். பிரசங்கம் போகப் போக அதன் பின்னாலேயே ஜனங்களும் போய்விட்டார்கள். எங்கு போய்க் கொண்டிருக்கிறோம் என்னும் நினைப்பே இல்லாமல் போய்விட்டார்கள்.

பிரசங்கத்தை மாணிக்கவாசகரும் கேட்க நேர்ந்தது பிரசங்கத்தின் பின்னால் மாணிக்கவாசகரும் நீண்ட தூரம் போய் விட்டார்.

உடனிருந்து அனுபவித்துக் கொண்டிருந்த இறைவனை விட்டு விட்டு, எங்கோ, அறிவுக்குப் புலனாகாதஇடத்தில் நின்று திரும்பிப் பார்த்தார் மாணிக்கவாசகர்.

பயந்து போனார், அலறினார். ''பெருமானே என்னை நீ கைவிட்டு விட்டாயா'' என்று கதறினார். திசையும் தெரியாமல், வழியும் புரியாமல் ஒரே இருள்மயமாக இருக்கிறது மாணிக்கவாசகருக்கு. அதனால் ஒன்றுமே செய்யாமல் - இறைவனைத் தேடி அங்கும் இங்கும் ஓடிப்பார்க்கக்கூட முடியாமல் அப்படியே திகைத்துப் போய்விட்டார் மாணிக்கவாசகர்,

திகைப்பின் காரணமாகவும், பலஹீனத்தின் காரணமாகவும் முதலில் கொஞ்சம் பயமாக இருந்தது. பிறகு சிறிது கோபமே வந்து விட்டது மாணிக்கவாசகருக்கு.

துயரம், எரிச்சல் எல்லாம் சேர்த்து காதல்மயக்கத்தோடு கூடி வழக்காடுகிறார் மாணிக்கவாசகர். இறைவனை நோக்கித் தான்.

எப்படி என்று பார்ப்போம். ''பெருமானே! திருவிழாக் கூட்டத்தில் தாயும் குழந்தையும் சேர்ந்து நடந்தார்கள். குழந்தை எப்படியோ வழி தவறிப் போய்விட்டது''

''குழந்தை காணாமல் போய் விட்டதே என்பதற்காக கை விட்டு விடுவாளா தாய்? தாயைக் காணாமல் குழந்தை அங்கும் இங்கும் ஓடும், தேடும், அழும், மயங்கும். அப்படி நிற்கிறேன் நான். என்னை நீர் கைவிட்டு விடக்கூடாது'' என்று கெஞ்சுகிறார்.

பாடிற்றி லேன்பணி
யேன்என்னை விட்டொழிந்
தாய்க்குப்பச் சூன்
வீடிற்றி லேனை
விடுதிகண் டாய்!

உன்னை நான் மறந்துவிட்டேன். ஏமாந்து எங்கோ வந்து நிற்கிறேன். திசை தவறி விட்டதே என்று ஞாபகம் வந்ததே தவிர உன்னை நாடி ஓடிவர எனக்கு இன்னும் புத்திவரவில்லையே.

எவ்வளவு தூரமாக இருந்தால் என்ன? அலறிக் கதறி ஆவேசத்தோடு, உன்னை நோக்கிப் பாய்ந்துவர என்னால் முடியவில்லையே?

ஏதோ ஜம்பமாக, ஆடம்பரத்தோடு கால்மேல் கால்போட்டு, இருந்த இடத்திலேயே இருக்கிறேன். தடித்தனத்தில் சிக்கி விட்டேன் நான்.

அணுவளவுகூட உடம்பிற்கு சௌகர்யம் குறைந்துவிடக் கூடாது என்று பயப்படுகிறேன். (பசுமை - ஊன் பச்சூன்; தளதள வென்று கொழுப்பின் மினுங்கும் உடம்பை) வீடிற்றிலேன் - விடாமல் இருக்கிறேன்.)

உடம்பின் சௌகர்யத்தை நினைந்து அதற்கே பயந்து நடுங்கும் நான் - அதன் பிடியிலிருந்து விடுபட முடியாமல்

தவிக்கும் (வீடிற்றிலேன்) நான் - எப்படி என் ஜம்பத்தையும் ஆடம்பரத்தையும் பவிசையும் சொகுசையும் இழக்க முடியும்? ஆனாலும்,

உன்னைக் காணவில்லையே என்னும் ஞாபகம் வந்தவுடன் பதைபதைத்து நான் பயப்பட வேண்டாமா? பயந்து தேட வேண்டாமா? ''எம்பெருமானை'' நீங்கள் பார்த்தீர்களா! பார்த்தீர்களா! என்று வருபவர் போவோர் ஒவ்வொருவரிடமும் நான் கேட்க வேண்டாமா?

அப்படி ஒன்றும் செய்யவில்லையே நான்.

புத்தி இருந்தால் அல்லவா அங்கும் இங்கும் ஓடத்தோன்றும். எண்ணி எண்ணி உருக முடியும்? அது இல்லை என்னிடம், அதனால் இருந்த இடத்திலேயே இருக்கிறேன்.

''குழந்தையை நாடி வரும் தாய் போல நீ தான் என்னை நாடிவந்து ஆதரிக்க வேண்டும். மறந்துவிடாதே; கைவிட்டு விடக் கூடாது என்னை! ஞாபகம்! ஞாபகம்! ஞாபகம்!

இனி, பாடலை முழு உருவத்தில் பார்ப்போம்.

பாடிற்றி லேன், பணி
யேன்என்னை விட்டொழிந்
தாய்க்குப்பச் சூன்
வீடிற்றி லேனை
விடுதிகண் டாய்வியந்து
ஆங்கல றி,
தேடிற்றி லேன், சிவன்
எவ்விடத் தான்எவர்?
கண்டனர்?'' என்(று)
ஓடிற்றி லேன், கிடந்(து)
உள்ளுரு கேன், நின்(று)
உழைத்தன னே,'' (29)

---

(பாடிற்றிலேன் - உன்னை நினைந்து உருகி ஒன்றும்சொல்ல(பாட) வில்லை நான். பணியேன் உம்மைப் பற்றி நினைப்பு வந்தாலும் அலட்சியத்தில் மறந்து விடுகிறேன். பணிவு இல்லாததால் மரியாதை இல்லை என்னிடம், விட்டொழிந்தாய்க்கு (என்னை கைவிட்டு எங்கோ போய்விட்ட உன்னை நினைந்து (ஓடிவராமல்)

3

மாணிக்கவாசகர் தான் இறைவனை மறந்து விட்டார். அடியோடு மறந்து விட்டார் மாணிக்கவாசகர். எப்படியோ ஞாபகம் வந்தது. வந்தவுடன் ''என்னை நீர் மறந்து விடாதீரும் என்கிறார். சிலகாலம் அங்கும் இங்கும் நான் போய்விட்டதை வைத்து என்னை நீர் கவனிக்காமல் போய் விடாதீரும்'' என்று கேட்கிறார்.

இறைவன்தான், வேண்டும் என்று மாணிக்கவாசகரை, மறந்து விட்டது போல குற்றச்சாட்டை சாட்டி விடுகிறார் மாணிக்க வாசகர்.

எங்கு உரிமை இருக்கிறதோ அங்கு குற்றச்சாட்டு தாராள மாக வரும். காரணம் இல்லாமல் வேண்டும் என்றே வரும்.

முரண்பட்டது போலப் பாசாங்கு பண்ணுவதிலும், ஊடி விளையாடுவதிலும் ஒரு ருசியே இருக்கிறது.

விளையாட்டு சூடுபிடித்து, வசவில் இறங்குவதிலும் கூட ருசி இருக்கிறது.

எல்லாம் உரிமையின் விசித்திரம் தான்.

இளைஞனும், யுவதியும், வெவ்வேறுஇடத்தைச் சேர்ந்தவர்கள் நாயகனும், நாயகியும் ஆகிவிடுகிறார்கள். உறவு பெருகி இருக் கிறது. ஒருவர்மேல் ஒருவருக்கு உரிமை உண்டாகி விடுகிறது. ஒருவரை ஒருவர் ஆதிக்கம் பண்ணுகிற அளவுக்கு உரிமை உண்டாகி விடுகிறது.

பட்டுச்சேலைக்கும், வைரத் தோட்டிற்கும் நாயகனை என்ன பாடுபடுத்தி விடுகிறாள் பெண். அழஅழ வைத்து விடுவாள். காரணம் உரிமைதான்.

ஆரம்பப் பள்ளியில் படிக்கிறான் பையன். தகப்பனார் காவல் துறையில் பெரிய அதிகாரி. அவரைக் கண்டால் ஊரே - வட்டாரமே அஞ்சி நடுங்கும்.

---

பச்சூன் - பளபளப்பான தேக சௌகர்யத்தை நினைந்து, வீடிற் றிலேன் - அது நோகக்கூடாதே என்று பயந்து உட்கார்ந்து விட்டேன். வீடிற்றிலேன்-விடவில்லை நான் (ஆனாலும் என்னை) விடுதி கண்டாய் - விட்டு விடாதே ஐயா! வியந்து (ஆங்கு) அலறி - திகைத்தும், பயந்தும். தேடிற்றிலேன் - தேடவில்லை நான்.

அவ்வளவு பெரிய அதிகாரியை ஆறாம் வகுப்புப் படிக்கும் பையன் மிரட்டுவான். பரண்டுவான், நச்சரிப்பான். வேறு வேலை பார்க்க விடாமல் மடக்குவான். சகமாணவர்களுடன் உல்லாசப் பிரயாணம் போகவேண்டும். 'பணம் இப்பொழுதே கொடு' என்று அதட்டுவான். பையனை மீற முடியாது அதிகாரியால். எல்லாம் உரிமை படுத்துகிற பாடு.

இரண்டு மூன்று நெசவாலைகளுக்கு அதிபதி ஒருவர். இரண்டாயிரம் மூவாயிரம் என்று மாதச்சம்பளம் வாங்கும் நிர்வாக அதிகாரிகள்கூட முதலாளியைக் கண்டு நடுங்குவார்கள். சத்தம் போட்டு யாரும் முதலாளியிடம் பேச மாட்டார்கள். எதிரே உட்காரக்கூட யோசிப்பார்கள்.

சமையல்க்காரன் தாராளமாக முதலாளியிடம் பேசுவான். முதலாளியின் யோசனை தப்பென்று அடித்துச் சொல்வான். "உங்களுக்கு ஒன்றும் தெரியாது. அம்மா சொல்வது தான் சரி" என்று தீர்ப்பே வழங்கிவிடுவான். காரணம் என்ன?

சிறு பையனாக இருக்கும் பொழுதே வேலைக்கு வந்தவன் இவன். முப்பது நாற்பது வருடங்களாக இங்கேயே இருந்து விட்டான். எங்கும் போகவில்லை. குடும்பத்தில் ஒரு அங்கம் என்று சொல்லும் அளவிற்கு சேர்ந்து வந்துவிட்டான். சமையல் வேலை பார்க்கிறவன்தான். உரிமையின் காரணமாக வாதாட முடிகிறது.

ஒருவரோடொருவர் தாராளமாக மோத முடிகிறது. வயதோ, அந்தஸ்தோ, பதவியோ, குறுக்கே வந்து நிற்பது இல்லை தான்.

இந்த உரிமை எங்கிருந்து வருகிறது. உறவில் இருந்துதான் வருகிறது.

உள்ளத்தோடு உள்ளத்தை - உயிரோடு உயிரை அப்படிச் சேர்த்துப் பிடித்து வைத்து விடுகிறது உறவு.

அன்பின் சூத்திரக் கயிறே உறவுதான்.

மாணிக்கவாசகருக்கும் இறைவனுக்கும் உள்ள உறவு ஆழமானது, அகலமானது, கனமானதுங்கூடத்தான்.

இறைவனையே நேருக்கு நேர் நின்று வம்புக்கு இழுக்கிறார் மாணிக்கவாசகர்.

''எளிதில் என்னை (கைகழுவி) மறந்து விடலாம் என்று நீர் நினைக்க வேண்டாம். அது என்னிடம் நடக்காது. அப்படி ஏதாவது தில்லுமுல்லு பண்ணுவீரானால், உம்மைச் சும்மா விட மாட்டேன். உம்முடைய யோக்கியதையை அம்பலப்படுத்தி விடுவேன். உம்முடைய நம்பிக்கைத் துரோகத்தைக் கேட்டு எல்லோரும் உம்மை இகழ்வார்கள். ஒருவர்கூட உம்மை மதிக்க மாட்டார்கள்''

''கொன்றை மலர்களைச் சடை நிறைய அள்ளிச் செருகி இருக்கிறீர் நீர். பெரிய பெரிய நட்சத்திரங்களையே மலர்களாகச் சடையில் சொருகி வைக்கிற மகானுபாவர்தான் நீர்.

உம்முடைய மிடுக்கையும், துடிப்பையும் பார்த்தால் எல்லோருக்கும் மரியாதை உண்டாவது இயல்புதான்.

உம்முடைய குணத்தை எடுத்து வெளியில் விட்டால் உம்முடைய மரியாதை என்னாவது?

மீண்டும் ஒரு தடவை உமக்கு ஞாபகப்படுத்துகிறேன். அநாவசியமாக என்னிடம் விளையாட வேண்டாம். உம்முடைய அலட்சியம் நம்மிடம் செல்லாது. என்னை நீர் கைவிட்டு விட்டால் நடக்கிறது வேறு, ஜாக்கிரதை, ஜாக்கிரதை''

இனிப் பாடலைப் பார்க்கலாம்.

தாரகை போலும்
தலைத்தலை மாலை
தயங்குறப் பூண்
வீர! என் தன்னை
விடுதிகண் டாய்! விடில்
என்னைமிக் கார்
யார் அடி யான் என்னின்?
உத்தர கோசமங்-
கைக்கர சின்
சீரடி யார் அடி
யேன்என்று நின்னைச்
சிரிப்பிப்ப னே'' (30)

---

தாரகை போலும் - நட்சத்திரம் போன்ற - பிரமாண்டமான நட்சத்திரங்களையே. தலைத்தலை - முடிச்சு முடிச்சாய் கட்டப் பட்ட கொன்றை மலர்க் கண்ணிகளை, தயங்குஉற பூண்வீர - உல்லாசமாய்ச் சடையில் சொருகி வைத்துக்கொள்ளும் சூராதி சூரனல்லவா நீர்.

அற்புதமான பாடல். இப்படி ஒரு பாடல் கிடைத்துவிட்டால் பக்திக்கு ஆனந்தம் உண்டாகிவிடும். அதைவிட பாஷை (தமிழு)க்கு ஆனந்தம் உண்டாகிவிடும். எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனுக்குப் பேரானந்தமே உண்டாகிவிடும். பாடலைப் பாடிப் பாடி கூத்தாடிக் கொண்டே இருப்பான் இறைவன்.

இத்தகைய பாடல்களைத் தான் இறைவன் தன்னுடைய சந்நிதானமாக மதித்து அங்கு வந்து குடி அமர்வான்.

வானம் பூமி அண்டபிண்ட சராசரம் எல்லாமே இறைவன் குடி இருக்கும் கோவில்தான். ஆனாலும் இறைவனுக்கு அவ்வள வாக நிம்மதி இல்லை. அவ்வளவோடும், அவ்வளவு பொறுப்பு களோடும் சிக்கி தவிக்கிறான் இறைவன்.

சிக்கல் இல்லாமல் நிம்மதியாய்த் தங்கி இருக்க ஒரு இடம் இல்லையே என்று ஏங்குகிறான் இறைவன்.

இறைவனுடைய ஏக்கத்தை நீக்கிவிடுகிறது தமிழ்ப் பாடல்.

குழந்தையைத் தாய் கொஞ்சுவாள். கொஞ்சுவதில் எத்தனையோ விதம். கண்ணே, மணியே என்று கொஞ்சுவாள். அது ஒருவிதம். ‘‘சத்தம் போட்டே கண்ணைத் தோண்டி விடுவேன்’’ என்று அதட்டுவதும் ஒருவிதமான கொஞ்சல்தான்.

---

(என்னை விடுதிகண்டாய் - என்னை மறந்து விடலாம், தள்ளி வைத்து விடலாம் என்று திட்டம் போடுகிறீரோ?

விடில் - அப்படி ஒரு அசட்டுத்தனமான காரியம் நேருமானால், (ரொம்ப ரொம்ப கேவலப்பட்டுப் போனீர்) என்னை மிக்கார் - ஊரில் உள்ள - உலகில் உள்ள நல்லவர்கள், பெரியவர்கள் ஒவ்வொருவரும், யார் அடியான் என்னில் - நீ யாரப்பா; பைத்தியம் போல்ப் பரக்கப் பரக்க விழிக்கிறாயே, என்ன நேர்ந்தது என்று கேட்டால், உத்தர கோச மங்கைக்கு அரசின் சீரடியார் அடியேன் என்று - என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு? சிவபெருமானை நம்பி இக்கதிக்கு ஆளானவன் நான். அவருடைய அடியவர்களுக்கும் அடியவனாக இருந்து தொண்டு புரிந்து கெட்டுப் போனவன் நான்! என்று சொல்லி விடுவேன். உம்முடைய குட்டு உடைந்து விடும். சிரிப்பிப்பன் - ஊரெல்லாம் சிரிக்க வைத்து விடுவேன். உம்மை ஒரு மனிதன் என்று நம்பினவர் கள் எல்லோரும் வெட்கப்படும்படி உம்முடைய மானத்தை வாங்கி விடுவேன்.)

கோபமான பாவனையோடு கண்ணை உருட்டுவாள். கம்பைக் கையில் வைத்துக்கொண்டு ''நொறுக்கி விடுவேன்னு'' என்று மிரட்டுவாள். கத்தியை குழந்தையின் மூக்கு ஓரத்திலேயே கொண்டுவந்து விடுவாள். 'மூச்' அக்கம் பக்கம் நகர்ந்தே, பார்த்துக்கோ, என்று, அரட்டுவாள். அதுவும் ஒருவகையான கொஞ்சல்தான்.

உரலில் உலக்கையைப் போட்டு எதையோ குற்றுகிறாள். குழந்தை உரலில் கையை வைக்கிறது. உரலுக்குள் எட்டிப் பார்க்கிறது. உட்கார் என்றால் உட்கார மாட்டேன் என்கிறது. சொன்னபடி கேட்க மாட்டேன் என்கிறது. உளத்துகிறது. என்று வைத்துக் கொள்வோம்.

குழந்தையின் குறும்புத்தனத்தைப் பார்த்து தாய்க்குச் சிறிது கோபம் வரும். கோபத்தில் என்ன செய்வாள்? உலக்கையைத் தூக்கிப் பிடித்தவளாய் - ஆங்கார காளி போல் அபிநயம் பிடித்தவளாய், ''சிரிக்கவா செய்கிறாய்? மண்டையில் ஒரே போடாய்ப் போட்டு விடுவேன். ஜாக்கிரதை'' என்று பாவனை பண்ணுவாள். அப்படி பாவனை பண்ணுவதற்குப் பாசந்தான் காரணம். அன்பானது எத்தனையோ வகையில் குதித்துக் கொண்டு வரும். ஒரு மாதிரிதான் அன்பு நடந்து வரும் என்று எதிர்ப்பார்க்கக் கூடாது.

தாயின் அன்பு குழந்தையை நோக்கி விளையாட்டும் கும்மாளியும் போட்டு வருவதுபோல, மாணிக்கவாசகருடைய பக்தி இறைவனை நோக்கி ஆட்டமும் பாட்டமுமாய் வருகிறது.

இனி, ஞானி ஒருவர் குழந்தையிடம் பழகினார். குழந்தைக்கு ஞானியைப் பிடித்துவிட்டது. ஞானியைக் குழந்தை விளையாடக் கூப்பிடும். தொட்டுப் பிடித்து விளையாடக் கூப்பிடும். ஞானி புறப்பட வேண்டும். மறுபேச்சுப்பேசாமல் 'இதோவந்து விட்டேன்' என்று குழந்தையின் பின் வர வேண்டும். வராவிட்டால்குழந்தை அழும். அடிக்கும், கடித்துக் கூட விடும். அன்பின் வேகம் அப்படி.

காதலும்! அப்படித்தான். மாணிக்கவாசகருக்கு இறைவனிடம் இருக்கிற பக்தியும் அப்படித்தான்.

பெருமானே என்னை நீர் விட்டுவிட்டால், ''உம்மை சந்தி சிரிக்க வைத்துவிடுவேன் நான்'' என்று அரட்டுகிறார் மாணிக்கவாசகர். இருக்கவே இருக்கிறது உம்முடைய யோக்கியதை!

யானையின் தோலை உரித்தது, புலியின் தோலை உரித்தது, விஷத்தை வாயில் போட்டுக் கொண்டது, சுடுகாட்டில் போய் ஆடியது. அங்குகொழுந்துவிட்டு எரியும் தீயைப் பார்த்து வெறித் தனமாய்ச் சிரித்தது. என்னை மயக்கி வசியம் பண்ணியது. இவ் வளவும் நேரான செயலாகுமா? அவ்வளவும் கிறுக்குத்தனம்! இந்த அடங்காத பைத்தியத்தை எடுத்துச் சொல்லி உம்முடைய மானத்தை வாங்கிவிடுவேன். என்னை நீர் கைவிட்டால், சும்மா விடமாட்டேன் உம்மை. ஜாக்கிரதை'' என்கிறார் மாணிக்க வாசகர்.

இனி, பாடலைப் பார்ப்போம்.

சிரிப்பிப்பன் சீறும்
பிழைப்பை; தொழும்பையும்
ஈசற்கென் று
விரிப்பிப்பன்; என்னை
விடுதிகண் டாய்! விடில்
வெங்கரி யின்
உரிப்பிச்சன்: தோலுடைப்
பிச்சன்;நஞ் சூண்பிச்சன்;
ஊர்சுடு காட்(டு)
எரிப்பிச்சன்; என்னையும்
ஆளுடைப் பிச்சன்என்(று)
ஏசுவ னே. (31)

---

சிரிப்பிப்பன் - விழுந்து விழுந்து சிரிக்கும்படி கேவலப்படுத்தி விடுவேன். சீறும்பிழைப்பு - உம்மை நம்பி ஏமாந்த கேவலமான பிழைப்பையும், தொழும்பையும் - என் அடிமைப் புத்தியையும். விரிப்பிப்பன் - விரிவாய் எடுத்துச் சொல்வேன். வெங்கரியின் உரிப்பிச்சன் - மத யானையின் தோலை உரித்த கிறுக்கன் என்றும், நஞ்சு ஊண்பிச்சன் - ஆலகாலத்தை உண்ட பைத்தியம் என்றும். ஆளுடைப்பிச்சன் - என்னை அடிமைப்படுத்தி ஏமாற்றிய கோமாளி என்றும். ஏசுவன் - திட்டுவேன். சண்டை போடுவேன்.)

# உடையவனிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்து விடவேண்டும்

1

மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும் இந்த உலகத்துக்கு ஆதாரம். ஐந்தும் சேர்ந்து கலந்து உண்டானதுதான் உலகம். உலகம் என்றால் நாம் வாழும் உலகந்தான். செவ்வாய், புதன் முதலியவற்றில் இப்படி இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த உலகம் மட்டும் இப்படி ஒரு கலவையில் உண்டாகி இருக்கிறது. இந்த உலகில் உள்ள எல்லா வஸ்த்துக்களும் இந்தக் கலவையில் உண்டானவையே.

இப்படி ஒரு கலவை இல்லாவிட்டால் உயிரினம், புல்பூண்டு, பறவை, விலங்கு, புழு, பூச்சி, மனிதன் ஒன்றும் உண்டாகி இருக்காது. அவ்வளவுக்கும் காரணம் அடிப்படையான ஐந்து பூதங்களும் அவற்றின் கலப்புந்தான். கலப்பில் எத்தனையோ வகை இருக்கின்றன. ஒவ்வொரு வகையிலும் ஒரு கணக்கு இருக்கிறது. முறை இருக்கிறது. ஒழுங்கே இருக்கிறது. எல்லாம் ஒரு நியதிப்படியே உண்டாகிறது.

ஐம்பூதச் சேர்க்கையால் உண்டான உலகத்துக்கு - உயிரினம் முழுவதுக்கும் சத்தாக இருப்பது நீர். அதனால் நீரை அமிர்தம் என்கிறோம். நீரின் அருமையை உணர்ந்து முன்னோர்கள் நீரைத் தெய்வமாக மதித்திருக்கிறார்கள்.

சமுத்திரம், ஆறு, அருவி, குளம், சுனை எல்லாவற்றையும் தீர்த்தம் என்று வழிபட்டு வந்திருக்கிறார்கள். இறைவன் மயமாக

மூர்த்தி இருப்பதுபோல தீர்த்தமும் இறைவன்மயமாக இருக்கிறது. இறைவனைப் பார்ப்பது போலவே தீர்த்தத்தை - அதாவது நீரை நம்மவர்கள் பார்த்தார்கள்.

தண்ணீரை நம்மவர்கள் மதித்ததுபோல் உலகில் வேறு ஒருவரும் மதிக்கவில்லை. ஆறு, கடல், பொய்கை, அருவி, முதலியவற்றில் ஸ்நான கட்டங்களை உண்டாக்கி பக்தியோடு நீராடி வந்தார்கள். இறைவனோடு சேர்ந்து கலந்து திளைப்பது போல ஆனந்தத்தோடு நீராடினார்கள்.

படித்துறையில் அமர்ந்து துணிமணிகளைத் துவைக்கிறது. குடம், பானை முதலியவற்றை விளக்குகிறது. குழந்தைகளைக் குளிப்பாட்டி விடுகிறது, நீரில் இறங்கி மூழ்கிமூழ்கி எழுகிறது பெண்களுக்கு உத்சாகமான காரியங்கள். மஞ்சளை நன்றாக உரசி மைப் போலச் சாந்தாக்கிக் கொள்வார்கள். நீரில் மூழ்கி எழுந்து அரைத்த மஞ்சளை முகத்தில் பூசுவார்கள். பிறகு நீரில் மூழ்கி எழுவார்கள்.

சிநேகிதனுடன் சேர்ந்து நீராடுவது அவர்களுக்கு உல்லாசமான காரியம். புனல் விளையாட்டு என்றே அதைப் பாராட்டி வந்திருக்கிறார்கள்.

இனிவழிபாட்டுத் துறைக்குள், வருவோமானால் தலயாத்திரை போல தீர்த்தயாத்திரையும் சமயநெறியோடு சார்ந்ததுதான்.

உலகில் வேறு எங்கும் இப்படி ஒருமுறை இருந்ததாகத் தெரியவில்லை. உலகில் முக்கால் வாசிப் பேர் தண்ணீரில் கையை வைக்கவே பயப்படுவார்கள். தேள் கொட்டுவது போல கொட்டும் தண்ணீரின் குளிர். வேறு சில நாட்டார் தண்ணீரை மருந்தாக வைத்துக் கொண்டார்கள். அவ்வளவு பஞ்சம் அவர்களுக்குத் தண்ணீரில். புண்ணிய தேசமாகிய நம் நாட்டைப் போல் நீர்வளம் நிறைந்த நாடுகள் சில உண்டு. ஆனாலும் அவர்கள் தண்ணீரை நம்மைப்போல் பக்தியோடு பார்க்கவில்லை. அதனால் பரவசமும் அவர்களுக்கு ஏற்படவில்லை. மார்கழி மாதம். பனியும் குளிரும் இருக்கும். அதிகாலையில் - கோழி கூவுவதற்கு முன்பே எழுந்து கூட்டம் கூட்டமாகப் போவார்கள். பெண்களும் அப்படிக் கூடிச் சேர்ந்து போவார்கள். படித்துறைக்குப் போய் நீரில் இறங்கி மூழ்குவார்கள். எழுந்து நீரில் அப்படியும் இப்படியும் துள்ளி விளையாடுவார்கள்.

மார்கழி மாதம் முழுவதும் அதிகாலையில் பெண்கள் பொய்கையில் நீராடி, ஈரச்சேலையோடு கோவிலுக்குப் போய் பக்தி சிரத்தையோடு இறைவனை அவர்கள் வழிபடுகிறார்கள். இதை அவர்கள் ஒரு விரதமாகவே வைத்துக் கொள்கிறார்கள்.

கன்னிப் பெண்கள் சேர்ந்து கலந்து மனதில் உள்ளது நிறைவேற வேண்டும் என்று ஒரு செயலை விரதமாக அனுஷ்டிக்கிறார்கள் என்றால், அது மற்றவர் கவனத்தைக் கவரும் முக்கியமான காரியந்தான். அதனால் அதற்கு ஒரு தனிப்பட்ட அழகு ஏற்பட்டு விடுகிறது. பாவை நோன்பு என்னும் பெயர் பெற்று சோபிக்கிறது பெண்களின் புனல் விளையாட்டு.

பொய்கையில் பாய்ந்தும் குதித்தும் மூழ்கியும் எழுந்தும் ஒருவரை ஒருவர் தொட்டுப் பிடித்தும் நீராடுகிறார்கள் பெண்கள். படித்துறைக்கு வருகிறார்கள். மஞ்சளைப் பூசுகிறார்கள். மறுபடியும் நீரில் இறங்கி மூழ்கி எழுகிறார்கள். கண்களை மூடி கைகளால் முகத்தைப் பொத்தியபடியே நீரில்மூழ்கி எழுகிறார்கள். பிறகு கழுத்தளவு தண்ணீரில் நின்று கொண்டு ஒருவர்மேல் ஒருவர் நீரை இறைத்து எறிந்து விளையாடுகிறாகள். பனியும் குளிரும் அவர்களை ஒன்றும் செய்யவில்லை. உல்லாசமாய் நீராடி விளையாடும் பெண்கள் பக்தி பரவசத்தோடு இறைவனை நினைக்கிறார்கள். உள்ளம் உருகுகிறார்கள். அவர்கள் குழைந்து நெகிழ்ந்து சொல்வதாக விஷயம்.

பழைமைக்குப் பழைமையாகவும் புதுமைக்குப்புதுமையாகவும் இருக்கிறான் இறைவன். இறைவனுடைய அடியார்கள்தாம் எங்களுக்குத் தலைவர். அவர்களுக்குத் தொண்டு செய்வதுதான் எங்களுக்குப் பிறவிப்பயன்.

(தானன தானன தன்
தானன தானன தன்
தானன தானன தன்
தானன தானன தன்)

முன்னைப் பழம்பொருட்கும்
முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்தும்அப் பெற்றியனே!

உன்னைப் பிரானா!கப்
　　பெற்றஉன் சீரடி!யோம்;
　　　　உன்னடியார் தாள்பணி!வோம்;
　　　　　　ஆங்கவர்க்கே பாங்கா!வோம்
அன்னவரே எம்கண!வர்
　　ஆவார்; அவர்உகந்!து
　　　　சொன்ன பரிசே
　　　　　　தொழும்பாய்ப் பணிசெய்!வோம்;
இன்ன வகையே
　　எமக்கெங்கோன் நல்குதி!யேல்
　　　　என்ன குறையும்
　　　　　　இலோம்ஏலோர் எம்பா!வாய். (32)

மேலும் என்ன சொல்கிறார்கள் பெண்கள்.

நம்பிறவி வேர் அறும்படியாக நாம் நீராட வேண்டும். பிறப்பு என்னும் மயக்கம் நம்மிடமிருந்து கலைந்து ஓடும்படி இறைவன் ஆடுகிறான். நீர்மயமானவன் அவன். தலையில் கங்கையை (தண்ணீரை) சுமந்து கொண்டிருக்கும் தீர்த்தன் அவன். நீரைத் தலையில் வைத்துக் கொண்டு நெருப்பில் இறங்கி விளையாடும் கூத்தன் அவன். நெருப்புமயமான பெருமானின் தலையில் நீர் அமர்ந்திருக்கிறது! அதிசயந்தான்.

பிரபஞ்சம் முழுவதையும் படைத்துக் காத்து மறைத்து விளையாடுகிறான் இறைவன். அவனை நினைந்து நாம் இப்பொய்கையில் ஆடுவோம்.

ஆர்த்த பிறவித்
　　துயர்கெடநாம் ஆர்த்தாடும்
　　　　தீர்த்தன்;நல் தில்லைச்சிற்
　　　　　　றம்பலத்தே தீயாடும்
கூத்தன்;இவ் வானும்
　　குவலயமும் எல்லோரும்
　　　　காத்தும் படைத்தும்
　　　　　　கரந்தும் விளையாடி;

---

(அவர்க்கே பாங்கு ஆவோம்-அவர்களை அனுசரித்தே நடப்போம். எம்கணவர் ஆவார் - எமக்கு அவரே தலைவர். தொழும்பாய் - தொண்டராய். நல்குதியேல் - அருள்பாலித்தால்)

வார்த்தைகள் பேசி
வளைசிலம்ப, வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய,
அணிகுழல்மேல் வண்டார்ப்ப,
பூத்திகழும் பொய்கை
குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர்
ஆடேலோர் எம்பாவாய். (33)

பூம்புனல் ஆடுவதில் பெண்கள் எல்லோருக்கும் ஆசைதான். சிலபெண்களுக்கு அதில் ஒரு வெறியே உண்டாகும். ஒருபெண். அவளுக்கு அதில் மோகவெறியே உண்டாகிவிட்டது. இரவில் படுக்கப் போகும் போதுகூட-படுத்துத் தூங்குகிற பொழுதுங்கூட பொய்கையில் இறங்கி நீரை அளைந்து விளையாடும் நினைப்புத் தான். பொழுது எப்பொழுது விடியும் என்னும் ஆத்திரத்திலேயே படுப்பாள், உறங்குவாள்.

விடிவதற்கு நான்கு நாழிகை இருக்கும் பொழுதே விழித்து விடுகிறாள். அவளுக்குச் சேக்காளிகள் பத்துப் பன்னிரண்டு பேர். அவ்வளவு பேரையும் திரட்டிக்கொண்டு பொய்கைக்குப் போக வேண்டும். சில பெண்களின் வீடு அதே தெருவில் இருந்தன. சில பெண்களுக்கு வீடு பக்கத்துத் தெருவில் இருந்தன.

மார்கழி மாதம். தேய்பிறை. மழைக்கால இருட்டு இல்லை என்றாலும், கர்ப்ப கிரி ஓட்டம். ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாது. அப்படி மையாய் இருந்தது இருட்டு. நட்சத்திரங்கள் வானில் அங்கங்கே நிற்கின்றன. அவையும் அப்படியே ஒதுங்கப் பார்க்கின்றன.

சிநேகிதிகளின் வீடுகளுக்குப் போய் ஒவ்வொருவரையும் தட்டி எழுப்பிச் சேர்த்து விட்டாள். எல்லோரும் பொய்கையை நோக்கி வருகிறார்கள். விடிய இன்னும் ஒரு நாழிகை இருக்கிறது.

---

ஆர்த்த-ஆரவாரம் நிறைந்த. நாம் பிறவித்துயர் கெட-நாம் பிறந்தோம் என்னும் மயக்கம் போக. ஆர்த்து ஆடும் தீர்த்தன்-ஒரே முழக்கத்தோடு நடனமாடும் பெருமான். குவலயம்-பூமி. கரந்தும்-மறைத்தும். விளையாடி-முத்தொழிலையும் வைத்து விளையாடும் இறைவன். குடைந்து-மூழ்கி. உடையான்-இறைவன்)

நீரில் இறங்கி நன்றாக அளைந்து விளையாடுகிறார்கள். விளையாட்டில் நேரம் போவதே தெரியவில்லை. கிழக்கே சூரியன் உதிக்கிற நேரம். நிலம் கீறி சூரிய ஒளி நாலாதிசையிலும் பரவி ஓடப் பார்க்கிறது. அப்பொழுது நட்சத்திரங்களின் பிரகாசம் மழுங்கி வெளிறிவிடுகிறது.

சிவபெருமானைத் தேவர்கள் வழிபட வருவார்கள். நவரத்ன கசிதமான கிரீடங்களைத் தலையில் வைத்துக் கொண்டு வருவார்கள். சிவபெருமானுடைய திருவடி ஒளிக்குமுன் அவர்களுடைய ரத்னப் பிரகாசம் நிற்கமுடியாது. அப்படியே ஒதுங்கிப் போய்விடும்.

அதேபோல நட்சத்திரப் பிரகாசம் சூரிய ஒளி முன் நிற்க முடியாமல் ஒதுங்கிவிட்டது. இருளும் நகர்ந்து போனது. தோழிகளிடம் சொல்கிறாள் பெண்.

அண்ணா மலையான்
அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின்
மணித்தொகைவீ(று) அற்றாற் போல்;
கண்ணார் இரவி
கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித்
தாரகைகள் தாமகல;
பெண்ணாகி ஆணாய்
அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி
இத்தனையும் வேறாகி,
கண்ணார் அமுதமுமாய்
நின்றான் கழல்பாடி
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந்(து)
ஆடேலோர் எம்பாவாய்! (34)

மீன்கள் துள்ளி ஆடுவதுபோல் பெண்கள் பொய்கையில் விளையாண்டார்கள். ஓடியும், ஒளிந்தும், தேடியும், தண்ணீரை இறைத்து விட்டும், மூழ்கியும் விளையாண்டார்கள்.

---

(வீறுஅற்றால்போல்-ஒளி மழுங்கினது போல். இரவி-சூரியன், கார்கரப்ப-இருளை ஒழித்துவிட. தாரகை-நட்சத்திரம்)

பொழுது நன்றாகப் புலர்ந்துவிட்டது. சூரியனுடைய பொன்னிறக் கிரணங்கள் நாலாதிக்கிலும் பரவி ஓடுகின்றன. பறவைகள் பாடுகின்றன. தாமரைப்பூக்கள் விரிந்து மணம் பரப்புகின்றன. மரங்களில் துளிர் எடுத்திருப்பதையும் காய்ந்த இலைகள் உதிர்ந்து கிடப்பதையும் அவர்கள் பார்க்கிறார்கள்.

பெண்கள் கரை ஏறினார்கள். சேலையைப் பிழிந்து முறுக்குகிறார்கள். தலையைத் துவட்டினார்கள். மேனியைத் துடைத்தார்கள். பிழிந்து உதறிய ஈரச்சேலையைக் கட்டிக் கொண்டார்கள். திருநீற்றை நெற்றியில் இட்டுக் கொண்டார்கள். தோளிலும் இட்டுக் கொண்டார்கள்.

வரிசையாக நின்று இறைவனுடைய அருளை நினைந்து தியானித்தார்கள். கண்களை மூடியே தியானித்தார்கள். ஆனாலும் அவர்களுக்கு எங்கும் நிறைந்த இறைவனுடைய செயல் தெளிவாய்த் தெரிந்தது. பேரண்டம் முதல் அணுவரை, பரமாணுவரை-எல்லாம் அவனிடமிருந்து உண்டாவது, நிற்பது, மறைவது- ஒவ்வொன்றும் அவர்களுக்குத் தெளிவாய்த் தெரிந்தது. கடவுளுடைய திருவருள் அப்படிக் கோடி சூரியப் பிரகாசமாய்ப் பிரகாசித்தது. மூடிய கண்களுக்கு உள்ளேயே பிரகாசித்தது.

அற்புதத்திலும் அற்புதமாக அந்தத் தெய்வீகக் காட்சியைக் கண்ணாரக்கண்டு அனுபவித்து பெண்கள் உள்ளம் உருகி இறைவனை வாழ்த்துகிறார்கள். எப்படி என்று பார்ப்போம்.

போற்றி அருளுகநின்
ஆதியாம் பாதமலர்;
போற்றி அருளுகநின்
அந்தமாம் செந்தளிர்கள்;
போற்றிஎல் லாஉயிர்க்கும்
தோற்றமாம் பொற்பாதம்;
போற்றிஎல் லாஉயிர்க்கும்
போகமாம் பூங்கழல்கள்;
போற்றிஎல் லா உயிர்க்கும்
ஈறாம் இணைஅடிகள்;
போற்றிமால் நான்முகனும்
காணாத புண்டரிகம்;

போற்றியாம் உய்ய ஆள்க்
கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர்
ஆடேலோர் எம்பாவாய். (35)

---

(பாதமலர்-திருவடியாகிய மலர். எங்கும் இறைவனுடைய செயல் தான். இறைவனுடைய செயலாகிய நியதி தத்துவத்தையே அருள் என்கிறோம். திருவடி என்றும் சொல்கிறோம்.

பிறப்பு, இருப்பு, மறைப்பு, இன்பம், துன்பம் எல்லாம் இறைவனுடைய செயல்தான். இறைவனுடைய திருவடிதான். திருமால் பிரம்மா போன்றவர்களாலும் இறைவனுடைய திருவிளையாடலைக் கண்டு உணர முடியவில்லை என்பது கருத்து)

# தந்தை மட்டும் அல்ல, பெற்றெடுத்த தாயும் அவன் தான்

1

பரிவுக்கும் பாசத்திற்கும் அதிதேவதை தாய்தான். எறும்பி லிருந்து யானைவரை, சின்னஞ்சிறிய புழுவிலிருந்து மனிதன்வரை உயிர்ப்பிராணி ஒவ்வொன்றும் தாயின் நிழலிலேயே வளர்கின்றன· தாயின் பார்வை ஒன்றேபோதும். அவளுடைய மூச்சுப்பட்டாலே குழந்தைகள் கவலை இல்லாமல் மளமளவென்று வளர்வார்கள்.

தகப்பனுக்குக் குழந்தைகளிடம் பாசம் இல்லாமல் இல்லை, நிறைய இருக்கவே செய்கிறது. ஆனாலும் அந்தப் பாசத்திற்குப் பின்னால் ஆணவம் சேர்ந்தே கிடக்கும். தன் குழந்தைகள் நிலை தடுமாறிச் சின்னாபின்னமாகச் சிதறி அலைந்தால், தன் பேருக் கும் புகழுக்கும் அவமானம் வந்துவிடுமே என்னும் பயத்திலிருந்து ஒருவித ஆணவம் பிறக்கும். அந்த ஆணவம் தகப்பனுடைய பாசத் தோடு சேர்ந்து செயல்படும்

தன் அந்தஸ்தோடு வேறுபட்டும், மாறுபட்டும் போன தன் மக்களிடம், தகப்பனால் அன்புகாட்ட முடியாது. காட்டினாலும் அந்த அன்பில் உயிர் இருக்காது.

தாயின் காரியம் அப்படி அல்ல. ஒன்றுக்கும் உதவாத குழந்தை களிடமும் அன்புகாட்டுவாள் தாய். இது காரணமாகவே தாயை கருணையின் இருப்பிடம் என்று சொல்கிறோம். தெய்வத்தைத் தாயாக வழிபடுவதும், 'அன்னையே' என்று இறைவனை அழைப் பதும் தாயின் அருளை அனுபவித்ததனால்த்தான்,

ஒரு குழந்தைக்குத் தாய் எப்படி அன்பு மயமாய்த் தோன்று கிறாளோ, அப்படியே தாயின் உடன்பிறந்த சகோதரனும்- அதாவது மாமனும் அன்புமயமாய்த் தோன்றுகிறான். செல்லம் கொடுப்பதிலும், உபசரிப்பதிலும் கவனிப்பதிலும், சகிப்புக் காட்டு வதிலும் தாய் போலவே தாயுடன் பிறந்த மாமனும் நடந்து கொள்கிறான். அம்மாவின் தன்மை, அம்மாவின் உடன் பிறந்த சகோதரனிடமும் இருப்பதால், மாமனை 'அம்மான்' என்று சொல்லுகிறோம்.

கடவுளும் நம்மீது அன்புமயமாக அருளைப் பொழிகிறார். அவர் நம்மீது கொட்டும் அன்புக்கும் அருளுக்கும் காரணம் வேண்டியது இல்லை, அன்பையும் அருளையும் பொழிவதுதான் கடவுளின் இயல்பு. தாயானவள் குழந்தைகளிடம் அன்பு காட்டு வதற்கு என்ன காரணம் சொல்ல முடியும்? அப்படியே மனிதர்கள் மேல் கடவுள் அன்பைக் கொட்டுவதற்கும் காரணம் சொல்ல முடியாது.

இந்த உண்மையை அனுபவித்த முன்னோர்கள் இறைவனை யும் "அம்மான்" என்று சொன்னார்கள். அம்மாவின் தன்மை அப்படியே இறைவனிடம் இருக்கிறது.

மாணிக்கவாசகரும்

"......அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய்"

என்று சொல்லுகிறார்; அதாவது, இறைவனை 'அம்மான்' என்றே சொல்லுகிறார்; ஒத்த மனப்பான்மையுடைய பெண்கள், சிநேகிதி கள் சேர்ந்து விளையாடும் விளையாட்டுக்கள் பல. அவற்றுள் அம்மானை என்பதும் ஒருவகை விளையாட்டு. இரண்டு, அல்லது மூன்று பெண்கள் சேர்ந்து உட்கார்ந்து விளையாடும் விளையாட்டு அது. அவர்கள் வட்டமாக உட்கார்ந்து கொண்டு சிறிய உருண்டைக் கற்களை மேலே மேலே, போட்டுப் போட்டுப் பிடிப்பார்கள். அப்பொழுது ஒருவருக்கொருவர் மனம்விட்டு உல்லாசமாகப் பேசிக் கொள்வார்கள். மிடுக்கும் கும்மாளமும் பேச்சில் கலந்துவரும். விளையாட்டில் வேகம் ஏற ஏறப் பேச்சிலும் உல்லாசம் ஏறும். விஷயம், உணர்ச்சி எல்லாவற்றிலும் பிரகாசம் தொனிக்கும். சுண்டி எறியும் கற்களை லாகவமாகப் பிடிப்பதைப் போல, உள்ளத்தில் பதுங்கிக் கிடக்கும் உணர்ச்சிகளையும் சுண்டி எறிந்து, பின்பு அவற்றை லாகவமாகப் பிடித்துக்காட்டும் அவர் களுடைய உரையாடல்.

இரண்டு பெண்கள் சேர்ந்திருந்து அம்மானை விளையாடு கிறார்கள். அவர்களில் ஒருபெண் தோழியிடம் சொல்கிறாள், என்ன சொல்லுகிறாள் பெண்? கடவுள் தத்துவத்தைப் பற்றியே விஸ்தாரமாக எடுத்து முடிக்கிறாள் பெண். கடவுளுக்கும் தனக்கும் உள்ள உறவை, தெள்ளத் தெளிய எடுத்து விளக்குகிறாள்.

"இறைவனுக்குத்தான் நம்மிடம் எவ்வளவு ஆசை இருக்கிறது? நாம் மறந்தாலும் நம்மை அவர் மறப்பதில்லை. நம்மிடம் அவருக்கு எல்லை இல்லாத பேராசை? என்கிறாள் பெண். மேலும் சொல்கிறாள்.

"மன்பதைக் கடலில் ஒரு பக்தனாவது - அன்புடையான் ஒரு வனாவது அகப்படமாட்டானா என்று அவர் சுற்றிச் சுற்றி வரு கிறார். பக்தனாகிய மீனைப்பிடிக்க வலையை வீசுவது போல வலிய வலியக் கையை நீட்டுகிறான் பெருமான். அவர் ஒரு பேராசைக் கடலாகவே விளங்குகிறார்"

"ஆரா அமுதாய்,
அலைகடலில் மீன்விசிறும்
பேராசை வாரியனைப்
பாடுதும்காண் அம்மானாய்"

என்கிறாள் பெண், மேலும் சொல்கிறாள்.

"எப்படியோ என் மனத்துள் வந்து குடியேறிவிட்டான் இறைவன். எப்படி வந்தான் என்பது எனக்குத் தெரியாது. தேவர் களாலும், காணமுடியாத பெருமான், என்னை நாடி என்னுள் வந்து அமர்ந்துவிட்டான், வலிய வந்தே அமர்ந்து கொண்டான் பெருமான்".

"என் மனத்தை உருக்கி ஓடவிட்டான் அவன். காந்தம் இரும்பை இழுப்பது போல, உருகி ஓடும் உள்ளத்தை வசப்படுத்தி இழுத்துக்கொண்டான்."

என்ன அதிசயம் இது என்று வியக்கிறாள் பெண். இனிப் பாடல் முழுவதையும் பார்ப்போம்.

பாரார், விசும்புளார்,
பாதாளத் தார், புறத்தார்
யாராலும் காண்டற்(கு)
அரியான்; எமக்கெளிய
பேராளன்; தென்னன்,
பெருந்துறையான்; பிச்சேற்றி

வாரா வழிஅருளி,
வந்தென் உளம்புகுந்த
ஆரா அமுதாய்
அலைகடலில் மீன்விசிறும்
பேராசை வாரியனைப்
பாடுதுங்காண் அம்மானாய். (36)

மாணிக்கவாசகருடைய வியப்பை அப்படியே வாங்கி கவிதையாக சிருஷ்டித்துக் கொடுக்கிறது தமிழ்.

பெண்ணென்றும், தோழி என்றும், அம்மானை என்றும் பாத்திரங்களையும் சந்தர்ப்பத்தையும் வகுத்து வைத்து ஒரு நாடகம் போட்டே காட்டிவிடுகிறது தமிழ்.

தோழியிடம் மேலும் சொல்லுகிறாள் பெண், ''நான் வேறு அவன் வேறு என்று இதுகாறும் அறியாமையில் தடுமாறிக் கிடந்தேன். இப்பொழுது வெளிச்சம் கண்டுவிட்டது. அவன்தான் நான்· உடம்பு, உயிர், உணர்ச்சி எல்லாமே அவன்தான். இது விளங்க விளங்கப் பேரானந்தமாக இருக்கிறது''

''ஞானிகளுக்குக் கூடத் தெளிவுபடாத உண்மை - நான் என்பது இல்லை என்னும் உண்மை எனக்கு எப்படியோ விளங்கி விட்டது! என்ன கருணை என்மேல் அவனுக்கு? கொன்றை மாலை அணிந்த பெருமான், அறிவுமயமாய் விளங்குகிறான். பேரறிவினால் நிற்கிறான். புல்முதல் ஞானிகள் வரை எல்லாவற்றிலும் அறிவுமயமாய் நிற்கிறான். அவ்வளவு பேரும்-ஏன் ஞானிகள் கூடப் பார்க்க முடியவில்லை அவனை. ஆனால் என்னுள் வந்து அவன் மருவியதை என்னென்று சொல்வேன்?

இதோ வருகிறது பாடல்.

ஊனாய் உயிராய்
உணர்வாய்என் உட்கலந்து
தேனாய் அமுதமாய்த்
தீங்கரும்பின் கட்டியுமாய்,

---

(பிச்சேற்றி-என்மேல் ஆசை வைத்திருக்கிறவன்)
மாணிக்கவாசகருக்கு வாழ்க்கையில் பலப்பலப்பிரச்சனைகள் இருந்திருக்கவே செய்யும். பிரச்சனைகள் அவ்வளவையும் விலக்கிவிட்டு உண்மை ஒளி என ஒன்று அவரைத் தாக்குகிறது. சுற்றுமுற்றும் பார்க்கிறார். எல்லாம் அதிசயமாக இருக்கிறது. ஒரே வியப்பில் மூழ்கி விடுகிறார் மாணிக்கவாசகர்.

வானோர் அறியா
வழிஎமக்குத் தந்தருளும்
தேனாய் மலர்க்கொன்றைச்
சேவகனார்; சீர்ஒளிசேர்
ஆனா அறிவாய்,
அளவிறந்த பல்உயிர்க்கும்
கோனாகி நின்றவா!
கூறுதுங்காண் அம்மானாய். (37)

3

இப்பொழுது தோழி கீழ்க்கண்டபடி ஒருகேள்வி கேட்டு மடக்குகிறாள் என்று வைத்துக் கொள்வோம். "தேனாய், அமிர்தமாய், தித்திக்கும் வெல்லமாய் வந்து நிறைந்துவிட்டான் என்று சொல்கிறாய்! அப்படி நிறைந்துவிட்ட இறைவன் உன்கண்முன் வந்து நின்றால், நீ என்ன செய்வாய்" என்று கேட்பதாக வைத்துக் கொள்வோம்.

இப்படி ஒரு கேள்வி வந்தவுடன், ஆற்றாமைக்குள்ளும், ஏக்கத்திற்குள்ளும் அடைபட்டுக்கிடந்த அன்பு. பொங்கிப் பாய்ந்துவிடாதா? காதல் மயமான பக்தியாய், அந்த அன்பானது மடையை உடைத்துக்கொண்டு வெள்ளப்பெருக்காய்த் துள்ளி ஓடாதா?

அப்படி ஓடுவதை இனிப் பார்க்கலாம். "என்ன செய்வேன் என்றா கேட்கிறாய்? அவனைப் பார்த்தவுடனே வசமிழந்து அவன் மேல்ச் சாய்வேன். அவனுடைய மாலையை எடுத்து என் கூந்தலில் சொருகுவேன். அவன் என்னை நெருங்க நெருங்க நான் கொஞ்சம் பிகுப்பண்ணி ஒதுங்குவேன். அவன் தயங்கினாலோ அவன் கன்னத்தை வருடி அவன் மார்பில் சாய்வேன். ஆசையோடு அவனை ஏங்கி நோக்குவேன். மேலும் மேலும் அவன் அருளை (திருவடியை)யே எண்ணி எண்ணி உருகுவேன்"

---

"எல்லாம் கடவுள் மயந்தான். நான் என்பது எங்கும் இல்லை எதிலும் இல்லை. ஆனாலும் இந்த உண்மை-நான் என்பது இல்லவே இல்லை என்னும் உண்மை எனக்கு எப்படியோ விளங்கிவிட்டது! எப்படித் தெரிந்தது அது? ஏன் மற்றவர்களுக்கு விளங்கவில்லை?" என்று மயங்கித் தயங்குகிறார் மாணிக்கவாசகர்.

அவருடைய ஆனந்தமயமான மயக்கம். தமிழ் வார்த்தைகளில் எதுகையிலும் மோனையிலும் நின்று கூத்தாடுகிறது.

இனிப் பாடலைப் பார்ப்போம்.

சூடுவேன் பூங்கொன்றை
சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன்; கூடி
முயங்கி மயங்கிநின்று
ஊடுவேன்; செவ்வாய்க்(கு)
உருகுவேன்; உள்ளுருகித்
தேடுவேன்; தேடிச்
சிவன்கழலே சிந்திப்பேன்;
வாடுவேன்! பேர்த்தும்
மலர்வேன்; அனல்ஏந்தி
ஆடுவான் சேவடியே
பாடுதுங்காண் அம்மானாய். (38)

---

பக்தி என்பது சுத்தமான காதல்தான். உண்மையான அன்பு காதலாய்ப் பொங்குவதற்குத்தான் பக்தி என்று பெயர். அந்தப் பக்தியானது தமிழ் வார்த்தைகளில் குதித்தோடி வருகிறது. அதைக் கையில் எடுத்து காட்டுகிறது கவி.

தங்கள் ஆணவத்தையே காணிக்கையாக இறைவனிடம் கொடுக்கிறார்கள் பக்தர்கள். இறைவனும் பக்தர்களின் ஆணவத்தை வாங்கிக் கொள்கிறான். வாங்கிக்கொண்ட காணிக்கையை சேர்த்து வைப்பதில்லை இறைவன். உடனுக்குடன் சுட்டுப் பொசுக்கிவிடுவான். உடனுக்குடன் சுட்டுப் பொசுக்கி விடுவதற்காகவே, இறைவன் தன் கையில் தீயை (அனலை) ஏந்திய வண்ணம் இருக்கிறான். ஆணவத்தை அப்படி அப்படியே தீயில் போட்டுப் பொசுக்கிவிடுகிறான் இறைவன். எரிந்து சாம்பலாய்ப் போய்விடுகிறது ஆணவம். இதைப் பார்த்து இறைவனே ஆனந்தப்படுகிறான். அந்த ஆனந்தத்தில் சதா ஆடிக் கொண்டே இருக்கிறான் இறைவன். ''அனல் ஏந்தி ஆடுவான்'' ஆக விளங்குகிறான் இறைவன்.

பக்தி, என்றால் இறைவனை எட்டாத தூரத்தில் வைத்து பயந்து பயந்து வழிபடுவது அல்ல. இறைவனோடு கொஞ்சிக் குலாவி விளையாடுவது தான் பக்தி. அதற்காகத்தானே இறைவனே புதிய புதியகோலங்களில் உருவெடுத்துக் கோவிலில்எழுந்தருளுகிறார்? அதற்காகத்தானே தேரேறி வீதி உலா வருகிறார்.

கோவிலில் குடியேறித் தேரேறிப் பவனிவரும் இறைவனின் கருணையைக் கொஞ்சிக்குலாவுகிறது தமிழ். மாணிக்கவாசகரின் பக்தியாய்ப் பரிணமித்துக் கொஞ்சிக் குலாவுகிறது தமிழ்.

4

மயில் முட்டையை உடைத்துப் பார்த்தால் உள்ளே இருப்பது ஒரு சிரங்கை தண்ணீர்தான். அத்தண்ணீரின் உள்ளிருந்துதான் உருவிக்கொண்டு வெளியே வருகிறது மயில். கண் என்ன, காதென்ன, மூக்கென்ன, நீண்ட வளமான தோகை என்ன அவ்வளவும் ஒரு சிரங்கை தண்ணீரோடு தண்ணீராகவே இருந்தன. அவை மட்டுமா? பசி, தாகம், காதல், கோபம் முதலிய உணர்ச்சிகளும் தண்ணீரோடு தண்ணீராகவே இருந்தன. இனி தண்ணீர் தான் மயிலாக உருவெடுத்து வந்துவிட்டது என்று சொல்வதா! இல்லை, மயிலே அந்நீரிலிருந்து துள்ளி வெளியே வந்துவிட்டது என்று சொல்வதா? எப்படி என்று தெரியாமல் திகைக்கிறது உலகம்.

கை, கால், வாய், வயிறு முதலிய அங்க அடையாளங்கள் இல்லாத வெறும் தண்ணீரில் இருந்து, உருவ பேதங்களோடு கூடிய மயில்கள் புதிது புதிதாக வந்த வண்ணமாகவே இருக்கின்றன. அது போலவே, கடவுள் தத்துவத்திலிருந்து அண்ட பிண்ட சராசரங்கள் கோடி கோடியாய் வந்து கொண்டே இருக்கின்றன. அதாவது, கடவுள் தத்துவமானது கோடானகோடி உருவங்களில் அண்ட பிண்ட சராசரங்களாய்த் தோற்றம் அளித்த வண்ணமாகவே இருக்கிறது.

மயில் எழுந்து வெளியில் வரும்வரை முட்டை இருக்கும். குஞ்சாகப் பொரிந்து வெளியே எழுந்து மயில் வந்தபிறகு முட்டை இருக்காது. தான் அமர்ந்து வளர்ந்த இடத்தை முட்டையை மயிலால் பார்க்கமுடியாது. தேடினாலும் கிடைக்காது. முட்டை இருந்தால் மயில் இல்லை. மயில் இருந்தால் முட்டை இல்லை. இனி, சமுத்திரத்தைப் பார்ப்போம். கோடிக்கணக்கில் அலைகள் எழுந்த வண்ணமாக இருக்கின்றன சமுத்திரத்தில். ஒவ்வொரு அலையும் மலைபோல் எவ்வி நிமிர்கின்றன. சின்னஞ்சிறிய குமிழ்களும் கோடிக்கணக்கில் அங்கே தோன்றி மறைகின்றன. எவ்வளவு தான் நிமிர்ந்து எழுந்தாலும் அலைகளும் குமிழ்களும் சமுத்திரத்தை விட்டு விலகமுடியாது. சமுத்திரத்தோடு சமுத்திரமாகவே அவை இருக்கும். ஆனாலும் அலைகளுக்கும் குமிழ்களுக்கும் கண் இல்லை. கண் மூலம் எட்டிப் பார்க்கும் அறிவும் அவற்றிடம் இல்லை. மனிதர்களாகிய நம்மிடம் கண்கள் இருக்கின்றன. கண்களின் வழியாக ஓடிவந்து பார்க்கும் அறிவும் இருக்கிறது, என்ன இருந்து என்ன பலன்? அலைகளோடு கூடிய

சமுத்திரம் போல அண்ட பிண்ட சராசரங்கள் அவ்வளவுமாகப் பூத்துக்குலுங்கும் கடவுள்த்தத்துவத்தை - நம்மோடு நாமாகவே பூத்துக்குலுங்கும் கடவுள்த் தத்துவத்தை நம்மால் பார்க்க முடிகிறதா? இல்லையே. எங்கும் ஒரே வியாபகமாய் நிறைந்திருக்கிறது கடவுள்த் தத்துவம். அதனிடந்தான் நாம் தோன்றினோம். அதனோடு சேர்ந்தே நாம் இருக்கிறோம். ஆனாலும் அந்தக் கடவுள்த் தத்துவத்தை நம்மால் பார்க்க முடியவில்லை.

மலையைப் பார்க்கிறோம். சிற்றெறும்பைப் பார்க்கிறோம். நுண்மைக்கும் நுண்மையான அணுவைக் கூட கருவிகளின் மூலம் நாம் பார்த்துவிடுகிறோம். ஆனால் கடவுளைப் பார்க்க முடியவில்லை. கடவுளைப் பார்ப்பதற்கு ஏற்ற தெளிவும் பிரகாசமும் நம் அறிவிடம் இல்லை. கண்ணானது வெறும் கண்ணாடிதானே? அது என்ன செய்யும் பாவம்?

இது சம்பந்தமாக நக்கீரதேவ நாயனார் சொல்கிறார். இறைவனிடமே சொல்வதாக விஷயம்.

நீயும் நானும் வேறு வேறல்ல. ஒன்றுதான் என்கிற தீர்மானத்திற்கு வந்துவிட்டாலும் ஆபத்துதான். நீயும் தனியாக இல்லை நானும் தனியாக இல்லை என்கிற கணக்கில் உன்னைப் பார்க்க முடியாமல் போய்விடுகிறது. பாலும் தேனும் கலந்தபிறகு, பாலுமில்லை, தேனுமில்லை. அப்படித்தான் நம்முடைய காரியமும்! இனி, தனித்து நின்றும் உன்னைக்காண முடியவில்லை! கலந்து நின்றாலும் உன்னைக்காண முடியவில்லையே! பூங்கொத்துக்கள் போல, பழக்குலைகள் கனிந்து தொங்கும் சோலைகள் நிறைந்த கயிலாயநாதனே! உன்னுடைய காரியம் ஒன்றுக்கும் பிடிபடாத காரியமாக இருக்கிறதே? பேஷ், பேஷ், (இனியவா காண்நின் இயல்பு).

பாடல் கைலை பாதி காளத்தி பாதி அந்தாதியில் உள்ள பாடல்தான்.

''உணருங்கால் உன்னை
உருத்தெரியக் காட்டாய்;
புணருங்கால் பாலொடுதேன்
போல்வாய்; - இணரில்க்

கனியவாம் சோலை
கயிலாயம் மேயாய்!
இனியவா காண்நின்
இயல்பு.''

இறைவனுடைய திருவருள்தான் எல்லாம்என்பது ஞானிகளுக்கு தெரிந்துவிடுகிறது. நம் செயல் ஒன்றும் இல்லை என்று தங்களை அப்படியே இறைவனிடம் ஒப்படைத்துவிடுகிறார்கள் பக்தர்கள். இறைவனையே பெற்றுவிடுகிறார்கள். இந்த அதிசயம் எப்படி வருகிறது என்று பாருங்கள்.

''அப்பார், சடையப்பன், ஆனந்தவார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலைக்கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானை.

அற்புதமான பாடல்.

5

இனி சிருஷ்டி, திதி முதலிய தத்துவங்களுக்கும், தத்துவங்களுக்கெல்லாம் மூலமாகிய சக்திக்கும் கண்டு தெளிய முடியாத அற்புதம். திருப்பெருந்துறையில் வந்து ஆனந்தமாய் அமர்ந்து நிற்கிறது. நேருக்கு நேராக நின்று என்னை ஏற்றுக்கொண்டு விட்டது. தெள்ளத் தெளிந்த தேனாக இனிக்கும் அந்த அற்புதம் எனக்குத் தெரியாமலேயே என்னுள் அமர்ந்து கொண்டான். அமர்ந்தபடியே தன் கோலத்தை ஒளிமயமாக எனக்குக் காட்டு கிறான். மலை, கடல், நாடு, நட்சத்திரம் மனிதர், புல், எறும்பு எல்லாமே—உருவபேதங்கள் அவ்வளவுமேஎனக்கு விலகிவிடு கின்றன. எங்கும் அவனே காட்சி தருகிறான்.மிக்க பிரகாசத்தோடு வெட்ட வெளிச்சமாய்க் காட்சி தருகிறான். இப்படியாக வலிய வந்து எனக்கும் அருள்பாலிக்கும் பெருமானைப்பாடிப்பரவ வேண்டாமா? என்பது விஷயம்.

இனிப் பாடலைப் பார்ப்போம்.

''கிளிவந்த மென்மொழியாள்
கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மால்அயனும்
காணாத வித்தகனை;
தெளிவந்த தேறலைச்;
சீரார் பெருந்துறையின்

எளிவந் திருந்திரங்கி
எண்ணரிய இன்னருளால்
ஒளிவந்தென் உள்ளத்தின்
உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணனைப்
பாடுதுங்காண் அம்மானாய்'' (39)

6

இனி வேறொரு பாடல்.

கடவுள் தத்துவமானது இறுதி இல்லாதபடி எங்கும் வியாபித்திருக்கிறது. அதுதவிர வேறு ஒன்றும் இல்லை. அப்படியானால் பூரணமானது பரிபூரணமானது என்றுதான் கடவுள் தத்துவத்தைச் சொல்லவேண்டும். அப்படிச் சொல்வதில் ஒரு சிக்கல் ஏற்படுகிறது என்கிறார் மாணிக்கவாசகர்.

பூரணம், பரிபூரணம் என்றால் முற்றுபெற்றது. அதோடு சரி என்பதுதான் விஷயம். ஆனால் கடவுள் தத்துவமானது அண்டங்களாகவும் பேரண்டங்களாகவும் தொடர்ந்து தடையில்லாமல் விளைந்து கொண்டே இருக்கிறதே? அப்படியானால் முற்றுப் பெற்றது என்று எப்படி சொல்ல முடியும்? முற்றுக்கும் முற்றுமாய்—போகப்போக விரிந்து கொண்டே போகும் அற்புதம் (முடிவே இல்லாத பின்) என்றுதான் சொல்ல வேண்டும்.

தோற்றம், நிலை, மறைப்பு என்னும் இயல்புகளுக்கெல்லாம் மூலமாய் 'நிற்கிறான் இறைவன்' அதனால் அவனை 'முன்னோன்' என்று சொல்கிறோம். அதே முன்னோன் புதுப்புதுக் கோலங்களில் வந்த வண்ணமாகவே இருக்கிறான். முற்று என்பதே இல்லாமல் வந்துகொண்டே இருக்கிறான். அதனால் அவனை, 'பின்னான்' என்றும் சொல்ல வேண்டி இருக்கிறது.

இந்த அதிசய முரண்பாட்டை நினைந்து நினைந்து உருகும் ஞானிகளுக்கு அமிர்தமாக இருக்கிறான் இறைவன். அவன்தான் திருப்பெருந்துறையிலும் திருவானைக்கோவிலிலும் எழுந்தருளி நின்று, என்னை வா வா, என்று அழைக்கிறான். தென் பாண்டி நாடு முழுவதையும் சிவலோகமாகப் பொலிவிக்கிறான்.

இனிப் பாடல்.

''முன்னானை மூவர்க்கும்
முற்றுமாய், முற்றுக்கும்
பின்னானெம்; பிஞ்ஞகனைப்
பேணு பெருந்துறையுள்

மன்னானை, வானவனை,
மாதியலும் பாதியனை,
தென்ஆனைக் காவானைத்
தென்பாண்டி நாட்டானை,
என்னானை என்அப்பன்
என்பார்கட்(கு) இன்அமுதே
அன்னானை அம்மானைப்
பாடுதுங்காண் அம்மானாய்'' (40)

7

இனி வேறொரு பாடல்.

காரியத்தோடு காரியமாக ஒட்டிக் கொள்கிறான் மனிதன். பிறகு அதை விட்டுவிலக முடியவில்லை. நல்லது கெட்டது என்ப தெல்லாம் மனிதனைப் பொறுத்தவரை இல்லை. பாவமோ, புண்ணியமோ, அந்தக் கவலை ஒன்றும் கிடையாது. மனிதன் என்றால் அவனுக்கு ஒரு காரியம் வேண்டும். காரியம் இல்லாமல் மனிதனால் தனித்து நிற்க முடியாது.

தன்னுடைய காரியங்களைப் பார்த்துப் பார்த்து இறும்பூது எய்துகிறான் மனிதன். ''நாம் இல்லாவிட்டால் இவை ஒன்றும் நடைபெறா'' என்று மயங்குகிறான். நாம்தான் இவைகளுக்கு அதிகாரி என்று இறுமாப்பு வருகிறது. பிறகு நாம் தான் மூல புருஷன் என்கிற திமிர் வருகிறது. கடைசியாக, எல்லாக் காரியங் களுமே நம்மை வைத்துத்தான் நடைபெறுகின்றன என்னும் கிறுக்கே வந்துவிடுகிறது. ஆனந்தப் பரவசத்தோடு தன்னை மறந்து முளைத்துவருகிறது புல். ஆனால் மனிதன் என்ன நினைக் கிறான்? மண்ணுக்குள் கிடந்த இந்தப் புல்லின் குடுமியைப் பிடித்து வெளியே இழுத்துக்கொண்டுவிட்டது நான்தான்'' என்று நினைக் கிறான். நான் இல்லாவிட்டால் இந்தப் புல் ஏது? என்று நிமிர்ந்து பார்க்கிறான்.

---

(மாது இயலும் பாதியன் - உமையொரு பாகன். இன்அமுதே அன்னான் - தெவிட்டா அமிர்தந்தான் அவன்.

பாடல்கள் இரண்டும் அற்புதமானவை. பாடப்பாட, பக்தியும் பரவசமும் இன்னதென்று தெரியவரும். அவற்றின் உருவங்களும் இன்னதென்று தெரியவரும்.

திமிரும் ஆணவமும் இப்படி உண்டானபிறகு சும்மா இருக்க முடியுமா மனிதனால். செயல்களையும் காரியங்களையும் தனது உடைமையாகவே ஆக்கிக்கொண்டு சதா அதிகாரம் ஒன்றிலேயே மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறான் மனிதன். அதிகாரம் வந்து விட்டால் தவறுகளைப் பற்றி யோசனை வருவது இல்லை. தவறு கள் இயல்பானதாகவே மாறிவிடும் மனிதனுக்கு. காரியங்கள் நிறைவேற வேண்டுமானால் தவறுகள் இல்லாமல் எப்படி முடியும்? என்னும் சித்தாந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வான் மனிதன். ஆணவமும் அதிகாரமு ம் நிறைந்த மனிதனை நோக்கி— அவன் யாராக இருந்தாலும் சரி, அவனை நோக்கி மனிதர்கள் ஓடிவருவார்கள். ''அவனுடைய நிழலில் ஒதுங்கினால் அல்லது நாம் மனிதனாய் இருக்கமுடியாது,'' என்னும் பரபரப்போடு ஓடிவருவார்கள். வந்து அவனோடு சேர்ந்து கொள்வார்கள். அணி திரண்டு நிற்பார்கள். ''காரியங்களுக்கெல்லாம் நாயகன் இவன் தான் என்றும், இவன் இல்லாவிட்டால் ஒன்றுமே இல்லை என்றும்.'' அவனுக்காக இவர்கள் கத்துவார்கள், அவனுக்காகத் தங்கள் உயிரையே கொடுப்பது போல வெறி ஆட்டம் ஆடுவார்கள்.

தொண்டர் குழாமும் ஆரவாரமும் ஆணவத்தை, உறுதி செய்துவிடும். அந்த ஆணவம் பிறகு எதை வேண்டுமானாலும் செய்யும். தொண்டர்களின் கொடுமைகளை மூடி மறைப்பான். கொடுமைகள் செய்யத் தொண்டர்களைத் தூண்டியும் விடுவான். அடியார்களின் பாவங்களைப் பார்த்து தன்னுடைய பாவங்களை மறப்பான். அது ஒரு லாபந்தானே! இன்னொரு லாபமும் இருக்கிறது.

குற்றம் குறை இல்லாத ஒருவன்' தொண்டனாக இருந்தால் அவனை நம்பமாட்டான். ''இவன் நம் காலை வாரி விடுவான், காலை வாரி விடாமல் எப்பொழுதும் நம் காலடி மாட்டையே சுற்றிச் சுற்றி வரவேண்டுமானால், தவறுக்கு மேல் தவறுகளைத் தொண்டன் செய்யவேண்டும். அது சம்பந்தமான பிடிகள் நம் கைவசம் இருக்கவேண்டும். என்று நினைப்பான். இதற்காகவே தொண்டனைத் தவறு செய்ய இடங்கொடுப்பான். தவறு செய்த தொண்டனை அரவணைப்பான். தவறு செய்ய மறுப்பவனை எப்படியாவது கழற்றி விடுவான். இந்த விபரீதத்தைத் தற்கால

அரசியலில் பார்க்கலாம். உலகம் முழுவதும் இந்த நோய் வியாபித்திருக்கிறது. எந்த மருந்துக்கும் கட்டுப்படாத நோயாக வளர்ந்து விட்டது இந்த நோய். மனிதர்களுடைய காரியத்தில் தான் இப்படி ஒரு அலங்கோலம் என்பது இல்லை. இரணியன் காரியத்தில் தான் இப்படி ஒரு •அலங்கோலம் என்பதும் இல்லை. இரணியன் காலம் தொட்டே-அதற்கு முன்பிருந்தே-இன்று வரை, ஏன் அநாதிகாலம் தொட்டே இந்த அலங்கோலம் மனிதனோடு மனிதனாக வளர்ந்து வருகிறது.

'கடவுளுடைய காரியம் அப்படி அல்ல. உலகங்கள் எல்லாவற்றையும் அவர் உண்டாக்கினார். மனிதன் உள்ளிட்ட பிராணிகள் அவ்வளவையும் அவரே படைத்தார். புல் பூண்டுகளைக் கூடக் கடவுள் தான் உண்டாக்கினார். தான் உண்டாக்கிய அவ்வளவும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே சதா அவர் ஆடிக்கொண்டிருக்கிறார். தன்னுடைய விளையாட்டில் ஈடுபட்டு தன்னை நாடி ஓடி வருகிறவர்களின் ஆணவத்தைச் சுட்டுப் பொசுக்கி விடுகிறார். அதற்காகவே நெருப்பைக் கையில் வைத்திருக்கிறார். மனம் என்னும் குதிரை மேல் ஏறி அவர் மனிதனை நாடி வருகிறார். ஆணவம் உண்டாக்கிய பாசம் என்னும் சுற்றத்தைத் துடைத்தெறிந்து விடுகிறார்.

அதிகார வெறியும் ஆணவ மயக்கமும் ஒழிந்துவிட வேண்டும். வேரோடும் வேரடி மண்ணோடும் அவை அழிந்துவிட வேண்டும். அப்பொழுது தான் குற்றம் தொலையும், ஆனந்தம் பொங்கும். அதற்காகவே இறைவன் நடனம் ஆடுகிறார். அதற்காகவே அவதாரங்கள் பல எடுத்து அரிய அற்புதங்கள் பல நிகழ்த்துகிறார்; கோவிலில் குடி ஏறுகிறார். வீதி உலா வருகிறார். பக்தர்களை ஆவலோடு தேடி வருகிறார்.

வேண்டாத குணங்கள் பல இருக்கலாம் மனிதனிடம் ஆனாலும் ஒன்றிரண்டு நல்ல அம்சங்களும் சேர்ந்தே அவனிடம் இருக்கும். அந்த நல்ல அம்சங்களை அன்போடு எடுத்து அவற்றின் இனிமையைப் பாராட்டப் பாராட்ட அவனிடம் உள்ள வேண்டாத குணங்களின் விஷம் கரைந்து விடும். குற்றத்தை நீக்குவதில், இது ஒரு உத்தி. இந்த உத்தியையும் இறைவன் கையாளவே செய்கிறார்.

''குற்றங்கள் நீக்கி குணங்கொண்டு கோதாட்டுகிறார் பெருமான்''. இனிப் பாடல் முழுவதையும் பார்க்கலாம்.

"பெற்றி பிறர்க்கரிய
பெம்மான், பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல்
வந்தருளித், தன் அடியார்
குற்றங்கள் நீக்கிக்,
குணம்கொண்டு கோதாட்டி,
சுற்றிய சுற்றத்
தொடக்கறுப்பான்; தொல்புகழே
பற்றிப் பாசத்தின்
பற்றற நாம் பற்றுவான்
பற்றியபேர் ஆனந்தம்
பாடுதுங்காண் அம்மானாய்" (41)

---

குதிரையின் மேல் ஏறி எதற்காக வருகிறான்? வெறும் பவனிக்காகவா வருகிறான்? இல்லை அடியார்களின் இதயத்தில், உடைமை உணர்ச்சியும் அதிகார வெறியும் உள்ளனவா என்று தேடிப் பார்க்கவே அவரசம் அவரசமாக ஓடி வருகிறான் பெருமான். "இது நமக்குச் சொந்தம்" என்னும் உணர்ச்சி வந்து விட்டால், பிறகு அது இல்லாமல் மூச்சுக்கூட விட முடியாது? அப்படி, ஒரு பந்தம் வந்த பிறகு கோளாறு சும்மாவா இருக்கும். புதுப்புதுக் கோலத்தில் அவதாரம் எடுத்து ஒன்றன்பின் ஒன்றாக ஓடி வந்து உட்கார்ந்து கொள்ளும். கோளாறுக்கு ஆளாகி விடக்கூடாதே மெய்யன்பர்கள் என்னும் வேகத்தில் தான், கொற்றக் குதிரையின் மேல்—அவரவர் மனத்தின் மேலேயே ஏறி அமர்ந்து காட்சி தருகிறார் பெருமான்.

# வாசனைப் பொடி இடிக்க வேண்டும் நாயகனுக்கு

## 1

அன்பு என்றால் அதற்காக எல்லாவற்றையும் கொடுத்துவிடச் செய்யும். மனிதன் அன்பைப் பார்த்து விட்டால் போதும். பிறகு மனிதனால் சும்மா இருக்க முடியாது. தன்னிடம் உள்ளவற்றை ஒவ்வொன்றாகக் கொடுக்க வைக்கும். தன்னையே தத்தம் பண்ணும்படி செய்து விடும் அன்பு.

கொடுக்கக் கொடுக்க ஆனந்தம் பெருகுவது அன்பு ஒன்றில் தான். நான் என்கிற ஆணவம் ஓரளவாவது கரைவதும் அன்பு ஒன்றில் தான்.

பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்றுகிறது. தாய் தந்தையரை மதிக்கிறது. உற்றார் உறவினரை உபசரிக்கிறது. நண்பர்களை வரவேற்கிறது. பாராட்டுகிறது. பெரியவர்களுக்குப் பணிவிடை செய்கிறது. எல்லாம் அன்பு தான்.

அன்பிலிருந்து எளிமை வருகிறது. பொறுமை வருகிறது. தியாகம் வருகிறது. வீரம் விளைவதும் அன்பிலிருந்துதான். கோபம் என்னும் உணர்ச்சி கூட அன்பிலிருந்து உண்டாகும்.

உணர்ச்சிகளுக்கெல்லாம் ஊற்றாய் இருக்கிறது அன்பு. அன்பு என்னும் ஊற்றிலிருந்து ஒவ்வொரு உணர்ச்சியும் தெய்வ ஒளி யோடு பிரகாசிக்கின்றன.

பக்தியும் அப்படித்தான். மனிதன் தன்னிடம் உள்ளவற்றை பக்திக்காக தத்தம் பண்ணி விடுவான். உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் அர்ப்பணித்து விடுவான்.

கொடுக்கக் கொடுக்க ஆனந்தமாக இருக்கும். உல்லாசமும் சந்தோஷமும் கரை புரண்டு ஓடும். மேலும் மேலும் ஏதாவது செய்து கொண்டே இருக்கச் செய்யும். சும்மா இருக்க விடாது பக்தி

கோவில் கட்டி கோபுரமும் எழுப்பியாகி விட்டது. இனி ஒன்றும் பாக்கி இல்லை என்று நழுவவிடாது பக்தி.

அடியார்களை உபசரிக்க வைக்கும். திருவிளக்குகளுக்கு நெய் கொண்டு ஊற்றும்படி செய்யும். திரியைத் தூண்டும்படி செய்யும். நந்தவனத்தைக் கொத்திக் கொடுக்கத் தூண்டும். கோவிலையும் சுற்றுப்புறத்தையும் துப்புரவுபடுத்தச் சொல்லும். தேரை இழுக்க வடத்தைப் பிடிக்க வைக்கும். பசுவை உபசரிக்க ஆவலைஎழுப்பும். பசுவின் சாணத்தை எடுத்து வந்து, அதைச் சிவலிங்கமாகப் பிடித்து வைக்கும்படி ஆர்வத்தைப் பெருக்கும். பிடித்து வைத்த சாண உருண்டையில் அருகம்புல்லைச் சொருகி வைக்க ஏவும். சந்தனத்தை அதன் மேல் அபிஷேகம் பண்ணச் செய்யும். புஷ்பங்களைச் சொரிய வைத்து கண்ணைமூடி தன்னை மறந்து தியானம் பண்ணவே வைத்துவிடும்.

எல்லாம் பக்தியின் அற்புதந்தான். இனி, கணவனுக்காகவும் குழந்தைக்காகவும் ஒரு பெண் செய்கிற காரியம் இவ்வளவு என்று சொல்ல முடியாது. அப்படி ஒரு ஆவேசத்தையும் வேகத்தையும் உண்டாக்குகிறது அன்பு. சமையல் செய்கிறாள். சாப்பிட்ட தட்டங்களைக் கழுவுகிறாள். துணிகளைத் துவைக்கிறாள். அடுப்பை மெழுகுகிறாள். வீட்டைப் பெருக்கிக் குப்பையைக் கூட்டி அள்ளிப் போடுகிறாள். முற்றத்தைத் தெளித்துக் கோலம் போடுகிறாள். பாத்திரப் பண்டங்களை அடுக்கி வைக்கிறாள். குழந்தைகளை வளர்க்கிறாள். குளிப்பாட்டி விடுகிறாள்.

குளிர்ந்த தண்ணீரில் குளித்தால் ஒத்துக் கொள்ளாது. வெந்நீர்ப் போட்டு இறக்கி வைக்கிறாள். வெந்நீர் ஆறிவிடு வதற்குள் குளிப்பதற்கு ஞாபகப்படுத்துகிறாள். எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டுமானால், சீரகம், மிளகு, பூண்டு, இஞ்சி இவைகளை எண்ணெயில் போட்டு காய்ச்சிக் கொடுக்கிறாள். புண்ணாக்குப் பொடியைக் கரைத்து வைக்கிறாள்.

இவ்வளவையும் கடமை என்று அவள் செய்யவில்லை. ஆனந்தமாகச் செய்கிறாள். மூச்சுவிடாமல் ஒருவராலும் இருக்க

முடியாது. அதுபோல ஆனந்தமான செயல்களைச் செய்யாமல் யாரும் இருக்கமுடியாது.

அந்த நியதிதான் அன்பு. பக்தியும் அதுதான். மேனியில் போட்டுக் கொள்ள வாசனைப் பொடி இடிப்பாள் பெண். மஞ்சளுடன் சந்தனக் கட்டை முதலிய நறுமணப்பொருள்களைச் சேர்த்து உரலில் போட்டு உலக்கையால் குற்றி மாவாய் இடித்து விடுவாள். அப்படி இடிப்பதில் அவளுக்கு எவ்வளவோ ஆசை. தோழிப்பெண்கள் சேர்ந்து இடிப்பதும் உண்டு.

அன்பின் அற்புதங்களைப் பார்த்துப் பார்த்து அனுபவித்தவர் மாணிக்கவாசகர். உணர்ச்சிமயமாகக் காட்சிகள் உள்ளத்தில் நிற்கின்றன. நிலையாய் நிற்கின்றன. நாதி இல்லாத என்னைத் தேடி வந்து ஆதரித்த நாயகன் அல்லவா சிவபெருமான் என்று மருகுகிறார் மாணிக்கவாசகர்.

''சிவபெருமான் மேனியில் பூசிக் கொள்ள வாசனைப் பொடி இடித்துக் கொடுக்கவில்லையே நான்' என்று ஏங்குகிறார். அதற்காக சிநேகிதைகளைக் கூப்பிடுவதாக விஷயம்.

இனிப் பாடலைப் பார்ப்போம்.

(தானன தானன
தானதன் ன
தானன தானன
தானதன் ன)

வாள்த்தடம் கண்மட
மங்கைநல் லீர்
வரிவளை ஆர்ப்ப, வண்
கொங்கைபொங் க,
தோட்டிரு முண்டம்
துதைந்திலங் க,
சோற்றெம்பி ரான்என்று
சொல்லிச்சொல் லி,
நாள்க்கொண்ட நாண்மலர்
பாதம்பா டி,
நாயில்க் கடைப்பட்ட
நம்மைஇம் மை

ஆள்க்கொண்ட வண்ணங்கள்
பாடிப்பா டி,
ஆடப்பொற் சுண்ணம்
இடித்தும்நா மே. (42)

2

இறைவனுடைய திருவடி என்றால் அவனுடைய திருவருள் தான். எங்கும் நிறைந்த இறைவனுடைய செயல்தான்.

ஆனந்தமயமான இறைவனுடைய திருவருளை நினைத்தால் போதும். கவலை ஓடிவிடும். ஆனந்த பரவசந்தான். அவனுடைய திருவடிகளையும் திருமேனியையும் பாடிக் கொண்டே வாசனைப் பொடி இடிப்போம் நாம் என்கிறார்.

எந்த உரலில் எந்த உலக்கையைப் போட்டு எதை இடித்துப் பொடி பண்ணுவது?

பாடலைப் பார்க்கலாம்.

வையகம் எல்லாம்
உரலதா க;
மாமேரு என்னும்
உலக்கைநாட் டி,
மெய்எனும் மஞ்சள்
நிறையஅட் டி,
மேதகு தென்னன்
பெருந்துறை யான்;
செய்ய திருவடிப்
போதுபா டி,
செம்பொன் ஒளிபடர்
மேனிபா டி,

(வாள்தடம்கண் - பளபளவென்று வாள்போல் பிரகாசிக்கும் பெரியகண். வளை - வளையல். கொங்கை பொங்க - மார்பு குதித்துஆட. தோள்திரு முண்டம் துதைந்து இலங்க - தோளிலும் நெற்றியிலும் அணிந்த திருநூறு ஒளிவீச. சோற்றெம் பிரான் என்று சொல்லிச் சொல்லி - தேவர் நாயகனே போற்றி, திருச்சிற்றம்பலவனே போற்றி என்று வாழ்த்தி. ஸ்தோத்திரம் என்னும் சொல் தோத்திரம் என்று ஆகிறது. பொற்சுண்ணம் இடித்தும் நாம் - வாசனைப் பொடியை நாம் சேர்ந்து இடிப் போம் வாருங்கள்.)

ஐயன் அணிதில்லை
வாணனுக் கே
ஆடப்பொற் சுண்ணம்
இடித்தும்நா மே. (43)

3

வாயைத் திறந்து உதடுகள் பேசும்படி நன்றாகப் பாடுங்கள். இறைவனுடைய கல்யாண குணங்களைப் பாடி, பாடல்களுக்கு ஏற்றபடி ஆடி வாசனைப் பொடியை இடிப்போம். வாருங்கள்· எல்லோரும் வாருங்கள்.

மாடு நகைவாள்
நிலாஎறிப் ப,
வாய்திறந்(து) அம்பவ—
ளம்துடிப் ப,
பாடுமின் நம்தம்மை
ஆண்டஆ றும்,
பணிகொண்ட வண்ணமும்
பாடிப்பா டி
தேடுமின்; எம்பெரு
மானைத்தே டி,
சித்தம் திளைப்பத்
திளைத்துத்தே றி
ஆடுமின் அம்பலத்(து)
ஆடினா னுக்(கு)
ஆடப்பொற் சுண்ணம்
இடித்தும்நா மே (44)

4

சுவரில் இறக்குகிற ஆணிக்கும் எழுத்தாணிக்கும் வித்தியாசம் எவ்வளவோ இருக்கிறது. இனி, சுவரில் ஆணியை இறக்க அதன் உச்சியில் அடிக்கிற சுத்தியலுக்கும் ஆணிக்கும் உள்ள வித்தியாசம் அதிகந்தான். ஆனாலும் எல்லாம் இரும்புதான். இரும்புமயமே தான்.

---

(வையகம் - உலகம். மெய் - உண்மை. அதாவது அன்பு. ஆட்டி - கொட்டி. திருவடிப்போது - திருவருளாகிய புஷ்பம். போது-மலர்.)

மாடு நகைவாள் நிலாஎறிப்ப - முறுவலும் சின்னஞ்சிறு பற்களும் சேர்ந்து ஒளிவீச. அம்பவளம் துடிப்பட-அழகிய உதடுகள் துடிக்க.

உலகில் உள்ள வஸ்த்துக்கள் கோடி கோடியாய் உள்ளன, ஒன்றோடொன்று சம்பந்தம் இல்லை என்று சொல்லும்படி தனித்தனியாய் நிற்கின்றன. உண்மையில் அவை வேறு வேறு அல்ல. எல்லாம் ஒன்றுதான். கடவுள் மயந்தான்.

இந்த உண்மையை அனுபவித்து அந்த ஆனந்தத்தில் பொடி இடிப்போம் நாம்.

வேதமும் வேள்வியும்
ஆயினார்க் கு;
மெய்ம்மையும் பொய்ம்மையும்
ஆயினார்க் கு;
சோதியும் ஆய்;இருள்
ஆயினார்க் கு;
துன்பமும் ஆய்இன்பமும்
ஆயினார்க் கு;
பாதியும் ஆய்,முற்றும்
ஆயினார்க் கு;
பந்தமும் ஆய்வீடும்
ஆயினார்க் கு;
ஆதியும் அந்தமும்
ஆயினார்க் கு;
ஆடப்பொற் சுண்ணம்
இடித்தும்நா மே. (45)

---

வேதம் - மந்திரம். வேள்வி - செயல் ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லை. முரண்பட்டவை போல இருக்கின்றன. ஆனால், எல்லாம் கடவுளுடைய காரியமே. உண்மை, பொய், இருள், ஒளி, எல்லாம் இறைவனுடைய செயல்தான்.

# புத்தியைக் கொடுத்தது மட்டும் அல்ல தெளியவைத்ததும் அவன்தான்

மனிதனிடம் செல்வம் வந்து சேர்கிறது, புகழ் வந்து சேர்கிறது. சொன்னபடி கேட்க வேலைக்காரர்கள் வருகிறார்கள். மனைவி, மக்கள், பேரன், பேத்தியர் என்றெல்லாம் அணி அணியாக வருகிறார்கள். நண்பர்கள் வந்து கூடுகிறார்கள். கொஞ்ச காலம் சேர்ந்து இவர்கள் இருக்கிறார்கள். பிறகு ஒன்றன் பின் ஒன்றாய் எல்லாம் போய் விடுகின்றன. மனிதர்களும் ஒவ்வொருவராய் கிளம்பி விடுகிறார்கள். கிளம்பிப்போகாமல் இருந்தாலும், எல்லாவற்றையும் கைகழுவி விட்டதைப் போல் விலகியே நிற்கிறான் மனிதன்.

எதுஎதுவோ மனிதனிடம்வந்து சேர்கின்றன. அது அதுவாய்ப் பிரிந்து போய்விடுகின்றன. ஆனால் ஆணவம் ஒன்றுமட்டும் மனிதனிடம் வருவதும் இல்லை. போவதும் இல்லை. ஆணவமயமாகவே இருக்கிறான் மனிதன். மனிதன் என்றாலே ஆணவந்தான்.

நான் என்னும் எண்ணத்தை மனிதன் விடவே முடியாது. அதனிடம் நன்றாக மாட்டிக் கொண்டு விட்டான் மனிதன். அதனால் ஆணவம் சொன்னபடி தான் நடப்பான்; அதை மீற மனிதனால் முடியாது.

நான் என்பது உண்மை இல்லை. பொய்தான். ஆனாலும் அந்தப் பொய் சும்மா இருப்பதில்லை. என்னென்னவோ செய்கிறது. அதனுடைய இஷ்டத்துக்கு ஏற்றபடி மனிதன் தாறு

மாறாக நடந்து கொள்கிறான். ஒழுங்கோ, முறையோ, எதுவும் இல்லாமல் இஷ்டப்படி நடந்து கொள்கிறான்.

"நான் ஏன் இப்படி நடந்து கொள்கிறேன். என்னை ஆட்டிப் படைப்பது எது? அதன்பிடியில் அல்லவா நான் சிக்கிக் கிடக்கிறேன்" என்று மனிதன் யோசித்துப் பார்ப்பது இல்லை. யோசித்துப் பார்த்தால் போதும், ஆணவத்தின் பிடி தளர்ந்துவிடும். முடிச்சு அவிழும். சிக்கலும் விடுபட்டுப் போகும்.

நான் என்னும் நினைப்போடு சேர்ந்தே கிடக்கிறான் மனிதன். அதனால் ஒன்றையும் அவனால் சரிவரப் பார்க்க முடியவில்லை. எதைப் பார்த்தாலும் காசு பணமாகத்தான் பார்க்கிறான்.

பூவைப் பார்த்தாலும் சரி, சந்தனத்தைப் பார்த்தாலும் சரி, பெண்ணைப் பார்த்தாலும் சரி, பின் நாயைப் பார்த்தாலும் சரி ரூபாய் அணா பைசாவாகத்தான் மனிதன் பார்க்கிறான்.

நண்பர்களையும் அப்படித்தான் பார்க்கிறான். கடவுளைக்கூட மனிதன் பார்க்கிற பார்வை அப்படித்தான்.

அன்பு, மரியாதை, பிரியம், நம்பிக்கை ஒவ்வொன்றையும் விலை பேசி விற்பதுதான் மனிதனுக்குத் தொழிலாய்ப் போய் விட்டது.

அதனால் என்ன பிரயோசனம் என்றுதான் சொல்கிறானே ஒழிய எதைப்பற்றியும் பேசுகிறானா? எதையும் அனுபவிக் கிறானா? எதையாவது ஒன்றை ஆசையோடு பார்க்கிறானா? இல்லையே!

சிருஷ்டித்துவம் நடந்து கொண்டே இருக்கிறது. எண்ணிறந்த அம்சங்களில் அது நடந்தவண்ணம் இருக்கிறது. வானம், பூ, அணு, அண்டம் எல்லாவற்றிலும் சிருஷ்டி தத்துவம் நடந்து கொண்டிருக் கிறது. ஒரு புல்லில் நடக்கிற காரியமே போதும். நம் அறிவுக்கு எட்டாத எத்தனையோ நுட்பங்கள் அதில் செயல்படுகிறது தெரியும்.

ஒரு பலாப்பழத்துக்குள் இருக்கிற அமைப்பும் ஒழுங்கும் இப்படி அப்படி என்று வரையறுத்துச் சொல்ல முடியாதவை. கோவில், கோபுரம் இவைகளில் உள்ள சிற்பக்கலை எல்லாம் பலாப்பழத்தின் கட்டிட அமைப்பின் பக்கத்தில் வராது என்று தெரிந்துவிடும்,

ஒரு பலாப்பழத்தை அறுத்து வகிர்ந்து பார்த்தால் போதும். வித்தும் சுளையும் அவற்றைச் சிப்பம்கட்டி வைத்திருக்கிற பாங்கும் அற்புதமாக இருக்கும்?

தாமரைப்பூவின் அழகைப் பற்றியும் அமைப்புப் பற்றியும் சொல்ல வேண்டியதே இல்லை. அதிசயமாக இருக்கும்.

சிருஷ்டி தத்துவம் கோடான கோடி உருவங்களில் வந்து கொண்டே இருக்கிறது. சிருஷ்டிக்கு அதிதேவதை என்று பிரம்மனைச் சொல்கிறோம். அந்த பிரம்மா வெண்தாமரை மலரில் அமர்ந்து வீற்றிருக்கிறதாக வைத்திருக்கிறோம்.

சிருஷ்டியின் அதி அற்புதத்தை - தெய்வீகக் காட்சியை நாம் பார்ப்பதில்லை. அனுபவிப்பதில்லை.

மழையைப் போல ஒரு அற்புதம் உண்டா? உலகம் முழுவதை யும் அது காப்பாற்றுகிறது? அதற்காக அது சதா செயல்பட்ட வண்ணமாக இருக்கிறது. மழையைப் பற்றியும் நாம் யோசிக்கிற தில்லை. குறித்த நேரத்தில் அது வந்து உதவவேண்டும். இல்லா விட்டால் அதன்மேல் நமக்குக் கோபம் வரும். அது தான் நமக்கும் மழைக்கும் உள்ள உறவு.

இடி மின்னலோடு சமுத்திரத்தையே கொட்டுவது போல நீரைக் கொட்டுகிறது மழை. ஆறுகளாகவும், அருவிகளாகவும் திரண்டு ஓட நீரைக் கொட்டுகிற மழையை இந்திரன் (புரந்தரன்) என்கிறோம்.

வார்த்தைகள் - நாம் பேசுகிற வார்த்தைகள் தான். ஒவ்வொன்றும் அற்புதமாக உண்டாகி இருக்கின்றன. இவ்வளவு அருமையாய் எளிமையாய் எப்படி உண்டாயின வார்த்தைகள் என்று நமக்குத் தெரியாது. ஆனாலும் வார்த்தைகளின் தெய்வத் தன்மையை - நமக்கு அவை செய்கிற உபகாரத்தை நினைத்துப் பரவசப்பட வேண்டாமா? இல்லை, அதைப்பற்றி யோசிக்கவாவது வேண்டாமா. ஒன்றும் செய்வதில்லை நாம்.

உண்டான வஸ்துக்கள் குறிப்பிட்ட காலம் நிலைத்து நிற்கின்றன. அதுவும் அதிசயந்தான். சொற்களை வைத்து அரிய பாடல்களை உண்டாக்கி விடுகிறது ஒரு அற்புதம். தெய்வ கடாட்சம் என்று சொல்லும்படி இருக்கிறது, அந்த அற்புதம் இவற்றைப் பற்றி எல்லாம் நாம் யோசிப்பதில்லை.

பூமியில் நடக்கிற காரியங்களுக்கெல்லாம் சூரியன்தான் மூல நாயகன். காற்று, மழை, உயிர், உணர்ச்சி, பூமி, விளைச்சல் எல்லாவற்றின் சூத்திரக்கயிறும் சூரியனிடமே இருக்கிறது. அந்தச் சூரியனுடைய அற்புதத்தை உணர்ந்து அதிசயப்படுவது இல்லை.

ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒவ்வொரு வஸ்துவிலும் ஆயிரம் ஆயிரம் தத்துவங்கள் உள்ளன. நம் உடம்பை எடுத்துக் கொண்டாலே போதும். அதில் எத்தனையோ தத்துவங்கள் நின்று செயல்படுவது தெரியவரும். இந்த எண்ணிறந்த தத்துவங் களையே தேவர்கள் என்கிறோம், வானவர் என்கிறோம்.

மேலே குறிப்பிட்டவற்றில் எதுபற்றியும் நாம் யோசிப்ப தில்லை. நம்முடைய நினைப்பு எப்பொழுதும் நம்மைப்பற்றியே தான்.

நான் என்னும் ஆணவத்தின் மூலமே எதையும் மனிதன் பார்ப் பான். தன்னை ஒரு அளவு கோலாக வைத்தே எதையும் அளந்து பார்ப்பான். தன்னை மறந்து ஒன்றையும் பார்க்கமாட்டான் மனிதன்.

மனிதனிடந்தான் இப்படி ஒரு கோமாளித்தனம், வேறு எதனிடமும் இப்படி ஒரு கோளாறு இல்லை. சிருஷ்டி, மழை, வார்த்தை, தோற்றம், கலை, சூரியன், எண்ணிறந்த தத்துவங்கள் அவ்வளவும் தம்மை மறந்து இறைவனுடைய பேரருளை வியந்து பாராட்டுகின்றன!

எல்லாம் கடவுள் செயல் என்று முழக்கமிடுகின்றன. இறை வனையே சதா தேடி அலைகின்றன. இறைவனோ அவைகளுக்குக் கூடச் சிக்க மாட்டேன் என்கிறார்.

எல்லாமாய் விளைந்து நிற்கிறான் இறைவன். ஒன்றுக்கும் சிக்காமல் அற்புதமாய் மறைந்து நிற்கிறதும் இறைவன்தான். அந்த இறைவனை நினைத்து ஏங்குகிறார் மாணிக்கவாசகர். அவருடைய ஏக்கம் ராஜதோரணையோடு கூடிய பெரிய வண்டு கோத்தும்பி ஒன்றைப் பார்த்துப் பேசுகிறது.

நியதி தத்துவங்களுக்கெல்லாம் மூலமான திருவருள்தான் இறைவனுடைய பாதம். அதாவது சேவடி. அந்தத் திருப்பாகத் தில் தத்துவங்கள் கோடி கோடியாய் உண்டாகின்றன. ஒன்று

கூடப் பழுதுபடுவதில்லை. அத்தனையும் திருத்தமாய் - செம்மையாய் இருக்கின்றன. அதனால் அது 'சே ஏறு சேவடி' என்றுப் போற்றப்படுகிறது.

'இறைவனுடைய சேவேறு திருவடி என்னும் செந்தாமரை மலரிடம் போய் தேனை உண்பாய் வண்டே! அரச வண்டே!' என்கிறார் மாணிக்கவாசகர்.

(தானான தானான
தானான தானான)

பூஏறு நான்முகனும்,
புரந்தரனும், பொற்பமைந்த
நாஏறு செல்வியும்,
நாரணனும், நான்மறையும்,
மாஏறு சோதியும்,
வானவரும் தாம் அறியா
சேஏறு சேவடிக்கே
சென்றூதாய் கோத்தும்பீ! (46)

சிறிய இலை ஒன்று. அதன் வடிவமும் அமைப்பும் வெகு துல்லியமாய் இருக்கின்றன. அதன் நிறத்தைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. தெளிந்த குளுமையான அப்படி ஒரு நிறத்தை மனிதன் உண்டாக்க முடியாது. நிறத்தில்தான் எத்தனை தினுசுகள். பச்சை என்றால் அதில் ஆயிரக்கணக்கான பச்சை. சிவப்பு என்றால் அப்படியே. இப்படியே ஒவ்வொரு நிறத்திலும் எண்ணிறந்த வேறுபாடுகள்.

ஒவ்வொரு பூண்டின் இலைகளும் தமக்கு ஒரு நிறத்தையும் அமைப்பையும், வைத்துள்ளன; ஊழிஊழி காலமாக இவற்றை விட்டுவிடாமல் இலைகள் தம்மோடு சேர்த்தே வருகின்றன. இது அதிசயந்தான்.

---

(பொற்பு அமைந்த நாஏறு செல்வி - திருகல்முருகல் இல்லாத அழகிய சொற்கள். வார்த்தைகள் ஒவ்வொன்றும் கலைமகள் கடாட்சந்தான். அது காரணமாக, வார்த்தையை நாஏறு செல்வி என்று சொல்லி இருக்கிறது. நாரணன் - காக்கும் கடவுளாகிய திருமால். நான் மறை - பலவகைப்பட்ட கலைகள். மாஏறுசோதி- சூரியன். வானவர் - தத்துவங்கள்.)

இனி ஒவ்வொரு இலைக்குள்ளும் - அணு அணுவாய் அணுவுக்குள் அணுவாய் நடைபெறுகிற காரியங்களைப் பார்த்தால் நம் மூளை சிதறிவிடும். ஆயிரக்கணக்கான அம்சங்கள் - அதிநுட்பமான ஞாபகசக்தியோடு ஒன்றாய் நின்று சேர்ந்து செயல்படுகின்றன. இலையின் உள்ளே, ஒவ்வொரு அம்சமும் நம் அறிவுக்குப் புலப்படாதபடி ஆழமாய் இருக்கின்றன. தெய்வாம்சம் பொருந்தி உள்ளன. அதனால் இந்த நுணுக்கமான மர்ம ஜாலங்களை தத்துவங்கள் என்கிறோம். தேவர் என்கிறோம். இந்த அற்புத இயல்கள் அளவற்றன என்பதை உணர்த்த முப்பத்துமுக்கோடி தேவர் என்கிறோம்.

இழை நூலைவிட மெல்லியதாக இருக்கிறது இலை. அடுக்கி அடுக்கி ஒன்றன் மேல் ஒன்றாக பொதிந்து வைத்திருக்கிறது. அதனுள் ரத்த ஓட்டம் என்ன? நரம்பு மண்டலம் என்ன? எலும்பு என்ன? எல்லாம் ஒழுங்குபட அமைந்துள்ளன. மரத்தின் பசி, தாகம், கோபம், மகிழ்ச்சி எல்லாவற்றையும் இலையில் பார்க்கலாம். ஒவ்வொரு இலையிலும் பார்க்கலாம்.

வெளிச்சம், காற்று, இவற்றை இலையானது இழுத்துச் சேர்த்துக் கொள்கிறதையும், பல அம்சங்களாக அவற்றைப் பிரிக்கிறதையும், பிரித்து ஆகாரமாகச் சமைக்கிறதையும், பூண்டு முழுவதுக்கும் ஊட்டுவதையும் இலைக்குள் பார்க்கலாம்.

இந்த அற்புதத்தை இறைவனுடைய திருவிளையாடல் - நாடகம் என்றுதானே சொல்லவேண்டும். முன்னோர்களும் அப்படியே, இறைவனுடைய நடனம் என்றும் - ஆனந்த நடனம் என்றும் சொல்லி இருக்கிறார்கள்.

பேரண்டம் முழுவதும் அணுஅணுவாய் - அணுவுக்குள் அணுவாய் அந்த நடனம் நடந்து கொண்டிருக்கிறது. ஆனந்த நடனம் ஒன்றுதான், எங்கும் எப்பொழுதும் நடக்கிறது என்று சொல்லலாம்.

இறைவனே அந்த நடனமயந்தான். நடன சொரூபிதான் இறைவன். ஆனந்த சொரூபமான அந்த நடனத்தை நினைத்தாலே போதும். உணர்ச்சி எல்லாம் தேனாக ஊறும். அந்த நடனத்தைப் பற்றிப் பேசுகிற பொழுது ஏற்படுகிற இன்பத்துக்கு அளவு ஏது? அந்த நடனத்தைக் கண்ணாரக் கண்டால் வருகிற பரவசத்துக்கு எல்லை என்பது ஏது?

வண்டைப் பார்த்து மாணிக்கவாசகர் சொல்வதாக விஷயம்.

"ஆனந்த கீதங்களைக் கொட்டிக் கொண்டிருக்கும் நடன மலரில்ப் போய் உண்டு களிக்காமல் அல்பமான மலர்களை ஏன் சுற்றிச் சுற்றி வருகிறாய் வண்டே" என்பதாக விஷயம்.

எல்லாம் மனிதர்களை மனதில் வைத்துக் கொண்டு சொல்கிற காரியந்தான்.

திணைத்துணை உள்ளதோர்
பூவினில்த்தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும்
பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்(பு) உள்நெக
ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ. (47)

3

மாணிக்கவாசகர் பெரிய கல்விமான். இலக்கணம், இலக்கியம் அரசியல், அமைச்சியல், சமய இயல், ஆகமம் முதலிய சாஸ்திரங் களை எல்லாம் படித்து அறிந்த நிபுணர். உயர்ந்த பண்பாடு களுக்கு உரியவர். மேலான பதவி வகித்தவர்.

ஆனால், கண்ணப்பரோ வெறும் காட்டுமிராண்டி. கல்வி, அறிவில்லாதவர். நாகரிகம் இன்னது என்பதே தெரியாதவர். மேலெழுந்தவாரியான இந்த வேறுபாடு முக்கியம் இல்லை. உள்ளத்தில் உள்ள அன்புதான் முக்கியம். அதுதான் உண்மை.

மாணிக்கவாசகர் அந்த உண்மையைப் பார்க்கிறார். கண்ணப்பருடைய அன்பு ஜெகஜோதியாய்ப் பிரகாசிக்கிறது.

ஆனாலும் சிவபெருமான் கண்ணப்பரை அங்கீகரித்த மாதிரியே என்னையும் அங்கீகரித்து விட்டானே! இது என்ன அதிசயம் என்று வியக்கிறார்.

---

(திணைத்துணை உள்ளதோர் பூ - திணை என்னும் தானியம் சிறியது. அதுபோல் சிறிய மலர். எலும்பு - உடம்பு. ஆணவமயம் என்றால் அது உடம்புதான். அந்த ஆணவமே கரையும்படி. குனிப்பு - நடனம்.

கண்ணப்பன் ஒப்பதோர்
அன்பின்மை கண்டபின்
சுன்னப்பன் என்ஒப்பில்
என்னையும்ஆள்க் கொண்டருளி,
வண்ணப் பணித்தாங்கே
வாஎன்ற வான்கருணை
சுண்ணப்பொன் நீற்றற்கே
சென்றூதாய் கோத்தும்பீ. (48)

மருத்துவம் என்பது உயர்ந்த கலை. தேகத்துள் புகுந்து உயிரைத் தொந்தரவுப் படுத்துகிற நோயை வேரறக் களைந்து விடுகிறது மருத்துவம். விஷம் முறிந்து போவதால் தேகமும் உயிரும் சேர்ந்து கலகலப்பாக வாழமுடிகிறது. செயலும், ஊக்கமும், ஆனந்தமும் உண்டாக மருத்துவம் உதவுகிறது.

மனிதன் பெற்ற வரங்களில் மருத்துவம் சிறப்புடையது என்று சொல்லலாம்.

பச்சிலைகள் பற்றியும், பொன் முதலிய உலோகங்கள் பற்றியும் கசடறத் தெரிந்தவர்கள் மருத்துவர்கள். அதுமட்டுமல்ல; தேகம், ஆன்மா, உணர்ச்சி மூன்றும் பற்றிய தெளிந்த ஞானமும் அவர்களிடம் இருக்கவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக எல்லாம் கடவுளுடைய செயல்தான் என்ற ஒருமைப்பாடும் இருக்க வேண்டும்.

தற்காலத்து மருத்துவர்கள் நிபுணர்களாக இருக்கிறார்கள். கண் மருத்துவர், காது மருத்துவர், தோல் மருத்துவர், நரம்பு மருத்துவர், எலும்பு மருத்துவர், இதய மருத்துவர் என்று தனித் தனியாகவே இருக்கிறார்கள்.

புற்றுநோய் மருத்துவர், காசநோய் மருத்துவர், குஷ்ட ரோக நிபுணர் என்று நோய் வாரியாகவும் இருக்கிறார்கள்.

---

அன்பு இன்மை கண்டபின் - என் ஆணவத்தைப் பார்த்த பிறகும். என் ஒப்பு இல் என்னையும் ஆள்கொண்டு அருளி - கொடிய மூர்க்கனாகிய என்னையும் நண்பனாக ஏற்று. வண்ணப் பணித்து - அருமையோடு சேர்த்துக் கொண்டு. வா என்ற வான் கருணை - "என்னுடன் இருக்கலாம், வந்துவிடு" என்று அந்த அருளாளனை. சுண்ணப்பொன்நீற்றன்-பொடியாய் நீற்றிய திருநீறு அணிந்தவனை. வண்டே நீ சுற்றிச் சுற்றிப் பாடுவாயாக.)

மருத்துவத் துறையின் விசாலத்தை இந்த வகுப்புமுறை காட்டுகிறது, இருக்கட்டும்.

கண்ணுக்கு வெளியேயும் உள்ளேயும் அற்புதங்கள் பல உள்ளன. நம்பமுடியாதபடி அதிசயமானவை அவ்வுண்மைகள். அப்படியே காதிலும் இருக்கின்றன. வயிற்றிலும் இருக்கின்றன. ரத்தத்திலும் இருக்கின்றன. மூளையிலும் இருக்கின்றன.

கண் சம்பந்தமான நிபுணர் ஒருவர் ''அற்புதம் என்பது கண்ணில்தான் இருக்கிறது. மற்றவற்றில் இல்லை'' என்றால் ஏற்றுக் கொள்ள முடியுமா? முடியாது. அவருடைய தீர்ப்பைத் தள்ளி விடுவோம்,

காதைப் பற்றியும், தொண்டையைப் பற்றியும், குடலைப் பற்றியும், நாக்கைப் பற்றியும், பல்லைப் பற்றியும் ஒவ்வொரு நிபுணர்களும் அப்படி அப்படிச் சொல்கிறார்கள்.

அவர்கள் சொல்வது உண்மை போல இருக்கலாம். ஆனால் அது உண்மை அல்ல.

உறுப்புகள் எல்லாவற்றுக்கும் ஆதாரமாக உடம்பு இருக்கிறது. உடம்போடு சேர்ந்து உயிர் இருக்கிறது. உணர்ச்சியும் இருக்கிறது. இவ்வளவிலும் அற்புதம் நிறைந்திருக்கிறது. எல்லாவற்றிலும் ஒரே அற்புதந்தான் நிறைந்திருக்கிறது.

அற்புதம் என்பது ஒன்றுதான். அது எங்கும் எப்பொழுதும் நிறைந்திருக்கிறது.

எல்லாவற்றையும் ஒன்றாகக் காண்பதுதான் உண்மை. உண்மையை ஆனந்தமாய் அனுபவிப்பதுதான் பக்தி. ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஒதுக்கி வைத்து இதுதான் உண்மை, அதுதான் உண்மை என்று சாதிப்பது பக்தி அல்ல. அது மதம்.

பக்தி என்பது ஆனந்தத்தைக் கொடுக்கும் உண்மை. மதம் என்பது பிழைப்புக்கு வழிகாட்டும் பித்தலாட்டம். உலகம் முழுவதும் மதவெறியே இருக்கிறது. அது அட்டகாசம் பண்ணிக் கொண்டிருக்கிறது. உண்மையான பக்தி அபூர்வமாகத்தான் இருக்கிறது.

இது சம்பந்தமாக மாணிக்கவாசகர் சொல்கிறார்:

''பிழைப்பைப் பற்றிய கவலை இல்லாமல், என்ஆணவத்தைக் கரைப்பதற்காகவே நான் இறைவனை நம்பினேன்.''

ஆடம்பரம் மிக்க மதயானைகளை எல்லாம் அடக்கி ஒதுக்கி விட்ட எளியவனாகிய என்னைத் தன்னவனாக ஏற்றுக் கொண்டு விட்டான் பெருமான்.

நினைக்க நினைக்கத் தேனாக ஊறுகிறது அவன் கருணை.

அத்தேவர் தேவர்
அவர்தேவர் என்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப்
புலம்புகின்ற பூதலத்தே!
பத்தேதும் இல்லாமல்
பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே
சென்றூதாய் கோத்தும்பீ. (49)

5

மனிதர்கள் போகிற போக்கைப் பார்த்தால் இந்த உலகம் கிறுக்குப் பிடித்து அலைகிறது என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது. ஏமாளித்தனமும் கோமாளித்தனமுமாய் இருக்கின்றன காரியங்கள். இது கருதியே பைத்தியக்கார உலகம் (பித்தஉலகு) என்கிறார் மாணிக்கவாசகர்.

மனிதன் நம்புவது நான் என்பதைத்தான். தன்னைமட்டுமே உண்மை என்று நினைக்கிறான். தன்னை நிரந்தரம் என்றும் நினைக்கிறான். தான் தனி என்றும் நினைக்கிறான். விரும்பிய படியேதான் இங்கு வந்தது போலவும், வருவதற்கு முன்பும் இதே போல் இருந்ததாகவும், போகும்பொழுது இப்படியே போகப் போவது போலவும் எண்ணிக் கொண்டிருக்கிறான். போனபின்பும்

---

அத்தேவர் தேவர் அவர் தேவர் என்று இங்கு பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்து-இந்தச் சாமியார்தான் கண்கண்ட தெய்வம், அந்தத் துறவிதான் நடமாடும் தெய்வம் என்று வாய்க்கு வந்தபடி சொல்லிக் கூப்பாடு போடுகிறார்கள் ஜனங்கள். அடித்துப் பேசுகிற அந்த கூட்டத்தை ஒதுக்கிவிட்டு. நான் பற்றி நின்ற மெய்த்தேவர்க்கு - என்னிடம் வந்து உறவாடினான் இறைவன். அவனே தேவாதி தேவன்.)

மனைவி, மக்கள், பட்டம், பதவி, வீடு, வாசல், நன்செய், புன்செய் எல்லாம் தன்னுடைய பெயரிலேயே இருக்கும் - தன் உடைமையாகவே இருக்கும் என்று நினைக்கிறான்.

எங்கிருந்தாலும் அவை தன் கட்டுப்பாட்டில்தான் இருக்கும் என்றும், தன்னுடைய விருப்பப்படியே எல்லாம் செயல்பட வேண்டும் என்றும் தீர்மானம் பண்ணி இருக்கிறான்.

இதைக் கோளாறு - புத்தி தடுமாறி விட்ட சித்தக் கோளாறு என்றுதானே சொல்ல வேண்டும்? மாணிக்கவாசகரும் "சித்த விகாரக் கோளாறு" என்கிறார்.

இந்தக் கலக்கம் தெளிவது இறைவனுடைய சந்நிதியில்தான். அவனுடைய திருஅருள், வெள்ளப் பெருக்கோடு அருவியாய் விழுகிறது. அதில்தான் தலையைக் கொடுத்தேன். பைத்தியம் கரைய ஆரம்பித்து விட்டது. மனக்கலக்கம் சிறிது சிறிதாகத் தெளிந்து விட்டது என்கிறார் மாணிக்கவாசகர்.

வைத்த!நிதி பெண்டிர்
மக்கள்குலம் கல்விஎனும்
பித்த உலகில்;
பிறப்போ(டு) இறப்பென்னும்
சித்த விகாரக்
கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே
சென்றூதாய் கோத்தும்பீ. (50)

செல்வத்தைப் போல மனைவி மக்களையும் தன் விருப்பப் படியே நடந்து கொள்ளவேண்டும் என்கிறான். குலம்,

(வைத்த நிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வி எனும் பித்த உலகு - செல்வத்தை செல்வம் என்று நினைக்கவில்லை மனிதன். தன்னுடைய உடைமை என்று முத்திரை குத்தி வைத்துக் கொள்கிறான். அதனால் என் இஷ்டப்படி செல்வம் ஆடவேண்டும் என்று போராடுகிறான். நில் என்றால் நிற்கவேண்டும். உட்கார் என்றால் உட்கார வேண்டும். படு என்றால் படுக்க வேண்டும். அதாக ஒன்றும் யோசிக்கக்கூடாது. நான் சொன்னபடி கேட்க வேண்டும். என்று முடித்துக் கொள்கிறான். கோவில் கட்டவும் அதை ஏவுகிறான். கொலை பண்ணவும் அதை ஏவுகிறான். பூட்டியும் வைக்கிறான்.

கோத்திரம், படிப்பு, பதவி எல்லாவற்றையும் நான் என்னும் ஆணவத்துக்கு எடுபிடிகளாக உபயோகிக்கிறான். அப்படிப் பைத்தியங்கள் நிறைந்த இடம் இந்த உலகம். பிறப்போடு இறப் பென்னும் சித்தவிகாரம் - பிறப்பது இறப்பது எல்லாம் நான்தான் என்னும் மயக்கம். வித்தகத்தேவர் - அற்புதமான நாயகர்.

இறைவன் வெளியில் மட்டும் இல்லை. என்னுள்ளும் இருக் கிறான். நான் என்பதே அவன்தான். உடம்பு, உயிர், உணர்ச்சி முழுவதும் அவனேதான்.

எனக்குத் தெரியாமலே என்னோடு சேர்ந்திருக்கிறான் அவன். அதனால் அவனை நினைத்தால் போதும். எங்கிருந்து நினைத்தாலும் சரி. எப்பொழுது நினைத்தாலும் சரி! உடனே ஆஜர் என்கிறான். இதோ இருக்கிறேன் என்கிறான்! என்ன வேண்டும் என்கிறான்? கூப்பிட்ட காரணம் என்ன என்று கேட்கிறான். ''அட்டா! நம்மிடம் உள்ளவனையே தேடுகிறோமே! இது என்ன கொடுமை'' என்று தெரிகிறது.

என்னோடு நானாக இரண்டறக் கலந்த பெருமானை நான் எப்படி மறக்கமுடியும் என்கிறார் மாணிக்கவாசகர்.

''சட்டோ நினைக்க
மனத்தமுதாம் சங்கரனை,
கெட்டேன் மறப்பேனோ?
கேடுபடாத் திருவடியை
ஒட்டாத பாவித்
தொழும்பரை நாம் உருவறியோம்;
சிட்டாய சிட்டற்கே
சென்றூதாய் கோத்தும்பீ! (51)

---

சட்டோநினைக்க - நினைத்த மாத்திரத்தில் சட்டென்று தாமதம் இல்லாமல். மனத்து அமுதாம் சங்கரன் - உள்ளத்தை ஒளிமயமாக்கி உயிர் கொடுக்கும் இறைவன். ஒட்டாதபாவித் தொழும்பர் - உணர்ச்சி இல்லாத காரணத்தால் நான் என்று தனித்து நிற்கும் போக்கிரிகளுடன். உருஅறியோம். பழக மாட்டோம். சிட்டாய சிட்டன் - ஞானமயமான அருளாளன்,

# என்னைப் பாடவைத்துக் கேட்பதில் அவனுக்கு ஒரே ஆசை

7

மருத்துவரிடம் போகிறோம். உடம்பைச் சோதிக்கும்படி சொல்கிறோம். 'மூச்சை இழு' என்கிறார் மருத்துவர். நன்றாக இழு என்கிறார். "அதை அடக்கி நிறுத்தி வை" என்கிறார். பிறகு 'விடு' என்கிறார். மருத்துவர் சொன்னபடி செய்கிறோம். ரொம்பவும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஒரு தடவை மூச்சை இழுத்து விடுவதற்குள் திணறிவிடுகிறோம். ஒரு நொடி நேரம் 'தம்' பிடித்து நிறுத்துவதிலேயே போதும் போதும் என்றாகி விடுகிறது.

ஆனாலும் ஒவ்வொரு நாளும் விடாமல் தொடர்ந்து மூச்சை இழுக்கிற காரியமும், நிறுத்துகிற காரியமும், விடுகிற காரியமும் நடந்து கொண்டே இருக்கிறது· ஆயிரக்கணக்கான தடவை தினந்தோறும் நடந்தவண்ணம் இருக்கிறது. ஆயுள்நாள் முழுவதும் தொடர்ச்சியாய் நடந்து கொண்டிருக்கிறது. நம்மிடம் இப்படி ஒன்று நடந்து கொண்டே இருக்கிறதே? இம்மி அளவேனும் கஷ்டப்பட்டது உண்டா நாம்? இல்லை. இல்லவே இல்லை.

மூச்சை இழுக்கிறதும் விடுகிறதும் அது பாட்டுக்கு நடக்கிறது. நாம் தினந்தோறும் பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். ஒன்றோடொன்று மோதுவதில்லை.

நான் என்று ஒன்று வந்துவிட்டால் தொல்லையாய்ப் போகிறது. அதனுடன் போராடிக் கொண்டே இருக்க வேண்டி இருக்கிறது. அப்புறம் நிம்மதியாவது? ஆனந்தமாவது? எல்லாம் குழப்பந்தான், பயந்தான், கவலைதான்.

ஐந்து நிமிட நேரத்தில் என்ன பாடுபடுத்திவிட்டது 'நான்' என்பது. மருத்துவர் சாட்சியாக இருக்கத்தானே செய்கிறார்!

ஆனால் வாழ்நாள் முழுவதும் ஒரு சிரமமும் இல்லாமல் மூச்சை வாங்குவதும் விடுவதும் நடந்து கொண்டுதானே இருக்கிறது? அதில் சிக்கல் ஏற்பட்டால் படிக்கமுடியுமா? எழுத முடியுமா? வயலுக்குப் போக முடியுமா? சினிமாவுக்குத்தான் போகமுடியுமா? ஒன்றும் நடக்காது.

மூச்சானது உள்ளே போய் வெளியே வருவது போலவே காரியங்கள் எல்லாம் உள்ளன.

எல்லாம் இறைவனுடைய செயல்தான். இதுதான் உண்மை. இந்த உண்மை விளங்கினால்ப் போதும். குழப்பம் இருக்காது. பயம் இருக்காது. கவலையும் இருக்காது.

அன்புபெருகும், ஆனந்தம் பொங்கும், சும்மா இருக்கமுடியாது. செயலாற்றிக் கொண்டே இருக்கும்படி செய்யும். செயலில் ஈடுபட ஈடுபட உண்மை தெளிவாய்ப் பிரகாசிக்கும்.

மாணிக்கவாசகருக்கு உண்மை தெரிந்துவிட்டது. நம் செயல் ஒன்றும் இல்லை என்பது தெரிந்துவிட்டது. ஒரே எக்களிப்புத்தான். எக்களிப்பு எழுந்து நின்று பேசுகிறது. எப்படி என்று பார்ப்போம்.

கரணங்கள் எல்லாம்
  கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று
  சார்தலுமே தான்எனக்கு
மரணம் பிறப்பென்னும்
  இவைஇரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே
  சென்றூதாய் கோத்தும்பீ. (52)

8

உலகில் எல்லாம் காரியமாகவே இருக்கின்றன. மலையானாலும், புல்லானாலும், மனிதனானாலும் காரியமாகத்தான் இருக்கின்றன. அதனால் எல்லாவற்றுக்கும் காரணமும் கூடவே இருக்கின்றன.

ஆனாலும் அன்பு ஒன்றுமட்டும் காரியமாக இல்லை. அது உண்மையாக இருக்கிறது. அதனால் அதற்குக் காரணம் என்பது

இல்லை. எங்கு வேண்டுமானாலும் அன்பு உண்டாகும். எப்பொழுது வேண்டுமானாலும் அன்பு உண்டாகும்.

தரம், அந்தஸ்து, பலன், பெருமை ஒன்றைப்பற்றியும் அன்பு கவலைப்படாது. லாப நஷ்டக் கணக்குக்கும் அன்புக்கும் தூரம் அதிகம்.

குற்றத்தைப் பார்த்து ஒதுங்காது. குறையை எண்ணிப் பம்மாது. முரண்பாடு எத்தனை இருந்தாலும் பயப்படாது. குற்றத்தைக் கரைத்துவிடும். குறையை நீக்கிவிடும். பூரணமாக உயர்த்திவிடும் அன்பு. முரண்பாடுகளை நீக்கி ஒற்றுமைப்படுத்தி விடும் அன்பு.

அன்பின் அற்புதம் அது. இறைவனுடைய அருளும் அப்படியே.

மாணிக்கவாசகர் எங்கிருக்கிறார் என்று தேடி அலைந்தது திருவருள். அவர் போகிற இடம் எல்லாம் அவர் பின்னால் தொடர்ந்து போய்க் கொண்டே இருந்தது அந்தத் திருவருள். அவருடைய மனம், உணர்ச்சி, செயல், வெற்றி, தோல்வி எல்லா வற்றிலும் தன்னை இனங்காட்டி மாணிக்கவாசகரை வசப் படுத்தியது அந்தத் திருவருள்.

மாணிக்கவாசகர் குணம் எப்படி என்று அது யோசனை செய்யவில்லை. அவர் நடவடிக்கை எப்படி என்று ஆராய்ந்து பார்க்கவில்லை. தகுதி என்னவென்று நிறுத்துப் பார்க்கவில்லை. மாணிக்கவாசகரிடம் அன்பு பிறந்துவிட்டது. ஆர்வம் பிறந்து விட்டது திருவருளுக்கு.

வன்நெஞ்சக் கள்வன்
மனவலியன் என்னாதே
கல்நெஞ்(சு) உருக்கிக்
கருணையினால் ஆள்கொண்ட
அன்னம் திளைக்கும்
அணிதில்லை அம்பலவன்
பொன்னம் கழலுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ. (53)

9

சமுத்திரத்துள் கொண்டு போய் ஒரு குடத்தை அமிழ்த்து கிறோம். ஒரே அடியாய் குடத்தை நிறைத்து விடாது சமுத்திரம். குடத்தின் வாய் கொள்ளும் அளவே சமுத்திரம் உள்ளே போகும்.

குழந்தையிடம் உயிரையே வைத்திருக்கிறாள் தாய். ஆனாலும் உபசாரம் செய்கிறதென்றால் அப்படியே தலையில் வைத்துக் கட்டி விடமாட்டாள். உபசாரம் ஒவ்வொன்றாகவே நடக்கும். அளவோடு நடக்கும். மெள்ள மெள்ள நடக்கும்.

திரளை திரளையாக அன்னத்தைப் பிடித்து மெள்ள மெள்ளத் தான் கொடுப்பாள். நெற்றிக்கு ஏற்றபடிதான் திலகம் இடுவாள். மெள்ள மெள்ளத்தான் கண்ணுக்கு மை போடுவாள்.

குழந்தையிடந்தான் தாய் இருக்கிறாள். ஆனாலும் மெள்ள மெள்ளவே உபசரிக்கிறாள்.

மாணிக்கவாசகர்கூடவே இறைவன் இருக்கிறார். விலகி நின்றதே இல்லை. ஆனாலும் இறைவன் மாணிக்கவாசகர் மனதில் முளைத்த களையை ஒவ்வொன்றாகப் பிடுங்கி எறிகிறார். மெள்ள மெள்ளவே துப்புரவு பண்ணுகிறார். களை முழுவதையும் தெளித்துப் பயிரை ஊக்கப்படுத்துவதுபோல, சிக்கல் முழுவதையும் தெளித்தெடுத்து உணர்ச்சிக்கு ஊக்கம் கொடுக்கிறார் இறைவன்.

இறைவன் செய்கிற காரியம் எப்படி இருக்கிறது மாணிக்க வாசகருக்கு? இறைவனே மெள்ள மெள்ள - பையப் பைய தன் உள்ளத்துள் நுழைவது போல இருக்கிறது. ஒவ்வொன்றாய் ஒன்று விடாமல் களையைத் தெளித்தெடுப்பது போல இருக்கிறது.

பார்த்து அனுபவிக்கிறார் மாணிக்கவாசகர். நாமும் பார்த்து அனுபவிக்க இடம் கொடுக்கிறார்.

கள்வன் கடியன்
கலதிஇவன் என்னாதே,
வள்ளல் வரவர
வந்தொழிந்தான் என்மனத்தே;
உள்ளத்(து) உறுதுயர்
ஒன்றொளியா வண்ணம்எலாம்
தெள்ளும் கழலுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ. (54)

10

நாடு முழுவதுக்கும் அரசன் பொது. மக்கள் எல்லோருக்கும் அவன் சொந்தம். தேசம் முழுவதையும் பாதுகாப்பது அரசன் பொறுப்பு. ஆனாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாய் சில

சிறப்பான காரியங்களை அரசன் செய்வான். ஒரு சிலரை மட்டும் அப்போதைக்கப்போது விசேஷமாக உபசரிப்பான். பாராட்டு வான். நாடே மதிக்கும்படி மரியாதை செய்வான்.

ஏதாவது ஒரு அம்சம் அவர்களிடம் இருக்கும். கலையோ, இலக்கியமோ, பண்பாடோ, சமய ஞானமோ ஒரு அம்சம் அவர் களிடம் விசேஷமாக இருக்கும். அப்படி இருப்பது சாதாரண மக்களுக்கு முதலில் தெரியாது. மறைவாகவே இருக்கும். அப்படி ஒளிந்து கிடக்கும் அம்சங்களை எப்படியோ பார்த்து மதிக்கிறதை இன்றும் பார்க்கிறோம்.

தங்களுக்கே தெரியாமல் தங்களிடம் ஒரு அம்சம் சேர்ந்து இருந்திருக்கிறதே! என்பதைத் தெரிந்து அவர்கள் வியப்படைவார் கள். இது எப்படி அரசன் கண்ணில் மட்டும் பட்டது. என்று திகைப்பார்கள்! இதை ஒரு பொருட்டாக ஏற்று ஏன் இப்படி அவன் மதிக்கவேண்டும்? என்ன பாராட்ட வேண்டும்? என்று மயங்குவார்கள்.

இறைவனும் அப்படியே செய்கிறான்.

உலகம் முழுவதுக்கும் நாயகன் இறைவன். தாயும் அவன் தான். தந்தையும் அவன்தான். எல்லோரும் அவனுக்கு ஒன்று தான். ஆனாலும் அங்கங்கே சிலரைமட்டும் தேர்ந்தெடுத்து உபசரிக்கிறான். வலிய வந்து உதவுகிறான். தனக்கு அவர்களைச் சேக்காளி ஆக்கிக் கொள்கிறான். சேக்காளி ஆக்கிக் கொள்ள அவர்களை எப்படித் தயார் பண்ண வேண்டுமோ அப்படித் தயார் பண்ணவும் செய்கிறான். எதற்கும் அவன் தயங்குவதில்லை.

இந்த விநோதமான செயல் தொடர்ச்சியாய் நடந்து கொண்டிருக்கிறது. எங்கும் நடக்கிறது. இன்றளவும் நடந்து கொண்டிருக்கிறது.

சோதனைக்கு ஆளாகியவர் பலரை, சிவபெருமான் காப்பாற்றி இருக்கிறார். அவர்களுடைய வேதனைகளைப் போக்கி இருக்கிறார். சிவபெருமானுடைய உதவியைப் பெற்றவர்கள் பலர். எத்தனைபேர் என்று கணக்கிட முடியாது. அவ்வளவு பேருக்கும் சிவபெருமான் வலிய வந்து உதவி இருக்கிறார். வழி தெரியாமல் போய்க் கொண்டிருந்தவர்கள், இருளில் சிக்கித் தடுமாறியவர்கள், விபரம் இல்லாமல் அங்கும் இங்கும் முட்டித்

திரும்பியவர்கள். இப்படி பல ஆசாமிகளைக் காப்பாற்றி இருக்கிறார். வலிய வந்தே காப்பாற்றி இருக்கிறார்.

மனிதர்களுக்கு மட்டுமா கைகொடுத்து இருக்கிறார்? தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள் ஞானிகள் எல்லோரும் அவர் கையைப் பிடித்து எழுந்தவர்கள்தாம்.

சாதாரண மனிதர்கள், ஞானிகள் காரியம் இருக்கட்டும். யானையைத் தேடி வந்து உதவி இருக்கிறார். நாரைக்கு உண்மையை உணர்த்தி இருக்கிறார். பன்றிக்குட்டிகளின் பசியை நீக்கப் பால் சுரக்கும் மடுவாக இருக்கிறார்.

காட்டுமிராண்டியாகிய வேடனை, பழிபாவத்துக்கு அஞ்சாத ராட்சதனை, யாதொரு துணையும் இல்லாமல் அநாதையாய் காட்டில் பிரசவித்த பெண்ணை, தரித்திரத்தில் உழன்று பந்தயத்தில் குதித்த ஏழை அர்ச்சகனை (தருமியை), எமனுக்குப் பதில் சொல்லமுடியாமல் ஓடிவந்து கட்டிப் பிடித்த இளைஞனை இப்படி எத்தனையோ பேர்களைக் காப்பாற்றி இருக்கிறார் சிவபெருமான்.

துணையாக வந்து ஆதரவு காட்டிய சிவபெருமானிடத்து இவர்களுக்கு நன்றி உணர்வு உண்டாகும். சந்தோஷத்துக்கு அடையாளமாக ஏதாவது ஒன்றைக் கொடுப்பதற்கு மனம் அடித்துக் கொள்ளும். நம்மிடம் வலிய வந்து உதவியதை எண்ணி எண்ணி இன்புறுவது இயல்பு.

''எல்லோருக்கும் (சிவபெருமான்) செய்த உதவி சாதாரணம். எனக்கு (அவர்) செய்த உதவி தனி'' என்று ஒவ்வொருவரும் தனித் தனியே நினைத்துக் கொள்வார்கள். அதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தை வைத்துக் கொள்வார்கள். இதுவும் இயல்பான காரியந்தான்.

மாணிக்கவாசகரும் அப்படியே நினைக்கிறார். என்னை மட்டும் தனியாக - தனித்த உரிமையோடும் பரிவோடும் கவனித்தார் சிவபெருமான் என்று செம்மாந்து திளைக்கிறார், மாணிக்கவாசகர். ''என்னை வேறே ஆள்க்கொள்(ளும்) பிரான்'' என்று உற்சாகப்படுகிறார்.

படுகேவலமான அரசியலில் மீள முடியாமல் உழன்ற என்னை எங்கு கொண்டுவந்து நிறுத்திவிட்டார், பெருமான்? அடடா? பொன்னம்பலத்தின் வாயிலில் அல்லவா நிற்கிறேன்?

"மனிதனாக்கி விட்டாரே என்னை" என்று நினைக்க நினைக்க அவருக்கு எக்களிப்பாக இருக்கிறது.

உள்ளப் படாத
 திருஉருவை உள்ளுதலும்
கள்ளப் படாத
 களிவந்த வான்கருணை
வெள்ளப் பிரான்; எம்
 பிரான்என்னை வேறேஆள்
கொள்அப் பிரானுக்கே
 சென்றூதாய் கோத்தும்பீ. (55)

11

தெரியாமல் சுற்றி அலைந்த என்னை வழிக்குக் கொண்டு வந்ததோடு நின்றுவிடவில்லை, சிவபெருமான். என்னை மனிதனாக்கிவிட வேண்டும் என்று அவர் ஆர்வத்தோடு செயல் பட்டார். சபையில் நான் தலைநிமிர்ந்து நடமாட வேண்டும் என்று பல உத்திகளைக் கையாண்டார்.

என் உடம்பில் உள்ள நோய்களைக் களைந்தெறிந்தார். திடகாத்திரத்தோடு ஆஜானுபாகுவாய் நடமாட உதவினார். உடம்பைப் பற்றிய தொந்தரவே இல்லை. மாப்பிள்ளைக் கோலத்தையே கொடுத்துவிட்டார்.

உணர்ச்சிக்குத் தெளிவு கொடுத்தார். ஒளி கொடுத்தார். உயிரையே கொடுத்து விட்டார். கவலை, மயக்கம், எரிச்சல், வெறுப்பு, துன்பம், பயம் எல்லாவற்றையும் கிள்ளி எறிந்து விட்டார்.

சந்தோஷமாக இருக்கிறேன். உல்லாசம் என்னிடம் கரை புரண்டு ஓடுகிறது.

---

(உள்ளப்படாத - நினைத்துப் பார்க்க முடியாத, சிந்தனைக்கு எட்டாத. கள்ளப்படாத - கலப்படம் இல்லாத. வான்கருணை வெள்ளம் - கருணைக் கடலாகிய இறைவன். என்னை வேறே ஆள்கொள் அப்பிரான் - எனக்கென்று விசேஷமாக அவதரித்து வந்து, பழகி, உறவாடி, சிநேகிதம் பண்ணிக் கொண்டான் என்னை. அப்படிப் பரிவு காட்டிய அந்தப் பேராளன் அவன். அவனுடைய அருளை வாழ்த்திப் பாடு வண்டே! அரச வண்டே! பாடு. நன்றாகப் பாடு.)

உலகம் முழுவதோடும் உறவாடித் திளைக்கும்படி பக்குவப் படுத்தி அமைத்துவிட்டார்.

ஒன்றாய் முளைத்தெழுந்து
எத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை
நாய்சிவிகை ஏற்றுவித்த
என்தாதை தாதைக்கும்
தம்மனைக்கும் எம்பெருமான்,
குன்றாத செல்வற்கே
சென்றூதாய் கோத்தும்பீ. (56)

மாணிக்கவாசகரைச் சதா உத்சாகப்படுத்துகிறார். இறைவன், உத்சாகம் உண்டாக உண்டாக மாணிக்கவாசகருக்குப் பாட்டு வந்துவிடுகிறது. பாட்டு வந்தவுடன் ஊக்கமும் வந்து விடுகிறது. மாணிக்கவாசகருக்கு மட்டுமா வருகிறது ஊக்கம்? பாடலைக் கேட்டு அனுபவிக்கிற இறைவனுக்குமே ஊக்கம் பிறக்கிறது.

ஒரே குஷி இறைவனுக்கு. மாணிக்கவாசகருக்கு உபசாரம் மேலும் மேலும் கூடுகிறது. பாடல்களும் தொடர்ந்த வண்ணமாக இருக்கின்றன.

---

(ஒன்றாய் முளைத்து எழுந்து எத்தனையோ கவடுவிட்டு - பரம் பொருள் ஒன்று. அதுவே கோடான கோடி தத்துவங்களாகக் கிளைத்தது. கடலானது - பலபல அலைகளாக நிமிர்ந்து நிற்பது போல கிளைத்தது. உடம்பு என்பது ஒன்றுதான். பல அங்கங் களாய்த் தெரிகிறது. உணர்ச்சியும் ஒன்றுதான். வீரம் என்றும், காதல் என்றும், துன்பம் என்றும், இன்பம் என்றும், அழுகை என்றும், சிரிப்பென்றும் கிளைத்து எழுகின்றன. கடவுள் தத்துவம் ஒன்றே, வானம் என்றும் பூமி என்றும் மலை என்றும் கடல் என்றும் பிராணிகள் என்றும் பலபல கிளைகளாய்ப் புறப் பட்டுப் போய்க் கொண்டே இருக்கிறது.

நாய் - கீழானகுணம் உடைய என்னை. சிவிகை ஏற்றுவித்த - மற்றவர் காண உபகாரம் செய்து பெரிய பதவியை அளித்து விட்டான். தன்தாதை தாதைக்கும் தம் அ(ன்)னைக்கும் எம் பெருமான் - தகப்பன், பாட்டன், தாய், பாட்டி எல்லோருக் கும் மூலநாயகன். குலக்கொழுந்து. குன்றாத செல்வன் - கொடுக்கக் கொடுக்கக் குறையாதவன். நிறைந்தவன். பூரணமானவன் என்றும் நிறைந்தவன். எங்கும் நிறைந்தவன். அவனிடம்போய் ரீங்காரம் செய்வாய்வண்டே. போ உடனேபோ)

விஷயம் மெள்ள விளங்குகிறது மாணிக்கவாசகருக்கு, இறைவனுக்குப் பாடல் அல்லவா லட்சியமாக இருக்கிறது! என்று.

பாடப்பாட அல்லவா வல்லமை பெருகுகிறது! என்பதும் பையப் பையத் தெரிகிறது.

நாயேனைத் தன்னடிகள்
பாடுவித்த நாயகனைப்
பேயேன(து) உள்ளப்
பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென்
செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே
சென்றூதாய் கோத்தும்பீ. (57)

---

(சீ ஏதும் இல்லாது - அருவறுப்பு என்பது கடுகளவுகூட இல்லாமல். அதாவது என்னிடம் வெறுப்பே இல்லாமல் எப்பொழுதும் விருப்பம் ஒன்றையே காட்டி.)

# அம்மையப்பனாய் நின்று அருள்பாலிக்கிறான்

## 1

கிட்டத்தட்ட மனிதனைப் போலவே செயல்படும் அளவுக்கு எந்திரப் பொறிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. கையுள் அடங்கும் அளவிற்குச் சிறிய உருவங்களிலிருந்து, யானையைக் காட்டிலும் பெரிய பெரிய உருவங்களில் உருவாகி வருகின்றன எந்திரங்கள்.

எந்திரங்கள் சிறியதாக இருந்தாலும் சரி, பெரியதாக இருந் தாலும் சரி, அவற்றில் நூற்றுக்கணக்கான உறுப்புக்கள் இருக்கும். ஏன்? ஆயிரக்கணக்கான உறுப்புக்களோடு கூடிய எந்திரங்களும் உண்டு. ஆணி என்றும், கம்பி என்றும், கயிறு என்றும், தகடு என்றும், சக்கரம் என்றும், எத்தனையோ உறுப்புக்கள், விதவித மாக இருக்கும் எந்திரத்தில்.

விசைக் கருவியானது எந்திரத்தை இயக்குகிறது. விசைக்கருவி இயங்காவிட்டால், எந்திரப் பொறி அசைவற்று நின்றுவிடும். செத்த சவமாகவே கிடந்துவிடும்.

இனி விசைக்கருவி ஆட்டிவைக்கிற பொழுதும், எந்திரத்துள் ஒரு சிறிய ஆணியோ, கம்பியோ, பழுது பட்டால் போதும், எந்திரம் முழுவதும் படுத்துவிடும்.

சிறிது யோசித்துப் பார்த்தால் நமது உடம்பும் ஒரு எந்திரந் தான். ஏன், பிராணிகள் ஒவ்வொன்றின் உடம்பும் ஒரு எந்திரந் தான். அளவிடமுடியாத அற்புதத் தத்துவங்கள் நிறைந்த எந்திரந் தான் உடம்பு.

உடம்பில் பல்லாயிரக்கணக்கான தத்துவங்கள் நின்று செயல் படுகின்றன. கண், காது, இருதயம், கால், கை என்று பொறி களாகவும், புலன்களாகவும் நின்று செயல்படுகிறது உடம்பு. இந்தத் தத்துவங்களில் ஒன்றுக்குக் கோளாறு ஏற்பட்டுவிட்டால் போதும்; அடியோ, காயமோ, குத்தோ, வெட்டோ எதற்கு ஏற்பட்டாலும் போதும், தேகம் முழுவதையும் அது பாதித்து விடும். உடம்பு எப்படி ஒரு அதிசய எந்திரமோ, அப்படியே தான் சமூகமும் ஒரு அதிசய எந்திரம். மனித சமூகம் என்னும் அற்புத எந்திரத்துள் எத்தனையோ தத்துவங்கள் - ஒழுக்கம் என்றும் பண்பாடு என்றும், நெறிமுறை என்றும், சட்டதிட்டம் என்றும், பழக்கவழக்கம் என்றும் நின்று செயல்படுகின்றன. இவற்றில் ஒன்று பழுதுபட்டால் போதும், சமூகம் முழுவதும் பழுதுபட்டுப் போகும்.

புற்று நோயானது உடம்புக்குள் மளமளவென்று பரவுவது போல, முறைகேடு என்பது சமூகத்துள் நுழைந்து விட்டால், மளமளவென்று பரந்து விரிந்து, சமூகம் முழுவதையும் தன் ஆதிக்கத்தின் கீழேயே கொண்டு வந்து வைத்து விடும்.

சமூகத்தின் கட்டுக்கோப்பு, உலைந்து, நெறி முறைகளுக்கு ஆற்றல் குறைந்து விடுமானால், அயோக்கியத்தனங்களும் தடித்தனங்களும் தாண்டவமாடும்.

சமூகம் நிலைதடுமாறிவிட்டால் கொள்ளைக்காரர்கள் வேறு, அரசாங்கம் வேறு என்னும் பாகுபாடு இருக்காது. இரண்டும் ஒன்றாகிவிடும். கொள்ளையர்களின் தலைவனாக அரசாங்கமே செயல்படும்.

பணத்திற்காகவும், அதிகாரத்திற்காகவும் அறவுணர்வுகளையே காற்றில் பறக்கவிட்டுவிடுகிற சமூகம், பாஷை, கவி, இசை முதலிய கலைகளை எப்படி மதிக்கும்?

கயவர்கள் என்று நன்றாகத் தெரியும். அவர்களிடம் பணமும் அதிகாரமும் இருந்தால் போதும். அவர்களை உத்தமர் என்றும், சுத்த வீரர்கள் என்றும், கண்கண்ட தெய்வம் என்று கூடப் பாடிப் பரவ ஆரம்பித்து விடுவார்கள் கவிஞர்கள்.

உண்மையை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்னும் வீறாப் போடு கவிஞர்கள் சிலர் ஒதுங்கி நிற்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கிற கயவர்

குழாம் என்ன செய்யும் தெரியுமா? ஒன்றுக்கும் உதவாத டப்பாப் புலவர்களை வரவழைத்து அவர்களை உபசரிக்க ஆரம்பித்து விடும். அவர்கள் மேல் பொன்மாரியே பொழிந்துவிடும். கவிகுல திலகம், அகில உலக கவிராஜசிங்கம் என்றெல்லாம் பட்டத்தைச் சூட்டி அவர்களை வானளாவ உயர்த்தி உலாவவிடும்.

கயவர்களின் வள்ளன்மையை இந்தக் கவிகுல திலகங்கள் புகழ்வதும், கவிகுல திலகங்களைக் கயவர் குழாம் உபசரிப்பதும் போட்டி போட்டு நடக்கும்.

இந்த அலங்கோலத்தைப் பார்த்துப் பார்த்து உத்தமக் கவிஞர்களின் மூளையிலேயே அரிப்பு எடுத்துவிடும். நமக்கு ஏன் வம்பு என்று தலையைச் சொரிய ஆரம்பித்துவிடுவார்கள் உத்தமக் கவிஞர்கள்.

முதலில் கூசிக் கூசி வருவார்கள். பிறகு ராஜநடை போட்டு கயவர்களின் சந்நிதானத்திற்கு உத்தமக் கவிஞர்கள் வந்து விடுவார்கள்.

கவிஞர்களே அவல நிலைக்கு ஆளாகி விட்டால், பிறகு சமுதாயத்தில் வீரம் எங்கிருக்கும். கோழைத்தனமாய் செத்துப் போன சமுதாயத்தைத் தட்டி எழுப்ப ஒரே ஒரு சாதனந்தான் உண்டு. அதுதான் பக்தி. உண்மையான பக்தர் ஒருவர் போதும். சமுதாயம் முழுவதையும் ஆண், பெண், குழந்தைகள் எல்லோரையுமே வீரசேனையாக மாற்றிவிடுவார்.

பக்தர்களுக்கெல்லாம் வழிகாட்டக் கூடிய பரமபக்தர் மாணிக்கவாசகர். சமுதாயத்திற்கு எப்படி அவர் தைரியம் ஊட்டுகிறார் என்பதைப் பார்ப்போம்.

முதலில் சுந்தரமூர்த்தி நாயனாருடைய வீரம் எப்படி அதிகாரத் தோரணையோடு வருகிறது என்பதையும் பார்ப்போம்.

தமிழ்ப் பண்பையும், இசைப் பண்பையும், தாளப்பண்பையும் தெய்வத்தை மதிப்பதுபோல் மதித்து வழிபட்டவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். சுந்தர மூர்த்திகள் காலத்திலும் புலவர்கள் இருக்கவே செய்தார்கள். அவர்களில் சிலர் தமிழைப்பேச்சளவில் மதித்தாலும் காரியத்தில் பலர் அப்படி நடந்து கொள்ளவில்லை. தமிழை ஒரு வியாபாரச் சரக்காகவே உபயோகித்தார்கள். பணத்திற்காகவும் ஆடம்பரத்திற்காகவும் தமிழை யாரிடம் வேண்டுமானாலும் கூசாமல் விலைபேசி விற்று வந்தார்கள்.

ஆணவமும் பித்தலாட்டமும் நிறைந்த போக்கிரிகளிடம் அதிகாரம் இருக்கலாம், பதவி இருக்கலாம், செல்வமும் குவிந்திருக்கலாம். அதற்காக அவர்களைப் போய், ''கண்கண்ட தெய்வமே, கருணைக் கடலே'' என்று எதுகையிலும், மோனையிலும் வைத்து தமிழால் தாலாட்ட விட வேண்டுமா? தமிழையும் இசையையும் அப்படிக் கேவலப்படுத்துவதற்கு இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?

நஞ்சை விழுங்குவதுகூட எளிது, உண்மையை விழுங்குவது கடினம். உண்மையை விழுங்கி விட்டு, பொய்யை அலங்கரிக்க தமிழையும் இசையையும் ஒருவன் உபயோகிக்கிறான் என்றால் அவனுடைய வஞ்சகத்தை நல்லவர்களால் எப்படித் தாங்க முடியும்? அவர்களுடைய கொதியாத உள்ளமும் அப்பொழுது கொதித்து விடுகிறது.

சுகபோகமாக வாழவேண்டும் என்னும் பேராசையில் மாட்டிக் கொண்ட புலவர்களின் பரிதாபத்தைப் பார்த்த சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு ஆங்காரம் வந்தது. ஆங்காரத்தைத் தொடர்ந்து இரக்கமே வந்துவிட்டது.

அவர்களுடைய இழிசெயலை, பரிவோடு சுட்டிக்காட்டுகிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். எப்படி?

''கொடுமையும் நயவஞ்சகமும் நிறைந்த திருட்டுப்பயல்களையே வளைய வளையச் சுற்றி வருகின்றீர்களே! அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறீர்களே! நீங்கள் கவிபாடும் புலவர்கள் அல்லவா! அவர்களிடம் உங்களுக்கு என்ன வேண்டி இருக்கிறது? உங்களுக்கு வேண்டியதை அவர்களால் கொடுக்க முடியுமா? நிம்மதியும் சந்தோஷமும் அல்லவா மனிதர்களுக்குத் தேவை? அவை அவர்களிடமே இல்லையே? அப்புறம் உங்களுக்கு எப்படி அவர்கள் வழங்க முடியும்?''

''இதோ இந்தத் திருப்புகலூர்க் கோவிலில் எம்பெருமான் எழுந்தருளி இருக்கத்தானே செய்கிறான்? அவன் உங்களை எதிர் பார்த்த வண்ணமாகத்தானே இருக்கிறான்? அவனுடைய சல்யாண குணங்களைப் பாடிப் பாடி இன்பம் அடையுங்கள். அந்த இன்பத்தை வேறு எங்கும் பெறமுடியாது.''

இப்படிப் பாடுகிறார் சுந்தரமூர்த்திகள்.

"தம்மை யேபுகழ்ந்(து)
இச்சை பேசினும்,
சார்வி னும்ஒன்றும்
தருகி லாப்
பொய்ம்மை யாளரைப்
பாடா தே; எந்தை
புகலூர் பாடுமின்
புலவீர் காள்!"

எம்பெருமானுடைய அருளை அனுபவிக்கஅனுபவிக்க உள்ளம் உருகி விடும். உண்மையானது உணர்ச்சிமயமாகப் பொங்கிவிடும். பாடல்கள் தாமே உதித்து வரும்.

"பொய்யை வைத்துத்தான் பாட முடியும்! பொய்யே இல்லாமல் எப்படி எங்களால் பாடமுடியும்!' 'என்று திகைக்கிறீர்களா? பாடவேண்டாம் நீங்கள்.

இதோபாருங்கள் நந்தவனத்தை! இதில் உள்ள புஷ்பங்களைப் பறிக்க முடியாதா உங்களுக்கு! இரண்டு குடம் நீரெடுத்து எம்பெருமானுக்கு அபிஷேகம்கூடவா செய்யமுடியாது உங்களால்!

தண்ணீரும் பூவும் போதுமே! மூர்த்தியை மஞ்சனமாட்டி மலர்களைச் சாத்தி வைத்தாலே போதுமே! எட்டாத பரவெளி என்று சொல்கிறார்களே ஞானிகள். அந்தச் சிவலோகப் பேரானந்தமே உங்களைத் தேடிவந்து உங்களில் நிறைந்துவிடும். சாதாரண உலக நலன்கள் எம்மாத்திரம் உங்களுக்கு?

இனிப் பாடல் முழுவதையும் பார்க்கலாம்.

(தான தன்னன
தன்ன தன்னன
தான தன்னன
தான தன்)

"தம்மை யேபுகழ்ந்(து)
இச்சை பேசினும்,
சார்வி னும்;ஒன்றும்
தருகி லாப்
பொய்ம்மை யாளரைப்
பாடா தே;எந்தை
புகலூர் பாடுமின்
புலவீர் காள்!

இம்மை யேநறும்
பூவும் நீருங்கொண்(டு)
ஏத்த லாம், இடர்
களைய லாம்;
அம்மை யாம்சிவ
லோகம் ஆள்வதற்கு,
யாதும் ஐயுற(வு)
இல்லை யே. (58)

அறியாமையை மட்டுமல்ல அச்சத்தையே விரட்டித் துரத்தி விடுகிறது தமிழ். தைர்யத்தை அப்படி மனதில் கொண்டு வந்து நிறுத்திவிடுகிறது தமிழ்.

ஆயிரத்தில் ஒருவரோ, பதினாயிரத்தில் இருவரோ தாறு மாறாக நடந்து கொண்டால் சமூகம் ஒன்றும் அழிந்துவிடாது. ஆனால் நூற்றுக்கு எழுபது பேர் எண்பது பேர் முடிச்சு மாறிகளாய் ஒரு சமூகத்தில் நடமாட ஆரம்பித்து விட்டால், அங்கே அறஉணர்வு இருக்காது. இருந்தாலும் பைத்தியம் பிடித்தது போலப் பரக்கப் பரக்க விழிக்கும்.

அவர்களிடம் ஆசை ஒன்றே இருக்கும். அது ஆயிரம் தலை களையும் உயர்த்திப் படங்களை விரித்தவண்ணமாகவே இருக்கும். ஆனால் அன்பு மட்டும் இருக்காது. கண், காது முதலிய பொறிகள் அவர்களிடம் இருக்கும். ஆனால் எல்லாம் தலை கீழாகவே இருக்கும். அதாவது அலங்கோலந்தான் அழகாக இருக்கும். மெய்யுரை கசக்கும், பொய்யுரை தேவாமிருதமாக இனிக்கும்.

பணம் ஒன்றுக்குத்தான் மரியாதை. மனிதனைப் பற்றிய நினைப்பே இருக்காது.

சமுதாயம் முழுவதும் இப்படி அழுகி குளுகுளுத்துப் போனாலும், ஏதோ ஒரு மனிதனை ஏதோ ஒன்று வந்து ஒரு தட்டுத்தட்டும். மின்வெட்டுப்போல் பளிச்சென்று அந்த மனித னுடைய மனதை ஒரு தட்டுத்தட்டி, அந்தத் தெவ ஒளிய் வழிகாட்டிக் கொண்டே போகும்.

அந்த ஒரு மனிதனே சமுதாயம் முழுவதையும் திருத்தி விடுவான். பொய்யைப் பொய்யென்று காட்டிவிடுவான். மெய்யை மெய்யென்று விளக்கிவிடுவான். பயத்தைத் துரத்தி விடுவான், தைர்யத்தை ஊட்டிவிடுவான்.

தனக்குப் பார்வையையும் வழியையும் காட்டிய இறையருளை எண்ணி எண்ணி உருகுவான். உருகி உருகிக் கரைவான். சமுதாயத்தின் சீர்கேடுகளை எல்லாம் தன்னுடைய சீர்கேடாக ஏற்றுக்கொள்வான், தான் கண்ட வழியைச் சமுதாயத்திற்கு காட்டிக்கொண்டே இருப்பான். மாணிக்கவாசகர் அப்படித் தட்டி எழுப்பப்பட்டவர். இறைவனுடைய ஆள் அவர்.

தம் அனுபவத்தைத் தமிழ்ப் பாஷையினிடத்து எப்படி ஆசையோடு கொட்டுகிறார் என்று பாருங்கள்.

"ஜம்பத்தையும் படாடோபத்தையுமே வாழ்க்கை என்று நினைந்து ஏமாந்தவன் நான். என் மயக்கத்தைப் போக்கி என்னைத் தெளியவைத்தவன் பெருமான். அவனுடைய அருள் மயமான திருவடி மலர்களை, அரச வண்டே! நீ பாடிப் பாடி முழங்கு. நான் கேட்டுக்கேட்டு இன்புறுகிறேன்."

இனிப் பாடலைப் பார்ப்போம்.

"பொய்யாய செல்வத்தே
புக்கழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக்
கிடந்தேனை; ஆள்க்கொண்ட
ஐயா!என் ஆருயிரே!
அம்பலவா! என்றவன்தன்
செய்யார் மலரடிக்கே
சென்றூதாய் கோத்தும்பீ. (59)

---

(...என்று அவன் தன் செய்ஆர்மலர் அடிக்கு - என் அப்பனே, என் உயிருக்குயிரே, ஆடலரசே என்று வாழ்த்தி அவனுடைய செம்மை சான்ற அருள்மயமான திருவடி மலர்களை)

குறிப்பு :- அற்புதமான பாடல். பாடப்பாட நம் இதயம் கரைந்துவிடும். ஆணவமும் பொய்யும் ஆனந்தத்தில் கரைந்தே விடும். பாடி அனுபவிப்பதற்காகவே தமிழ் உண்டாகிஇருக்கிறதோ என்று சொல்லத்தோன்றும்.

மனிதகுலத்தின் மீது மாணிக்கவாசகருக்குள்ள அன்பும்பரிவும் அப்படியே கவியில் பிரகாசிக்கின்றன. அந்தஅன்பையும் பரிவையும் எடுத்து விநியோகிப்பதற்காகவே தமிழானது தாளத்தையும், இசையையும், எதுகையையும், மோனையையும் உண்டாக்கி வைத்திருக்கிறதோ என்று சொல்லத் தோன்றுகிறது.

அப்படி அற்புதமாய் இருக்கிறது பாடல்.

14

களை முளைக்கிறதே என்னும் எரிச்சலில் பயிரை அழித்து விடமுடியுமா? அப்படி அழித்து விட்டால், உழவுத்தொழில் எங் கிருக்கும்? பிறகு உணவும் இருக்காது. மனிதப் பூண்டும் எடு பட்டுவிடும்.

தொல்லையும், தோல்வியும் குறுக்கிடுகின்றனவே என்று வாழ்க்கையை - அதாவது குடும்ப வாழ்க்கையை அவமதிக்கலாமா? கேலியும் கிண்டலும் பண்ணி இல்வாழ்க்கையை மட்டமாகப் பேசு கிறவர்கள் கிறுக்கர்கள்தாம். பொறுப்புள்ளவர்கள் என்று அவர் களை நினைக்கக் கூடாது. வாழ்க்கையில் ஏற்படுகிற ஏமாற்றங் களையும், பயங்களையும் விரட்டி அடித்து சுறுசுறுப்பை ஊட்டு வதற்குத்தான் சமய வழிபாடுகள் இருக்கின்றன. சமய குருமார் கள் அதை உணர்ந்து செயல்பட வேண்டும். மற்றவர்களைக் காப்பதற்குத்தான் தியாகமே ஒழிய, அழிப்பதற்கு அன்று. தியாகத்தின் சின்னந்தான் துறவு.

வறுமையான ஒரு குடும்பம். அந்தக் குடும்பத்தில் பெண் குழந்தைகள் எட்டு. முதலாவது பெண் எப்படியோ உருண்டு புரண்டு, பி. ஏ. வகுப்பு வரை படித்துவிட்டாள். அவளுக்கு வேலையும் கிடைத்துவிட்டது. ஆனால் அவள் திருமணம் செய்து கொள்ளவில்லை. வாங்குகிற சம்பளம் முழுவதையும் குடும்பத் திற்குக் கொடுத்து விடுவாள். அலுவலக நேரம் போக ஓய்வு நேரத்தில் பக்கத்து வீட்டுக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தும், தட்டெழுத்தில் அடித்துக் கொடுத்தும், கிடைக்கிற வருமானத்தைக் குடும்பச் செலவிற்கே கொடுத்துவிடுவாள். தனக் கென்று ஒரு தம்பிடி கூட அவள் சேமித்து வைக்கவில்லை. ஒரு சிறு தவறுதலுக்குக்கூட அவள் இடங்கொடுத்ததில்லை. திருமணம் செய்து கொள்ளக் கூடாதா? வயது ஆகவில்லையா? என்று ஒரு முறை அப்பெண்ணிடம் கேட்க நேர்ந்தது.

''உடன் பிறந்தவர்கள் எல்லோரும் தலைநிமிர்ந்து அவரவர் காலில் நிற்கவேண்டும். அப்பாவும் அம்மாவும் கவலையில்லாமல் இருக்க வேண்டும். அதுதான் எனக்குக் கல்யாணம். வேறு என்ன இருக்கிறது வாழ்க்கையில்?'' என்று சொல்லிவிட்டாள். அந்தப் பெண் திருமணமே செய்து கொள்ளவில்லை. அவளுடைய உதவி யால் ஏழு உடன் பிறப்புக்களும் படித்து முன்னேறி விட்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் திருமணம் செய்து குழந்தைச் செல்வங்

களோடு ஆனந்தமாகவே இருக்கிறார்கள். பலரை வாழவைப்பதற்காக ஒருவர் தியாகம் செய்கிறார். தியாகம் செய்வதற்காகவே சிந்தாமல் சிதறாமல் தன்னை ஒரு போக்கில் வளர்க்கிறார். அது தான் துறவு குடும்பத்திற்காக தன்னுடைய இன்பத்தை - வாழ்க்கையை - தியாகம் செய்து வாழ்ந்தாளே ஒரு பெண். அவளுடைய காரியம் மெய்யான ஒரு துறவுதான்.

இப்படி எத்தனையோ பெண்கள். ஆண்களும்கூட இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் துறவிகள்தான். ஏதோ காவியைக் கட்டி, தாடியை வளர்த்தவர்களை மட்டும் துறவிகள் என்று எண்ணிவிடக் கூடாது. மற்றவர்களைக் காப்பதற்காக உயிரைக் கொடுத்து - நாட்டை - சமுதாயத்தைக் காப்பாற்றுகிறார்கள் போர்வீரர்கள். ஆன்ம வீரர்களாகிய துறவிகளும் அப்படித்தான் வாழவேண்டும். வாழ்க்கையில் அல்லல்பட்டு உழல்கிறவர்களுக்கு வாழும் நெறி காட்ட வேண்டியவர்கள் துறவிகள். வாழ்க்கை நலத்தைத் தெளிவாக மற்றவர்களுக்குத் தொடர்ந்து காட்டுவதற்காகத் தங்களை - தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்தவர்கள் துறவிகள்.

முன்காலத்தில் தவறுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே இல்லற வாழ்க்கையில் நிகழ்ந்தன. அதனால் இல்லற வாழ்க்கையில் இருந்தவர்களே மற்றவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டி உடனுக்குடன் திருத்திவிட முடிந்தது. காலப்போக்கில் தவறுகள் பெருகிவிட்டன. அயோக்கியத்தனத்தின் தோல், சூடும் இல்லாமல் சுரணையும் இல்லாமல் தடித்துப் போய்விட்டது. அதனால் இல்லறத்தாரால் இல்லறத்தைத் திருத்தி வழிக்குக் கொண்டுவர முடியவில்லை.

காடாய் மண்டிக் கொழுத்துவிட்ட பித்தலாட்டங்களைக் களைந்தெறிவதற்கு, ஒருசிலர் வீராவேசத்தோடு களத்தில் குதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. போர்க்களத்தில் போர்க்கோலம் பூண்டு குதித்துக் கொடியவர்களைச் சாடி எறிவதைப் போல துறவுக்கோலம் பூண்டு சமுதாயக் கொடுமைகளை அறுத்தெறிகிறார்கள் அருளாளர்கள். மற்றவர்களிடம் சுரக்கின்ற அருளே துறவறத்தின் உயிர். அருளைத் தொடர்ந்து செயல்படுத்திய வண்ணம் இருக்கிறார்கள் துறவிகள். அவ்வாறு ஒருசிலர் கருணையால் தியாகம்செய்து - துறவுக்கோலம் பூணாவிட்டால், சமுதாயம் நெறிமுறை இல்லாமல் போய் சிதறிவிடும்,

இல்லற ஒளியை அணையாமல் காப்பாற்றுகிறவர்கள் துறவிகள். இல்லறஒளியை அணைத்து இருட்டாக்கிவிடுகிற சந்நியாசம் அல்ல துறவு.

''ஹால்டஸ் ஹக்ஸ்லி'' என்பவர் இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்த பேரறிஞர். சகலகலா வல்லுநர். கிறிஸ்துவ சமயம் பற்றி அவர் சொல்கிறதைப் பார்ப்போம். ''கிறிஸ்துவ சமயத்தில் பல பழக்கவழக்கங்கள் - அதாவது மரபு நிலை மாறாத சடங்குகள் இருந்தன. அவை ஒவ்வொன்றும் உண்மையின் அடையாளங்களாக விளங்கின - காலப்போக்கில் அடையாளங்கள் உணர்த்தும் தத்துவ உண்மைகள் மறைந்துவிட்டன. பொருளற்ற வெறும் சடங்குகளே மிஞ்சி நின்றன.

பொருளற்ற சடங்குகளை மட்டும் தஞ்சம் என்று பிடித்துக் கொண்டிருந்தது கத்தோலிக்க கிறிஸ்துவப் பிரிவு. அதை எதிர்த்து உண்மையை வெளிப்படுத்துவதற்காக கிறிஸ்துவ சமுதாயத்திற்குள் ஒரு புரட்சி உண்டாகியது. அந்தப் புரட்சியில் பிறந்தது ' பிராட்டஸ்ட்டண்ட்'' என்னும் கிறிஸ்துவப் பிரிவு. பிராட்டஸ்ட்டண்ட் என்ன செய்தது? சடங்குகளிலும் சின்னங்களிலும் உள்ள உண்மையைத் துலக்குவதற்குப் பதில், சடங்குகளே வேண்டாம், அடையாளச் சின்னங்களே வேண்டாம் என்று ஒழித்துக் கட்டிவிட்டது. உபதேசங்களும் சேவையும் இருந்தால் போதும் என்று தீர்மானம் செய்து நிறைவேற்றியும் விட்டது.

இது சம்பந்தமாக ஹக்ஸ்லி சொன்னார்: ''பேஜின் என்னும் தகரத்தொட்டியில் தண்ணீர் விட்டு, அதில் குழந்தையைப் போட்டுத் தாய்மார்கள் நீராட்டுவார்கள். நன்றாக அழுக்குத் தேய்த்துக் குளிப்பாட்டுவார்கள். குளிப்பாட்டி முடித்தவுடன் தொட்டியிலிருந்து குழந்தையை எடுத்து; நன்றாகத் துணிவைத்து துவட்டி விடுவார்கள். பேஜினில் உள்ள அழுக்கு நீரை வாறுகாலில் கொட்டி விடுவார்கள். இனி, குழந்தையைத் தொட்டியிலிருந்து எடுக்காமல் அழுக்கு நீரோடு சேர்த்து ஜலதாரையில் கவிழ்த்து விடுவது பைத்தியக்காரத்தனம் அல்லவா? அப்படி ஒரு பைத்தியக்காரத்தனத்தைச் செய்துவிட்டது பிராட்டஸ்ட்டண்ட்'' என்றார் ஹக்ஸ்லி.

உலகம் முழுவதும், மதவாதிகள் எப்படி இருக்கிறார்கள்? தண்ணீரோடு குழந்தையையும் சாக்கடையில் கொட்டுகிறவர்களாகவே இருக்கிறார்கள். சந்நியாசம் போதும் என்கிறார்கள். இல்லறம் வேண்டாம், அது பாவம் என்று சொல்லி விடுகிறார்கள்.

பழிபாவத்திற்குப் பயப்படாமல் மற்றவர் வாழ்க்கையைத் திருடி கொழுத்தலையும் கயவர்களிடம் போய், செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, பற்றி இவர்கள் உபதேசிக்க வேண்டும்.

ஆஸ்ரமங்களையும் மடங்களையும் சுற்றிச் சுற்றி வருகிறவர்கள், மேலே குறிப்பிட்ட போக்கிரிகள் தாம். இவர்களில் ஒருவரைக் கூட மதபோதகர்களால் திருத்த முடியவில்லை. வாழ்க்கையைக் கேவலப்படுத்தும் அடிதடியன்களைத் திருத்த முடியாத சமய குரவர்கள், வாழ்க்கைக்காக ஏங்கும் நல்லவர்களிடம் வந்து, ''அது நிலையாதது இது நிலையாதது'' என்று ஆரவாரம் பண்ணுகிறது, இது கொடுமை.

சமய ஒளியானது நிர்வாக அமைப்புக்குள் வந்ததால் ஏற்பட்ட விபரீதம் இது. இந்த அலங்கோலம் மாணிக்கவாசகரைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்து விட்டது. சந்நியாசிகளும் அவர்களுடைய ஸ்தாபனங்களும், அபத்தம் என்று பட்டுவிட்டது மாணிக்கவாசகருக்கு.

''இல்லறந்தான் வாழ்க்கை. அது இல்லாவிட்டால் வேறு ஒன்றுமே இல்லை.'' என்று சிவபெருமானே சொன்னாலும் மனிதர்களுக்குப் புரிய மாட்டேன் என்கிறது. அதனால் அவர் வெறுமனே நிற்காமல், சிவமும் சக்தியுமாகவே - நாயகனும் நாயகியுமாகவே நிற்கிறாராம். ஒளிவு மறைவு இல்லாமல் எல்லோரும் காணும்படி நேருக்கு நேராகவே நிற்கிறாராம்.

ஒரு(வலப்)புறத்தில் புலித்தோல் ஆடையும், குண்டலம் என்னும் காதணியும், திருநீற்றுப் பூச்சும், சூலாயுதப் படையும் துலங்குவதுடன், மறு(இடப்)புறத்தில் பொன்னாடையாகிய சேலைக் கட்டும், வட்ட வளையமாகிய வயிரத்தோடும், சந்தனப் பூச்சும், கிளியும், கலகலக்கும் வளையல்களும் துலங்கக் காட்சி தருகிறாராம் இறைவன். ஆணும், பெண்ணும், கணவனும் மனைவியுமாக நடத்தும் இல்லறந்தான் வாழ்க்கை. அதுதான் உலகம்; அதுதான் உண்மை. இது சம்பந்தமாக மாணிக்கவாசகர் பாடுகிறார்:

(தான தானன
தனன தன்னான)
''தோலும் துகிலும்
குழையும், சுருள்தோடும்

பால்வெள்ளை நீறும்
பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க
வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக்
குளிர்ந்தூதாய் கோத்தும்பீ!'' (60)

---

குறிப்பு :- அம்மையும் அப்பனுமாய் - நாயகனும் நாயகியுமாய், சிவமும் சக்தியுமாய் மங்கள கோலத்தில் நிற்கிறார் பெருமான். அந்தக் கோலம் மாணிக்கவாசகரைச் சதா நினைப்பூட்டிய வண்ணமாக இருக்கிறது. அதை மறக்க முடியவில்லை மாணிக்கவாசகரால்.

''தோலும் துகிலும்
குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும்
பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க
வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக்
குளிர்ந்தூதாய் கோத்தும்பீ!''

என்று பாடிக்கொண்டே இருக்கிறார். உள்ளம் உருகி உருகிப் பாடிய வண்ணமாகவே இருக்கிறார்.

இறைவனை ஆணும் அல்லன் பெண்ணும் அல்லன் என்று சொல்லுவார்கள். அப்படியானால் அலியா இறைவன்! என்றால் அதுவும் இல்லை. அதாவது அலியும் இல்லை என்று சொல்லி உள்ளார்கள். அப்படியானால் அதற்கு என்ன பொருள்? வெறும் ஆணோ பெண்ணோ அல்ல இறைவன். பிரபஞ்சம் முழுவதையும் பெற்றெடுத்துக் காப்பாற்றும் தாயும் தந்தையுந்தான் இறைவன். மாப்பிள்ளையும் பெண்ணுமான, சிவமும் சக்தியுந்தான் இறைவன்.

இந்த உண்மையைத் துலக்கிக் காட்டுவதற்கே இறைவனை ஆணும் அல்லன், பெண்ணும் அல்லன், அலியும் அல்லன் என்று உணர்ச்சிமயமாய்ச் சொல்லி இருக்கிறார்கள் முன்னோர்கள். பிரபஞ்சம் முழுவதையும் பெற்றெடுத்துக் காப்பாற்றுகிற அற்புதம் அல்லவா, சிவசக்தி! அதுகாரணமாகவே சிவசக்தி கோலத்தை, 'தொன்மைக் கோலம்' எனக் குறிப்பிடுகிறார் மாணிக்கவாசகர்.

உண்மையைப் பார்க்க மனிதர்கள் கூசுகிறார்கள். உண்மை மட்டும் மக்களுடைய மனத்துள் தனித்துப் புகுந்து கலக்க முடிய வில்லை. உண்மைக்குத் துணையாக ஏதாவது ஒன்று வேண்டி இருக்கிறது. ஒரு சாயலில், ஒருபோக்கில், ஒரு தோரணையில் நின்று உண்மையானது வெளிப்பட்டால்தான், ''நான் முந்தி நீ முந்தி'' என்று போட்டி போட்ட வண்ணமாய் உண்மையைப் பார்க்க ஓடி வருவார்கள். வேடிக்கை பார்க்கக்கூட அதன் பிறகு தான் கூட்டம் சேரும்.

தமிழின் பெருமை, தமிழ்ப் பண்பாட்டின், பெருமை, சைவ சமயத்தின்பெருமை ஆகியவற்றைத் தமிழன்சொன்னால், தமிழன் காதில்ஏறவா செய்கிறது? யாராவதுஅன்னியன் வந்து ''...அடடா! என்ன அற்புதம் தமிழர்களுடைய காரியம்'' என்று சொல்ல வேண்டியது. அதன்பிறகுதான் தமிழர்கள் மண்டையைச் சொரி வார்கள். இனி, எதையும் சின்னா பின்னம் ஆக்கிவிடுவார்கள் என்னும் பேர் வாங்கிய முனிவர்கள் மூலம், விஷயத்தை வெளியிட்டால், வாயைப் பிளப்பார்கள்.

மன்னர்கள், அதிகாரிகள், அடிதடியர்கள், அரசியல்வாதி களாவது உண்மைக்கு வக்காலத்து வாங்க வேண்டும். இந்தக் கொடுமையை அனுபவித்தவர் மாணிக்கவாசகர். அதனால் ''சிவ சக்தி கோலத்தை - அதன் அற்புதத்தை, ''வண்டே, நீ சொல்! அந்த அற்புதத்தை இசையில் வைத்து குழைத்துக் குழைத்து ஊதிக் காட்டு!'' என்கிறார்.

தொன்மைக் கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ!

# என்னை அல்லவா தேடிவந்தான்

1

உலகில் புஷ்பங்கள் எத்தனையோ இருக்கின்றன. அழகு கொலுவிருக்கும் கோவில் என்று புஷ்பங்களைச் சொல்லலாம். மனிதர்களைப் போல் வாய்திறந்து புஷ்பங்கள் பேசுவதில்லை. ஆனாலும் புஷ்பங்கள் நம் இதயத்தோடு இதயம் வைத்துப் பேசுவது போலவே இருக்கின்றன. அழகின் ரகஸ்யம், சிருஷ்டியின் அற்புதம், ஆனந்தத்தின் தொனி எல்லாவற்றையும் மலர்கள் எடுத்துச் சொல்வது போலவே இருக்கின்றன.

மலர்முழுவதும் பன்னீர்மயம். கண்ணுக்குத் தெரியாத ஆவி ரூபத்தில் புஷ்பத்தில் நிறைந்திருக்கிறது, சின்னஞ் சிறிய தேன் - வண்டு அந்தப் பன்னீரை உறிஞ்சி எடுத்துவிடுகிறது. துளித்துளி யாக எடுத்துவிடுகிறது. எடுத்ததைச் சேர்த்து வைக்கக் கூடு கட்டு கிறது. கண்கண்ணாய் அடை அடையாய் மாளிகை போலக் கட்டி விடுகிறது, கூட்டை. புஷ்பங்களிலிருந்து எடுத்த பன்னீரைக்கூட்டில் சேர்த்து வைக்கிறது. தேனாய் - கற்கண்டாய் விளைய வைத்து விடுகிறது.

வண்டின் காரியம் அற்புதந்தான். இந்த அற்புதத்தைப் பார்த்துப் பார்த்து அதிசயப்பட்டவர் மாணிக்கவாசகர். இது போல இந்த உலகில் உள்ள ஒவ்வொரு காட்சியையும் பார்த்து வியந்தவர் மாணிக்கவாசகர். கல்லும் மண்ணும் புழுதியும் விரவிக் கிடக்கிற தவசத்தை, உளுந்து, நெல், கடுகு, சோளம் முதலிய தானியங்களைச் சுளகில் போட்டு கொழித்துக் கொழித்து எடுத்து விடுவார்கள் பெண்கள். சிக்கலானகாரியத்தைப் பழுதே இல்லாமல்

சுத்தமாகப் பிரித்து வைக்கிறது, அரியசெயல்தான். ஆனாலும் எளிதில் முடிந்து விடுகிறது. சுளகைப் பிடிக்கிறது, கொழிக்கிறது, புடைக்கிறது இவற்றில் உள்ள பக்குவத்திலும் லாகவத்திலும் இருக்கிறது அந்த நயம். மாணிக்கவாசகர் இதுபோன்ற காட்சிகளை உயர்வாக மதித்தார். அடடா! என்று பரவசப்பட்டார். ''என்ன நுட்பம். என்ன விநயம்'' என்று மறுகுகிறார். அருமையையும் எளிமையையும் நோக்கி வியப்படைகிறார்.

மனிதர்களும், மனிதர்களுடைய செயல்களும், உலகமும், உலகின் செயல்பாடுகளுமே கடவுளைக் காட்டுகின்றன. உலகத்தையும் மனிதர்களையும் விலக்கி வைத்துவிட்டு கடவுளைப் பார்க்கமுடியாது.

மாணிக்கவாசகர் உலகத்தோடு ஒட்டி இருந்தே கடவுள்த் தத்துவத்தை அனுபவித்தார்.

வண்டின் செயலையும், அதன் ரீங்கார இசையையும் அனுபவித்து, ஈடுபட்டதனால் தான் அரியபெரிய உண்மை அனுபவத்தை வண்டிடம் சொல்வதாகப் பாடினார். வண்டையும் அதன் செயலையும், துச்சமானது என்று நினைத்திருந்தால் கோத்தும்பீ, கோத்தும்பீ என்று கதறி அழைப்பாரா? தன்னுடைய ஆற்றாமையையும் தவிப்பையும் அதனிடம் கொட்டுவாரா?

சுளகில் போட்டுப் புடைத்து எடுக்கிறதையும் சதுரப்பாடு மிக்க பொறுப்பான காரியம் என்று மதித்தார். அந்த மரியாதையும் ஈடுபாடும் ''வாருங்கள், கொழித்துப் புடைப்போம்'' (தெள்ளேணம் கொட்டுவோம்) என்று தோழிகளைக் கூப்பிட வைக்கிறது.

நினைக்க நினைக்கக் கற்கண்டாய்த் தித்திக்கும் உண்மை அனுபவங்களைக் கலந்து பேசுவதற்கு உதவியாக, சுளகை எடுத்துக் கொண்டு புடைக்க வாருங்கள் என்று அழைக்கிறார் மாணிக்கவாசகர்.

சிநேகிதர்களும் ஒத்துக் கொள்கிறார்கள்.

''வானம், பூமி, பாதலம் ஆகிய மூன்று வட்டங்களுக்கும், இவற்றின் ஆதார சக்திகளுக்கும், மூலநாயகன் சிவபெருமான், சிருஷ்டி தத்துவம், காப்பாற்றுகிற தத்துவம் இவற்றுக்கு உயிர் நாடியே சிவபெருமான். இதில் சந்தேகம் இல்லைதான்.

தேவாதி தேவனாகிய சிவபெருமானே நேரில் வந்து ஆஜராகி விட்டார், அந்தக் காட்சியைக் கண்ணாரக் கண்டதும் உண்மை தான். அதிலும் சந்தேகம் இல்லை.

ஆனால் நுட்பமான தத்துவங்களே காண முடியாமல் தவித்துக் கொண்டிருக்க, என் முன்வந்து நின்றானே! என்னைத் தட்டிக் கொடுத்து அணைத்துக் கொண்டானே! இது எப்படி என்றுதான் விளங்கமாட்டேன் என்கிறது.

யோசிக்க ஆரம்பித்தால் மண்டையைக் குடைகிறது. அதனால் அதை ஆடிப்பாடி அனுபவிப்போம். தெள்ளேணம் கொட்டுவோம். வாருங்கள் வாருங்கள்'' என்கிறார்.

விண்ணோர் முழுமுதல்
பாதாளத் தார்வித்து,
மண்ணோர் மருந்தயன்
மாலுடைய வைப்படியோம்
கண்ணார வந்துநின்றான்
கருணைக் கழல்பாடித்
தென்னாதென் னாஎன்று
தெள்ளேணம் கொட்டாமோ. (61)

2

மகாத்மா காந்திஅடிகள் உண்மையைக் கண்டு அனுபவிக்கிற வர். பரமஞானி. இரக்கமே உருவானவர். அப்பழுக்கில்லாத பளிங்கு போன்ற சுத்தமான இதயம் படைத்தவர். கடுகளவு தவறுகூட அவர் செய்யமாட்டார்.

ஆனால் அவரைச் சுற்றி உள்ளவர்கள் தவறு செய்கிறார்கள். சிலர் தவறு செய்வதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தாங்க முடியவில்லை காந்திமகானுக்கு.

---

(முழுமுதல் - மூலாதாரம். வித்து - விதை. மருந்து - அமிர்தம். அயன்மால் - பிரம்மா, விஷ்ணு. வைப்பு - பொக்கிஷம். தென்னா தென்னா என்று - அருமையானவனே, பெருமைமிக்கவனே என்று பாடி அழைத்து.)

தானே தவறு செய்வது போல தன்னையே வெறுத்துக் கொள்கிறார். அதற்காக உண்ணாவிரதம் இருக்கிறார். உலகறியக் கடவுளிடம் தவறைச் சமர்ப்பித்து மன்னிப்பு வேண்டுகிறார்.

நான் என்னும் ஆணவம் அற்ற தூய உள்ளம் படைத்தவர்களின்நிலை இப்படி.

மற்றவர்களிடமிருந்து எப்பொழுதும் தங்களைப் பிரித்து வைத்துக் கொள்ள அவர்களால் முடியாது. மாணிக்கவாசகரும் இயற்கையிலேயே தூய உள்ளமும், இரக்கமும் படைத்த உத்தமர். மற்றவர்களுடைய திமிர், கொழுப்பு, அகம்பாவம், கொடுமை இவைகளைத் தன்னுடையனவாக ஏற்று வருந்துகிறார்.

"மீள்வதற்கு வழியே இல்லையே" என்று தவித்துக் கொண்டிருந்த மாணிக்கவாசகருக்கு எதிர்பாராதபடி அமைதி கிடைத்துவிட்டது.

சிவபெருமானே நேரில்வந்து, "வா என்னுடன் வா" என்று கையைப் பிடித்துக் கூப்பிடுகிறார்.

இனிப் பாடலைப் பார்ப்போம்.

கல்நார் உரித்தென்ன
என்னையுந்தன் கருணையினால்
பொன்னார் கழல்பணித்து,
ஆண்டபிரான் புகழ்பாடி;
மின்நேர் நுடங்கிடைச்
செந்துவர்வாய் வெண்நகையீர்!
தென்னாதென் னாவென்று
தெள்ளேணம் கொட்டாமோ. (62)

---

(கல்நார் - உரித்தென்ன - கல்லிலிருந்து நார் உரிப்பது முடியாத காரியம். கொடிய பித்தலாட்டமான உள்ளத்தை தூய இரக்கம் உடைய உள்ளமாக மாற்றுவதும் முடியாத காரியம். ஆனாலும் இறைவன் நினைத்தால் எளிதில் முடியும். மற்றவர்களின் கொடுமையையும் தடித்தனத்தையும் நினைக்கிறார் மாணிக்க வாசகர். என்னையும் - மட்டமான என்னையும். பொன்ஆர் கழல் பணித்து - திவ்யமான திருவருளில் ஈடுபடச் செய்தான் இறைவன். மின்நேர் நுடங்கு இடை - மின்னலைப் போல் ஒடுங்கிய இடை. செந்துவர் வாய் வெண் நகையீர் - பவளம் போன்ற இதழ்களும் முத்துப் போன்றப் பற்களையும் உடைய பெண்களே.)

3

நான் என்பது உண்மை இல்லை. பொய்தான். ஆனாலும் அது உடலோடும் உள்ளத்தோடும் (அறிவோடும்) நெடுகிலும் தொடர்ந்து பழகி வருவதால் அதற்குக் கொழுப்பு உண்டாய் விட்டது .அது விஷத்தை உண்டு பண்ணிக்கொண்டே இருக்கும். உடம்பு, அறிவு எல்லாவற்றையும் தூண்டிக் கொண்டே இருக்கும். எங்கிருந்து ஏவி விடுகிறது. எப்படி ஏவிவிடுகிறது என்று கண்டு பிடிக்க முடியாது. அணு'வுள் அணுவாய் எங்கும் நிறைந்து மறைந்து கொள்ளுகிறது ஆணவம்.

உலகத்தைத் துண்டு துண்டாகப் பிரித்து விடுகிறது. மனிதர் களையே தனித்தனியாகப் பிரித்து விடுகிறது ஆணவம். வீடு, தெரு, ஊர், நாடு, மொழி, இனம், மதம், அவன், இவன், கருப்பு, சிவப்பு, வேண்டியவன், வேண்டாதவன், என்று பிரித்து விடுகிறது.

நான் என்பது தனித்து ஒதுங்கி நிற்கிறது. அது என்னுடையது என்னும்'வட்டத்துள் சுற்றிச் சுற்றி வருகிறது.

அயல் என்று ஒன்றை உண்டாக்கி விடுகிறது இந்த நான். அயல் என்று வந்துவிட்டால் அது வேறுதான். அன்னியந்தான். நமக்கு விரோதமாக அவை அணிவகுத்து நிற்பதாகவே தோன்றும். நம்மைக் குழியில் தள்ளி எழுந்திருக்கவிடாமல் செய்வது இந்த அயல்தான்—வேற்றுமைதான்.

வேற்றுமை உணர்ச்சியிலிருந்து நல்லது, கெட்டது என்னும் பித்தலாட்டம் உண்டாகிறது. "நாமும் நம்மைச் சேர்ந்தவர் களுமே உண்மை" என்னும் மயக்கம், அதை ஒட்டி வருகிறது. இந்தப் பொய்க்கும் பித்தலாட்டத்துக்கும் அழகான பெயர்கள் வேறு கேடு. புத்தி இல்லாதவனுக்கு ஞானப் பிரகாசம் என்று பெயர் வைத்தது போல் ஆணவத்துக்கு உடம்பு என்று பெயர்; பொன்மேனி என்று பெயர். மெய் என்பதாகவும் ஒரு பெயர். அறிவு, நுண்ணறிவு என்றெல்லாம் ஆணவத்துக்குப் பெயர்.

நான் என்பதே பொய். பிறகு என்னுடைய செயல் என்பது கோமாளித்தனந்தானே?

இவ்வளவும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. உண்மை துலங்க வேண்டுமானால் இறைவனுடைய அருள் ஒன்றால்த்தான் முடியும்.

மாணிக்கவாசகருக்கு இறைவன் அருள் கிடைத்துவிட்டது. பூரணமாகவே கிடைத்தது. இதை அவருடைய வாக்கு மூலத்திலேயே பார்ப்போம்.

கயல்மாண்ட கண்ணிபங்கன்
கலந்தென்னை ஆண்டலுமே!
அயல்மாண்டு, அருவினைச்சுற் -
றமும்மாண்டு, அவனியின்மேல்
மயல்மாண்டு, மற்றுள்ள
வாசகம்மாண்டு, என்னுடைய
செயல்மாண்ட, வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ. (63)

---

(கயல்மாண்ட கண்ணிபங்கன் - கெண்டை மீன்போல் துள்ளும் கண்களை உடைய உமாதேவியை ஒரு பாகத்தில் வைத்திருக்கும் சிவபெருமான். அருவினைச் சுற்றமும் - நல்வினை, தீவினை என்னும் உறவும். மயல் - மயக்கம். வாசகம் - பெயர். செயல் - என் செயல் என்னும் பேதைமை, மாண்ட ஆபாடி - இறைவன் அருளால் பொய்யும் கலக்கமும் ஓடவிட்டன. தொலைந்துபோயின என்று சொல்லும்படி உருவிப் போய்விட்டன. அடடா, விடுதலை பெற்றுவிட்டேன் நான்.)

குறிப்பு: காட்டு வழியாக ஒருவன் நடந்து வருகிறான். நல்ல வெயில், அவன் உடம்பு முழுவதும் வியர்வை. அழுக்கு, புழுதிப்படலம் சேறும் சகதியும் எல்லாம் சேர்ந்து ஒட்டிக் கொள்கிறது. அப்பொழுது எப்படி இருக்கும்? அவன் உடம்பே அவனுக்கு அருவருப்பாக இருக்கும். எரிச்சல் வரும். அயர்ச்சி வரும். தளர்ச்சியும் சோர்வும் உண்டாகும்.

ஆறு, குளம், வாய்க்காலில் இறங்கி, தண்ணீரில் ஒரு முங்கு முங்கினால் அழுக்கு புழுதி கரைந்து ஓடிவிடும். தளர்ச்சி ஓடிவிடும். சோம்பலும் பறந்துவிடும். புடைத்தெடுத்த மாதிரி துப்புரவாகி விடும் உடம்பு. ஊக்கமும் எழுச்சியும் உடம்புக்குள் வந்துவிடும். ஒரே சந்தோஷந்தான்.

அசடு முழுவதும் தண்ணீரில் ஓடிவிடுகிறது. அப்படியே இறைவனுடைய அருளால், உண்மை ஒளியில் ஆணவ மயக்கம் அவ்வளவும் கரைந்துவிடும்.

4

குழந்தைகள் பனைஓலையைக் கிழிப்பார்கள். துண்டு துண்டாக நறுக்குவார்கள். குறுக்கும் நெடுக்கும் வைப்பார்கள். முள்ளால் குத்தி சோளத் தட்டையில் சொருகிவிடுவார்கள்.

காற்று மாறி மாறி அடிக்கும். அது சுழல்கிற போக்கில் இந்த ஓலை முடிச்சும் சுழலும். கிறுகிறு என்று சுழலும். அதற்குக் காற்றாடி (கறங்கு) என்று பெயர்.

காற்று வீசுகிறது. அப்படியும் இப்படியும் மாறி மாறி வீசுகிறது. காற்றாடிக்கு யாதொரு செயலும் இல்லை. காற்றின் செயல்தான் காற்றாடியின் செயலாகத் தெரிகிறது.

நான் பிறந்தேன். நான் இருக்கிறேன். நான் மறைகிறேன் என்பவையும் அப்படியே. உண்மையில் நம் செயல் ஒன்றும் இல்லை. இறைவனுடைய, செயல்தான் எங்கும். ஆனாலும் நம் செயலாக மயங்கி அவஸ்தைப்படுகிறோம்.

செயலே நமக்கு இல்லை என்று ஆனபிறகு நல்லது, கெட்டது என்பது ஏது? அதைச் செய்தேன், இதைச் செய்தேன் என்பது மயக்கந்தான்.

இறைவனுடைய அருளுக்கு ஆளாகிவிட்டால் பிறப்பு, இறப்பு என்னும் அவஸ்தை இருக்காது. அறம், பாவம் என்னும் மயக்கமும் இருக்காது.

சிவபெருமான் மாணிக்கவாசகர் உள்ளத்தையே கோயிலாகக் கொண்டு எழுந்தருளினார். நன்றாக மாணிக்கவாசகருக்குத் தெரியும்படியாகவே இருந்தார். அப்படியானால் மாணிக்க வாசகரால் எப்படி மறக்கமுடியும் சிவபெருமானை?

கறங்கோலை போல்காயப்
பிறப்போ(டு) இறப்பென்னும்
அறம்பாவம் எனும்இருமை
தவிர்த்தென்னை ஆண்டுகொண்டான்
மறந்தேயும் தன்கழல்கள்
மறவாமே நல்கியஅத்
திறம்பாடல் பாடிநாம்
தெள்ளேணம் கொட்டாமோ. (64)

---

(கறங்கு ஓலை - காற்றாடி ஓலை. காயம் - உடம்பு)

5

"சிவபெருமான் எங்கும் நிறைந்திருக்கிறான். என் மனதில் இருக்கிறான். அவன் ஒருவனே என் மனதில் நிறைந்திருக்கிறான். திரும்பிப் பார்த்தால் பின்னால் நிற்கிறான். நடந்தால் முன்னே போகிறான். வழிகாட்டிக் கொண்டே போகிறான். திகைத்து நின்றால், வா! இங்கே வா! என்று சத்தம் கொடுக்கிறான்.

தேவர்களாலும் மூவர்களாலும் காணமுடியாத சிவ பெருமான் என்னோடு இருக்கிறான். என் மூளையில் உள்ள கொதிப்பெல்லாம் தணியும்படி அருள்மயமான குளிர்ந்த திருவடி களை என் தலையில் பொறித்து வைத்தான். அவ்வளவுதான், நான் மனிதனாகிவிட்டேன். உண்மையான மனிதனாகி விட்டேன். பைத்தியம் எனக்குத் தெளிந்து விட்டது. நானும் அந்தத் தெய்வத்தோடு தெய்வமாய் சேர்ந்து விட்டேன்."

இப்படித் துள்ளிக் குதிக்கிறார் மாணிக்கவாசகர்.

ஆஆ அரிஅயன்இந்
திரன்வானோர்க்(கு) அரியசிவம்
வாவாஎன்(று) என்னையும்
பூதலத்தே வந்தாண்டு!
பூவார் அடிச்சுவடு
என்தலைமேல்ப் பொறித்தலுமே;
தேவான வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ. (65)

6

இரவுமணி பதினொன்று. உறக்கம் வருகிறது. தலைவாசல் கதவு, உள்க்கட்டுக்கதவு, புறவாசல்க்கதவு எல்லாவற்றையும் அடைக்கிறோம். பூட்டுகிறோம். மாடிக்குப் போய் படுக்கிறோம். விளக்குகளை அணைத்து விடுகிறோம். கை காவலுக்காக சுவரொட்டி விளக்கை – சிறிய அரிக்கேன் விளக்கைப் பொருத்து கிறோம். வெளிச்சத்தைக் குறைத்து திரியை இறக்கி ஒரு மூலையில் வைத்து விடுகிறோம்.

படுக்கையில் படுத்து கண்ணைமூடிக் கொண்டே ஒரு யோசனையில் இறங்குகிறோம். உறங்கி விடுகிறோம்.

---

ஆஆ - அடடா! என்ன அதிசயம் இது! அரி-திருமால். அரியசிவம்- எட்டாத பரம்பொருள்.

ஆடாமல் அசையாமல் தூங்கிவிடுகிறோம். திடுதிப்பென்று விழித்துவிடுகிறோம். தூக்கக் கலக்கத்திலேயே விழித்துவிடுகிறோம். கண்ணை விழித்துப் பார்த்தால் ஒரு மூலையில் வெளிச்சம் மட்டும் மினுக் மினுக்கென்று தெரிகிறது. விளக்குத் தெரியவில்லை. விளக்கு மறந்துவிட்டது. வெளிச்சம் எப்படி அறைக்குள் வந்தது என்று திகைக்கிறோம்.

இன்னொரு மூலையில் சுவரை ஒட்டி ஏதோ ஒன்று ஆடுவது போல் இருக்கிறது. இன்னதென்று தெரியவில்லை. மற்றோரிடத்தில் பூனைக்குட்டி ஒன்று பாயும் பாவனையில் நிற்பதுபோல் தெரிகிறது. இன்னோரிடத்தில் புலிக்குட்டியே பதியம் போட்டுப் படுத்திருப்பது போல் தெரிகிறது. கலக்கம் அதிகமாகிறது. மயக்கமாக இருக்கிறது. பயமாகவும் இருக்கிறது.

விளக்கு எங்கே என்று தடவுகிறோம். அந்த வெளிச்சமே நாம் தேடும் விளக்கின் வெளிச்சந்தான் என்று தெரிகிறது. திரியைத் தூண்டுகிறோம்.

பூனைக்குட்டியும் இல்லை. புலிக்குட்டியும் இல்லை. ஆடவும் இல்லை. அசையவும் இல்லை.

கொடியில் காயப்போட்ட துண்டு, மூலையை ஒட்டி இருந்த பந்து, மட்டை இவை தவிர ஒன்றும் அங்கு இல்லை.

விளக்கின் மங்கிய ஒளி, அது மூலைக்கு மூலை போய் உண்டாக்கின நிழல், தூக்கக் கலக்கம். அதில் ஏற்பட்ட மறதி இவ்வளவும் சேர்ந்தே பலவகைத்தோற்றங்களை உண்டுபண்ணின.

வெளிச்சம் வந்த உடனேயே பயம் போய்விட்டது. அது இது என்று தொடர்ந்து போன மனசும் தெளிந்து நின்றுவிட்டது.

இறைவன் ஜோதிமயமாய் இருக்கிறான். அவனுடைய அருள் ஒளியிலிருந்து ஒருதுளி நம்மேல் விழுந்தால் போதும். அந்தச் சாமியார் இந்தச் சாமியார் என்னும் மயக்கம் போய்விடும். புது யோகி, பழையயோகி என்பதும் போய்விடும். பண்டிதர், ஓதுவார், தேசிகர் என்பதும் நீங்கிவிடும். உண்மையோடு ஒன்றித் திளைப்போம் நாம்.

மாணிக்கவாசகர் அப்படித் திளைக்கிறவர்.

அவமாய தேவர்
அவகதியில் அழுந்தாமே
பவமாயம் காத்தென்னை
ஆண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர்ஒன்று
நல்குதலும் நாம்ஒழிந்து
சிவமான வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ. (66)

7

விபரம் இல்லாமல் அநாதையாய்ப் போய்க் கொண்டிருந்த தன்னைச் சிவபெருமான் வந்து ஆதரித்தார் என்று மாணிக்க வாசகர் நம்புகிறார். சிவபெருமானே தன்னிடம், "நீ போகும் பாதை இதுதான்" என்று காட்டியதாகவும் நம்புகிறார். அவர் காட்டிய பாதையிலேயே வந்ததாகவும், உண்மையைக் கண்ட தாகவும் நினைக்கிறார். பரமானந்தத்தில் திளைத்துக் கொண் டிருப்பது அவனுடைய உதவியால்தான் என்று உறுதியாக நம்பு கிறார்.

தன்னிடமே சிவபெருமான் இருப்பதாகவும், தன்னையே சுற்றிச்சுற்றி வருவதாகவும் அவர் நம்புகிறார். நம்பிக்கை மேலும் உறுதிப்படுகிறது. ஒவ்வொரு சம்பவமும் நம்பிக்கையை உறுதிப் படுத்துகிறது. சம்பவங்கள் நேராத பொழுது சந்தேகம் வந்து விடுகிறது.

சிவனாவது நாமாவது? அவன் ஏன், நம்மைத் தேடிவரப் போகிறான்? என்ன பைத்தியக்காரத்தனம் இது? என்னும் அளவுக்குச் சந்தேகம் வருகிறது.

நாம் உறுதியாக நம்புகிற ஒன்றைப்பற்றி நமக்கு உள்ளேயே சந்தேகம் வரும். நம்பிக்கையில் புரள்வது போல அவநம்பிக்கை யிலும் மனம் புரளும். ஆனால் நாம் நம்புகிற ஒன்றைப்பற்றி மற்றவர்களுக்குச் சந்தேகம் உண்டானால், அது நமக்கு எரிச்சலை உண்டுபண்ணும். சிரிப்பையே உண்டாக்கிவிடும்.

---

(அவமாயதேவர் - படுமட்டமான சாமியார்கள். அவகதி - பித்தலாட்டமான போக்கு. பவமாயம் - ஏமாளித்தனம். நவம் - புத்தம்புதிய.)

''ஒன்றும் தெரியாத பைத்தியமாக அல்லவா இவர்கள் இருக்கிறார்கள்'' என்று அனுதாபம் வரும். அந்த அனுதாபமே அவர்கள்மேல் நமக்கு வேடிக்கையாக இருக்கும், விளையாட்டாக இருக்கும்.

''சிவபெருமான் சிவபெருமான்'' என்று நினைத்துக் கொண்டிருக்கிறார் மாணிக்கவாசகர். சிவபெருமானுக்கு மாணிக்க வாசகரைப் பற்றியா கவலை? என்று ஜனங்கள் நினைக்கிறார்கள். பேசுகிறார்கள். இது மாணிக்கவாசகருக்குத் தெரியவருகிறது.

ஒரு துள்ளாகத் துள்ளுகிறார்.

அரிக்கும், பிரமற்கும்,
அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி
நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும்; பணிகொள்ளும்
என்பதுகேட்(டு) உலகம்எலாம்
சிரிக்கும் திறம்பாடித்
தெள்ளேணம் கொட்டாமோ. (67)

---

(அரிக்கும் பிரமற்கும் - காக்கும் கடவுளாகிய திருமால் என்ன, படைக்கும் கடவுளாகிய பிரம்மா என்ன இவர்களுக்குக்கூட தெரிக்கும் படித்தன்றி நின்ற சிவம் - பார்க்கமுடியாதபடி ஜோதி மயமாய் எங்கும் நிறைந்திருக்கிற பெருமான். நம்மிடம் வலிய வருகிறான். உண்மையை உணர்த்துகிறான். வழிகாட்டி நடப்பிக்கிறான். சேர்ந்து திளைக்கிறான். என்பது கேட்டு உலகம் எலாம் சிரிக்கும் - நடந்ததை நடந்தபடி சொன்னால், அது எப்படி முடியும் என்று வாய்க்கு வந்தபடி பேசுகிறார்கள் ஜனங்கள். திறம்பாடித் தெள்ளேணம் கொட்டாமோ - அவர்களுடைய அறியாமையையே விஷயமாக எடுத்துப் பாடி ஆடுவோம் நாம் )

# அவன் ஒருவன்தான் மிச்சம்

8

உலகம் ஒரு உண்மையான ஞானக்களஞ்சியம். உலகில் உள்ள பொருள் ஒவ்வொன்றும் சிறந்த சாஸ்திரங்கள். விஷயத்தைத் தெளிவாகவும் சுத்தமாகவும் எடுத்துச் சொல்கிற புத்தகங்கள் இந்த உலகமும் உலகில் உள்ள காரியங்களுமே.

நம் காலடியில் கிடக்கிற மண்ணுக்குள் எத்தனையோ மர்மமான ஜாலவித்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒரு வாழைக்குள் நடக்கிற காரியங்களைப் பார்த்தால் நம் மூளை சிதறிவிடும். காற்றில் இருக்கிற அற்புதத்துக்கு அளவு உண்டா? நெருப்பில் இருக்கிற சக்தியை இவ்வளவு என்று சொல்ல முடியுமா?

உடம்பு, உயிர், மனம் மூன்றும் விந்தைகள் நிறைந்த அதிசய உலகமாக இருக்கின்றன.

ஒவ்வொரு பொருளிலும் ஒவ்வொரு செயலிலும் உள்ள சிறப்பைப் பார்த்து, தம் அனுபவத்தைப் புத்தகங்களாய் எழுதி வைத்திருக்கிறார்கள். ஆதிகாலத்திலிருந்தே புத்தகம் எழுதிக் குறித்து வைக்கிறது ஏற்பட்டுவிட்டது.

நம்மிடத்திலும் நம்மைச் சுற்றி உள்ளவைகளிடத்திலும் அமைந்திருக்கிற சிறப்பை எடுத்துச் சொல்லுகின்றன நூல்கள், நமக்கும் நம்மைச்சுற்றி உள்ளவைகளுக்கும், ஏன், பிரபஞ்சம் முழுவதுக்குமே அடிப்படையாய் உள்ள உண்மையைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை நூல்கள்,

உண்மையைக் கண்டு அனுபவித்துக் கரைவதற்குப் பதிலாக உண்மைக்கு அங்கொரு பெயர், இங்கொரு பெயர் என்று வைத்து, இதனால் இன்ன பலன், அதனால் இன்ன பலன் என்று கணக்குப் போட்டுப் பார்ப்பதுதான் சாஸ்திரங்களின் காரியம்.

அப்படியானால் சாஸ்திரங்களுக்கும் இறைவனுக்கும் தூரம் அதிகம். சாஸ்திரங்கள் இறைவனைப் பார்க்க முடியாது. இறைவனைப் பற்றிய புறம்போக்கான குறிப்புகளை வைத்து சாஸ்திரங்கள் பேசும். ஆனால் நேராகப் பார்த்து உறவாட முடியாது.

ஒரு மரத்தை நாம் பார்க்கிறோம்.மரத்தின் வெளிப்புறமான அம்சங்களே தெரிகின்றன. மரத்தின் உள்ளே நடப்பதை நம் கண்களால் பார்க்க முடியாது. அதுபோலவே சாஸ்திரங்களும் அடிப்படை உண்மையை - கடவுள்த் தத்துவத்தைப் பார்க்க முடியவில்லை.

சிருஷ்டி தத்துவம், பாதுகாக்கும் தத்துவம். இவற்றுக்கே அந்தப் பேருண்மை புலப்படுவதில்லை. வாழைக்கே தன்னிடமிருந்து எப்படிக் குலை உண்டாகிறது என்று தெரியாது. குலை தள்ளுவதற்கு உதவியாக இருந்த உரம், நீர், வெளிச்சம், காற்று முதலிய சக்தி(தேவர்)களுக்கும் தெரியாது. அப்படி இருக்க வெறும் புத்தகங்கள் எப்படிப் பார்க்க முடியும். ஆனாலும் பக்தர்களைத் தேடி வருகிறான் இறைவன். வந்து உறவாடுகிறான் இறைவன், கலந்துவிடுகிறான். இறைவனுடைய கருணையை நினைத்தால் ஆனந்தம் கண்ணீராய்க் கொட்டும்.

மாலே பிரமனே
மற்றொழிந்த தேவர்களே
நூலே நுழைவரியான்
நுண்ணியனாய் வந்தடியேன்
பாலே புகுந்து
பரிந்துருக்கும் பாவகத்தால்
சேலேர்கண் நீர்மல்கத்
தெள்ளேணம் கொட்டாமோ. (68)

(மால் - திருமால். நூல் - சாஸ்திரம் - அறிவுத்திமிர். அடியேன் பால் - அடியவனாகிய என்னிடத்தே. பரிந்து - பரிவுகாட்டி. சேலேர்கண் - கெண்டை மீன் போன்ற கண். துள்ளிப் பிறழும் கண்.)

## 9

உலகில் எங்கும் சமய சம்பந்தமான பரபரப்பு இருக்கவே செய்கிறது. எத்தனையோ பெயர்களில் தனித் தனிக் கோலத்தில் அணி வகுத்து நிற்கிறது சமயம்.

கடவுளைப் பற்றித்தான் பேசுகிறது சமயம். கடவுள் தான் நமக்குத் தலைவர் என்கிறது. அவர்தான் உண்மை என்கிறது. எப்படியும் கடவுளைக் கண்டுவிட வேண்டும் என்று முண்டுகிறது. முரண்டுகிறது சமயம்.

கடவுளைப்பற்றி ஆராய்ச்சி பண்ணுவது, விரிவுரை ஆற்றுவது உண்மைதான். கடவுளை வழிபடுவதற்கு வகுத்து வைத்திருக்கிற முறைகளும் ஏராளந்தான்.

ஆனால் கடவுளிடம் தங்களை ஒப்படைக்கிற காரியம் ஒன்று மட்டும் இல்லை. கடவுளோடு கடவுளாய்க் கரைய வேண்டும் என்னும் வேகமோ ஆவேசமோ இல்லை. கடவுளோடு சேர்ந்துவிட வேண்டும் என்றால் உண்மையைப் பார்க்க வேண்டும். உண்மையைப் பார்க்க வேண்டும் என்னும் ஆசை சமயத்திடம் இல்லை.

கடவுளைப்பற்றி ஏதாவது தெரிய வேண்டும். அதை வைத்து வியாபாரம் பண்ணவேண்டும். அதன்மூலம் அதிகாரம் பண்ண வேண்டும். ஜனங்கள் எப்பொழுதும் நம்கைவசம் இருக்கவேண்டும். தெற்கே வடக்கே என்று போகக்கூடாது. இதுதான் சமயத்தின் நோக்கமாய்ப் போய்விட்டது.

அதனால் பல உருவங்களில் அந்த மதம், இந்த மதம் என்று கிளம்பிவிட்டன. ஒவ்வொரு மதமாய் உலகில் வலுவாய்க் காலூன்றி நிற்கின்றன. யாரும் மதத்தை அசைக்க முடியாது. ஆட்டமுடியாது. அப்படி நிலையாய் நிற்கின்றன மதம்.

மதங்களுக்குப் பக்கபலமாய் சாஸ்திரங்கள் இருக்கின்றன. அதிகாரபூர்வமான அத்தாட்சி நாங்கள்தான் என்று சொல்லிக் கொண்டு இந்த சாஸ்திரங்கள் ஜனங்களை மிரட்டுகின்றன.

உண்மையைப் பார்க்க வேண்டும் என்னும் ஆத்திரத்தில் மாணிக்கவாசகர் இந்த மதங்களுக்குள் போனார். சாஸ்திரங்களுக்குள் நுழைந்தார். ஒன்றும் பிரயோசனம் இல்லை என்று தெரிந்துவிட்டது. அது மட்டுமல்ல, உயிர் இருக்கும் வரை அமிழ்த்தி அமிழ்த்தி உயிர் போனதும் வெளியே மிதக்க விடும்

கொடிய கடல்தான் மதம் என்று பட்டுவிட்டது. சாஸ்திரங்களும் அந்த ரகந்தான் என்று மாணிக்கவாசகருக்குப் பட்டுவிட்டது.

தெரிந்ததுதான் மிச்சம். தப்ப முடியவில்லை மாணிக்கவாசகரால். தவியாய்த் தவித்தார். உண்மையான பக்தன் கஷ்டப்படுவதை இறைவன் தாங்குவாரா? பொறுக்க முடியவில்லை இறைவனுக்கு.

மாணிக்கவாசகரைத் தேடி வந்துவிட்டார். நண்பனாக இருந்தார். தோழனாக இருந்தார். மனைவியாகவே இருந்தார். அணு அணுவாக உண்மையைக் காட்டினார். தைரியம் கொடுத்தார். எழுந்து பின்னால் வந்துவிட்டார் மாணிக்கவாசகர்.

உவலைச் சமயங்கள்
ஒவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடல்உளனாய்க்
கிடந்து தடுமாறும்
கவலைக் கெடுத்துக்
கழலிணைகள் தந்தருளும்
செயலைப் பரவிநாம்
தெள்ளேணம் கொட்டாமோ. (69)

10

உண்மையைக் கண்டவர்கள் மற்றவர்களும் காண்பதற்கு வசதியாக எழுதி வைத்தார்கள். காலப் போக்கில் பொய்யும் எழுத்தாகிவிட்டது. முடிவில் பொய்யே எழுத்தாகிவிட்டது.

படிக்கிறவர்களும் அப்படியே மாறி வந்து விட்டார்கள். முதலில் உண்மையைப் படிப்பதே படிப்பாக இருந்தது. பிறகு பொய்யையும் படித்தார்கள். கடைசியாகப் பொய்யையே படிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

இந்தப் படிப்பை வைத்துத்தான் உத்தியோகம், சம்பளம், தகுதி என்றும் ஏற்பட்டு விட்டது.

பத்துப் புத்தகங்களை ஒருவன் படிக்க வேண்டும். அதில் இரண்டு, இதில் இரண்டு என்று படிக்க வேண்டிய புத்தகம் பத்து.

---

(உவலைச் சமயங்கள்-உயிரில்லாத-உண்மை ஒளி இல்லாத செத்த மதங்கள். ஒவ்வாத சாத்திரம்-உண்மை இல்லாத சிந்தாந்தங்கள். சவலைக் கடல்-மரணக் கடல்)

படிக்கக்கூட வேண்டாம். அந்தப் பத்துப் புத்தகம் சம்பந்தமாக இருபது முப்பது கேள்விகளுக்குப் பதில் எழுதவேண்டும். எழுதி விட்டால் போதும். அவனுக்கு உத்தியோகம் உண்டு. சம்பளம் உண்டு. ஒரு தாலுகாவையோ ஜில்லாவையோ அவனிடம் கொடுத்துவிடுவார்கள். இனி, அவன் தான் அதற்கு ராஜா.

இருபது முப்பது கேள்விகளில் பத்துப் பன்னிரண்டு கேள்வி களை ஒருவன் சமாளிக்க முடியவில்லை என்றால், அவன் சிற்றாள் தான். சம்பளம் குறைவுதான் அவனுக்கு. ஏதோ வந்தவர் போன வர்களை அரட்டிக் கொண்டு திரியலாம். பேனாப் பிடித்து உத்தரவு போட முடியாது அவன். அவனிடம் முழுசாக ஒரு பிர தேசத்தைத் தாரை வார்த்துக் கொடுக்கமாட்டார்கள். கணக்குப் பிள்ளை மாதிரி, காவல்க்காரர் மாதிரி அந்த வட்டத்தை அதி காரம் பண்ணிக் கொள்ளலாம்.

இனி, மேலும் பல புத்தகங்களை ஒருவன் படித்துவிட்டால், அந்தப் புத்தகங்கள் சம்பந்தமான கேள்விகளுக்கு அவன் பதில் சொல்லிவிட்டால், பிறகு அவனைக் கையில் பிடிக்க முடியாது. அவன் இட்டதுதான் சட்டம். எடுத்ததுதான் திட்டம். பிறகு அவன் மனிதன் இல்லை. மகான் ஆகிவிடுவான். தேவதூதனே ஆகிவிடுவான். தேவனே ஆகிவிடுவான்.

புத்தகம் படுத்துகிறபாடு இப்படி.

மாணிக்கவாசகரையும் இந்தக் கிறுக்குப் பிடித்து ஆட்டியது. ஆனால் இறைவனுடைய அருளால் எப்படியோ கிறுக்கு விலகி விட்டது. வெளியில் ஓடிவந்து விட்டார்.

பட்டம், பதவி, அறிஞர், பேரறிஞர், தண்டமிழ்க் காவலர், சிவநெறி பரப்பும் செம்மல், இப்படி அடிக்கிற மேளம் எல்லாம் வெறும் பித்தலாட்டம் என்று தெரிந்து விட்டது. உண்மையைக் கண்ட மாத்திரத்தில் உத்சாகம் பொங்கிவருகிறது. துள்ளிக் குதிக் கிறார் மாணிக்கவாசகர்

பார்பாடும் பாதாளர்
பாடும்விண்ணோர் தம்பாடும்
ஆர்பாடும் சாரா
வகையருளி ஆண்டுகொண்ட

நேர்பாடல் பாடி
நினைப்பரிய தனிப்பெரியோன்
சீர்பாடல் பாடி நாம்
தெள்ளேணம் கொட்டாமோ. (70)

11

பல வரங்களை மனிதன் பெற்றிருக்கிறான். மனிதனிடம் உள்ள வரங்களில் தலைசிறந்தது பக்தி. மனிதர்கள் எல்லோரிடமும் இயல்பாகவே இருக்கிறது பக்தி. கொடுத்து வைத்தவன் மனிதன் என்று சொல்வது பொருத்தமான வார்த்தை தான்.

பக்தியானது வாழ்க்கையில் அன்பாகச் செயல்படுகிறது. இந்த அன்பே எளிமை, அடக்கம், பணிவு, பொறுமை, தியாகம், மகிழ்ச்சி அதிசயம் என்று பலபடியாக வெளிப்படுகிறது.

ஆர்வம், ஈடுபாடு, ஆனந்தம் இப்படி உணர்ச்சிமயமாய்ப் பிரகாசிக்கிறது அன்பு.

ஒருபெண் தினந்தோறும் முற்றத்தைத் தெளிக்கிறாள், பெருக்குகிறாள், கோலம் போடுகிறாள், அதில் அவளுக்கு எவ்வளவோ ஈடுபாடு. எவ்வளவோ ஆர்வம். வீட்டில் உள்ள தட்டுமுட்டுச் சாமான்களை அவள் பேணி உபசரிக்கிறாள். கணவன், குழந்தை, பசு, துணிமணி, உறவினர். திருவிழா, சடங்கு, சமையல், சாப்பாடு, கோயில், குளம் எல்லாவற்றிலும் அவளுக்கு ஆர்வம் பொங்கிப் பரவுகிறது.

சமையல் செய்கிறாள் என்றால், அடுப்பு, விறகு, தண்ணீர், நெருப்பு, அரிசி, காய், சட்டி, பானை, உப்பு, புளி, வற்றல், தாளிதம், அளவு, நிதானம், ருசி, சாப்பிடுகிறவர், இப்படி எல்லாவற்றிலும் பெண்ணின் மனம் சேர்ந்து நிற்கும். அன்போடும் ஆர்வத்தோடும் சேர்ந்து நிற்கும். ஏனோதானோ என்று பொறுப்பில்லாமல் கழன்று நிற்காது பெண்ணின் உணர்ச்சி. ஆனந்தமாய் பொங்கிப் பெருகுகிறது அன்பு. அந்த அன்பு பக்திமயமானதுதான்.

---

(பார்பாடு-கற்றவர் பக்கம். பாதாளத்தார்-படித்தவர். விண்ணோர்-ஆராய்ச்சிவல்லுநர். நேர் பாடல்பாடி-இறைவனுடைய நேர்மையைப்பாடி. சீர்-அவனுடைய சிறப்பை. பாடல்பாடி-இசையிலும் தாளத்திலும் வைத்து நடனத்துக்குப் பாடுவது போல் உணர்ச்சி மயமாகப் பாடி)

சாதாரணமான மக்கள் எல்லோரிடமும் இந்த பக்தி இருக்கிறது. ஆனால் இதைப் பக்தி என்று யாரும் பார்க்கிறதில்லை. யோசிக்கிறதில்லை. சுடர்விட்டுப் பிரகாசிக்கிற உண்மை ஒளியைக் கண்டு அனுபவிக்கிறதில்லை.

தெய்வீகமான பக்தி கவனிப்பாரில்லாமல் வீணாய்ப் போய் விடுகிறது. தங்கள் காரியங்களை உண்மையோடு மக்கள் பார்த்தால் பக்தியின் உருவம் நன்றாகத் தெரியும். அதன்மூலம் நிறையப் பிரயோசனம் உண்டாகும்.

இனி, ''நான்'' என்னும் அகம்பாவத்தில் அகட விகட சாமர்த்தியம் பண்ணுகிறவர்களும் இருக்கிறார்கள். பணம், படிப்பு, அதிகாரம், புகழ், இவற்றுக்கு அடிமையானவர்கள் இவர்கள். எப்படியும் ''நான்'' என்பதை நிலைநிறுத்த வேண்டும், மற்றவர்களை அரட்டி மிரட்டவேண்டும் என்பது இவர்களுக்கு வெறி. அது ஒன்றுக்காகவே இவர்கள் பணம் தேடுகிறார்கள். அது இது என்று படிக்கிறார்கள். கோவிலுக்குப் போகிறார்கள். கும்பாபிஷேகம் நடத்துகிறார்கள்.

உண்மையான பக்தியோ அன்போ இவர்களிடம் இல்லை. சாதாரண மக்களிடம் பக்தி இருக்கிறது. அதை அவர்கள் பார்க்கவில்லை. வீணாய்ப் போய்விட்டது. கெட்டிக்காரர்களிடம் பக்தி இல்லை. படாடோபமும் ஆடம்பரமுமே இருக்கின்றன. இப்படியாக நாலாவழியிலும் பக்திக்கு உருவம் கிடைக்காமலே போய் விடுகிறது.

இறைவனுக்கு இது தர்மசங்கடமான நிலைதான். அதனால் பக்தியின் உண்மை ஒளியை அவர் அப்போதைக்கப்போது பிரத்யட்சமாகக் காட்டுகிறார். ஒரு உதாரணம் பார்ப்போம்.

காஞ்சிபுரம் ஊழிஊழி காலமாய் நிலைத்து நிற்கிறது. வளமாக இருக்கிறது. இதை அனுபவிக்கிறார் கவிஞர். பக்தியில் சிறந்த புண்ணியமூர்த்திகள் இருக்கிற இடம் காஞ்சிபுரம். அது தான் காரணம் என்று மகிழ்கிறார்.

காஞ்புரத்தில் பாலாற்றங்கரையில் அழகிய படித்துறைகள் அடுக்கடுக்காய் இருக்கின்றன, படியை நீர்விட்டுக் கழுவுகிறார்கள் சிவபக்தர்கள். மூர்த்தியைப் பூசைப் பெட்டியிலிருந்து எடுத்துப் படியில் வைக்கிறார்கள். நீராட்டுகிறார்கள். சந்தனம், புஷ்பம்,

அபிஷேகம் என்று உபசாரம் பல செய்து பூஜை பண்ணுகிறார்கள். பூஜைமணியும் தேவார திருவாசகப் பாடல்களும் ஒரே முழக்கமாய் இருக்கிறது.

கடவுளையே தங்கள் கைக்குள் - ஏன் பைக்குள் போட்டு வைத்துக் கொண்டதாக இவர்களுக்கு நினைப்பு. சாதாரண மக்களுக்குக் கடவுளைப் பற்றி ஒன்றும் தெரியாது என்பதும் இவர்களுடைய தீர்மானம்.

பாலாற்றுக்குள் ஆங்காங்கு மேடான திடர்கள் உண்டு. ஒரு பெண் வழக்கமாக ஆற்றுக்குப் போவாள். சந்தனம், புஷ்பம், இவைகளோடு போவாள். குளிப்பாள். ஈரச்சேலையோடு மணலைக் குவிப்பாள். இறைவனாகப் பாவித்தே மணலைக் குவிப்பாள். சந்தனத்தைக் கரைத்து அபிஷேகமாக விடுவாள். புஷ்பத்தைச் சாற்றுவாள். கழுத்தில் உள்ள ரத்னகண்டியையும் கழற்றி அதன்மேல் சாற்றுவாள்.

பக்தியோடு அந்த மூர்த்தியைக் கைகுவித்த வண்ணமாய்த் தியானிப்பாள். கண்ணைமூடித்தான் தியானிப்பாள். ஆனாலும் அற்புத அழகோடு அவள் உள்ளத்துள் எழுந்தருளிப் பிரகாசிப்பார் இறைவன்.

ஆற்றுக்குள் திடரில் தொடர்ந்து பெண் இப்படிச் செய்து வந்ததால், படித்துறையில் இருந்து பூஜை செய்தவர்கள் பார்க்க நேர்ந்தது. சாதாரணமாகத் தெரிந்தது அவர்களுக்கு. விளையாட்டுக் குழந்தை. விபரம் தெரியாத பெண் என்று ஏளனம் செய்தார்கள், சிவநேசச் செல்வர்கள்.

பக்தியின் சொரூபத்தை அவர்களுக்குக் காட்ட வேண்டும் என்றுபட்டது சிவபெருமானுக்கு.

பாலாற்றில் வெள்ளம் வரும்படி ஒருநாள் செய்துவிட்டார் சிவபெருமான். மெள்ள மெள்ளப் படியில் ஏறிவந்தது வெள்ளம். பூஜை பண்ணிக் கொண்டிருந்தவர்கள். நழுவி ஓட ஆரம்பித்து விட்டார்கள். மூர்த்தி, மணி ஒன்றும் ஞாபகத்துக்கு வரவில்லை. உயிர் பிழைத்தால் போதும் என்று ஓடிவிட்டார்கள்.

பெண் வணங்கி வழிபடுகிற திடரிலும் வெள்ளம் ஏறியது. அவள் முழங்கால் அளவு உயர்ந்து சூழ்ந்தது வெள்ளம். அவள் ஓட

வில்லை. அப்படியே இறைவனை (மணல்க்குவியலைத்தான்) தாவிச் சேர்த்துக் கட்டினாள். இறைவன் கரைந்துவிடக் கூடாதே என்று ஆலிங்கனம் பண்ணிக் கட்டிப் பிடித்தாள்.

படித்துறையில் இருந்தவர்களுக்கு எது பக்தி என்பது தெரிந்துவிட்டது. பக்தியின் உருவமே இன்னதென்று தெரிந்து விட்டது.

இனி, காஞ்சிபுரத்தில் கோயில்கள் பல உள்ளன. சந்நிதி களில் வாடாவிளக்கு எறிந்து கொண்டிருக்கும். விளக்குகளுக்குத் தேவையான நெய் ஒழுங்காக வந்துவிடும். கோயிலுக்கு வருகிற பக்தர்களில் பலர் நெய்யோடு வருவார்கள். விளக்குகளில் விடுவார் கள். மிச்ச நெய்யை அர்ச்சகர்களிடம் கொடுப்பார்கள். விளக்கு களுக்குப் போக இருப்பில் நெய் சேர்ந்த வண்ணமாகவே இருக்கும்.

நெய் கொண்டு வந்து விளக்குகளில் ஊற்றாவிட்டால் அவர் களுக்கு என்னவோ போலிருக்கும்.

கோயில்கள் நிறைய இருப்பதால் ஆண்டு முழுவதும் காஞ்சி புரத்தில் திருவிழாத்தான்.

சுற்றுவட்டாரத்தில் இருந்து திருவிழாவுக்குக் கூட்டம் கூட்ட மாக மக்கள் வருவார்கள்.

முன்பின் தெரியாதவர்களை அன்போடு வரவேற்று உணவளித்து உபசரிப்பார்கள். தங்களோடு தங்கும்படி வேண்டுவார்கள். விழாவைக் கண்டு களிக்க உதவுவார்கள்.

பக்தியானது அப்படி நாலாபக்கமும் பரவி ஓடியது காஞ்சிபுரத்தில். நெடுகிலும் அது பரவி ஓடியது. எல்லாம் மக்களுடைய உள்ளத்தில்தான். மக்களுக்கு அனுசரணையாக பூமாதேவி நெல்லையும் கரும்பையும் பொன்னாகச் சொரிந்தாள். பசுக்கள் பாலும் நெய்யுமாய்ச் சொரிந்தன.

காஞ்சிபுரம் நிலைத்து நிற்பதற்குக் காரணம் தெரிந்து விட்டது.

இது சம்பந்தமாக ஒரு பாடல். பழைமையான பாடல்தான்.

பூண்தாங்கு கொங்கை
பொரவே குழைபொருப்பும்,
தூண்டாத தெய்வச்
சுடர்விளக்கும் - நாண்தாங்கு
வண்மைசால் சான்றவரும்,
காஞ்சி வளம்பதியும்
உண்மையால் உண்டிவ்
வுலகு.

பக்தியின் திவ்யமான உருவத்தை அழகாய்க் காட்டுகிறது வெண்பா. சாதாரணப் பெண் மூலமாகவும், விளக்குக்கு நெய் கொண்டு வருபவர் மூலமாகவும், விருந்தினர்களை உபசரிப்பவர் மூலமாகவும் பக்தியைக் கண்டு களிக்க வைக்கிறார் கடவுள்.

இன்னும் மிகமிகச் சாதாரணமானவர்கள் மூலமாகவும் இறைவன் பக்தியின் சொரூபத்தைக் காட்டுவான். அறிவாளிகள், ஆராய்ச்சி வல்லுநர்கள், பூஜா விற்பன்னர்கள், இவர்களிடம் தோரணைதான் இருக்கிறது. தோரணை முக்கியம் இல்லை. பக்துதான் முக்கியம் என்று தெளிவுபடுத்தவே இறைவன் இப்படிச் செய்கிறான்.

வேடன் மூலமாகவும் பக்தியைக் காட்டுவார். நாரையின் மூல மாகவும் காட்டுவார். சிட்டுக் குருவியின் மூலமும் காட்டுவார். யானையின் மூலமும் காட்டிவிடுறார்.

யானை ஒன்று பக்தியோடு சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்தது. தும்பிகையில் நீரை உறிஞ்சிக் கொண்டு வந்து சாற்றியது. இப்படிச் செய்யச் செய்ய யானைக்கு ஆனந்தமாக இருந்தது. அதன் உள்ளம் உருகியது. உடல் புளகாங்கிதம் பெற்றது. இப்படிச் செய்வதற்குத் தடங்கல் ஏற்பட்டால் அது எவ்வளவோ கஷ்டப்படுத்தியது யானையை. எவ்வளவு பெரியஉடம்பு

---

(பூண்தாங்கு கொங்கை பொரவே குழைபொருப்பு - பக்தியோடு பெண் கட்டிப் பிடித்தாள். அவளுடைய மார்பு அழுத்தியதால், குழைந்த மலை - அதாவது இறைவன். தூண்டாத தெய்வச் சுடர்விளக்கு - வாடாவிளக்கு. நாண்தாங்கு வண்மை சால் சான்றவரும் - கூசிப்பணிந்து உபசரிக்கும் சீலர். உண்மையால் உண்டு இவ்வுலகு - இருப்பதனால்தான் காஞ்சிபுரம் இருக்கிறது. உலகமும் இருக்கிறது. பக்த கோடிகளும் இருக்கிறார்கள்.)

யானைக்கு? அந்த உடம்பு முழுவதும் ரணமாக வலிக்கும் யானைக்கு. மனது துயரத்துக்கு ஆளாகித் தவிக்கும். அதனால் அடாத மழையானாலும் விடாது செய்யும் வழிபாட்டை.

யானையின் ஆர்வத்தை உண்மையான பக்தியை அனுபவித்த சிவபெருமான் யானைக்கு நேரில் வந்து நின்றார். பழகினார். உறவாடினார். தோழமை கொண்டார். தன்னோடு சேர்த்துக் கொண்டார். அதாவது இறுதி இல்லாத பேரானந்தத்தில் என்றென்றும் நிலைத்து நிற்கும்படி அருள் பாலித்துவிட்டார் பெருமான்.

முனிவர்கள், யோகிகள், உடம்பையும் உள்ளத்தையும் ஒடுக்கித் தவம் பண்ணுகிறவர்கள் எல்லோரும் அவரவர் காரியத் திலேயே நிற்கிறார்கள்! அவர்களுக்கு அருளாவது? ஆனந்தமாவது? யானைக்கு அடித்தது யோகம்.

பக்தியானது உண்மைமயமாக, உணர்ச்சி மயமாக இருக்கிறதே ஒழிய தடபுடலில் இல்லை.

மாணிக்கவாசகர் உண்மையானவர். உணர்ச்சிமயமானவர். எளிமையானவர். அவருக்குக் கிடைத்துவிட்டது ஆனந்த சொரூப மான இறையருள்.

முத்திக்(கு) உழன்று
  முனிவர்குழாம் நனிவாட;
அத்திக்(கு) அருளி
  அடியேனை ஆண்டுகொண்டு
பக்திக் கடலுள்ப்
  பதித்த பரஞ்சோதி
தித்திக்கு மாபாடித்
  தெள்ளேணம் கொட்டாமோ. (71)

## 12

தண்ணீர் தான் பனிக்கட்டி ஆகிறது. பனிக்கட்டியில் கையை வைத்தால் போதும். சுரீர் என்று குளிரும். உடம்புக்குள் மின்சாரம்

(அத்திக்கு அருளி - யானைக்கு அருள்பாலித்து. தித்திக்கும் ஆ பாடி - நினைக்க நினைக்க ஆனந்தமாக இருக்கும் அற்புதத்தைப் பாடலாக வைத்துப்பாடி.)

ஓடுவது போல் இருக்கும். தேள்க் கொட்டுவது போலிருக்கும் பனிக் கட்டியின் குளிர். பனிக்கட்டியை உடைப்பது கடினம். பிட்டு வைப்பதும் கடினம். தண்ணீர்மயம் என்றாலும் சாமான்யமாக உடைபடாது. கல்லாக இருக்கும் பனிக்கட்டி.

பனிக்கட்டியைப் பிட்டு வைப்பதற்கு அதோடு மல்லுக்கட்ட வேண்டியதில்லை. தண்ணீருக்குள் போட்டால்ப் போதும். பனிக் கட்டி உருகிவிடும். கரைந்து நீரோடு நீராய்க் கலந்துவிடும்.

சமுத்திரத்தில் போட்டால் சமுத்திரமே ஆகிவிடும் பனிக் கட்டி. ஆவலோடு கரைந்து சேர்ந்து கொள்ளும் பனிக்கட்டி. ஆர்வத்தோடு கடல் முழுவதையும் குடித்து விடுவதற்கு உருகுவது போல் உருகும். கரைவது போல் கரையும்.

சம்பந்தமே இல்லை என்று சொல்லும்படி திடகாத்திரத்தோடு கல்லாக இருந்தது பனிக்கட்டி. நீராக இருந்தது கடல். ஒன்று சேர்ந்துவிட்டால் ஒன்றோடொன்று கலந்து விடுகின்றன. ஆவேசத்தோடு கலந்து விடுகின்றன.

நம்முடைய காரியமும் அப்படித்தான். எல்லாம் கடவுள்மயம் என்று தெரிந்துவிட்டால் போதும். நாமும் கடவுள்மயந்தான். அப்படி ஆனந்தக் கடலாக இருக்கிறான் சிவபெருமான்.

உருகிப் பெருகி
    உளம்குளிர முகந்து கொண்டு
பருகற்(கு) இனிய
    பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன்
    வார்கழலே நினைந்தடியோம்
திருவைப் பரவிநாம்
    தெள்ளேணம் கொட்டாமோ. (72)

13

எது எக்கேடு கெட்டுப் போனாலுஞ்சரி, நான் என்பது மட்டும் அப்படியே இருக்கவேண்டும் என்று போராடுகிறான் மனிதன். நான் என்பதை விடமுடியாது என்று சாதிக்கிறான். அதை இறுகப் பற்றிக் கொண்டு மல்லுக்கட்டுகிறான்.

---

(தென்னன் - சிவபெருமான். அடியோம் திருவை - எங்கள் பொக் கிஷத்தை. எங்கள் பாக்கியமாகிய சிவபெருமானை.)

நான் என்பது ஒழிந்தால் போதும். எழுபது கிலோ எண்பது கிலோ என்றிருக்கும் உடம்பு, உடம்பு முழுவதும் ஊடுருவிப் பரந்து நிற்கும் ஆன்மா. அண்டபிண்ட சராசரங்களை எல்லாம் எடை போட்டுப் பார்க்கும் மனம் அவ்வளவும் இறைவன் மயம் என்று ஆகிவிடும். பிறகு தொல்லை நமக்கு இல்லைதான்.

நன்மை, தீமை, லாபம், நஷ்டம், மேல், கீழ் ஒன்றும் இல்லை தான். ஆனந்த மயந்தான்.

வான்கெட்டு மாருதம்
மாய்ந்தழல்நீர் மண்கெடினும்
தான்கெட்டல் இன்றிச்
சலிப்பறியாத் தன்மையனுக்(கு)
ஊன்கெட்டு உயிர்கெட்(டு)
உணர்வுகெட்டென் உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ. (73)

14

நாம் மனிதர்களாக இருக்கிறோம். அதனால் கடவுளும் மனிதராகவே இருக்கிறார் என்று நினைக்கிறோம். அதுமட்டுமா? இந்தியன், நீக்ரோ, ஐரோப்பியன், சீனன், கிறிஸ்துவன், முஸல்மான், ஆண், பெண், ஐயர், பிள்ளை என்பதுபோல கடவுளையும் ஒரு சாதிக்காரர் என்று நினைக்கிறோம். அப்படி நினைக்கிறது இயல்பாய்ப் போய்விட்டது நமக்கு.

கடவுளுக்குச் சாதி இல்லை. மரம், மான், மீன், மனிதன், நட்சத்திரம், தீ, நீர் எல்லாமே கடவுள்மயம் என்று ஆனபின் அவரை ஒரு இனத்தார், ஒரு குலத்தார் என்று சொல்வது பொருத்தம் இல்லை.

எப்படியும் கடவுளுக்கு ஒரு குலத்தைச் சொல்லத்தான் வேண்டும் என்றால், கடவுளுடைய குலத்தை "சாதி கெட்ட குலம்" என்றுதான் சொல்ல வேண்டும்.

---

(வான் - ஆகாயம். மாருதம் - காற்று. அழல் - தீ. தான் கெட்டல் இன்றி சலிப்பு அறியா தன்மையன் - ஆதாரமாகிய பஞ்சபூதங்கள் வரும் போகும், மாறும். ஆனால் அடிப்படையாகிய இறைவன் அப்படியே இருக்கிறான். மாறுதல் என்பது அவனுக்கு இல்லை தான். ஊன் - உடம்பு.)

இப்படி அமைவது வேடிக்கைதான். இந்த வேடிக்கையில் உள்ள ரசத்தைப் பார்த்தால் பாடல் வந்துவிடும். ஆடலும் வந்து விடும்.

சாதிகெட்டவராக இறைவன் இருந்தாலும், தம் அடியார் களுடைய குலம், கோத்திரம் இவற்றை அவர் மதிக்கவே செய்வார். அவர் அவர் ஆசாரத்தை ஒட்டியே பழகுவார். வேடர் குலத்தில் ஒரு பக்தர். அவரோடு பழகுகிறபொழுது அந்த வேடரைப் போலவே தலையில் கொக்கு இறகைச் சூடிக் கொள்வார். கற்றை கற்றையாக எடுத்துச் சொருகிக் கொள்வார். இதுவும் ரசமான காரியந்தான். இதைவைத்தும் ஆடலாம். பாடலாம். இனி என்னதான் பிரியமாக இருந்தாலும் பொது இடங்களில் கணவனும் மனைவியும் நெருங்கி ஒட்டுவதில்லை. கொஞ்சம் விலகியே நிற்பார்கள். நாகரீகமாகத் தனித்தனியே நின்று பேசுவார்கள்.

சிவபெருமான் காரியமோ நேர்மாறாக இருக்கிறது! மனைவியைச் சேர்த்து அணைத்தபடியே நடமாடுகிறார். எவ்வளவு பெரிய சபைக்குள் வந்தாலும் உமாதேவியை உரசியபடியே ஒட்டிக் கொண்டுதான் வருகிறார். உடம்பில் சமபாதி உமை என்று சொல்லும்படி நெருக்கத்தில் வைத்துக் கொண்டே இருக்கிறார். அந்த அம்மையும் பர்த்தாவின் இஷ்டத்துக்கு ஆளாகிவிட்டார்.

உமையம்மையின் திருஉளப்பாங்கு (நலமு)ம், பாடலுக்கு உரிய விஷயந்தான். அதை வைத்து ஒரு பாட்டுப் பாடினால் போதும். ஆட்டம் வந்துவிடும்.

இவை எல்லாவற்றையும் விட பெரிய வேடிக்கை ஒன்றிருக் கிறது. ஆலகால விஷத்தையே அள்ளி அள்ளி வாயில் போட்டு விழுங்கிவிட்டார். அமிர்தத்தை உண்பது போலவே உண்டு விட்டார். அதுவும் அவரோடு சேர்ந்து சிவமயம் ஆகிவிட்டது.

சிவபெருமானே தன்னுடைய காரியங்களை யோசித்துப் பார்க்கிறார். அவருக்கே வேடிக்கையாக இருக்கிறது. சிரிப்பு வந்து விடுகிறது. உத்ஸாகமும் உண்டாகிறது. தம் மனதில் உதிக்கிற உணர்ச்சிகளை அப்படியே உடம்பில் நிறுத்திப் பேச வைப்பதைப் போல அபிநயம் பிடித்து ஆடுகிறார். சதா ஆடிக் கொணடே இருக் கிறார். பொன்னம்பலத்தில் ஆனந்த நடனம் நடந்து கொண்டே இருக்கிறது. அதுவும் ஆடல் பாடலுக்கு ஏற்றதுதான்.

இனிப் பாடலைப் பார்க்கலாம்.

குலம்பாடிக் கொக்கிற
கும்பாடிக் கோல்வளையாள்
நலம்பாடி நஞ்சுண்ட
வாபாடி நாள்தோறும்
அலம்பார் புனல்த்தில்லை
அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பாடல் பாடிநாம்
தெள்ளேணம் கொட்டாமோ. (74)

---

(குலம் - இன்ன குலம் என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாத விநோத குலம். கோல்வளை - வட்ட வடிவமான வளையல். நலம்-நாயகன் விருப்பமே தன் விருப்பமாக உடைய பெருந்தன்மை. நாள்தோறும் - ஆண்டு முழுவதும். அலம்பு ஆர் புனல் - தத்தளிக்கும் நீர்வளம். சிலம்பு ஆடல் - நடனம். சதங்கை கட்டி ஆடும் நாட்டியம்)

குறிப்பு : அற்புதமான பாடல்கள். உணர்ச்சிகளையே சுளகில்ப்போட்டு புடைத்து எடுத்து விடுகின்றன கவிகள். பக்தியின் திருவுருவம் நேருக்கு நேராய் வந்து காட்சி கொடுக்கிறது இதயத்தோடு இதயம் வைத்துப் பேசுகிறது.

விஷயம், உணர்ச்சி, தமிழ் எல்லாம் சேர்ந்து எடுக்கிற அவதாரங்களே பாடல்களாக ஒலிக்கின்றன. பக்தியின் வேகமும் நயமும் தமிழோடு சேர்ந்து பேசுகின்றன.

# காதலும் பக்தியும்

1

வரலாறு என்பது ஒரு கதை. உண்மையான ஒரு நெடுங்கதை. ஒரு மர்மமான உண்மைக் கதைதான் வரலாறு.

வாழ்க்கையில் பரிமளிக்கிற அழகும் ஆனந்தமுமே சைவமதம், சைவத்திற்கும் சந்நியாசத்திற்கும் சம்பந்தம் கிடையாது. சந்நியாசம் என்பது புத்தமதத்தின் செல்லக்குழந்தை. இடை இடையே சைவசமயத்தில் ஏற்பட்ட தடுமாற்றங்களையும், சீரழிவு களையும் களைந்து ஒழுங்குப்படுத்துவதற்கு முனைந்து செயல் பட்டார்கள் சிலர். சமயத்தையும் சமுதாயத்தையும் ஆபத்தி லிருந்து காப்பதற்காக, தங்களையே தியாகம் செய்தார்கள் அவர்கள்.

பொது நலத்திற்காக ஒரு சிலர் தன்னலத்தைத் துறப்பது குற்றம் இல்லை. நல்ல காரியந்தான். ஆனால், லட்சியம் நிறைவேறியவுடன் சந்நியாசிகள் தங்கள் வேஷத்தை (உடனே) களைந்தெறிந்திருக்க வேண்டும். இல்லற நாயகர்களாக வாழ்ந்து காட்டி இருக்க வேண்டும். எதிரிகளை விரட்டி அடிப்பதற்காக மனைவி மக்களை விட்டுவிட்டு, போர் வீரர்களாக எவ்வளவோ தூரம் போகிறார்கள் இளைஞர்கள். போர் முடிந்தவுடன் போர்ச் சின்னங்களைக் கழற்றி வைத்து விடுகிறார்கள். அப்படியே குடும்பத்தோடு குடும்பமாய் வந்து ஒட்டிக்கொள்கிறார்கள். அது போலவே குழப்பத்தை எதிர்த்துப் போராடி முடித்தபிறகு குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டிருக்க வேண்டும் சந்நியாசிகள்.

இல்லாவிட்டால் சந்நியாசத்தை ஒரு அம்சமாக்கி, அதற்கென்று ஒரு நிர்வாகஸ்தாபனத்தை (மடத்தை)யாவது

நிறுவாமல் விட்டுத் தொலைத்திருக்க வேண்டும். நமது துரதிர்ஷ்டம் சந்நியாசத்திற்கென்று நம் நாட்டில் ஒரு நிலையமே ஏற்பட்டுவிட்டது. அதற்கென்று ஒருநிலையம் ஏற்பட்டுவிட்டதால் தன் அதிகாரத்தை அது நிலைநிறுத்துவதற்காக, இல்லறத்தையே இழித்தும் பழித்தும் பேசத் துணிந்துவிட்டது.

துறவற நிலையம், ஆபத்தான காரியம். இதனால் மனித வாழ்க்கைக்கு பெரிய நஷ்டந்தான். இந்த ஆபத்தும் நஷ்டமும் மாணிக்கவாசகரை யோசிக்க வைத்திருக்கிறது. மாணிக்கவாசகர் திகைத்துப்போய் விட்டார். என்னடா இது! ஆச்சர்யமாக இருக் கிறதே! இல்லற தர்மத்தைக் காப்பதற்காக இவர்கள் சந்நியாச கோலத்தை மேற்கொண்டார்கள். எதைப் பாதுகாக்க முனைந்தார் களோ, அதையே அழிக்கப் பார்க்கிறார்களே இவர்கள் என்று திகைத்துப் போனார் மாணிக்கவாசகர்.

இனி மாணிக்கவாசகர் சொல்கிறதைக் கேட்போம். "சிவ பெருமானே சனகாதி முனிவர்களை ஆலமர நிழலில் உட்கார வைத்து உபதேசம் செய்தார். "முனிவர்களே! நீங்கள் சந்நியாச மோகத்தில் குடும்ப நலத்தை மறந்துவிடாதீர்கள். அறம் பொருள் இன்பம் மூன்றும் முறையோடு சேர்வதுதான் வீடு. அதாவது பேரின்பம். இந்த மூன்றும் இல்லாவிட்டால் பேரின்பம் இல்லை. உலகமே இல்லைதான்!"

முனிவர்களுக்கு இப்படி ஏன் இறைவன் உபதேசிக்க வேண்டும் என்று கேட்கிறாள் ஒரு பெண். அப்படி அவர்களுக்கு உபதேசிக்கா விட்டால் வாழ்க்கை நலம் பற்றி அவர்களுக்கு எப்படித் தெரியும்? என்கிறாள் உத்தரம் சொல்கிற அடுத்த பெண். இதோ வருகிறது பாடல்.

"அருந்தவருக்(கு) ஆலின்கீழ்
அறம்முதலாம் நான்கினையும்
இருந்தமர்ந்து உரைக்குமது
எனக்கறிய இயம்பேடீ!
அறந்தவருக்(கு) அறம் முதல்நான்(கு)
அன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக்(கு) உலகியற்கை
தெரியாகாண் சாழலோ" (75)

---

(திருந்து அவருக்கு - வாழ்க்கை நெறிக்குத் திருந்த வேண்டிய சந்நியாசிகளுக்கு. தெரியா - விளங்காமல்ப் போய்விடும். அறம் தவர் - சுதர்மத்தையே தவமாகக் கொண்ட முனிவர்.)

2

பாடல்களைப் பாராயணமே பண்ணிவிடுகிறோம். கண்ணை மூடிக்கொண்டு தலைகீழாகவே ஒப்புவித்துவிடுகிறோம். பாடல்களில் உள்ள வார்த்தைகளைக் கொண்டு சிலம்பமே ஆடிவிடுகிறோம். பதவுரை, பொழிப்புரை, விரிவுரை என்றெல்லாம் இடித்து இடித்து தொம்சம் செய்துவிடுகிறோம். தொம்சம் செய்வதற்கு என்றே புற்றீசல் போல் கிளம்பிவிடுகிறார்கள் வியாக்கியான கர்த்தாக்கள்.

இப்படி எல்லாம் பாடல்களையும் அவற்றில் விளையும் கலைப் பண்புகளையும் பிய்த்து எறியும் வியாக்யான கர்த்தர்கள் பாடல்களில் உள்ள உணர்ச்சியை (விஷயத்தை)ப் பற்றி யோசிப்பதே இல்லை. யோசித்தால் அல்லவா அற்புதம் இன்னதென்று தெரியும்.

வியாக்யான கர்த்தர்களின் கொடுமை தாங்க முடியாத அளவிற்குப் போய்விட்டது. அதனால் கருணை உள்ளங்கொண்ட முன்னோர்கள் திருவாசகம் போன்ற தெய்வீகப் பாடல்களை அனுபவிக்கவேண்டும் என்று சொன்னார்கள். தெய்வத்தையும் குழந்தையையும் அனுபவிப்பது போல பாடல்களை அனுபவிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அனுபவிக்க அனுபவிக்கத்தான் உண்மை ஜொலிக்கும். பதவுரை, பொழிப்புரை என்று குதறுவதால் பிரயோசனம் இல்லை என்று தெளிவாகவே சொல்லி விட்டார்கள்.

முன்னோர்களின் இப்பொன்னுரையைக்கூட வியாக்யான கர்த்தர்கள் தந்திரமாகத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டார்கள். ''திருவாசகம் போன்ற தெய்வீகப் பாடல்களுக்கு பொருளே (விஷயமே) தெரிய வேண்டாம். உண்மையைப் பற்றி - அதாவது உணர்ச்சியைப் பற்றி நீங்கள் யோசிக்கவே கூடாது. வார்த்தைகளை மென்று குதப்பி, கண்ணை மூடிக்கொண்டு பாடல்களை ஒப்பாரி வைத்தால் போதும். அப்படிப் பாராயணம் பண்ணப் பண்ண மோட்ச சாம்ராஜ்யத்தின் கதவுகளே உங்களுக்காக விரிந்து விரிந்து திறக்கும்.''

''வீஷயம் (உண்மை) பற்றி நீங்கள் யோசிப்பது பாவம், பாராயணம் பண்ணுவதோ புண்ணியம். அதைவிடப் பெரிய புண்ணியம், பாடல்கள் சம்பந்தமாக நான் என்ன சொல்கிறேனோ அதை அப்படியே அங்கீகரித்து விடுவது!'' இப்படி ஒரே போடாக - செம்போடாகவே போட்டுவிட்டார்கள், வியாக்யான கர்த்தர்கள்,

நம்மவர்களும் அவர்களுடைய கட்டளையை அப்படியே ஏற்றுக் கொண்டார்கள். பிறகு யோசனை எங்கிருந்து வரும்? புத்தி எப்படி வரும்?

புத்தி இருந்தால்! பக்தி வேறு, அன்பு வேறு என்று வியாக்யானம் செய்ய முடியுமா? மனைவி, மக்கள், உற்றார், உறவினர், வீடு, வாசல், குடும்பம் என்றெல்லாம் வகுத்து வைத்து, அன்பைக் கொடுக்கிற காரியம், பக்திக்கு விரோதமான காரியம் என்றுதான் சொல்ல முடியுமா? மாணிக்கவாசகர் போன்ற ஞானி களையே தங்களுடைய பித்தலாட்டத்திற்குச் சாட்சி சொல்ல அழைக்கிறார்களே! புத்தியிருந்தால் அப்படி ஒரு அசட்டுத்தனம் எப்படி வரும்?

இறைவனை வெறும் ஆண்டிப்பண்டாரம் என்று சொல்ல வில்லை மாணிக்கவாசகர். என்னுடைய தந்தை என்கிறார். அண்டபிண்ட சராசரங்களுக்கெல்லாம் அவர்தான் தந்தை என்கிறார். இறைவனுடைய அருளிலிருந்து விளைந்தவைதாம் பேரண்டங்களும் சராசரங்களும். இறைவன்தான் எல்லா வற்றிற்கும் நாயகன் என்கிறார் மாணிக்கவாசகர். விராட் புருஷனாய், ராஜாதிராஜனாய் விளங்குகிற இறைவனை வெறும் கோவணாண்டி என்று ஒதுக்கி வைக்க முடியுமா?

தந்தையாய் தாயாய் விளங்குகிற இறைவன் தன்னுடைய குழந்தைகளின் நலத்திற்காக, சில சமயம் சில காரியங்கள் செய்வார். சில தியாகங்களையே செய்வார். புதுப்புது வேஷங் களையே போட்டுக் கொள்வார். சந்நியாச வேஷம் போட்டுக்கூட பிரபஞ்ச நலத்தை - லோக க்ஷேமத்தைக் கவனித்துக் கொள்வார். இது சம்பந்தமாக மாணிக்கவாசகர் சொல்கிறார்.

ஒரு பெண் மற்றொரு பெண்ணிடம் கேட்கிறாள். "பிரபஞ்ச நாயகனாகிய இறைவன் ஏன் சந்நியாச வேஷம் போட்டார்? அதாவது நல்ல வேட்டி கூட இல்லாமல் கோவணத்தைக் கட்டிக் கொண்டாரே அது ஏன்? இப்படிக் கேட்டாள் பெண். "அன்பு முழுவதையும் வெறும் ஆசையாய்க் கொட்டி விடக்கூடாதே - வெறும் சுயநலமாய்ப் போய்விடக் கூடாதே அன்பு" என்று நமக்கு ஞாபகப்படுத்தவே அவர் அந்த வேஷம் போட்டார்."

"கோவணத்திற்குச் சரடாக இருந்தது வெறும்கயிறு அன்று. உலோகக் கம்பியும் அன்று. கலை இன்பம் பழுத்துக் கனிந்த

பாடல் (மறை)கள்தாம் கோவணத்தின் சரடு. தியாகந்தான் கௌபீனம். தன்னையே தியாகப்படுத்தி, தன் அருள்ப் பிரகாச மாகிய பேரண்டம் முழுவதையும் அவர் நெறிமுறைப்படுத்து கிறார்.

கேள்வி கேட்ட பெண்ணுக்கு இப்படிப் பதில் சொன்னாள் அடுத்த பெண். இனிப் பாடலைப் பார்ப்போம்.

''என்னப்பன் எம்பிரான்
எல்லோர்க்கும் தான்ஈசன்
துன்னம்பெய் கோவணமாக்
கொள்ளும்அது என்னேடி?
மன்னுகலை துன்னுபொருள்
மறைநான்கும் வான்சரடாத்
தன்னையே கோவணமாச்
சாத்தினன்காண் சாழலோ. (76)

3

ஆனந்தமயமானவர் கடவுள். அப்படியானால் கடவுளின் திருவருளில் விளைந்த பிரபஞ்சம் முழுவதும் ஆனந்தமயந்தான். சின்னஞ்சிறிய புல்லிலிருந்து பெரிய ஆலமரம் வரை-ஏன் மனிதர் வரை - எல்லா உயிரினங்களும் ஆனந்தமயமானவையே. உயிரினங் களின் ஆனந்தம் அவற்றின் குலவிருத்தியில்தான் இருக்கின்றது. மனிதனுடைய காரியம் இதில் ஒரு தனிநிலை. குலவிருத்தியை ஏனோ தானோ என்று நடத்திவிடுகிற காரியம் இல்லை மனிதன்.

தனக்கென்று மனைவி, மக்கள், வீடு, குடும்பம் என எத்தனையோ அம்சங்களைக் கட்டுக்கோப்பாக வைத்து ஒழுங்கான முறையில் குலவிருத்தியை நடத்தி வருகிறான் மனிதன்.

குலவிருத்திதான் உயிரினங்களின் லட்சியம். அது ஒரு ஆனந்தமயமான லட்சியந்தான். இறைவனுடைய காரியம் இந்த ஆனந்தமயமான லட்சியத்திற்கு ஆதாரமாக விளங்குகிறது. எப்படி என்று பார்ப்போம்.

இறைவன் ஆனந்தமயமாக இருக்கிறார் என்றால் நடனமய மாக - நடராஜ மூர்த்தியாகவே இருக்கிறார். நடனந்தான் இறைவன். இறைவன் தான் நடனம். அப்படி நடனமயமாக இருக்கிறது தெய்வதரிசனம்.

ஒரு பெண் மற்றொரு பெண்ணிடம் கேட்கிறாள், ''நடனமய மாகவே இருக்கிற இறைவன் ஏன் நடனம் ஆட வேண்டும்?

---

துன்னம் பெய் - கோர்த்துத் தைத்த. மன்னுகலை - நிலைபெற்ற தலை நயத்தோடு கூடிய.

சித்தாகாசம் என்னும் சிதம்பரத்தைத் தேர்ந்தெடுத்து, அதில் பொன்னம்பலம் என்னும் அரங்கை வகுத்து, ஏன் நடனத்தை ஆடிக்காட்ட வேண்டும்? கேள்வி வசமான கேள்விதான். பதில் சொல்கிற பெண்ணும் வசமாகவே பதில் சொல்கிறாள்.

''நடனமானவர் தான் இறைவன். ஆனாலும் அவர் நடனத்தை நமக்கு ஆடிக்காட்ட வேண்டும். அவர் ஆடிக்காட்டினால் தான், தெய்வ தத்துவம் ஆனந்தமயமானது, சிருஷ்டி தத்துவமாக விளைந்து கொண்டே இருப்பது என்பது நமக்கு விளங்கும். நாமும் மனைவி, மக்கள், குடும்பம், வாழ்க்கை என்பவற்றை லட்சியமாகக் கொண்டு ஒழுகுவோம். இல்லாவிட்டால் அன்பே இல்லாமல், பிரபஞ்சம் முழுவதும் வறண்டுவிடும். ஒரே காடாய்ப் போய்விடும் உலகம்.

கொலை வெறியின் அதிதேவதையாய் விளங்குகிறாள் காளி. அவள் கையில் உள்ள வேல், கொடுமைகளை எல்லாம் குத்திக் குடலை உருவிய கூர்மையான வேல். கொடியவர்களின் ரத்தத்தில் குளித்து, அவர்களின் ஊனைத் தோண்டி எடுத்த வேல் அது.

இறைவன் நடனத்தை நிறுத்திவிட்டால் போதும். உலகம் முழுவதும் அப்பொழுதே காளியம்மையின் வேலுக்கு இரையாகிவிடும்.'' என்று பதில் சொல்லிவிடுகிறாள் பெண்.

இனிப் பாடலைப் பார்ப்போம்.

''தேன்புக்க தண்பணைசூழ்
 தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்க நட்டம்
 பயிலும்அது என்னேடீ
தான்புக்க நட்டம்
 பயின்றிலனேல் தரணிஎல்லாம்
ஊன்புக்க வேல்காளிக்கு
 ஊட்டாம்காண் சாழலோ. (77)

4

இனிக் கடைசியாக ஒரு பாட்டு.

கடவுள் ஆனந்தமயமானவர். அவருடைய ஆனந்தத்தில் அண்டபிண்ட சராசரங்கள் விளைந்து கொண்டே இருக்கின்றன. நம்முடைய ஆற்றலில் தான், ஆனந்தத்தில் தான் எல்லாம்

---

தேன்புக்க தண்பணை-தேன் சொட்டு குளிர்ந்த சோலைகள். தான் புக்க நட்ட - தன்மயமான நடனத்தை. பயிலும் அது என்னேடி - ஆடிக் காட்ட வேண்டிய அவசியம் என்ன, தரணி - பிரபஞ்சம். ஊட்டம் - ஆகாரம்.

தோன்றுகின்றன என்னும் நினைப்பே இறைவனுக்கு இல்லை. அவருடைய பெருமை அவருக்கே தெரியாது. இடைவெளி இல்லாமல் ஓங்கி விரிந்து நிறைந்து விட்டது, இறைவனுடைய அருள். ஆகாயமே இறைவனுக்குத் தலை. சடைமுடியும் ஆகாயந்தான். போகப் போக முடிவே இல்லாமல் போய்க் கொண்டிருக்கும் திசைகள்தாம் அவருக்கு கைகள். நட்சத்திரங்கள் தாம் இறைவனுக்கு மாலை.

இவ்வளவு தடபுடலோடு கூடிய பெருமான், அரையில் கட்டுகிறது - புலித்தோலைத்தான். உண்பதோ ஆலகால நஞ்சைத்தான். இது என்ன வேடிக்கை என்று ஒரு பெண்ணிடம் கேட்கிறாள் இன்னொரு பெண். அதற்கு வருகிறது பதில்.

''கடவுள் ஒருவர்தான் உண்மை. நாம் உண்மை இல்லை. கடவுளின் கற்பனை தான் நாம்'' என்பது நமக்கு விளங்குவதே இல்லை. சதா நம்மை இது ஏமாற்றிக் கொண்டே இருக்கிறது. இந்த வேடிக்கை கடவுளையும் விட்டபாடில்லை. நாம் தான் உண்மை. அண்ட பிண்ட சராசரம் எல்லாம் நம்முடைய கற்பனை தான் என்பது அவருக்கும் விளங்குவதில்லை. தன்னுடைய நிலை (பெருமையை) இன்னதென்று தெரியாத இறைவனுக்கு உணவைப்பற்றியும் உடையைப் பற்றியும் என்ன அக்கறை இருக்கும்?

இப்படிச் சொன்னாள் பதில். இனிப் பாடலைப் பார்க்கலாம்.

''அம்பரமாம் புள்ளித்தோல்
ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமான் உண்டசதுர்
எனக்கறிய இயம்பேடீ
எம்பெருமான் ஏதுடுத்திங் (கு)
ஏதமுது செய்திடினும்
தம்பெருமை தானறியாத்
தன்மையன்காண் சாழலோ! (78)

(அம்பரம்—அடை. சதுர் - வேடிக்கை)

குறிப்பு: தமிழும் நாடகமும் பாடல்களில் கைகோர்த்துத் தாண்டவம் ஆடுகின்றன. இசைமயமாய் தாண்டவம் ஆடுகின்றன. நட்டுவனாரே பாடல்களுக்கு உள்ளிருந்து தாளம் போடுவது போல கணகண என்று ஒலிக்கின்றன பாடல்கள்.

# நாயகன் வருவானே! அவனுக்கு மாலை தொடுக்க வேண்டாமா!!

மனிதனுக்குக் கொடுத்து வைத்த வரங்களில் அரிய வரம் வாழ்க்கை. பிழைப்புமட்டும் வாழ்க்கையில் இல்லை. நுட்பம், ஆழம், புலமை, ஞானம் எல்லாம் வாழ்க்கையில் உள்ளன. அன்பு மயமாய் இருக்கிறது வாழ்க்கை. வீரம் நிறைந்ததாய் இருக்கிறது வாழ்க்கை.

கலைகளில் எல்லாம் மேலான கலை வாழ்க்கை என்னும் கலை. ஆனந்தமானது. தாண்டவம் ஆடும் கல்யாண மண்டபம் வாழ்க்கை.

வாழ்க்கையில் அழகு நிறைந்திருக்கிறது. அழகுமயமாகவே இருக்கிறது வாழ்க்கை. அழகைப் பார்த்தார்கள் நம்மவர்கள். பார்க்கப் பார்க்கப் பரவசமாக இருந்தது வாழ்க்கை.

பக்தியோடு பார்த்தார்கள் வாழ்க்கையை. தெய்வாம்சம் நிறைந்தது என்று மதித்து வாழ்க்கையை உபசரித்தார்கள்.

நம்மவர்கள் போல் வாழ்க்கையை உலகில் யாரும் மதிக்க வில்லை என்று நிபுணர்கள் சொல்கிறார்கள்.

சமையல்த் துறையை எடுத்துக் கொண்டால், ஆர்வம், கவனம், பக்தி எல்லாம் சேர்ந்து உணவின் ஒவ்வொருஅம்சத்திலும் பிரகாசிப்பதைப் பார்க்கலாம். உடையை எடுத்துக்கொண்டாலும் அப்படித்தான். ஒவ்வொரு அணுவிலும் எளிமை இருக்கும். அழகு இருக்கும். பொருத்தம் இருக்கும். வாய்ப்பும் பக்குவமும் பொருந்தி நிற்கிற அற்புதம் இருக்கும். மனிதர்களோடு மனிதர்களாய்

ஒட்டிக் கொள்கிறது ஆடை. ஆடையின் அழகு பக்தியை உண்டாக்கி விடுகிறது. வீடு, முற்றம், பசு, பூனை, தட்டுமுட்டுச் சாமான், விளக்கு, நகை, மனைவி, மக்கள், நண்பர், உறவினர், கோயில், குளம், தேர், திருவிழா, அவ்வளவும் அழகுமயம்.

மனிதர்களுக்கு உற்ற துணை வாழ்க்கைதான். வாழ்க்கையிலிருந்துதான் அன்பு ஊறுகிறது. அன்பு தெய்வ ஒளியாய்ப் பிரகாசிக்கிறது. அதைப் பார்க்கப் பார்க்க மனிதர்களுக்கு ஊக்கம் பிறக்கிறது. பக்தியே உண்டாகி விடுகிறது.

வாழ்க்கையை முன்னோர்கள் மதித்தார்கள். தெய்வத்தை வாழ்க்கையாகப் பாவித்துப் பார்த்தார்கள். இப்படி ஒரு இகபர இன்பம் வேறு வேறல்ல; ஒன்றுதான் என்று கண்டவர்கள் முன்னோர்கள்.

சகல சக்திகளுக்கும் ஆதாரமாய் இருக்கிறார் கடவுள். அளவிடமுடியாத ஆற்றல் நிறைந்தது சக்தி. அவ்வளவு சக்தியும் இறைவன்மயந்தான். இறைவன் கையில் இருக்கிறது சக்தி. இறைவன் சொன்னபடி கேட்கிறது. அண்டபிண்ட சராசரங்கள் வேஷம் போடுகிறது. நடமாடுகிறது. பிறகு வேஷத்தைக் களைகிறது. மறுபடியும் போடுகிறது.

இந்த உண்மையை அனுபவித்த முன்னோர்கள் தம் வாழ்க்கையோடு சேர்த்து வைத்துப் பார்த்தார்கள். ஆனந்தத்தில் திளைத்தார்கள். அதற்கு ஒரு உருவங் கொடுத்து வழிபட்டார்கள். வழிபாடு தொடர்ந்து நடைபெற வழியும் வகுத்திருக்கிறார்கள்.

பசுவும் காளையும் வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியம் என்பது தெரியும். சகல சம்பத்தும், நமது உணவு, உடை, தேகம், உணர்ச்சி, எல்லாம் பசுவிலிருந்தும் காளையிலிருந்தும் அல்லவா கிடைக்கின்றன என்று கண்டார்கள்.

பசுவைக் கடவுளாக மதித்து வழிபட்டார்கள். காளையைக் கடவுளின் சக்தி - சகல சக்திகளும் சேர்ந்த பூரண வடிவம் என்று உருவகப்படுத்தினார்கள்.

கோயில்தோறும் காளையை நந்தி என்று அங்கங்கே வைத்து வழிபட்டார்கள். மதில்ச் சுவரின் மேலும், சந்நிதானத்தின் முன்பும், கோபுரத்திலும் கொடி மரத்திலும் நந்தியை ஏற்றி வைத்தார்கள்.

மணியின் மேலும் விளக்கின் மேலுங்கூட நந்தியைச் சப்பணம் போட்டு உட்கார வைத்தார்கள்.

இறைவனே தன்னுடையசக்தியைக் காளையாக மாற்றி அதன் மேலேறி பேரண்டம் முழுவதும் வாயுவேகம் மனோவேகத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறான். என்று உபசாரமாய்ச் சொன்னார்கள்.

''திண்போர் விடையான்'' என்று இறைவனைக் குறித்துச் சொன்னார்கள். (விடை - காளை)

அரசன் ஒருவன் இருந்து நம்மை ஒழுங்குபடுத்துகிறான். அவனுடைய அதிகாரம் நாடு முழுவதும் - மக்கள் செயல், சிந்தனை முழுவதும் ஊடுருவிப் பாய்கிறது. அங்கங்கே நின்று காரியங்களை வகுத்து முறைப்படுத்துகிறது. ராஜ்யம் முழுவதும் அவன் பரவி இருந்தாலும் அவனுக்கு அரண்மனை இருக்கிறது. அந்தப்புரம் இருக்கிறது. கொலு மண்டபம் இருக்கிறது. அமைச்சர், தளகர்த்தர், நிர்வாகஸ்த்தர், ஏவலர் எல்லோருக்கும் நாயகமாய் இருந்து வழிகாட்டுகிறான் அரசன்.

இதைப் பார்த்தும் அனுபவித்திருக்கிறார்கள். பேரண்டம் முழுவதும் நீக்கமற நிறைத்திருக்கும் கடவுளும் நிர்வாக சம்பந்த மான கட்டளை பிறப்பிக்க ஒரு கொலு மண்டபம் வைத்திருக் கிறான் என்றும், அவனுக்கென்று தனியாக அரண்மனை ஒன்று இருக்கிறதென்றும், அவன் அங்கு தனிநாயகமாய் விளங்குகிறான் என்றும் அனுபவித்துப் பார்க்கிறார்கள்.

## 'சிவபுரத்தார் போர்ஏறு'

மதுரையில் வையை நதியில் வெள்ளம் பெருகியது. கரையை உடைத்து மதுரைக்குள் தண்ணீர் வந்து சூழ்ந்து கொள்ளும் நிலை.

மண்வெட்டி கூடை சகிதமாக எல்லோரும் ஓடினார்கள். மண்ணையும் மணலையும் கொண்டு வந்து கரையில் போட்டார் கள். கரை உயர்ந்தது.

மதுரையில் பிட்டு விற்கிற ஏழை மூதாட்டி ஒருத்தி, அவள் வீட்டில் வேறு ஆள் இல்லை. இவள் பங்குக்குக் கரையை உயர்த்த ஆள் இல்லை.

சொக்கலிங்க மூர்த்தியே மண்வெட்டி கூடை சகிதமாக கூலிக் காரன் வேஷத்தில் அவளிடம் வந்தார். பசிக்கிறது என்றும், பசியாற உணவு கொடுத்தால், அவள் பங்கை அடைப்பதாகவும்

சொன்னார். தட்டு நிறையப் பிட்டை அள்ளி வைத்தாள். வயிறாரச் சாப்பிட்டார். வையைக் கரைக்கு வந்தார். மண் வெட்டிப் போடவில்லை. மற்றவர்கள் போடுகிற மண்ணைச் சரித்துவிட்டார். கரையை வெட்டி உடையும்படிச் செய்தார். மற்றவர் சுமந்து வருகிற மண்ணைக் கூடையோடு வெள்ளத்தில் தட்டிவிட்டார். சில பேருடைய காலையும் தட்டி விழ வைத்தார்.

அதிகாரிகளுக்கு ஆத்திரம் உண்டானது. அவர்களால் தண்டிக்க முடியவில்லை. கண்டிக்கிறதையோ இவர் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

விஷயம் பாண்டியனுக்கு எட்டியது. ஆவேசத்தோடு வந்தான் பாண்டியன். தான்தோன்றித்தனமாக ஆசாமி செய்கிற அட்டகாசத்தைப் பார்த்தான். கோபம் வந்துவிட்டது. பிரம்பை எடுத்து பளார் பளார் என்று முதுகில் அடித்துவிட்டான்.

கூடையையும் காணோம். மண்வெட்டியையும் காணோம்.

ஆனால் அங்கிருந்த எல்லோரும், ஐயோ, ஐயோ என்று அலறினார்கள். முதுகைத் தடவினார்கள். பாண்டியனும் தன் முதுகைத் தடவினான். அலறினான்.

பேரண்டம் முழுவதுக்குமே விழுந்துவிட்டது அடி. சாட்டையால் அடித்தது போல் உறைத்தது. தேள்க் கொடுக்கால் செய்த சாட்டை கொண்டு அடித்தால் எப்படி உறைக்கும்? அப்படி சுளீர் என்று உறைத்தது முதுகு.

இப்படி ஒரு திருவிளையாடல் நடத்தினார் சொக்கலிங்கப் பெருமான்.

இந்த வேடிக்கையை மறக்கமுடியுமா? குழந்தைகளாலும் முடியாது. வயதானவர்களாலும் மறக்கமுடியாது.

அடிக்கடி ஞாபகத்துக்குவரும் விஷயம். சிரிப்பை உண்டாக்கும். உண்ண உண்ணத் தெவிட்டாத அமிர்தம் போல் ருசி கொடுக்கும் விஷயம்.

எந்த வேலையானாலும் சரி, மேலே சொல்லிய வேடிக்கையை அனுபவித்துக்கொண்டு செய்தால் அலுப்பே இருக்காது. நேரம் போவதே தெரியாது. ஒன்றுக்குப் பத்தாக நடக்கும் காரியம்.

புஷ்பங்களை நந்தவனத்தில் பறிக்கும் பெண்கள் இந்த வேடிக்கையை அழகிய சந்தங்களில் வைத்துப் பாடுவார்கள். பாடிக்கொண்டே மலர் பறிப்பார்கள்.

திண்போர் விடையான்,
சிவபுரத்தார் போரேறு;
மண்பால் மதுரையில்
பிட்டமுது கொண்டருளி,
தண்டாலே பாண்டியன்
தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம்
பூவல்லி கொய்யாமோ. (79)

2

விவரம் தெரியாமல் தன் குழந்தைகள் தனித்தனியே பிரிந்து போய்விட்டார்கள்-தன்னைவிட்டே விலகி இருக்கிறார்கள் என்றால் தாய் மிகவும் ஆற்றாமைப்படுவாள். பிள்ளைகளின் முரண் பாட்டைக் களைவதும் பிள்ளைகளோடு சேர்ந்து இருப்பதுமே தாய்க்கு லட்சியம்.

கடவுளுக்கும் அதுதான் லட்சியம். எல்லாம் ஒன்று என்று மனிதர்களின் உணர்ச்சியில் ஒருமைப்பாடு வரவேண்டும். தன்னோடு எல்லோரும் சேர்ந்து ஒற்றுமையாய் இருக்கவேண்டும். ஒற்றுமை உண்டாகாதபடி இடையூறு செய்யும் ஆணவத்தைக் கரைக்கவேண்டும். இதுதான் கடவுளுக்கு லட்சியம்.

இதற்காக எத்தனையோ உபாயங்களைக் கடவுள் செய்கிறார். அரிய சந்தர்ப்பங்கள் பலவற்றை மனிதர்களுக்குக் கொடுத்திருக் கிறார். அன்பைக் கொடுத்திருக்கிறார். உறவைக் கொடுத்திருக் கிறார். நட்பைக் கொடுத்திருக்கிறார். இவைகளில் இன்பத்தையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறார்.

மேலே சொல்லிய சாதனங்கள் உயிரில்லாமல் போன பிறகு, இறைவனே நேரடியாக வந்துவிடுகிறார். அவதாரம் எடுத்துக் காட்டுகிறார். ஏன் என்றால்? உண்மையை மனிதர்கள் கண்டு

---

(திண்போர்விடை - திடகாத்திரமான கம்பீரம் மிக்க போர்க் காளை. காளையின் எடுப்பும் தோரணையும் ஒய்யாரமாக இருக்கும். (போர் ஏறு) தண்டு - பிரம்பு. தன்னைப் பணி கொண்ட புண் - பாண்டியனிடம் வாங்கிய அடி.)

அனுபவிக்கத்தான். அதற்கு வசதியாக ஆணவத்தைக் கரைப்பதற்குத்தான்.

பாண்டிய மன்னன் முன் கூலியாளாய் வருகிறார் பெருமான். மண் சுமக்கிறார். சேட்டை பண்ணுகிறார். பாண்டியன் கையாலேயே அடிபடுகிறார் என்றால் அதற்கு என்ன பொருள்? நம்மை நமக்குக் காட்டி, நம் வாழ்க்கையையும் காட்டி, நம் ஆணவத்தைக் கரைப்பதுதான்.

சாதாரண மக்கள்-இயற்கையோடு ஒன்றி வாழும் இயல்பான மக்கள் எதிலும் உண்மையாக இருக்கிறார்கள். அன்போடு இருக்கிறார்கள். ஒரே பிரியமும் சந்தோஷமுமாக இருக்கிறார்கள். அவர்களிடம் ஆணவம் என்பது இல்லைதான். அவர்களுக்காக கடவுள் அங்கும் இங்கும் ஓட வேண்டாம்.

ஆனால் நாடு, நகரம், அரசியல், பொருளாதாரம், பட்டம் பதவி, புகழ் என்றெல்லாம் வந்துவிட்டால் அந்த மக்களை வழிக்கு கொண்டுவர இறைவன் பல அவதாரங்கள் எடுக்க வேண்டி இருக்கிறது.

அடிபடக்கூட அவர் தயாராகிவிடுகிறார்.

இதை எல்லாம் பார்த்த பிறகும் அசையாத கரும்பாறைகள் பல உண்டு. "கடவுள் என்ன வேண்டி இருக்கிறது? அவருக்குமேல் நான் செய்து காட்டுகிறேன். பொம்மையைப் பேச வைப்பேன். குழந்தையை (கர்ப்பவதி) உண்டாயிருக்கவும் செய்துவிடுவேன். உவர்த்தனாயில் நெல் விளைவிப்பேன். நெல்லிலிருந்து வேட்டி, சட்டை, துண்டு எல்லாம் உண்டாக்குவேன்?" என்று அந்தக் கரும் பாறைகள் சொல்லும். அகம்பாவமாக நடந்து கொள்ளும்.

உடையாத பாறைகளையும் பொடிப் பொடியாக நொறுக்கு வார் கடவுள். அப்படி நொறுக்குவதன் மூலம் ஆணவம் ஒழியும். "அப்படியா? அப்படியா" என்று அதிசயப்படுகிறதன் மூலம் பலருடைய ஆணவம் கரைய ஏதுவாகும்.

சிவபெருமான் இல்லாவிட்டால் உலகம் ஒன்றும் கஷ்டப் படாது. ஆனால் க்ஷணப் பொழுது நான் உதவாவிட்டால் போதும்! உலகம் மூச்சுவிட முடியாது என்று இறுமாப்போடு நடந்து கொண்டான் சூரியன். சந்திரன், அக்கினி இவர்களும் பக்கமேளம் வாசித்தார்கள். இவர்களை உசிப்பிவிட்டது யாகத்துக்கு அதிபதியாகிய யக்ஞன், தட்சன் முதலியவர்கள்.

சிவபெருமானுக்கு சங்கடமாய்ப் போய்விட்டது. ஆகாயத்தில் உள்ள நிர்வாகம் முழுவதும் வீர பத்திரர் பொறுப்பில் விட்டிருந்தது. அவரை ஒரு பார்வை பார்த்தார் சிவபெருமான்.

என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்வையே சொல்லி விட்டது. வீரபத்திரர் சரியான பாடம் புகட்டி விட்டார் அவர் களுக்கு.

பண்பட்ட தில்லைப்
பதிக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்கன்
அருக்கன்எச்சன் இந்துஅனல்
விண்பட்ட பூதப்
படைவீர பத்திரரால்
புண்பட்ட வாபாடிப்
பூவல்லி கொய்யாமோ. (80)

3

சாதாரண மனிதர்கள் தானே என்று இறைவன் நினைக்கிற தில்லை. மனிதர்களை அன்பர்கள் என்றே நினைக்கிறான். தோழர்கள் என்றே நினைக்கிறான். பத்து மாதம் வயிற்றில் சுமந்தெடுத்த குழந்தைகள் என்றே நினைக்கிறான். எப்படி யாவது வேற்றுமையைக் களைந்து விடவேண்டும். மனிதர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று இறைவன் துடிக்கிறான். ஆவலோடு துடிக்கிறான்.

நெருங்கி வந்து உறவாடுகிறான். நான் என்னும் மயக்கம், நான் பிறந்தேன் என்னும் மயக்கம் தெளியும்படி உறவாடுகிறான். அவனைத் துணையாக வைத்துக்கொண்டு நான் என்ன செய்ய வேண்டும்? அதைச் செய்தேன், இதைச் செய்தேன் என்னும் நினைப்பை - வாலை ஒட்ட நறுக்க வேண்டும். ஏன், ஆணவ வெறியின் வாயில் மண்ணை அள்ளிப் போடவேண்டும. நன்றாகக் குழைத்த ஈர மண்ணையே அள்ளிப் போட்டுவிட வேண்டும்.

நாயில்க் கடைப்பட்ட
நம்மையும்ஓர் பொருட்படுத்து,
தாயில்ப் பெரிதும்
தயாவுடைய நம்பெருமான்;

---

(பண்பட்ட - உழுது உழுது பண்படுத்தப்பட்ட வளமான. எண் பட்ட - அகம்பாவம் பிடித்த. அருக்கன் - சூரியன். எச்சன் - யக்ஞன், அனல் - அக்கினிதேவன்.

மாயப் பிறப்பறுத்து
ஆண்டான்;என் வல்வினையின்
வாயில் பொடியட்டிப்
பூவல்லி கொய்யாமோ, (81)

4

திருப்பெருந்துறையை மறக்க முடியவில்லை மாணிக்க வாசகருக்கு. எங்கு போனாலும் திருப்பெருந்துறை ஞாபகந்தான். அங்குள்ள மாடமாளிகைகளோ, கூட கோபுரங்களோ அதற்குக் காரணம் அல்ல. கோவில் குளம் தோப்பு இவைகூடக் காரணம் இல்லை.

திருப்பெருந்துறை தான் மாணிக்கவாசகரை மனிதன் ஆக்கியது. உண்மையைத் தேட வைத்தது. பார்க்க வைத்தது. பொய்யை உதறி எறிந்துவிடத் துணிச்சல் கொடுத்தது.

திருப்பெருந்துறையில் வைத்து நடந்தது அந்தச் சம்பவம். இப்படி நடக்கும் என்று மாணிக்கவாசகர் எதிர்பார்க்கவில்லை. எப்படியோ நடந்துவிட்டது அது.

அது நடக்கவில்லையானால் மாணிக்கவாசகர் ஒரு பிரதம மந்திரியாகத் திரிவார். வேண்டியவர்களைத் தூக்கி விடுவார். வேண்டாதவர்களைக் கீழே போட்டு மிதிப்பார். தனக்கு நிகராக ஒருவனும் தலை தூக்கக்கூடாது என்று தடபுடல் பண்ணுவார்.

பிறகு, மாணிக்கவாசகராக இருக்க முடியுமா?

பிரதம மந்திரியாகப் போய்விடாமல் மாணிக்கவாசகராக இருக்கவே, அந்தத்திருப்பெருந்துறையில் சிவபெருமான் நடனமாடுகிறார். மாணிக்கவாசகர் பார்த்துப் பார்த்து மகிழச் சிவபெருமான் நடனம் ஆடுகிறார். எப்படி ஆடுகிறார் நடனம்?

சீரார் திருவடித்
திண்சிலம்பு சிலம்பொலிக்க;
ஆராத ஆசையால்
அடியேன் அகம்மகிழ,

(தாய் - கருணை. மாயப்பிறப்பு - நாம் பிறந்தோம் 'நாமாகவே பிறந்தோம். என்னும் நினைப்போடு நிற்கிற ஆணவ மயக்கம். பொடி - புழுதி.)

தேரார்ந்த வீதிப்
பெருந்துறையான் திருநடஞ்செய்
பேரானந் தம்பாடிப்
பூவல்லி கொய்யாமோ. (82)

5

நமக்கு வேண்டியவர் ஒருவர். வெகுதூரத்தில் இருக்கிறார். அவரைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. ரயிலில் ஒரு நாள் முழுக்கப் பயணம். பிறகு ரோடு வழியாக மோட்டாரில் நான்கு மணி நேரம் பிரயாணம். மோட்டாரைவிட்டு இறங்கி கல்லும் முள்ளும் நிறைந்த காட்டினுள் - ஒற்றையடித் தடத்தில் நான்கு மணி நேர நடை.

சின்னச் சின்ன பட்டிகள். அதனுள் ஒரு பட்டி. சந்தும் பொந்தும் போய் ஒரு குடிசையில் நண்பரைப் பார்த்தோம். ஒரு அறைதான் அவர்வீடு. கூரை வேய்ந்த குடிசை. பன்றியும் கழுதையும் முற்றத்தில் திரிகின்றன.

உட்காரவோ படுக்கவோ வீடு வசதி இல்லைதான். ஆனாலும் சொர்க்கமாக இருக்கும் நமக்கு. காடு மேடு எங்கெங்கோ அலைந்து போனோமே? அந்தச் சிரமம் ஒன்றும் இருக்காது.

மனிதன் தான் முக்கியம். நட்புத்தான் முக்கியம். அன்பு தான் முக்கியம்.

பக்தன் எங்கிருந்தாலுஞ் சரி, அவனைத் தேடி வந்து விடுவான் இறைவன். காடு மேடென்று பார்க்க மாட்டான். முடை நாற்றம் மிக்க மாமிசத்தில் நுழைந்த படியே தேடிவருவான் இறைவன்.

திவ்யமான நறுமணங் கமழும் தன்னுடைய அந்தஸ்தைப் பற்றி கவலைப்பட மாட்டேன். பக்தியானது பழுத்து கவியாய்ச் சொரிகிறது என்று வைத்துக் கொள்வோம். கம்பர், மாணிக்க வாசகர் இவர்கள் பக்திக்கு லட்சியம் தமிழ்தான். கவிதான். இவர்களைவிட மாட்டான் இறைவன். இவர்களை வளைய வளையச் சுற்றி வருவான். அவர்கள் பாடப்பாட அவன் அபிநயம் பிடிப்பான். ஆடுவான்.

---

(சீர் ஆர் - அழகு நிறைந்த - குறைவற்றுப் பூரணமாய் அழகு நிறைந்த. சிலம்பு சிலம்பு ஒலிக்க - சலங்கை ஒலி தாளத்தோடு பேச. ஆராத - தணியாத. தேர்ஆர்ந்த - தேர் உலாவும் பெரிய வீதி)

தேன்ஆடு கொன்றை
சடைக்கணிந்த சிவபெருமான்
ஊன்நாடி நாடிவந்து
உள்புகுந்தான் உலகர்முன்னே;
நான்நாடி ஆடிநின்(று)
ஓலமிட நடம்பயிலும்
வானாடர் கோவுக்கே
பூவல்லி கொய்யாமோ. (83)

6

சிற்றெறும்பு ஒன்றைப் பிடித்து உள்ளங்கையில் வைத்துப் பார்க்கிறோம். கடுகளவுதான் இருக்கிறது. ஆனாலும் அந்தச் சின்னஞ்சிறிய எறும்பினுள் நூற்றுக்கணக்கில் தத்துவங்கள் செயல் படுகின்றன. இறைவனுடைய திருவருள் பூரணமாய் எறும்பில் நிறைந்து நிற்கிறது.

யானையைப் பார்த்தால் அது பிரமாண்டமான ஒரு பிராணி. எறும்பு எங்கே? யானை எங்கே? அவ்வளவு பெரிய யானையிலும் அதே தத்துவங்கள் - அதாவது இறை அருள் ஒன்றே நிறைந்து செயல்படுகிறது.

இனி மருத மரத்தைப் பார்க்கிறோம். நூறு யானைகள் வந்தாலும் சமாளிக்கக்கூடிய தைர்யம் மருத மரத்திடம் இருக் கிறது. மருத மரத்தின் வானளாவிய உடம்பென்ன, அதன் கம்பீரம் என்ன, திடகாத்திரம் என்ன? பக்கத்தில் வரமுடியுமா யானை?

மருத மரம் என்ன செய்கிறது.

நூற்றுக்கணக்கில் கைகளை - கிளைகளாகவும் கொம்புகளாக வும் வைத்துக் கொண்டு, அது திசைகளை நாலா பக்கமும் துழாவு கிறது. பாதங்களை நூற்றுக்கணக்கில் பூமிக்குள் இறக்கி பாதாலத் தையே கண்டுபிடிக்க ஓடுகிறது. ஆகாயத்தையே முட்டி ஊடுருவது போல எழுந்து நிமிர்கிறது.

எத்தனையோ ஆண்டுகளாக நிலைத்து நிற்கிறது மருதமரம். நானூறு வருடம் ஐநூறு வருடம் என்று நிலைத்து நிற்கிறது. வயிரம் பாய்ந்துவிட்டது மரத்தில். பெரிய பொந்தே விழுந்து விட்டது மரத்தில்.

---

(தேன்ஆடு - தேன் சொட்டும். ஊன் - மாமிசம். உலகர்முன் எல்லோரும் பார்த்திருக்க. நடம் - நடனம்.)

அந்த மருத மரத்துள்ளும் நூற்றுக்கணக்கான தத்துவங்கள் இருந்து செயல்படுகின்றன. எறும்பிலும் யானையிலும் உள்ள தத்துவங்கள் மருதமரத்துள்ளும் புகுந்து நிறைந்திருக்கின்றன. மரத்தின் ஒவ்வொரு இடத்திலும், வேர், தூர், கிளை, இலை, பூ, காய் எல்லாவற்றிலும் தத்துவங்கள் புகுந்து பரந்து நிறைந்துள்ளன. இறைவனுடைய திருவருள் தான் அது.

பேரண்டம் முழுவதும் இறைவனுடைய அருள்தான். அது ஒன்றுதான். வேறு ஒன்றும் இல்லை.

நம்மைமறந்து மரத்தோடு மரமாக இருந்து பார்த்தால் மருத மரத்துள் நடக்கிற காரியம் ஒவ்வொன்றாய்த் தெரியும்.

அப்பொழுது மரம் கடவுளாகவே தெரியும். கையெடுத்துக் கும்பிடத் தோன்றும். சாஷ்டாங்கமாய் அதன் காலில் விழுந்து வணங்க வேண்டியதுதான்.

எனக்குள்ளும், என் தாய் தந்தையினிடத்தும், பாட்டன், பூட்டன், பாட்டி, பூட்டிக்குள்ளும் நிறைந்திருக்கிறது இறையருள். அதே இறை அருள்தானே மருத மரத்திலும் நிறைந்திருக்கிறது. இந்த அதிசய உணர்வு வந்தவுடன், நான் என்னும் ஆணவம் தொலைந்து போகிறது.

எந்தைஎன் தாய்சுற்றம்
மற்றும்எல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை
ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதின்
ஆனந்தத் தேன்சொரியும்
பொந்தைப் பரவிநாம்
பூவல்லி கொய்யாமோ: (84)

(எந்தை - என் தகப்பன், என் தாய், என் உற்றார், என் உறவினர் என்னும் உடைமை முழுவதும் பொய். எல்லாம் கடவுள் மயந்தான். மருத மரத்துப் பொந்தே பொய்யைத் தொலைத்து விட்டது. அந்தப் பொந்து இறைவன்தான். ஞானப்பிரகாசமே தான். தித்திக்கும் தேனேதான்.)

# மதம் என்னத்துக்கு, பக்தியல்லவா வேண்டும்

மகாவிஷ்ணு ஒரு காலத்தில் கடன் வாங்கி இருந்தார். கடனைத் திருப்பிக் கொடுக்க ஒரு தவணையும் சொல்லிவிட்டார். சொன்னபடி கடனைக் கொடுக்கவில்லையானால் தன்னையே கொடுத்து விடுவதாகவும் வாக்களித்துவிட்டார். கடன்தொகை அதிகந்தான். மகாவிஷ்ணுவின் எடைக்கு எடை பொன் தர வேண்டும்.

தவணைக் காலம் வந்தது. ஆனால் விஷ்ணு பெருமானிடம் தங்கம் இல்லை. நாரதர் நிமிஷத்துக்கு நிமிஷம் மிரட்டுகிறார். விஷ்ணுவைக் கூட்டிப் போய்விடுவதாக மிரட்டுகிறார்.

சத்யபாமை பார்த்தாள். விஷ்ணுவைத் தராசின் ஒரு தட்டில் உட்கார வைத்தாள். மறுதட்டில் தன் ஆபரணம் முழுவதையும் - வைர வைடூர்யம் பதித்த ஆபரணம் முழுவதைம் வைத்தாள். கழுத்தில் கிடந்தது, கையில் கிடந்தது எல்லாவற்றையும் கழற்றி வைத்தாள். பெட்டியில் வைத்திருந்ததை எல்லாம் கொண்டு வந்து போட்டாள். பெட்டி பெட்டியாய் வந்தது நகை. ஆனால் தராசின் முள் இம்மிகூட அசையவில்லை.

தங்கம் வலுவானது தான். ஆனாலும் மகாவிஷ்ணுவை அசைக்க முடியவில்லை.

"வாங்கிய கடனைக் கொடுக்க வழியில்லை, தராசு, ஆபரணம், நிறுவை என்ற பித்தலாட்டம் வேறு. இது என்ன ஒழுங்கு" என்று குதிக்கிறார் நாரதர். வைகுந்தமே அமளி துமளியாகி

விட்டது. என்ன செய்வதென்று தெரியாமல் ஒருவரை ஒருவர் பார்க்கிறார்கள்.

இந்த வேளை ருக்மணி தேவி அங்கு வந்தாள். விஷயம் என்னவென்று விசாரித்தாள். கல்லுப் பிள்ளையாராய் மகா விஷ்ணு உட்கார்ந்திருக்கிறார். அவரைத் தராசுத்தட்டோடு ஒருமுறை வலமாக வந்து வணங்கினாள். கண்ணைமூடி பக்தி சிரத்தையோடு தியானித்தாள். ஒரு துளசி இலையை நகைத் தட்டில் வைத்தாள்.

அவ்வளவுதான். நகைத்தட்டு தரையில் வந்து முட்டியது. விஷ்ணு உட்கார்ந்திருக்கிற தட்டோ அந்தரத்தில் தொங்கியது.

எல்லோருக்கும் உயிர் வந்தது. கைதட்டி ஆராவரம் செய்தார்கள். தராசுத் தட்டிலிருந்து மகாவிஷ்ணு இறங்கினார். நாரதர் போய்விட்டார்.

கதை புராணக் கதை தான். ஆனாலும் உண்மையை ஒளி மயமாய்க் காட்டுகிறது.

பக்தி இருந்தால் போதும். கவலைப்பட வேண்டியதில்லை. ஒவ்வொரு காரியமும் நியதிப்படி ஒழுங்காக நடக்கும். நாம் ஒன்றும் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை. அலட்டிக் கொள் வதால் ஒரு பிரயோசனமும் இல்லை. இந்த உண்மையை நயமாய் எடுத்துச் சொல்கிறது கதை.

கடவுளுடைய செயல்தான் எல்லாம். அப்படியானால் கடவுள் தான். உயிரும் கடவுள்தான். உள்ளமும் கடவுள்தான். நல்லது கெட்டது எல்லாமே கடவுள்தான். நாம் வியாபாரம் பண்ணினா லுஞ்சரி, விவசாயம் பார்த்தாலுஞ்சரி, உத்யோகம் நடத்தினாலுஞ் சரி, எல்லாம் கடவுளுடைய காரியம்.

அவன்தான் எல்லாம் என்றான பிறகு நாம் ஏது? நமக்குச் செயல் ஏது? அவன் நடத்துகிறான். நாம் நடக்கிறோம்.

இந்த உண்மையைப் பார்த்து சதா அதில் திளைக்கிறவர் மாணிக்கவாசகர். பக்தியோடு பக்தியாய் நின்று கரைகிறவர் மாணிக்கவாசகர். உண்மையான பக்தர். அவர் மதவாதி அல்ல.

புத்தம், ஜைனம், சாக்தம், வைஷ்ணவம் என்றெல்லாம் பெயர் வைத்துக்கொண்டு தத்துவங்களை அளந்து நிறுக்கிறதோ, வியாக்யானம் பண்ணுவதோ அவருக்குப் பிடிக்காது.

உண்மைதான் அவருக்குத் தெய்வம். உண்மையை அனுபவிக்கிறதுதான் அவருக்குப் பக்தி.

இதை அவருடைய வாக்குமூலத்திலேயே பார்ப்போம்.

புத்தன் முதலாய
  புல்லறிவில் பல்சமயம்
தத்தம் மதங்களே
  தட்டுளுப்புப் பட்டுநிற்க;
சித்தம் சிவமாக்கிச்
  செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினால்
  தோள்நோக்கம் ஆடாமோ. (85)

---

(பல்சமயம் - பௌத்தம் முதலிய சமயங்கள். உண்மையைக் காண உண்டான சமயங்களே. தத்தம் மதங்களே தட்டு உளுப்பு பட்டு நிற்க - அது இப்படி இது அப்படி என்று தங்கள் தங்கள் அபிப்ராயங்களையே வெறியோடு பிடித்துக் கொண்டு தட்டுப் புரட்டான வழியிலே நிற்க.)

# காதலாய்க் கனியும் பக்தி

கதை என்றால் குழந்தைகளுக்கு ஒரே கொண்டாட்டம். குழந்தைகளுக்கு மட்டும் அல்ல. பெரியவர்களுக்கும் கொண்டாட்டந்தான். அரசன் முதல் ஆண்டி வரை எல்லோரும் கதையினிடத்து ஆவல் கொண்டிருக்கிறார்கள். கதையைப் படிப்பதில் ஆவல், கதையைக்கேட்பதிலோ எல்லையில்லாத ஆவல்.

தத்துவ நூல்கள், வழிபாட்டு நூல்கள், வேதாந்த நூல்கள் விஞ்ஞான நூல்கள் எவ்வளவோ இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் கதையைப் படிக்கிறதில் உள்ள வேகமும் ஊக்கமும் மற்றவற்றில் இல்லை. காரணம் என்ன?

கதைகளில் மனிதர் இருக்கிறார்கள். மனிதர்கள் மட்டும் அல்ல! அவர்களுடைய வாழ்க்கையும் கதையில் சேர்ந்தே இருக்கிறது. வாழ்க்கையில் உள்ள மேடு பள்ளங்கள், முண்டு முடிச்சுகள் அவ்வளவும் கதைகளில் இருக்கின்றன. வாழ்க்கையின் நெளிவு, சுழிவுகளும், ஒளிவு, மறைவுகளும் கதைகளில் அப்படி அப்படியே சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன.

இனி, மனிதப்பிறவி எடுத்தது பெரிதல்ல. பொறுமையோடும், தியாகத்தோடும், ஒப்புரவோடும் வாழ வேண்டும். அப்படி வாழ்வதற்கு ஆணும், பெண்ணும் ஒருமனப்பட்டு, சேர்ந்து செயலாற்ற வேண்டும். அதற்காக அவர்கள் புதிய அவதாரமே எடுத்து விடுகிறார்கள். வெறும் ஆணும் பெண்ணும் என்றில்லாமல் கணவனும் மனைவியுமாகப் புத்தம் புதிய பிறப்பே எடுத்து விடுகிறார்கள், அவர்கள். புதிய அவதாரம் எடுத்துச் செயலாற்றும் படி மனிதர்களை வாழ்க்கையானது ஆக்கிவிடுகிறது. அதனால்

''குடிப்பிறப்பு'' என்று அதை நம்மவர்கள் பாராட்டிப் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள்.

அன்பு என்றும், பொறுமை என்றும் வீரம் என்றும் எத்தனையோ பண்புகளைப் பற்றிப் பேசிக் கொண்டுதான் இருக்கின்றோம். இந்தப் பண்புகளில் உண்மையைப் பார்க்க வேண்டுமானால். குடும்ப வாழ்க்கையில்தான் பார்க்க முடியும். கணவன், மனைவி, குழந்தை, பெற்றோர், உற்றார், உறவினர் நண்பர் இவர்களுடைய உறவில்தான் பண்புகளின் உண்மையைப் பார்க்க முடிகிறது.

வாழ்க்கையை அன்போடு பார்க்கிறவர்கள் ஞானிகள். அவர்கள் ஒவ்வொரு சம்பவத்தையும் உறவோடு உற்றுணர்ந்து பார்க்கிறார்கள். அப்படிப் பார்ப்பதற்கு எப்படியோ அவர்களுக்கு ஒருவழி கிடைத்துவிட்டது. அதனால் ஒவ்வொரு செயலும் கடவுளுடைய செயல் என்பது அவர்களுக்குத் தெரிந்துவிடுகிறது. நாம் என்பதாக ஒன்று இல்லை என்பதும் அவர்களுக்குத் தெரிந்து விடுகிறது.

இனி, நாட்டையும், மக்களையும், வாழ்க்கையையும் நல்லபடியாகப் பாதுகாக்க குலோத்துங்க மன்னனுக்கு அருள்பாலிப்பீராக என்று கடவுளை வேண்டுகிறது ஒரு பாடல். கலிங்கத்துப் பரணி என்னும் நூலில் உள்ள பாடல்.

உலகமக்கள் இல்லறநலத்தை அவமதித்து விடக்கூடாதே என்னும் கருணையில் சிவபெருமானே இமயப்பாவையைத் திருமணம் செய்து கொண்டாராம். திருமணச்சடங்கைப் பிரம்மா நடத்தினாராம். மகாவிஷ்ணு தங்கை பார்வதியைத் தாரை வார்த்துக் கொடுத்தாராம்.

''புயல்வண்ணன் புனல்வார்க் கப்
பூமிசையோன் தொழில்காட்ட
புவனவாழ்க் கைச்
செயல்வண்ணம் நிலைநிறுத்த
மலைமகளைப் புணர்ந்தவனைச்
சிந்தைசெய் வாம்''

ஏன் சிவபெருமானை வணங்கவேண்டும்?

அருமறையின் நெறிகாட்ட
அயன்பயந்த நிலமகளை
(அண்டம்காக்கும்)
உரிமையினில் கைப்பிடித்த
உபயகுலோத் தமன் அபயன்
வாழ்கஎன் றே.

வாழ்க்கையில் உண்மை வேண்டும். மனைவி, மக்கள், கணவன், உற்றார், உறவினர், நண்பர் ஒவ்வொருவரிடத்தும் அன்புடன் வாழ வேண்டும் அந்த அன்பு உண்மையாக இருக்க வேண்டும். உண்மையோடு இருப்பதுதான் ஞானம். அதுதான் விடுதலை. அதுதான் ஆனந்தம்.

உண்மை இருந்துவிட்டால் போதும். கேடான அவ்வளவும் தாமே விலகிவிடும். நல்லன எல்லாம் தாமே தழைத்துவிடும்.

ஒரு காரியத்தில் அவமானம் வந்து விட்டால், எதிரிகளிடம் மட்டுமல்ல, வேண்டியவர்களிடமும் எரிச்சல் வந்துவிடும். உதவியாய் இருக்கிற காரியங்களில் கூட பகைமை உண்டாகிவிடும். சண்டைக்கு மூலகாரணமாய் இருப்பது இந்த அவமான உணர்ச்சி தான்.

ஞானிகளுக்கு ஆணவத்தின் மேல் எரிச்சல் உண்டாவது இயல்புதான். ஆனால் அந்த எரிச்சலின் வேகம் எங்கெங்கோ போய்விடுகிறது. எவை எவை உண்மையாக வாழ வேண்டும் என்று விரும்புகிறார்களோ, அவைகளின் மேலும் பாய்ந்து விடுகிறது எரிச்சல்.

மனைவி பொய், மக்கள் பொய், வாழ்க்கை பொய், செல்வம் பொய், கல்வி பொய், அரசன் பொய், உலகம் பொய் என்று எல்லாம் அந்த வேகம் ஓடிப் பாய்கிறது.

கடவுள் ஒருவர்தாம் உண்மை. மற்றப்படி வேறு எதுவும் இல்லை தான். ஆனால் இந்த உண்மையை உணர்வதற்கு மனிதர்கள் இல்லாவிட்டால் முடியுமா? வளமான பண்பட்ட வாழ்க்கையில்லாவிட்டால் மனிதர்களால்தான் முடியுமா? முடியவே முடியாது.

ஆனால், மனிதன் தன் வாழ்க்கையையே மதிக்காமல் சீரழிக்கிறான். அதைச் சின்னா பின்னமாக்கிக் கேவலப்படுத்துகிறான்.

அப்படியானால் அவனிடம் பக்தி எப்படி இருக்கும்? எளிமை எப்படி வரும்? உண்மையை அவன் எப்படிப் பார்க்க முடியும்? மனைவி, மக்கள், உற்றார், உறவினரிடமே உண்மை இல்லாதவன் வேறு எதில் உண்மையோடு இருக்க முடியும்?

உண்மையும் உணர்ச்சியும் கொண்ட குடும்ப வாழ்க்கையை ஞானிகள் மதித்தார்கள். அதுகாரணமாக இறைவனுக்கே திருக்கல்யாணம் என்றும், ஊஞ்சல் என்றும், பள்ளியறை என்றும், ஊடல் என்றும், தூது என்றும், கூடல் என்றும் வழிபாட்டை வகுத்து வைத்தார்கள். கடவுளை மணவாளன் என்றல்லவா குறிப்பிட்டிருக்கிறார்கள்? மாணிக்கவாசகரோ, நித்தம் மணாளர் என்கிறார், கடவுளை.

மாணிக்கவாசகர் பற்றற்ற ஞானி. அவர் பற்றற்ற ஞானியாக விளங்கியதனால் மனிதர்களையும் மனித வாழ்க்கையையும் மதித்துப் போற்றுகிறார். தெய்வத்தை மதிப்பது போலவே மதித்தார்.

தமிழகம் முழுவதும் மாணிக்கவாசகர் சுற்றி வந்தார். கோவில், மூர்த்தி, வழிபாடு இவற்றில் திளைத்துத் திளைத்து உருகினார். திருப்பெருந்துறைக்கு அடிக்கடி மாணிக்கவாசகர் வருவார். கோவில் தான் அவருக்கு வீடு. மூர்த்திக்கு நடத்துகிற அலங்காரத்தையும், அபிஷேகத்தையும் கண்டுகண்டு களிப்பார். அபிஷேகம், வழிபாடு, பக்த கோடிகள், ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து மயங்குவார்.

கோவிலில் நடைபெறும் திருக்கல்யாணத்தையும் அடிக்கடி மாணிக்கவாசகர் பார்த்திருக்கிறார். இறைவனும், இறைவியும் ஆடிய ஊஞ்சல் என்ன, அவர்களுக்குள் ஏற்படுகிற ஊடல் என்ன, கூடல் என்ன, பள்ளி எழுச்சி என்ன அவ்வளவும் மாணிக்கவாசகர் மனதில் நிலையாய் நின்றுவிட்டன. என்றும் நிலைத்து ஒளிவீசும் திவ்யப்பிரகாசமாக அக்காட்சி நின்றன.

பக்தகோடிகள் எல்லோருமே மாணிக்கவாசகரைப் போலவே அனுபவித்தார்கள். ஒரு பெண், பத்துவயதுள்ள சிறிய பெண்தான். அவள் தினந்தோறும் கோவிலுக்கு வருவாள். தாயும் உடன் வருவாள். இருவரும் மூர்த்திக்கு நடைபெறும் அபிஷேக அலங்காரங்களைக் கண்டு வழிபடுவார்கள்.

குழந்தைக்கு மூர்த்தி அழகிய கவர்ச்சிமிக்க மனிதராகவே தெரிந்தது. எவ்வளவு ஒய்யாரமாய் எடுப்பாய் வீற்றிருக்கிறார்? என்று மயங்கி விட்டாள் சின்னஞ்சிறிய பேதை. அவருடைய அழகிலும் இனிமையிலும் மனதைப் பறிகொடுத்துவிட்டாள் அந்தக் குழந்தைப் பெண்.

அந்தச் சின்னஞ்சிறிய பெண், வழிபாடு முடிந்தபின் தாயிடம் பேசிக்கொண்டு போவது மாணிக்கவாசகரின் காதில் விழுந்திருக் கிறது. உணர்ச்சிமயமாய் உருகிவிடுகிறார் மாணிக்கவாசகர். அப்படியே குழந்தையாக மாறிவிடுகிறார் மாணிக்கவாசகர்.

''அம்மா! திருப்பெருந்துறை நாதருக்கு என்னம்மா தினந் தோறும் கல்யாணம் நடக்கிறது? அவர் எவ்வளவு அழகாய் இருக் கிறார்? அவருடைய பார்வையையும் புன்முறுவலையும் என்னால் மறக்கவே முடியாது. வேறு எதைப்பற்றியும் நினைக்க முடிய வில்லை. நினைப்பெல்லாம் அவர்தான்'' இப்படி எல்லாந்தான் குழந்தை கேட்டிருக்கிறாள் தாயிடம்.

''நித்தம் மணாளர்
நிரம்ப அழகியர்
சித்தத்(து) இருப்பரால்
அன்னே என்னும்!
சித்தத் திருப்பவர்
தென்னன் பெருந்துறை
அத்தர், ஆனந்தரால்
அன்னே! என்னும்! (86)

மேலும் சொல்கிறாள் பெண்.

அவருடைய கையைப் பார்த்தாயா அம்மா! முழங்காலைத் தொட்டுக்கொண்டு கிடக்கின்றன கைகள். எப்படி நெளிந்து நெளிந்து சுழிகின்றது தலைமுடி. அவருடைய சடை அடுக்கடுக் காய் வகிடு எடுத்துவிட்டது போல கம்பீரமாய் புரளுகிறது. மனதை அப்படியே சுண்டி இழுத்து விடுகிறாரே? இழுத்து மனதை உருகி ஓட வைத்து விடுகிறாரே!

"நீண்ட கரத்தர்;
நெறிதரு குஞ்சியர்;
பாண்டிநன் னாடரால்
அன்னே! என்னும்
பாண்டிநன் னாடர்
பரந்தெழு சிந்தையை
ஆண்டன்பு செய்வரால்
அன்னே! என்னும். (87)

இன்னும் சொல்கிறாள் பெண்.

மனதை உணர்ச்சிமயமாக உருக்குவதோடா நின்றுவிடுகிறார் அவர்? உருகிய உள்ளம் ஆனந்தக்கண்ணீர் கொட்டிக் கொண்டே இருக்கும்படி, சுற்றிச் சுற்றி வருகிறார். தொட்டுப் பிடிக்கலாம் என்றால் ஓடி ஒளிந்து கொள்கிறார்.

கண்அஞ் சனத்தார்,
கருணைக் கடலினர்,
உள்நின்(று) உருக்குவர்
அன்னே என்னும்
உள்நின்(று) உருக்கி
உலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால்
அன்னே என்னும். (88)

உமையொரு பாகமாய்க் காட்சி அளிக்கிறார் எம்பெருமான். இமைப் பொழுது கூட விட்டுப்பிரிய முடியாதபடி? தேவியும் பெருமானும் சேர்ந்திருக்கிறார்கள்.

இல்லறமாட்சியை இதைவிட எப்படித் தெளிவுபடச் சொல்ல முடியும்? "தையலோர் பங்கினர்" என்று சொல்லி இருக்கிறது.

துறவுக்கோலத்துள் இல்லற இன்பத்தை ஜொலித்துக்காட்டு கிறார் பெருமான். அப்படிக் காட்டிக்கொண்டே, அந்த ஆசை மனையாளோடு பிச்சைக்கு எழுந்தருளி வருகிறாராம் பெருமானார். பிச்சாடணமூர்த்தியாய் எழுந்தருளிவரும் பெரு மானை - அழகனை - நித்தம் மணாளனைப் பார்த்து விட்டால் போதும்.

பார்த்தபெண் காதல் வெறிக்கு உள்ளாகிறாள். காதல் வெறிக்கு ஆளாகி விட்டால் வேறு ஒன்றையும் யோசிக்கமுடியாது. பைத்தியம் பிடித்துவிடும் மனது.

இறைவனுடைய திருக்கோலத்தைக் கண்டு காதல் வயப்பட்ட பெண்ணின் நிலை இது.

தையலோர் பங்கினர்,
தாபத வேடத்தர்,
ஐயம் புகுவரால்;
அன்னே! என்னும்
ஐயம் புகுந்தவர்
போதலும், என்உள்ளம்
நையும் இதுஎன்னே?
அன்னே என்னும்? (89)

ஆதிகாலத்திலேயே மக்களிடம் அறிவுத்துறை சம்பந்தமாக ஒரு பரபரப்பு ஏற்பட்டது. அதே போல் சமயத்துறை சம்பந்தமாகவும் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. ஒவ்வொரு பகுதியில் உள்ளவர்களும் இறைவனை ஒவ்வொரு வகையில் மூர்த்தமாகப் பாவித்தனர். வடித்தனர்.

தங்களுடைய எதிரிகளைக் கொன்றழித்து, தங்களைக் காப்பாற்றிய அருளாளராக உபசரித்தனர். ஒவ்வொரு கூட்டத்தாராலும் ஒவ்வொரு பெயரிடப்பட்டு இறைவன் உலாவந்தான்.

இறைவனுடைய அதிகாரத்தையும், தோரணையையும் எடுத்துக்காட்டுவதற்காகப், பெரிய பெரிய மாளிகை போன்று கோவில்கள் கட்டப்பட்டன.

இறைவனுடைய செயல்கள் ஓவியங்களாக வடிவெடுத்தன. கதைகளாகவும், திருவிழாக்களாகவும் உதித்தன.

தினந்தோறும் கோவிலுக்குப் போய், இறைவனை வழிபட்டு வந்தவள்தான் பெண். பெற்ற தாயுடன் தான் கோவிலுக்குப் போய் வந்தாள் பெண். இறைவனுடைய கோலமும், அலங்காரமும், அபிஷேகமும் பெண் உள்ளத்தைக் கிளுகிளுக்க வைத்துவிட்டன. இறைவனைப் பற்றிய' கதைகளும் கவிதைகளும் அவள் மனதில் சொக்குப் பொடியையே தூவி விட்டன.

அப்படியே உருகிவிடுகிறாள் பெண். உருகி ஓடும் உள்ளத்தோடு உள்ளமாய் இறைவனே வந்து ஒட்டிக் கொள்கிறான். கண்ணுக்கினிய காதலனாகவே - கல்யாண மாப்பிள்ளையாகவே வந்து ஒட்டிக் கொள்கிறான் இறைவன்.

---

தையல் - பெண். ஐயம் - பிச்சை. தாபத வேடம் - சந்நியாச வேடம். அன்னே - தாயே. நையும் - நைந்து உருகும்.

வேத, மொழியர், வெண்
நீற்றர் செம், மேனியர்,
நாதப் பறையினர்
அன்னே! என்னும்
நாதப் பறையினர்,
நான்முகன் மாலுக்கும்
நாதர்இந் நாதனார்;
அன்னே என்னும் (90)

மேலும் சொல்கிறாள் பெண். தாயிடந்தான் சொல்கிறாள் பெண்.

தேவாதி தேவர்களுக்கும், மும்மூர்த்திகளுக்குமே சிக்காதவர் இறைவர். ஆனாலும் என்னை நாடி என்னிடம் வலிய வந்து விட்டார் அவர். என் இதயத்தோடு இதயமாகக் கலந்து மருவி விட்டார் அவர்.

உன்னற்(கு) அரியசீர்
உத்தர மங்கையர்
மன்னுவ(து) என்நெஞ்சில்
அன்னே என்னும்
மன்னுவ(து) என்நெஞ்சில்
மாலயன் காண்கிலார்;
என்ன அதிசயம்?
அன்னே என்னும் (91)

பெண்ணாக நின்று பேசுவது மாணிக்கவாசகர்தான். ஏதோ மாணிக்கவாசகரின் சொந்த அபிப்ராயம் என்று நினைத்து விடக் கூடாது. குடிப்பிறப்பு - மனைமாட்சி என்றெல்லாம் போற்றிப் பாராட்டப்படுகிற இல்லற நெறியை, சமுதாயம் நெடுகிலும் மதித்து வந்திருக்கிறது. அந்தச் சமுதாய உணர்ச்சியே பாடலாக உருவெடுக்கிறது. அப்படி உருவெடுப்பதற்கு மாணிக்கவாசகர் சாதனமாகத் திகழ்கிறார்.

கடவுளோடு கடவுளாய் இரண்டறக்கலந்து விடும் அனுபூதி நிலைக்கும், இல்லறமே சாதனம். இந்த உண்மையை அற்புதமாய் விளக்கிக்காட்டுகிறது, சைவசமயமும் பண்பாடும். மாணிக்கவாசகர் போன்ற ஞானிகள் சமயப்பண்பாட்டை அருமையாய்த் துலக்கித் துலக்கி விளக்கிக் காட்டுகிறார்கள்.

---

வெண்ணீற்றர் - மேனி முழுவதும் விபூதி மயம். செம்மேனியர் - மேனியோ செக்கச் சிவந்தது.

உன்னற்கு அரியசீர் - கணக்கிட முடியாத பெருமை மிக்க. மால் - திருமால். அயன் - பிரம்மா.

கவிஞர்கள் எல்லோருமே, சமய உண்மையின் உள்ளீடான இந்த அம்சத்தை எடுத்துத் துலாம்பரமாய்க் கோலம் போட்டே காட்டிவிடுகிறார்கள். ஔவைப் பிராட்டியாரின் பாடல்களில் ஒரு வெண்பா.

ஈதல்அறம்; தீவினைவிட்(டு)
ஈட்டல்பொருள்; எஞ்ஞான்றும்
காதல் இருவர்
கருத்தொருமித்(து)—ஆதரவு
பட்டதே இன்பம்;
பரனைநினைந்(து) இம்மூன்றும்
விட்டதே பேரின்ப
வீடு.

இல்லற நெறியின் மேன்மையை, எல்லாம் வல்ல இறைவனே வாழ்ந்து காட்டுகிறார். அவரைக் கண்டு தரிசித்த பெண் தாயிடம் சொல்கிறாள்.

கொன்றை மலர்களையும், சந்திரனையும் சடையில் முடித்து வைத்திருக்கிறார் இறைவன். அவைகளுடன் ஊமத்தை இலை களையும் பூக்களுடன் சேர்த்துக் கட்டி முடித்து வைத்திருக்கிறார். இவ்வளவு அலங்காரத்தோடு பின்னிவிடப்பட்ட சடை, சும்மா தொங்குமா? ஒவ்வொரு அசைவிலும், ஒவ்வொரு நெளிவிலும், பார்க்கும் மனங்களைப் பரவசப்படுத்தி விடுகின்றது.

"கொன்றை, மதியமும்,
கூவிள, மத்தமும்,
துன்றிய சென்னியர்;
அன்னே என்னும்!
துன்றிய சென்னியின்
மத்தம், உன் மத்தமே
இன்றெனக்(கு) ஆனவா(று)
அன்னே என்னும்! (92)

---

கொன்றை - கொன்றை மலர்களும். மதி - பிறைச் சந்திரன். மத்தம் - ஊமத்தை இலை. துன்றிய - சேர்த்துக் கட்டிய. மத்தம் - இப்படிச் சேர்த்துக் கட்டிய கட்டு. உன்மத்தமே - என்னைக் கிறுகிறுக்க வைத்துவிட்டது, பைத்தியத்துக்கு ஆளாகி விட்டேன் நான்.

# புன்முறுவலில் பூத்த நெருப்பு

எப்படியாவது பற்றிக்கொள்வதற்குக் கொம்பு ஒன்று வேண்டும். முடிந்தால் அதில்ஏறி உட்கார்ந்துக் கொள்வது. முடியா விட்டால், பிடித்தாவது தொங்கலாம் அல்லவா? கொம்பு இல்லாமல் நடமாட யாரால் முடிகிறது.

அன்பு, பொறுமை, பணிவு, வீரம், செருக்கு முதலிய பண்புக ளானாலும் சரி, மதம், அரசியல், சமூக முன்னேற்றம் முதலிய கொள்கைகளும் சரி, நாடகம், பரத நாட்டியம், சங்கீதம், கவி, விஞ்ஞானம் முதலிய கலைத்துறைகளே ஆனாலும் சரி, எல்லாமே முதலில் துணையாகத்தான் வருகின்றன. பிறகு நாம் ஏறி அமர இடம் கொடுத்து விடுகின்றன.

மனிதர்களைப் பற்றியோ, வாழ்க்கையைப் பற்றியோ யார் கவலைப்படுகிறார்கள்? கலை, பண்பாடு, பக்தி, இவை பற்றி எப்படி யோசிக்கத் தோன்றும்? ஒன்றைப் பற்றியும் யோசிக்கிற பழக்கம் இல்லாமல் போனதால் அதிகாரத்திற்கு ஆளாகி விடு கிறான் மனிதன். அந்த ஒன்றையும் விட்டுத் தொலை என்றால் விட்டுத் தொலைக்க முடியுமா மனிதனால்?

அதிகாரம் பெருகப் பெருக மனிதனுடைய பயமும் பெருகிக் கொண்டே போகிறது. நம்மிடம் உள்ள அதிகாரத்தை மற்றவர்கள் தட்டிக் கொண்டு போய்விடுவார்களோ என்னும் பயம் ஒன்றையே சதா கட்டிக்கொண்டு புரள்கிறான். பயத்தை மறைப்பதற்காகவே- மற்றவர்களை ஏமாற்றுவதற்காகவே தடபுடலான காரியங்கள் பல செய்வான். பெரிய பெரிய மகாநாடுகள் போட்டு அமர்க்களப் படுத்துவான். காரணம் இல்லாமலே போர்ப் பிரகடனம் போலச்

சவால்களை விடுவான். போர்கூடத் தொடங்கி விடுவான். வெற்றியோ, தோல்வியோ விழாக் கொண்டாடியே தீர்ப்பான். யாகங்களையும் நடத்துவான். தர்பார்களையும் நடத்துவான்.

ஒவ்வொருவரும் தம்மைப்பற்றி, தம் காரியங்களைப்பற்றி, தம் உணர்ச்சிகளைப் பற்றி யோசித்துப் பார்க்க வேண்டும். மற்றவர்களை மறந்துவிடக்கூடாது. வேண்டியவர்களோ, வேண்டாதவர்களோ, அவர்களையும் சேர்த்து வைத்தே பார்க்க வேண்டும். பார்க்கப் பார்க்க அதிகார வெறியின் வாலானது சுருண்டு மடங்கும். அல்லாத பட்சம் அது நீண்டு கொண்டே போகும்.

அதிகாரம் என்பது பேராசையாய்ப் படம் எடுத்து ஆடுகிறது. ஆங்காரமாய்ச் சீறுகிறது. ஆதிக்கமாய் நிற்கிறது. அதனால் காமக் குரோத லோபம் என்னும் மூன்றும் அதிகார வெறிக்கு வலுவான கோட்டைகள் என்று சொல்லி இருக்கிறது. மூன்று கோட்டை களும் வெட்டவெளியில் தொங்குகின்றன என்றும், உள்ளிருக்கும் அதிகார வெறியோ உலகம் முழுவதையும் துன்பப்படுத்துகிறது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

அதிகார வெறியைக் கோரமான அரக்கர் என்றும், அவர் களுடைய வஞ்சனை மயமான மாயக் கோட்டைகள் ஆகாயத்தில் நிற்கின்றன என்றும் அழகாய் வருணித்து சொல்லி இருக்கிறது.

தபசிகளாலும், யோகிகளாலும் இந்த அரக்கர்களை ஒழித்துக் கட்ட முடியவில்லை. முப்புரம் என்ற மூன்று கோட்டைகளையும் அவர்களால் நொறுக்க முடியவில்லை.

இருட்டை எந்தப் படைக்கலத்தால் நொறுக்க முடியும்? ஒரு ஆயுதமும் இருட்டை விரட்ட உதவாது. வெளிச்சத்தைப் பார்த்த உடனேயே - வெளிச்சம் வருவதை நினைத்த உடனேயே இருட்டானது ஓடிவிடும்.

"அதிகார வெறியையும் எந்த ஆயுதத்தாலும் அழிக்க முடியாது" என்னடா இது வேடிக்கையாக இருக்கிறதே?

எங்கிருந்து கொண்டு, எப்படி இருந்து கொண்டு இந்தப்பாடு படுத்துகிறது அதிகார வெறி நம்மை" என்று யோசித்துப் பார்த் தால் போதும்.

யோசிக்க யோசிக்க அதிசயமாக இருக்கும். அந்த அதிசயத்தில் தான் அதிகார வெறி கரையும். நெருப்பில் வெந்து நீராகி விட்டன என்று சொல்லும்படி மூன்று கோட்டைகளும் சுக்கல் சுக்கலாய் நொறுங்கி விடும்.

காலகேயர் என்னும் அரக்கர் வெட்ட வெளியில் மூன்று கோட்டைகளைக் கட்டிக் கொண்டு, அதனுள் இருந்தபடியே தம் மாயத்தால் தேவர்களைக் கேவலப்படுத்துவதாகச் சிவபெரு மானிடம் புகார் வந்து சேர்ந்தது.

அரக்கரைத் தொலைந்துவிட வேண்டியதுதான் என்று சிவ பெருமான் தீர்மானித்து விட்டார். படைக்கலன்களைக் கொண்டு வரும்படி உத்தரவு போட்டு விட்டார்.

என்ன செய்தார்கள் தேவர்கள்? உலகத்தையே தேராக்கினார் கள். வேதங்களைக் குதிரைகளாகப் பூட்டினார்கள். மகாமேரு மலையை வில்லாக வடித்தார்கள். ஆதிசேஷன் என்னும் மிகப் பெரிய பாம்பை அந்த வில்லில் நாணாகக் கட்டினார்கள். பிரம்மா தேர் ஓட்டுகிறார். மகாவிஷ்ணுவே சிவபெருமான் கையில் கூரிய அம்பாக அமர்ந்திருக்கிறார்.

யுத்த சன்னத்தராய் முப்புரங்களை நோக்கி வருகிறார், ஆனந்த சொரூபியான நடராஜ மூர்த்தி. அருள் கொழிக்கும் அவருடைய நயனங்கள், ஏனோ ஆங்கார வெறியில் பழுத்துக் கனி கின்றன.

கோட்டைகளை நெருங்க நெருங்க, அவற்றை நன்றாகப் பார்க்கிறார். பார்க்கப் பார்க்க அதிசயப்படுகிறார். "என்ன விசித்திரம் இது? யாதொரு ஆதாரமும் இல்லாமல் ஒய்யாரமாய், எப்படி அநாதியாய்த் தொங்குகின்றன, இந்தக் கோட்டைகள்"? என்று யோசிக்கிறார். யோசிக்க யோசிக்க வியப்பு மேலோங்கு கிறது. வியப்பு மயமாய் நிற்கிற பெருமான் கடகடவென்று சிரித்துவிடுகிறார். தவிடு பொடியாய் நொறுங்கி விட்டன கோட்டைகள். அரக்கர்களும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தே போனார்கள்.

இனிப்பாடல். (திரு) உந்தியார் என்னும் துறையைச் சார்ந்தது பாடல். துள்ளித் துள்ளிக் குழந்தைகள் ஆடும்

ஆட்டத்திற்கு 'உந்தியார்' என்று பெயர். 'உந்தீபற' என்னும் தொடர் பாடலில் வரும். ஒருவகை மடக்கும், குழிப்பும் சேர்ந்த வண்ண மெட்டோடு கூடியது பாடல். மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய பாடல்தான். மூன்று அடிகள்தான் பாடலில்

''ஈரம்பு கண்டிலம்
ஏகம்பர் தம்கையில்;
ஓரம்பே முப்புரம்
உந்தீப ற;
ஒன்றும் மிகைஎன்றே
உந்தீப ற'' (93)

---

(ஏகம்பர் - ஏகாம்பர நாதர், சிவபெருமான். முப்புரம் - மூன்று கோட்டைகளையும் தகனம் செய்ய. ஈரம்பு கண்டிலம் - ஒன்றுக்கு மேல் அவர் கையில் அம்பு இல்லை. ஒன்றும் மிகை - அந்த ஒரு அம்பு கூடத் தேவைப்படவில்லை!)

# அவன் பாதம் பட்ட இடம் எல்லாம் தங்கமயந்தான்

வாழ்க்கை என்றால் அதில் லாபமும் வரும். நஷ்டமும் வரும். நல்லது கெட்டது எல்லாம் சேர்ந்தது தான் வாழ்க்கை.

எது நடந்தாலும் அது உணர்ச்சியைத் தாக்குகிறது. மனதை ஒரு கலக்குக் கலக்கி விடுகிறது. கலக்கம் தெளிய வேண்டுமானால் மற்றவர்களிடம் நடந்ததைச் சொல்லவேண்டும். வெற்றியோ தோல்வியோ ஒவ்வொன்றையும் இன்னொருவரிடம் சொன்னால் தான் நிம்மதி. இல்லாவிட்டால் மறுகி மறுகித் தவிக்கத்தான் செய்யும் மனம்.

வியாபாரம், விவசாயம், கொடுக்கல் வாங்கல், தொழில், உத்யோகம் இவை சம்பந்தப்பட்ட விஷயங்களையே சொல்லித் தீர்த்தால் தான் நிம்மதி. காதல் சம்பந்தமான காரியங்களை எப்படி அடக்கி வைக்க முடியும்?

ஆனால் காதல் சம்பந்தமான காரியங்களை மனந்திறந்து சொல்ல வழியில்லை. தாயிடம் சொல்ல முடியுமா? தகப்பனிடம் சொல்ல முடியுமா? சகோதரர்களிடம் சொல்ல முடியுமா? உயிருக் குயிராய் பழகுகிறவர்களிடம் கூடச் சொல்ல முடியாது? வேலைக் காரர்களிடமும் சொல்ல வழியில்லை.

சொல்வதற்கும் வழியில்லை. சொல்லாமல் இருக்கவும் முடிய வில்லை. அப்படி ஒரு சிக்கலில் வைத்துக் கசக்கிப் பிழிகிறது காதல்.

காதலுக்கு ஆளானவர்கள் தங்கள் மனதில் உள்ளதைக் கொட்ட வேண்டுமே? கொட்டினால்த் தானே நிம்மதி (விடுதலை)? அதற்காக ஒரு உபாயத்தைக் கண்டுபிடித்திருக்கிறது இயற்கை.

மயில், குயில், அன்னம், வண்டு, கிளி, தென்றல், மேகம், மான் இவைகளிடம் சொல்லி ஆறுதல் அடையும்படி மனதுக்கு ஒரு வழியைக் காட்டியிருக்கிறது இயற்கை.

மயில், குயில் முதலியவை காதலர் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்பது போலவும் அதனால் காதலர்களுக்கு ஒரு ஆறுதல் கிடைப்பது போலவும் வழிசெய்து கொடுத்திருக்கிறது இயற்கை.

பரமரகஸ்யமான விஷயங்களாக இருந்தாலும் மயில் குயில் முதலியவைகளிடம் தாராளமாகச் சொல்லலாம். மனதையே அவைகளிடம் திறந்து காட்டலாம். அதனால் ஒரு தொல்லையும் ஏற்படாது.

சௌகர்யம் இப்படி இருப்பதால், மயில், குயில் முதலியவை களைத் தூது போய் உதவ வேண்டும் என்றுகூட வேண்டிக் கொள் வார்கள் காதலர்கள்.

காதல் சம்பந்தமான விஷயத்தைப் பார்த்தோம். இனி, பக்தி சம்பந்தமாகப் பார்ப்போம்.

பக்தியில் உண்மை இருக்குமானால் அது காதல் மயமாகவே ஜொலிக்கும். காதலாக விளைந்தால்தான் பக்திக்கு உயிர் உண்டு. அப்படிக் கனியாமல் நான் வேறு அவன் வேறு என்று ஒதுங்கி நின்றால் அது பக்தி இல்லை. கடவுளைப் பற்றி வியாக்கியானம் பண்ணுகிற புலமை தான் அது. பல விஷயங்களை மடியில் போட்டு அலசி எடுக்கிற கெட்டிக்காரத்தனம் என்றும் சொல்ல லாம். இந்தக் கெட்டிக்காரதனத்துக்குத்தான் மதம் என்று பெயர். கடவுளை நம் வலையில் விழத் தட்ட வைப்பதற்கு உரிய தந்திரங்களைச் சொல்லும் மதம். கடவுளோடு கடவுளாய் கரைந்துவிடச் செய்யும் பக்தி.

மாணிக்காவசகர் பக்திமான். உண்மையான பக்திமான். பரமபக்தர் அவர்.

அவருக்குக் கடவுள் உற்ற அன்பனாக இருக்கிறார். பழகப்பழக இனிய நண்பனாக இருக்கிறார். உறவாட உறவாடத் தேனூறும் கற்கண்டாக இருக்கிறார்.

சிவபெருமானைப் பார்த்தாலே போதும். பார்த்துக் கொண்டே இருக்கவேண்டியது. பின்பு, வேறு ஒன்றையும் பார்க்கத் தோன்றாது. பார்க்கப் பார்க்க ருசியாக இருக்கும். தெவிட்டாத தேவாமிர்தமாகவே இருக்கும்.

அடிக்கடி தன்னிடம் வந்து சிவபெருமான் உறவாடுவது போல இருக்கிறது மாணிக்கவாசகருக்கு. அவரைத் தொட்டுப் பிடித்துச் சண்டை போடுகிறார். மல்லுக்கட்டுகிறார். கொஞ்சுகிறார். குலாவுகிறார். முள்ளவும் செய்கிறார். பரண்டிக்கூட விடுகிறார்.

இப்படி எல்லாம் உருண்டு புரண்டு விளையாட இடங்கொடுக்கிறான் இறைவன். அதனால் அவனுக்கு அடிமை ஆகிவிடுகிறார். உடல், பொருள், ஆவி எல்லாம் - அவனுக்கே தத்தம்பண்ணுகிறார். அவனே அவருக்கு நாயகன். கண்கண்ட ராஜாதி ராஜனாக இருக்கிறான் அந்த நாயகன்.

அவனில்லாமல் தனியே இருக்கிறது வேதனையாகத்தான் இருக்கும். ஒன்றும் ஓடாது. பைத்தியம் பிடித்தது மாதிரி ஆகிவிடும்.

இந்த நிலையில் குயிலைப் பார்த்துச் சொல்கிறார் மாணிக்கவாசகர். தமிழை நோக்கிவருகிறது ஆற்றாமையும் தவிப்பும். எப்படி?

(தானன தானன
தா ன
தன்னன தன்னன
தன் ன.)

உன்னை உகப்பன்
குயி லே/
உன்துணைத் தோழியும்
ஆ வன்;
பொன்னை அழித்தநல்
மே னி,
புகழில்த் திகழும்,
அழ கன்;

---

(உகப்பன்—நம்புகிறேன். நீதான் உற்ற துணை என்று நம்பிப் பழகுகிறேன். புகழில் திகழ்தரும் அழகன் - புகழ்போல் அழகு மயமாக இருக்கிறான் இறைவன். மயில், மான், புஷ்பம், அருவி, சூரியோதயம், அஸ்தமனம், எல்லாம் அழகானவைதான். ஆனாலும் மனிதர்கள் அழகு தனி. வளமான நன்செயில் நாற்பது ஏக்கரும், தோப்பில் இருபது ஏக்கரும், பாங்கியில் டெபாசிட் பத்து லட்சமும், இன்னும் ஆபரணம், மாளிகை, குழந்தைகள், படிப்பு, பணியாளர்கள் எல்லாம் ஒருவனுக்கு வாய்த்துவிட்டால் அதன்

மன்னன்; பரிமிசை
வந் த
வள்ளல் பெருந்துறை
மே ய
தென்னவன்; சேரலன்;
சோ ழன்
சீர்புயங் கன்வரக்
கூ வாய்! (94)

சாதாரணப் பெண்ணுக்கும் கல்யாணப் பெண்ணுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கும். மணப் பெண்ணை நாலுபேர் ஐந்து பேர் சேர்ந்து அலங்கரிப்பார்கள். பெண்ணின் உச்சியிலிருந்து உள்ளங் கால்வரை அலங்காரம் நடக்கும். மணங்கமழும் புஷ்பமே பெண்ணாக அவதரித்து நடமாடுகிற மாதிரி இருக்கும் மணப் பெண்ணின் அழகு.

கல்யாணப் பெண்ணுக்கென்று தனிப்பட்டு. சட்டை (ரவிக்கை) யும் அப்படித்தான். நகைகளும் அப்படியே. நெற்றிச் சுட்டியிலிருந்து ஒட்டியாணம், கொலுசு, புல்லாக்கு எல்லாம் தனிதான்.

---

அழகு தனிதான். இனி, ஒருவன் செல்வந்தனாக இருக்கிறான். அதோடு பண்பாடு, சீலம், இரக்கம், தருமம், நாணயம் இவற்றை உயிருக்குயிராக மதித்துச் செயல்படுகிறான். அன்போடும் அருளோடும் வாழ்கிறான். நான் என்னும் அகம்பாவம் இல்லாமல் மற்றவர்களை மதிக்கிறான். பிறர்க்குப் பயன்பட வாழ்கிறான். அவனை எல்லோரும் தெய்வமாக மதிப்பார்கள். வானளாவிப் பரவி நிற்கும் அவன் புகழ். அந்தப் புகழை நெடுகிலும் பார்த்துப் பரவசப்படுவார்கள் மக்கள். சிவபெருமானுடைய திருமேனியின் அழகு புகழ்போல் இருக்கிறது. கண்ணுக்கும் மனதுக்கும் விருந்தாய் இருக்கிறது அழகு. பரி-குதிரை. குதிரைச் சேவகனாய் குதிரைமேல் ஏறி பாண்டியன் முன் வந்து நின்றார் சிவபெருமான். நம் உணர்ச்சியில் ஏறி அமர்ந்த வண்ணம் ஆணவத்தை நேருக்கு நேர் நின்று மடக்குவான் இறைவன் என்பது கருத்து. ராஜாங்கம் என்று ஒன்று இல்லாவிட்டால் மக்கள் கந்து கந்தாய்ச் சிதறிவிடு வார்கள். அவர்கள் வாழ்க்கை சின்னாபின்னமாகிவிடும். அதனால் ராஜபக்தி உண்டாகிறது. இறைவனையும் பக்தியோடு பாண்டியன் சேரன், சோழன் என்று அனுபவிக்க வைக்கிறது. சீர்புயங்கன்- தொல்லைகளை அழித்து எல்லை இலா இன்பங் கொடுக்கும் வீரன்.)

மணப்பெண்ணோடு ஆபரணங்கள் பொருந்தி இருக்கும். ஆபரணங்களுக்கு உரிய இடம் அவளுடைய அங்கங்களே என்று சொல்லும்படி பொருந்தி இருக்கும். வைர அட்டிகையைப் பார்த்தால் அது அவளுடைய கழுத்தை ஞாபகப்படுத்தும். வளையலைப் பார்த்தால் அவளுடைய கையை ஞாபகப்படுத்தும். அழகுக்கும் அலங்காரத்துக்கும் ஏற்ற தேவதையாய் பெண்ணை மணப்பெண்ணாகச் சிங்காரிப்பார்கள்.

கோயிலில் எழுந்தருளி இருக்கும் அம்மன்போல காட்சிதருவாள் மணப்பெண். தோழிமார் அழைத்து வர, குனிந்த தலை நிமிராமல் மணவறையை நோக்கி வருகிற மணப்பெண்ணுக்கும், சாதாரணப் பெண்களுக்கும் சம்பந்தமே இல்லை. எடுப்பிலும் தோற்றத்திலும் அவ்வளவு வித்தியாசம்.

பெண்களுக்குள்ளே மணப்பெண் எப்படித் தனித்து நிற்கிறாளோ, அப்படியே மனிதர்களுக்குள் தனித்து நிற்கிறான் அரசன். அரசன் என்றால் அவனுக்குச் செங்கோல் உண்டு. கிரீடம் உண்டு. கொடி உண்டு, வாத்தியம் (முரசு) உண்டு. அவனுக்கென்று மாலையும் உண்டு. நாடு, மலை, ஆறு, வாகனம், சேனை எப்படி அரசனோடு ஒட்டிய அங்கங்களோ, அப்படியே அரசனுக் கென்று பட்டங்கள் (திருநாமங்கள்) உண்டு. மாலை மரியாதை எல்லாம் உண்டு.

ராஜாதி ராஜனாகிய சிவபெருமானுக்கும் அலங்காரமயமான பரிவாரங்கள். தோரணைகள் இருக்கின்றன. பக்தியோடு பரிவாரங்களைப் பார்க்கிறார் மாணிக்கவாசகர். எல்லாம் சிவமயமாக இருக்கிறது. உள்ளத்தை உருக்கிவிடுகிறது. காதல் வெறியோடு பேசுகிறது.

அன்பாய் வளர்த்த கிளியைக் கையில் வைத்துக் கொண்டு நாயகனுடைய பெயர், மலை, நாடு, ஆறு, முரசம் ஆகியவற்றை விசாரிக்கிறார். கிளியும் சுடச்சுட பதில் சொல்கிறது.

கிளி, கேள்வி, பதில், பெண் எல்லாம் நாடகந்தான். ஆசைவெறியில் உண்டாகிற பகல்க் கனவுதான். உண்மையில் மாணிக்கவாசகரே கேள்வியும் கேட்டுக் கொள்கிறார். பதிலும் சொல்லிக் கொள்கிறார்.

மாணிக்கவாசகரின் உணர்ச்சியோடு தமிழும் சேர்ந்து நாடகம் போடுகிறது எப்படி?

"ஏரார் இளங்கிளியே
எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமம்
தேர்ந்துரையாய்"

இப்படி நயந்து கேட்கிறாள் பெண். கணீரென்று பதில் சொல்கிறது கிளி.

"திருப்பெருந்துறை நாயகனை எம்பெருமான் எம்பெருமான் என்று மும்மூர்த்திகளும் சொல்கிறார்கள். நமக்கும் எம்பெருமான். பேரண்டம் முழுவதுக்கும் எம்பெருமான்.

வேறு என்ன பெயர் சொல்ல!

இனிப் பாடலை முழு உருவத்தில் பார்ப்போம்.

ஏரார் இளங்கிளியே
எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமம்
தேர்ந்துரையாய் — ஆரூரன்;
செம்பெருமான் வெண்மலரான்
பாற்கடலான் செப்புவபோல்
எம்பெருமான் எம்பெருமான்
என்று. (94)

இனி நாயகனுடைய நாடு எது என்று கேட்கிறாள் பெண். உடனே சொல்கிறது கிளி.

ஏதம்இலா இன்சொல்
மரகதமே! ஏழ்பொழிற்கும்
நாதன்நமை ஆளுடையான்
நாடுரையாய்; — காதலர்க்கு
அன்பாண்டு மீளா
அருள்புரிவான் நாடென்றும்
தென்பாண்டி நாடே
தெளி. (95)

---

(ஏர் - அழகு. ஆரூரன் செம்பெருமான் - திருவாரூரில் எழுந்தருளி உள்ள பெருமானின் அம்சமான ருத்திரனும், வெண்மலரான் - பிரம்மாவும், பாற்கடலான் - திருமாலும், எம்பெருமான் என்று தானே உன் நாயகன் பெயரைச் சொல்கிறார்கள். அது தான் அவனுக்குப் பெயர் என்று சொல்கிறது கிளி.)

பக்தியானது தேனாக ஊறிக் கற்கண்டாக விளைந்தால் இறைவன் நமக்குள் இருப்பது தெரியும். நம்வீடு தான் அவன் ராஜ்யம் என்று தெரியும். நம்கைக்குள் என்றும் இருப்பான். அக்கம் பக்கம் நகரமாட்டான். சப்பணம் போட்டு நம்மோடு உட்கார்ந்து கொள்வான். அவனைப் பார்ப்பதற்கு அண்டபிண்ட சராசரங் களைப் பிளக்க வேண்டியதில்லை; துளைக்க வேண்டியதில்லை. இந்த அனுபவம் வேகத்தோடு துள்ளி விழுகிறது. "அவன் நாடு தென்பாண்டி நாடேதான்" என்று கையில் எடுத்துக் காட்டுகிறது.)

அளவுக்கு மீறி ஆசை இருந்தால் கேள்வி மொத்தமாக வராது. ஒவ்வொன்றாய் வரும். முதலில் பெயரைப் பற்றி எழுந்தது. அடுத்தது ராஜ்யம் எது என்று வந்தது. அடுத்து அவனுக்கு உகந்த மலை - கோடை வாசஸ்தலம் எது என்று வரு கிறது கேள்வி. பதிலும் தொடர்ந்து வருகிறது.

பேரண்டம், அண்டம், ஜடம், ஆன்மா, உணர்ச்சி ஆகிய எல்லாம் மாறி மாறி உழன்று கொண்டே இருக்கின்றன. இவ்வள வுக்கும் மூலநாயகமான இறைவன் அசையாத நிலைத்த உண்மை யாய் இருக்கிறான். அசையாமையை வைத்து அவனை மலை என்கிறோம். ஆணவ இருள் ஓட ஒளிவீசுகிற மலை அந்த மலை. அன்பர்களின் கலக்கத்தை நீக்கி பேரானந்தம் கொடுக்கும் அந்த மலை.

இறைவனே மலையாக இருக்கிறான். அவனுக்கு வேறு ஏன் வேண்டும் மலை.

கிஞ்சுகவாய் அஞ்சுகமே!
  கேடில் பெருந்துறையான்,
மஞ்சன் மருவும்
  மலைபகராய் — நெஞ்சத்து
இருளகல வாள்வீசும்
  இன்பமலை; முத்தி
அருளும்மலை என்பதுகாண்
  ஆய்ந்து. (96)

---

(ஏதும்இலா இன்சொல் மரகதமே - தேன் சொட்டும்படி மணி மணியாகப் பேசும் கிளியே! (மரகதமணி போன்ற பச்சைக்கிளி) ஏழ்பொழில் - ஏழு உலகம். எண்ணற்ற உலகங்களை ஏழ் உலகம் என்பது ஒரு மரபு. காதலர் - பக்தர். அன்புஆண்டு - பக்தர்களின் அன்பைக் காதலாய்ப் பரிமளிக்க வைத்து.

(கிஞ்சுகவாய் அஞ்சுகமே - முள்ளெருக்கு மலர் போலச் செக்கச் சிவந்த மூக்கினை உடைய கிளியே! மஞ்சன் - அன்பன்.)

இறைவனுக்கு உரிய மலையை ரசமாகவும் வின்யாசமாகவும் எடுத்துச் சொல்லியது கிளி. ஒரு மடக்கு மடக்கி நொடிப்பும் சுழிப்புமாய் எடுத்துச் சொல்லியது கிளி. சாதுர்யமான பதில். உல்லாசம் குதித்து விழுந்தது பதிலில்.

இனி, அவனுடைய முரசம் என்னவோ என்று கேட்டதற்கு, பதில் வருகிற வரத்தைப் பாருங்கள்.

இன்பால் மொழிக்கிள்ளாய்!
எங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கும்
முரசியம்பாய்; — அன்பால்
பிறவிப் பகைகலங்கப்
பேரின்பத்(து) ஓங்கும்
பருமிக்க நாதப்
பறை. (97)

கடைசியாக கிளியின் கன்னத்தைத் தடவி, காலை வருடி ஒரு கேள்வி கேட்கிறாள். வெட்கம் வருகிறது, முகத்தை ஒருபக்கமாய்ச் சாய்த்தபடியே கேட்கிறாள். ''கணீர் கணீர் என்று பொருத்தில் அடித்தால் போல் உத்தரம் சொல்கிற கிளியே, அவனுடைய மார்பில்க் கிடந்து புரளும் மாலை என்னதோ'' என்று உள்ளம் குழைந்து வேண்டுகிறாள். கிளி சொல்கிறது.

ஆய மொழிக்கிள்ளாய்!
அள்ளூறும் அன்பர்பால்
மேய பெருந்துறையான்
மெய்த்தார்என்?—தீயவினை
நாளும்அணு காவண்ணம்
நாயேனை ஆளுடையான்
தாளிஅறு காம்உவந்த
தார். (98)

---

(இன்பால் மொழிக் கிள்ளாய் - சுவையான பால்போல் தித்திக்கப் பேசும் கிளியே. முன்பால் - முற்றத்தில். பிறவி பகை கலங்க - நான் என்னும் ஆணவ மயக்கம் சிதறிஓட. பேரின்பத்து ஓங்கும் பருமிக்க நாதப்பறை - ஆனந்த முழக்கமாய் முழங்கும் நாதம் - எல்லாம் இறைவன் செயல் என்னும் மந்திரமே அவனுக்கு முரசம். நாதப் பறை - நாதந்தான் கொட்டு - அதாவது முரசம்.)

(ஆயமொழி கிள்ளாய் - ஆராய்ந்து தொடுப்பது போல் வார்த்தைகளை முத்து முத்தாய் எடுத்துச் சொல்லும் கிளியே/ அள்ஊறும் அன்பர்பால் மேய பெருந்துறையான் - உணர்ச்சியில் தேனூறும் வண்ணம் சதா தன்னை எண்ணி உருகும் பக்தரோடு, சேர்ந்திருக்கிறவன் இறைவன். ஆளுடையான் உவந்த தார் - பெருமான் பிரியப்பட்டு அணியும் மாலை. தாளி அறுகு - அறுகம்புல்லால் தொடுத்த கொடிதான் அவனுக்கு மாலை.)

குறிப்பு:- பரிவாரங்கள் அப்படியே நம் கண்முன் அணிவகுத்து நிற்கின்றன. அப்படிக் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறது தமிழ்.

# விடிந்தது தெரிய வில்லையா!

கோழி கூவுவதற்கு முன்பே எழுந்து விடுகிறாள் தாய். அவளுக்கு வேலை நிறைய இருக்கின்றது. முற்றத்தைத் தொழிக்க வேண்டும். பெருக்கவேண்டும். கோலம் போட வேண்டும். வீட்டைப் பெருக்கி மெழுகவேண்டும். தண்ணீர் எடுக்க வேண்டும். துணி துவைக்க வேண்டும். அடுப்பைப் பற்றவைக்க வேண்டும்.

இத்தனைக் காரியங்களையும் பதறாமல் செய்யவேண்டு மானால் குழந்தை தூங்கவேண்டும். காரியங்களைச் செய்து முடித்தவுடன் குழந்தை ஞாபகம் வரும். தொட்டில் பக்கம் ஓடிவருவாள். தொட்டில் வேட்டியைப் பிரித்துப் பார்ப்பாள். ''என் ராஜாவுக்கு இன்னும் அலுப்புத் தீரவில்லையா'' என்பாள்.

குழந்தையும் மெள்ளக் கண்களைத் திறந்து பார்க்கும். தூக்கச்சடவோடு சிரிக்கும். எட்டி உதைப்பதற்குத் தூக்குவது போல காலை உயர்த்தும். அதுஅப்படி இருக்கட்டும். பொழுது விடிந்து இரண்டு நாழிகை ஆய்விட்டது. குழந்தைகள் எழுந்து விட்டனர். ஆனால் தாய் நன்றாகக் குறட்டைவிட்டு உறங்கு கிறாள் என்றால் நன்றாக இருக்குமா காரியம்?

உலகம் முழுவதுக்கும் தாயும் தந்தையும் இறைவன் தான். பக்தர்கள் எல்லோரும் தேடிவந்திருக்கிறார்கள். பொழுது விடிந்துவிட்டது. ஆனாலும் துயிலெழவில்லை. படுக்கையில் புரண்டு படுத்து உறங்குகிறார் என்றால் நன்றாக இருக்குமா காரியம்?

குழந்தைகள் தாயை எழுப்புவதுபோல் பக்தர்கள் இறைவனை எழுப்புகிறார்கள்.

தூங்குகிறவர்களை எழுப்புவது கஷ்டமான காரியந்தான். அதற்கு ஒரு பக்குவம் வேண்டும். ஆத்திரம் மட்டும் போதாது. அமர்ந்த நிதானமும் வேண்டும்.

இனி, கோயிலில் இன்றும் பார்க்கிறோம். மூர்த்திக்கு அலங்காரம், அபிஷேகம், பாடல், ஆடல், ஆராதனை, வழிபாடு எல்லாம் ஒரே முழக்கமாய் நடக்கின்றன. தினந்தோறும் காலை, உச்சிக் காலம், இரவு, அர்த்த சாமம் என்றெல்லாம் நடக்கின்றன.

இவை எல்லாம் போக மூர்த்திக்குத் திருக்கல்யாணம் நடக்கிறது. ஊஞ்சல் நடக்கிறது. பள்ளியறைவைபவம் நடக்கிறது. பள்ளியறைக்குப் போனவர் காலாகாலத்தில் எழுந்து வரவேண்டாமா? நன்றாகத் தூங்கிவிடுகிறார். திருப்பள்ளி எழுச்சியும் நடக்கிறது.

கோயில் தோறும் நடக்கிற அற்புதமான வழிபாடு இது. பல ஆயிரம் வருஷங்களாக இந்த அற்புதமான வழிபாடு தொடர்ந்து நடந்து வருகிறது.

திருக்கல்யாணம் போன்ற விழாக்களைக் காண்பதற்கு மக்களிடம் ஒரே பரபரப்பு. கட்டுக்கடங்காத ஆவல்.

இறைவன் பொழுது விடிந்தது தெரியாமல் உறங்குகிறார். பக்தகோடிகள் பள்ளியறையின் முற்றத்தில் வந்து கூடுகிறார்கள். இனிய இசையிலும் தாளத்திலும் இறைவனுடைய காரியங்களை வைத்து உணர்ச்சி பூர்வமாகப் பாடுகிறார்கள். பாட்டுக்குத் தக்கபடி ஆடுகிறார்கள். இந்தச் சத்தத்திலும் தூங்குகிறார் இறைவர்.

அணுஅணுவாய் அண்டபிண்ட சராசரம் எல்லாம் நிறைந்திருக்கிறான் இறைவன். அவன் போவதும் இல்லை. வருவதும் இல்லை. எங்கும் அவன் செயல் ஒன்றுதான்.

இந்த அதிசயத்தை வைத்தே பாடுகிறார்கள் பக்தர்கள்.

இறைவன் துயிலெழ வேண்டும். விஷயம் அதுதான்.

(தானன தானன
தானனன தன்
தானன தானன
தானனன தன்)

பூதங்கள் தோறும்நின்
றாய்எனின்அல் லால்;
போக்கிலன் வரவிலன்
எனநினைப்புல வோர்
கீதங்கள் பாடுதல்
ஆடுதல்அல் லால்,
கேட்டறி யோம்;உனைக்
கண்டறிவா ரை;
சீதங்கொள் வயல்திருப்
பெருந்துறைமன் னா!
சிந்தனைக் கும்அரி
யாய்;எ(ம்) முன்வந் து
ஏதங்கள் அறுத்தெமை
ஆண்டருள்புரி யும்
எம்பெரு மான்பள்ளி
எழுந்தருளா யே; (99)

மேலும் மேலும் அவனுடைய கல்யாண குணங்களை நினைந்து உருகுகிறார்கள் பக்தர்கள். உணர்ச்சியானது இளகி உருகிப் பாடலாய் வருகின்றது.

இறைவனை ஒரு நிலையில் வைத்துப் பார்க்க முடியவில்லை. கனியாகவும், இருக்கிறான். தேனாகவும் இருக்கிறான், யோக மாகவும் இருக்கிறான், போகமாகவும் இருக்கிறான். ஆணும் அவன்தான். பெண்ணும் அவன்தான். தத்துவங்களாலும் நிர்ணயம் பண்ணமுடியவில்லை அவன் நிலையை.

பெருமானே! எழுந்துவந்து எங்களுக்கு வழிகாட்டும் என்று எழுப்புகிறார்கள் பக்த கோடிகளாகிய குழந்தைகள்.

அதுபழச் சுவைஎன
அமுதெனஅறி தற்(கு)
அரிதென எளிதென
அமரரும்அறி யார்;

---

பூதங்கள் தோறும் - அண்ட பிண்டசராசரம் எங்கும். உனைக் கண்டறிவாரைக் கேட்டிலம் - உன்னை ஒருவரும் கண்டதில்லை, இன்னார் கண்டார் இறைவனை என்று கேள்விப்பட்டது கூட இல்லை. ஏதம்-துன்பம்.

இது அவன் திருஉரு,
இவன்அவன்என வே,
எங்களை ஆண்டுகொண்(டு)
இங்கெழுந்தரு ளும்
மதுவளர் பொழில்த்திரு
உத்தரகோ ச -
மங்கைஉள் ளாய் திருப்
பெருந்துறைமன் னா;
எதுஎமைப் பணிகொளும்
ஆறதுகேட் போம்?
எம்பெரு மான்பள்ளி
எழுந்தருளா யே. (100)

---

அமரர் - ஞானிகள். இறைவன் எல்லாமாய் இருக்கிறான். அதனால் அவன்தான் இறைவன், இவன்தான் இறைவன் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. அவன் உருவம் அப்படி என்றும் சொல்ல முடியவில்லை. இப்படி என்றும் சொல்ல முடிய வில்லை. மாசற்ற காட்சியை உடைய ஞானிகளுக்கே சொல்ல முடியவில்லை.

# எங்கே இருக்கிறது இடம், ஒதுங்க!

அறிஞர்களும் தத்துவமேதைகளும் என்ன சொல்கிறார்கள்? ''பரம்பொருளானது காலம் என்பதையும் இடம் என்பதையும் கடந்து நிற்கிறது என்றும், மனிதர்களாகிய நாமோ அவ்விரண்டிற்கும் கட்டுப்பட்டுக் கிடக்கிறோம் என்றும், அவற்றின் பிடியை உதறி எறிந்து விடவேண்டும் என்றும், அதுதான் விடுதலை என்றும், அதுதான் இன்பம்'' என்றும் சொல்கிறார்கள்.

மதமாகிய சமயத்தை ஒரு தொழிலாக வைத்து நடத்துகிற சாமியார்கள், அதை ஒரு ராஜ்யமாக வைத்துப் பரிபாலனம் செய்கிற ஆச்சார்ய புருர்ஷகள், புதிய புதிய சரக்குகளாக அதை வியாபாரம் செய்யும் அறிஞர்கள் எல்லோருமே ஒத்துப்பேசி வெளியிடுகிறார்களோ என்று நினைக்க வேண்டி இருக்கிறது.

நடக்கக்கூடிய காரியமா இது? எங்காவது யாராவது காலத்தையும் இடத்தையும் வென்று அவற்றின் கட்டுப்பாட்டில் இருந்து தப்பித்தவர்கள் உண்டா?

இல்லை, இல்லவே இல்லை. ஆனாலும் பரம்பரையாக இதை சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். பரம்பரையாக மன்பதை கூட்டம் தொடர்ந்து இதைக் கேட்டுக் கொண்டே இருக்கிறது. யோசிக்கிற பழக்கம் இல்லாமலே போய்விட்டது. சொல்வதிலும் அப்படித்தான், கேட்பதிலும் அப்படித்தான்.

மிருகம், பறவை என்று பலவகையாகப் பிராணிகள் இருக்கின்றன. மனிதனும் ஒருவகையான பிராணிதான். ஒன்றுபோன வழியே மற்றவையும் சேர்ந்து போகிற காரியந்தான் பிராணிகளின் காரியம். இருபதோ ஐம்பதோ ஆயிரக்கணக்கோ

மந்தையாக மனிதப்பிராணி கூடுகிறது. ஏதோ பார்க்கிறது. யோசிக்கிறது, ஆராய்கிறது. இந்த மந்தையில் ஒரு மனிதர் நெளித்துச்சுடக்குப் போட்டால், மற்றவர்களும் ஒருவர் பின் ஒருவராக நெளித்துச் சுடக்குப் போடுவார்கள். ஒருவர் தண்ணீர் குடித்தால் மற்றவர்களும் தண்ணீர் குடிப்பார்கள்.

ஒருவர் எழுந்து அக்கம்பக்கம் போய்வந்தால், மற்றவர்களும் போய் வருவார்கள். ஒருவர் 'வாழ்க' என்று சொல்லவேண்டியது. அவ்வளவுபேரும் சொல்வார்கள். ஒருவர் 'ஒழிக' என்று சொல்ல வேண்டியது; அவ்வளவு பேரும் சொல்வார்கள். ஒருவர் கல்லை எடுத்து எறிய வேண்டியது. அவ்வளவுபேரும் தொடர்ந்து எறிவார்கள். ஒருவர், இன்னொருவர் காலில் விழுந்து எழவேண்டியது. மற்றவர்களும் விழுந்து எழுந்துவிடுவார்கள். ஏன், எதற்கு என்னும் கேள்விக்கே அங்கு இடமில்லை. யோசிக்கிற பழக்கந்தான் இல்லையே.

விளங்காத ஒன்றை ஒருவர் சொல்ல வேண்டியது. தொடர்ந்து அப்படியே மற்றவர்களும் சொல்லிக் கொண்டிருப்பார்கள். விளங்காத ஒன்றை "பேஷ், அபாரம், என்ன மாதிரியாக இருக்கிறது" என்று ஒருவர் பாராட்டவேண்டியது எல்லோரும் சேர்ந்து பாராட்டி விடுவார்கள். பறவை, விலங்கு கூட்டமாய்ச் சேர்ந்திருக்கும். ஒன்று ஓடினால் போதும், அவ்வளவும், கலைந்து ஓடிவிடும். ஆட்டுமந்தை மாட்டுமந்தை போன்றதுதான் மனுஷ மந்தையும். விசித்திரமான இந்தப் பண்பு உலகம் முழுதும் இருக்கிறது. தடங்கல் என்பதே இல்லாமல் ஆண்டாண்டு காலமாகத் தொடர்ந்து நடந்து வருகிறது இது.

இடம் என்றால் என்ன, காலம் என்றால் என்ன என்று யோசித்தாலே போதும். விஷயம் தெரிந்துவிடும். உயர்ந்தது, தாழ்ந்தது, நல்லது, கெட்டது என்றெல்லாம் தோன்றுகிறதே, அந்தத் தோற்றம் உண்மை இல்லை. காலத்திலோ, இடத்திலோ, அப்படி ஒன்றும் வேறுபாடு இல்லை. வேறுபாடெல்லாம் நம்மிடந்தான் இருக்கிறது. நம் உள்ளத்தில்தான் இருக்கிறது என்பது தெரிந்துவிடும். மேலும் மேலும் யோசிக்க யோசிக்க, காலம், இடம் என்பவைகூட வெறும் தோற்றந்தான் என்பதும் உண்மையில் அப்படி எதுவும் இல்லை என்பதும் விளங்கிவிடும்.

ஒருதுளி தண்ணீர் பல ஆயிரங்கோடி அணுக்களின் தோற்றம் என்று சொல்கிறார்கள், கடலும் கோடானுகோடி அணுமயந்தான்,

மலை, பூமி, சூரியன் நட்சத்திரம் நாம் எல்லாமே அணுமயந்தான். அணுவும் ஒரே சக்தி மயமாக இருக்கிறது. அப்படியானால் பேரண்டம் முழுவதும் ஒரே சக்தி மயம். பரம் பொருள் ஒன்று தான். இரண்டாவது என்று சொல்லும்படி எதுவும் இல்லை.

சக்தி மயமாக உள்ள பரம்பொருள், கோடானு கோடி கோலங்களாகக் காட்சி கொடுக்கிறது. கோலங்கள் தனித்தனி யாகத் தோன்றுவதால், அவற்றின் வடிவங்களே இடங்களாகத் தெரிகின்றன. கோலங்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. தொடர்ந்து தோன்றிக் கொண்டேயிருக்கிறன்றன. அந்தத் தொடர்ச்சியே காலமாகத் தெரிகிறது.

சக்திமயமாக இருக்கிறது பரம்பொருள். இந்த அற்புதத்தை அனுபவித்து அனுபவித்து ஆனந்தத்தில் திளைக்கிறார்கள் ஞானி கள். அவர்களின் ஆனந்தம் சக்தியை உமையம்மையாக உருவகம் பண்ணுகிறது. பரம் பொருளைச் சிவபெருமானாகப் பாவிக்கிறது. இப்படிப் பாவனை செய்த இருவரையும் தம்பதிகளாக்கி அனுபவிக்கிறது.

ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாத அன்புத் தம்பதிகளாக இருக்கிறார்கள் இருவரும். சிவபெருமானின் சரிபாதியாய், ஒரு பாகமாய் மேனியோடு மேனியாய் இடம் கொண்டிருக்கிறாள் அன்னை உமையாள். இன்னொரு கோணத்தில் பார்த்தால், உமையம்மையின் சரிபாதியாய், ஒரு பாகமாய் மேனியோடு மேனியாய் இடம் கொண்டிருக்கிறார் சிவபெருமான் என்றும் சொல்லத் தோன்றுகிறது.

ஒன்றே ஒன்று, இரண்டாகத் தோன்றி, ஒன்றாய்ச் சேர்கிற ரகஸ்யம் அற்புதமான நாடகம். பேரண்டம் முழுவதற்கும் தந்தையாய் தாயாய் நிற்கிற நாடகம். ஆனந்தமயமான நடன நாடகந்தான்.

இது சம்பந்தமாகத் திருமூலர் சொல்கிறார்.

''இடம் கொண்ட! சக்தியும்
எந்தை! பிரானும்
நடங் கொண்டு! நின்றமை
நானும்! அறிந்தேன்

படங் கொண்டு! நின்றஇப்
பல் உயிர்க்(கு)! எல்லாம்
அடங்கலும் தாமாய்! நின்(று)
ஆடுகின்! றானே''

உமையம்மைக்குச் சிவபெருமான் இடம் கொடுத்து விட்டார். சிவபெருமானுக்கு அன்னை உமையம்மையும் இடம் கொடுத்து விட்டாள். இப்படியாக இடமே இல்லாத ஒன்று எப்படியோ இடம் கொடுத்துவிட்டது.

இந்த அதிசயம் மாணிக்கவாசகரின் இதயத்தைக் குழைத்துக் குழைத்துப் பிசைகிறது. உணர்ச்சிமயமாக உருகி விடுகிறார் மாணிக்கவாசகர். மாணிக்கவாசகருடைய ஆனந்தம் வார்த்தை களாய் வடிவெடுத்து தாளம் போட்டுக் கொண்டு வருகிறது. சிவபெருமானை நோக்கி அவர் கேட்பதை இதோ பாருங்கள்.

''உடையாள் உன்தன்
நடுவிருக் க;
உடையாள் நடுவுள்
நீஇருத் தி''

விஞ்ஞானரீதியில் ஆராய்ந்து பார்க்கிறபொழுது இடம் என்று ஒன்று இல்லாமல் இருக்கலாம். ஆனால் நாம் என்பது இருக்கும் வரை, நாமே இடமாகி விடுகிறோம். நம்மைச் சுற்றி உள்ள ஒவ்வொன்றும் இடமாகி விடுகின்றன. இந்த முரண்பாட்டைத் தெரிந்துகொண்டால் போதும். இடம் என்பதைத் தாண்ட வேண்டியதும் இல்லை. அதோடு குஸ்தி போட வேண்டியதும் இல்லை. மின்சாரம் என்று ஒன்றிருக்கிறது. அதை ஓரிடத்தில் திரட்டிச் சேமிக்கிறார்கள். பிறகு அதை எல்லா இடத்திற்கும் கொண்டு போகிறார்கள். இரும்புத் தூண்களை நட்டு, கம்பிகளைப் போட்டுக் கொண்டு போகிறார்கள். நம் வீட்டிற்குள்ளும் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள்.

நம் இல்லங்களில் ஒவ்வொரு இடத்திலும் மின்சாரத்தைக் கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள். பல காரியங்களுக்கு மின் சாரம் உதவியாக இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். அதேபோல அது ஆபத்தானது என்பதும் நமக்குத் தெரியும். அப்படித் தெரிந்து கொண்டதால் நாம் மின்சாரத்தைத் தொடுவதில்லை.

---

(படங்கொண்டு - உருவ வேறுபாடுகள் தாங்கி)

தொடாமலே எப்படி எப்படி அதை உபயோகிக்க வேண்டுமோ, அப்படி அப்படி அதை உபயோகித்துக் கொள்கிறோம். எவ்வளவுதான்! மின்சாரத்தை உபயோகப்படுத்தினாலும் அதனிடம் ஜாக்கிரதையாகவே இருக்கிறோம். காரணம் அதைப் பற்றி நாம் தெரிந்து கொண்டது தான். அதைப் புறக்கணித்து ஓடிவிட்டதால் அல்ல.

இடம் என்பது பற்றியும் நாம் தெரிந்து கொண்டால் போதும். அது வெறும் மாயை தான். உண்மை இல்லை, ஆனாலும் நம்மை எப்படி எப்படியோ அது ஆட்டி அலைக்கழிக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டால் போதும். தெரியத் தெரிய ஒரே ஆனந்தம் தான். வெள்ளப் பெருக்கெடுத்து நிறைந்துவிடும் ஆனந்தம். அந்த ஆனந்தத்தில், இடத்தின் அழுத்தம், நெருக்கடி எல்லாம் கரைந்து விடும்.

மாணிக்கவாசகர் சந்தேகத்திற்கு இடம் இல்லாதபடி இடத்தைப் பற்றித் தெரிந்து கொண்டவர். மிச்சம் ஏதுமின்றித் தெரிந்து கொண்டவர்.

சக்தியும் பொருளும் ஒன்றை விட்டு ஒன்று விலகாமல் சேர்ந்திருக்கும் அற்புதத்தை அனுபவிக்கிற மாணிக்கவாசகர் தன்னை மறந்துவிடுகிறார். தான் என்பது கரைந்து விடுகிறது. அதே சக்தியாகவும் (பரம்), பொருளாகவுமே ஆகிவிடுகிறார். அப்படியானால்' சக்தியும் (பரம்) பொருளும் சேர்ந்து மாணிக்கவாசகரிடம் தானே அமர்ந்திருக்க வேண்டும்? இது சம்பந்தமாக அவர் சொல்வதைப் பார்ப்போம்.

> "அடியேன் நடுவுள்
> இருவீ ரும்
> இருப்ப தானால்......

நீங்கள் இருவரும் என்னுள் வந்து நிறைந்துவிட்டால், எனக்கு ஒரு இடம் வேண்டாமா? என்று முறையிடுகிறார் மாணிக்கவாசகர்.

மனிதர்களாகிய நாம் எல்லோரும் ஒன்றுதான். ஆனாலும் இது நம் நினைவில் நிற்பதில்லை. நின்றாலும் நிலைத்து நிற்பதில்லை.

இசை அரங்கு, நாடக அரங்கு, சொற்பொழிவு மன்றங்கள், திரைப்பட அரங்குகள், கல்யாணவீடு, திருவிழா இடம், ஏன் ரயில்,

பஸ், மருத்துவ மனைகளில்கூட பார்க்கலாம். உட்கார ஒவ்வொரு வரும் இடம் பிடிக்கப்படுகிற பாடு! அடடா, எவ்வளவு பரிதாப மாக இருக்கிறது! நம்முடைய அந்தஸ்தை வைத்தே எதையும் நாம் அளந்து பார்க்கிறோம். அளந்து பார்த்தவுடன் அது இடமாகி விடுகிறது! நம்மைச் சந்திப்பவர்கள், நம்முடன் பேசுகிற வர்கள், நம்முடன் பழகுகிறவர்கள், நம்மோடு உள்ளவர்கள், வேண்டியவர், வேண்டாதவர் எல்லோரையும் அளந்து பார்ப்பது தான் நம்முடைய தொழில்.

நம் குழந்தைகளுக்குத் திருமணம் நடத்தவேண்டும். பெண் வீட்டார், மாப்பிள்ளை வீட்டார் வந்து போகிறார்கள். அவர் களுடைய நிலையை ''இடம் எப்படி'' என்று விசாரிக்கிறோம். தரக்குறைவாகச் சிலர் நம்மிடம் நடந்துகொள்கிறார்கள். கோபம் வருகிறது நமக்கு. கோபத்தில் எப்படி வருகிறது வார்த்தை. ''இடம் தெரியாமல் விளையாட வேண்டாம்'' என்று· வருகிறது. ''தெற்குவடக்கு தெரியாதவர். மேல்கீழ் தெரியாதவர்'' என்றெல்லாம் சூடாய் வருகின்றன சொற்கள். ''நம்மிடத்தில் வைத்துக் கொள்ளவேண்டாம்'' என்று சொல்லிவிடுகிறோம்.

எவ்வளவோ வசதி உள்ளவன் கணவன். எப்படியோ இறந்து போனான் அவன். நன்செயும், தோப்பும், வீடும் வாசலும் ஏராளந் தான். இருந்தாலும், ''நான் இனி எங்கு போய் நிற்பேன்'' என்று தானே மனைவி கதறுகிறாள். ஆதரவற்ற ஒருவனை, ''அவன் பிழைப்பு அந்தரத்தில் தொங்குகிறது'' என்றுதானே சொல் கிறோம்.

ஒரு இளைஞனுக்கும் பெண்ணுக்கும் திருமணம் நடைபெறு கிறது. பெரிய காரியம் அது. காரியம் மங்களமாய் நிறைவேறி விட்டது. நிறைவேறிய உடன், மாப்பிள்ளை வீட்டாருக்கும், பெண் வீட்டாருக்கும் கவலை வந்துவிடுகிறது. என்ன கவலை? பெண்ணும் மாப்பிள்ளையும் குடித்தனம் நடத்த நல்ல (வீடு) இடம் கிடைக்கவேண்டும் என்பது தான் கவலை. பெண்ணும் மாப்பிள்ளையும் இது சம்பந்தமாக ரொம்ப ரொம்பக் கஷ்டப்படு கிறார்கள்.

உலகம் முழுவதும் பெரிய பெரிய தொழிற்சாலைகளாக இருக்கின்றன. லட்சக்கணக்கான பேர் வேலை செய்கிறார்கள். அவர்கள் குடி இருக்கும் இடத்தைப் பார்த்தால் பயமாக

இருக்கும். வசதியே இல்லாத பகுதிகளில் நெருக்கடியில் வாழ்கிறார்கள். அதனால் அவர்கள் மனம் நஞ்சாய்க் கசந்திருக்கிறது. எரிச்சல், வெறுப்பு, ஆங்காரம் இந்த மயமாய் இருக்கிறார்கள் அவர்கள்.

அவரவர் வேலை செய்யும் பணிமனைகளை ஒட்டி, எளிய, இனிய குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்து விட்டால் போதும். சமுதாயம் முழுவதும் அமைதி பெற்று விடும்.

உலகில் எங்கு பார்த்தாலும் இடநெருக்கடி. மனிதன் தோன்றிய காலந் தொட்டு நெருக்கடி இருக்கிறது. எவ்வளவு பெரிய மாளிகையாக இருந்தாலும், விருந்தினர்கள் நான்கு பேர் வந்துவிட்டால் போதும், அவர்களை அமர்த்தி உபசரிப்பதற்குள் வீட்டுக்காரனுடைய மூச்சு முட்டிவிடுகிறது.

நன்செயும், தோப்பும், வீடும், மனையும் ஒருவனிடம் நிறையவே உள்ளன. ஆனாலும், அவன் திட்டம்போட்டு எதிர்பார்த்ததை விட அதிகமாகவே குழந்தைகள் பிறந்துவிடுகிறார்கள். அவ்வளவுதான்? அவனுக்கு நிம்மதி இல்லாமலே போய்விடுகிறது. இத்தனை பாகங்கள் வைத்தால் சொத்து என்னாவது என்று பதறுகிறான்.

இனி பல ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் கூட ஆண்களும் பெண்களும் திருவிழாவில் கூடுகிறார்கள். கோவில்வாசல், ஆற்றங்கரை, ரயில் நிலையம், பஸ்நிலையம், பிளாட்பாரம், இங்கெல்லாம் தங்கிவிட்டு அவரவர் ஊர் போய் விடுகிறார்கள்.

இடம் என்பது வெளியில் தோன்றினாலும் அதன் அகலமும் ஒடுக்கமும் மனதில்தான் இருக்கின்றன. அதனால்தான், மனவிரி உண்டானால் இடவிரி உண்டு என்று சொல்கிறோம்.

தம் சீடர்களிடம் ஒரு சமயம் புத்தர் சொன்னார், ''அரசன் ஒருவனிடம் ஞானி ஒருவர் சிறிய இடம் ஒன்று வேண்டும் என்று கேட்டார். அதற்கு அரசன் சொன்னான் - ''எவ்வளவு இடம் வேண்டுமானாலும் தருகிறேன். அந்த இடம் அளவிற்கு நீங்கள் தங்கநாணயங்களை வைக்கவேண்டும்'' என்று.

சென்னை, பம்பாய் போன்ற நகரங்கள் எவ்வளவு விசாலமாய் இருக்கின்றன. தெருவில் போகிற ஒருவர் வெயிலுக்கோ, மழைக்கோ ஒதுங்க வேண்டுமானால், ஒருமுழ இடம் கிடைக்குமா?

ஒரு பெண் ஒரு இளைஞனை நம்பிப் பழகுகிறாள். அந்த இளைஞன் கொஞ்சம் தடுமாற ஆரம்பித்துவிட்டால், பெண்ணின் இதயம் இடிந்து விடுகிறது. ‘‘விபரம் இல்லாமல் இடம் கொடுத்து விட்டேனே’’ என்று தத்தளித்துப் போகிறாள் பெண்.

இடம் கிடைக்காமல் நகரங்களில் மனிதன் திண்டாடுவது பரிதாபந்தான். பரிதாபத்தில் எல்லாம் பரிதாபம், அவன் ஒரு பெண்ணோடு சேர்ந்து இடந்தேடி அலைகிற கொடுமை.

நம்மைச் சுற்றி உள்ளவை என்னவாக இருந்தாலும் சரி‘ காடாக இருந்தாலும், வீடாக இருந்தாலும், பாலைவனமானாலும் பசுஞ் சோலையானாலும் அத்தனையும் நமக்குக் கருவிதான். நமக்கு அவை உண்மையான இடம் ஆகமாட்டா. நமக்கு உண்மையான இடம் நாம்தான். நம்மை ஒத்த மனிதர்கள்தாம். உயிர் வாழும் இடம் மட்டும் அல்ல நாம். மனிதனுக்கு மனிதன் தான் உண்மையான (பொசிசன்) இடம்.

சிவபெருமானும் உமையம்மையும் ஒருவரில் ஒருவர் இடம் பிடித்துக் கொண்டார்கள். இருவரும் சேர்ந்து மாணிக்கவாசகரையே இடம் பிடித்து விட்டார்கள். மாணிக்கவாசகருக்கு ஒரு இடம் வேண்டாமா?

பெருமானிடமே முறையிடுகிறார் மாணிக்கவாசகர். ‘ பொன்னம்பலத்தில் நடனமாடும் ஆனந்தமூர்த்தியே! அளந்து பார்க்கமுடியாத முழு (முடியா) முதலே! என்னை உன் அடியார் கூட்டத்துள் விட்டுவிடு. அவர்கள் என்னை அங்கீகரித்துச் சேர்த்து கொள்ளவேண்டும். அதுதான் எனக்கு இடம். அது ஒன்றுதான் எனக்கு வாழ்வு. இந்தமாபெரும் புண்ணியத்தை எம்பெருமானே! நீர் முன்னின்று நடத்தி அருளவேண்டும்.’’

பாடலின் முழு உருவத்தையும் இனிப் பார்க்கலாம்.

தான தான
தானன தன்
தான தான
தானன தன்

உடையாள் உன்தன்
நடுவிருக் க;
உடையாள் நடுவுள்
நீஇருத் தி;

அடியேன் நடுவுள்
இருவீ ரும்
இருப்ப தானால்,
அடியேன் உன்-
அடியார் நடுவுள்
இருக்கும் அருள்
புரியாய்! பொன்னம்
பலத்தா டும்
முடியா முதலே
என்கருத் து
முடியும் வண்ணம்
முன்நின் றே. (101)

மாணிக்கவாசகருடைய ஆர்வம், வேகம், ஏன், ஆத்திரம்கூட படலம் படலமாய்ப் பாடலில் ஒளி வீசுகின்றன. பாடலைப் பாட வேண்டும். நிறுத்தி நிறுத்திப் பாடிப்பாடிப் பார்க்கவேண்டும். நாம் இளைப்பாற ஒரு நல்ல இடம் கிடைத்துவிடும். ஆனந்தமாய் ஒதுங்கி வாழலாம் நாம்.

# எனக்கு வேண்டியது இதுதான்

ரசிகமணி, டி.கே. சிதம்பரநாதமுதலியார் 1942 முதல் 1954 வரை திருக்குற்றாலத்தில் இருந்தார்கள். அவர்கள் இருந்த வீடு ஐந்தருவிச்சாலையில் இருந்தது, சிறிய வீடுதான். சாதாரண வீடுதான். பழையகாலத்து வீடுதான். ஆனாலும் அந்த வீட்டை நோக்கி நாலா திசைகளிலிருந்தும் மனிதர்கள் வந்துகொண்டேயிருந்தார்கள். பக்தர்கள் கோவிலுக்கு வருவது போல, தமிழன்பர்களும், கலைவாணர்களும், ரசிகர்களும் அந்த வீட்டை நோக்கி வந்த வண்ணமாய் இருந்தார்கள்.

புஷ்பத்தில் உள்ள தேனைநாடி வண்டுகள் ஓடிவரும். சிறகடித்துக் கொண்டும், ரீங்காரம் இட்டுக் கொண்டும் வண்டுகள் பாய்ந்தோடி வரும். எட்டுத் திசைகளிலிருந்தும் பதினாறு கோணங்களிலிருந்தும் வண்டுகள் புஷ்பத்தை நோக்கி ஓடிவரும். புஷ்பத்தைப் பார்த்த மாத்திரமே வண்டுகளுக்குப் புளகாங்கிதம் வந்துவிடும். அவற்றின் வாய் மட்டுமா? வண்டுகளின் உடல் முழுவதும், உணர்ச்சி முழுவதும் தேனாக ஊறிவிடும்! புஷ்பத்தின் மேல் வண்டானது பாய்ந்து பாய்ந்து மோதும். புஷ்பத்தைச் சுற்றிச் சுற்றி வட்டமிடும். தேனை வயிறாரக் குடிக்கும். மேற்கொண்டும் தேனை எடுத்துக்கொள்ளும். ஆனந்தத்தால் மயங்கும். வந்த வழியே திரும்பும். பிறகு, போவதற்கு மனம் வராது. புஷ்பத்தை நாடித் திரும்பும். ஆவலோடு ஓடிவரும். மொத்தி மொத்திப் பூவின்மேல் விழுந்து புரளும். பூவைச் சுற்றிச் சுற்றி இன்னிசை பாடி முரலும்.

டி.கே.சியை நாடிவந்த கலைஞர்களும், ரசிகர்களும் தேன் வண்டாகவே இருந்தார்கள். டி.கே.சியைப் பார்த்தவுடனேயே

அடங்காத தாகம் அடங்கிவிடும். டி கே.சியின் வாய் மட்டும் அல்ல, அவர்களுடைய முகமும், கண்ணும் பார்வையும் ஒன்றாய் நின்று, 'வாருங்கள் வாருங்கள்'' என்று வரவேற்று உபசரிக்கும், தர்மம் குடி இருக்கும் அவர்களுடைய புன்முறுவலோ ''உங்களைத்தானே தேடிக்கொண்டிருக்கிறேன்! ஏன் இவ்வளவு தாமதம்''? என்று ஒவ்வொருவரையும் ஆசையோடு கேட்கும்.

டி.கே.சியின் அருளுரையும், உள்ளம் உருகும்படி அவர்பாடும் பாடல்களின் மதுரமும், பாடல்களை ரசித்து ரசித்து, தேனாபிஷேக மாக அவர் கொட்டும் விளக்கமும் மனிதர்களைப் பரவசப்படுத்தி விடும்.

டி.கே. சியை விட்டுப் பிரிவதற்கு யாருக்குத்தான் மனம்வரும்? அவர்களை எப்பொழுதும் ஒரு கூட்டம் சுற்றிக் கொண்டே இருக்கும். ரயிலேறி அடிக்கடி அயலூர் போய் வருவார்கள், டி கே.சி. ரயிலிலும் தொடர்ந்து செல்லும் ரசிகர் குழாம். டி.கே.சி. எங்கெங்கு போகிறார்களோ, எங்கெங்கு தங்குகிறார்களோ, அங்கங்கெல்லாம், ரசிகர் குழாமும் கூடவே போகும். கூடவே இருக்கும். டி.கே.சியின் தெளிவுரையை அனுபவித்து அனுபவித்து ஆனந்தமயமாய் தத்தளிக்கும். இப்படியும் ஒரு அதிசயம் உலக வாழ்க்கையில் உண்டா என்று எல்லோரையும் திகைக்க வைத்து விட்டது, டி.கே.சியின் வாழ்க்கை.

டி.கே.சியின் வாழ்க்கை அதிசயமான வாழ்க்கைதான். அதற்கு எவ்வளவோ புண்ணியம் செய்திருக்க வேண்டும். யோகம் எவ்வளவோ இருக்கவேண்டும். வானம் பொழிவது போல, தெய்வத்தின் அருள் பூரணமாக வந்து கொட்டாவிட்டால், ஆனந்தமாய் ஒருவன் இவ்வுலகில் வாழ முடியுமா? மற்றவர்களை ஆனந்தத்தில் திளைக்க வைக்க முடியுமா?

இனி, பரம்பொருளே, கோவிலுள் வந்து மூர்த்தியாக எழுந்தருளி இருக்கிறது. பாலையும், தேனையும், பன்னீரையும் அபிஷேகமாக மூர்த்தியின் மேல்கொட்டுகிறார்கள். மலர்களையும் மாலைகளையும் சாத்தி அலங்காரம் பண்ணுகிறார்கள். பண்ணோடு பாடிப்பாடி, பாடல்களையும் அபிஷேகம் பண்ணு கிறார்கள். பரம்பொருளின் அலங்காரத்தையும், அபிஷேகத் தையும் பருகிப் பருகி பக்தர்களின் உள்ளம் கரைந்து விடுகிறது.

இந்த அற்புதத்தை மறந்து பக்தர்களால் இருக்கமுடியுமா? இறைவனை விட்டுப் பிரியாமல் இருக்கிறார்கள் பக்தர்கள்.

இறைவனுடைய திருமேனியைத் தழுவி இன்புறுகின்றன பூமாலைகள். அந்தப் புஷ்பங்களில் விழுந்த வண்டுகளால் மாலையை மறக்க முடியவில்லை. பக்தர்களால் தெய்வத்தை மறக்க முடியவில்லை.

இது சம்பந்தமாய் தொன்மையான பாடல் ஒன்று,

சூழ்ந்து முரன்றணவி,
வாசம் துதைந்தாடி,
தாழ்ந்து, மதுநுகர்ந்து
தாதருந்தும் வீழ்ந்தபெரும்
பாசத்தார் நீங்காப்
பரஞ்சுடரின் மேல்ப்படிந்த
வாசத்தார் நீங்காத
வண்டு.

(வீழ்ந்த பெரும் பாசத்தார் - பக்தியால் கரைந்து ஒன்றுபடுகிற ஞானிகள். வாசத் தார் - மணம் கமழும் புஷ்பமாலை.)

பக்தர்களின் காரியத்தை வண்டின் மேல்வைத்துச் சொல்லி இருக்கிறது. அதனால் அதற்கு ஒரு உருவமே கிடைத்துவிடுகிறது.

ஆனந்தத்தில் இருந்து ஆனந்தந்தான் உண்டாகும். வேறு எதுவும் உண்டாக ஞாயம் இல்லை. ஆனாலும், மனிதர்களின் உள்ளத்தில் பொறாமை என்று ஒன்று இருக்கவே செய்கிறது. அது செய்யும் காரியம் என்ன? ஒருவரின் ஆனந்தத்தைப் பார்த்த உடனேயே அது ஆங்காரமாய்ப் பொங்கும். ஆனந்தமயமாக இருக்கும் மனிதன், தன் உடைமைகளை எல்லாம் இழந்து தெருவில் நின்று திண்டாட வேண்டும் என்று அது புழுங்கிக் கொண்டே குமுறும்.

அன்பர்களை எல்லாம் பரவசப்படுத்தி ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டிருந்த, டி.கே.சியை நோக்கியும் இந்தப் பொறாமை பாய்ந்தது. ஆயிரம் தலைகளோடு கூடிய கருநாகமே சீறிப் பாய்வதுபோலப் பாய்ந்தது.

டி.கே.சியின் ஆனந்தத்தைப் பார்த்துப் பார்த்து பொறாமைக் காரர்கள் வேதனைப்பட்டார்கள். நெருப்பில் கிடந்து துடிப்பதைப் போல அவர்கள் எரிச்சலில் கிடந்து துடித்தார்கள். பகலில் கண்ணொளி மங்கி, பொந்துக்குள் ஒடுங்கும் கூகைளைப் போல, அவர்களுடைய உள்ளம் உலர்ந்து, வறண்டு, ஒடுங்கியே போனார்கள்.

டி. கே. சி. வாரி வாரி வழங்கிய ஆனந்தத்தில் திளைக்க எவ்வளவோ வாய்ப்பிருந்தும், அதைப் பெற அவர்கள் கூசினார்கள். ஒதுங்கினார்கள். விலகியே போனார்கள். துயரமே வடிவெடுத்தது போல அவர்கள் இருந்தார்கள்.

இது சம்பந்தமாக டி. கே, சி. என்னிடம் ஒரு சமயம் சொன்னார்கள்: "என்மேல் பலபேருக்குப் பொறாமை, இவன் எப்படி ஆனந்தமாய் இருக்கலாம் என்பதுதான் பொறாமைக்குக் காரணம். அதனால் என்மேல் அவர்களுக்குக் கோபம். தமிழையே டி. கே. சி. கெடுக்கிறான் என்று திட்டிக் கொண்டிருக்கிறார்கள். பிறகு எப்படி அவர்களிடம் ஆனந்தம் இருக்கும்? நீங்கள் அவர்களிடம் போய் டி. கே. சி. இரண்டு சிந்திப் பசு வாங்கி இருக்கிறார். ஒவ்வொரு பசுவும் காலை மாலை இரண்டு வேளையும் நான்கு, நான்கு பக்கா பால் கொடுக்கிறது என்று சொல்லுங்கள். பதறிவிடுவார்கள். நம் உடம்பிலிருந்து வீசம்படி பால்கூட வரமாட்டேன் என்கிறது! இந்தப் பசுக்கள் எப்படி நான்கு படி பால் கொடுக்கலாம்! என்று வேதனைப்படுவார்கள். பிறகு சிந்திப் பசுக்களை தூஷணையாக அர்ச்சனை பண்ணிக் கொண்டே இருப்பார்கள்."

ஆனந்தமாய் இருப்பது பெரிய காரியம். பெரிய புண்ணியம் என்று தான் சொல்லவேண்டும். அதைவிடப் பெரிய புண்ணியம் ஒருவருடைய ஆனந்தத்தை அனுபவித்து அதன் மூலம் பேரானந்தம் பெறும் காரியம்.

இந்தப் புண்ணியம் படிப்பால் வருவதல்ல. அறிவால் வருவதல்ல. இறைவனுடைய அருள்வேண்டும் இதற்கு. இறைவனே நம்மேல் கருணை வைத்து அருள் பாலித்தால் அல்லாது ஆனந்தமும் வராது. பேரானந்தமும் வராது.

கோவிலுக்குப் பக்தர்கள் கூட்டம் கூட்டமாய் வருகிறார்கள். கோபுரத்தைப் பார்க்கிறார்கள். கோபுரத்தில் உள்ள ஓவியங்களையும் பார்க்கிறார்கள். பெரிய பெரிய மண்டபங்களையும் தூண்களையும் பார்க்கிறார்கள், சிலைகளையும் பார்க்கிறார்கள். மூர்த்தியையும் பார்க்கிறார்கள். பாடல்கள் என்ன! மேளதாள முழக்கங்கள் என்ன! ஆராதனை என்ன! எல்லாம் சேர்ந்து பக்தர்களை உருக்கி விடுகின்றன.

தரிசனம் முடிந்தபின் தெள்ளத் தெளிந்த அடியவர்கள் ஆங்காங்கு கோவிலில் குழுமுகிறார்கள். இறைவனுடைய

எண்ணற்ற திருவிளையாடல்கள் ஒன்றொன்றாய் தெளிவு பெற்று பிரகாசத்தோடு அவர்களுக்கு வெளிப்படுகின்றன.

ஆனந்த பரவசத்தால் துள்ளி விடுகிறார்கள். விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள். இறைவனுடைய பெருமையைத் தேன் சொட்டச் சொட்ட எடுத்து சொல்கிறவர்கள் சிலர். ''அடடா, அப்பப்பா, ஆகா'' என்று கேட்டுக் கேட்டு பரமானந்தத்தில் திளைப்பவர்கள் சிலர்.'' ''ஆடலரசே, அம்பலத்தரசே, பொன்னம்பலவா! நமச்சிவாயா,'' என்று கதறிக் கதறிக் கூப்பிடுகிறவர்கள் பலர்.

இப்படியாக ஆனந்த வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. அதில் குதிக்க முடியவில்லை என்றால், அந்த வெள்ளத்தின் மேல் அருவருப்பு உண்டாகிறதென்றால், கோளாறு தானே காரணம்? ''அப்படி ஒரு கோளாறு எனக்கு வந்துவிடக்கூடாது. பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, எம்பெருமானே! அது உன்னைச் சேர்ந்தது'' என்று முறையிடுகிறார் மாணிக்கவாசகர்.

இனிப் பாடலைப் பார்ப்போம்.

''சிரிப்பார், களிப்பார்.
தேனிப் பார்;
திரண்டு திரண்டுன்
திருவார்த் தை
விரிப்பார், கேட்பார்
மெச்சு வார்,
வெவ்வே(று) இருந்துன்
திருநா மம்
தரிப்பார், பொன்னம் -
பலத்தா டும்
தலைவா என்பார்!
அவர்முன் னே
நரிப்பாய் நாயேன்
இருப்பே னோ?
நம்பி இனித்தான்
நல்கா யே. (102)

உணர்ச்சிமயமானது தான் மனுஷவர்க்கம். வசதியை மேலும் மேலும் பெருக்கிக் கொள்ள அறிவு ஒன்றையே நம்பிவிட்டது மனுஷவர்க்கம். ராட்சச வேகத்தில் வளரும் அறிவோ, உணர்ச்சியை அமுக்கி விடுகிறது.

குழந்தையாக இருக்கும் பொழுது பசித்தால் அழுகிறோம். வயிறு நிறைந்தால் சிரிக்கிறோம். தூக்கம் வந்தவுடன் தூங்குகிறோம். விழிப்பு வந்தவுடன் காலைக் கையை உதறுகிறோம். முகம் பார்த்து முகம் பார்த்து மகிழ்கிறோம். சிரிக்கிறோம்.

குழந்தையாக இருக்கும் பொழுது உணர்ச்சிமயமாக இருந்தோம். உண்மையாக இருந்தோம். தெய்வமாகவே இருந்தோம் வளர வளர நாம் மட்டும் இருக்கிறோம். நம் அறிவு மட்டும் இருக்கிறது. நம் உணர்ச்சியை - உண்மையை நம் அறிவு அதட்டி உட்கார வைத்துவிட்டது கைகட்டி, வாய்பொத்தி, பேச்சு மூச்சில்லாமல் ஒடுங்கி விட்டது, உண்மை. தெய்வம் மெள்ள மெள்ள நம்மைவிட்டு நழுவிவிடுகிறது. அதாவது நம் உணர்ச்சியைப் போல பேச்சு மூச்சில்லாமல் ஒடுங்கி விடுகிறது தெய்வம்.

நமக்கு வேண்டிய வசதிகள் அத்தனையையும் அறிவு செய்து முடித்துவிட்டது. தேவைக்கு அதிகமாகவே அது செய்து முடித்து விட்டது. அதனால் அறிவு அறிவு என்று இனியும் நாம் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை. அறிவினுடைய ஆதிக்கத்தைக் கொஞ்சம் நிறுத்தி வைக்கவேண்டும். அதை வேண்டாம் என்று தள்ளிவிடக்கூடாது. அதை மட்டும் நம்பி நாம் ஏமாந்துவிடாமல், அதை வைக்க வேண்டிய இடத்தில் வைத்து ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

அப்புறம் நம் உணர்ச்சிக்கு உயிர் உண்டாகும். உண்மையோடு அது பிரகாசிக்கும். ஆனந்தத்தோடு ஆனந்தமாய் உருண்டு புரண்டு விளையாண்டு கொண்டே இருப்போம் நாம். துயரப்பட்டுக் கொண்டிருக்கும் உலகம் முழுவதற்கும் ஆனந்தத்தை வழங்குவோம் நாம். மாணிக்கவாசகர் அப்படியல்லவா ஆனந்தத்தை அள்ளி வழங்குகிறார்.

இனி ஒரு தடவை பாடலைப் பார்ப்போம்,

(தான தான<br>
தானன தன்<br>
தான தான<br>
தானன தன்)

சிரிப்பார், களிப்பார்,
தேனிப் பார்
திரண்டு திரண்டுன்
திருவார்த் தை.
விரிப்பார், கேட்பார்,
மெச்சு வார்,
வெவ்வேே(று) இருந்துன்
திருநா மம்
தரிப்பார், பொன்னம்
பலத்தா டும்
தலைவா! என்பார்;
அவர்முன் னே
நரிப்பாய் நாயேன்
இருப்பே னோ?
நம்பி! இனித்தான்
நல்கா யே! (103)

(தேனிப்பார் - தேனைக் குடிக்கிறவர், உச். உச், என்பார்கள். அப்படி அனுபவிப்பார்கள். நரிப்பாய் - வெறுப்பாய். 'உம்' என்று ஒரே இருட்டு மயமாய்)

# ஏமாந்து போனான் நாயகன்

மனிதன் என்றால் அவனுக்கென்று சில பொறுப்புகள் உண்டு. இந்தப் பொறுப்புகளையே கடமை என்கிறோம். கடமையை நிறைவேற்ற ஒழுங்கும், கட்டுப்பாடும் வேண்டும். மனையாளிடம் நடந்து கொள்ளும் முறை, மக்களை ஆளாக்கும் முறை, பெற்றோர் களுக்கு உதவியாக இருத்தல், நண்பர்களிடம் காட்டுகிற அன்பு, வேலைக்காரர்களைக் கவனிக்கிற பரிவு, செயலில் உள்ள ஈடுபாடு, சமூக அமைப்பு, சமுதாய நெறி இவ்வளவையும் மதித்து பழுது படாமல் நிர்வாகம் பண்ணவேண்டும்.

யோசித்துப் பார்த்தால் பெரிய ராஜ்ய பரிபாலனம் போலவே இருக்கும். ஒவ்வொரு மனிதனும் இப்படி ஒரு ராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டுதான் இருக்கிறான்.

ஒவ்வொரு குடும்பமும் ராஜ்யந்தான். பல குடும்பங்களை உடைய சமூகம் பெரிய சாம்ராஜ்யந்தான். மனிதர்கள் - ஆடவர், பெண்டிர், குழந்தைகள் எல்லோரும் சமுதாய நிர்வாகிகள்தான்.

இந்த நிர்வாகத்துக்கு அன்பு, பொறுமை, வீரம், நேர்மை, மானம் முதலியவை உற்ற துணை.

அன்பு முதலிய பண்புகள் உண்மையாக இருக்க வேண்டும். போலியாக இருக்கக்கூடாது. உண்மை உணர்ச்சியோடு மனம் ஒன்றி ஈடுபட்டால் வாழ்க்கையில் ஆனந்தம் பொங்கும். தெய்வ ஒளியோடு பிரகாசிக்கும் வாழ்க்கை. மண்ணோடு மண்ணாய்ப் பிசைந்து கிடக்கிற இந்த மாய வாழ்க்கையிலேயே நித்தியமான பேரின்பத்தை அனுபவிக்க முடியும். இது ஒரு பொறுப்பு. இனி, மற்றொரு பொறுப்பும் மனிதனுக்கு இருக்கிறது.

கலைகளை உணர்ந்து அதன் அற்புதத்தில் திளைத்தல்தான் அது. கலைகளின் வடிவம், சிருஷ்டி தத்துவம், உண்மை உருவம், அழியாத்தன்மை, தெய்வகடாட்சம் இவைகளைப் பார்த்துப் பார்த்து அனுபவிக்க வேண்டும்.

கலைகளில் ஈடுபட ஈடுபட மனச்சாட்சிக்குக் கூர்மை உண்டாகும். மனதில் உள்ள ஆணவம் இளகும். அழுக்கு, கரையும். புடம்போட்ட தங்கம் போல் மனம் பலபளவென்று பிரகாசிக்கும். முகத்தோடு முகம் வைத்துப் பார்க்கலாம். அப்படித் தூய்மை பெற்றுவிடும் உள்ளம்.

பொய்யில்லாத மெய்யுள்ளந்தான் கடமையை பக்தியோடு செய்யும். அதனால் குடும்பம், சமூகம், சமுதாயம் எல்லாம் ஆனந்த மாக இருக்கும்.

இனி, அன்பின் ஊற்றுக் கண்ணையே திறந்துவிடும் கலை அனுபவம். வாழ்க்கையை ஆனந்தமயமாக்குவதோடு, ''கடவுளு டைய செயலே எல்லாம்'' என்னும் பேருண்மையையும் அனுபவிக்கச் செய்யும். ஆணவம் கரைந்து கடவுளோடு கலப்பது என்பது கலை மூலமாகத்தான். கடவுளைப் பார்ப்பதற்கு மனிதனுக்குக் கொடுத்து வைத்த கண்கள் கலைதான்.

இக வாழ்க்கையில் ஈடுபாட்டை உண்டாக்குவதோடு பர வாழ்க்கையை அனுபவிக்கச் செய்கிறது கலை.

கலைஉணர்வு இல்லாவிட்டால் வாழ்க்கை வெறிச்சோடிப் போகும். மனிதனும் வெறிச்சோடிப் போவான்.

மாணிக்கவாசகர் கலைகளில் ஒன்றித் திளைக்கிறவர். இசை, நடனம், ஓவியம், கவி முதலிய கலைகளில் மட்டுமல்ல, இறைவனு டைய திருவிளையாடல்க் கலைகளிலும் ஒன்றித் திளைக்கிறவர். மலை, கடல், மலர், புலி, பூனை, சூரியன், சந்திரன், ஆண், பெண், வானம், பூமி ஒவ்வொன்றும் இறைவனுடைய கலைகள். மாணிக்க வாசகர் இந்தக் கலைகளில் மனதைப் பறிகொடுத்தவர். அதற்கு அவரைத் தயார் செய்தன கவி முதலிய கலைகள்.

கலைகளில் எல்லாம் மேலான கலை அன்பு என்னும் கலை. அன்பிலிருந்துதான் பக்தி, காதல், வீரம் எல்லாம் விளைகின்றன. அன்புக் கலையில் கரைந்து உருகியவர் மாணிக்கவாசகர்

மாணிக்கவாசகருடைய கலை அனுபவம், ஆனந்தம் எல்லாம் சேர்ந்து பாடலாய் வருகிறது. ஒரே முழக்கத்தோடு வருகிறது.

(தான தான
தானன தான
தான தானன
தன் ன)

அன்பினால் அடியேன்
ஆவியோ(டு) ஆக்கை
ஆனந்த மாய்க்கசிந்(து)
உரு க,
என்பரம் அல்லா
இன்னருள் தந்தாய்;
யானிதற்(கு) இலன்ஓர்கைம்
மா றே!
முன்புமாய்ப் பின்பு
முழுதுமாய்ப் பரந்த
முத்தனே! முடிவிலா
முத லே!
தென்பெரும் துறையாய்
சிவபெரு மானே!
சீருடைச் சிவபுரத்(து)
அர சே!

உண்மையைப் பார்த்த மாதிரத்தில் அதிசயந்தான். ஒரே எக்களிப்புதான். அந்த இன்பந்தான் இன்பம். (104)

உண்மை எதுபற்றி வேண்டுமானாலும் இருக்கலாம். ஒரு பூனை தன்குட்டியை வாயில் கவ்விக் கொண்டு வளைக்கு வளை, சுவருக்குச் சுவர் தாவி ஓடுகிறைதைப் பார்க்கிறோம். தூக்கணங்

---

(என்பரம் அல்லா இன்அருள் தந்தாய் - எனக்குத் தெரியாமலே என்னிடம் அருளைக் கொண்டு வந்து கொட்டிவிட்டாய். என் உள்ளத்தின் ஊற்றுக் கண்ணைத் திறந்து ஒளிமயமாய் ஊற வைத்துவிட்டாய். உண்மையைக் கண்டு ஆனந்தமாய்க் கரையச் செய்துவிட்டாய். யான் இதற்கு இலன் ஓர்கைம்மாறு - கருணைக் கடலாகிய நீ செய்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்? ஒன்றும் இல்லாதவன் நான். முன்புமாய் பின்பு முழுது மாய் பரந்தமுத்தன் - நான் என்பதும் நீதான். அதற்கு உதவியாக இருக்கிற மனம், ஆன்மா, உணர்ச்சி எல்லாம் நீதான். பிறகு நானாவது கைம்மாறுவது?)

குருவி தென்னை மட்டையில் கூடு கட்டுகிறது. தென்னை ஓலையின் நரம்புகளைக் கொண்டே வலுவான கூடு கட்டுகிறது. அடைமழை பெய்தாலும் ஒரு சொட்டுத் தண்ணீர் உள்ளே இறங்காது அக்கினி நட்சத்திரத்து வெயில் அனலாய் வெளியில் தகிக்கும். ஆனால் கூட்டுக்குள் குளுகுளு என்றிருக்கும். கூட்டின் உச்சியானது மட்டையில் தொங்குவதால் கூட்டிற்கு வழி கீழேதான். தலைகீழாகத் தொங்கும் கூடு. நடுவில் ஒரு தட்டு இருக்கும். அந்தத் தளந்தான் குஞ்சுக்கும் தாய்க்கும் வாசஸ்தலம். சாப்பாடும் அங்குதான். படுக்கையும் அங்குதான்.

தூக்கணாங்குருவி புழு பூச்சிகளைப் பிடித்து வாயில் வைத்துக் கொண்டு கூட்டுக்கு வரும். குஞ்சுகளுக்கு ஊட்டும். இதையும் பார்க்கிறோம்.

பூனையின் காரியம், குருவியின் காரியம் எல்லாம் அதிசயந் தான். உயிர்வாழும் ஆசை - உயிரைப் பாதுகாக்கும் தீவிரம். இரண்டும் பிராணிகளை ஆட்டுகிறது. இந்த உண்மையைப் பார்த்த பிறகு மனம் அதை எப்படி மறக்கும்?

இனி, ஆவேசத்தோடும் வெறியோடும் இரண்டு ஆட்டுக் கடாக்கள் சண்டை போடுகின்றன. வீரம் ஒன்றையே லட்சியமாக வைத்துச் சண்டை போடுகின்றன. பயங்கரமாக ஒன்றை ஒன்று மோதுகின்றன. முட்டுகின்றன. கொம்பால் குத்திக் கிழிக்கின்றன. தன்சக்தி முழுவதையும் அர்ப்பணம் பண்ணுகிறதுஆடு. தன்னையே வீரத்துக்காக அர்ப்பணம் பண்ணிவிடுகிறது ஆடு.

உயிர் வார்க்கத்தை ஆட்டிக் கொண்டிருக்கிற வீரமோ, மானமோ, ஆவேசமோ, வெறியோ, காதலோ, எல்லாம் அன்பு மயந்தான்.

இந்த அன்புதான் சிருஷ்டி தத்துவத்துக்கு அடிப்படையான கருவி. காக்கும் தத்துவத்துக்கும் அன்புதான் கருவி.

அன்புதான் உண்மை. இத்த அன்பு எங்கும் ஒரேபடியாய் நிறைந்திருக்கிறது. புல்முதல் நட்சத்திரம் வரை எல்லாம் அன்பு மயந்தான்.

உண்மையை - பேரண்டம் முழுவதும் நிறைந்திருக்கும் அன்பைப் பார்த்தால் போதும். பார்த்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான். அனுபவிக்க வேண்டியதுதான். அனுபவிக்க அனுபவிக்க ஒரே ஆனந்தந்தான்.

இருபது வருஷம் முப்பது வருஷம் ஆனபிறகும் இந்த உண்மை அனுபவம் மனதை விட்டுப் போகாது. ஏன், வயதானபிறகும் போகாது. உயிருள்ளவரை ஞாபகத்தில் இருக்கும். ஜீவன் முக்தராய் இருந்து அனுபவிக்கலாம். உடலைவிட்டு உயிர் ஓடிப் போனபிறகும் இந்த அனுபவமும் ஆனந்தமும் உயிரோடு தொடர்ந்து போகும். பேரானந்தமாக இருக்கும். மோட்சம் என்பது அதுதான். ஒரு பெரிய சாம்ராஜ்யமாய் அந்தப் பேரானந்தம் விரிந்து கொண்டே போகும். அன்பை மறந்துவிடக் கூடாதே என்று அடிக்கொரு தடவை நினைத்து நினைத்து (இரந்து இரந்து) உருகுகிறார் மாணிக்கவாசகர்.

உண்மையின் மேல் அவ்வளவு ஆத்திரம் மாணிக்கவாசகருக்கு.

ஒவ்வொரு தடவையும் நினைக்க நினைக்க புதுப்புதுப் பொலிவோடு உண்மைக்கு மாற்று உயர்கிறது. ஒளி வீசுகிறது. ஜகஜோதியாய்ப் பிரகாசிக்கிறது உண்மை.

இறைவனுடைய அருள் எங்கும் பிரகாசிக்கிறது அந்த அற்புதம் பாடலாய் வருகிறது.

இரந்திரந்(து) உருக
என்மனத்(து) உள்ளே
எழுகின்ற சோதியே;
இமை யோர்
சிரந்தனில்ப் பொலியும்
கமலச்சே வடியாய்;
திருப்பெருந் துறையுறை
சிவ னே;
நிரந்தஆ காயம்
நீர்நிலம் தீகால்
ஆயவை அல்லையாய்
ஆங் கே

---

(கமலம் சேவடி - செந்தாமரை மலர் போன்ற திருவடி. நிரந்த ஆகாயம் - அணு அணுவாய், அணுவுக்குள் அணுவாய் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரவெளி. கால் - காற்று. ஆயவை அல்லையாய் - இறைவனே சகலுமுமாக இருக்கிறான். சகலவற்றையும் தாண்டி தனித்தும் நிற்கிறான். கரந்ததோர் உரு - அப்படி வெளிப்பட்டும், வெளிப்படாமலும் மாயம் செய்யும் அருள்மேனி. களித்தனன் - ஆனந்தம் பெற்றேன்.

கரந்ததோர் உருவே;
களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண்(டு)
இன் றே. (105)

மனிதனைப் பார்க்கிறோம். எடுப்பாய் தோரணையோடு மனிதன் நிமிர்ந்து நிற்கிற ஒய்யாரத்தைப் பார்க்கிறோம். கண்ணுக்கும் மனதுக்கும் அலங்காரமாய் நிறைந்திருக்கிறது மனிதகோலம். அவனுடைய நீண்ட கைகள், கூரிய மூக்கு, துருதுரு வென்ற கண்கள், அகன்ற நெற்றி, வட்டமான முகம் எல்லாம் பார்க்கப் பார்க்கப் பரவசமாய் இருக்கின்றன.

நான்கு கால்களோடு ஊர்ந்து திரிந்த பிராணி தான் மனிதனாய் நிமிர்ந்து நிற்கிறது. அறிவோடும் ஆண்மையோடும் சுற்றி உள்ளவற்றை எல்லாம் தனக்கு வசப்படுத்திக் கொள்கிறது. தன்னை யார் என்று பார்க்கிறது. ''அது என்ன, இது என்ன'' என்று யோசிக்கிறது. யோசிக்கும் திறத்தையே என்னவென்று சோதித்துப் பார்க்கிறது.

பிராணியாய் வருவதற்கு முன் புழுப்பூச்சிகளாய்த் திரிந்தது. அதற்குமுன் புல்பூண்டாய்க் கிடந்தது. அதற்கும் முன்னால் கண்களால் பார்க்க முடியாத நுண்ணுயிராக அலைந்தது. அதற்கும்முன் பனிப்படலம் போல ஒரே ஆவி ரூபத்தில் இருந்தது.

மனிதன் மட்டும் அல்ல, இந்த உலகம், சூரியன், சந்திரன், நட்சத்திரம், அண்டம், பேரண்டம், எல்லாமே, கடல், மலை, உயிருள்ளன, உயிரில்லன எல்லாமே ஒரே சக்திமயமாகவே இருந்தன.

பரம்பொருள் ஒன்றுதான். சக்திமயமான பரம்பொருள் ஒன்றுதான். அந்த ஒன்றுதான் எல்லாம். எங்கும் அது ஒன்றுதான். எல்லாமாய் விளைந்து கொண்டிருக்கும் உண்மையை இறைவன் என்னும் பேருண்மையை ஞானிகள் பார்க்கிறார்கள். இறைவ னுடைய அருளானது நாடகமாய், திருவிளையாடலாய் நிறைந் திருக்கும் அதிசயத்தைப் பார்க்கிறார்கள்.

அண்டம் அகண்டம் இவற்றைத் தாண்டி மேலே மேலே உயரப் போனாலும் எங்கும் இறைவனுடைய செயல்தான். இறைவன் ஒருவன்தான்.

இனி, ஒவ்வொன்றையும் பகுத்துப் பிரித்து அணுவுக்கு அணுவாக பரமாணுவுக்குள்ளாகவே புகுந்து பார்த்தாலும் இறைவனுடைய செயல்தான். இறைவன் ஒருவன். இறைவனைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

இறைவனையே சிவபுரம் என்கிறார்கள் ஞானிகள், பொன்னம் பலம் என்றும் சொல்கிறார்கள், ஆனந்த நடனம் என்றும் சொல்கிறார்கள்.

இறைவனுடைய செயல் பலவாக விளைகிறதைப் பார்க்கிறார் கள். அந்தப் பலவும் ஒன்றாய் இருக்கிறதையும் பார்க்கிறார்கள். அதனால் இறைவனையே மலை, கடல், யானை, குதிரை என்று பெயர் வைத்திருக்கிறோம். அப்படியானால் யானையை இறைவன் என்றும் சொல்லலாம். இறைவன்தானே யானையாய் நடமாடுகிறான். இனி யானையை இறைவன் இல்லை. யானை தான் என்றும் சொல்லலாம்.

யானைமட்டும் இறைவன் இல்லையே; அண்டபிண்ட சராசரம் அத்தனையும் இறைவனாக இருக்கிற பொழுது, யானையைமட்டும் இறைவன் என்று சொல்வது உண்மையாகாது.

கடவுளுடைய நிலை வேடிக்கையான நிலை. எல்லாம் கடவுள் மயம் என்று தெரிகிறது. குறிப்பிட்ட ஒன்றை (மட்டும்) கடவுள் இல்லை என்றும் நினைக்கத் தோன்றுகிறது. ஞானிகளே பிடி படாமல் இப்படித் தடுமாறுகிற பொழுது சாமான்யர்களைப் பற்றி என்ன சொல்லக் கிடக்கிறது.

வெறும் ஜடப் பொருளாகிய தன்னுள் மனம் என்று ஒன்று எழுந்து ஒவ்வொரு தத்துவமாக வளர்ந்து தெளிவடைந்து பிரகாசிக்கிறதை மாணிக்கவாசகர் பார்க்கிறார். அதிநுட்பமான மர்மங்களை அது பொதிந்து வைத்திருக்கிறதையும், இழை இழையாய் அவற்றை உதறி எடுக்கிறதையும் பார்க்கிறார். கையில் எடுத்து உதறுகிற மாதிரி உதறி எடுக்கிற மனதின் திறத்தையே மாணிக்கவாசகர் பார்த்து விடுகிறார்.

உண்மையானது சூரியப் பிரகாசமாய் நேரில் வந்து பிரகாசிக் கிறது. மனதுக்குள்ளேயே சூரியன் உதித்து ஒளிவீசுகிறது மாணிக்கவாசகருக்கு.

இன்றெனக்(கு) அருளி,
இருள்கடிந்(து), உள்ளத்(து)
எழுகின்ற ஞாயிறே
போன்று
நின்றநின் தன்மை
நினைப்பற நினைந்தேன்;
நீயலால் பிறிதுமற்(று)
உண்டோ?
சென்றுசென்(று) அணுவாய்த்
தேய்ந்துதேய்ந்(து) ஒன்றாம்
திருப்பெருந் துறையுறை
சிவனே
ஒன்றுநீ அல்லை
அன்றிஒன்(று) இல்லை;
யாருனை அறியகிற்
பாரே. (106)

கல்யாணவீடு. கூட்டம் ஜே, ஜே என்று கூடிவிட்டது. மாப்பிள்ளை அலங்காரம், பெண்ணலங்காரம், மணவறை ஜோடிப்பு எல்லாம் ஜரூராய் நடக்கிறது. விருந்தினர்களை வரவேற்கிறதிலும், பன்னீர் தெளிப்பதிலும், சந்தனம் கொடுப்பதிலும் நான் முந்தி நீ முந்தி என்று போட்டி. மணவறையை நோக்கிக் குருக்கள் வருகிறார். மேளதாள முழக்கம். மணவறைக்கு மாப்பிள்ளை வந்தாயிற்று. பெண்ணை அழைத்து வருகிறார்கள். ஒரே பரபரப்பாய் இருக்கிறது கல்யாண வீடு.

மணவறை எதிரில் முதல் வரிசையில் பிரமுகர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரை நோக்கி கல்யாண வீட்டுக்காரர் வருகிறார். வேகமாக வருகிறார். பிரமுகர் காதோடு காதாக ஏதோ சொல்கிறார். வாசல்ப் பக்கத்தைக் காட்டுகிறார். திரும்பிப் பார்த்தால் இன்ஸ்பெக்டர், ஏட்டு, போலீஸார் பத்துப் பன்னிரண்டுபேர் நிற்கிறார்கள்.

பிரமுகர் அவர்களை நோக்கிப் போகிறார். அவரைப் பிடித்துக் கொண்டு ஸ்டேசனுக்குப் போகிறார்கள். தூக்கிப் போட்டது மாதிரி ஜீப்பில் ஏற்றிக் கொண்டு போகிறார்கள்.

கல்யாண வீடு ஒரு மாதிரியாகி விட்டது. களைகெட்டுப் போய்விட்டது கல்யாண வீடு. எல்லோர் மனத்திலும் பயம் கலந்த திகைப்பு. ஸ்டேசனில் பிரமுகரை நிற்க வைத்து விசாரிக்

கிறார்கள். முந்தின நாள் இரவு பக்கத்துக் கிராமத்தில் நடந்த கொலை சம்பந்தமாக விசாரணை. கொலை செய்ததே பிரமுகர் தான் என்பது குற்றச்சாட்டு.

விசாரணை தடபுடலாய் நடந்தது. பெயரை எழுதுகிற இன்ஸ்பெக்டர் திகைத்து ஏறிட்டுப் பார்த்தார். ''என்னய்யா உளறுகிறாய்? கு. மா. சுப்பிரமணிய பிள்ளை இல்லையா நீ? வெறும் மாவன்னா சுப்பிரமண்ய பிள்ளை தானா நீ? என்று அரட்டுகிறார்.

ஆமாம், நான் வெறும் மாவன்னா சுப்பிரமண்யபிள்ளை. கு. மா. சுப்பிரமண்ய பிள்ளை என் வீட்டுக்கு அடுத்த வீட்டுக் காரன். அவன் வீடு 210 சி. என் வீடு 210 டி என்கிறார் பிரமுகர்.

ஒரே ஏமாற்றமாய்ப் போய்விட்டது காவல்துறைக்கு. உட்காரச் சொன்னார்கள். பிரமுகருக்கு நாற்காலி போட்டார்கள். ''தவறுதலாகப் போய்விட்டது சார். மனதில் ஒன்றும் நினைத்துக் கொள்ளாதீர்கள்'' என்று சமாதானம் சொன்னார்கள்.

பிரமுகருக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவே இல்லை. ஆனந்தக் கடலில் தூக்கித் தொப்பென்று போட்டவுடன், அவன் அதில் மிதக்கிறபொழுது எப்படி இருக்கும்? அப்படி அனுபவிக் கிறார் ஆனந்தத்தை.

கல்யாண வீட்டு முன் ஜீப் வந்து நின்றது. பிரமுகர் இறங்கி வந்தார். மாப்பிள்ளை பெண்ணை ஆசீர்வதித்தார். கல்யாண வீட்டார் எல்லோருக்கும அப்பொழுதுதான் உயிர்வந்தது.

நான் இல்லை என்று ஆனவுடன் இன்பம் வருகிறது. கு.மா. சுப்பிரமண்யம் நான் இல்லை என்பதில் எவ்வளவு இன்பம்? எவ்வளவு பேரானந்தம்? உண்மையான விடுதலை என்றால் இதுவல்லவா விடுதலை? எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்று வந்தவுடன் நிம்மதி வந்துவிடுகிறது. கெட்டது மாத்திரம் அல்ல, நல்லதிலும் நான் என்பது இல்லாவிட்டால் ஆனந்தந்தான்.

உடல், உயிர், மனம் எல்லாம் இறைவனுடைய காரியந்தான். பசி, தூக்கம், விழிப்பு, ரத்தஓட்டம், ஜீரணம், அஜீரணம் எல்லாம் இறைவனுடைய செயல்தான் என்று ஒப்படைத்துவிட்டால் பேரானந்தந்தானே? இந்தப் பேரானந்தத்தைத் தான் மோட்சம் என்கிறார்கள்.

இறைவனோடு இறைவனாய்க் கலந்து விடுதல் என்கிறார்கள்.

நான் என்பதிலிருந்து விடுபட்டவர்கள் ஞானிகள். எப்பொழுது மனிதன் ஆணவத்தைக் களைந்து எறிவான் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறான் இறைவன். களைந்து எறிந்த உடன் இறைவன் வந்து சேர்ந்து கொள்கிறான். இரண்டறக் கலந்து விடுகிறான் இறைவன்.

கம்பரும் ஆணவத்தை விட்டுத் தொலைத்தவர்தான். எல்லாம் இறைவன் செயல் என்று தெரிந்தவர்தான். அதில் உறுதியாய் இருக்கிறவர் கம்பர்.

இந்த உறுதி சம்பந்தமாக ஒரு நாடகம். காடுமேடெல்லாம் சுற்றி அலைந்து வருகிறார் கம்பர். திருவரங்கம் வந்து சேர்கிறார். ரங்கநாதப் பெருமான் சந்நிதியில் வந்து உட்கார்ந்திருக்கிறார்.

அர்ச்சகர்கள் கம்பரிடம் வந்தார்கள். திருவரங்கப் பெருமானுடைய சிறப்பை எடுத்துச் சொன்னார்கள். பெருமானைச் சேவிக்கிற முறை, பெருமானின் விசேஷம், ஆராதனை சம்பந்தமான - புளியோதரை, சர்க்கரைப் பொங்கல், ததியோதனம் இப்படியாகப் பெருமானுக்கு உகந்த நைவேத்தியம் பற்றி எல்லாம் விளக்கினார்கள்.

கம்பருக்குச் சிரிப்புவந்து விட்டது. அடக்கமுடியவில்லை. ஒருவகையாகச் சமாளித்தபடி சொன்னார்: ''ஐயன்மீர்! பேரண்டமுழுவதும் பெருமான் மயம். நானும் நீங்களும் நாராயணனுடைய அம்சந்தான். அப்படி இருக்க - நான் என்பதே இல்லை என்று ஆனபிறகு, ஆராதனை செய்ய என்ன உண்டு என்னிடம்.''

''நான் வேறு, இறைவன் வேறு என்னும் மயக்கம் வந்து தொல்லைப் படுத்துகிறது. அந்த மயக்கம் ஒன்றுதான் இருப்பு - அதாவது உடைமை.''

''ஆணவ மயக்கம் ஒன்றுதான் காணிக்கை. அதைத்தான் நைவேத்தியம் பண்ணவேண்டும்.'' இப்படிச் சொன்னார் கம்பர்.

ஏண்டா இவரிடம் போய் மாட்டிக் கொண்டோம் என்று பட்டது அர்ச்சகர்களுக்கு.

ஒவ்வொருவராய் நழுவி விட்டார்கள். கம்பருடைய உறுதியிலிருந்து உண்டாகிற உல்லாச விளையாட்டுத்தான் விஷயம். கம்பருடைய உல்லாச விளையாட்டு அரிய நாடகமாய் செய்யுள் உருவத்தில் குதித்துக் கொண்டு வருகிறது. இனிக் கம்பர் பாடல்.

நாராய ணாய
நமஎன்று, விண்ணோடு
பாராளும் பாதம்
பணிந்தேத்தும் ஆறறியேன்;
காராரும் மேனிக்
கருணா கரமூர்த்திக்(கு)
ஆரா தனைஎன்
அறியாமை ஒன்றுமே!

மாணிக்கவாசகரும் தெளிந்து உறுதி பெற்றவர்தான். நான் என்பது பொய் என்பதில் இம்மியளவும் அவருக்குச் சந்தேகம் இல்லை.

மிச்சம் கிச்சம் இல்லாமல் உறுதியானது வயிரமாய் விளைந்து விட்டதால், மாணிக்கவாசகருக்கு உல்லாசம் வருகிறது. எக்களிப்பு வருகிறது. அவர்முன் நாடகம் ஒன்று நடக்கிறது.

இறைவன் வருகிறான். உன்னை என்னிடம் கொடு என்று எடுத்துக் கொள்கிறான். பிறகு, தன்னை அப்படியே மாணிக்கவாச கரிடம் கொடுத்து விடுகிறான். "இது என்ன ஐயா பைத்திய காரத்தனம்! வெறும் பூஜ்யமாகிய என்னைப் பெற்றதால் உமக்கு என்ன பயன்? ஏமாந்து போனீரே" என்று சிரிக்கிறார் மாணிக்க வாசகர். இறைவனைப் பார்த்தே சிரிக்கிறார்.

தந்ததுன் தன்னைக்
கொண்டதென் தன்னை;
சங்கரா! யார்கொலோ
சது ரர்?
அந்தம்ஒன்(று) இல்லா
ஆனந்தம் அடைந்தேன்;
யாதுநீ பெற்றதொன்(று)
என் பால்?
சிந்தையே கோயில்
கொண்டஎம் பெருமான்!
திருப்பெரும் துறையுறை
சிவ னே!
எந்தையே! ஈசா!
உடலிடம் கொண்டாய்!
யானிதற்(கு) இலனோர்கை
மா றே. (107)

---

யார்கொலோ சதுரர் - வென்றது யார்? நீயா, நானா? நீ தோற்றுப் போனாய்! சதுரர் - கெட்டிக்காரர்.

# அழைத்தால் வரவேண்டாமா

வானத்தில் தென்வடலாக பூமியைச் சுற்றி வளைப்பது போல் ஒரு நட்சத்திரக் கூட்டம் தெரிகிறது. நட்சத்திரம் கோடிக் கணக்கில் சேர்ந்திருக்கிற கூட்டம் அது. ஒரு நட்சத்திரத்துக்கும் இன்னொரு நட்சத்திரத்துக்கும் உள்ள தூரம் நம் அறிவுக்கு எட்டாதது. கோடி மைல் அல்ல, நூறு கோடி, ஆயிரம் கோடி மைல் அல்ல. லட்சம் கோடி மைல்கூட அல்ல. கோடி கோடி மைல். பல ஆயிரம் கோடி கோடி மைல். அப்படியானால் கோடிக்கணக்கான நட்சத்திரங்களின் மொத்த தூரத்தை – ஒருமுனையிலிருந்து மறுமுனை வரையுள்ள தூரத்தை யாரால் சொல்ல முடியும்?

இந்த நட்சத்திரக் கூட்டத்தை ஆகாய கங்கை என்றும், திருப்பாற் கடல் என்றும் வியந்து சொல்லி இருக்கிறார்கள் முன்னோர். இந்த நட்சத்திரக் கூட்டத்தையே பிரகாசம் மிக்க பாம்பு - அதாவது ஆதிசேஷன் என்றும் அலங்காரமாய்ச் சொல்லி இருக்கிறார்கள்.

கோடி சூரியப் பிரகாசமாய் இருக்கிற நட்சத்திர வட்டமாகிய பாற்கடலில் ஆதிசேஷனாகிய படுக்கையைப் போட்டு திருமால் படுத்திருக்கிறார் என்றும், அவர் தம் கண்களை மூடிக் கொண்டு உல்லாசமாய் எதை எதையோ நினைக்கிறார் என்றும், அந்த எண்ணங்களே - பகல்க் கனவுகளே, வானம் பூமி என்று இடம் உண்டு பண்ணி எண்ணிறந்த தத்துவங்களாய்த் தோன்றுகின்றன என்றும் சொல்கிறார்கள்.

கண்களை மூடிக் கொண்டே தம் சித்தத்தைத் திருமால் பார்க்கிறார். தோன்றுவதும், இருப்பதும், மறைவதும் ஆகிய தம்

விளையாட்டைப் பார்க்கிறார். உள்ளுக்குள் நிகழும் காட்சிகளைப் பார்க்கக் கண்கள் திறந்திருக்க வேண்டியதில்லை. மூடி இருந்தால் போதும்.

நாமோ கண்களை அகலத்திறந்து வைத்துக் கொண்டிருக்கிறோம். வெளிப்புறக்காட்சிகள் பொய்யான நிழலாட்டங்களைப் பார்க்கிறோம். பொம்மலாட்டங்களையே பார்த்துப் பார்த்து ஏமாந்து போகிறோம். உண்மையான காட்சிகளை விட்டு விடுகிறோம். அவை நம்கண்களில் விழுவதில்லை. விழுந்தாலும் உள்ளம் அவற்றை வாங்கிக் கொள்வதில்லை.

இறைவனுடைய அருள்தான் எங்கும் என்னும் உண்மை நம்முன் வெட்ட வெளிச்சமாக நிற்கிறது. ஒவ்வொரு அணுவிலும் ஒவ்வொரு செயலிலும் எழுந்து எழுந்து நிற்கிறது.

ஆனாலும் கண்கள் அவற்றைப் பார்ப்பதில்லை. மனம் அவற்றைக் கவனிப்பதில்லை.

மாணிக்கவாசகர் சொல்கிறார்.

"சிவபெருமான் என்னைத்தேடி வந்தான். நேருக்குநேராய் என்முன் வந்தான். என்னோடு கலந்தான். என்னை மருவினான். என் ரத்தத்தோடு ரத்தமாய், உணர்ச்சியோடு உணர்ச்சியாய்ச் சேர்ந்துவிட்டான். என் ஆணவம் கரைகிறது. என் உள்ளத்தில் ஆனந்தம் ஊற்றாய்ப் பொங்குகிறது. எலும்பு, நரம்பு, தசை, ரத்தம், பார்வை, கேள்வி, யோசனை எல்லாவற்றையும் பிசைந்து பிசைந்து குழைக்கிறது. இவ்வளவும் என்னுள் நடக்கின்றன. நானும் விழித்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஆனாலும் ஒன்றும் என் புத்தியில் விழமாட்டேன் என்கிறது.

வெறும் பொம்மலாட்டங்களில் சிக்கி உழலும் என்னுடைய பேதைமை - மடப்புத்தி சாகமாட்டேன் என்று சண்டித்தனம் பண்ணுகிறதே! நான் என்ன செய்வேன்!'' என்று கதறுகிறார் மாணிக்கவாசகர்.

பொய்யைக் கட்டி அழும் வறட்டு ஞானத்துக்கு, அறிவு கெட்ட ஜென்மம் என்று பெயர்.

அதனுடைய கொடுமையில் மாணிக்கவாசகரும் சிலசமயம் சிக்கி இருக்கிறார் என்று தெரிகிறது.

இனி, பாடலைப் பார்க்கலாம்.

(தான தன்னன
தானன தன்
தான தன்ன ன
தானன தன்).

பொய்ய னேன்அகம்
புகுந்தமுதூ றும்,
புதும லர்க்கழல்
இணையடிபிரிந் தும்,
கைய னேன்இனும்
செத்திலன்அந் தோ!
விழித்திருந்(து) உள்ளக்
கருத்தினைஇழந் தேன்;
ஐய னே!அர
சே!அருள்க்,கட லே!
அத்த னே!அரன்
மாற்கரிஒண் ணா
செய்ய மேனிய!
செய்வகைஅறி யேன்;
திருப்பெ ருந்துறை
மேவியசிவ னே! (108)

தாயின் மடியில் குழந்தை இருக்கும். அதன் தலையை நீவுவாள் தாய். நெற்றியைத் தடவுவாள். முதுகை வருடிக் கொடுப்பாள். குழந்தையை வைத்து அப்படியே ஒருபகல்க் கனவும் காண்பாள் தாய். எப்படிக் காண்கிறாள் கனவு.

பக்கத்து வீட்டுச் சிநேகிதி வருகிறாள். ஆற்றுக்குப் போய் ஸ்நானம் செய்துவிட்டு வருகிறேன் என்கிறாள். அவள் இந்தக் குட்டிப்பிள்ளையைக் கொண்டு போய் ஆற்றில் முக்கி எடுத்து வருகிறேன் என்றும் சொல்கிறாள். பிள்ளையை இடுப்பில்த் தூக்கி வைத்துக் கொண்டு போகிறாள்.

படித்துறையில் குழந்தையை இறக்கி வைக்கிறாள். குழந்தையை அழுக்குத் தேய்த்து நன்றாகக் குளிப்பாட்டுகிறாள்.

---

அகம் - மனம், இணையடி - இறைவனுடைய திருவருள். அரன் மாற்கு (அரிய) ஒண்ணா-ருத்திரன் திருமால் முதலியவர்களாலும் தெரிய முடியாத.

துவட்டி எடுத்து கரையில் அரசமரத்தடியில் பிள்ளையார் படத்துக்கு முன்னால் உட்கார வைக்கிறாள்.

பிறகு, ஆற்றில் இறங்கிக் குளிக்கிறாள் பெண். அரசமரத்தடியில் குழந்தைக்கு ஒன்றிரண்டு சினேகிதர் கிடைத்துவிட்டனர். குழந்தைகளைத் தேடிச் சீனி மிட்டாய்க்காரன் வருகிறான். பலூன்காரன் வருகிறான். ஊதுகுழல்க்காரன் வருகிறான்.

ஊதுகுழல்க்காரன் பின்னால் போகிறது குழந்தை. நீராடி விட்டு வந்தவள் குழந்தையைத் தேடுகிறாள். வருவோர் போவோரிடமெல்லாம் விசாரிக்கிறாள். பெற்றதாயும் அங்கும் இங்கும் தேடுகிறாள். துயரம் ஈரல்க் குலையைக் கவ்வுகிறது. "என் பிள்ளையைக் காணவில்லையே? என்ன செய்வேன் நான்" என்று கதறுகிறாள்.

மடியில் குழந்தையை வைத்துக்கொண்டே தாய் அப்படி அலைமோதுவாள். அன்பின் உறுதிப்பாடு பகல் கனவை உண்டாக்கி விளையாடும்.

மாணிக்கவாசகர் எப்பொழுதும் இறைவனைப் பற்றிய ஞாபகத்திலேயே இருக்கிறார். மாணிக்கவாசகர் மனந்தான் இறைவனுடைய குடியிருப்பு. ஆனாலும் தன்னைவிட்டு எங்கோ இறைவன் போய்விட்டதாக ஒரு பகல்க்கனவு.

இதில் கதறிவிடுகிறார் மாணிக்கவாசகர்.

"யாருக்கும் கிடைக்காத பதவியை என்னிடம் கொண்டு வந்து கொடுத்தாய் நீ. பெருமானே, உன்னைத் தேடுகிறேன். எங்கு போய்விட்டாய், உடனே வா" என்பது விஷயம்.

(தான தான
தான தான
தானன தனன
தன்)

பாரோர் விண்ணோர்
பரவி ஏத்தும்
பரனே! பரஞ்சோ
தி!

வாராய்! வாரா
உலகம் தந்து
வந்தாள்க் கொள்வோ
னே!
பேரா யிரமும்
பரவித் திரிந்தெம்
பெருமான் எனஏத்
த
ஆரா அமுதே!
ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மா
னே! (109)

---

பாரோர் விண்ணோர் பரவி ஏத்தும் பரனே - மனிதர், தேவர் உள்ளிட்ட எல்லா உயிரினங்களும் வாழ்த்திப் போற்றும் பெருமானே! வாராய் - வரமாட்டாயா? உடனே வா! வாரா உலகம் தந்து- உண்மை நிலையை உணர்த்தி - என் பித்தத்தைத் தெளிய வைத்து. வந்து ஆள்க் கொள்வோனே - வலிய வந்து என்னை அன்பனாக ஏற்றுக் கொண்ட நாயகனே.

# யார் இருக்கிறார்கள் கேட்பதற்கு

புலியின் உடம்பு அழகானது. வாட்டசாட்டமானது. இரும்பு போல் உறுதியானது புலியின் உடம்பு. வலுவான முரட்டு உடம்பை எடுத்துக்கொண்டு மூர்க்கத்தனமாகப் பாயும் புலி. பந்துபோல் துள்ளிப் பாயும் புலி. பிராணிகளில் முரட்டுத்தன மான பிராணி புலிதான். துப்பாக்கிக் குண்டால்கூடத் துளைக்க முடியாத முரட்டு உடம்பையும் நார் நாராகக் கிழித்துவிடும் புலி. ரம்பத்தைவிடக் கூர்மையான பற்களும், நகங்களும் புலியிடம் உள்ளன. அதன் கண்கள் கொழுந்து விட்டெரியும் தீப்பந்தம் போல் இருக்கும். ரத்தவெறி பிடித்த கொடியவிலங்கு புலி.

பெரிய யானையைக் கூட ஒரேவீச்சில் தரையோடு தரையாகக் உருட்டிவிடும் கண்மூடிக் கண்திறப்பதற்குள் பாய்ந்து யானையைத் தும்பு தும்பாய்க் கிழித்துவிடும்.

வல்லமை மிக்க பிராணிதான் புலி. ஆனாலும் துயரம் ஒன்றுக்கு ஆளாகிவிட்டால் தத்தளித்து விடும் புலி. புதருக் குள் கிடந்த புலியின் குட்டியை வேடர்கள் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். இரைதேடப் போன புலி புதரில் வந்து பார்க் கிறது. குட்டிஇல்லை. ஆங்காரத்தோடு அங்கும் இங்கும் பார்க்கும். குட்டி கிடைக்கவில்லை. வேடர்களின் தடத்தை மோப்பம் பிடித்து நீண்டதூரம் போகும் புலி. போகப் போகத் தடம் பிறழ்ந்துவிடுகிறது. காட்டாற்றிலும் ஓடைகளிலும் இறங்கிப் போயிருக்கிறார்கள் வேடர்கள். அதனால் மோப்ப உணர்வு பிரயோசனப் படவில்லை. குட்டியைக் கண்டுவிட முடியும் என்ற நம்பிக்கை போய்விட்டது புலிக்கு. துயரவெறிக்கு ஆளாகி விட்டது புலி.

பரிதாபமான நிலைதான் புலியின் நிலை. நிற்கமுடியாது புலி யால். கால் நடுங்கும். வயிற்றுக்குள் நஞ்சு கிடந்து பிறழ்வது போல குடலைப் புரட்டும். நாவறண்டுவிடும். கண் பஞ்சடைத்து போகும்.

சோர்ந்து தரையில் உட்காரும் புலி. எழுந்திருக்க முடியாது. சிரமப்பட்டு எழுந்திருக்கும். நிற்கமுடியாது. முன்னால் போகும், பின்னால் வரும், தெற்கே திரும்பும், வடக்கே திரும்பும், மேலே பார்க்கும். கீழே பார்க்கும்.

கண்ணீர் பொங்கும், கதறும், உருளும், புரளும், துயரவெறி ஒரு பிராணியை அப்படி எல்லாம் ஆட்டும். சாதாரண மிருகமாகிய புலியையே ஒரு உணர்ச்சி இந்தத் தாக்கு தாக்குகிறது என்றால்' மனிதனை என்ன என்ன பாடுபடுத்தும்? ஆறறிவோடு உணர்ச்சி மயமாய் இருக்கிற மனிதனால் தாங்கமுடியுமா துயர வெறியை? தலைமயிரைப் பிய்ப்பான், முட்டுவான், மோதுவான், உருளு வான், புரளுவான், கத்துவான், கதறுவான், வேண்டியவர்களைக் கூட சீறுவான், அதட்டுவான், தொலைத்து விடுவேன் என்று எழுவான். பிறகு விழுவான்.

துயரவெறி எப்படிக் கசக்கிப் பிழியுமோ அப்படியே ஆனந்த வெறியும் கசக்கிப் பிழியும். மனிதனைக் குழைத்துக் குழைத்துப் பிசையும் ஆனந்த வெறி. மாணிக்கவாசகர் எப்பொழுதும் இறைவனை அனுபவித்துக் கொண்டிருக்கிறவர். உடன் வைத்து அனுபவிக்கிறவர். தொட்டும், இழுத்தும், கிள்ளியும், பரண்டியும், கட்டியும், உதறியும் பலபடியாக அனுபவிக்கிறவர்.

இறைவன் மாணிக்கவாசகரிடமே இருந்தார். தற்சமயம் வேறு எங்கோ போயிருக்கிறார். தனியாக இருக்கிறதனால் தேட்டம் உண்டாகியது. "என்று காண்பேன்" என்று தவிக்கிறார் கண்டு இப்படி இப்படி விளையாடவேண்டும் என்றும் துடிக்கிறார்! இதுவும், பகல்க் கனவில் வருகிற நாடகக் காட்சிதான்.

(தான தான
தான தான
தனன தனன
தானான தன்)

நெக்கு நெக்குள்
உருகி உருகி,
நின்றும் இருந்தும்
கிடந்தும்எழுந் தும்

நக்கும் அழுதும்
தொழுதும், வாழ்த்தி
நானா, விதத்தால்
கூத்துநவிற் றி,
செக்கர் போலும்
திருமே னி
திகழ நோக்கிச்
சிலிர்சிலிர்த் துப்
புக்கு நிற்ப(து)
என்றுகொல் லோஎன்
பொல்லா மணி
யைப்புணர்ந் தே. (110)

கோபுரமும் கோவிலுமாக எழுந்து நிற்கிறது பக்தி. மூர்த்தி தீர்த்தம், அபிஷேகம், திருவிழா, வழிபாடு இப்படியாக சமுதாயத்தில் கரைபுரண்டு ஓடுகிறது, பக்திவெள்ளம். தொல்லைகள் நீங்கி எல்லை இலா இன்பத்தில் திளைக்க மக்களுக்கு ஆன்ம சாதனமாக இருக்கிறது பக்தி.

சமுதாயம் முழுவதையும் ஒருமுகமாக்கி அணைத்துத் தழுவுகிறது பக்தி. வழிபாடு, விழா, ஆனந்தம் எல்லாம் ஒழுங்காக நடந்து வருகின்றன. ஆயிரம் வருடம் இரண்டாயிரம் வருடம் என்று, நாடு முழுவதும் ஒரு ஒழுங்கும், கட்டுக்கோப்பும் தொடர்ந்து வருகிறது வழிபாட்டு முறையில்.

நேர்மைக்கும் உண்மைக்கும் இருப்பிடம் கோயில் காரியங்கள் என்று சொல்லும் அளவுக்கு இருக்கின்றன.

ஆனாலும் வரவு செலவு பெருகப் பெருக பக்தியானது பிழைப்பாகி விடுகிறது. கோயில் ஒரு வியாபார நிலையம் ஆகிவிடுகிறது. அக்கிரமங்களுக்கெல்லாம் இடமாகிவிடுகிறது கோயில். மடம் முதலிய ஞானபூமிகளைப் பற்றிச் சொல்ல வேண்டிய, தில்லை.

மோசடிகளை ஒழிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு அரசாங்கம் உள்ளே வருகிறது. கோயில், வழிபாடு, நிர்வாகம்

---

[நெக்கு நெக்கு உள்உருகி-புஷ்பம் இதழ் இதழாக மூட்டு அவிழ்வது போல, ஒவ்வொரு உணர்ச்சியும் பழுத்துப் பழுத்துக்கனிந்து. நக்கும்-சிரித்தும். செக்கர்-செவ்வான். புக்கு-புகுந்து]

முழுவதும் அரசியலின் கையில் போய்ச் சேருகிறது. பிறகு நடக்கிற காரியங்களைத்தான் பார்க்கிறோமே? கோவில், கோபுரம், நந்தவனம், பூசைமணி, வாடாவிளக்கு இவை எல்லாம் ரூபாய், அணா பைசா கணக்கில் அரசியல்வாதிகளின் பைகளை நிரப்புகின்றன. மூர்த்தியின் திருமேனியில் அலங்காரமாய் இருக்கும் ஆபரணங்களும் கைமாறி விடுகின்றன. மூர்த்தியே கடல் கடந்து போய்விடுகிறார். ஆடு மாடுகளை விற்று முதலாக்குவது போல் மூர்த்தியையே விற்று முதலாக்கி விடுகிறார்கள்.

இந்த அக்கிரமங்களுக்கெல்லாம் அரசியலே புகலிடமாகிறது. ஜனநாயகமே இடம் கொடுக்கிறது. என்கிற நிலை ஏற்பட்டு விட்டால், பிறகு யாரிடம் போய் முறையிடமுடியும்.

சமுதாயம் முழுவதும் அலங்கோல நிலைக்கு ஆளாகிவிட்டால் சான்றோர்கள், அறிஞர்கள், ஞானிகள் எல்லோரும் அதை எதிர்ப் பார்கள். மனச்சாட்சி அவர்களைச் சும்மா இருக்கவிடாது. கொடுமையைத் தூக்கி எறிந்துவிட்டு உண்மைக்குத் துணைநிற்க நல்லவர்களை எல்லாம் அவர்களுடைய மனச்சாட்சி ஆவேசப் படுத்தும்.

களத்தில் இறங்கி உண்மைக்காக உயிரையே வீசி எறிய அணி வகுத்து நிற்பார்கள் உத்தமர்கள். அக்கிரமங்களையும் கொடுமை களையும் பார்த்துப் பார்த்து வேதனைப்படுவார்கள். மனம் கசி வார்கள். இது என்ன பிழைப்பு, செத்த பிழைப்பு என்று நொந்து போவார்கள். தங்களைச் சுற்றி நடக்கிற அக்கிரமங்களை-தங்கள் அக்கிரமங்களாகவே கருதித் துயருறுவார்கள்.

தங்கள் துயரத்தை இறைவனிடமே சமர்ப்பிப்பார்கள். அநாதையாய் நிற்கிறபொழுது இறைவன் ஒருவன் தானே துணைக்கு வருவான்? மாணிக்கவாசகரும் அப்படி முறையிடு கிறார்.

(தானன தனன
தானன தனன
தன்னன தானான
தன்)

பாரொடு விண்ணாய்
பரந்தஎம் பரனே!
பற்றுநான் மற்றிலேன்கண்
டாய்!

சீரொடு பொலிவாய்!
சிவபுரத் தரசே!
திருப்பெரும் துறையுறைசிவ
னே!
ஆரொடு நோகேன்?
ஆர்க்கெடுத்( து) உரைக்கேன்?
ஆண்டநீ அருள்கிலைஆ
னால்!
வார்கடல் உலகில்
வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன்(று) அருள்புரிவா
யே! (111)

எருமை மாட்டுக்குப் பசி எடுக்கிறது. தாகம் உண்டாகிறது. காதல் வருகிறது. எதிரியைப் பார்த்த மாத்திரத்தில் வீரம் பிறக்கிறது. எதிரியிடம் மாட்டிக் கொண்டு திக்குமுக்காடுகிற பொழுது பயமும் ஏற்படுகிறது. கன்றைக் காணவில்லை என்றால் துயரப்படவும் செய்கிறது.

மனிதனுக்கு மட்டுமல்ல, ஏனைய பிராணிகளுக்கும் உணர்ச்சி இருக்கிறது. அந்த உணர்ச்சி வெளிப்படுகிறது. உடம்பின் மூலம் அந்த உணர்ச்சி வெளிப்படவே செய்கிறது.

ஆனாலும் மனிதனிடம் பிறக்கிற உணர்ச்சிதான் உண்மையான உணர்ச்சி. மற்றப் பிராணிகளிடம் பிறக்கிற உணர்ச்சியில் உண்மை இல்லை.

மனிதனிடம் மகிழ்ச்சியோ, துயரமோ பயமோ, அதிசயமோ உண்டாகிறது. அப்படி உண்டாகும் உணர்ச்சியை அந்த மனிதனே பார்க்கிறான். இது என்ன என்று யோசிக்கிறான். தன் உணர்ச்சியை(த்) தானே அனுபவிக்கவும் செய்கிறான்.

---

(ஆரொடு நோகேன், ஆர்க்கெடுத்து உரைக்கேன் - எங்கும் அக்கிரமம் என்று :ஆனபிறகு எங்குபோய் முறையிட. வார் கடல் - நீண்டபெரிய சமுத்திரம். நீ அருள்கிலை ஆனால் வாழ்கிலேன் - என் வேதனையை நீ ஒருவன் தான் காது கொடுத்துக் கேட்க முடியும். கேட்டு ஆவன செய்ய முடியும். நீயும் அதற்கு இடம் கொடுக்காவிட்டால் நான் வாழ்ந்து என்ன பலன்?

அனுபவிப்பதன் காரணமாக உணர்ச்சிக்கு ஒளி உண்டாகிறது. உயிர் உண்டாகிறது. உருவம் பெற்று விடுகிறது உண்மை. உண்மையையே உருவகமாகப் பெற்றுவிடுகிறது உணர்ச்சி.

கலையாக எழுந்து வந்துவிடுகிறது மனித உணர்ச்சி - மனிதனுடைய உண்மை உணர்ச்சி. இது கருதியே கற்பனை உலகின் கொடுமுடியைத் தொடுகிற கலைஞர்கள், விலங்கு, பறவை, மீன் முதலியவற்றைக் கொண்டு வந்து நிறுத்துகிற பொழுதும், அவற்றுக்கு மனிதப் பண்பையே ஏற்றி விடுகிறார்கள். மனிதர்களுக்கு ஒரு மாற்றாகவே ஏனைய பிராணிகள் களத்துக்கு வரும்.

மாணிக்கவாசகர் சதா இறைவனோடு கலந்து உறவாடுகிறார். உறவாடுவதுடன் நிற்பதில்லை அவர் காரியம். ஆனந்த பரவசத்தில் திளைக்கிறார். ஆனந்த பரவசத்தைப் பார்க்கிறார். யோசிக்கிறார். அனுபவிக்கிறார்.

இறைவனிடம் கோபித்துக் கொள்வதும் உண்டு. அதையும் பார்த்து அனுபவிக்கிறவர்தான் மாணிக்கவாசகர்.

எப்படி என்று பார்க்கலாம்.

பாடிமால் புகழும்
பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன்கண்
டாய்!
தேடிநீ ஆண்டாய்!
சிவபுரத் தரசே!
திருப்பெரும் துறையுறைசிவ
னே!
ஊடுவ(து) உன்னோ(டு)
உவப்பதும் உன்னை
உணர்த்துவ(து) உனக்கெனக்(கு)உறு
தி;
வாடினேன் இங்கு
வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன்(று) அருள்புரிவா
யே. (112)

---

(மால் - திருமால். மகாவிஷ்ணுவே சிவபெருமானின் திருப்புகழை எப்பொழுதும் அனுபவித்துப் பாடிக் கொண்டிருப்பாராம். உவப்பது - மகிழ்வது. உணர்த்துவது உனக்கு - வேண்டியதை விண்ணப்பம் செய்வதும் உன்னிடந்தான். எனக்கு உறுதி-எனக்கு வேண்டியவற்றை.)

# தாயாகிறாள் பெண்

அன்பு என்றால் அது காதலாகக் கனிய வேண்டும். பக்தியாய் தேன்சொட்ட வேண்டும். அப்படி ஒரு அன்பை எங்கே பார்க்க முடியும்? கணவன் மனைவி உறவில் தான் பார்க்கமுடியும்.

கடவுளையும் அப்படியே பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்தால்தான் தரிசனம் கிடைக்கும் என்கிறார் கம்பர்.

''பெண்ணில் நோக்கும்
சுவையில்''

''நினைத்துப் பார்க்கவே முடியாத, பேரானந்த மயமாகிய ஆனந்தமூர்த்தியை வெறும் வார்த்தைகளை வீசிப் பிடித்துவிட முடியுமா? முடியவே முடியாது. நாயகியை நாயகன் ஆசையோடு பார்ப்பது போல, பக்தன் தெய்வத்தைப் பார்த்து பார்த்து அனுபவிக்க வேண்டும்.'' என்று விளக்கம் வேறு கொடுக்கிறார் கம்பர்.

''பெண்ணில் நோக்கும்
சுவையில்; பிறர்தமக்(கு)
எண்ணி நோக்கி
இயம்பரும் இன்பத்தை''

பரம்பொருளை வெறும் பொருளாக மட்டும் நம்மவர்கள் பார்க்கவில்லை. சக்தி மயமான பொருளாகவே பார்த்தார்கள். சிவன், உமை என்று - கணவன் மனைவியாகவே பார்த்தார்கள். உமையொருபாகமாய்ச் சேர்த்துவைத்தே பார்த்தார்கள்.

உலகமும் அண்டமும் பேரண்டமும் எல்லாம் வெறும் தோற்றம்தான். இந்தத் தோற்றத்திற்குப் பின்னால் நிலையாய்

நிற்பது பரம்பொருள் ஒன்றே. இதை உபசாரமாகச் சொல்கிற பொழுது, அண்டபிண்ட சராசரங்கள் அவ்வளவையும் பரம் பொருள் உண்டாக்கினார் என்கிறோம்.

சக்தி (தேவி) இல்லாமல் இறைவன் மட்டும் உண்டாக்க முடியுமா? முடியாது. சக்தியோடு சேர்ந்தே எல்லாவற்றையும் இறைவன் உண்டாக்கினார். அவர்கள் இருவரும் சேர்வதற்கு முன் ஒரே அமைதி. ஒரே மௌனம். அது ஊடலில் பிறந்த மௌனம்.

எதிர்பாராத அதிர்ச்சியில் ஊடல் ஓடி விட்டது. கூடல் நிகழ்ந்தது. எல்லாம் விளைந்து விட்டது' இப்படி நாடகப் பாங்கோடு சொல்லி இருக்கிறார்கள் முன்னோர்கள்.

அமைதியை இமயமலை என்றும், மௌனத்தை ஊடல் என்றும், அதிர்ச்சியை அரக்கன் (இராவணன்) இமயமலையைத் தூக்கி ஆட்டியது என்றும் சொல்லி இருக்கிறது.

அதிர்ச்சியில் உமையம்மை பயந்து விட்டாள். (சிவ) பெருமானுடைய திருமேனியை ஆவிச்சேர்த்து கட்டிக்கொண் டாள். அன்னையின் மார்பு அழுந்த அழுந்த அவர் பூசியிருந்த சாம்பல்ப் பூச்சு கலைந்து விட்டது. ஜோதி மயமான செம்மேனி அண்டபிண்ட சராசரங்களாய் ஜொலித்தது. இப்படி எல்லாம் நாடகப்பாங்கோடு நம்மவர்கள் அனுபவித்திருக்கிறார்கள்.

முன்னோர்களின் அனுபவம் எப்படி ரசமாய் விளைந்து பாடலாய் உருவெடுக்கிறதென்று பாருங்கள்.

அருவியம் குன்றம்
அரக்கன் பெயர்ப்ப;
வெருவிய வெற்பரையன்
பாவை;— பெருமான்
அணிஆகம் ஆரத்
தழுவினாள்; தான்முன்
தணியாத ஊடல்
தணிந்து.

---

(வெருவிய - பயந்த. வெற்பு அரையன் பாவை - மலையரசன் மகள் - உமையம்மை. ஓங்கி உயர்ந்த மிகப் பெரியமலை இமய மலை. அதன் வானளாவிய உயரத்தை மேலிருந்து கீழ் நோக்கி விழும் அருவி அளந்து காட்டுகிறது.)

நந்திக்கலம்பக ஆசிரியரும் இந்த உண்மையை ரசமாய் அனுபவித்திருக்கிறார். அவருடைய அனுபவம்.

பொருப்பரையன் மடப்பாவை
புணர்முலையின் முகடுதைப்ப,
நெருப்புருவம் வெளியாக
நீறணிந்த வரைமார்பா!

என்று கவிதையாய் அவதாரம் எடுக்கிறது.

கணவனும் மனைவியுமாகப் பொலிந்து நிற்கும் கோலத்தில் இறைவனைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால்தான் அம்மையும் அப்பனுமாக நம்மைத் தேடி வருவான் இறைவன்.

மாணிக்கவாசகர் இறைவனை அம்மையப்பனாகவே பார்க்கிறார். மாப்பிள்ளையும் பெண்ணுமாக இருந்து லீலாவிநோதம் பண்ணும் அற்புதமாகவே இறைவன் காட்சி கொடுக்கிறான் மாணிக்கவாசகருக்கு.

உடுக்கை போன்ற ஒடுங்கிய இடையானது துவண்டு துவண்டு ஒசிய - பின்னித்தொங்க விடப்பட்ட சுருள் முடிக்கூந்தல் ஆட - குழைந்து குழைந்து பெருமானைத்தேடி வருகிறாள் உமையம்மை. ஆசைவெறியோடு அவளைக் கட்டித் தழுவுகிறார் பெருமான்.

அமிர்தகலசம் போன்ற அம்மையின் மார்பகங்கள் பெருமானின் நெஞ்சில் ஊன்றி அழுந்துகின்றன. தீச்சுடர் போன்ற அவருடைய திருமார்பில் அம்மையின் நகில் இரண்டும் அஞ்சன வட்டங்கள் போல் விழுந்து விட்டனவாம்.

"செம்மேனியில் கரும்புள்ளிகள் பிரகாசிக்க ஒய்யாரமாய் நிற்கும் எந்தையே" என்று இறைவனை நோக்கி அழைக்கிறார் மாணிக்கவாசகர்.

"துடிகொள்நேர் இடையாள்
சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள் தோய்
சுவ டு;
பொடிகொள்வான் தழலி
புள்ளிபோல் இரண்டு
பொங்கொளி தங்குமார்
பின னே!"

இதோடு நிறுத்தவில்லை மாணிக்கவாசகர்.

மரங்களும் செடிகொடிகளும் காடாய் மண்டிக்கிடக்கிற சோலைகளுக்கு ஊடேயிருந்த மரத்துநிழலில் எழுந்தருளியிருக்கும் பெருமானே'' என்றும் கதறி அழைக்கிறார் மாணிக்கவாசகர்.

அழைத்து என்ன சொல்கிறார்?

''எம்பெருமானே! உம்மை நாடி நான் ஓடி வருகிறேன். என்னை ஏற்றுக் கொள்ள வேண்டும் நீர். நாதி அற்றவன் நான். நீர்தான் எனக்குத் தஞ்சம். ''யாரப்பா நீ'' புதிதாக இருக்கிறதே? என்று முன்பின் தெரியாதவரைப்போல் (அது எந்துவே என்று) நடந்து கொள்ளக் கூடாது நீர்.''

இப்படி எல்லாம் தெளிந்து தெளிந்து கலங்குகிறார் மாணிக்க வாசகர்.

இனிப் பாடல் முழுவதையும் பார்ப்போம்.

''துடிகொள்நேர் இடையாள்
சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய்
சுவ டு
பொடிகொள்வான் தழலின்
புள்ளிபோல் இரண்டு
பொங்கொளி தங்கு(ம்)மார்
பின னே!''
செடிகொள்வான் பொழில்சூழ்
திருப்பெருந் துறையுள்
செழுமலர்க் குருந்தம்மே
விய சீர்
அடிகளே! அடியேன்
ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்றரு
ளா யே. (113)

அற்புதமான பாட்டு. பாடிக்கொண்டே இருக்கலாம். பாடப்பாட நாவிற்கு ருசி ஏறிக் கொண்டே இருக்கும்.

பெண்களை உண்மை உணர்ச்சியோடு மதித்தவர்கள் நம் முன்னோர்கள். கண்ணுக்குக் கண்ணாகவும் உயிருக்கு உயிராகவும், தெய்வத்திற்குத் தெய்வமாகவுமே பெண்களை மதித்தார்கள்

நம்மவர்கள் காலப்போக்கில் பெண்களை அடக்கி ஆண்டவர்களும் கொடுமைப்படுத்தியவர்களும் நாம்தான்.

இந்த முரண்பாட்டுக்குக் காரணம் என்ன?

அமிழ்தினும் இனியவர்கள் பெண்கள். ஆடவர்களை மட்டும் அல்ல, குடும்பத்தையே - சமுதாயத்தையே பெண்களின் தூய அன்பும், ஞானமும், கருணையுமே காப்பாற்றிக் கொண்டிருக் கின்றன.

தாயாய், தெய்வமாய் நின்று காப்பாற்ற வேண்டிய பெண்கள். கேவலம் காமம் அடைக்கப்பட்ட தோற்பைகளாகி விட்டார்கள். வீரர்களாய், பாதுகாவலர்களாய் விளங்க வேண்டிய ஆடவர்கள் வெறும் பைத்தியங்கள் ஆகிவிட்டார்கள்.

பட்டிணத்தார் சொல்வதைப் பாருங்கள்.

நெறிதரு குழலை
அறல்என்பர் கள்
நிழல் எழும் மதியம்
நுதல் என்பர் கள்;
நிலவினும் வெளிது
நகைஎன்பர் கள்;
நிறம் வரு கலச
முலை என்பர் கள்
அறிகுவ(து) அரிது
இடை என்பர் கள்;
அடிஇணை கமல
மலர் என்பர் கள்;
அவயவம் இனைய
மடமங்கை யர்
அழகியர் அமையும்
எனில்; என் செய''

---

(நெறிதருகுழல் - நெளிந்து நெளிந்து சுருளும் கூந்தல். அறல் - கருமணல், பூப்போன்ற மெத்தென்ற கருமணல். நிழல் - பிரகாசம் நுதல் - நெற்றி. நகை-பல்வரிசை. நிறம் வருகலசம் - தங்கக்குடம். அறிகுவது அரிது - பார்க்கமுடியாதபடி ஒடுங்கிய, கமலமலர் - தாமரைப்பூ. அழகியர் அமையும். எனில் என் செய - பெண்கள் அழகானவர்கள்தாம். அவர்கள் கிடைக்கவும் செய்கிறார்கள். அதற்காக அதில் பைத்தியம் பிடித்து மூழ்கியே போய் விடலாமா)

கடவுளையே மறந்து விடுவான் காமுகன். இது சம்பந்த மாகவும் சொல்கிறார் பட்டிணத்தார்.

மறிமழு உடைய
கரன்என்கி லர்;
மறலியை முனியும்
அரன்என்கி லர்;
மதிபொதி சடில
தரன்என்கி லர்;
திருநடம் நவிலும்
இறைஎன்கி லர்;
சிவகதி அருளும்
அரசென்கி லர்;
சிலர்நர(கு) உறுவது
அறிவின்றியே.

பட்டினத்தாருக்கு நம் மீது எல்லை இல்லாத பரிவு இருக்கிறது. இல்லாவிட்டால், ''அறிவில்லாமல் அல்லவா அவஸ்தைப்படு கிறீர்கள்.'' என்று பல்லை நறநறவென்று கடிக்க முடியுமா?

உடம்பில் வலுவும் ஆரோக்கியமும் இருக்கிற பொழுதே புத்தி யிலும், வலுவும் ஆரோக்கியமும் இருக்கவேண்டும்.

அப்படி இல்லாவிட்டால் தடுமாற்றம்தான். தடுமாறிவிட்டால் போனது போனதுதான். திரும்ப வரவே வராது.

மாணிக்கவாசகர் போன்ற ஞானிகள் பெண்மையையும் தாய்மையையும் போற்றிப் புகழ்ந்து, அன்பையும் மரியாதையை யும் துளிர்க்கச் செய்தார்கள்.

ஞானிகளின் சிகரமாக மகாத்மா காந்தி அவதரித்தார். அவர் மூலமாகவே நம் தேசத்துப் பெண்களுக்கு விடுதலை கிடைத்தது.

ஆதரவற்ற பெண்கள் யாராக இருந்தாலும் சரி, பயப்பட வேண்டாம். நானே அவர்களுக்கு ஆதரவு என்று சொன்னார். சொல்லியது மட்டும்அல்ல, அவர்களுக்கு ஆதரவாகவும் இருந்தார்.

அப்படி அவர் இருந்ததனால்த்தான் பெண்கள் தம் உரிமையை உணர்ந்து தைரியமாகச் செயல்பட முடிந்தது.

மகாத்மா காந்தி போன்ற தெய்வம் அவதரிப்பதற்கு முன், மாணிக்கவாசகர் போன்ற தூதர்கள், தெய்வ தூதர்கள் அவதரிக்க வேண்டும். அவர்கள் பெண்ணின் பெருமையை எடுத்து விளக்க வேண்டும்,

பரம்பொருளையே பெண்மையோடு இணைத்து 'எப்படிச் சொல்கிறார் மாணிக்கவாசகர் என்று பாருங்கள்.

"துடிகொள்நேர் இடையாள்
சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய்
சுவ டு.
பொடிகொள்வான் தழலின்
புள்ளிபோல் இரண்டு
பொங்கொளி தங்கும்மார்
பின னே!

என்றெல்லவா சொல்கிறார்.

# தட்டாத கதவில்லை

ஆவுடையார் கோவில் என்று இப்பொழுது நாம் சொல்கிற ஊருக்குத் திருப்பெருந்துறை என்று பெயர். புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி என்னும் ஊருக்குத் தெற்கே எட்டு மைல் தொலைவில் இருக்கிறது திருப்பெருந்துறை.

திருப்பெருந்துறையில் இருக்கிற கோவில் பெரிய கோவில் தான். சதுரப்பாடு மிக்க நுட்பமான வேலைகள் நிறைந்த பெரிய கோவிலேதான்.

இவ்வளவு பெரிய கோவிலாக சன்னிதானம் எழுந்தருளியது மாணிக்கவாசகரால்தான். மாணிக்கவாசகர் குமரனாக இருந்த காலத்தும் சரி, வாலிபனாகத் திரிந்த காலத்தும் சரி. திருப்பெருந் துறையில் கோபுரமும் இல்லை கோவிலும் இல்லை. அங்கு ஒரே காடாக இருந்தது. பெரிய பெரிய குருந்த மரங்கள் அந்தக் காட்டில் நிறைந்திருந்தன. ஆங்காங்கு பொய்கை (குளங்கள்) களும், அவற்றை ஒட்டி பூந்தோட்டங்களும் இருந்தன.

அங்கொரு வீடு இங்கொரு வீடு என்று காட்டிற்குள் சிலர் இருந்தார்கள். அவர்களும் அவர்களுடைய வீடுகளுமே அந்தக் காட்டினுள் சிறு ஊராக இருந்தது.

மரங்களும் செடி கொடிகளும் குளங்களுமாய் இருந்த அந்தப் பெரிய காட்டில் அமைதி நிறைந்திருந்தது. வண்டுகளின் ரீங்கார மும் பறவைகளின் இன்னொலியும், இலைகளின் சலசலப்பும் அமைதிக்கு அமைதியை உண்டாக்கின.

அழகும் அமைதியும் நிறைந்த அந்தக் காட்டிற்குள் யார் போனாலும் சரி. அவர்களுக்குப் பக்தி உண்டாகிவிடும். அந்தக்

காட்டில் இருந்த பெரிய குருத்த மரத்தடியில் ஒரு பீடம். அந்தப் பீடத்தில் பெரியவர் ஒருவர் அமர்ந்திருந்தார்,

ஆழ்ந்து ஆலோசனை செய்வது போல, உண்மையை, உணர்ச்சியை, வாழ்க்கையை, அற்புதத்தை இவற்றையே எண்ணி மயங்கித் திளைத்துக் கொண்டிருந்தார் அவர். முகத்தில் எப்பொழுதும் கருணையானது பொங்கித் ததும்பும். சில சமயம் புன் முறுவல் நெளியும், சில சமயம் வாய் திறந்து சிரித்துவிடுவார், சில சமயம் ஆழ்ந்த அமைதியில் தோய்ந்திருப்பார். அப்பொழுது அவர் முகத்தில் ஆனந்த உணர்ச்சி பூத்துப் பொலியும். அதில் ஒரு ஏக்க உணர்ச்சியும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்.

அந்தக் காட்டில் நந்தியாவட்டை மரங்கள் சில, தங்க அரளிச் செடிகள் சில, வில்வ மரங்கள், செம்பருத்திச் செடிகள் சில இருந்தன.

பலகை போன்ற கல்லால் ஆகிய பீடத்தை நீர்விட்டு அபிஷேகம் செய்வார் பெரியவர். ஈரம் புலர்ந்தவுடன் சாணத்தைப் பிடித்துப் பீடத்தில் வைப்பார். அருகம்புல்லைப் பிடுங்குவார். ஒன்றிரண்டு புல்லைப் பிடித்து வைத்த சாணத்தில் சொருகுவார். பீடத்தில் வைத்த சாணத்தில் சொருகுவார். பீடத்தில் அருகம்புல்லை ஆங்காங்கு வைப்பார். அருகம்புல்லை மாலையாகக் கட்டியும் பீடத்தில் வைப்பார்.

விதவிதமான பூக்களைக் கொண்டு மாலையாகக் கட்டுவார். மாலைகளையும் பீடத்தில் சார்த்தி வைப்பார்.

பீடத்தைச் சுற்றியுள்ள மரங்களின் மேலும், செடி கொடி களின் மேலும் மலர்களைத் தூவுவார். மாலையாகக் கட்டியும் மரம் செடி கொடிகளுக்குப் போடுவார்.

தெளிந்த நீர் நிறைந்த பொய்கைகளிலும் மலர்களை மாலை களை, அறுகம்புல்லை, இலைகளை, பிடி சாணத்தைத் தூவி விசுறுவார்.

பெரியவருக்கு எல்லாம் ஆனந்தந்தான். காட்டை நன்றாகக் கொத்திக் கொடுப்பார். பண்ணை கட்டுவார். கொடிகளை எடுத்து நிறுத்தி சுற்றிவிடுவார். வரப்பு வெட்டுவார், நீர் பாய்ச்சுவார்.

பெரியவருக்கு எல்லாம் ஆனந்தந்தான்.

பறவைகளின் ஆட்டபாட்டங்கள் என்ன? அந்தக் காட்டில் நடமாடும் பிராணிகளின் ஓட்ட சாட்டங்களென்ன? ஒவ்வொன்றையும் அனுபவிப்பார் பெரியவர்.

வழிப்போக்கர்களாய்ப் பலர் அந்தப் பக்கம் வருவார்கள். போவார்கள். பக்தர்களாய் வந்து போகிறவர்களும் உண்டு. ஆடவர், பெண்டிர், குழந்தைகள் எல்லோருடைய காரியங்களையும் அனுபவிப்பார் பெரியவர்.

பெரியவர் காரியம் அப்படி இருக்கட்டும்.

2

மாணிக்கவாசகர் ஆயிரத்து முந்நூறு வருடங்களுக்கு முன் இருந்தவர். மாணிக்கவாசகர் சிறந்த அறிஞர். உணர்ச்சி வளம் நிறைந்தவர். உண்மையைக் காண்பதிலும் அனுபவிப்பதிலும் வெறிகொண்டவர்.

எத்தனையோ துறைகளைப்பற்றி மாணிக்கவாசகர் படித்தார். பறவைகளைப் பற்றிப் படித்தார். பிராணிகளைப் பற்றி படித்தார், மரம் செடி கொடிகளைப் பற்றிப் படித்தார். உடம்பைப் பற்றிப் படித்தார், உணர்ச்சிகளைப்பற்றிப் படித்தார், காற்று, வெளிச்சம், நீர், நெருப்பு, கல் மண் ஆகியவற்றைப் பற்றியும் படித்தார்.

உயிர் என்றால் என்ன? பிறப்பு என்றால் என்ன? இறப்பு என்றால் என்ன? என்பவற்றைப் பற்றி எல்லாம் படித்தார்.

படித்தார் என்று சொல்வதைவிட யோசித்தார் என்றுதான் சொல்ல வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக மனிதர்களைப் பற்றி யோசித்தார். மனிதர்கள் என்றால் என்ன? மனிதர்கள் வாழ்க்கையும், வாழ்க்கையில் 'பளிச் பளிச்' என்று மின்னுகிற குணங்களுமேதான்.

மனிதனுடைய நோய்கள், வேதனைகள், உல்லாசங்கள், இன்பங்கள் ஒவ்வொன்றும் மாணிக்கவாசகரைச் சும்மா இருக்கவிடவில்லை. மாறி மாறி யோசிக்கவைத்தன. மாணிக்கவாசகரைக் கட்டிப் புரண்டு உருண்டன. மாணிக்கவாசகரின் உள்ளத்தைக் குழைத்துக் குழைத்துப் பிசைந்துவிட்டன.

மாணிக்கவாசகர் தன்னுணர்வோடு இருந்தார். உணர்வுமயமாக இருந்தார். அதனால் எல்லாவற்றைப் பற்றியும் யோசிக்க முடிந்தது அவரால்.

உற்றார் உறவினர் நண்பர் எல்லோரும் நம்முடன்தான் இருக்கிறார்கள். நாய், பூனை, பசு, எருமை, மரம் எல்லாம் நம்முடன் இருக்கின்றன. வயலும் தோப்பும் நம்மிடமே உள்ளன. மக்களுக்கு மத்தியில்தான் நாம் இருக்கிறோம். அப்படியானால் தாராளமாக யோசிக்க வேண்டியதுதானே நாம்?

நாம் உணர்வில்லாமல் இருக்கிறோம். எதைப் பற்றியும் யோசிப்பதில்லை நாம். மாணிக்கவாசகரோ உணர்வுமயமாக இருந்தார். ஒவ்வொன்றைப் பற்றியும் யோசிக்காமல் அவரால் இருக்கவே முடியவில்லை.

யோசிக்க யோசிக்க மாணிக்கவாசகருக்கு அறிவு வளர்ந்தது-தெளிவு கிடைத்தது. ஆனாலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு போக்கில் இருக்கின்றனவே? ஒன்றோடு ஒன்று ஒட்டாமல் விலகிப் போவது போல நிற்கின்றனவே? ஏன் இந்த முரண் என்று கலங்கினார். கலக்கம் அலரைக் குத்திக்குடைந்தது.

அறிவு வளர்ந்தது, போலவே மாணிக்கவாசகரிடம் குழப்பமும் வளர்ந்து கொண்டே இருந்தது. அறிவின் பசி பொறுக்க முடியாமல் எதை எதையோ படித்தார். எத்தனையோ பண்டிதர்களிடம் போய் முரண்டினார். எப்படி எல்லாமோ அவர்களை உரசிப்பார்த்தார். அவர் தட்டாத கதவுகளே இல்லை. ஆனால் எந்தக் கதவுமே திறந்தபாடாக இல்லை.

மாணிக்கவாசகருக்கு இருந்த இடத்திலேயே இருக்க முடியவில்லை. தலயாத்திரையே புறப்பட்டுவிட்டார், அறிவு, ஆராய்ச்சி, தர்க்கம், அரசியல் எல்லாவற்றையும் ஒரே மூட்டையாகக் கட்டி வைத்து விட்டு ஒவ்வொரு இடமாகப் போனார் மாணிக்கவாசர்.

திருப்பெருந்துறைக்கு வந்து சேர்ந்தார். குருந்த மரத்தடியில் எழுந்தருளியிந்த மகானைப் பார்த்தார். பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டார். சூரிய வெப்பத்தில் பனிக்கட்டி உருகுவது போல உருகிவிட்டார் மாணிக்கவாசகர்.

ஞானாசாரியனாகிய மகானும் ஆவலோடு மாணிக்கவாசகரைப் பார்த்தார். இவ்வளவு காலமும் எதிர்பார்த்து நின்ற ஒன்று எதிர் வந்து நின்றால் எப்படி இருக்கும்? மாணிக்கவாசகரைப் பார்க்கப் பார்க்க அப்படி ஆனந்தமாக இருந்தது மகானுக்கு.

காந்தமும் காந்தமும் ஒட்டுவதற்கு முனைந்து நிற்பதுபோல ஒருவரை ஒருவர் ஆவலோடு பார்த்துப் பார்த்து பழகினார்கள்.

மாணிக்கவாசகர் அங்கேயே தங்கிவிட்டார். குருநாதர் மாணிக்கவாசகருக்கு எதைப் பற்றியும் பாடம் நடத்தவில்லை. வாயால் ஒன்றையும் சொல்லிக் கொடுக்கவே இல்லை

குருநாதரே கல்வியாகக் காட்சியளித்தார். குருநாதருடைய அன்பு, எளிமை, அருமை, ஆனந்தம் அவ்வளவும் ஒன்றாய் நின்று மாணிக்கவாசகரின் இதயத்தைச் சொர்ண விக்ரகமாக ஜொலிக்க வைத்துவிட்டது.

அண்ட பிண்டசராசரம் அவ்வளவும் ஒன்றுதான். வேறு வேறு அல்ல என்பது தெள்ளத் தெளிவாய்த் தெரிந்துவிட்டது. மாணிக்கவாசகருக்கு.

மாணிக்கவாசகரிடம் இப்பொழுது குழப்பம் இல்லை, தெளிந்து பிரகாசிக்கிறது ஞானம். ஞானமானது மாணிக்க வாசகரிடம் தெளிந்து தெளிந்து உறுதிப்பட்டது. அந்த உறுதி கருணை மயமாக ஒளிவீசியது.

மாணிக்கவாசகரின் ஞானமும் கருணையும் குருநாதரின் உள்ளத்திற்குப் பூரிப்பைக் கொடுத்தன. மாணிக்கவாசகிரின் ஞானமும் கருணையும் பக்தியாய்ப் பிரகாசிக்க வேண்டும். கலை (பாடல்) யாய்ப் பரிமளிக்க வேண்டும். வெறும் அறிவாய் - வறட்டுத் தத்துவமாய்ப் போய்விடக்கூடாது என்று குருநாதர் ஆசைப்பட்டார்.

சிவத் தலங்களைத் தரிசித்துவர மாணிக்கவாசகரை அனுப்பி வைத்தார் குருநாதர்.

திருவிடைமருதூர், சிதம்பரம், திருப்பூந்துருத்தி, திருக்கழுக் குன்றம் முதலிய இடங்களுக்குப் போய்விட்டு மறுபடியும் திருப் பெருந்துறைக்கு வந்தார் மாணிக்கவாசகர்.

என்ன அநியாயம் ஞானாசிரியர் அங்கு இல்லை.

உடம்பை ஒரு இடத்தில் வைத்துவிட்டு, உயிரானது ஒரு காரியத்திற்காக நெடுந்தூரம் போனது. காரியத்தை முடித்து விட்டு உடம்பிருக்கும் இடத்தை நாடி உயிர்வந்தது. அங்கு உடம்பு இல்லை. அப்படியானால் உயிரானது என்ன பாடுபடும்? எப்படிஎல்லாம் தத்தளிக்கும்? அப்படித் தத்தளித்தார் மாணிக்கவாசகர்.

அந்த மகானை எங்குக் காண்பேன்? என்று காண்பேன்? என்று துடித்தார். இருளுக்குள் கிடந்து தத்தளித்த எனக்கு - என் உணர்ச்சிக்கு உள்ளேயே விளக்கைப் பொருத்திவைத்த வித்தகன் அல்லவா அவர்? அவரை எங்கு காண்பேன்? எப்பொழுது காண்பேன்? என்று தவித்தார்.

மாணிக்கவாசகரின் தவிப்பிற்குள் இருந்து ஒரு உணர்ச்சி எழுந்தது, "எப்பொழுதாவது அவரைக் காண நேர்ந்தால், என்னை அவர் நம்மவன் என்று ஒப்புக்கொள்வாரா? ஞாபகம் இருக்குமா என்னைப்பற்றி? ஞாபகம் இல்லாமல் என்னைக்கண்டு ஒதுங்க ஆரம்பித்துவிட்டால் நான் என்ன செய்வேன் என்று கலங்கினார். அவருடைய கலக்கம்.

திருத்தமாம் பொய்கை
திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்த(ம்)மே
விய சீர்
அருத்தனே உன்னை
ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்றரு -
ளா யே

என்று செய்யுளாய் உருவெடுக்கிறது.

குருநாதனை குருநாதா என்றா அழைக்கிறார், அருத்தனே (மெய்ப்பொருளே) என்று கூவிக் கதறுகிறார்.

நம்முடைய சொற்களுக்கும் ஞானிகளுடைய சொற்களுக்கும் சம்பந்தமே இல்லை. நம்முடைய சொற்களில் காரியம் இருக்கும், காரியத்திற்கு அனுகூலமான உபாயம் இருக்கும். ஆனால் உண்மை (பொருள்) இருக்காது, அதாவது நம்முடைய சொல்லில் உயிர் இருக்காது. நாம் வேறாகவும் நம் சொல் வேறாகவுமே இருப்போம்.

ஞானிகளின் வார்த்தையோ பொருள் மயமாக இருக்கும். வார்த்தையே வேண்டாம். அவர்களை பொருள் (உண்மை) மயந்தான்.

ஞானிகளே சொல்லாக அவதரிக்கிறார்கள். அதாவது மெய்ப்பொருளாகவே வடிவெடுக்கிறார்கள்.

கடவுளும் அப்படித்தான். அவர் வெறும் வார்த்தையாக இல்லை, பொருளாகவே இருக்கிறார். அண்ட பிண்ட சராசர மாகவே இருக்கிறார். கடவுள் பிரபஞ்சமாக காட்சி தருகிறார். பிரபஞ்சம் முழுவதும் சொல்லாக உபயோகப்படுகிறது நமக்கு.

எங்கும் நிறைந்த பரம் பொருளே ஞானமூர்த்தியாக வந்து தனக்கு அருள்நெறி காட்டி விட்டு மறைந்து விட்டது என்னும் உணர்ச்சி மாணிக்கவாசகரின் மனசில் மின்வெட்டுப்போல அடித்தது. அதுதான் அவரை நிலைகுலையாமல் காப்பாற்றியது இல்லாவிட்டால் கடவுளை 'அருத்தனே' என்று அழைக்கமுடியுமா?

ஆயிரம் பேரோ இரண்டாயிரம் பேரோ கூடி இருக்கிறார்கள். மேடையில் ஏறிப் பேசப் போகிறோம நாம், மேடையில் ஏறிய உடனே கூட்டத்தை நோக்கி என்ன சொல்றோம்? "அன்பர்களே" என்கிறோம். 'மெய்யன்பர்களே" என்று கூசாமல் சொல்லிவிடு கிறோம்.

நம்முடைய சொல்லில் உண்மை உண்டா? உணர்ச்சி உண்டா? ஒன்றுமே இல்லை. வெறும் சொற்கள்தாம் அவை.

எல்லோரையும் ஒன்றாக நினைந்து உடன் பிறப்பாக ஒன்று பட்டால் அல்லவா அன்பு ஊறும். ஊறி நிறைந்த அன்பல்லவா வாய்திறந்து 'அன்பர்களே மெய்யன்பர்களே' என்று கூப்பிட வேண்டும்.

பொருளற்ற சொல்லாக இருக்கிறோம் நாம். சொல்லற்ற பொருளாக இருக்கிறார்கள் ஞானிகள். கடவுளும் அப்படித்தான்.

பொருள் மயமான அருத்தனை - ஞானமூர்த்தியை, திருப் பெருந்துறையில் - குருந்த மரத்தடியில் காணாமல் தத்தளித்த மாணிக்கவாசகர், கால் போன இடமெல்லாம் போய்த் தேடினார்.

தமிழ்நாடு முழுவதும் தேடி அலைந்தார். கோவில்கள் தோறும் சென்று தேடிப் பார்த்தார். கோவில்களில் மூர்த்திக்கு நடக்கிற அலங்காரத்தைப் பார்த்து மயங்கினார். அபிஷேகத்தை அனுப வித்து உருகினார்.

தன்னுடைய குருமூர்த்திதான் ஒவ்வொரு கோவிலிலும் மூர்த்தியாக எழுந்தருளியிருக்கிறார் என்று இன்புற்றார்.

மூர்த்தியை அனுபவிக்கிற மாணிக்சவாசகர், மூர்த்திக்குப் பின்னாலிருக்கும் உண்மையை மறந்து விடுவதில்லை. எல்லாமாய்.

எங்குமாய் - தானாய் - ஏகமாய் நிறைந்திருக்கும் பரம் பொருளாகவே அனுபவிக்கிறார் மூர்த்தியை.

நம் உடம்பைப் பார்த்தாலே போதும். இதில் எத்தனையோ தத்துவங்கள் ஒன்றாய் நின்று செயல்படுகின்றன. நம் உணர்ச்சியிலும் பல பல தத்துவங்கள் அப்படியே நின்று செயல்படுகின்றன. அவ்வளவும் ஒரு நியதிப்படியே செயல்படுகின்றன. பேரண்டம் முழுவதையும் அந்த நியதியே செயல்படுத்துகிறது.

இந்த உண்மை சாதாரணமாகத் தெரிகிறதில்லை. தெரிந்தாலும் ஏதோ ஒரு கணக்கைப் போலவோ, அறிவு போலவோ தெரிகிறது. அனுபவ பூர்வமாக விளங்கமாட்டேன் என்று சாதித்து விடுகிறது. 'குருந்த மரத்தடியில் ஒட்டி உறவாடிக் கலந்து பழகிய ஞான குருவைப்போல, இறைவனோடு கலந்து உறவாட முடியவில்லையே' என்று மாணிக்கவாசகர் திகைத்துவிடுகிறார்.

சின்னஞ்சிறிய புல்லிலிருந்து அளப்பரிய நட்சத்திரம் வரை எல்லாம் ஒரே இறைவன்தான். பேரண்டம் முழுவதும் இறைவனுடைய ஆனந்தநடனம் ஒன்றேதான் அதனால்தான் இறைவனை 'நிருத்தனே' என்று கூப்பிடுகிறார் மாணிக்கவாசகர்,

மாசற்றபேரொளியாய்—வெட்டவெளிச்சமாய் நிறைந்திருக்கிறான் இறைவன். ஒளிவு மறைவு என்பது இல்லவே இல்லை. அதனால் 'நிமலனே' என்று அழைக்கிறார்.

சக்தி மயமானவன் இறைவன். அவன் பேரண்டமாய்க் காட்சி தருகிறான். தீச்சுடர் மயமானது இறைவனுடைய திருமேனி—அதாவது சக்தி. அதை மூடிமறைக்கும் சாம்பல் பூச்சாய் இருக்கிறது அண்டபிண்டசராசரம். இப்படி ஒரு விளையாட்டு விடுகிறான் இறைவன். மாணிக்கவாசகர் உணர்ச்சிமயமாக உண்மையை அனுபவிக்கிறார். 'நீற்றனே' என்று கதறிக் கூப்பாடு போடுகிறார்.

எல்லாவற்றையும் நெறிமுறை பிறழாமல் நியதிப்படி நடத்தும் இறைவன், ஒவ்வொன்றையும் எவ்வளவு ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொண்டிருக்கிறான் என்று வியக்கிறார். மாணிக்கவாசகரின் வியப்பு 'நெற்றிக் கண்ணனே' என்று கூப்பாடு போடவைக்கிறது.

சகல சக்திகளுக்கும் அவன் நாயகனாக இருப்பதைப் பார்த்துப் பரவசப்படும் மாணிக்க வாசகர் 'விண்ணுளார் பிரானே' என்று துள்ளுகிறார்.

அவனைத்தவிர வேறு ஒன்றும் இல்லை. அவன் ஒருவன்தான் இருக்கிறான் என்பது புரியப் புரிய மாணிக்கவாசகருக்கு ஒரே பேரானந்தம். பேரானந்தமே வாய்திறந்து 'ஒருத்தனே' என்று கூப்பிடுகிறது.

"ஆனாலும் அவனை நேருக்கு நேராகப் பார்க்க முடியவில்லை. கணவனும் மனைவியும் போல அவனோடு சேர்ந்து வாழ முடியவில்லை. எங்கெங்கு தேடினாலும் அவனைப் பார்க்க முடியவில்லையே" என்று மாணிக்கவாசகர் கலங்குகிறார்.

மாணிக்கவாசகரின் கலக்கம் உண்மையான கலக்கம், உணர்ச்சி மயமான கலக்கம். அதனால் அது கவியாக உருவெடுக்கிறது. எப்படி என்று பார்ப்போம்.

(தானன தானன
தன்னன தன்னன
தன்னன தன்னன
தா ன)

"நிருத்தனே! நிமலா!
நீற்றனே! நெற்றிக்
கண்ணனே! விண்ணுளார்
பிரா னே!
ஒருத்தனே! 'உன்னை
ஓலமிட் டலறி,
உலகெலாம் தேடியும்
கா ணேன்';
திருத்தமாம் பொய்கைத்
திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்த(ம்)மே
விய சீர்

(அது எந்துவே—இது தமிழகத்தின் தென்பகுதியில் வழங்கும் "என்னவே அது" என்னும் வழக்குச் சொல்லின் திரிபு. அடையாளம் கண்டு உன்னை நான் நெருங்கினால், "என்னவே இது பித்தலாட்டம் பண்ணுகிறாயா என்னிடம்" என்று என்னை புறக்கணித்துவிடக் கூடாது பெருமானே! என்று முறையிடுகிறார் மாணிக்கவாசகர்.

'ஏ' என்னும் சொல்லில் உள்ள அதட்டலையும் காரத்தையும் குறைத்து, ஒரு மாதிரியாய்ப் பேசுகிறது, 'வே' என்னும் திரிபு. என்ன என்பதுதான் எந்து என மருவி நிற்கிறது.)

அருத்தனே! அடியேன்
ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்றரு—
ளா யே'' (114)

அற்புதமான பாடல். மாணிக்கவாசகரே பாடலாக அவதாரம் எடுத்து விட்டார் என்றுதான் சொல்லவேண்டும். பேரண்டம் முழுவதுமாய் இறைவன் நிறைந்து நின்றாலும், அந்த இறைவன் மூர்த்தியாய் அவதாரம் எடுத்துக் கோவிலில் எழுந்தருளினால் தான் ஆனந்தம். மாணிக்கவாசகர் எவ்வளவுதான் ஞானப்பழமாய்ப் பழுத்துத் தேன் சொட்டினாலும் கவியாய் விளைந்து வந்தவுடன் தான் இன்பம் பொங்குகிறது. அனுபவிக்க முடிகிறது.

கவியாய் விளைந்து தமிழில் கொலு வீற்றிருக்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள்.

சிவபெருமானுக்கு மாணிக்கவாசகரின் பாடல்களில் உள்ள ருசி வேறு எங்குமே இல்லை. அதுகாரணமாக மாணிக்கவாசகரின் பாடலோடு பாடலாகவே—மாணிக்கவாசகர் உள்ளத்தோடு உள்ளமாகவே, மாதொரு பாதியனாய் வந்து தங்கிவிட்டார்.

மாணிக்கவாசகர் கட்டிய கோவிலில் கூட எழுந்தருளாமல், அவர் பாடல்களிலேயே அமர்ந்துவிட்டார்.

மாணிக்கவாசகரின் பாடல்களில் நின்றே இறைவனும் இறைவியும் அடியார்களுக்கு அருள் பாலிக்கிறார்கள். ஆளுடைய நாயகன் என்றும், ஆளுடைய நாயகி என்றும் பெயர் தாங்கி அருள் பாலிக்கிறார்கள்.

திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகர் கட்டிய கற்கோவிலில் இறைவனும் இறைவியும் வெறும் பெயரளவில்தான் இருக்கிறார்கள். திருமேனி உருவத்தில் இல்லை.

இப்படி எல்லாம் இறைவனையும் இறைவியையும் சேர்ந்து அமரும்படி பாடல்களாய் விளைந்த மாணிக்கவாசகரைப் பக்த கோடிகள் சும்மாவிடுமா? மாணிக்கவாசகர் கட்டிய ஆளுடைய கோவிலில் மாணிக்கவாசகரையே மூர்த்திவடிவில் எழுந்தருளச் செய்துவிட்டார்கள். மாணிக்கவாசகருக்குத்தான் ஆளுடையான் கோவிலில் சந்நிதியும் வழிபாடும் திருவிழாவும். இறைவனும் இறைவியும் மாணிக்கவாசகர் பாடலில் அமர்ந்தே இந்த அற்புதத்தைக் கண்டுகளிக்கிறார்கள்,

# குடும்பமே கோயில்

தங்கத்திற்குக் கூட மாற்று உண்டு. பத்தரை மாற்று என்றால் தங்கத்தில் நயம். சொக்கத் தங்கம் என்று பெயர். எட்டு மாற்று, ஒன்பது மாற்று என்பதெல்லாம் அப்படி அப்படித்தான்.

உண்மை என்று ஒன்று இருக்கிறது. அது ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. ஆனால் அதில் பத்து என்றோ, பத்தரை என்றோ மாற்றுக் கிடையாது.

உண்மையானது தனியாக இல்லை. வீடு, காடு, பிராணிகள், கலைகள், மனைவி, மக்கள், உற்றார், உறவினர், அண்டம், பேரண்டம் இப்படிப் பொருள் மயமாக இருக்கிறது. உயிராக இருப்பதும் அதுதான். உணர்ச்சியாக இருப்பதும் உண்மைதான்.

அப்படியானால் உண்மையைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

எங்குமாய், எல்லாமாய், என்றென்றும் நிறைந்திருக்கிறது உண்மை. ''அதை நான் கண்டு பிடித்து விடப் போகிறேன். கண்டு பிடித்து அதைப்பற்றி உங்களுக்கு விளக்கப் போகிறேன்'' என்று ஒருவன் முனைவானானால், அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

உண்மையை அனுபவிக்க முடியும். கண்டு பிடிக்க முடியாது. உண்மையை அனுபவிக்க அனுபவிக்க ஆனந்தம் பொங்கும். பால் பொங்குவது போல எழுந்து எழுந்து பொங்கும் ஆனந்த உணர்ச்சி.

உண்மையைத் துலக்கத் துலக்க—அதாவது தெளிவுபடுத்தத் தெளிவுபடுத்த உண்மைக்கு ஒரு உருவமே கிடைத்துவிடுகிறது.

துப்புத் துலக்குவதற்காகவே திருப்பெருந்துறையில் மூர்த்தி யாக எழுந்தருளி இருக்கிறான் இறைவன் என்று தோன்றுகிறது.

அது காரணமாகவே இறைவனை "துப்பனே" என்று அழைக் கிறார் மாணிக்கவாசகர்.

"கடவுள் ஒருவர்தான் உண்மை. அவரைத்தவிர வேறு ஒன்றும் இல்லை." இது நமக்குத் தெரிகிறதோ இல்லையோ, கடவு ளுக்கு நன்றாகத் தெரியும். "தன்னைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. எத்தனை கோடி கோடியாய்த் தோற்றங்கள் தோன்றி னாலும், அத்தனையும் ஒன்றுதான் என்று கடவுளுக்கு நன்றாகத் தெரியும்.

மற்றவை வேறு, நாம் வேறு என்பது வெறுப்பை உண்டாக்கு கிறது. எல்லா நோய்களுக்கும் வெறுப்பே மூலம்.

அவ்வளவும் நாம் தான் என்னும் ஆனந்தத்தில் நடனமாடிக் கொண்டிருக்கிறான் இறைவன் (நடராஜ மூர்த்தி). அவரிடம் எப்படி துவேஷம்—அழுக்கு இருக்க முடியும்?

பேதம் என்கிற பேதைமை இல்லாமல் மாணிக்க ஒளியாய் ரத்தினமாய்ப் பிரகாசிக்கும் இறைவனை, "தூயாய்" என்று அழைக்கிறார் மாணிக்கவாசகர்.

வயிரமணி பார்வைக்கு வெண்மையாய் இருக்கும். "தும்பைப் பூப்போல வெள்ளை வெளேர் என்று இருக்கும். ஆனால் அதனுள் ளிருந்து படலம் படலமாக வெளிப்படுகிற வண்ணங்களோ புதிது புதிதாக விளையாடும். தீச்சுடர் போன்ற ரத்தினப் பிரகாசமும் 'பொலு பொலு' என்று வயிரத்திலிருந்து ஜொலிக்கும்.

தூய வெண்ணீற்றை ஊடுருவி வருகிற இறைவனுடைய திரு மேனியின் செம்மை நிறம், தீச்சுடராய் ஒளி வீசுகிறது. கண் கொள்ளாத அழகு தான் அது. ரத்தின கசிதமாய்ப் பிரகாசிக்கும் வயிரமலை போல இருக்கிறது இறைவனுடைய திருக்கோலம்.

எப்படி அனுபவித்துச் சொல்கிறார் மாணிக்கவாசகர் என்று பாருங்கள்.

''துப்பனே! தூயாய்!
தூய வெண் நீறு
துதைந்தெழு துளங்கொளி
வயி ரத்(து)
ஒப்பனே.''

கட்டிலிலோ, தரையிலோ எங்கு படுக்கப் போட்டாலும் சரி, குழந்தை சும்மா இருக்காது. இரண்டு பக்கத்திலும் தலையணையை அடையாக வைத்தாலும், குழந்தை சும்மா கிடக்காது. கையையும் காலையும் உதறும். துள்ளி எழுவதைப் போல உந்தும். மல்வீரர்கள் உருண்டு புரண்டு சண்டை போடுவது போலக் கையையும் காலையும் போட்டு அப்படியும் இப்படியுமாக உதைக்கும். சிரிக்கும், அழும், சத்தம் போடும். மணிக்கணக்கில் உடம்போடு மல்யுத்தம்போடும் குழந்தை. தாயின் மடியில் இருந்து பால் குடிக்கும் போது கூடத் திமிறிக் கொண்டு குழந்தை அட்டகாசம் செய்வதைப் பார்க்கலாம். பெரியவர்களாகிய நம்மால் அது முடியாது. நம்மோடு நாம் குஸ்தி போடுவது கிடையாது. அதற்கு வேண்டிய பலம் நம்மிடம் இல்லை.

குழந்தைகள் தானாகவே சிரிக்கும். தானாகவே அழும். ஆனால் எதற்கு அழுகிறது என்று மற்றவர்களுக்குத் தெரியாது. சாப்பாட்டிற்காக அழுகிறதா, தூக்கத்திற்காக அழுகிறதா, வலி பொறுக்கமுடியாமல் அழுகிறதா என்பது ஒன்றும் தெரியாது. தகப்பனுக்குக் கூட தெரியாது. ஆனால் தாய்க்குக் குழந்தை அழுவது எதற்காக என்பது தெரியும். குழந்தைக்கு வேண்டியதை உடனுக்கு உடன் தாய் செய்வாள்.

குழந்தை 'அழ அழ' மற்றவர்களுக்கு எரிச்சலாக இருக்கும். குழந்தை அழாமலே இருந்தால் மற்றவர்களுக்குச் சந்தோஷமாக இருக்கும்.

தாயின் காரியம் அப்படி அல்ல. குழந்தை 'அழ அழ' தாயின் மனம் குழந்தையை நோக்கி எப்படிப் பாயுமோ, அப்படியே, குழந்தை அழாமல் இருந்தாலும் குழந்தையை நோக்கி ஓடும். 'ஏன் அழவில்லை, அதன் உடம்பிற்கு என்ன, ஒன்றும் விளங்கவில்லையே, என் குழந்தைக்கு என்னவோ, ஏதோ'' என்று குலை பதறுவாள் தாய்.

காரணம் என்ன? எப்பொழுதும் தாயானவள் குழந்தை மயமாகவே இருக்கிறாள்.

கடவுளும் அப்படித்தான், பேரண்டம் முழுவதும் அவருடைய குழந்தை. பேரண்டத்தில் உள்ள அவ்வளவும் அவருடைய குழந்தைகள்தான். அவர் தாயாக இருக்கிறார். எப்பொழுதும் குழந்தை ஞாபகமாகவே இருக்கிறார்.

உண்மையை உணர்ந்து, கடவுளை நினைத்து அனுபவிப்பவர்கள் ஞானிகள். அவர்களுடைய உள்ளத்தோடு உள்ளமாக இருந்து கொண்டே அமிர்த ஊற்றுப் போலப் பொங்குகிறார் கடவுள். ஆனந்தமயமாய் அவர்களைக் கரையவைத்து விடுகிறார் கடவுள்.

உன்னை
உள்குவார் உள்ளத்(து)
உறுசுவை அளிக்கும் ஆர்
அமு தே

என்று நினைந்து நினைந்து மயங்குகிறார் மாணிக்கவாசகர்.

பாரத தேசத்தைப் புண்ணிய பாரத பூமி என்கிறோம். அதிலும் தமிழ்நாட்டை பக்தி விளையும் ஞானபூமி என்கிறோம். காரணம் என்ன? பல ஆயிர வருடங்களாகவே மனிதனோடு மனிதனுக்கு உள்ள உறவைப் பக்தி பூர்வமாகப் பேணிக் காப்பாற்றிவந்திருக்கிறது பாரத தேசம்.

உறவு முறையை நன்றாக அனுபவித்தவர்கள் நம் முன்னோர். மாணிக்கவாசகரும் அபாரமாய் அனுபவித்திருக்கிறார்.

கடவுளை அப்பா என்று கூப்பிடுகிறார், அம்மா என்று கூப்பிடுகிறார், அம்மையப்பா என்றுங் கூப்பிடுகிறார். அம்மானே என்றும் பாசத்தோடு பல இடங்களில் கூப்பிடுவார்.

அம்மாவுடன் பிறந்தவருக்கு அம்மான் என்று பெயர். அம்மாவின் (தன்மை) கருணை அப்படியே அவரிடம் இருக்கும். அதனால் அம்மான் என்றே வந்துவிட்டது பெயர்.

திருத்தமான கரைகளோடு கூடிய தடாகங்கள் நிறைந்த திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் எழுந்தருளியிருக்கும் 'அப்பனே' என்று கூப்பிடுகிறார் மாணிக்கவாசகர்.

'என் அப்பனே' என்று பாசத்தோடு இறைவனை அழைக்கிறார் மாணிக்கவாசகர். அழைத்து என்ன சொல்கிறார். உன்னை

நினைத்து உருகி நான் கூப்பிட்டால். என்னைத் தேடி நீ வருவாயா? வந்து என்னை ஏற்றுக் கொள்வாயா? இல்லை. யாரப்பா இவன்? நம்மைத் தொந்தரவு பண்ணுகிறான். என்று உறவில்லாத படி தள்ளிவிடுவாயா? அப்படி என்னைத் தள்ளிவிடக் கூடாது! என் அப்பனல்லவா நீ என்று மன்றாடுகிறார்.

பாடலின் முழு உருவத்தையும் இனிப் பார்க்கலாம்.

''துப்பனே தூயாய்
தூய வெண் நீறு
துதைந்தெழு துளங்கொளி
வயி ரத்(து)
ஒப்பனே உன்னை
உள்குவார் உள்ளத்(து)
உறுசுவை அளிக்கும்ஆர்
அமு தே
செப்பமாம் மறைசேர்
திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்த(ம்)மே
விய சீர்
அப்பனே அடியேன்
ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு
ளா யே'' (115)

எல்லாம் ஒன்று என்றும் உண்மையை உணராத பேதைமையி லிருந்து பிறந்தவை. காமம், குரோதம், லோபம் என்னும் மூன்றும்.

மேலே குறிப்பிட்ட மூன்றுந்தான் மனிதனுக்கு உண்மையான பகை. இந்த மூன்று எதிரிகளும் மனிதனைத் தந்திரமாக வளைத்து சிறையில் (முப்புரங்களில்) அடைத்து விடுகின்றன.

இந்த மாயச் சிறையை இறைவனுடைய கருணைதான் கொளுத்திச் சாம்பலாக்குகிறது. அதன் பிறகே மனிதன் விடுதலை பெறுகிறான். மாணிக்க வாசகர் அப்படி விடுதலை பெற்றவர்.

அவர் சொல்வதைப் பாருங்கள்:

---

(செப்பம்-திருத்தம். மறை-கரை)

மெய்யனே! விகிர்தா!
மேருவே வில்லா
மேவலர் புரங்கள்மூன்(று)
எரித் த
கையனே!

மரணம் என்றால் மனிதன் பதறி விடுகிறான். எப்பேர்ப்பட்ட மனிதனும் பதறிவிடுவான். எதிரிகளை நிர்மூலமாக்கின சூராதி சூரனும் பதறி விடுகிறான். எத்தனையோ பேர்களின் நோயைக் குணப் படுத்தியவனும் பதறுகிறான். வந்தவர்களுக்கெல்லாம் பலன் கூறிய சோதிடனும் பதறி விடுகிறான். 'செத்துப் போவோமே' என்று நினைத்து விட்டால் மன்னாதி மன்னனும் புழுவாய்த் துடித்து விடுகிறான்? "கடவுளாவது ஒன்றாவது; கடவுள் இருந்தால் என் எதிரில் வரட்டும் பார்த்துக்கொள்கிறேன்" என்று சவால் விடுகிறவனும், செத்துப் போவோம் என்பதைத் தெரிந்தால் பயந்து போகிறான்.

மரணமானது மனதைக் கசக்கிப் பிழிந்து நரகமாக்கி விடுகிறது. பயம் என்கிற ஒன்றை உண்டாக்கி அதைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்திக் கொள்கிறது. அப்பப்பா அந்தப் பயம் படுத்துகிற தொல்லையைக் கணக்கிட முடியுமா?

ஒருபெண் ஒரு குழந்தைக்குத் தாயாகப் போகிறாள். மாதம் எட்டாகி விட்டது, ஒன்பதாவது மாதமும் பிறந்தாகி விட்டது. ஒன்பதாவது மாதம் முடியப்போகிறது, பெண்ணை வேதனை யானது பிசைந்து கசக்குகிறது. சேதம் ஏற்பட்டு விடக் கூடாதே என்று பயப்படுகிறாள். இறந்து போவோமே என்று கலங்குகிறாள். அவளை மட்டுமல்ல, அவளுடைய கணவனை, தாயை, தகப்பனை, சகோதர, சகோதரிகள் எல்லோரையும் வாட்டி வறுத்தெடுத்து விடுகிறது பயம்.

ஒப்புக்கு நிம்மதியாக இருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு வரையும் கசக்கிப் பிழிந்து கொண்டிருக்கிறது பயம்.

இந்த பயமும் வேதனையும் நரகமும் எப்படி வந்தன. நாம் வேறு, மற்றவை வேறு என்னும் பேதைமையிலிருந்து வந்தன.

எல்லாம் கடவுளின் காரியம் என்பது விளங்கி விட்டால் போதும். எல்லாம் இன்பமயமாகி விடும். பிறப்பும் இறப்பும்

ஆனந்தமயமான நாடகமாகி விடும். பயம் வாலாட்டாது. அதை எட்டி உதைத்து விட்டது போன்ற பெருமித உணர்ச்சியே வந்து விடும் நமக்கு.

எமனையே காலால் எட்டி உதைத்து மார்க்கண்டேயருடைய பயத்தைச் சிவபெருமான் போக்கி விட்டார் என்று நம்மவர்கள் அலங்காரமாய் இதைச் சொல்லி இருக்கிறார்கள்.

ஒரு மனிதன் நான்கு பேரிடம் கடன் வாங்கி இருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். வாங்கிய கடனை சொன்னபடி கொடுக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். யாரிடம் கடன் வாங்கினானோ அவர்களைக் கண்டு பயப்படுவான். கடனை நினைத்துக் கலங்குவான். கடன் வாங்கித்தான் ஆகவேண்டி இருக்கிறது என்று ஏற்பட்டால் யாரை நினைத்தாலும் பயப்படுவான்.

கடன் பாக்கி ஒன்றும் இல்லை என்று ஏற்பட்டு விட்டால் எல்லோரும் நண்பர்களாகி விடுவார்கள் மனிதனுக்கு.

நம்முடைய கடமையை நாம் பாக்கி இல்லாமல் செய்துவிட்டால் பிறகு ஏது பயம்? முதல் கடமை "நாம் தனியல்ல" என்னும் உண்மை உணர்ச்சிதான்.

பிறப்பிலும் இறப்பிலும் மனித குலத்திற்கு ஒரு தெளிவு ஏற்பட்டு விட்டால் போதும். ஒரு நிச்சயம் ஏற்பட்டு விட்டால் போதும். வாழ வாழ வாழ்க்கை இன்பமாக இருக்கும்.

ஒவ்வொன்றிலும் 'நாம் தனி, நாம் தனி' என்று கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறோம் நாம். எமனோ! "அப்படி இல்லை, அப்படி இல்லை" என்று கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறான். அவன் கணக்கை முடிப்பதற்குள்ளாக நாம் உண்மையை உணர்ந்து விட வேண்டும். எல்லாம் கடவுள் மயம் என்று தெரிந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் குபீர் என்று நம்மை ஒரு தட்டுதட்டி, அவனுடைய வலையில் விழவைத்து விடுவான் எமன் என்கிறார் நக்கீர தேவர்.

கணக்கிட்டுக் கொண்டிருக்கும்
காலனார் நம்மை
வணக்கி வலைப்படா
முன்னம்; — பிணக்கின்றிக்,

காலத்தால் நெஞ்சே!
கயிலாய(ம்) மேவிய சீர்
சூலத்தான் பாதம்
தொழு.

மாணிக்கவாசகரோ நான் கடவுள்மயம் என்று கணக்கைத் தீர்த்தவர். எமனுடைய கணக்கு அவரிடம் பலிக்கவில்லை.

காலால் காலனைக் காய்ந்த...

செய்யனே—என்று உற்சாகத்தோடு இறைவனைக் கூவி அழைக்கிறார் மாணிக்கவாசகர்.

இனிப்பாடல் முழுவதையும் பார்ப்போம்.

மெய்யனே! விகிர்தா!
மேருவே வில்லா
மேவலர் புரங்கள் மூன்(று)
எரித் த
கையனே! காலால்க்
காலனைக் காய்ந்த
கடுந்தழல் பிழம்பன்ன
மே னிச்
செய்யனே! செல்வத்
திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்த(ம்)மே
விய சீர்
ஐயனே! அடியேன்
ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு
ளா யே! (116)

பாடல்கள் இரண்டும் அற்புதமான சிருஷ்டிகள். தெய்வகடாட்சம் என்று சொல்வதன் உண்மைப்பொருள், பாடல்களைப் பாடப் பாட விளங்கும்.

---

(பிணக்கு இன்றி—நான் வேறு அவன் வேறு என்னும் பேதம் இல்லாமல்)

# கருணைமயமான நீதி—கடவுள்

விடுதலை, விடுதலை என்று சொல்லிக் கொண்டே இருக்கிறோம். எதிலிருந்து விடுதலை? என்பதைமட்டும் நாம் யோசிப்பதில்லை. யோசனையே அற்றுப்போன காரணத்தால் ஒரே முழக்கத்தோடு கூப்பாடு போடுகிறோம்.

பிறவியிலிருந்து விடுதலை! மாயப்பிறப்பிலிருந்து விடுதலை! என்று தானம் வைத்துப் பல்லவியே பாடுகிறோம்.

பிறவாமைக்கு முயல்கிறேன், இறவாமைக்கு முயல்கிறேன் என்பது அபத்தம். அபத்தம் மட்டும் அல்ல. பெரிய மோசடியுங் கூடத்தான்.

சட்டையைக் கழற்றித் தொங்கப்போடலாம். சிறிது நேரம் சட்டை வேறு நாம் வேறு என்று விடுதலையும் பெறலாம். உடம்பை அப்படிக் கழற்றி ஒன்றில் தொங்கப் போட முடியுமா? முடியாதே! அப்புறம் எப்படி விடுதலை அடைவது? எதிலிருந்து விடுதலை பெறுவது?

உடம்பைவிட்டே நம்மால் விடுதலை பெற முடியாது. உள்ளத்தை--அதாவது உணர்ச்சியைவிட்டு விடுதலை பெற்று விட முடியுமா? நம்முடைய அறிவு நம்மை என்ன பாடுபடுத்துகிறது? ரொட்டிக்கு மாவைப் பிசைவதைப்போல நம்மையே பிசைந்து பிசைந்து நமட்டுகிறது நம்முடைய அறிவு.

உடம்பைவிட்டு விடுதலை பெற முடியாது. அறிவை விட்டும் நம்மால் விடுதலை பெற முடியாது. அப்படி இருக்க, உலகத்தை விட்டுத்தான் ஓடவிட முடியுமா? ஒன்றுமே முடியாது நம்மால்.

பொருளே இல்லாமல் விடுதலை விடுதலை என்று கத்திக் கொண்டிருக்கமட்டும் முடியும்.

உண்மையான விடுதலை எங்கிருக்கிறது? உலகத்தோடு, மனிதர்களோடு, வாழ்க்கையோடு நெருங்கி நெருங்கி ஒட்டுவதில் இருக்கிறது. ஒதுங்கி ஓடுவதில் இல்லை.

மனிதப் பிறவிதான் நல்லது செய்யச் சாதனம். மனிதப்பிறவி இல்லாமல் நல்லது செய்ய முடியாது. இது விளங்கிவிட்டால், பிற வியிலிருந்து விடுபட வேண்டும் என்னும் நினைப்பு எப்படிவரும்? மனிதப்பிறவி வேண்டும்—அது ஒன்றே வேண்டும் என்னும் ஆசை தான் ஊறும்.

மற்றவர்களுக்கு நல்லது செய்யவேண்டும், செய்து கொண்டே இருக்கவேண்டும் என்னும் ஆசை வந்துவிட்டால், மேலும் மேலும் புதிய புதிய ஆற்றலோடு மனிதப்பிறவி எடுக்க வேண்டும் என்னும் வேகம் உண்டாகும். அப்படியானால், இறப்பதிலும் ஆனந்தந் தான். பிறப்பதிலும் ஆனந்தந்தான்.

ஆணவத்திலிருந்து மனிதன் விடுதலை பெறவேண்டும். விடு தலை பெறப்பெற அவன் உள்ளத்தில் கருணை ஊறும். கருணை யானது நீதியாகப் பிரகாசிக்கும்.

அருள்சுரக்கும் அறவோனாக மனிதன் பக்குவப்படவேண்டும். மாணிக்கவாசகர் அப்படிப் பக்குவப்பட்டவர்.

இல்லாவிட்டால், எங்கும் நிறைந்த பரம்பொருளை 'நீதியே' என்று அழைக்கமுடியுமா? திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருக்கிற ஆதிநாதனை மாணிக்கவாசகர் எப்படி உரிமை கொண் டாடிக் கூப்பிடுகிறார் என்று பாருங்கள்.

> "நீதியே! செல்வத்
> திருப்பெருந் துறையின்
> நிறைமலர்க் குருந்த(ம்)மே
> விய சீர் — ஆதியே"

நீதியைப் பற்றிய உணர்ச்சியே மனிதர்களிடம் இல்லாமல் போய்விட்டது. அதனால் என்ன பாடுபடுகிறது உலகம்? அக்கிரமங் களாய்ப் பெருகிவிட்டன உலகில்.

உலகம் முழுவதும், உலகின் ரத்தம் முழுவதுமே நஞ்சாய்ப் போய்விட்டது. என்ன கொடுமை வேண்டுமானாலும் செய்யக் கூசுவதில்லை.

அப்புறம் நீதியை எங்கே தேடுவது?

நீதி பற்றிய உணர்ச்சி சிருஷ்டிகர்த்தாவுக்கே இல்லை என்றால் காக்கும் கடவுளுக்கே இல்லை என்றால், மனிதர்களைப் பற்றி என்ன சொல்ல? ஒரே சிரிப்பாய் இருக்கிறது மாணிக்கவாசகருக்கு. சிரிப்போடு சிரிப்பாய் வருகிறது தமிழ். எப்படி?

பங்கயத்(து) அயனும்மால்
அறி யா
நீதியே! செல்வத்
திருப்பெருந் துறையின்
நிறைமலர்க் குருந்த(ம்)மே
விய சீர்
ஆதியே!

இது சம்பந்தமாக ஒரு கதை. பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் திமிர் வந்துவிட்டது. யாருடைய காரியம் பெரியது என்று சிவ பெருமானிடமே வழக்கு வந்து சேர்ந்தது.

ஜோதிமயமாக ஆகாயத்துக்கும், அதலபாதலத்துக்கும் நின்றார் சிவபெருமான். "என் முடியையோ, அடியையோ பார்த்து விட்டு முதலில் வருகிறவர்தான் பெரியவர். பின்னால் வருகிறவர் சிறியவர்தான்'' என்று சொல்லிவிட்டார் சிவபெருமான், ஆண்டாண்டு காலமாய் தேடிப்போனார்கள். அடியும் தென்பட வில்லை. முடியும் தென்படவில்லை. வெறுமனே திரும்பினார்கள் என்பது கதை.

கதை புராணக்கதைதான். அதனுள் பொதிந்து கிடக்கும் உண்மை உலகின் மனப்போக்கை அப்படியே கையில் எடுத்துக் காட்டுகிறது.

பிரம்மாவிற்குகூட, ஏன் மகாவிஷ்ணுவுக்குக் கூட நீதியோடு தோய்ந்து நிற்கமுடியவில்லை. பதவி ஒன்றைத்தான் அவர்களும் இறுகப் பற்றிக்கொண்டு நிற்கிறார்கள்.

நாம் வெறும் கருவிதான். நம் எல்லோருக்கும் மூலமாய் ஒரு நியதிதத்துவம் இருக்கிறது. எல்லாம் ஒன்றுதான். ஒரே கடவுள் முயந்தான் என்னும் உணர்ச்சி அவர்களுக்கே இல்லை,

எளிமைக்கும் எளிமையானது தான் உண்மை. நீதியும் அப்படித்தான். ஆனால் கடுமைக்கும் கடுமையாக, இருட்டுக்குள் புதைத்து வைத்தது போல், உண்மையையும் நீதியையும் ஒளித்து வைத்துவிட்டது உலகம். இந்த அதிசயத்தை

"...பங்கயத்(து) அயனும் மால்
அறி யா
நீதியே!"

என்று எக்களிப்போடு கூவி அழைக்கிறார் மாணிக்கவாசகர்.

முதலில் பேதம் மறைய வேண்டும். நான் என்னும் முனைப்பு விலகி நிற்கவேண்டும். அப்போழுதுதான் கடவுள் தரிசனம் கிடைக்கும். எல்லாம் கடவுள் மயம் என்பது விளங்கும்.

சின்னஞ்சிறிய புல்லானாலும் சரி, அளப்பரிய நட்சத்திரம் ஆனாலும் சரி. எல்லாம் கடவுளின் அம்சந்தான்.

ஒரே ஜோதி மயமாக இருக்கிறார் கடவுள். ஆயிரக்கணக்கான விளக்குகளில் அந்த ஜோதியைக் கொண்டு பற்ற வைக்கலாம். ஒரே ஒரு ஜோதி பல்லாயிரக்கணக்கான விளக்குகளில் திரிகளில் பொருந்தி தனித்தனியாகப் பிரகாசிக்கும்.

விளக்குகளைத் தனித்தனியாகப் பார்த்தால் வெவ்வேறாகத் தோன்றும். ஆனால் "ஒரே ஜோதியில் முளைத்தெழுந்த வெளிச்சந்தான்" என்று பார்க்கிற பொழுது ஒன்றாகவே தெரியும்.

கடவுளும் அப்படியே ஒன்றாக இருக்கிறார். அண்டபிண்ட சராசரங்கள் என்று பலவாகவும் இருக்கிறார்.

எல்லாம் கடவுள் மயம் என்று தெளியவேண்டும். தெளியத் தெளிய இறைவனின் அருள் பிரவாகமாகப் பொங்கி நீதி மயமாக ஜொலிக்கும்.

திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் எழுந்தருளி இருக்கும் பெருமான், மாணிக்கவாசகருக்குக் காட்சி கொடுத்து அருள் பாலிக்கிறார்.

ஒரே ஜோதி மயமாய், கருணைக்கடலாய் காட்சி கொடுக்கிறார்.

மாணிக்கவாசகர் பார்த்துப் பார்த்துப் பரவசத்தில் திளைக்கிறார். மாணிக்கவாசகரின் ஆனந்த பரவசம் எப்படி பாடலாய் வருகிறது என்று பாருங்கள்.

தானன தனன
தானன தனன
தனன தனன
தா ன)

''சோதியே! சுடரே!
சூழ்ஒளி விளக்கே!
சுரிகுழல்ப் பணைமுலை
மடந் தை
பாதியே! பரனே!
பால்கொள்வென் நீற்றாய்!
பங்கயத்(து) அயனும்மால்
அறி யா
நீதியே! செல்வத்
திருப்பெரும் துறையில்
நிறைமலர்க் குருந்த(ம்)மே
விய சீர்
ஆதியே! அடியேன்
ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு
ளா யே'' (117)

காணாதவற்றை எல்லாம் கண்டு தெளிந்தவர் மாணிக்கவாசகர் கண்டு அனுபவிக்க அனுபவிக்க அவரிடம் எக்களிப்புப் பொங்கு கிறது. மாணிக்கவாசகரின் எக்களிப்பும் பெருமிதமும் வார்த்தை களாய், தாளங்களாய் இசையில் குதித்தோடி வருகின்றன. தமிழ்க் கவியாய் குதித்தோடி வருகின்றன.

எது வளர்கிறதோ இல்லையோ! அறிவு வளர்ந்து கொண்டே இருக்கிறது. எப்பொழுதிருந்து அறிவு வளர்ந்து கொண்டிருக் கிறது என்று சொல்வது கஷ்டம். மனிதன் தோன்றியதிலிருந்து வளர்ந்து கொண்டே இருக்கிறது அறிவு.

அன்போடு சேர்ந்து அறிவு இயங்குமானால், மூளை வேறு உடம்பு வேறு என்று தனித்தனியாக ஒதுங்காது. ஒன்றுக்கு ஒன்று சம்பந்தம் இல்லை என்று சொல்லும் அளவுக்கு மூளையும்' உடம்பும், விலகி நிற்கின்றன. அப்படி விலகிப்போவதால், உழைப்பவர்கள் அடிமை ஆகிவிட்டார்கள். ஆராய்ச்சிக்காரர் களும், வியாக்யானப் புலவர்களும் அதிகாரிகள் ஆகிவிட்டார்கள்.

அதிகாரிகள் என்ன செய்தார்கள்? எல்லோருக்கும் பொதுவான உண்மையை மறைத்தார்கள். தங்களுக்கே உடைமை என்று அறிவைச் சொந்தம் கொண்டாடினார்கள். மற்றவர்கள் திகைக்க வேண்டும், மயங்க வேண்டும், திக்கு முக்காட வேண்டும், என்பதற்காக; அறிவை எங்கெங்கோ கொண்டு போய் ஒளித்து வைத்தார்கள். ''சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி'' என்னும் பழமொழிக்கு விளக்கம் கொடுப்பது போல, தெளிந்த சுத்தமான உண்மையை, கலக்குக் கலக்கென்று கலக்கினார்கள். மற்றவர்கள் குழப்பம் அடையவேண்டும். குழப்பம் காரணமாக, தங்களை நாடி அவர்கள் ஓடிவர வேண்டும் என்பதற்காகவே கலக்கினார்கள். கலக்குகிற கலக்கையே தத்துவம் தத்துவம் என்று கூப்பாடு போட்டார்கள்.

எல்லாமே இவர்களுக்குத் தத்துவந்தான். நின்றாலும் தத்துவந்தான். உட்கார்ந்தாலும் தத்துவந்தான். ஒருவன் செழிப்பாக இருந்தாலும் அதற்கு ஒரு தத்துவத்தைச் சொல்வார்கள். துன்பத்தில் விழுந்து, அவன் தவியோதவி என்று துடிக்கிறான், என்று வைத்துக் கொள்வோம். அப்படித் துடித்துத் தவிப்பதற்கும் ஒரு தத்துவத்தைச் சொல்லிவிடுவார்கள். தத்துவம் இல்லை என்றால் இவர்களுக்கு மூச்சு நின்றுவிடும்.

தத்துவம் ஒவ்வொன்றும் கனகச்சிதமாக இருக்கும். ஏற்றமோ இறக்கமோ தோன்றாதபடி, ஒவ்வொரு காரியத்தோடும் பொருந்தி நிற்கும்படி, தத்துவங்களை இவர்கள் அவிழ்த்து விடுவார்கள்.

உணர்ச்சியோடு சேர்ந்து அறிவு பரிமளிக்குமானால் இந்த அலங்கோலம் எல்லாம் உண்டாகுமோ? உணர்ச்சியானது - அதாவது அன்பு, உண்மை என்று சொல்கிற காரியம் எல்லாம் மெள்ள மெள்ள அறிவை விட்டு நகர்ந்துவிட்டன. அவற்றை நகர்த்திவிட்டு அறிவு மட்டும் மளமளவென்று வளர்ந்தது.

வளரவளர கல்லாகிவிட்டது அறிவு. அறிவானது ஒரே பாறையாய்ப் போன பிறகு அதனிடம் என்ன இருக்கும்? மரியாதை இருக்குமா? பக்தி தான் இருக்குமா? இரண்டும் இல்லாத இடத்தில் ஒருமை உணர்ச்சி எப்படி இருக்கும்? வெட்கம் மானம் என்பதெல்லாம் ஏட்டளவில்தான். காரியத்தில் ஒன்றுமே இல்லை.

வாழ்க்கையில் ஒன்றுமே இல்லாவிட்டால் - அதாவது மனிதனிடம் ஒன்றும் இல்லாவிட்டால், பிறகு கடவுளிடம் என்ன

இருக்கும்? அவரும் மனிதனைப்பார்த்து, 'வெறும்மேனி அம்மணம் போட்டுக்கோ சம்மணம்'' என்று கையை விரித்துவிடுவார்.

புத்தியே இல்லாமல் அறிவு அறிவு என்று ஒரு போதையில் கிறங்கிக் கிடக்கிறோம் நாம். இந்த உண்மை தெரிந்துவிட்டால் போதும்! மின்வெட்டுப்போல் பளிச்சென்று இந்த உண்மை தோன்றி மறைந்தாலே போதும்! ஒரு தடவை தோன்றி மறைந்தாலே போதும்! போதை இறங்கிவிடும்.

மூளைக்கு உடனே விடுதலைதான்.

பொய், பித்தலாட்டம், கொடுமை எல்லாம் கரைந்துவிடும். கரைந்து அப்படியே அடித்துப் புரண்டு ஓடிவிடும். மனம் உண்மையாய்ப் பிரகாசிக்கும். உணர்ச்சிமயமாய் ஜொலிக்கும். எல்லாம் ஒன்று என்று நிறையும். அப்படி நிறைந்த இடத்தில் நின்றல்லவா சிற்பரநாதன் (இறைவன்) வெளிப்படுவான்? நம்முள் இருந்து நாம் காண வெளிப்படுவான்.

அல்லாத பட்சம் நாமும் வேறுதான். சிற்பரநாதனும் வேறுதான். இது சம்பந்தமாகத் திருவுந்தியார் பாடல்களில் இரண்டைப் பார்க்கலாம்.

உள்ளம் உருகி
உடனாகில் அல்லது - :
தெள்ள அரியன்என்(று)
உந்தீப ற;
சிற்பர நாதன்என்(று)
உந்தீப ற;

பொதி கட்டியது போல மூடி இருக்கிறது புஷ்பம். தாழ்ப்பாளும் திறவுகோலும் இல்லாத ஒரு அதிசயப் பூட்டால் பூட்டி, மூடி வைத்திருக்கிறது புஷ்பத்தை. நேரம் ஆகஆக அதாகவே விம்மும். அதாவது வீங்கும். குறிப்பிட்ட நேரம் வரவும் விரியும்.

விரிவது என்றால் எப்படி? ஒவ்வொரு இதழாக அவிழும், சுண்டிச்சுண்டி ஒவ்வொரு இதழாக அவிழும். மனதை முடிக்கட்டிப் போட்டிருக்கிற ஆணவமும் அப்படி அவிழ வேண்டும். வெறும் அறிவைக் கொண்டு அவிழ்க்க முடியாது. உணர்ச்சிமயமான அறிவைக் கொண்டே முடிச்சுகளை அவிழ்த்துவிட வேண்டும். முடிச்சுகள் அவிழ அவிழ தொல்லைகள் விலகும். உண்மையானது பக்தியாய் மணக்கும். பேரின்பமாய்ப் பெருகும்.

இது சம்பந்தமாக இன்னொரு திருஉந்தியார்.

அவிழ இருக்கும்
அறிவுடன் நின்றவர்க்(கு)
அவிழும்இவ் அல்லல்என்(று)
உந்தீப ற
அன்றி அவிழா தென்(று)
உந்தீப ற;

அறிவின் காரியம் எல்லாம் மற்றவர்களைப் பயமுறுத்துவதும், அதிகாரம் பண்ணுவதுந்தான். அதனால் யாதொரு பிரயோசன. மும் இல்லை.

பிரயோசனம் வேண்டுமானால்—அதாவது ஆனந்தமாய் இருக்கவேண்டுமானால், உள்ளத்தில் அருள் சுரக்கவேண்டும். முண்டு முடிச்சுக்களைக் களைந்தெறிந்து, மேடு பள்ளங்களை சமப் படுத்தி மனதை ஆரோக்கியமாய் வைக்கவேண்டும். பேதங்கள் மறைந்து ஒன்றுபட்டு ஆனந்தத்தில் திளைப்பது அப்பொழுது தான்.

ஆனால் மனிதனுடைய காரியம் நேர்மாறாக இருக்கிறது. அறிவையே நம்புகிறான். அது ஒன்றையே தீட்டித்தீட்டிக் கூர்மை யாக்குகிறான். மனச்சாட்சி மேலும் மேலும் மழுங்கிவிடுகிறது.

மனிதனுக்கு மனிதனைவிட ஆனந்தமான வஸ்து உலகில் வேறு உண்டா? இல்லை. ஆனால் நாம் பார்ப்பது என்ன? மனி தனுக்குமனிதன்தான் பிரச்சனையாகவளர்வதைப் பார்க்கிறோம். மனிதனைக் குண்டுக்கட்டாகக் கட்டவேண்டும். செந்தூக்காகத் தூக்கவேண்டும். அட்லாண்டிக் சமுத்திரத்தின் மத்தியிலோ, காங் கோக்காடுகளின் நடுவிலோ வீசி எறிந்து விடவேண்டும். நாதி இல்லாமல் தவிப்பான். கடவுளே! என்னைக் காப்பாற்றும் என்று கதறுவான். அப்படிக் கதறுவது என்னத்திற்கு? பழையபடி மனி தனோடு வந்து சண்டை போடுவதற்குத்தான்.

இத்தகையமன்பதைக் கூட்டத்துக்குள்தான் மாணிக்கவாசகர் இருக்கிறார். அலைகடல் மத்தியில் தூக்கி எறியப்படவில்லை அவர். ஆனாலும் கொந்தளிக்கும் நடுக்கடலில் தூக்கி எறியப்பட்டு அநாதையாய்த் தத்தளிப்பது போலத் தவிக்கிறார். காரணம் என்ன? சுற்றி உள்ள மனிதர்கள் எல்லாம், ஆணோ, பெண்ணோ, வயோதிகனோ, வாலிபனோ எல்லோருமே குஸ்தி பயில்வான் களாகத்தான் திரிகிறார்கள். நிம்மதியாய் ஆனந்தமாய் வாழ்க்கை யில் திளைப்பவர்கள் இல்லை.

மாணிக்கவாசகர் நிலையோ தனி. உண்மை மயமாய்—உணர்ச்சிமயமாய் திளைக்கிறவர் மாணிக்கவாசகர். அணுவுக்குள்ளிருந்து அண்டவெளி முழுவதும் ஆனந்தமயமாய் இருக்கிறது. மாணிக்கவாசகருக்கு. இறைவனுடைய சொரூபமாகவே எல்லாம் இருக்கிறது. அப்படியானால் மாணிக்கவாசகர் தனிதானே? கொந்தளிக்கும் கடலில் சிக்கி, கரைகாணாது தவிக்கும் அநாதையாகி விட்டார் மாணிக்கவாசகர்.

இந்நிலையில் இறைவன் என்ன செய்யவேண்டும்? "அப்பா மாணிக்கவாசகா! பயப்படாதே. இதோ நான் இருக்கிறேன். இப்படிக்கொஞ்சம் ஏறிட்டுப்பார். இதுதான் பேரின்பமாகிய உண்மை நெறி—அதாவது திருக்கயிலாயத்துக்கு வரும் அற்புதநெறி. என் கையைப் பிடி. என் பின்னே என்னைத் தொடர்ந்து வா. ஏன்? கவலைப்படுகிறாய்" என்று மாணிக்கவாசகருக்கு இறைவன் கை கொடுக்கவேண்டாமா?

"இறைவன் அப்படிக் கைகொடுக்கவில்லையே! ஏன்? என்ன விநோதம்?" என்று கேட்கிறார் மாணிக்கவாசகர். இறைவனிடமே நேருக்குநேர் நின்று, விசாரணை செய்வதுபோல் கேட்கிறார் மாணிக்கவாசகர். எப்படி?

"அலைகடல் அதனுளே நின்று,...
பொருந்தவா கயிலை புகுநெறி
இதுகாண்
போதராய் என்றருளாயே"

எம்பெருமானே! குருந்த மரத்து நிழலில் நீர் அமர்ந்திருந்த கோலத்தை அப்படியே அள்ளி அள்ளிப் பருகினேன். கருணைமழை பொழிந்த அந்த ஆனந்தக் கோலத்தை என்னால் மறக்கமுடியுமா? அதையே எண்ணி எண்ணி உருகுகிறேன்.

உருகி உருகிக் கரையும் எனக்குப் புகலிடம் காட்ட வேண்டாமா நீ? இனிப் பாடல் முழுவதையும் பார்ப்போம்.

"திருந்துவார் பொழில்சூழ்
திருப்பெருந் துறையில்,
செழுமலர்க் குருந்தம்மே
விய சீர்!
இருந்தவா(று) எண்ணி,
ஏசறா நினைந்திட்(டு)
என்னுடைய எம்பிரான்
என்றென் று,

அருந்தவா நினைந்தே,
ஆதரித்(து) அழைத்தால்,
(அலைகடல் அதனுளே
நின் று
பொருந்தவா; கயிலை
புகுநெறி இதுகாண்
போதராய்) என்றரு
ளா யே! (118)

மாணிக்கவாசகருக்கு நன்றாய்ப் பழகிய இடந்தான் திருப் பெருந்துறை. அடிக்கடி திருப்பெருந்துறைக்கு வருவார். வாரக் கணக்கில், மாதக்கணக்கில் திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகர் தங்குவார்.

குருந்த மரங்களும், அவற்றில் பூத்துக் குலுங்குகிற மலர் வனங்களும் மாணிக்கவாசருக்கு ஆறுதல் கொடுக்கின்றன. தண் ணிழல் பரப்பி சுகந்த வாசனையை ஊட்டிவிடுகின்றன. மாணிக்க வாசகர் உள்ளம் சிவமணமாய்க் கமழ்கிறது.

"திருந்துவார் பொழில்சூழ்
திருப்பெரும் துறையில்ச்
செழுமலர்க் குருந்தம்மே
விய சீர்!'!

என்று கவியின் முகப்பில் வந்து நிற்கின்றன. குருந்த மரங்களும் புஷ்பங்களும். தாளத்தோடும் இசையோடும் சேர்ந்து தமிழ் வார்த்தைகள் கூத்தாடுகிறதைக் கவியில் பார்க்கலாம். அற்புத மான பாடல்.

---

திருந்துவார் பொழில்சூழ்—கொத்தித் திருத்தப்பட்ட பெரிய பெரிய நந்தவனங்கள். அழகிய காடாகச் சூழ்ந்து கிடக்கிற திருப்பெருந்துறை. குருந்தம் மேவிய சீர்-குருந்தமர நிழலில் அமர்ந்திருக்கும் செல்வனே! சீராளனே! (சீர்-சீராளன்) ஏசறா நினைந்திட்டு-விடாமல் தொடர்ந்து நினைந்து. அருந்த (ஆ) நினைந்து - அள்ளிப் பருக ஆசைப்பட்டு.

# எங்கோ தொலைந்தது
# எங்கோ கிடைத்தது

நண்பர் ஒருவர். பி. ஏ. பி. எல் வரை தேறி இருந்தார். வழக்கறிஞராக இருந்தார். வருமானம் காணவில்லை. வட்டார நீதிபதி (மாவட்ட முன்சீப்) பதவிக்கு ஆள் எடுக்கிற குழுமுன் ஆஜரானார். கேட்ட கேள்விகளும் சொன்ன பதில்களும் எங்கோ எட்டாத தூரத்தை நோக்கி நின்றன. வழக்கு, விசாரணை, தீர்ப்பு இவை பற்றி நேரடியாக ஒன்றும் இல்லைதான்.

நண்பருக்கு நீதிபதி வேலை கிடைக்கவில்லை. ஏமாற்றமாய்ப் போய்விட்டது காரியம்.

வழக்கறிஞராக இருந்துகொண்டே அரசியலில் ஈடுபட்டார். அரசியலை மனதில் வைத்தே பலரோடு பழகினார். உற்ற நண்பர் போல எல்லோருடனும் நடந்து கொண்டார்.

எதிர்பாராத விதமாகப் பொதுத் தேர்தல் வந்தது. ஒரு கட்சி இவரை சட்டமன்ற உறுப்பினராக நிறுத்தியது. தேர்தலில் வெற்றி பெற்றார். அமைச்சரானார். தேசத்தலைவர்கள் கூட்டத்தில் அவரும் ஒருவராகிவிட்டார்.

உயர்நீதிமன்ற நீதிபதிகள். உச்சநீதிமன்ற நீதிபதிகள் கூட அவரை மதிக்க ஆரம்பித்து விட்டார்கள். உபசரித்துப் புகழ ஆரம்பித்து விட்டார்கள். சாதாரண மக்களைப் பற்றிச் சொல்ல வேண்டியது இல்லைதானே? அரசியல் அப்படி நிற்கட்டும். இனி. பல தலைமுறைகளாக ஒரு குடும்பம் வளமாக இருந்தது. முதலாளி வீடு என்றுதான் சொல்வார்கள். எப்படியோ செல்வம் முழுவதும்

போய்விட்டது. வறுமையைத் தாங்க முடியாமல் ஊரைவிட்டே ஓடிவிட்டார் முதலாளி. நாடுவிட்டு நாடு- கண்ணுக்கு எட்டாத தூரம் போய்விட்டார். அங்கு ஒரு கடையில் வேலை பார்த்தார். பல ஆண்டுகள் வேலைக்காரராகத்தான் இருந்தார். சாயப் பொருள்தான் வியாபாரம்.

ஒரு வகை மரப்பட்டையிலிருந்து சாயப் பவுடர் உண்டாக்க லாம் என்பதைக் கண்டுபிடித்தார். உண்டாக்கியும் விட்டார். கண்ணுக்குக் குளுமையாய் இருந்தது சாயம். தொனிப்பாகவும் இருந்தது. வர்ணமும் வனப்பும் இயல்பாய் இருக்கிறது என்று புகழ் பெற்றுவிட்டது தொழில். லட்சக்கணக்கில் சம்பாதித்து விட்டார், வேலை ஆளாக வந்தவர்!

பழைய செல்வத்தைவிடப் பலமடங்கு செல்வத்துக்கு அதிபதி யாகி விட்டார் மனிதன்.

காவிரி ஆற்றில் விட்ட ஒருநகை கங்கை ஆற்றில் குளிக்கும் போது கிடைத்தது போல உலகில் பல காரியங்கள் இப்படி நடக் கின்றன.

எட்டி யோசித்துப் பார்த்தால், ஒரு காரியத்துக்கு மூலமான காரணம் எங்கோ எட்டாத தூரத்தில் இருக்கிறது தெரியவரும்.

மாணிக்கவாசகர் எதை எதையோ படித்தார். ஆராய்ச்சி பண்ணினார். சமுதாய நிர்வாகத்தில் திறமையோடு செயல்பட் டார். ராஜ்ய பரிபாலனத்தில் நிபுணராக இருந்தார். போர்க் கலையின் நுட்பத்தை உணர்ந்து தளகர்த்தராகவும் செயல்பட்டார். உயர்ந்த போர்க் குதிரைகளைத் தேர்ந்தெடுப்பதில் மாணிக்க வாசகர் இணையில்லாதவராய் இருந்தார். அரசியலிலும் போர்த் துறையிலும் சிக்கிய மாணிக்கவாசகர். அறிவுத் துறையிலும் சிக்கி உழன்றவர்தான். ஆனாலும் எதிர்பாராவிதத்தில் எல்லாவற் றையும் உதறி எறிந்துவிட்டார்.

திருப்பெருந்துறையில் எல்லாவற்றையும் விட்டார். அப்படியே தலயாத்திரையை மேற்கொண்டு ஒவ்வொரு ஊராக வருகிறார்.

திருக்கழுக்குன்றம் வந்துசேர்ந்தாரோ இல்லையோ! இன்பமய மான ஆனந்த சரம்ராஜ்யத்துக்கு அதிபதியாகிவிட்டார் மாணிக்க வாசகர். அனுபவத்தை இறைவனிடமே சொல்கிறார், மாணிக்க வாசகர் எப்டீ என்று பார்க்கலாம்.

(தான தன்னன
தான தன்னன
தான தன்னன
தான தன்)

பூணொ ணாததோர்
அன்பு பூண்டு
பொருந்தி நாள்தொறும்
போற்ற வும்;
நாணொ ணாததோர்
நாணம் எய்தி,
நடுக்க டலுள்
அழுந்தி, நான்
பேணொ ணாதபெ—
ருந்து றைப்பெரும்
தோணி பற்றி
உகைத்த லும்
காணொ ணாத்திருக்
கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக்
குன்றி லே. (119)

உண்மையாகவே இறைவனிடம் அன்பு வைத்து விட்டார். உணர்ச்சிமயமாகவே அன்பு வைத்து விட்டார். அது உலக நடப்புக்கு மாறுபட்ட செயல்தான். அதாவது, யாரும் செய்யத் துணியாத காரியந்தான். பூணொணாத அன்புதான். அந்த அன்பில் திளைத்தார் மாணிக்கவாசகர். அதில் ஊறி ஊறித் திளைத்தார் மாணிக்கவாசகர். அதாவது அன்பில் ஊறித் திளைப்பதே காரியம் ஆகிவிட்டது மாணிக்கவாசகருக்கு. (அன்பு பூண்டு பொருந்தி நாள்தொறும் வைகினார்)

---

(பூணஒணாததோர் அன்பு பூண்டு - பொதுவாக மக்கள் அன்பு வைக்கிறது தங்கள் மேல்த்தான். அதற்காகவே தங்களைச் சேர்ந்தவர்கள் மேலும் தங்களுடைய உடைமை மேலும் அன்பு வைக்கிறார்கள். இவைகளுக்கு அப்பால் அன்பு போவது இல்லை தான். நான் என்பது இல்லை என்று கண்டு, அதன்மூலம் கடவுள் மேல் அன்பு வைக்கிறது சாதாரண காரியம் இல்லை. மாணிக்க வாசகர் கடவுளிடமே அன்புவைத்து விட்டார்.)

நாணஒணாததோர் நாணம் எய்தி நடுக் கடலுள் அழுந்தி - இடை இடையே மாணிக்கவாசகருக்கு ஞாபகம் வருகிறது. நாம் என்ன செய்கிறோம் என்றிம் உணர்வு வருகிறது. உலகம் முழுவதும் "நான், நான் என்றும், எனக்கு, எனக்கு என்றும் ஓடிக்கொண்டிருப்பதை மாணிக்கவாசகர் பார்க்கிறார். அப்பொழுது தான் மட்டும் ஒரு ஓரமாக விலகி நிற்பது தெரிகிறது. வெட்கம் வந்து விடுகிறது மாணிக்கவாசகருக்கு. வெட்கமும் நாணமும் தலையை நிமிர விட மாட்டேன் என்கிறது. கடல் பொங்குவது போல் ஆனந்தமானது பொங்கி உள்ளத்துள் வந்து பாய்வதால், நான் என்பது உருகிக் கரைகிறது. கண்ணை விழிக்க முடியவில்லை. தலையைத் தூக்க முடியவில்லை.

திருப்பெருந்துறையில் எல்லாவற்றையும் விட்டுவிட்டார். நான் என்பதே போய்விட்டது. மிச்சம் கிச்சம் ஒன்றும் இல்லை. திருக்கழுக்குன்றம் வருவதற்குள் எல்லாம் அவராகிவிட்டார். கடவுளும் மாணிக்கவாசகரும் வேறு வேறு அல்ல. ஒன்றுதான் என்று ஆகிவிட்டது.

# தில்லையில் நின்றேன் எல்லையைக் கண்டேன்

நம் அறிவுக்கு எட்டிய காரியங்கள் சில. எட்டாத காரியங்கள் பல. அவ்வளவு காரியங்களும் ஒரு ஒழுங்கின் படியே நடக்கின்றன.

ஒழுங்கு என்பது ஒன்றுதான், எல்லாவற்றையும் அந்த ஒன்றே நடத்திக் கொண்டிருக்கிறது. அண்டபிண்ட சராசரம் எவ்வள வென்று யாரால் அளந்து சொல்லமுடியுமா? அவ்வளவும்—ஒவ்வொன்றும் நம் கண்ணுக்கு ஒவ்வொருவிதமாகத் தெரிகின்றன. தாறுமாறாகவே தெரிகின்றன. ஆனால் அவ்வளவிற்கும் அடிப் படையாய் இருப்பது ஒரே ஒரு ஒழுங்கு தான்.

இந்த ஒழுங்கையே நியதி தத்துவம் என்கிறோம். கடவுளின் அருள் என்கிறோம். கடவுள்என்றும் சொல்கிறோம், நியதி தத்து வத்தின் அற்புதத்தைப் பார்க்கப்பார்க்க ஒரேபடியாய் ஆனந்தம் மேலேமேலே பொங்கும். அந்த ஆனந்தத்தில் ஆணவமானது ஒதுங்கும். கொஞ்சம் கொஞ்சமாக ஆணவம் கரையவும் செய்யும்.

நியதி தத்துவத்தை மட்டும்-பார்க்கக்கூடாது. அதை மட்டும் தனிமைப்படுத்திப் பார்த்தால் அது வெறும் கணக்காகவே தெரியும். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்று கண் ணாம்பொத்தி விளையாடும் கணக்கு.

நியதி தத்துவம் அண்டபிண்ட சராசரங்களாய் விளைந்து கொண்டிருக்கிற கோலத்தைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கப் பார்க்க ஆனந்தமாக இருக்கும்.

கடவுளின் அருள், கோடான கோடிதத்துவங்களாகத் தோன்று கிற கோலத்தை மாணிக்கவாசகர் அனுபவிக்கிறார். அத்தனை கோலங்களையும் நடத்திக் கொண்டிருக்கிற அற்புதத்தையும் அனு பவிக்கிறார்.

அவருடைய அதிசயம் தமிழ்வார்த்தைகளாய் தாளம் போட்டு வருகிற தோரணையைப் பாருங்கள்.

பூதங்கள் ஐந்தாகிப்
புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்
பேதம்இலாப் பெருமையனை

விசாலமான பெரிய மாளிகை ஒன்று, மாடங்களும் கூடங்களும் உப்பரிகைகளும் அதில் நிறைந்துள்ளன. அரண்மனை போல இருக் கிறது மாளிகை. நிலாமுற்றங்களும் தர்பார் ஹால்களும் பல உள்ளன மாளிகையில்.

மாளிகையைப் பார்க்கிறவர்கள் அப்படியே திகைத்துவிடு கிறார்கள். மாளிகையின் ஒவ்வொருபகுதியையும் ஒவ்வொரு அம் சத்தையும் பார்த்துப்பார்த்து அதிசயப்படுகிறார்கள். பார்க்கப் பார்க்கப் புதுமையாக இருப்பதால், மாளிகையை விட்டுப்போக ஒருவருக்கும் மனம் வருகிறதில்லை. மாளிகையைக் கட்டி முடித் தார்களே கொத்தர்களும், தச்சர்களும்! அவர்கள்கூட மாளிகை யைப் பார்த்துப் பார்த்து அதிசயப்படுகிறார்கள்.

'இப்படி இப்படி மாளிகையை கட்டவேண்டும்' என்று பிரபு ஒருவர் சொன்னார். கொத்தர்களுடைய மனதில் அப்படியே மாளிகையானது ஏறி உட்கார்ந்து கொண்டது.

கொத்தர்கள் செய்தகாரியம் எல்லாம் மனதில் இருந்த மாளி கையை வெளியில் கொண்டு வந்து நிறுத்தியதுதான், அப்படி நிறுத்துவதற்குச் செங்கல், மணல், மரம், சாந்து முதலியவை உதவின. செங்கல் முதலிய ஒவ்வொன்றையும் ஒவ்வொரு அளவில்-கணக்கில் உபயோகித்தார்கள். இனி, செங்கல் முதலிய வற்றை எடுத்துக்கொண்டாலும், அவற்றிற்கு மூலமாகிய நீர்' வெப்பம் முதலிய தத்துவங்கள் குறிப்பிட்ட அளவில்-கணக்கோடு இணங்கி நிற்பது தெரியும்.

கண்ணால் பார்க்கிற பொருளும்சரி, பாக்கமுடியாத பொருளும் சரி, எல்லாமே ஒரு கணக்கிற்கும் ஒழுங்கிற்கும் இணங்

கியே நிற்கின்றன. கணக்கு இல்லாமல் எதுவும் இல்லை. ஆனால் கணக்கைமட்டும் பார்ப்பதோடு நின்றுவிடக்கூடாது கணக்குக்குக் காரணமாக இருக்கிற அற்புதத்தைப் பார்க்க வேண்டும்.

இனி, பேரண்டம் முழுவதும் நிறைந்து நிற்கிற நியதியானது பஞ்சபூதங்களாக விளைந்திருக்கிறது. ஐம்புலன்களோடு கூடிய அறிவுத் தத்துவமாகவும் விளைந்திருக்கிறது. ஒன்றினுக்கொன்று சம்பந்தமே இல்லை என்று சொல்லும்படி எட்டாதபடி விலகி நிற்கும் கோடானு கோடி வஸ்துக்களாகவும் விளைந்திருக்கிறது. எத்தனை எத்தனை காரியங்களாக அது தோன்றினாலும், அப்படியே இருக்கிறது அது. கூடுவதும் இல்லை. குறைவதும் இல்லை. உயர்வதும் இல்லை, தாழ்வதும் இல்லை. இந்த அற்புதத்தைக் கடவுள் என்று சொல்கிறோம். கடவுளின் திருவருள் என்று சொல்கிறோம். கடவுளின் திருவிளையாடல் என்றும் சொல்கிறோம்.

விடிவே இல்லையோ என்று இருளில் தவித்துக்கொண்டிருந்த மனிதனுக்குச் சூரியன் உதித்து வருகிறதைப் பார்க்கிறபொழுது ஆனந்தமாக இருக்கும். அவனை அழுத்தி வைத்திருந்த இருள் விலக விலக அவனுக்குப் பேரானந்தமாக இருக்கும். சூரியப் பிரகாசத்தைப் பார்த்துப் பார்த்து இன்புறுவான். அந்தப் பிரகாசத்தில் தன்னையும், தன்னைச் சுற்றி உள்ளவற்றையும் பார்த்துபார்த்து இன்புறுவான்.

மாணிக்கவாசகருக்கும் அப்படி ஒரு இன்பவெறி. கடவுளுடைய திருவருளையும் திருவிளையாடலையும் பார்த்துப்பார்த்து இன்புறுகிறார். கடவுளுடைய திருவருளைக் கடவுளாகவே பார்த்து அவர் அனுபவிக்கிறார்.

கேதங்கள் கெடுத்தாண்ட
கிளர்ஒளியை மரகதத்தை

என்று கூப்பாடு போட்டு அரற்றுகிறார். கதறிக்கதறி ஆனந்தக் கண்ணீராய்க் கரைகிறார் மாணிக்கவாசகர். மாணிக்கவாசகரை உருக்குவதற்கு இறைவன் மூர்த்தியாய் எழுந்தருளி இருக்கிறான் கோவிலில்.

கடவுளே கோவிலில் மூர்த்தியாக எழுந்தருளியிருக்கிறார் என்று பார்க்க வேண்டும். அலங்காரம் பண்ணியும் பார்க்க வேண்டும். ஆராதனையோடும் பார்க்கவேண்டும். மேளதாள முழக்கத்தோடும் பார்க்கவேண்டும். மனதைக் குழைத்துக்

குழைத்துப் பிசைந்து விடுகிற பாடல்களின் முழக்கத்தோடும் பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கிறதன் காரணமாகவே மனம் கனியும். பக்தியோடு மூர்த்தியை வழிபட்டு அனுபவிக்க அனுபவிக்க, கடவுள்த் தத்துவம் தெரியும். இறுதி இல்லாதபடி எங்குமாய்-எல்லாமாய் வியாபித்திருக்கிற கடவுளின் திருவிளையாடல் அப்பொழுது தெரியும்.

மூர்த்தியின் பின்னால் இருக்கிற தத்துவ உண்மை மனதை உருக்கிவிடும்.

மாணிக்கவாசகர் அப்படி அனுபவிக்கிறார் இறைவனை. பாடலின் முழு உருவத்தையும் இனிப் பார்ப்போம்.

(தானான தானான
தானான தானான

பூதங்கள் ஐந்தாகிப்
புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்
பேதம்இலாப் பெருமையனை
கேதங்கள் கெடுத்தாண்ட
கிளர்ஒளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும்
விளங்குதில்லை கண்டேனே. (120)

அற்புதமான பாடல். பாடலைப் பாடப் பாட நாவுக்கு ருசி ஏறிக் கொண்டே இருக்கும். பக்தி, தமிழ், சங்கீதம், நடனம் அவ்வளவும் கரைந்துபாடலாய் உருவெடுத்திருக்கிறது. பாடிக்கொண்டே இருக்க வேண்டும். நம்முடைய மனம், உணர்ச்சி முழுவதும் தூய்மை பெற்றுவிடும். சிவமணம் கமழும் நறுமலராகப் பூத்துவிடும்.

எவ்வளவு பெரிய காரியத்தைச் சாதித்து விடுகிறது தமிழ்ப் பாட்டு?

2

கலிபோர்னியாவின் மேற்குக் கரையிலிருந்து சிங்கப்பூரின் கிழக்குக் கரைவரை இருக்கிற நீர்ப்பரப்பு முழுவதையும் பசுபிக் சமுத்திரம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். கொஞ்சம் யோசித்துப்பார்த்தால், உலகம் முழுவதையும் சுற்றி வளைத்துக் கிடக்கிற அத்தனை சமுத்திரங்களும், கடல்களும், வளைகுடாக்

களும், ஏன், பசுபிக் மகாசமுத்திரம் உள்ளிட்ட எல்லா நீர்நிலை களும் ஒரே சமுத்திரந்தான். ஒரே தண்ணீர்தான். நம்முடைய சௌகர்யத்திற்காக வேறு வேறு பெயர் வைத்திருக்கிறோம்.

இனி, பேரண்டம் முழுவதும் கடவுள் மயந்தான். உயிர் உள்ளன, உயிர் இல்லன அவ்வளவும் கடவுள்மயந்தான். மனிதர் கள் என்றால் அவ்வளவுபேரும் ஒன்றுதான். வேறுபாடு எப்படி இருக்கமுடியும்? கண், காது, மூக்கு முதலிய பல அங்கங்கள் சேர்ந்ததுதான் உடம்பு இதில் ஏதாவது ஒரு அங்கம், 'நான் வேறு உடம்பு வேறு' என்று நினைத்தால் அது பொருத்தம் ஆகுமா?

மனித சமுதாயத்தில் 'நாம் ஒரு அங்கம்தான். எந்த வகையில் பார்த்தாலும் தனித்த வஸ்துவாக நான் என்பது இல்லை' இதை இயல்பாகவே மனிதன் தெரிந்திருக்கவேண்டும்.

இது தெரிந்தால் அல்லவா எல்லா உயிரும் கடவுள்மயம் என்பது விளங்கும்? பேரண்டம் முழுவதும் கடவுள்மயந்தான்-தனித்தநிலையில் ஒன்றும் இல்லை என்பதுவிளங்கும்? அதன்பிறகு தான் நாம் என்பதாக ஒன்றும் இல்லை. இருப்பதாகத் தெரிவ தெல்லாம் வெறும் தோற்றந்தான் என்பதுவிளங்கும்.

உண்மை உணர்ச்சி இல்லாமல், 'எல்லாம் கடவுள் மயம்' என்று ஒருவன் சொல்லும் போதே, 'நான் மட்டும் தனி' என்பதை அவன் உறுதிசெய்து கொள்கிறான். பிறகு, அவன் தனியாகவே இருந்துவிடுகிறான். உலகம் அதுபாட்டுக்குப் போய்க் கொண்டே இருக்கிறது.

எல்லாம் கடவுள் மயம் என்று வலையை வீசுகிறவன், தனக்கும் கடவுளுக்கும் இருக்கிற இடைவெளியைப் பார்க்கவேண்டும். தான் கடவுளோடு ஒன்ற - கடவுள் தன்னோடு ஒன்ற பாடுபடவேண்டும். குறுக்கே இருக்கிற தடைகளை அகற்ற முயற்சிக்க வேண்டும். குறுக்கே கிடக்கிற தடைகள் என்னென்ன என்பதை உணர்ந்தாலே போதும், அவை விலகி வழிவிடும். தடைகளே என்னவென்று தெரியாமல் - அவற்றைப் பற்றி யோசிக்காமலே, நாமும் கடவுளும் ஒன்று என்று புலம்புவதில் பிரயோசனம் உண்டா?

ஆனால் மனிதனுடைய காரியமோ தனி. 'எல்லாம் கடவுள் மயம்' என்பதைத் தெரிந்துவிடக் கூடாதே! அது விளங்கிவிட்டால் நம் கதி என்னாகுமோ! என்று பயப்படுகிறான். அதற்காகவே சாதி, மதம், குலம், கோத்திரம் என்பவற்றைக் கட்டிப் பிடித்துத் தொங்குகிறான்.

ஒவ்வொன்றையும் வெவ்வேறாக நினைத்து சஞ்சலப் படுகிற மனிதன், யாரைத்தான் தன்னவராக நினைப்பான்? யாரையும் அவனால் ஒன்றாகப் பாவிக்க முடியாது.

மனைவி, மக்கள், உற்றார்,உறவினர், நண்பர்களைப்பார்க்கிற பொழுதுகூட, 'நான் வேறு' என்று தன்னைத் தனிமைப்படுத்தித் தானே பார்க்கிறான்? அவர்களுடன்கூட ஒன்ற முடியாதவன் மனிதன்! அப்படி ஒன்ற முடியாதபடி என்னென்னவோ அவனைச் சுற்றி வளைத்து மடக்கிப் போட்டிருக்கிறது.

மனிதர்களின் அவல நிலையை - பேதைமையை மாணிக்க வாசகர் பார்த்துவிட்டார்.

பேதைமையும், மயக்கமும் சேர்ந்து வெறுப்பாக விளைகிறது - மனிதர்களிடம். அந்த வெறுப்பிலிருந்தே பயம் உண்டாகிறது. வெறுப்பும் பயமும் மனிதனைத் தனிமைப்படுத்தி விடுகின்றன. நாதியே இல்லாதபடி அவனை ஒரு அநாதை (ஆதம் இலி) யாக, தனிப்படுத்தி விடுகிறது.

அவ்வளவுதான். துடிதுடித்துப் போனார் மாணிக்கவாசகர். வெறுப்பையும், பயத்தையும் பற்றி மாணிக்கவாசகர் தெரியத் தெரிய அவை இரண்டும் அவரை விட்டு விலகி விடுகின்றன.

பரிபூரண சுதந்திர புருஷராய் உண்மையை உணர்ந்து ஆனந்தத்தைக் கொட்டுகிறார் மாணிக்கவாசகர்.

எப்படி என்று பார்ப்போம்.

சாதிகுலம் பிறப்பென்னும்
சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதம்இலி நாயேனை;
அல்லல்அறுத்(து) ஆண்டுகொண்டென்
பேதைகுணம் பிறர்உருவம்
யான்எனதென் உரைமாய்த்துக்
கோதில் அமு - தானானைக்
குலாவுதில்லை கண்டேனே. (121)

---

(குலம் - குடும்பம். பிறப்பு - இன்னார் மகன், இன்னார் பேரன். இன்னார் மருமகன், இன்னாருக்கு இப்படி இப்படி நெருக்கம், என்று தொடர்பு காட்டித் தனிமைப்படுத்துகிற வேற்றுமை. ஆதம் இலி - நாதியற்றவன். அல்லல் - துன்பம். கோதுஇல்-குற்றம் இல்லாத.

தமிழ்நாடு என்றால் கோவிலும் கோபுரமும் ஒவ்வொரு ஊரிலும் வானளாவி நிமிர்ந்து நிற்கும். "எல்லையில்லாத பேரின்பத்திற்குப் போகும் வழி இதுதான்" என்று கம்பீரமாகக் காட்டிக் கொண்டு நிற்பதைப் போல அவை ஒவ்வொன்றும் ஒய்யாரமாக நிற்கும். உலகில் எந்தப் பகுதியிலும் இப்படி ஒரு அற்புதத்தைப் பார்க்கமுடியாது.

மாணிக்கவாசகர் தமிழ்நாடு முழுவதையும் பார்த்தவர்தான். ஒவ்வொரு இடத்திலும் இருந்த கோவிலுக்கும் அவர் போனார். அங்கங்கு எழுந்தருளியிருக்கும் மூர்த்தியை வழிபட்டார். பரவசத்தில் திளைத்தார்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருப்பூந்துருத்தி என்னும் தலத்திற்கும் மாணிக்கவாசகர் போனார். மூர்த்தியை வழிபட்டு வணங்கினார். அபிஷேகத்தோடும் அலங்காரத்தோடும் இறைவன் இருந்து அருள்பாலிப்பதை அனுபவித்தார். அந்தக் காட்சி அவர் மனத்தைவிட்டு நீங்கவே இல்லை. பார்த்துப் பார்த்து உருகினார்· மாணிக்கவாசகர்.

சிலநாள் சென்றன, மாணிக்கவாசகர் சிதம்பரம் வந்தார், நடராஜமூர்த்தியைத் தரிசித்தார். திருப்பூந்துருத்தியில் காட்சி கொடுத்த இறைவனே தனக்குமுன்கூட்டிச் சிதம்பரம் வந்து, தனக்காக ஆனந்தத் தாண்டவம் ஆடிக் கொண்டிருப்பதுபோல மாணிக்கவாசகருக்குப் பட்டது.

அந்த இறைவனே தன்னுள் கலந்துவிட்டது போலவும் தெரிகிறது. தன் இதயத்தில் - நினைப்பு முழுவதிலும் அவர் சப்பணம் போட்டு உட்கார்ந்து விட்டதாகவே இருக்கிறது. தன்னுடைய எண்ணம் ஒவ்வொன்றையும் சிக்கெடுத்து, கசடு முழுவதையும் அகற்றி, அவரே புனிதப்படுத்துவதாகத் தோன்றுகிறது.

கருணாகரமூர்த்தியாகிய கடவுள் தன் தேகம் முழுவதும் - சதையின் ஒவ்வொரு அணுவிலும், ஆனந்தமயமான அமிர்தத்தை மழைபொழிவது போலப் பொழிந்து, எலும்பின் ஒவ்வொரு துளையிலும் பாய்ச்சுவது போலவும் தெரிகிறது.

கடவுளுடைய கருணைதான் மாணிக்கவாசகரை ஊர்ஊராய் அழைத்துக்கொண்டு போகிறது. வழிபட வைக்கிறது. பரவசத்தில் திளைத்து ஆனந்தமயமாய், கரையவும் உருகவும் வைக்கிறது.

இப்படி அனுபவிக்கிறார் மாணிக்கவாசகர்.

அனுபவம் தமிழோடு கலந்து முழக்கம் இடுகிறதைப் பாருங்கள்.

உருத்தெரியாக் காலத்தே
உள்புகுந்தென் உளம்மன்னி,
கருத்திருத்தி, ஊன்புக்கு
கருணையினால் ஆண்டுகொண்ட,
திருத்துருத்தி மேயானைத்,
தித்திக்கும் சிவபுரத்தை,
அருத்தியினால் நாய்அடியேன்
அணிகொள்தில்லை கண்டேனே! (122)

---

(உளம் - மனம், கருத்து. இருத்தி-நிலையில்லாமல் அங்கும் இங்கும் பாயும் எண்ணத்தை நிலையாக நிற்கவைத்து. ஊன்புக்கு - உடம்பில் ஒவ்வொரு அணுவிலும் புகுந்து. அருத்தியினால்- ஆசையால்)

# ஒன்றும் இல்லை என்பதுதான் என்னிடம் உள்ளது

மனிதர்களுக்கு ஆயுள் எழுபது வருஷம் எண்பது வருஷம் என்று போகிறது. நூறு வயது வரை வாழ்நாளை ஓட்டுகிறவர்களும் உண்டு. அதற்கு மேலும் ஐந்து வருடம் பத்து வருடம் என்று ஒரு சிலருக்கு ஆயுள் நீண்டு கொண்டு போகிறதும் உண்டுதான்.

மனித உடம்பு இவ்வளவு காலத்துக்கு கொண்டு செலுத்துவது அற்புதந்தான்,

இத்தனை ஆண்டுக்காலம் இருந்தும் மனிதன் தெரிய வேண்டியதைத் தெரியாமலே இருந்து காலத்தைக் கழித்து விடுகிறான். அதுவும் பெரிய அதிசயந்தான்.

எதை எதையோ பற்றிப் பேசுகிறான். அளந்து கொடுப்பது போல ஒவ்வொன்றுக்கும் விபரம் சொல்லுகிறான். நிறுத்துக் காட்டுவது போலவே ஒன்றோடொன்று ஒட்டாதபடி பிரித்து வைக்கிறான். சமுத்திரத்தைப் பற்றிச் சொல்கிறான். மலையைப் பற்றிப் பேசுகிறான். அன்பைப் பற்றி அளந்து கொட்டுகிறான். பொறுமையைப் பற்றி மேடை ஏறிப் பிரசங்கமே பண்ணுகிறான். தலைவர்கள், தொண்டர்கள், சேக்காளிகள், சண்டை போடுகிறவர்கள் ஒருவரையும் அவன் விட்டு வைப்பதில்லை.

தூர தூர தேசங்களில் உள்ளவர்களைப் பற்றி எல்லாம் - கால வெள்ளத்தில் உருகிக் கரைந்து போன காரியங்களை எல்லாம் நம் கண்முன் கொண்டு வந்து காட்டுகிறான். அவன் நில் என்றால் நிற்கிறார்கள். உட்கார் என்றால் உட்காருகிறார்கள். அப்படி

வலைவீசிப் பிடிக்கிறான் சமாச்சாரங்களை. அடையாளம் இல்லாதவர்கள்கூட நேரில் வந்து ஆஜர் ஆகிறார்கள். அபிநயம் பிடித்து ஆடவே செய்கிறார்கள், ஆனாலும் மனிதன் தெரிய வேண்டியதைத் தெரியவே இல்லை. ஒன்றுகூடச் சரியாகத் தெரியாமலே போய்விடுகிறது மனிதனுக்கு.

ஒன்றுமே தெரியாமல் - குழைத்து வைத்த களிமண்ணாகவே இருந்தோம் நாம். அப்படி இருந்த நம்மை மெள்ள மெள்ளக் கண்ணைத் திறந்து 'அது' 'இது' என்று காட்டியவர்கள் தாயும் தந்தையுமே.

அவர்கள் எவ்வளவு அன்பு வைத்து நம்மை வளர்த்து ஆளாக்கினார்கள்? நம்மை அவர்கள் வளர்த்தது அன்பு மயமாகவே! நாம் நன்றாக வளர்வதற்காகவே கோபித்தார்கள். அரட்டினார்கள், மிரட்டினார்கள். அதுமட்டுமா? அன்பின் காரணமாகவே பொறுமை காட்டினார்கள். கருணை காட்டினார்கள் உதவினார்கள். கஷ்டப்பட்டார்கள். உயிரைக் கொடுத்து நம்மைக் காப்பாற்றினார்கள்.

மளமளவென்று வளர்ந்தோம். அது இது என்று படித்தோம் பட்டம் பெற்றோம். அங்கும் இங்கும் போய் வந்தோம். திருமணம் செய்தோம். குடும்பம் நடத்தினோம். பேரன் பேத்தி எல்லாம் எடுத்து பொட்டணம் கட்டிப் புறப்படுவதற்கும் தயாராகி விட்டோம்.

ஆனாலும் தந்தை தாய் இவர்களுடைய அன்புதான் அருள். அதுதான் தெய்வம், அந்த அருளுக்கு இந்த உலகில் எதுவும் நிகர் இல்லை என்பது விளங்காமலே போய்விடுகிறது.

அவர்களுடைய யோசனை, புத்திமதி, இவற்றுக்கு மேற்பட்ட ஞானம் ஒன்றும் இல்லை. என்பதும், அவர்கள் எளிதாக அப்போதைக்கப்போது சொல்லிக் கொடுக்க விஷயங்களை நாம் சரியாக வாங்கிக் கொள்ளவில்லை என்பதும், தெரியாமலே போய் விட்டது, எதை எதையோ படித்தோம். புத்தியைப் போட்டு அலட்டிக் கொண்டோம். எத்தனையோ ஆண்டுகளாகப் படித்து ஆராய்ந்த விஷயங்கள் அவ்வளவையும் கழித்துப் பார்த்தால்,

அன்று நம் தாய் தந்தையர், உற்றார், உறவினர், சாதாரண மாகச் சொன்ன விஷயங்களாகவே அவை இருக்கின்றன அவற்றை மீறி ஒன்றையும் நாம் தெரிந்து விடவில்லை.

இதுவும் விளங்காமலே போய்விட்டது.

நமக்கு வேண்டியவற்றை எல்லாம் அவர்கள் பாடம் நடத்த வில்லை. நாம் சாப்பிடும் பொழுதும், தூங்கும் பொழுதும், விழிக்கும் பொழுதும், நடக்கும் பொழுதும், நிற்கும் பொழுதும், ஒன்றைப் பார்க்கும் பொழுதும். அதுவேண்டும் இது வேண்டும் என்று கேட்கும் பொழுதும், இது வேண்டாம் அது வேண்டாம் என்று விலகும் பொழுதும் நமக்கு இப்படி இப்படி என்று சொன்னார்கள்.

நாம் அதை விளங்கிக் கொண்டோமா என்பது பற்றிக்கூட அவர்கள் கவலைப்படவில்லை. நம்மிடம் உள்ளதை நம் பிள்ளை களிடம் கொடுத்து விடுவோம் என்றே சொன்னார்கள்.

மழை பொழிவது போல் இருந்தது அவர்கள் சொல்லிய ஒவ்வொரு சொல்லும். பருவம் அறிந்து பெய்துவிடும் மழை, அப்படியே நம்மிடம் தங்களைக் கொடுத்து விட்டார்கள் அவர்கள்.

ஆனாலும் இந்த உண்மை நமக்கு விளங்கவில்லை. ஏதோ நமக்கு அவர்கள் தேவை. இந்த அவசியத்தை வைத்தே அவர்களோடு சேர்ந்திருந்தோம். இது காரணமாகவே மரியாதை செய்தோம். மற்றப்படி அவர்களுடைய அருளையும் பெருந் தன்மையையும நாம் பார்த்துப் பரவசப்பட்டது இல்லை.

தாய் தந்தையர் சுற்றத்தார் இவர்களுடைய அருள் இன்னதென்றே தெரியாமல் ஓடி விடுகிறது வாழ்நாள். பெரும்பாலான மக்கள் அப்படியே காலத்தைக் கழித்துவிடுவார்கள். ஒன்றிரண்டு பேர் எப்படியோ காலம் போன காலத்தில் பார்க் கிறார்கள். அடடா எப்பேர்பட்ட அன்பு அவர்களுடைய அன்பு? எவ்வளவு பொறுமை? எவ்வளவு அடக்கம்? எவ்வளவு தியாகம் அவர்களிடம்? என்று கண்ணைத் திறந்து பார்க்கிறார்கள்.

பார்த்து என்ன செய்ய? பரவசப்பட்டுக் கரைவதற்கு மூல புருஷர்கள் இல்லை. அப்படி அந்திய காலத்தில் திறக்கிறது சிலருக்குக் கண்.

கண் திறந்து பார்த்தவுடன் எக்களிப்பு வரத்தான் செய்கிறது. கூடவே எக்களிப்பை விலக்கிக் கொண்டு ஏக்கம் வந்து நிற்கிறது.

பரிதாபத்துக்கு உரியதாய் நிற்கிறது உலகம். திமிர், பொறாமை, லோபித்தனம் எல்லாம் கழன்று போனபின்

உள்ளத்தில் மெள்ள மெள்ள அன்பு சுரக்கிறது. கண்ணைத்திறந்து உண்மையைப் பார்க்கிறது. பார்த்தவுடன் "அடடா, என்று சொல்லிவிட்டு பழையபடி கண்ணை மூடிக்கொள்கிறவர்கள் பலர். லட்சத்தில் ஒருவர் - கோடியில் ஒருவர் அப்படி மூடிக்கொள்ள மாட்டார். அந்த உண்மையையே பார்த்துப் பார்த்து உருகுவார். கரைந்து கரைந்து உண்மையோடு உண்மையாய்க் கலந்து பரிமளிப்பார்.

பார்வையை விட்டு விலகி அந்த அன்பும் அருளும் ஒதுங்கி னால்கூட இவர்களால் அதைத் தாங்க முடியாது, அதை இழுத்துக் கொண்டுவந்து கண்முன் நிறுத்துவார்கள். முன்னால் வைத்துப் பார்த்துப் பார்த்து அனுபவிப்பார்கள். தங்கள் காரியம் ஒவ்வொன்றோடும் அதைச் சேர்த்து வைத்தே பார்ப்பார்கள்.

அப்படி உண்மையை அனுபவிப்பதில் ஆறுதல் எவ்வளவோ கிடைக்கிறது அவர்களுக்கு.

இதுவரை உண்மை விளங்காமலே போய்விட்டதே? வாழ் நாளில் எவ்வளவு காலம் வீணாய்ப் போய்விட்டது என்று ஏங்குவார்கள்.

அப்படி ஏங்குவதிலும் தனியான ஆறுதல் ஒன்று இருக்கவே செய்கிறது.

மாணிக்கவாசகரும் ஏதோ கடைசிக் கட்டத்தில் தான் உண் மையைக் கண்ணாரக் கண்டு களித்திருக்கிறார். அதுவரை எங் கெங்கோ போனார். கோயில், குளம், தேர், திருவிழா, மூர்த்தி, அபிஷேகம், ஆராதனை எல்லாவற்றையும் கண்டுகளித்தவர்தான். அடியார்களோடு ஒவ்வொரு ஊராக—ஒவ்வொரு கோயிலாகப் போனார். கோபுரத்தைப் பார்த்தார். கூட்டத்தைப் பார்த்தார். ருத்ராட்சம், சடைமுடி, விபூதி, தியானம், ஆடல், பாடல் எல்லாம் இருந்தன. எல்லாவற்றையும் அனுபவித்தார். அடியார்களின் சொற்பொழிவு, விளக்கம், வினாக்கள், விடைகள் எல்லாம் மாணிக்கவாசகரைச் சுண்டி இழுத்துத் தன் வசமே வைத்துக் கொண்டன. எல்லாவற்றையும் உதறி எறிந்துவிட்டு ஞானம், பக்தி மூர்த்தி, வழிபாடு என்று போனவர்தான் மாணிக்கவாசகர்.

அவருடைய பக்தியில் யாதொரு பழுதும் இல்லை. ஊக்கமும் வேகமும் நிறைந்து எழுச்சியோடு நிமிர்ந்து நின்றது அவர் பக்தி,

ஆனாலும் பேரண்டம் முழுவதையும் நடத்திச் செயல்படுத்தும் பேருண்மையை கடைசியாகத்தான் கண்டார்.

தன்னோடு எப்பொழுதும் சேர்ந்திருக்கிற ஒவ்வொன்றிலும் அந்த ஒன்றே நிறைந்திருப்பதைப் பார்த்துவிட்டார்.

வானம், பூமி, எல்லாம் நிறைந்திருக்கிறது அந்த அற்புதம். அதுதான் சின்னஞ்சிறிய புல்லுக்குள்ளும் நிறைந்து நிற்கிறது. பசுவின் மடிக்குள்ளும் அது தான் நிறைந்திருக்கிறது. தன்னுள்ளும் அதுதான். தனக்கு வேண்டியவருள்ளும் அதுதான்; வேண்டாதவருள்ளும் அதுதான்.

வார்த்தையும் இறைவன்தான். செயலும் இறைவன்தான்' மனமும்இறைவன்தான். கஷ்டப்படுவதும்அவன்தான். சந்தோஷப்படுவதும் அவன்தான்.

அவனைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்பது வெட்ட வெளிச்சம் ஆகிவிட்டது மாணிக்கவாசகருக்கு.

உண்மையைப் பார்த்தவுடன் எக்களிப்பு வந்தது. கூடவே ஏக்கமும் வந்துவிட்டது. மாணிக்கவாசகருக்கு. அடடா! இவ்வளவு காலமும் வீணாய்ப் போய்விட்டதே! ஒன்றுமே தெரியாமல் போய்விட்டதே! அதை இதைத் தெரிந்து கொண்டதைப் போல ஏமாற்றியும் போய்விட்டதே''என்று மயங்கினார்'

முனபே இந்த உண்மை தெரிந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? என்று ஏங்கினார்.

எக்களிப்புக்குள் இருந்து வரும் ஏக்கத்துக்கு கவி உருவம் கொடுக்கிறது தமிழ்.

(தான தன்னன
தானன தன்னன
தான தானன
தன்)

கலந்து நின்அடி
யாரோ(டு) அன்று
வாளா களித்திருந்
தேன்;

புலர்ந்து போன
காலங்கள்; புகுந்து
நின்ற(து) டர்;பின்
னும்
உலர்ந்து போனேன்
உடையானே! உலவா
இன்பச் சுடர்காண்
பான்
அலந்து போனேன்;
அருள்செய்வாய் ஆர்வம்
கூர அடியேற்
கே. (123)

இந்த அரியபெரிய நுட்பத்தை அற்புதமாய் எடுத்துக் காட்டு கிறது தமிழ்.

எங்கெங்கோ போகிறோம். வருகிறோம். சில சமயம் வேக மாய் நடக்கிறோம். சிலசமயம் மெள்ள நடக்கிறோம். சிலசமயம் ஓட்டமாய் ஓடவும் செய்கிறோம். ஏறியும் போகிறோம். இறங்கி யும் போகிறோம். தாவிக் குதிக்க வேண்டுமா? தாவி விடுகிறோம். துள்ளிக்குதிக்க வேண்டுமானாலும் துள்ளிக் குதிக்கிறோம்.

---

(வாளா களித்திருந்தேன்—உண்மையைக் காண வேண்டும் என்னும் நினைப்பு இல்லாமலே காலம் கழித்துவிட்டேன். பிர யோசனம் இல்லாமலே போய்விட்டது. தடபுடலான வெற்றுரை யிலும் ஆரவாரத்திலுமே மூழ்கிப் போய்விட்டேன். புகுந்துநின்றது இடர் —அடடா! இப்படி ஏமாந்து போனோமே என்று உணர்வு தட்டுப்பட்டவுடன் என் பேதைமையை எண்ணி வருந்தினேன், உலர்ந்து போனேன்—அது என்னை வாட்டி வதக்கிவிட்டது. அலந்து போனேன்—இப்பொழுது உன்னைக் கண்ணாரக் காணத் துடிக்கின்றேன். இறைவனே! ஆர்வம் கூர அடியேற்கு அருள்செய் யாய் உடையானே—பெருமானே! என் ஆசை நிறைவேற என் கண்களை இன்னும் அகலத் திறந்து உன்னை எனக்கு நன்றாகக் காட்டு.)

குறிப்பு :— அற்புதமான பாடல். கடவுள் கொடுத்ததெல்லாம் உண்மையில் பார்க்கவில்லை'' என்னும் உணர்ச்சி தான் அது.

இவ்வளவையும் இந்தக் கால்கள் சமாளித்து விடுகின்றன. எப்படி எப்படியோ சாதித்து விடுகின்றன. அது எப்படி முடிகிறது என்பது நமக்குத் தெரியாது. கால்களுக்கும் தெரியாது.

இனி, நடக்கும்பொழுது காலை இவ்வளவு தூக்க வேண்டும்! இவ்வளவு நேரம் நிறுத்த வேண்டும்! பிறகு இவ்வளவு தூரம் கொண்டு போகவேண்டும்! இவ்வளவு அழுத்தத்தில் ஊன்ற வேண்டும் என்று நாம் தலையிட நேர்ந்தால் நடை ஒன்றும்வராது. எழுந்துநிற்கவே கால்கூசும். அதோடுநடந்தால் பிட்டிகழன்றுவிடும்.

நான்தான் அதிகாரி. என் விருப்பப்படியே அது செயல்பட வேண்டும் என்று சண்டித்தனம் பண்ணினால் ஒழிந்தது காரியம். எல்லாம் ஒழுங்காக நடக்கும் என்று விலகி நின்றால் போதும். பழுதே ஏற்படாது. சரியாகவே நடக்கும்.

உலகம் முழுவதும் சுற்றி அடிக்கிற காற்றை நம்மில் யாரும் தள்ளி விடுவது இல்லை. கங்கையிலும் காவிரியிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறபொழுது யாரும் பின்னால் நின்று தள்ளியா விடுகிறார்கள்? அவ்வளவு நீரும் தானாகப் போகிறது. மிக்க துணிச்சலோடும் வேகத்தோடும் பாய்ந்து ஓடுகிறது நீர்.

நான் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். பிறகு, தொடர்ந்து அதைச் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

தீர்மானித்ததும் நாம் அல்ல, இறைவன் தான் தீர்மானித்தான். செயல்படுவதும் நாம் அல்ல,''இறைவனுடைய செயல்தான் எல்லாம்'' என்று உண்மையைப் பார்க்கவேண்டும்.

ஒன்றும் பழுதுபடாது. எல்லாம் சரியாக வரும். மாணிக்க வாசகர் உண்மையைப் பார்த்து விட்டார். அனுபவிக்கிறார்.

(தான தான
தானா தன்
தான தான
தனனா தன்)

கூறும் நாவே
முதலா கக்
கூறும் கரணம்
எல்லாம் நீ;

தேறும் வகைநீ;
திகைப்பும் நீ;
தீமை நன்மை
எல்லாம் நீ;
வேறோர் பரிசிங்(கு)
ஒன்றில் லை,
மெய்ம்மை உன்னை
விரித்துரைக் கின்
தேறும் வகைஎன்
சிவலோ கா!
திகைத்தால் தேற்ற
வேண்டா வோ! (124)

---

(கூறும்நா—நாம் பேசுகிற வார்த்தை ஒவ்வொன்றும் இறைவன்தான். நாக்கும் இறைவன்தான். கூறும் கரணம் எல்லாம் நீ-மெய்வாய் கண் என்று எண்ணிச் சொல்கின்ற ஐம்புலன்களும் இறைவனே உன்மயந்தான் என்கிறார் மாணிக்கவாசகர். வேறுஓர் பரிசு இங்கு ஒன்று இல்லை—உன்னைத் தவிர வேறு எதுவும் இல்லை. உன்னை விரித்து உரைக்கின் தேறும் வகை என்—இந்த உண்மையை வியாக்யானம் பண்ணித்தான் தெரிய வேண்டுமா? உண்மைக்கு என்ன விளக்கம் வேண்டிக் கிடக்கிறது. திகைத்தால் தேற்றவேண்டாவோ—எம்பெருமானே!எல்லாம் உன் செயல்தான் என்னும் உண்மை மனதைவிட்டு மறைந்து விட்டால்—வேறு ஒன்றைப் பார்க்கிற மோகத்தில் உண்மையை நழுவ விட்டுவிட்டால், உடனே ஓடிவந்து ஞாபகப்படுத்த வேண்டாமா நீ! வேறு யார் எனக்கு உதவுவார்கள்? ஓடிவருவார்கள்?)

# காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளவேண்டும்

ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கிறோம். கல்யாணம் ஆகி மாப்பிள்ளையோடு பேசுகிறபொழுதுபெண்ணுக்கு வயது என்ன இருக்கும்? பதினைந்திலிருந்து இருபதுக்கு உள்ளே தான் வயது.

இருபது வயதுப் பெண் பெற்றோர்களை விட்டு விட்டு வேறொரு இடத்துக்குப் போகிறாள். போய்த் தங்கிவிடுகிறாள். நிரந்தரமாகக் குடித்தனம் நடத்திவிடுகிறாள் என்றால் அது ஊக்கமான காரியந்தான். தைர்யம், மனோதிடம் என்றெல்லாம் சொல்கிறோமே! அவற்றைப் பெண்களிடம் தெளிவாகப் பார்க்கிறோம்.

போன இடத்தில் எத்தனைப் பேரை ஒரு பெண் சமாளிக்க வேண்டி இருக்கிறது? எத்தனைப் பேர்களின் குணபாவத்துக்கு ஏற்றபடி அனுசரித்துப் போக வேண்டி இருக்கிறது? மாமியார், மாமனார், நாத்தனார், கொழுந்தன்மார், மச்சானமார், மற்றும் வயதான பாட்டன் பாட்டிமார் இவ்வளவுபேரும் ஆளுக்கொரு போக்கில் போகிறவர்கள் தாம். அவ்வளவு பேரையும் மனம் கோணாதபடி மதித்து உபசரித்துக் கொண்டு போவது எளிதல்ல.

மேலே சொல்லிய பேர்வழிகள் அப்படியும் இப்படியும் தொல்லைப்படுத்துவார்கள். மதிக்க மாட்டார்கள். மிரட்டுவார் கள். அவர்கள் செய்கிற தொல்லைகளைத் தாங்கிக் கொள்கிறாள் பெண். எளிதாகவே தாங்கிக் கொள்கிறாள். இனி, அவர்கள் செய்ய நினைக்கிற தொல்லைகளை நினைத்தாலோ குடல் பதறி விடும். அதையும் தாங்கிக் கொள்கிறாள் பெண்.

இவ்வளவுக்கும் மேலே கணவனும் ஒரு மாதிரிப் பேர்வழி ஆகி விட்டால், பெண்ணின் பாடு பெரும்பாடுதான். அதையும் சமாளித்துக் கொண்டு போகிறாள் பெண். பிள்ளைகள் சரியில்லை-உருப்படியாக ஒன்றும் தேறவில்லை என்றால் வாழ்க்கையில் இடி விழுந்த மாதிரிதானே? அதையும் தாங்கிக் கொள்கிறாள் பெண்.

இவ்வளவு கஷ்டங்களையும் தாங்கிக் கொண்டு உயிரை விடாமல் - கையில் வைத்துக் கொண்டு வாழ்கிறாள் பெண். அப்படி அவள் வாழ்வதற்கு அடிப்படையான தர்மம் ஒன்று இருக்கிறது. அதுதான் உலகைக் காப்பாற்றும் தர்மம். தாய்மை என்னும் கருணை. அது பெண்மையாய்ப் பூத்துக் குலுங்குகிறது.

பெண்களின் தைர்யத்தைப் பார்க்கிறபொழுது ஆடவர்களை விட மனோதிடம் மிக்கவர்கள் என்று தெரிகிறது. மெல்லியலார் என்று பெண்களைச் சொல்வது அவர்களுடைய தேகத்தைப் பார்த்துச் சொல்லிய வார்த்தைதான். மனதை நோக்கிச் சொன்ன சொல் அல்ல.

எந்த ஆபத்துக்கும் பயப்படாமல் துணிந்து செயல்படும் பெண்கள், தாய்மைக்கும் பெண்மைக்கும் இழுக்கு ஏற்படுகிற தென்றால் அப்படியே அஞ்சி ஒடுங்கிவிடுவார்கள். உலகில் எங்கு ஆபத்து நேர்வதாக இருந்தாலும் சரி, பெண்மையை நோக்கி - அதற்கு நேர்கிற சோதனையை நோக்கி வெட்கப்படுவார்கள், பயந்தே போவார்கள்.

மகாத்மா காந்தியும் அப்படித்தான். கொடுமையைஎதிர்த்துப் போராடுவதில் நிகரற்ற வீரர் அவர். பெரிய பெரிய படை பட்டாளம் ஒன்றுக்கும் அவர் பயப்படமாட்டார். நோயோ, நொடியோ, பேயோ, பிசாசோ ஒன்றும் அவரை மிரட்டமுடியாது.

தான்மட்டும் பயப்படாமல் இருந்ததோடு மகாத்மாகாந்தி திருப்தி அடையவில்லை. மனிதர்கள் எல்லோரும் அச்சம் இல்லாதவர்களாய் தைர்யமாக இருக்கவேண்டும் என்று உருவாக்கினார்.

உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் தத்தம் செய்யும் அருளாளர் அவர். அச்சம் தீர்த்த அண்ணல் அவர்.

ஆனாலும் காந்திமகான் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் என்றால் பதறிவிடுவார். அஹிம்சையில் நம்பிக்கை இல்லை. சத்தியத்தில் நம்பிக்கை இல்லை ஒருவருக்கு என்றால், அவரைக் கண்டு பதறிவிடுவார்.

நம்பிக்கை இல்லாதவர் சாதாரண ஆள் என்றால் கூட பயப்படமாட்டார். அதிகமாகப் படித்தவர், விபரம் தெரிந்தவர், வசதி உள்ளவர், நாலுபேருக்கு வழிகாட்டுகிறவர், அப்படிப் பட்டவரே நம்பிக்கை இலலாமல் இருக்கிறார் என்றால் பதறி விடுவார் காந்திமகான்.

அச்சத்தில் அப்படி ஒருரகம் இருக்கிறது. மாணிக்கவாசகரும் தைர்யமானவர்தான். ஊக்கமானவர்தான். முன்வைத்த காலைப் பின் வைக்காத திடம் நிறைந்தவர்தான். ஆனாலும் ஒரு சிலரைக் கண்டால் பதறிவிடுகிறார்.

கடவுளுடைய செயல்தான் எல்லாம் என்று சொல்லிக் கொண்டே, பிறகு, லாபத்துக்கு ஒரு தெய்வம், நஷ்டத்துக்கு ஒரு தெய்வம் என்று கணக்குப்போடுகிற பேர்வழிகளைப் பார்க்கிறார். அவர்களைப் பார்த்தவுடன் பதறிவிடுகிறார்.

மூர்க்கமானகொடிய சர்ப்பத்துக்குக்கூடப் பயப்படமாட்டார். கயவர்களின் உறுதிமொழிகளுக்குக் கூடப் பயப்படமாட்டார் அப்படி அஞ்சாநெஞ்சத்தோடு கூடிய மாணிக்கவாசகர், இந்த நிலை கெட்ட பேர்வழிகளைக் கண்டால் பதறிவிடுகிறார்.

பதற்றம் எப்படிச் செய்யுள் உருவம் பெற்றுவருகிறது என்று பாருங்கள்!

(தானன தானன தன்
தானன தானன தன்)

புற்றில்வாழ் அரவும்அஞ் சேன்;
பொய்யர்தம் மெய்யும்அஞ் சேன்;
கற்றைவார் சடைஎம்அண் ணல்
கண்ணுதல் பாதம்நண் ணி,
மற்றும்ஓர் தெய்வம்தன் னை,
உண்டென நினைத்தெம்பெம் மாற்(கு)
அற்றிலா தவரைக்கண் டால்
அம்மநாம் அஞ்சும்ஆ றே! (125)

---

(அரவு - பாம்பு. பொய்யர்களுடைய மெய் தான் பயங்கரமானது. தப்பித் தவறி ஒரு உண்மை அவனிடமிருந்து வந்தால், அதில் கொடிய ஆபத்து ஒன்று இருக்கவே செய்யும். அற்று - நம்பிக்கை.)

சிவபெருமானுடைய திருவடி (திருவருள்) மேலே மேலே போய்க் கொண்டே இருக்கிறது. அணு அணுவாய், அணுவுக்குள் அணுவாய் போய்க் கொண்டே இருக்கிறது. அதாவது எங்கும் ஒரு தன்மைத்தாய் நிறைந்திருக்கிறது. நம்மிலும் அது ஒன்றே நிறைந் திருக்கிறது.

அப்படி நிறைந்து நிற்கும் அற்புதத்தைப் பார்ப்பதற்கு வழி ஒன்றுதான் உண்டு. "நான் என்பது இல்லை. எல்லாம் அவன் ஒருவனே" என்பதுதான் வழி.

வழியைத் தவறவிட்டால் பார்க்க முடியாது. நான் அதைக் கண்டு பிடித்துவிடுவேன். என்றால் அது நடக்காது.

திருமால் அப்படிக் கண்டுபிடிக்கக் கிளம்பினார். பூமி முழுவதையும் தோண்டி எறிந்து அதல பாதலங்களை எல்லாம் ஊடுருவித் தேடினார்.

பார்க்கமுடியாமலே போய்விட்டது திருமாலுக்கு.

அப்பேர்ப்பட்ட திருவடியை எண்ணி எண்ணி உருக வேண்டாமா? உருகி உருகிக் கரைய வேண்டாமா? மெய்யெல்லாம் நீறு பூச வேண்டாமா?

நான் என்பது பொய். அது இறைவனுடைய சன்னிதானத்தில் தான் பொய்யென்று தெரியும். அப்பொழுது அது மண்ணோடு மண்ணாய், புழுதியோடு புழுதியாய்ப் போய்விடும். சுடு சாம்ப லாகவே போய்விடும்.

நான் என்பது அப்படிப் போய்த் தொலைய வேண்டும். அப்படித் தொலைவதற்கு என்ன செய்ய வேண்டும்? இறைவ னுடைய திருவருளைப் பார்த்து அனுபவிக்க வேண்டும். அனுபவித்து அனுபவித்து வெண்ணீறு பூசவேண்டும்.

இறைவனுடைய சிறப்பு, இறைவனுடைய தனித்துவம் என்பன பற்றி எல்லாம் விரிவுரை நிகழ்த்துகிறார்கள். தெளிவுரை சொல்கிறார்கள். நாலு கட்டை, ஐந்து கட்டைச் சுதியில் பாடல் களை வேறு பாடித் தொலைக்கிறார்கள். ஆனால் அவன் அருளைப் பார்க்கமாட்டேன் என்கிறார்கள் என்றால் அவர்கள் பழி பாவத்துக்கு அஞ்சாதவர்கள் தாம்.

அவர்களை நினைத்தாலே பதறிவிடுகிறார் மாணிக்கவாசகர், எப்படி என்று பார்ப்போம்.

பிணிஎலாம் வரினும்அஞ் சேன்!
பிறப்பினோ(டு) இறப்பும் அஞ் சேன்;
துணிநிலா அணியினான் தன்
தொழும்பரோ(டு) அழுந்திஅம் மால்
திணிநிலம் பிளந்தும்கா ணாச்
சேவடி பரவிவெண் ணீ(று)
அணிகிலா தவறைக்கண் டால்
அம்மநாம் அஞ்சும்ஆ றே! (126)

சிறுவர்களாய் இருக்கிறபொழுது குழந்தைகளிடம் ஆண் பெண் வித்தியாசம் இல்லை. பருவம் வந்தவுடன் வித்தியாசம் உண்டாகிறது. வெட்கம், நாணம், பயம், காதல், எல்லாம் வந்துவிடுகின்றன.

வெட்கம் முதலிய உணர்ச்சிகள் எங்கிருந்தோ கிளம்பி வந்து விடவில்லை. கூடவே அவை இருந்தன. உறங்கிக் கொண்டு இருப்பதுபோல் இருந்தன. பின், விழித்து எழுவதுபோல் எழுந்துவிட்டன.

எல்லாக் காரியங்களும் அப்படித்தான். சிறிய வித்துக்குள் பெரிய விருட்சம் ஒடுங்கிக் கிடப்பது போல் மறைந்து கிடக் கின்றன. மெள்ள மெள்ள எழுந்து வருகின்றன. அவை எழுந்து வருவதுவரை பொறுமையாக இருக்க வேண்டும். அவசரப்படு வதில் பிரயோசனம் இல்லை.

இனி, ஒரு பெண் பருவம் ஆகி இருந்தாள். அவளை மணம் பேசி மாப்பிள்ளை வீட்டார் பலர் வந்த வண்ணம் இருந்தார்கள். ஆனால் பெண்ணை நன்றாகத் தெரிந்தவன் இளைஞன் ஒருவன். பெண்ணோடு படித்தவனும்கூட, பழகியவனும்கூட, ஆனாலும் இளைஞன் தன் திருமணம் பற்றி யோசிக்கவில்லை. சும்மா இருந்து விட்டான். பெண்கேட்டு மாப்பிள்ளை வீட்டார் பலர் வருகிறார் கள். போகிறார்கள். இவை எல்லாம் தெரிந்தும் இளைஞன் சும்மா இருந்து விட்டான்.

வேறொரு இளைஞனுக்குத் திருமணம் நடந்து முடிந்தது. பெண்ணும் மாப்பிள்ளையும் ஆனந்தமாக இருக்கிறார்கள்.

இவ்வளவும் நடந்தபிறகு, ''இந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளாமல் விட்டு விட்டோமே'' என்று வருந்துவதில் ஒரு பலனும் இல்லை. கசப்பும் வேதனையுந்தான் மிச்சம். காரியம்

---

(பிணி - நோய். துணிநிலா - பிறைச்சந்திரன். தொழும்பர்- தொண்டர்.

போனது போனதுதான். அது இனி திரும்பவே திரும்பாது, பருவம் வாய்க்கிறவரை—தக்கதருணம் ஏற்படுகிறவரை எதிர்பார்த்து நிற்கவேண்டும். பொறுமையாகவே இருக்கவேண்டும். வாய்ப்புக் கிட்டியதோ இல்லையோ சோம்பல்கூடாது. துள்ளி எழவேண்டும். ஒரே நினைப்பில் முழுமூச்சோடு செயல்பட வேண்டும். விட்டு விடக் கூடாது. இது கருதியே குறளாசிரியரும்.

கொக்கொக்க கூம்பும்
பருவத்து; மற்றதன்
குத்தொக்க சீர்த்த
இடத்து''

என்று தெளிவுபடுத்தினார்.

இனி, அடியவர்களுக்கு அருள் பாலிப்பதற்காக இறைவனே வலியவந்து நிற்கிறார். அள்ளி அள்ளி வரையாது வழங்குகிறார். அப்படியானால் ''நான் முந்தி, நீ முந்தி'' என்று ஒவ்வொருவரும் அவரிடம் ஓடவேண்டாமா?

அதைப்பற்றிய உணர்வே இல்லாமல் எதை எதையோ விவாதம் பண்ணிக்கொண்டிருக்கிறார்களே மனிதர்கள் என்று தவிக்கிறார் மாணிக்கவாசகர்.

தவிப்பு அதிகார தோரணையோடு எழுந்து நின்று பேசுவதைப் பாடலில் பார்ப்போம்.

(தானான தானன
தானான தானன
தானன தன்)

காலம்உண் டாகவே
காதல்செய்(து) உய்ம்மின்;
கருதரி ய
ஆலம்உண் டான்எங்கள்
பாண்டிப் பிரான்தன்
அடியவர்க் கா
மூலபண் டாரம்
வழங்குகின் றான்; வந்து
முந்துமி னே! (127)

---

(உய்ம்மின் - பெற்று வாழுங்கள். கருதரிய - நினைத்தால் கூட குலைபதற வைக்கும். ஆலம் - விஷம். மூலபண்டாரம் - அருள் மயமான உண்மையை - ஞானப் பொக்கிஷத்தை முந்துமின் - நான்முந்தி, நீமுந்தி என்று ஓடி வாருங்கள்.)

# உடம்பு ஒன்று போதும் இறைவனைப் பார்ப்பதற்கு

இளைஞனுக்கும் யுவதிக்கும் திருமணம் நடக்கிறது. கணவனும் மனைவியுமாக இருந்து குடும்பம் நடத்துகிறார்கள். தாய் தந்தையர் ஆகிறார்கள். பாட்டன் பாட்டியே ஆகிவிடுகிறார்கள்.

கணவன், மனைவி, குழந்தைகள், உற்றார், உறவினர் இவர்களிடம் இருக்கிற அன்புக்கு அளவு உண்டா? பொறுமைக்குத் தான் அளவு உண்டா? ஒருவர் மேல் ஒருவருக்கு எவ்வளவு பிரியம்? இவர்கள் ஒருவரை ஒருவர் உபசரிக்கிற உபசாரத்தில்தான் எத்தனை நயம்? எத்தனை சுகம்.

உயிருக்கு உயிராக - உயிரைக் கொடுத்தே ஒருவரை ஒருவர் பேணுகிறார்கள். இவ்வளவுக்கும் எங்கிருந்துதான் பொங்கி வருகிறதோ அன்பு?

வாழ்க்கை என்றால் அதில் எத்தனையோ பிரச்சனைகள். மேடு பள்ளங்கள், முண்டு முடிச்சுகள். கோபதாபங்கள், அவ்வளவிலும் உருண்டு புரண்டு தொடர்ந்து வருகிறது உறவு. அதாவது உயிருக்கு உயிரான அன்பு.

வாழ்க்கையைப் பார்த்தால் உணர்ச்சிமயமாக இருக்கிறது. உணர்ச்சியைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்று சொல்லும்படி இருக்கிறது வாழ்க்கை.

ஏனோதானோ என்று மேலெழுந்தவாரியாக வாழ்க்கையை ஒருவரும் நடத்துவது இல்லை. நிரந்தரமாக இருந்தே நடத்துகி

றார்கள். நாயகனாகவும் நாயகியாகவும் இருந்தே வாழ்க்கையை நடத்துகிறார்கள். ஆனால் ஒரு நாளாவது ஒரு வேளையாவது கணவனும் மனைவியும் ஒன்றுபட்டு வாழ்க்கையின் அற்புதத்தைப் பார்த்து அனுபவித்தது இல்லை. அன்பைப் பற்றியோ, பொறுமையைப் பற்றியோ, ஆர்வத்தைப் பற்றியோ, ஆனந்தத்தைப் பற்றியோ யோசித்துப் பார்த்ததில்லை. எங்கிருந்து வந்தது இந்த அன்பு? எப்படி வந்தது? ஏன் வந்தது? என்று யாராவது யோசித்தது உண்டா?

கணவனும் மனைவியும் சேர்ந்து இருந்து தங்களுடைய அன்பைப்பற்றி யோசித்தாலே போதும். வாழ்க்கை முழுவதும் தெய்வாம்சம் நிறைந்து பொங்கும்.

எல்லாம் கடவுளுடைய செயல்தான் என்பது விளங்கிவிடும். அப்படி விளங்குவதுதான் உண்மை.

உண்மையைக் கண்ட மாத்திரத்தில் ஒரே உத்சாகந்தான். துள்ளிக் குதிக்க வைக்கும் உத்சாகம். ஆடவைக்கும். பாட வைக்கும். ''கண்டு கொண்டேன்''. ''நான் கண்டு கொண்டேன்'' என்றெல்லாம் தெருத் தெருவாய் முழங்க வைக்கும் உத்சாகம்.

எங்கும் இறைவனுடைய செயல் தான் என்பது மாணிக்கவாசகருக்கு தெரிந்துவிட்டது. அவ்வளவுதான், நிலை கொண்டு நிற்க முடியவில்லை மாணிக்கவாசகருக்கு. திம், திம் என்று குதிக்கிறார். கையோடு கையைத் தட்டிக் கும்மி அடிக்கிறார். ''பெருமானே, சிக்கிவிட்டீர்'' வசமாகச் சிக்கிவிட்டீர். அக்கம் பக்கம் நகர முடியாது நீர்! இவ்வளவு நாளும் நீர் நழுவிக் கொண்டு போய் விட்டீர். நானும் கவனிக்காமலே போய்த் தொலைந்தேன்! இப்பொழுது வந்து மாட்டிக் கொண்டீர்! பிடித்துக் கொண்டேன். விடமாட்டேன். என்று கூப்பாடு போடுகிறார். ஊரெல்லாம் கேட்க ஆரவாரத்தோடு கூப்பாடு போடுகிறார்.

எப்படி என்று பாடலில் பார்ப்போம்.

(தானன தான
தானன தான
தன்னன தன்னன
தா ன)

அம்மையே! அப்பா!
ஒப்பிலா மணியே!
அன்பினில் விளைந்தஆர்
அமு தே

பொய்ம்மையே பெருக்கிப்
பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன்
தனக் கு,
செம்மையே ஆய
சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெரு
மா னே!
இம்மையே உன்னைச்
சிக்கெனப் பிடித்தேன்;
எங்கெழுந்(து) அருளுவ(து)
இனி யே? (128)

மழை பெய்கிறது. கரடுமுரடாக இருந்த நிலம்-மண் முழுவதும் பச்சைப் பசேல் என்று வந்து விடுகிறது புல். பசு மேய் கிறது. பாலாய் ஊறிவிடுகிறது புல். பிறகு, தயிராகிறது. நெய் ஆகிறது. ஊனும் உதிரமும் கொண்ட மனித உடம்பே ஆகி விடுகிறது. உயிருக்குச் சத்தாக இருக்கிறது. உணர்ச்சியாகவும் மாறிவிடுகிறது. பசி, தாகம், காதல், கோபம் என்று உணர்ச்சிகள் விதவிதமாய் உண்டாகின்றன.

எல்லாம் இறைவனுடைய செயல்தான். அவனுடைய நாடகம் தான். அறிவுக்கும் யோசனைக்கும் புலப்படாத மர்மமான அலங்கார நாடகந்தான்.

மண், நீர், புல், பசு, மனிதர் எல்லாம் இறைவனுடைய அருள் தான். அணுவிலிருந்து அண்டம், பேரண்டம் எல்லாம் இறைவன் தான். ஆனாலும் இறைவனாவது ஒன்றாவது என்று ஒவ்வொன்றும் தனித்தனியே மயங்கும்படி செய்கிறதும் அதே இறைவன் தான்.

விசித்திரமான வித்தகன் (எத்தன்) தான் இறைவன். அந்த எத்தனே மாணிக்கவாசகரிடம் சிக்கிக் கொண்டான், வசமாகச் சிக்கிக் கொண்டான்.

"இதை விட்டு இனி எங்கும் உம்மால் நகர முடியாது" என்று இறைவனைப் பார்த்தே சொல்கிறார் மாணிக்கவாசகர்.

---

(இம்மையே - இப்பொழுதே)

"அடியவர்களின் பக்தி ஒன்றுக்கு மட்டும் கட்டுப்படுகிறவன் நீ! எனக்கு நன்றாகத் தெரியும்." என்று உறவு கொண்டாடுகிறார் மாணிக்கவாசகர்.

அத்தனே, அண்டர்
அண்டமாய் நின்ற
ஆதியே! யாதும்ஈ(று)
இல் லாச்
சித்தனே! பத்தர்
சிக்கெனப் பிடித்த
செல்வமே! சிவபெரு
மா னே!
பித்தனே! எல்லா
உயிருமாய்த் தழைத்துப்,
பிழைத்தவை அல்லையாய்
நிற் கும்,
எத்தனே! உன்னைச்
சிக்கெனப் பிடித்தேன்;
எங்கெழுந் தருளுவ(து)
இனி யே? (129)

அன்பைப் பார்த்தாலே போதும். அன்பு என்பது முன்னமே இருக்கிறது. நிரந்தரமாக இருக்கிறது. அது ஒன்றுதான் இருக்கிறது. நாம்தான் அதை மறைத்துக் கொண்டு இருக்கிறோம் என்பது தெரியும்.

அன்பானது ஒரு அநாதியான தத்துவம் என்பது விளங்கிவிடும். அப்படியே வியப்பு, மகிழ்ச்சி, கோபம் முதலிய உணர்ச்சிகளும் ஏற்கனவே இருக்கின்றன என்பதும் தெரிந்துவிடும்.

பேரண்டம் முழுவதும் அன்புமயம். அதாவது உணர்ச்சிமயம். உணர்ச்சியின் வெளிப்பாடுதான் உலகங்கள், செயல்கள், பலன்கள் அவ்வளவும்.

---

சித்தன் - அதிசயமானவன். அவை அல்லையாய் நிற்கும் எத்தன் - எல்லாமாய் உண்டானது இறைவன் தான். அவனே சம்பந்தம் இல்லாதவன் போல் மறைந்தும் நிற்கிறான். அப்படி ஒரு எத்தன் இறைவன்.

உணர்ச்சிகளைப் போலவே உணர்ச்சிகளின் உருவங்களாகிய கலைகளும் ஏற்கனவே இருக்கின்றன. இசை, அபிநயம், ஓவியம் எல்லாம் உணர்ச்சியோடு உணர்ச்சியாய் இருக்கின்றன. கடவுளும் அப்படியே எங்கும் ஒரு தன்மைத்தாய் நிறைந்திருக்கிறார்.

ஞானிகள் கலைகளைப் பார்க்கிறார்கள். பேதங்கள் ஒதுங்கி விடுகின்றன. கலைகளின் திவ்ய வடிவங்களைப் பார்க்கிறார்கள். பரவசத்துக்கு ஆளாகிறார்கள். இறைவனுடைய அருள், எல்லை இல்லாத திருவருள் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. அப்பொழுது தான் உண்மைதெரிகிறது. ''நாம் என்பது இல்லை. எல்லாம் இறைவனுடைய அருளே'' என்னும் உண்மை தெரிகிறது.

அன்பு என்னும் தெய்வ உணர்ச்சி காதலாய் பக்தியாய் அவர் களைக் கரைத்துவிடுகிறது.

கடவுளைப் பார்த்து அனுபவிக்கும் காட்சி, கடவுளோடு ஒன்றித் திளைக்கும் பரவசம் என்பதெல்லாம் கலை இன்பத்தில் கரைந்து கலையோடு கலையாய்ப் மரிமளிப்பதுதான்.

கடவுள் அப்படிக் கலைமயமாக இருக்கிறார். கலைகளில் எல் லாம் மேலான கலை வாழ்க்கைக்கலை. வாழ்க்கையின் அற்பு தத்தை (போகத்தை) உணர்ந்து பார்க்கிறவர்கள், அங்கே இறைவன் எழுந்தருளி இருக்கும் காட்சியைப் பார்ப்பார்கள்.

வாழ்க்கையின் அழகையும் பெருமிதத்தையும் இன்பத்தையும் பார்த்துப் பார்த்து வியப்படைந்து கொண்டே ''எல்லாம் இறைவன் செயல், நம் செயல் ஒன்றும் இல்லை.'' என்னும் உண்மை உணர்ச்சியு(யோகத்தின் பொலிவு)ம் கடவுள் கொலுவீற் றிருக்கும் சன்னிதானம்தான்.

எதற்கும் கலைதான் வழி. கோபுர வாசல் கலைதான். கடவு ளைப் பார்ப்பதற்கும் கலைதான் சாளரம். இல்லற நலத்தை உணர்ந்து அதன் மூலம் கடவுளைக் காண்பதற்கும் கலை உணர்வு தான் மூலம். ஞானஒளியில் உண்மை தகதகவென்று ஜொலிப் பதைப் பார்த்து அப்படியே கடவுளைப் பார்ப்பதற்கும் கலைதான் உபாயம்.

கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார். ஆனாலும் அவரைப் பார்க்க முடியவில்லை. பார்ப்பதற்குச் சில வழிகள் இருக்கின்றன. அன்பாவது பொங்கித் ததும்பும் குடும்பவாழ்க்கை. எல்லாம் அவன்

செயலே என்று எல்லாவற்றையும் ஒப்படைத்து விடும் பக்தி. கலைகளில்க் கரைந்து திளைக்கும் ஆனந்த பரவசம். இப்படிச் சிலவழிகள் மூலம் தரிசனம் கொடுக்கிறான் இறைவன்.

மாணிக்கவாசகர் இறைவனைப் பார்த்துவிட்டார். தம் கையில் இறைவன் அகப்பட்டு விட்டான் என்றே நினைக்கிறார். எக்களிப்போடு சொல்கிறார்.

எப்படி என்று பார்ப்போம்.

அருளுடைச் சுடரே!
அளிந்ததோர் கனியே!
பெருந்திறல் அருந்தவர்க்(கு)
அர சே!
பொருளுடைக் கலையே!
புகழ்ச்சியைக் கடந்த
போகமே! யோகத்தின்
பொலி வே!
தெருளிடத்(து) அடியார்
சிந்தையுள்ப் புகுந்த
செல்வமே! சிவபெரு
மா னே!
இருளிடத்(து) உன்னைச்
சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) தருளுவ(து)
இனி யே? (130)

நம்மிடம் இருப்பது உடம்புதான். இந்த எண்சாண் உடம்புக்குள் எப்படியோ முளைத்துவிட்டது மனம்.

கண்ணுக்குத் தெரியாத நுட்பமான பொருள் மனம். ஆனாலும் அண்டம், பேரண்டம் முழுவதையும் சுருட்டி மடக்கித் தன் கக்கத்தில் வைத்துக் கொள்கிறது மனம்.

---

(அளிந்ததோர்கனி - அருள்பழுத்துத் தேன் சொட்டும் கனி. பொருளுடைக்கலை - உணர்ச்சி பாவம் வடிவெடுக்கிற கலை. தெருள் - தெளிவு. இருளிடத்து - அறியாமையின் மூலமே. அதாவது ஒன்றும் புலப்படவில்லையே என்னும் உணர்ச்சியின் மூலமாகவே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் - இறைவனே! உன்னைச் சிக்கவைத்து விட்டேன்.)

அடை அடையாய்ச் செறிந்து கிடக்கும் எண்ணங்களை - ஞாபகங்களைப் பார்த்தால் இவ்வளவும் எப்படி உருக்குலையாமல் அப்படியே இருக்கின்றன? என்று வியக்கத் தோன்றுகிறது. அப்படி ஆழம் காணமுடியாத கடலாய், இறுதி இல்லாத வான்வெளியாய், தங்கச்சுரங்கமாய் இருக்கிறது மனம்.

இறைவன் ஆனந்தக் கூத்தாடும் பொன்னம்பலம் என்று மனத்தைச் சொல்லலாம்.

பொதி பொதியாய் அடுக்கி வைத்திருக்கிற காரியங்களை ஒவ்வொன்றாய் உதறி எடுக்கும் மனம். இழை இழையாய் அவற்றைப் பிரித்துப் பார்க்கும் மனம்.

மனதின் அற்புதத்தைப் பார்க்கிறபொழுது நம்முடைய செயல் ஒன்றும் இல்லை என்று தெரிகிறது. அது மட்டும் அல்ல, நாம் வெறும் சவுடால் பேர்வழி என்றும், சொன்னதையே பன்னிப் பன்னிச் சொல்லிக் கொண்டிருக்கிற வெறும் அசடு என்றும் தெரியவரும். கேட்பவர் சாதும் மனமும் புளித்துப் போகும்படி உளறிக் கொண்டே இருக்கிற வெறும் அறவை தான் நாம் என்பது தெரியும்.

சத்தமே இல்லாமல் அவ்வளவு காரியங்களையும் ஒழுங்காய்ச் செய்து சுத்தமாய் அடுக்கி வைத்திருக்கிற மனம் எங்கே? நாம் எங்கே?

நம் மனதில் உள்ள பொலிவையும் பூரிப்பையும் பார்த்துக் கொண்டு இருந்தாலே போதும். வாழ்க்கை சுவையாக இருக்கும். ஒவ்வொரு அம்சமும் தேனாய், கல்க்கண்டாய் இனிக்கும். தொல்லைக்கு இடமே இருக்காது.

இனிப் பாடலைப் பார்ப்போம்.

அறவையேன் மனமே
கோயிலாக் கொண்டாண்(டு),
அளவிலா ஆனந்தம்
அரு ளிப்,
பிறவிவேர் அறுத்தெம்
குடிமுழு(து) ஆண்ட,
பிஞ்ஞகா! பெரியஎம்
பொரு ளே!

திறவிலே கண்ட
காட்சியே! அடியேன்
செல்வமே! சிவபெரு
மா னே!
இரவிலே உன்னைச்
சிக்கெனப் பிடித்தேன்;
எங்கெழுந்(து) அருளுவ(து)
இனி யே? (131)

மனதின் அற்புதத்தைப் பார்த்தால் போதும். பார்க்கப் பார்க்க இறைவன் நம்மிடம் இருக்கிறான் என்பது தெரியும். நாமாகவே இருக்கிறான் அவன் என்பது தெரியும். அவன் ஒருவன்தான் இருக்கிறான். நாம் இல்லை என்பதும் தெரியும்

மனதை, சிந்தனையை, யோசனையை அவன் குழைத்துக் குழைத்துப் பிசைவான். பிசைந்து பிசைந்து உருட்டுவான். திரட்டுவான். உருகவிடுவான். கரைய வைப்பான். மனதை மட்டுமா? உடம்பையே குழைத்துப் பிசைவான். உருகிக் கரைய வைப்பான். உச்சிமுதல் உள்ளங்கால் வரை அணுஅணுவாக அவன் உருக்குவான். ஒவ்வொரு அணுவும் ஒளிமயமாய்ப் பிரகாசிக்கும். இறைவனுடைய பொன்னம்பலமாய் ஜொலிக்கும் இறைவன் அங்கங்கே நின்று காட்சி கொடுப்பான்.

ஒளி ஊற்றாய், அமிர்த ஊற்றாய் இருக்கும் மனமும் உடம்பும். அப்படி இருப்பதன் காரணமாக இறைவனே, வளைய வளைய நம்மைச் சுற்றிவருவது போலத் தெரியும்.

காதலியைச் சுற்றிச் சுற்றிக் காதலன் வருவது போல எங்கும் நம்மைப் பின்தொடர்ந்து வந்த வண்ணமாக இருப்பான் இறைவன்.

நம்மைவிட்டு அவன் பிரியமாட்டான். மனதையும் உடம்பையும் மூடி இருந்த குப்பை கூளங்களை அகற்றி - நன்றாக ஒட்டடை அடித்து, துடைத்துத் துப்புரவு செய்து, இறைவனே நமக்குக் காட்டுகிறானோ என்று தோன்றும். மனதின் ஊற்றுக் கண்களையும் உடம்பில் ஊற்றுக் கண்களையும் திறந்துவிட்டதோடு நின்று

---

அறவை - சொன்னதையே சொல்லிச் சொல்லிக் கழுத்தை அறுக்கிற காரியம். பிஞ்ஞகா - பெருமானே. திறவிலே - சிக்கல் இல்லாத அமைதியில்.

விடவில்லை, நம்முடைய ஊனக்கண்களையும் திறந்து பார்க்க வைக்கிறான் இறைவன். என்ன கருணை அவனுக்கு என்மேல் என்று அதிசயப்படுகிறார் மாணிக்கவாசகர்.

பால்நினைந்(து) ஊட்டும்
தாயினும் சாலப்.
பரிந்துநீ பாவியேன்
உடைய
ஊனினை உருக்கி,
உள்ளொளி பெருக்கி,
உலப்பிலா ஆனந்தம்
ஆய
தேனினைச் சொரிந்து
புறம்புறம் திரிந்த
செல்வமே! சிவபெரு
மானே!
யானுனைத் தொடர்ந்து
சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளுவ(து)
இனியே? (132)

நம்முடைய சுண்டுவிரலின் செயல்களைப் பார்த்தால் போதும். உலகில் உள்ள எந்த ஒரு நுட்பமான கருவியும், சுண்டு விரலின் திறமைக்கு இணையாகாது என்பது தெரிந்து விடும்.

இனி, கண்ணுக்குத் தெரியாத நுட்பமான ஒரு தத்துவம். பெரிய பெரிய யானை வரை, ஆலமரம் வரை - ஏன்? மனிதன் வரை வளர்ந்து வந்திருக்கிறது. இந்த நெறிமுறையை கணக்குப் போட்டுக் காட்டினவர் சார்லஸ் டார்வின்.

இயற்கையும் சூழ்நிலையுமே, உயிரின் வளர்ச்சிக்கும் பெருக்கத் திற்கும் காரணம் என முடிவு கட்டினார் டார்வின். அதனால் ''கடவுளுக்கு இங்கு யாதொரு பணியும் இல்லை'' என அவர் எண்ணினார்.

டார்வினுடைய நண்பர் ஒருவர் கண்ணைப் பற்றிய சிறு புத்தகம் ஒன்றை டார்வினுக்கு ஒரு சமயம் கொடுத்தார். அச்சிறு

---

தாயினும் சால - தாயைவிட அதிக ஈடுபாட்டுடன். பரிந்து - பரிவு காட்டி. ஊன் - உடம்பு. உலப்பு இலா - தெவிட்டாத.

நூலைப் படித்து முடித்த டார்வின் இதுவரை காணாத ஒன்றைக் கண்டு விட்டதைப் போலத் துள்ளிக் குதித்தார். பிறகு நண்பரிடம் டார்வின் சொன்னார். ''அன்பரே! கடவுள் இல்லை என்று இது காறும் நம்பிவந்தேன். இனி அவர் இல்லவே இல்லை என்று உறுதி யாக நம்புகிறேன்.''

டார்வின் இப்படிச் சொன்னாரோ இல்லையோ (அவருடைய) நண்பர் திகைத்துவிட்டார்.

உடனே டார்வின் சொன்னார். ''பேரண்டம் முழுவதும் நீக்கமற நிறைந்திருக்கிறார், கடவுள். அவரைத் தவிர வேறு என்ன இருக்கிறது? ஒன்றுமே இல்லை. நம் உடம்பையே எடுத்துக் கொள்வோம்; ஒவ்வொரு அங்கமும் ஒவ்வொரு அணுவும் செயல் படுகிறஅற்புதத்தைப் பார்த்தால் நம்முடைய காரியம்என்று ஒன்று உண்டா? எல்லாம் கடவுள் மயந்தான். அப்படி இருக்க நம்மைப் போல் கடவுளும் தனியாக இருக்கிறார் என்று எப்படிச் சொல்ல முடியும்? அதனால்த்தான் நான் சொல்கிறேன் கடவுள் இல்லை, அதாவது கடவுளைத் தவிர வேறு எதுவுமே இல்லை'' என்று.

வாழ்நாள் முழுவதும் கடவுள் இல்லை என்று சொல்லி வந்தவர் டார்வின். கடைசிக் காலத்தில் தீவிர தெய்வ பக்தராய் அவர் மாறுவதற்குக் காரணம் என்ன? விந்தையாகக் கண்டுணர்ந்ததுதான் காரணம்.

நம் உடம்பிலுள்ள கூறுபாடுகள் அளவற்றவை. இந்த அளவற்ற கூறுபாடுகளைத் தொண்ணூற்றாறு தத்துவங்கள் என்று நம் முன்னோர்கள் ஏதோ ஒரு அடையாளமிட்டுச் சொல்லி வந்தார்கள். தொண்ணூற்று ஆறாயிரம் தத்துவங்கள் நம் உடம்பில் உள்ளன என்று சொல்லலாம். அதற்கும் அதிகமாக உள்ளன என்றும் சொல்லலாம்.

இத்தனைத் தத்துவங்களும் ஒன்றாய்க்கட்டுண்டு நிற்கின்றன. ஒரு தன்மைத்தாய் ஒரு ஒழுங்கில் நின்று செயல்படுகின்றன. நம் உடம்போடு உடம்பாய் தத்துவத் தராசு ஒன்று இருக்கிறது. கடுகளவுப் பிரமாணமுள்ள அம்சம் ஒன்று தப்பித்தவறி நம் உடம்பில் வந்து ஒட்டிவிட்டால் போதும். உடம்பு முழுவதும் நிறைந்து நிற்கும் தத்துவத் தாரசு அப்படியும் இப்படியும் ஆடிவிடும். அவ்வளவு நுட்பமானது நம் உடம்பில் உள்ள தராசு.

கண நேரம்கூட நம் உடம்பு சும்மா இருப்பதில்லை. காற்றை இழுத்து உள்வாங்கி பிறகு வெளியேற்றும் வண்ணமாக இருக்கிறது. இப்படி வாங்கிவிடும் மூச்சு ஒரு மனிதனுடைய ஆயுளில் அறுபது கோடியிலிருந்து எண்பது கோடி தடவை நடைபெறுகிறது.

மூச்சுக் குழலும், உணவுக் குழலும் அடுத்தடுத்துத்தான் உள்ளன. ஆனாலும் நாம் உண்ணும் உணவில் ஒரு பருக்கையோ ஒரு துளி நீரோ மூச்சுக்குழலில் விழுந்துவிட்டால்போதும். உயிரின் கண்விழி பிதுங்கிவிடும். உடம்பு முழுவதும் துடியாய்த் துடித்து விடும்.

இதய அறையில் இருக்கிற நுரையீரலில் ஒரு தூசு விழுந்து விட்டால் போதும். மேலும் கீழும் ஓடியாடும் உடம்பின் தராசு அலறிவிடும். காலில் ஒரு முள் தைத்தால் தாங்கமுடிகிறதா? மூளையில் ஆணி கொண்டு அடித்தது போலல்லவா வலிக்கிறது. ரத்தத்தையே வடிகட்டி, சாறாகப் பிழிந்து, சக்கையை வெளியேற்றுகிறதே கிட்ணி - அவரை விதை அளவுள்ள அந்த கிட்ணியில் எத்தனைக் கோடி ரோமங்கள் முளைத்துள்ளன. அவற்றில் ஒன்றிரண்டு உதிர்ந்து விட்டாலும் போதும், தாங்க முடியாது உடம்பால்.

தேகதத்துவம் முழுவதும் கடவுள் மயந்தான். கடவுளின் லீலா விநோதம் முழுமையும் நம் உடம்பில் பார்க்கலாம். நம் உடம்பின் ஒவ்வொரு காரியத்திலும் பார்க்கலாம்.

''கடலின் நஞ்சமு(து)
உண்டவர் கைவிட்டால்
உடலி னாரும் ஓர்
ஊர்முனி பாண்டமே''

என்று அப்பர் சுவாமிகள் சொன்னாரே அதன் பொருள் என்ன? உடம்பு முழுவதும் தெய்வ மயந்தான். இறைவன் அருள் இல்லாவிட்டால் இந்தப் பொன்னுடம்பு உடைந்து போன மண் சட்டிதான். இதைவிட எப்படி விளக்க முடியும் இறையருளை.

அற்புதத்திலும் அற்புதமானது நம் உடம்பு. அது நம்மிடம் இருக்கிறது. நாமாகவே இருக்கிறது. அது காரணமாக உடம்பின் அற்புதம் நமக்குத் தெரிகிறதில்லை. ஒருமுறை தெரிந்துவிட்டால் போதும். உடம்பின் அதிசயம் நமமைவிட்டு அகலாது. உடம்பே கோவிலாகத் தெரியும். ஏன்? கடவுளாகவே தெரியும்.

உடம்பின் அற்புதத்தை மாறி மாறி உணர்ந்து கொண்டே இருப்போம். நம் முன்னோர்கள் உடம்பைக் கீழானது என்று ஒதுக்கவில்லை. உயர்வானது என்றே மதித்தார்கள்.

''ஞானப்பிரகாசம்'' என்பது போல. ''ஊனப்பிரகாசம்'' என்று உடம்பைச் சொல்லி இருக்கிறார்கள். ''ஊனுடம்பு ஆலயம்'' என்றும் பாராட்டி மகிழ்ந்திருக்கிறார்கள்.

உடம்பு என்பது வெறும் களிமண் அன்று. கல்லும் அன்று. கடவுள் என்னும் சிற்பியின் கைபட்ட அற்புதக் களிமண்தான் நம் உடம்பு. நம் உடம்பை நாம் பார்க்கும்போது வெறும் களிமண் விலகிவிட வேண்டும். கடவுளின் இன்ப உணர்ச்சிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து சுருதிபிறழாமல் நடனமாடிக்கொண்டிருக்கிற கலை அழகு தெரிய வேண்டும்,

கடவுள் தத்துவத்தில் சதா ஊடாடித்திளைக்கும் ஞானிகளுக்கு உடம்பானது ரத்தமும் சதையும் எலும்பும் நரம்புமான வெறும் ஊனாகத் தெரியாது. கடவுளின் எல்லையற்ற அன்பும் அருளும் ஜொலிக்கும் சந்நிதானமாகவே தெரியும். மனம் உவந்து அவர் நமக்கு வழங்கிய சீதனமாகவே தெரியும். நம்மிடம் ஒப்படைத்து விட்டுப்போன அடைக்கலமாகவே தெரியும்.

ஆயிரம் வருடங்களுக்கு முன் ஐரோப்பாவில் பிறந்து வளர்ந்த கிறிஸ்துவ ஞானி அகஸ்டஸ். இறைவனுடைய கல்யாண குணங்களை நினைந்து நினைந்து சதா உருகித் திளைப்பவர். உடம்பினுள் நடைபெறும் அற்புத லீலாவிநோதங்கள் எப்படியோ அவருக்குத் தெரிந்துவிட்டன. அடடா! விராட்புருஷன் அல்லவா நம் உடம்பாக நின்று ஆனந்தத் தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறான் என்பது அவருக்கு விளங்கிவிட்டது.

உடம்பைப் பற்றிய நினைப்பு சதா அவர் இதயத்தோடு இதயமாய், உணர்ச்சி மயமாய் நிறைந்தே கிடந்தது. ஒரு நாள் அதே நினைப்பில் கட்டிலில் படுத்தார். உறக்கம் கண்ணைத் தழுவியது. தூங்கினார். தூக்கத்தில் இருந்தவரை ஏதோ ஒன்று தட்டி எழுப்புவது போல இருந்தது. துள்ளி எழுந்தார், கட்டிலை விட்டுக் கீழே இறங்கினார். தரையில் மண்டிபோட்டார். கண்களை மூடித் தியானம் பண்ணினார். ''உடம்பே! என் பொன்னுடம்பே! நீதான் கண்கண்ட தெய்வம். உன்னை நான் சரண் அடைந்தேன். உன்

னுடைய அற்புதந்தான் என்னை இறைவனோடு ஐக்கியப்படுத்துகிறது'' என்று தன்னை மறந்து தியானம் பண்ணினார்.

மாணிக்கவாசக சுவாமிகள் கடவுள் தத்துவத்தோடு சதா ஒன்றித் திளைப்பவர். ஒப்பற்ற ஞானச்சுடர் அவர். மாணிக்க வாசகர் உடம்பை நோக்கி நீ தான் தெய்வம் என்று சொல்லவில்லை. ஆனால் தெய்வத்தை நோக்கி, ''பெருமானே! நீர்தான் என் உடம்பு. நீர்தான் நான்'' என்று பரவிப் போற்றுகிறார்.

உடம்போடு ஒட்டி நிற்பதால் நாம் என்னும் உணர்ச்சி இருக்கிறது. அது காரணமாகப் பிறப்பு இறப்பு முதலிய காரியங்களை நாமே நடத்துவது போலத் தெரிகிறது. துன்பம் சந்தோஷம் இரண்டும் நம்மிடம் வந்து விளையாடுவது போலவும் தெரிகிறது. அப்படி எல்லாம் தெரிவது வெறும் மயக்கம்தான்.

இந்த மயக்கத்திலிருந்து நம்மை விடுவிப்பதற்காகக் கருணாகர மூர்த்தியாகிய இறைவன் என்ன செய்தான்? வெளியில் நின்று ஆடிய திருவிளையாடல்கள் போதாதென நமக்குள்ளேயே நம் உடம்புக்குள்ளேயே வந்துஉட்கார்ந்து கொண்டான். தன்னுடைய ராஜாங்க நிலையமாக நம் உடம்பை ஏற்றுக்கொண்டான்.

உள்ளேவந்து நம் உடம்பை அணு அணுவாகப் பிசைந்து ஆனந்தமயமாக உருக்கிவிடுகிறான். அப்படி நம்மை ஆட்கொண்டு கருணையைக் கொட்டுகிறானாம் இறைவன்.

இனி பாடலைப் பார்ப்போம்.

(தானன தான
தானன தான
தானன தானன
தா ன)

''புன்புலால் யாக்கை
புரைபுரை கனியப்,
பொன்நெடுங் கோயிலாப்
புகுந்(து) என்
என்பெலாம் உருக்கி,
எளிமையாய் ஆண்ட
ஈசனே! மாசிலா
மணி யே!

துன்பமே பிறப்பே
இறப்பொடு மயக்காம்
தொடக்கெலாம் அறுத்தநல்ச்
சோ தீ!
இன்பமே! உன்னைச்
சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது
இனி யே. (133)

---

சோதி! விளக்கின் சுடர் போன்றவனே! கொழுந்து ஆடும் பொழுது அழகாக இருக்கும். அப்படி அழகாக இருக்கிறான் இறைவன். புரைபுரை - அணுஅணுவாக. என்பு - உடம்பு. உடம் போடு ஒட்டிய ஆணவம்.

குறிப்பு: மலைக்குமலை தாவிவரும் அருவிபோல வார்த்தைக்கு வார்த்தை எதுகையிலும் மோனையிலும் பக்தியும் ஆனந்தமும் தாண்டவமாடுகின்றன. இசையோடும் தாளத்தோடும் தாண்டவ மாடுகின்றன. அற்புதமான பாடல். பாடலைப் பாடிக்கொண்டே இருக்கவேண்டும். பாடப்பாட நம் மனஅழுக்கு கரைந்து ஓடிவிடும். அருவி நீரில் உடல் அழுக்கு கரைந்து ஓடுவது போலவே ஓடிவிடும்.

# உணர்ச்சிமயமாய்ப் பார்த்தால் உண்மை பிரகாசிக்கும்

ஆயிரம் வருடங்களுக்குமுன் மாணிக்கவாசகர் திருக்குற்றாலம் வந்தார். அருவியில் நீராடினார். கோவிலுக்கு வந்தார். மூர்த்தியை வழிபட்டார். "எங்கும் நிறைந்த பரம்பொருள் அல்லவா எனக்காக என் எதிரில் வந்து அருள்பாலிக்கிறார்" என்று உருகினார் மாணிக்கவாசகர்.

சில நாட்கள் என்ன? சில வாரங்களே திருக்குற்றாலத்தில் தங்கிவிட்டார் மாணிக்கவாசகர். பெருமானைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டார் மாணிக்கவாசகர். குற்றாலத்தை விட்டுப் பிரிவதற்கு அவருக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனாலும் திருப்பெருந்துறை என்ன, காஞ்சிபுரம் என்ன, திருக்கழுக்குன்றம் என்ன, சிதம்பரம் என்ன, திருப்பூந்துருத்தி என்ன, எங்கெங்கோ போக வேண்டி இருந்ததால் ஒருவாறு மனதைச் சரிப்படுத்திக்கொண்டு மாணிக்கவாசகர் புறப்பட்டார்.

எங்கெங்கு போனாலும் சரி, திருக்குற்றாலமும், பெருமானும் அருளும், அலங்காரமும், கண்கொள்ளாக் காட்சியாய் மாணிக்கவாசகர் கூடவே வந்தன. அவற்றைப் பார்த்துப் பார்த்து உருகிக் கொண்டே போகிறார் மாணிக்கவாசகர்.

மாணிக்கவாசகருடைய உணர்ச்சி—அதாவது பக்தி, தீச்சுடராய்ப் பிரகாசிக்கிறது. அந்தச் சுடரொளியில் எல்லாமே அழகுமயமாய் ஜொலிக்கின்றன, எப்படி என்று பாருங்கள்.

"குற்றால நாதன்தன்
குரைகழற்கே ஆளாகிக்
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே"

தமிழ்நாட்டின் தென்மேற்குக் கோடியில் இருக்கிறது குற்றாலம். தற்போது குட்டி நகரமாய் இருக்கிறது. ஐம்பது வருடங்களுக்கு முன் தற்போதுள்ள ரோடுகளோ, கடைவீதிகளோ, மாளிகைகளோ இல்லை. ஆயிரம் வருடங்களுக்கு முன் இல்லவே இல்லை.

வானளாவிய மலையும், சிகரங்களும், காடும், அருவியும், படித்துறையும், கோவிலும், வழிபாடுமாய் இருந்தது குற்றாலம். எங்கு பார்த்தாலும் மலையாய்த் தெரியும்—இருண்ட பசுங்காடுகளுக்குள் வெயில் முகமே தெரியாது. மலையையும் காட்டையும் பார்க்கிற பொழுது, படிப்படியாய்க் காடானது மலைமேல் ஏறிப் போவது போலவே தெரியும். வானத்தில் கயிறு கட்டி பச்சைப் பசுங் கடலே மலைக்கு மலை ஊஞ்சலாடுவது போல இருக்கும்.

'திம்' 'திம்' என்று அருவி விழுந்த வண்ணமாய் இருக்கும். எங்கு பார்த்தாலும் பூம்புனல். வானமானது பன்னீரைத் தெளிப்பது போல ஒரே சாரல். அமிர்தம் போன்ற தென்றல்.

அருவித்துறையை ஒட்டினாற்போல இருக்கிறது கோவில். அபிஷேகத்திலும் அலங்காரத்திலும் திளைத்துக் கொண்டிருக்கிறார் குற்றால நாதர். பாடலும் நாதசுரமும் முழங்குகின்றன. கருமேகங்கள் எல்லாம் ஒன்று திரண்டு வெள்ளருவியாய் இறங்கி வந்து மத்தளம் வாசிக்கிறது அருவி. பக்தகோடிகளின் ஆரவாரமும் எழுச்சியும் பரவசப்படுத்துகின்றன.

மூர்த்தியாய் எழுந்தருளி வீற்றிருக்கும் பரம்பொருளை இந்த அமைதியான சூழ்நிலையில் ஒன்றி அனுபவித்தார் மாணிக்க வாசகர்.

---

(கற்றாவின் மனம் போல—தாய்ப் பசுவானது கன்றை மறக்காது, நினைத்துக் கொண்டே இருக்கும். அந்த நினைப்பிற்குள் ஒரு எழுச்சி உண்டான மாத்திரத்தில் அப்படியே உருகி நிற்கும், கதறும். அதன் மடியில் பால் சுரந்து நிறைந்துவிடும். கன்று ஆ—கற்றா, கன்றின் நினைவாகவே தாய் இருக்கும். பிரியாமல் சேர்ந்தே இருக்கும், இந்த அற்புதத்தை, கன்று, ஆ என்னும் இரண்டு சொற்களும் கற்றா என ஒன்றாய் நின்று காட்டுகிறது.)

பிறகு எப்படி மறக்க முடியும் குற்றால நாதரை?

"குற்றால நாதன்தன்
குரைகழற்கே ஆளாகிக்
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே"

இப்படியாகக் கசிந்து கசிந்து ஆற்றாமைப்படுகிறார் மாணிக்க வாசகர்.

குற்றால நாதனை நினைந்து உருகுகிற பொழுதும், உற்றார், ஊரார், கற்றார், கல்வி இவர்களை மறக்கமுடியவில்லை மாணிக்க வாசகருக்கு. அப்படி ஒவ்வொன்றையும் உண்மையோடு பார்த்து அனுபவித்திருக்கிறார் மாணிக்கவாசகர்.

ஒவ்வொன்றையும் அனுபவிக்க அனுபவிக்கத்தான் "எல்லாம் கடவுள் மயம். நம்முடைய காரியம் ஒன்றும் இல்லை" என்பது விளங்கும்.

அப்படி உண்மை விளங்கி விட்டது மாணிக்கவாசகருக்கு. அது எப்படித் தீர்மானமாய் வருகிறது என்று பாருங்கள்.

"உற்றாரை யான்வேண்டேன்;
ஊர்வேண்டேன்; பேர் வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்;
கற்பனவும் இனிஅமையும்:

மாணிக்கவாசகரும் ஒரு ஊரில் பிறந்தவர்தான். ஊர்த்தெரு வில் விளையாடினவர் தான். நண்பர்களுடன் பழகியவர்தான், எதை எதையோ படித்தவர்தான். ஆசான்களிடம் பாடம் கேட்ட வர்தான். தாய் தந்தையரைப் பக்தியோடு மதித்தவர்தான். உற்றார் உறவினரை உபசரிக்கிறவர்தான்.

யாரையும் அவர் மறக்கவில்லை. அன்புமயமாய் அவர்களை நினைக்கிறவர், மதிக்கிறவர், மகிழ்கிறவர் மாணிக்கவாசகர்.

ஆனாலும், குற்றால நாதனையும் அவனுடைய கோலத்தை யும் நினைந்து நினைந்து கரைவதில்தான் அவருக்கு ஆறுதல் கிடைக்கிறது; ஆனந்தமாய் அதில் திளைக்கிறார்.

இனிப் பாடலின் முழு உருவத்தையும் பார்ப்போம்.

(தானான தானான
தானான தானான)

''உற்றாரை யான்வேண்டேன்;
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்;
கற்றாரை யான்வேண்டேன்;
கற்பனவும் இனிஅமையும்;
குற்றால நாதன்தன்
குரைகழற்கே ஆளாகிக்,
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே. (134)

---

(குரைகழல்—கணீர் கணீர் என்று ஒலிக்கும் சலங்கை. ஆளாகி —வசமாகி. பேர்—புகழ். கற்பன - படிக்க வேண்டியவை.)

குறிப்பு:— உற்றார் உறவினரை ரொம்ப ரொம்ப அனுபவித்திருக்கிறார் மாணிக்கவாசகர். அந்த அனுபவமே பக்தியாகப் பழுப்பதற்கு அனுகூலமாய் இருந்திருக்கிறது. பாடலில் இது தெளிவாய்த் தெரிகிறது.

# அழியவேண்டியது ஆணவம் அல்லவா

நம் உடம்பில் ஆயிரக்கணக்கான தத்துவங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு செயலைச் செய்கின்றன. எல்லாம் ஒரு தன்மைத்தாய் ஒத்து நின்றே செய்கின்றன. அமிர்தத்தை உண் டாக்குவதும், நஞ்சைக் கழிப்பதுமே அவற்றுக்கு லட்சியம். இதற்கு ஏற்ற பெரிய பட்டறையாக இருக்கிறது வயிறு.

தேகம் முழுவதுக்கும் அணு அணுவாய் அமிர்தத்தைக் கொண்டு போய்ச் சேர்க்கிறது ஆரோக்கியம். அப்படியே நஞ்சை வெளியில் தள்ளிவிடுகிறது அதே ஆரோக்கியம்.

ஒரு துளி நஞ்சு வெளியேறாமல் தங்கிவிட்டால் போதும். உடம்பில் நோய் கண்டுவிடும். ஜீரணமும் கழிவும் நடந்து கொண்டே இருப்பதால் ஒவ்வொரு கணமும் உடம்பில் ஒவ்வொரு அணுவும் செத்துக்கொண்டே இருக்கின்றன. புதிது புதிதாய் ஜீவ அணுக்கள் உண்டாகிக்கொண்டே இருக்கின்றன.

பழையன கழிந்து கொண்டிருக்கின்றன. புதியன புகுந்து கொண்டிருக்கின்றன. அது காரணமாகவே நாம் அப்படியே இருக் கிறோம். அதாவது தேயாமல் வளர்ந்து கொண்டிருக்கிறோம். சிக்கல் இல்லாமல் கலகலப்பாக இருக்கிறோம்.

வயிற்றுக்குள் காரியம் ஒழுங்காக நடைபெறுகின்றது. ஆனால் நம் மண்டை (மூளை)க்குள் அப்படி ஒன்றும் ஒழுங்காய் நடை பெறுவது இல்லை. எல்லாம் தாறுமாறாகவே கிடக்கின்றன. 'கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்' என்கிற கணக்கில் எதை எதையோ படிக்கிறோம். யார் யாரோ எதை எதையோ சொல்

கிறார்கள். அவ்வளவையும் கேட்டு வாங்கி வைத்துக் கொள் கிறோம். மூளைக்கு உள்ளேயே அவ்வளவையும் திணித்துத் திணித்து வைத்துக்கொள்கிறோம்.

டன்கணக்கில் பத்திரிகைகள் வருகின்றன. ரேடியோ, டெலி விஷன், சினிமா இவைகளில் வருகிற கோமாளித்தனங்களுக்கு அளவே இல்லை. வண்டி வண்டியாய் மூளைக்குள் வந்து இறங்கு கிறது. அகில உலகிலும் நடைபெறுகிற அயோக்கியத்தனம் அவ் வளவையும் உடனுக்குடன் - சுடச்சுட சிங்காரித்து ஜோடித்து விடுகிறார்கள் உபதேசமூர்த்திகள். அவைகளும் மண்டைக்குள் போய்த்தான் உட்காருகின்றன.

அவ்வளவும் கிணற்றுக்குள் போட்ட கல்லாய்க் கிடக்கின்றன. ஒன்றைக்கூட சாறு வேறு சக்கை வேறு என்று அறைக்கவில்லை மூளை. அமிர்தம் இது, நஞ்சு இது என்று பிரித்தெடுக்கவில்லை மூளை.

எல்லாம் ஒன்றன்மேல் ஒன்றாய் ஏறி உட்கார்ந்திருக்கின்றன. பெரிய கல்க் கோட்டையாக எழுந்து நிற்கின்றன.

உணர்ச்சியோடு எதுவும் கலந்துவிடாதபடி தடுத்து நிற்கிறது. படிப்பு, அனுபவம், பழக்க வழக்கம் என்கிற கல்க்கோட்டை. உள்ளுக்குள் கொட்டிக் கிடக்கிற குப்பை, கூளம், அட்டு, அசடு இவற்றுக்கு அளவே இல்லை. பிறகு மூளை என்ன செய்யும்? அழுகி குளுகுளுத்துப் போய்விட்டது மூளை. செத்த சவமாய்க் கிடக்கிறது மூளை.

மண்டைக்குள் மூளையைச் சுற்றி எழுந்து நிற்கிற கல் கோட்டையை - மூடத்தனத்தை இடித்துத் தள்ளவெண்டும். பொடிப் பொடியாய் - தூள் தூளாய்த் தகர்த்து நொறுக்கிவிட வேண்டும். அப்பொழுதுதான் உணர்ச்சிக்கு உயிர் வரும். ஒளி உண்டாகும். கண்ணைத் துடைத்து உண்மையைப் பார்க்கும். கட்டித்தழுவி இன்புறுவதற்கு அப்பொழுதுதான் உண்மையை நோக்கி உணர்ச்சியானது கைநீட்டும்.

எங்கிருந்தோ வந்தது போல மகான்கள் வருகிறார்கள். மண்டைக்குள் கிடக்கிற அசட்டுத்தனங்களை எல்லாம் இடித்துத் தள்ளுகிறார்கள். மனிதகுலம் விடுதலை பெறுகிறது. மகான்களு டைய செயலை - அருளை, புரட்சி என்று சொல்கிறோம். அவர்

களைத் தேவதூதர்கள் என்று போற்றுகிறோம். வழிகாட்டி ஒளி கொடுத்த நாயன்மார் என்று வழிபடுகிறோம்.

மூளை விடுதலை பெற்றுவிட்டால் போதும். எல்லாம் ஒழுங்காய் வந்துவிடும். மூளையை அக்கம்பக்கம் திரும்பவிடாதபடி வளைத்து மடக்கிப் போட்டுக் கொள்கிறது அசட்டுத்தனம். காலடியில் போட்டு சதா நமட்டிக் கொண்டிருக்கிறது அசட்டுத்தனம்.

இந்த அசட்டுத்தனத்துக்குத்தான் ஆணவம் என்று பெயர். நான் என்னும் இந்த ஆணவத் திமிர் ஒழிய வேண்டும் என்றால் இறைவனுடைய அருள் வேண்டும்.

அருள்மயமான திருவடி மலர்கள் மண்டைக்குள் பூத்து, ''அவன் செயலே எல்லாம்'' என்னும் சிவமணம் கமழவேண்டும்.

(தான தானன
தான தானன
தான தானன
தான தன்)

தேவ தேவன்மெய்ச்
சேவ கன்,தி
ருப்பெ ரும்துறை
நாய கன்,
மூவ ராலும்அ
றியொ ணாமுத(ல்)
ஆய ஆனந்த
மூர்த்தி யான்,
யாவ ராயினும்
அன்பர் அன்றிஅ
றியொ ணாஅருள்ச்
சோதி யான்;

---

(அன்பர் அன்றி அறியொணா அருள்ச் சோதியான் - அடியார்களுக்குத்தான் அவன் உறவு கிடைக்கும். அவர்கள்தாம் அவனோடு பழகமுடியும். மற்றப்படி பிரம்மா, விஷ்ணு கூட அவன் பக்கம் நெருங்க முடியாது. சேவடிக் கணம் - திருப்பாதம் இரண்டும். அதாவது எல்லாம் அவன் செயலே என்னும் ஞானமும் பக்தியும். சென்னி மன்னித் திகழும் - இறையருளால் மண்டைக்குள் போகும். யோசிக்க வைக்கும்.)

தூய மாமலர்
சேவ டிக்கணம்
சென்னி மன்னிச்
சூடரு மே! (135)

ரயிலில் பிரயாணம் செய்கிறோம். நமது பெட்டியில் கூட்டம் இருக்கிறது. இருக்கைகள் இல்லாமல் சிலர் - ஆண், பெண், சிறுவர், நிற்கிறார்கள்.

எதிர் இருக்கையில் ஒரு பெண்மணி, அழகிய குழந்தையைத் தோளுக்கு நேரே தூக்கிப் பிடித்துக் குலாவுகிறாள். குழந்தையிடம் ஏதேதோ சொல்கிறாள் குழந்தை சிரித்து மகிழ்கிறது.

கொழு கொழு என்று பொம்மை போல இருக்கிறது குழந்தை· அது சிரித்துக்குதிக்கிறது என்றால்சந்தோஷமாகத்தானேஇருக்கும். கம்பார்ட்பெண்டில் உள்ள எல்லோரும் குழந்தையையும், பெண்ணையும், உல்லாச விளையாட்டையும் பார்த்துப் பார்த்து அனுபவித்தார்கள்.

ஒவ்வொருவர் இடமாகக் கைமாறியது குழந்தை. அவ்வளவு பேருடனும் சிரித்துக் கும்மாளி போட்டது குழந்தை. குழந்தையுடன் விளையாடுவதில் எல்லோருக்குமே ஒரு வெறி உண்டாகி விட்டது.

நம்முடைய கைக்கும் வந்தது குழந்தை. நாமும் குழந்தையோடு சேர்ந்து விளையாடினோம். உல்லாச வெறியோடு கொஞ்சிக் குலாவி விளையாடினோம்.

ரயில் ஒரு நிலையத்தில் வந்தது. நின்றவர்கள், உட்கார்ந்திருக்கிறவர் - எதிர்வரிசை, அதற்குப் பின் வரிசை இப்படி இருந்தவர்கள் எல்லாம் மளமளவென்று இறங்கினார்கள். தட்டு முட்டுச் சாமான்களோடும், தங்கள் தங்கள் குழந்தைகளோடும் ரயிலை விட்டு இறங்கி விட்டார்கள்.

நமக்குப் பயம் உண்டாகிவிட்டது. ''இது யாருடைய குழந்தை. நம்கையில் தங்கிவிட்டதே''என்று பயம் வந்துவிட்டது. ''யார் குழந்தை, யார் குழந்தை'' என்று கத்தினோம். இறங்கிப் போகிறவர் யாருடைய செவியிலும் நாம் கத்தியது விழவில்லை. நல்லவேளை - கம்பார்ட்மெண்டின் கடைசி வரிசையில் இருந்த இளம்தம்பதியர் புன்முறுவல் பூத்து வந்தார்கள். ''குழந்தை நம்ம குழந்தைதான்'' என்று ஆர அமரச் சொன்னார்கள்.

குழந்தையும் தாயைப் பார்த்தவுடன் ஒரே தாவாகத்தாவி, துள்ளிப்பாய ஒரு உந்து உந்தியது.

நமக்கு அப்பொழுதுதான் மூச்சு வந்தது. நம்முடையது அல்ல என்று தெரிந்தவுடன் உரியவரிடம் சேர்த்து வைக்க மனது என்ன பாடுபடுகிறது? படபட என்று அடித்துக் கொள்கிறது மனது.

இனி, ''நம்முடையது என்று ஒன்றும் இல்லை. நம் உடம்பு, மனம், உணர்ச்சி எல்லாமே இறைவன்தான். நாம் என்பதே இல்லை. அதுவும் இறைவன் தான்'' என்பது தெரிந்துவிட்டால் எல்லாவற்றையும் அவனிடம் அர்ப்பணித்துவிடுவோம். அர்ப் பணிக்காமல் இருக்க முடியாது.

ஒரு பெண் தன்னை அப்படியே நாயகனிடம் அர்ப்பணித்து விடுவது போல - எல்லாவற்றையும் நாயகனுடைய அன்பின், காலடியில் காணிக்கையாக வைத்து விடுவது போல இறைவனிடம் ஒப்படைத்து விடுவோம்.

ஒப்படைப்பதற்கு உள்ளம் துடியாய்த் துடிக்கும். காதல் வெறிக்கு ஆளான ஒரு பெண்ணின் மனம் தவிப்பது போலவே தவிக்கும்.

சரணாகதியில் அப்படி ஒரு இதம் இருக்கிறது. ஆறுதல் இருக்கிறது.

மாணிக்கவாசகர் எல்லாவற்றையும் கழற்றிக் கொடுத்து விட்டார். நாயகனிடம் கொடுத்துவிட்ட நாயகி போல பெருமிதத் தோடு நிற்கிறார் மாணிக்கவாசகர்.

தோழிமார்களை நோக்கிப் பெருமிதம் பேசுவதாக விஷயம்.

நங்கை மீர்எனை
நோக்கு மின்;நங்கள்
நாதன், நம்பணி
கொண்ட வன்;
தெங்கு சோலைகள்
சூழ்பெ ருந்துறை
மேய சேவகன்;
நாய கன்;

மங்கை மார்கையில்
வளையும் கொண்டெம்
உயிரும் கொண்டெம்
பணிகொள் வான்
பொங்கு மாமலர்ச்
சேவ டிக்கணம்
சென்னி மன்னிப்
பொலியு மே! (136)

நான் என்னும் தனிமை ஒழிய வேண்டும். எனது என்னும் மயக்கமும் ஒழிய வேண்டும். பிறகு, கவலைக்கு இடமே இல்லை.

ஆனால் இந்த நான் என்பதும் 'எனது' என்பதும் போவது போலப் பாவலாப் பண்ணுகின்றன. அப்புறம் எப்படியோ வந்து ஒட்டிக் கொள்கின்றன. பிறகுதான் தெரிகிறது, அவை போகவே இல்லை என்று.

காமம், வெகுளி, மயக்கம் முதலியவற்றை வேரறக் களைந்த யோகியர் பாடே அப்படித்தான். சாதாரண மக்களைப் பற்றிச் சொல்ல வேண்டியது இல்லை.

மாணிக்கவாசகர் பக்தகோடிகளைக் கூப்பிடுகிறார். எல்லாவற்றையும் அவன் காலடியில் வைத்து விட்டோம். கணக்கு வழக்கு முழுவதும் தீர்ந்துவிட்டன என்னும் சிவநேசச் செல்வர்களையே கூப்பிடுகிறார். "பக்தர்காள் இங்கே வம்மின்" என்று அருமைப் பாட்டோடு கூப்பிடுகிறார். கூப்பிட்டு என்ன சொல்கிறார்! "வெளியில் உள்ளனவற்றை எல்லாம் கொடுத்து விட்டீர்கள் உண்மைதான். ஆனால் உள்ளுக்குள், உங்கள் மண்டைக்குள் நாடி, நரம்பு, உணர்ச்சி எல்லாவற்றையும் ஊடுருவி கிடக்கிறதே, ஆணவம், அதை அல்லவா இறைவனுக்கு காணிக்கையாகத் கொடுக்க வேண்டும்? அதைக் கொடுத்தீர்களா? "இல்லையே!

(நங்கைமீர் - தோழிகளே. நங்கள்நாதன் - நம் தலைவன். தெங்கு-தென்னை. மங்கை மார்கையில் வளையும் கொண்டு-பக்தர்களிடம் இருந்தவைகளை எடுத்துக் கொண்டு. எம்உயிரும் கொண்டு - நான் என்னும் ஆணவத்தையும் பறித்து எடுத்துக் கொண்டான்-எம்பணி கொள்வான் - என்னைத்தம் ஆளாக ஏற்றுக் கொள்வதற்கு. பொங்கு... பொலியும் - மலர் போன்ற திருப்பாதங்களை என் சிரசில் வைத்தருளினான்.)

எங்களை வாட்டி வதைக்கும் ஆணவத்தின் கொட்டத்தை ஒட்ட நறுக்கும் பெருமானே.'' என்று கதறுங்கள். ஒரே நினைப்பில் தியானம் பண்ணுங்கள். அப்படியானால்தான் உணர்ச்சியை மூடிக் கட்டி இருக்கிற மதிலை - பெரிய பெரிய கரும்பாறை வைத்துக் கட்டி இருக்கிற மதிலை, இடித்துத் தள்ளுவான் இறைவன்.

மங்களமான அவனுடைய பொன்னடிகள் நம் உணர்ச்சியில் - மண்டைக்குள் வந்து நின்றால் போதும்.

முத்த னை,முதல்ச்
சோதி யை,முக்கண்
அப்ப னை,முதல்
வித்தி னை,
சித்த னைச்,சிவ
லோக னைத்;திரு
நாமம் பாடித்
திரித ரும்
பத்தர் காள்!இங்கே
வம்மின் நீர்உங்கள்
பக்கம் தீரப்
பணிமி னோ!
சித்தம் ஆர்தரும்
சேவ டிக்கணம்
சென்னி மன்னித்
திகழு மே. (137)

நாம் இல்லாவிட்டால் இந்த ஊருக்கு வாழ்வேது? நாம் கொடுத்த பிச்சைதான் இங்குள்ளவர்கள் மனுசர்களாய் நடமாடுவது'' என்றெல்லாம் குடைய ஆரம்பித்துவிட்டது. பிறகு என்ன? அவன் வைத்ததுதான் சட்டம். சொன்னதுதான் வேதம்.

---

முதல்வித்து - ஆதிநாயகன். பாடித்திரிதரும் பக்தர்காள் - கடவுள் தத்துவத்தை விஸ்தாரமாக எடுத்து வியாக்யானம் பண்ணுகிற தொண்டர்களே! இங்கே வம்மின் - சிறிது இந்தப் பக்கம் வாருங்கள். நீர் உங்கள் பக்கம்தீர பணிமின் - நீங்கள் என்ன செய்யவேண்டும்? உங்களிடம் உள்ள ஆணவம் கரைய வழி காண வேண்டும். பக்கம் - ஆணவம். சித்தம்ஆர்தரும். மனதைக் குளிர்விக்கும். சேவடி - திருவருள்.

குறிப்பு:- ஒரு ஊரில் ஒரு ரௌடி. அவன் தொல்லையை ஒருவன் ஒழித்துக் கட்டினான். பிறகு அவனே மிகப் பெரிய கொடியவனாகிவிட்டான்.

''ரௌடியின் தொல்லைகூடப் பரவாயில்லை போலிருக்கிறதே'' என்று யோசிக்க ஆரம்பித்தார்கள் ஜனங்கள். ஆனாலும் அவனை விட்டு மீளமுடியவில்லை அவர்களால்.

கொடுமையை ஒழித்து நன்மையை உண்டாக்க என்றே ஒவ்வொரு காரியமும் வருகின்றன. அப்படியே செய்யவும் செய்கின்றன. பிறகு அவையே அக்கிரமங்களுக்கெல்லாம் தாயகம் ஆகிவிடுகின்றன.

ஆணவம் என்று ஒன்று இருக்கிறவரை எல்லாம் அப்படி அப்படித்தான்.

ஆணவத்தின் அட்டகாசத்தை எக்களிப்போடு இசையிலும் தாளத்திலும் அபிநயம் பிடித்துக் காட்டுகிறது தமிழ்.

அப்பொழுதுதானே அது ஒழியும்.

## கட்டிப் பிடித்தான், முத்தம் கொடுத்தான் ஆனாலும் பார்க்கவில்லை அவனை

'நாம் தனி' என்னும் பேதம் இருக்கும் வரை ஆணவம் இருக்கும். ஆணவம் ஒன்றுதான் இருக்கும். அது கொழுத்துத் திமிறிக் கொண்டிருக்கும்.

மற்றவற்றைப் பார்க்க வேண்டும், வசப்படுத்த வேண்டும், அதிகாரம் பண்ணவேண்டும் என்றெல்லாம் தந்திரம் வரும். வெட்கம், மானம் ஒன்றும் இருக்காது.

பேதம் விலக விலக - எல்லாம் ஒன்றுதான் என்னும் உண்மை புலப்படப் புலப்பட ஆணவம் சுழலும், உள்ளம் உருகும். ஏன், எலும்பே உருகிவிடும்.

நாம் என்பது இல்லை. எல்லாம் இறைவனுடைய செயல் தான் என்பது அங்கொன்றும் இங்கொன்றுமாய் மாணிக்கவாசக ருக்குத் தெரிந்தது. அந்த அற்புதம் முழுவதையும் கண்ணாரக் காணவேண்டும் என்று ஆசை பிறந்தது. ஆர்வம் பொங்கியது. தவிப்பே உண்டாகிவிட்டது.

"பேருண்மையைப்பார்த்து அனுபவித்துத் திளைக்க வேண்டும். திளைத்துக் கொண்டே இருக்கவேண்டும். உடல், பொருள், ஆவி எல்லாம அதனோடு கரைந்து ஒன்றுபட வேண்டும்" என்று ஆசை வெறியே உண்டாகிவிட்டது மாணிக்கவாசகருக்கு.

இறை அருளும் கைகூடியது. இறைவனுடைய ஆனந்த நடனம் - பேரண்டம் முழுவதும் தொடர்ச்சியாய் நிகழும் திருவருள், அப்படியே மனதில் எழுந்து நின்றது. கண்ணைத் திறந்து பார்த்தால் எங்கும் அதுவே ஜகஜோதியாய்த் தெரிகிறது.

கண்ணை மூடிக் கொண்டாலும் அதைவிடப் பிரகாசமாகவே தெரிகிறது. எதைக் கண்ணாரக் கண்டு அனுபவிக்க வேண்டும் என்று மாணிக்கவாசகர் துடித்தாரோ, அது கண்முன் வந்து நிற்கிறது. ஆனால் அதைப் பார்க்கமுடியவில்லை. நான் என்னும் பேதம் போய்விட்டது. இதுவரை ஆதிக்கம் பண்ணிய நான் என்பது கரையக் கரைய வெட்கம் வருகிறது. நாணம் வருகிறது. அதனால் பார்க்க முடியவில்லை.

நாணத்தால் தலை கவிழ்கிறது. வெட்கத்தால் முகம் திரும்பிக் கொள்கிறது. ''இப்படிக் கூசிப் பின் வாங்குகிறானே அன்பன்'' என்று இறைவனே ஆவலோடு மாணிக்கவாசகரைக் கட்டித் தழுவு கிறார். உடனே வெட்கப்பட்டு முகத்தைத் திருப்பிக் கொள்கிறார் மாணிக்கவாசகர்.

பேதம் கரைகிறது· எல்லாம் ஒன்றென்று ஆகிறது. ஆக ஆகப் புலன்கள் மயங்குகின்றன. செயலற்றுப் போகின்றன. கண்கள் விழித்திருந்தாலும் அவனைப் பார்க்கமுடியவில்லை. வாய் இருந்தும் வார்த்தைகள் வர மாட்டேன் என்கிறது. ஊமையாய்ப் போய்விட்டது மனம்.

''சுத்தப்பைத்தியக்காரனாக அல்லவா இருக்கிறான் அன்பன்'' என்று இறைவனே திகைத்து விடுகிறார். அனுபவம் கலைகிறது. திருவருள்ப் பிரகாசம் ஒதுங்கி நிற்கிறது.

ஏதோ கனவில்க் கண்ட காட்சி போல இருக்கிறது மாணிக்க வாசகருக்கு. ஆனாலும் கனவல்ல, நேருக்கு நேர் நடந்த நனவு தான் என்று தெரிகிறது. அதனால் ஒரு எக்களிப்பே உண்டாகிறது மாணிக்கவாசகருக்கு. அபாரமான எக்களிப்போடு சொல்கிறார் மாணிக்கவாசகர்.

பெருமானே! தேடித் தேடி மறுகினேன் உம்மை. நீரே வலிய என்முன் வந்தீர். ஆனாலும் உம்மைப் பார்க்க முடியவில்லை. வெட்கமும் நாணமும் உம்மைப் பார்க்க விடாமல் என்னைத் திருப்பி விடுகின்றன. இனி, எத்தனை தடவை நீர் என்னை நாடி வந்தாலும் என்நிலை இதுதான்.

உம்மைக் கண்குளிரப்பார்க்கவே முடியாதோ என்று படுகிறது!

இனிப்பாடல்,

(தானன தான
தானன தான
தானன தானான
தன்)

காணும்அ(து) ஒழிந்தேன்
நின்திருப் பாதம்;
கண்டு கண்களிகூ
ரப்
பேணு(ம்)அ(து) ஒழிந்தேன்;
பிதற்று(ம்)அது ஒழிந்தேன்;
பின்னை எம்பெருமா
னே!
தாணுவே! அழிந்தேன்
நின்நினைந்(து) உருகும்
தன்மைஎன் புன்மைக
ளால்
காணும(து) ஒழிந்தேன்;
நீஇனி வரினும்
காணவும் நாணுவ
னே! (138)

---

(காணும் அது ஒழிந்தேன் - எதிரில் நீ வந்து நின்றும் உன்னை நான் பார்க்கமுடியவில்லை. வெட்கம் வந்து முகத்தைத் திருப்பி விட்டேன். கண்டு கண் களிகூரப் பேணும் அது ஒழிந்தேன் - நீ என்னைக் கட்டி அணைத்துத் தழுவினாய்; அப்பொழுது உன்னைக் கண்திறந்து பார்க்கவில்லை நான். நாணம் வந்து தலையைக் கவிழ்த்துவிட்டது. பிதற்றும் அது ஒழிந்தேன் - உன்னிடம் வாய் திறந்து ஒரு சொல் கூட சொல்லவில்லை. அழிந்தேன் - உன்னுடன் ஒன்றுபட்டுக் கரைந்தேன். அப்பொழுதும் - நின் நினைந்து உருகும் தன்மை என்புன்மைகளால் காணும் அது ஒழிந்தேன் - புலன்கள் மயங்கி உருகினேனே தவிர, விழித்திருந்தும் உன்னைப் பார்க்க முடியவில்லை.

கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாமல் போய்விட்டது எனக்கு. இனி, புலம்பி என்ன பலன்? எத்தனை தடவை என்னிடம் நீ வரினும் உன்னை என்னால் பார்க்கமுடியாது. நாணம் என்று ஒன்று இருக்கும்வரை அது என்னைப் பார்க்கவிடாது.)

குறிப்பு : உண்மையை - இறையருளை அனுபவித்துத் திளைக்கிறார் மாணிக்கவாசகர். விடாமல் தொடர்ந்து திளைக்கிறார் மாணிக்கவாசகர். அந்த எக்களிப்பிலிருந்து வருகிறது உல்லாசம். தயக்கமோ, சோர்வோ மாணிக்கவாசகரிடம் இல்லை. அருள் பெற்ற நாயகியின் உல்லாசமும் சந்தோஷமுமாக இருக்கிறார் மாணிக்கவாசகர். மாணிக்கவாசகரின் பெருமிதத்தையும் சதுரப் பாட்டையும் கேட்கிற நமக்குத்தான் மயக்கம் உண்டாகிறது. மாணிக்கவாசகருக்கு அது இல்லை. அவர் ஒய்யாரமாய் செழிப்பாய் இருக்கிறார்.

கனவில் நிகழ்கிற சிறப்பும் பெருமையும் நனவில் வந்து விட்டால் உள்ளம் உருகிவிடும். கல்லாய் இருக்கிற மனமும் பரவச உணர்ச்சியில் கரைந்து உருகிவிடும். அப்பொழுது வெட்கமும் நாணமுமாக இருக்கும்.

வெட்கத்துக்கும் நாணத்துக்கும் ஆளாகிவிட்டால் பெண்மை உணர்ச்சியே மேலோங்கி நிற்கும். மாணிக்கவாசகர் ஆண்தான். பெண்மை உணர்ச்சியோடு குழைந்து நெளிந்து திளைக்கிறார் மாணிக்கவாசகர்.

ஆணும் பெண்ணும் எல்லா வழிகளிலும் ஒன்றுதான். வித்தியாசம் இல்லைதான். ஆனாலும் வெட்கமும் நாணமுமே பெண் வேறு ஆண் வேறு என்று பிரித்து வைக்கிறது.

வெட்கம் மேலோங்கி நிற்கிறபொழுது சொல், செயல் எல்லாம் நாயகி பாவத்தோடு வரும்.

மாணிக்கவாசகர் நாயகி பாவத்தோடு சொல்லியதைப் பார்த்தோம்.

இதுவிஷயமாக ஒருபெண் தன் காதல் அனுபவத்தை எக்களிப்போடு சொல்கிறதை முத்தொள்ளாயிர ஆசிரியர் சொல்கிறார்.

நாயகனோடு சேர்ந்து ஆனந்த பரவசத்தில் திளைப்பதில் குறைவில்லை. பலநாளும் சேர்ந்து அனுபவிக்கிறாள் ஒருபெண். ஆனாலும் அவனை ஒரு நாளாவது ஆசை தீரப் பார்த்ததில்லை என்கிறாள். ஏன், ஊடல் வருகிறது. ஊடலில் திரும்பி நிற்கிறாள். நாயகன் கையைப் பிடித்துத் தழுவுகிற பொழுதோ நாணத்தால் தலைகவிழ்ந்து விடுகிறாள். கலவியிலோ புலன்கள் செயலிழந்து விடுகின்றன. கண்கள் விழித்திருந்தாலும் பார்வை இல்லை,

இப்படியாக ஒவ்வொரு நாளும் போய்விடுகிறது. கண்ணாரக் கண்டு களிக்க முடியாமலே போய் விடுகிறது.

பெண்ணின் எக்களிப்பு எப்படி உல்லாசமாய் வருகிறது என்று பாருங்கள்.

புலவி புறங்கொடுப்பன்,
புல்லிடின்நாண் நிற்பன்,
கலவி களிமயங்கிக்
காணேன்; — நிலவியசீர்
மண்ஆளும் செங்கோல்
வளவனை, யான்இதன்றோ—
கண்ணாரக் கண்டறியா
ஆறு.

---

புலவி - ஊடல். புறங்கொடுப்பன் - திரும்பி நிற்பேன். புல்லிடில் - தழுவினால். நாண்நிற்பன் - நாணத்தால் தலை கவிழ்வேன். கலவி - ஒன்றுபட்டுத் திளைக்கிறபொழுதோ. களிமயங்கிக் காணேன் - ஆனந்த பரவசத்தால் புலன்கள் மயங்க, கண்ணுக்குப் பார்வை இல்லாமல் போய்விட்டது. நிலவியசீர் - வாடாத புகழுக்கு உரிய. மண் ஆளும் செங்கோல் வளவனை - சோழ மண்டலத்து அரசனான சோழர் பெருமானை. கண்ணாரக் கண்டு அறியா ஆறு இது அன்றோ - ஒருநாளும் சரியாகப் பார்க்க முடிகிறதில்லை. காரணம் இந்த வெட்கமும் நாணமும் பண்ணுகிற கூத்தல்லவா! என்ன செய்வேன் நான்!!

## "நில்லுங்கள் நில்லுங்கள்; நன்றாக நில்லுங்கள்."

தப்பித்தவறி யாரிடமும் பேச்சுக் கொடுக்கப் பயமாக இருக்கிறது. எத்தனைதான் தந்திர மந்திரங்களைப் பண்ணினாலும் அவர், தமது பேச்சை நிறுத்துவதாக இல்லை. எதை எதையோ சொல்லிக் கொண்டே இருக்கிறார். அப்படி அவர் என்ன சொல்கிறார்?

"ஒரே அநியாயம் சார்! எங்கு பார்த்தாலும் அக்கிரமம் சார்! காலம் கலிகாலமாய்ப் போய்விட்டது. கலிகாலத்தில் நாம் வாழ்ந்து தொலைக்கிறோம். ஞாயம் என்பதே இல்லை. எதை எடுத்தாலும் தண்டா முண்டாத்தான். என்ன செய்வது? கலிகாலம் இல்லையோ இது."

இப்படி மளமளவென்று பொரிந்து தள்ளிக் கொண்டே இருக்கிறார்.

அவர் கணக்குப்படி கிருதயுகம் என்றும், திரேதாயுகம் என்றும், துவாபரயுகம் என்றும் ஒவ்வொன்றும் பல லட்சம் வருடங்களாய் ஓடிவிட்டன. தற்பொழுது கலியுகம் ஓடிக்கொண்டு இருக்கிறது.

காலம் என்பதே ஒரு தோற்றம். அது ஓடுவதாவது? நடப்பதாவது? நல்லது என்றும் இல்லை, கெட்டது என்றும் இல்லை. நாமும் நம்முடைய காரியங்களுந்தான் நல்லதாகவும் கெட்டதாகவும் தெரிவது. கோளாறு என்பது நம்முடைய காரியங்களில்த்தான் இருக்கிறது.

ஆனாலும் எப்படியோ காலம் காலம் என்று பழியைப் போட்டு விடுகிறோம் நாம்.

நாம் ஒவ்வொருவரும் மனிதர் என்பது உண்மை. நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கைக்குக் கட்டுப்பட்டவர்கள் என்பதும் உண்மை. நமது வாழ்க்கை அறிவினால் கட்டப்பட்டது. அதனால் அறிவு ஆட்டுகிறபடி எல்லாம் வாழ்க்கை ஆடுகிறது. வாழ்க்கை ஆட்டுகிறபடி நாம் ஆடுகிறோம்.

ஆடிக்கொண்டே இருக்கிறோம். ஒரு அடிகூட எடுத்து வைக்க நம்மால் முடிகிறதில்லை.

இதுதான் அறிவு என்று சுட்டிக் காட்டுவது கடினம். ஒன்றுக் கொன்று எதிரான இரண்டு அம்சங்களையும், ஏன் பல பல அம்சங் களையுமே அறிவு என்று பெயரிட்டிருக்கிறோம். அவற்றுள் முதலாவது அம்சம் உயிர்த் தத்துவத்தின் இயல்பு. உடம்போடு வாழ்வதற்கு நடத்தும் செயல், பசித்தால் அழும். வயிறு நிறைந் தால் மகிழும். உறக்கம் வந்தால் உறங்கும். விழிப்பு வந்தவுடன் எழும். குழந்தையைப் பாதுகாக்கும். எதிரியை விரட்டும். எந்த உணர்ச்சியும் இயல்பாய் செயல்வடிவம் பெறும். அதனிடம் பித்தலாட்டம் இருக்காது. திருட்டுத்தனம் என்பது அதனிடம் இருக்கவே இருக்காது.

உணர்ச்சிமயமாக அது இருக்கும். உண்மையானதாகவும் இருக்கும்.

இப்படி உடம்போடு வாழ்வதற்காக உயிரானது செயல்படும் விந்தைதான் முதலாவது அம்சம். ஆனால் நாம் அறிவு, அறிவு என்று சொல்வது இதை அல்ல. அப்படியானால் எதை அறிவு என்று நினைக்கிறோம்.

வாழ்க்கையானது தன் சௌகர்யத்திற்காக அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்துச் சேர்த்து வைத்திருக்கிற அனுபவத் தையே நாம் அறிவு என்கிறோம்.

இந்த அறிவு என்ன செய்கிறது· நம் உணர்ச்சிகளுக்குப் புதுப் புது நிறங்களைக் கொடுக்கின்றது. பேதப்பட்ட ஒவ்வொரு நிறங் களையும் வேஷமாகப் போட்டு உணர்ச்சிகளைப் பொம்மலாட்டம் ஆடவைக்கின்றது. எந்தக் காரியத்திலும் உண்மை இல்லாமல்— அதாவது அன்பே இல்லாமல் பொய்யே மிஞ்சுகிறது. தன்னலம் ஒன்றே அதிகாரம் பண்ணுகிறது.

நம்மிடம் மிக்க மரியாதை உடையவர் நண்பர். தற்செயலாக அவரை ஒரு சமயம் ரயில் நிலையத்தில் பார்க்கிறோம். எங்கிருந்தோ அவருடைய ஆசைநாயகி அவரைத் தேடி வருகிறாள். அவளை எங்கு கொண்டு போவது? எப்படிக்கொண்டு போவது என்னும் கவலையில் தானே அவர் இருப்பார்? அப்படி இருப்பவர் நம்மிடம் கலகலப்பாக இல்லையே? பரபரக்க விழிக்கிறாரே? ஏன் என்று அலட்டிக்கொள்வதில் புண்ணியம் உண்டா? ஒவ்வொருவரும் அப்படி ஒரு காரியத்தில் சிக்கி உழன்ற வண்ணமாகவே இருக்கிறார்கள்.

திருவள்ளுவர் கழகத்தில் இலக்கிய விழா நடந்தது. மூன்று நாட்கள் திருக்குறள் விழா, ஒருநாள் வாசகர் வட்ட விழா.

நான்கு நாட்களும் பல பேச்சாளர்கள் பேசினார்கள். எங்கெங்கிருந்தோ வந்து பேசினார்கள். என்னென்னவோ பதவி வகிப்பவர்கள் தாம் அவர்கள்.

இவ்வளவு பேர் பேசினார்களே? அவர்களில் யாராவது திருவள்ளுவரைப் பற்றி நினைத்தார்களா? இல்லை, தாங்கள் எடுத்துக்கொண்ட விஷயத்தை ஒட்டியாவது, யோசித்தார்களா? அவர்கள் ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்களைப் பற்றித்தான் நினைப்பு. தங்களைத் தவிர வேறு எதைப்பற்றியும் அவர்கள் யோசிக்கத் தயாராக இல்லை.

ஒரு நாள் வழக்காடு மன்றம். கண்ணகி மதுரையை எரித்தது குற்றம் என்று ஒருவர் வழக்குத் தொடுக்கிறார். குற்றம் இல்லை என்று ஒருவர் எதிர் வழக்காடுகிறார். குற்றம் தொடுப்பவர் ஆண். எதிர் வழக்காடுபவர் பெண். வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்க நியமிக்கப்பட்டவரும் ஆண்மகன் தான்.

தீர்ப்பளிக்கும் நடுவர் சொல்கிறார், 'எனக்கு இந்தப்பக்கம் ஒரு கட்சி, அந்தப்பக்கம் ஒரு கட்சி, நான் நடுவில் இருக்கிறேன், இந்தப் பக்கம் பெண். அந்தப்பக்கம் ஆண். நானோ ஆணும் இல்லை, பெண்ணும் இல்லை. இப்படி நடுவில் அகப்பட்டுக்கொண்டு அதுவும் இல்லாமல் இதுவும் இல்லாமல் நிற்பதால்தான் எனக்கு நடுவர் என்று பெயர்.''

இப்படி வார்த்தையோடு கட்டிப்புரண்டு விளையாடுகிறவரால் அக்கம் பக்கம் போக முடியுமா? கம்பரைப் பற்றியோ, இளங்கோவைப் பற்றியோ, வள்ளுவரைப் பற்றியோ அவரால் யோசிக்க முடியுமா?

என்ன சொன்னால் ஜனங்கள் கைதட்டுவார்கள்? எப்படிச் சொன்னால் ஜனங்களை ஏமாற்றலாம்? என்னும் வெறியில் அவர் நிற்கிறார். பிறகு அவர் நகரவில்லையே! நின்ற இடத்தில் நின்று கொண்டே இருக்கிறாரே என்று யோசிக்கிறதற்கு அர்த்தம் உண்டா?

மேலும் சொன்னார் நடுவர், ''பெருமக்களே! நீங்கள்தான் உண்மையான நீதிமன்றம். சிலப்பதிகாரம் குடிமக்கள் காப் பியம். குடிமக்கள் காப்பியத்தில் வருகிற விவகாரத்திற்குத் தீர்ப்பு வழங்கக் குடிமக்களாகிய நீங்கள்தான் நீதிமன்றம். நீங்கள் குடிமக்கள் என்றால் தற்காலக் குடிமக்கள் (குடிக்கும் மக்கள்) இல்லை. அக்காலக் குடிமக்கள். நீங்கள் முன்னவர். அதாவது எங்க ளுக்கு முன்னே இருக்கிறீர்கள்.''

இதையும் ஜனங்கள் கேட்டுக் கொண்டுதான் இருந்தார்கள். கைதட்டினார்கள். ஏன்? பேசுகிறவனோ கேட்கிறவனோ அக்கம் பக்கம் எங்காவது நகர்வதில்லை. ஒவ்வொருவரும் அவரவர் இடத்திலேயே இருக்கிறார்கள். அக்கம்பக்கம் நகர்ந்திருந்தால் அல்லவா? ''விஷயத்திற்கு வாரும் ஐயா, நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருக்கிறீரே, கொஞ்சம் சிலப்பதிகாரத்துக்குள் வந்து விளையாடும்'' என்று சொல்வார்கள்.

கடைசியாக ஒரு மணியை உதிர்த்தார். அது என்ன? ''இரண்டு கட்சிக்காரர்களும் நகைச்சுவையோடு பேச வேண்டும். சுவையில் எல்லாம் சிறந்த சுவை நகைச்சுவை. தொல்காப்பியர் சுவையின் எட்டு வகையைச் சொல்லும்பொழுது,

''நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகைஎன
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப''

என்று நகைச்சுவையை முதலில் சொல்லி இருக்கிறார்.

''பெண்டாட்டி நகை வேண்டும் என்று கேட்டால், நமக்கு அழுகை வரும். அதனால் தான் நகையே அழுகை எனறு தொல் காப்பியர் சேர்த்து வைத்தார்.''

இப்படிப் பேசினார் நடுவராயிருந்த பெரும் பேராசிரியர்.

நகைச்சுவையைப்பற்றி அவருக்கு ஆர்வம் இருந்திருந்தால் ஒரு உண்மையானது உணர்ச்சி மயமாய்ப் பொங்கி கலை வடிவம் பெறுகிறது என்பதைப் பார்த்திருப்பார். ''நகைச்சுவையாக-

ஒரே விளையாட்டாக அது வெளிப்படுவதைப் பார்த்திருப்பார்''! அவர் நகர்ந்திருந்தால் அல்லவா பார்த்திருக்க முடியும்?

பாண்டிய மன்னன் மகனுக்குக் கல்யாணம். ஔவையார் சாப்பாட்டுப் புரைக்குள் போகமுடியாமல் மிக்க சிரமப்பட்டு விட்டார். தம் அனுபவத்தை உணர்ச்சிமயமாகக் கொட்டுகிறார். நகைச்சுவை எப்படி வருகிறது என்று பாருங்கள்.

அறுசுவை உண்டியையா நான் உண்டேன்? கேளுங்கள் நான் உண்ட வகைகளை!, என்று ஆரம்பிக்கிறார் ஔவையார்.

''வண்தமிழை ஆய்ந்த
வழுதிகலி யாணத்தில்
உண்ட பெருக்கம்
உரைக்கக்கேள்! — மிண்டி
நெருக்குண்டேன்; தள்ளுண்டேன்;
நீள்பசியி னாலே
சுருக்குண்டேன்; சோ(று)உண்டி
லேன்''

இந்தப் பாடலைப் பாடிப் பாடி இன்பானுபூதி பெற்றிருந்தால், சுய விளம்பரமாகவே மக்களைச் சிரிக்கத் தூண்டுவாரா? அவருக்குக் கவலை அவரைப் பற்றித்தான். நல்லவேளை இது போன்ற பாடல்களை அவர் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் ''ஒண்டமிழ் என்பது தண்டமிழ் என்றாகி பின்பு வண்டமிழ் என மாறியது என்று வேடிக்கை பண்ணி இருப்பார்.

இனி மதுரையை எரித்தது குற்றம் என்று வாதாடிய வாலிபரோ ''கண்ணகி தன் கணவனாகிய கோவலனை உபசரிக்கத் தவறி விட்டாள். கணவனுடைய தேவைக்குத் தக்கபடி அவள் இன்பம் கொடுக்கவில்லை. கொடுத்திருந்தால், அவன் இவளை விட்டுப் பன்னிரெண்டு வருடம் பிரிந்து மாதவி, வீட்டில் இருப்பானா? அந்தப் பன்னிரெண்டு வருடமும் அவனைத் தன்னிடம் இழுத்துக் கொண்டுவர இவள் ஒரு முயற்சியும் செய்யவில்லையே! பிறகு அவன் இறந்தவுடன் எப்படி மதுரையை எரிக்கலாம்? என்றார்.

---

உண்டேன் உண்டேன் என்று வருகிறது. என்னத்தை? நெருக்குண்டேன், தள்ளுண்டேன், சுருக்குண்டேன் - அதாவது அடி, மிதி, உதைதான் கிடைத்தது. சோறு உண்டிலேன் - கடைசிவரை சாப்பாடு கிடைக்கவில்லைதான்.

எதிர்த்து வழக்காடிய மாதர்குல திலகமோ? "அவர் சொல்வது சுத்தப் பொய். கோவலனுடைய இச்சைக்கு ஏற்றபடி எல்லாம் இடங்கொடுத்து, அவனுக்கு இன்பம் கொடுத்தாள் கண்ணகி. கோவலனும், கண்ணகியும் திருமணம் ஆனநாள் இரவில் சப்பர மஞ்சக்கட்டிலில் ஒருவரை ஒருவர் இரண்டிரண்டு கைகளாலும் இறுகக் கட்டிப் பிடித்துப் படுத்திருந்தார்கள்" என்று இளங்கோவடிகள் பாடுகிறார். "நல்ல பாம்பும் சாரைப் பாம்பும் பின்னிப் பிணைந்து நின்றால் எப்படி இருக்குமோ? அப்படிப் பின்னிப் பிணைந்து படுத்திருந்தார்கள் என்று பாடி இருக்கிறார்" என்றும் விளக்குகிறார் அம்மணி! விளக்கியது மட்டும் இல்லை. பாடலையும் சபையோர் மகிழப் பாடிக் காட்டுகிறார். "இல்லற சுகத்தை இப்படி வழங்கிய கண்ணகியை எப்படிக் குறைகூறலாம்" என்று சீறுகிறார்.

அம்மணி பேசப்பேச ஆடவர்களுக்கு ஒரே கொண்டாட்டம். பெண்களுக்கு அதைவிடக் கொண்டாட்டம். காரணம் என்ன? நாம் எல்லோரும் நின்ற இடத்திலேயே நிற்கிறோம். வாழ்க்கை என்றால் என்ன என்று தேடிப் பார்த்ததில்லை. ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு ஆணும் இல்லற இன்பத்தை அவரவர் வீட்டில் துய்த்திருந்தால், "அடடா புனிதமான மனைவாழ் இன்பத்தை இந்தக் கழுதைகள் அம்பலத்தில் ஏற்றி அலங்கோலப் படுத்துகின்றனவே" என்று வேகம் உண்டாகி இருக்கும். வேகத்தில் சபையை விட்டே ஆணும் பெண்ணும் எழுந்திருக்கும். ஒரு ஆள் கூட நகரவில்லையே. உடம்பைக்கூட நெளித்துக் கொடுக்கவில்லையே!

காரணம் என்ன? யாரும், நாம் வாழ்கிறோம் என்று நினைக்கவில்லை. வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற நினைப்பே இல்லாமல் மனித ஜன்மம் வாழ்க்கையைக் கடத்திக் கொண்டிருக்கிறது.

இன்னொரு நாள் இன்னொரு பிரசங்கி சொன்னார். அமெரிக்காக்காரன் சந்திரமண்டலம் போய் உலாவிக்கொண்டிருக்கிறான். அவன் புதுசு புதுசாகத் தேடிக் கொண்டிருக்கிறான். நாமோ பழைமையிலேயே புரண்டு கொண்டிருக்கிறோம். அவன் குடும்ப வாழ்க்கையைப் பாருங்கள். கணவன் செத்து விட்டால், மனைவி உடனே புதிதாகக் கல்யாணம் பண்ணிக் கொள்வாள். கணவன் சண்டை போட்டாலும் விவாகரத்துச் செய்து வேறு ஒரு

வனைக் கல்யாணம் பண்ணிக்கொள்வாள். இந்தப் புருஷன் பிடிக்கவில்லை. வேறொருவனைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என விரும்பினால், உடனே அப்படியே செய்து கொள் வாள். அவர்கள் புதுமையைப் போற்றுகிறார்கள். நாமோ பழைமையைப் போற்றுகிறோம். கணவன் செத்த பிறகும் நம் பெண்கள் கைம்பெண் கோலத்திலேயே இருக்க வேண்டியுள்ளது.''

பிரசங்கியார் எப்படி நின்ற இடத்திலேயே நிற்கிறார் என்று பார்த்தீர்களா? எதையாவது பேசி, தான் ஒரு பெரிய அறிவாளி என்று பெயர் வாங்கிவிட வேண்டும். அப்படி ஒரு வெறி, அந்த வெறி அவரை அக்கம்பக்கம் பார்க்கவிடாமல், நிற்கவைத்து விடு கிறது.

இப்படி நின்ற இடத்திலேயே நிற்கிறது மன்பதைக் கூட்டம். இருட்டுக்கு உள்ளேயே துழாவித் துழாவி நிற்கிறது. மாணிக்க வாசகரோ உண்மையைக் கண்டுவிட்டார். அந்த ஒளியை நாடிப் போகிறார். நிற்கிறவர்களைக் கூப்பிட்டுப் பார்த்தார். யாரும் நகர்வதாக இல்லை. வருத்தப்பட்டுச் சொல்லிக் கொண்டே போகி றார். எப்படி?

''நிற்பார் நிற்க நிலையாக; நில்லோம் இனிநாம்
செல்வோமே;
பொற்பால் ஒப்பாம் திருமேனிப் புயங்கன் ஆள்வான்
பொன்னடிக்கே.''

என்னுடைய அன்பர் ஒருவர் மிக்க செல்வாக்குடையவர். பணக்காரர். பெரிய பதவியிலும் இருந்தார். அவருடைய மனைவி சாதாரண வீட்டைச் சேர்ந்தவள் ஆனாலும் அன்போடு தம் மனைவியை அவர் உபசரித்து வந்தார். தேவதையைப் பேணுவது போலத் தான் பேணி மதித்தார் மனைவியை.

நண்பர் தாராள குணம் உடையவர், உற்றார் உறவினர் களுக்கெல்லாம் உதவுவார். நண்பர்களுக்கு உதவுவார். அவர் இப்படித் தாராளமாய் இருக்க இருக்க மனைவிக்கு ஆங்காரம் ஏறியது, உச்சத்திற்கே ஏறிவிட்டது. அவரோடு சதா சண்டை போடுவாள். தெருக்கூத்தே ஆடி விடுவாள். லஜ்ஜையைப் பற்றி அவள் கவலைப்படவே இல்லை. வந்தவர் போனவர்களிடம் எல்லாம் அவரைப்பற்றிக் கேவலமாகப் பேசுவாள்.

காரணம் என்ன?

"கணவர் உதவுகிற ஒவ்வொரு தம்பிடியும் தன்னுடைய முதல். தனக்கே உரிய முதல். தன்னுடைய நலத்திற்கும், தன் பெற்றோர், உடன் பிறப்புகளுக்குமே பயன்படவேண்டும். அவர்களும் தன்னுடைய தயவில் தன்னிடமிருந்துதான் பெறவேண்டும்" என்று நினைத்தாள். இந்த நினைப்பு வந்துவிட்டால் மற்றவர்களுக்குக் கணவர் கொடுத்து உதவுவதைத் தாங்க முடியுமா?

என் நண்பரைத்தவிர வேறு ஒருவன் அவளைக் கல்யாணம் பண்ணி இருந்தான் என்று வைத்துக் கொள்வோம். அவள் வாழ்க்கை நாலு அணாப் பெறாது. அவ்வளவு மட்டமானவள் அவள். அவளுக்கு இப்படி வாழ்க்கையில் மணமும் வளமும் கொடுத்தபிறகும் அவள் தன்னையே நினைக்கிறாள். தனக்கு வாழ்வளித்த புருஷனைக்கூட அவளால் நினைத்துப் பார்க்கமுடியவில்லை. அதனால் அவள் நின்ற இடத்திலேயே நிற்கிறாள். கணவன் பக்கம் கூட அவளால் நெருங்கி வரமுடியவில்லை. கடவுள் பக்கம் அவள் எப்படி நெருங்கி வந்து விடுவாள்?

மாணிக்கவாசகர் சொல்கிறார். போய்க்கொண்டே சொல்கிறார்.

"நிற்பார் நிற்க நிலையாக; நில்லோம் இனிநாம் செல்வோமே,
பொற்பால் ஒப்பாம் திருமேனி, புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே"

(நிற்பார் நிற்க நிலையாக)

ஒரு வியாபாரி. அவர் மகனுக்கு சி.ஏ. படிக்க ஆசை என்னுடைய நண்பரிடம் சொல்லி இடம் வாங்கிக்கொடுக்க வேண்டும் என்று என்னை வற்புறுத்தினார். "ஐயாயிரம் ரூபாயோ ஆறாயிரம் ரூபாயோ அதற்காகச் செலவழிக்கிறேன்" என்று துடித்தார். இரண்டு வார காலம் என்னிடம் நடையாய் நடந்தார்.

"நீர் ஒன்றும் செலவழிக்க வேண்டாம். என் பையனிடம் இந்தக்கடிதத்தைக் கொண்டு போய்க் கொடும், அவன்தன் நண்பரிடம் சொல்லி உம் மகனுக்கு இடம் வாங்கிக் கொடுத்து விடுவான்" என்று மதுரைக்கு அனுப்பி வைத்தேன். அப்படியே போனார். அவர் பையனுக்கு இடம் கிடைத்து விட்டது அவன் படித்துக் கொண்டிருக்கிறான்.

ஆறுமாதங்கூட ஆகவில்லை. இலக்கியம் சம்பத்தமான ஒரு மாத இதழுக்கு, ஆண்டுக்குப் பதினைந்து ரூபாய்ச் சந்தாக் கட்டும்படி வேண்டினேன். வியாபாரி சொன்னார்.

''எனக்கு எதுக்குசார் பத்திரிக்கை? படிக்கவா எனக்கு நேரம் இருக்கிறது? உங்களுக்காக வேண்டுமானால் இந்த ஒரு வருஷத்துக்குப் பதினைந்து ரூபாய் தருகிறேன். அப்புறம் வேண்டாம்'' மனிதன் எங்கேநிற்கிறான் என்று பார்த்தீர்களா? நகராமல் அவன் நின்று கொண்டே இருக்கிறதைப் பார்த்தீர்களா?

தன்மகனுக்கு இடம் வாங்கித் தாருங்கள், எவ்வளவு வேண்டுமானாலும் பணம் தருகிறேன் என்கிறான். பணம் வேண்டாம் என்று மறுத்து இடம் கொடுத்து உதவினால், ஒரு பத்திரிகை கூட வாங்க யோசிக்கிறான். அவன் காரியத்திலேயே அவன் நிற்கிறான். மாணிக்கவாசகர் சொல்கிறார்.

''நிற்பார் நிற்க நிலையாக; நில்லோம் இனி நாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாம் திருமேனி, புயங்கன் ஆள்வான் பொன்ன
டிக்கே''

இனி, எஸ்.எஸ்.எல்.சி யிலும் டைப் அடிப்பதிலும் தேறிய ஒரு பெண். ஏழைக் குடும்பம்.

நான் சென்னையில் இருக்கும் பொழுது என்னைத் தேடி அங்கு வந்துவிட்டாள். ''எனக்கு எப்படியாவது வேலை வாங்கிக் கொடுங்கள்'' என்று கெஞ்சினாள்.

உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி அவர்களிடம் அழைத்துப் போய், இவள் குடும்ப நிலையைச் சொல்லி உதவ வேண்டினேன். நீதிபதி அவர்கள் உடனே தம் நீதிமன்றத்தில் ஒரு டைப்பிஸ்டாக வேலை கொடுத்து விட்டார்கள். அறுநூறு எழுநூறு என்று இப்பொழுது சம்பளம் வாங்குகிறாள்.

வேலை கிடைத்தபிறகு இரண்டு தடவை ஊர் வந்திருக்கிறாள். வாரக்கணக்கில் தங்கி இருக்கிறாள், ஆனாலும் அவளிடம் எள்ளளவு நன்றி உணர்ச்சிகூட இல்லை. என்னை வந்து மரியாதைக்கு கூடப் பார்க்கவில்லை. அது மட்டும் அல்ல. இந்த வேலையே வேறொருவர் வாங்கிக் கொடுத்தது என்று சொல்கிறாள். சென்னையிலுள்ள ஒரு பெரிய ரிட்டையர்டு ஆபீஸர் அவளுக்கு ஒருவகையில் உறவினர். அவர்தான் தனக்கு வேலை வாங்கித் தந்தார் என்று சொல்லிக்கொண்டு திரிகிறாள்.

ஏன் அப்படிப் புரண்டு உருள்கிறாள்? அதில்தான் மனுஷநிலை இருக்கிறது. சாதாரண வாத்தியார் ஒருவர் வாங்கித் தந்த உத்தி

யோகத்தில் நாம் இருக்கிறோம் என்று நினைப்பதற்கே அவள் பயப்படுகிறாள். அதைக் கேவலமாக நினைக்கிறாள்.

தனக்கென்று ஒரு நிலை கிடைத்துவிட்டால், அந்த நிலையை விட்டு அக்கம் பக்கம் போக ஒருவருக்கும் துணிச்சல் இல்லை. அந்த நிலையில் நின்றுகொண்டே மற்றவர்களைப் பார்க்கிறோம்.

அப்படிப் பார்க்கும் பொழுது நம் நிலைக்கு மேலே உள்ளவர் களிடம் அடிமை ஆவதில் இன்பம். ஒத்த நிலையில் உள்ளவர்களை யும் கீழ்நிலையில் உள்ளவர்களையும் அவமதிப்பதிலோ பேரின்பம்.

ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரி, யாரும் அவரவர் நிற்கும் நிலையை விட்டுக் கொடுக்கமாட்டார்கள். விட்டுக்கொடுக் கும் மனப்பான்மை இருந்தால் அல்லவா வேறு இடத்தை எட்டிப் பார்ப்பார்கள்? அந்தப் பக்குவம் இன்னும் மனிதகுலத்திற்கு வர வில்லை.

''நிற்பார் நிற்க நிலையாக நில்லோம் இனிநாம் செல்வோமே —பொற்பால் ஒப்பாம் திருமேனி புயங்கன் ஆள்வான் பொன்ன டிக்கே (நிற்பார் நிற்க நிலையாக)'' என்று வளைத்து வளைத்துக் கும்மி அடிக்கிறார் மாணிக்கவாசகர்.

எல்லோருக்கும் நன்மை தரக்கூடிய பொதுக்காரியம் என்றே வைத்துக் கொள்ளுங்கள். அதை மனுவாக எழுதி நூற்றுக்கணக் கான பேர் அதில் கையொப்பம் இட்டு விட்டார்கள். பிரமுகர் ஒரு வரிடம் அது கையெழுத்துக்கு வருகிறது. இரண்டு மூன்று தடவை மனுவைக் கவனமாகப்படிக்கிறார் பிரமுகர். பிறகு வந்தவர்களைப் பார்க்கிறார். மனுவை அவர்கள் கையில் கொடுக்கிறார். ''உங்கள் கையெழுத்தும் வேண்டும்'' என்று கேட்கிறார்கள் வந்தவர்கள். பிர முகர் சொல்கிறார் ''நான் ஏன் கையெழுத்துப் போட வேண்டும்? இதில் எனக்கென்ன பிரயோசனம் இருக்கிறது? இதனால் எனக்கு ஒரு புண்ணியமும் இல்லை. அதனால் நான் கையெழுத்துப் போட மாட்டேன்.''

ஒவ்வொரு மனிதனும் இப்படித்தான் இருக்கிறான். எது ஆனாலும் சரி, அதில் தனக்கென்று என்ன இருக்கிறது என்றுதான் பார்க்கிறான். பிறகு நகருவானா?

சென்னைப்பட்டினத்தில் ஒரு இடத்தில் நீங்கள் இடம் தெரி யாமல் திகைத்து விடுகிறீர்கள். அந்த இடத்திலுள்ள பல வீடுகளில்

போய் உங்களுக்கு வேண்டிய விலாசத்தை விசாரிக்கிறீர்கள். அவ்வளவு பேரும் என்ன சொல்வார்கள்? தெரியாது என்பவர்கள் பலர்! அப்படி ஒரு இடம் இந்தப் பக்கம் இல்லையே என்பவர்கள் பலர்! அது வேறொரு பகுதியில் அல்லவா இருக்கிறது என்பவர்கள் பலர்!! அங்கு கேளுங்கள் என்று அலைக்கழிப்பவர்கள் பலர். அவ்வளவு பேரும் அங்கு பல ஆண்டுகளாக வாழ்பவர்கள் தான். ஆனாலும் யோசித்துப் பொறுப்போடு ஒருவரும் பதில் சொல்லமாட்டார்கள்.

அலைந்து திரிந்து ஒரு வழியாக வேண்டிய இடத்தை நாம் கண்டு பிடித்து விடுகிறோம். நம்மைக் குழப்பினார்களே, அவர்களுடைய தெருவில் தான் நாம் விசாரித்த இடம் இருக்கிறது. சில சமயம் அவர்கள் வீட்டை ஒட்டிய வீடாகவும் நாம் விசாரித்த இடம் இருக்கும். சில சமயம் அவர்கள் குடியிருக்கும் வீட்டின் மாடியிலோ, கீழ்ப் பகுதியிலோ கூட அந்த இடம் இருக்கலாம். அதைக் கூட பொறுப்போடு யோசித்துப் பார்க்கவோ பதில் சொல்லவோ அவர்களால் முடியவில்லை.

எவனானாலும் சரி, அவனவன், அவனவனாகவே இருக்கிறான். மற்றவனைப்பற்றி நினைக்காமலே இருக்கிறான்.

பெரிய ரயில் நிலையமோ, விமான நிலையமோ, அரசாங்க அலுவலகமோ, மருத்துவ நிலையமோ, கலைக்கழகமோ எங்காவது ஒரு இடத்திற்கு நீங்கள் போங்கள். பல ஆண்டு காலம் பணி புரியும் ஊழியர்களிடமே உங்களுக்கு வேண்டிய அங்குள்ள ஒரு பகுதியைப்பற்றி விசாரியுங்கள். அது அவர்கள் பணிபுரியும் பகுதியாக இருந்தால் நீங்கள் பிழைத்தீர்கள். இல்லாவிட்டால் உங்களைக் கொன்றே போடுவார்கள்! அவரைக் கேளுங்கள். அங்கு போய்க் கேளுங்கள், இவரைக் கேளுங்கள், இங்குபோய்க் கேளுங்கள் என்று அங்கும் இங்கும் உங்களை அலைக்கழித்துக் கொன்றே போடுவார்கள்.

ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறான். அந்தக் கவலை ஒன்றிலேயே நின்றுகொண்டிருக்கிறான். அதனால் வேறு எதைப்பற்றிய புத்தியும் மனிதனுக்கு இல்லை. பிறகு எப்படி அவன் உண்மையைப் பற்றி யோசிப்பான்? அதை எப்படி அவன் நாடுவான்? கவலையிலேயே உட்கார்ந்திருக்கிறான். கவலையிலேயே நிற்கிறான். கவலையிலேயே படுத்து உறங்குகிறான். தெற்கே வடக்கே அவன் திரும்பியது கூட இல்லை.

மாணிக்கவாசகர் சொல்கிறார். ''நிற்பார் நிற்க நிலையாக. நில்லோம் இனிநாம் செல்வோமே; பொற்பால் ஒப்பாம் திரு மேனி, புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே''

நாம் வாழும் பூமி சூரியனைச் சுற்றிக்கொண்டே இருக்கிறது. ஓய்வே இல்லாமல்ச் சுற்றிக் கொண்டே இருக்கிறது. ஐம்பத்தாறு கோடி மைல் நீள வட்டப் பாதையில் ஊழி ஊழி காலமாகச் சுற்றிச் சுற்றி வருகிறது. செவ்வாய், புதன் முதலிய கிரகங்களும் அப்படியே சுற்றிச் சுற்றி வருகின்றன. கோடான கோடி நட்சத் திரங்களும் சுற்றிக்கொண்டே இருக்கின்றன.

நம் உடம்பில் உள்ள ரத்தத்தை எடுத்துக் கொண்டால் ஒரு துளி ரத்தத்தில் பல கோடி அணுக்கள் உள்ளன என்கிறார்கள். ஒவ்வொரு அணுவும் அளவில்லாதபடி வேகமாய்ச் சுழல்கின்றன. அணுவில் இருக்கும் நுண்துகள் களும் சுற்றிக்கொண்டே உள்ளன.

அண்ட பிண்ட சராசரம் அவ்வளவும் நிற்காமல் ஓடிக் கொண்டே இருக்கின்றன. ஆனால் இவை எங்கே ஓடுகின்றன? எதை நோக்கி ஓடுகின்றன? என்பதை யோசித்துப் பார்த்தால் அவை ஓடவில்லை, நின்ற இடத்திலேயே நிற்கின்றன என்றுதான் சொல்லவேண்டும். வளைய வளைய வந்த வண்ணமாய்த்தானே உள்ளன? எங்காவது போய்விட முடிந்ததா?

தனக்கென்று வகுத்து வைத்த வழியை,பாதையை, திசையை இடத்தை நிலையைவிட்டு அவற்றால் ஒரு மஞ்சாடி கூட விலகிப் போக முடியவில்லை.

தனக்காகத் தன்னைத் தானே சுற்றிவருவதாகவே இருக்கிறது ஒவ்வொரு காரியமும்.

தான் என்பதை விட்டால்தான் மற்றொன்றைத் தேடிப்போக முடியும். அப்படிப் போகவேண்டும் என்கிறார் மாணிக்கவாசகர். ''நின்ற இடத்திலேயே நின்று கால்தேய்ந்து போகிறீர்களே! நன்றாக நில்லுங்கள்! நான் புறப்பட்டு விட்டேன். தேடப்போகி றேன்'' என்கிறார் மாணிக்கவாசகர்.

மேலும் சொல்கிறார், ''உஷாராய் நிற்கிற நண்பர்களே! காலை அழுத்தமாய் ஊன்றிநிற்கும் நண்பர்களே! நில்லுங்கள், நில் லுங்கள்! கவனமாய் நில்லுங்கள்! இடத்தை யாருக்கும் விட்டுக் கொடுத்துவிடாதீர்கள். உறைந்து நில்லுங்கள்! ஆனால் ஒன்று,

உண்மையின் ஒளி உங்கள் மேலும் வீசத்தான் போகிறது. அடடா ஏமாந்து போனேமே! எங்கே நிற்கிறோம் நாம்? போய்ச்சேர வேண்டிய இடத்தை மறந்து விட்டோமே'' என்னும் உண்மை தெரியத்தான் போகிறது உங்களுக்கும்! தெரிந்து என்ன பலன்? உங்கள் காலடியை எடுத்துத் தூக்கி வைப்பதற்குள், அதனடியில் உட்கார்ந்திருக்கும் எமன், உங்கள் காலை வாரிவிட்டுவிடுவான்.

காலதாமதம் செய்யலாமா நீங்கள்? பிறகு யோசித்து என்ன பலன்? போன நாட்களை எண்ணிக் கணக்கிடுவதால் பிரயோசனம் உண்டா?

''நிற்பீர் எல்லாம் தாழாதே நிற்கும் பரிசே ஒருப்படுமின்; பிற்பால் நின்று நாள்கணித்தால் பெறுதற்(கு) அரியன் பெம் மானே?''

எத்தனையோ நோய்கள் நம் உடம்பில் இருக்கின்றன. நமக்கு அவை ஒன்றும் தெரிவதில்லை. உடம்பைப் பற்றியும் நாம் நினைப்பதில்லை. ஒரு நோயானது வெளிப்பட்டு நம்மைக் கசக்கிப் பிழிகிறது. அவ்வளவுதான். உடம்பைப் பற்றி யோசிக்கிறோம், உடம்பின் மேல் ஆர்வம் சுரக்கிறது. மருந்து சாப்பிடுகிறோம், அறுவைச்சிகிச்சைக்குக்கூடத் தயாராகி விடுகிறோம். உடம்பி னிடத்து அன்பு பீறிட்டுவருகிறது.

மனதின்கதையும் அப்படித்தான், பல நோய்கள் அதனிடம் இருக்கின்றன. ஒன்றையும் நாம் கவனிக்கிறதில்லை. மனதைப் பற்றிய யோசனையே நம்மிடம் இல்லை. மனதில் உள்ள ஒரு நோயைப் பார்த்து விட்டால் போதும், மனதின் மேல் ஆர்வம் உண்டாகிவிடும். உண்மையின் மேல் பக்தியே சுரந்துவிடும். அதன் பிறகு நின்ற இடத்திலேயே நிற்க முடியுமா? போய்க் கொண்டே இருக்க வேண்டியதுதான். மாணிக்கவாசகர் போய்க்கொண்டே இருக்கிறார்.

இனிப் பாடலின் முழு உருவத்தையும் பார்ப்போம்.

(தான தான!
 தானன தன்
தான தான!
 தானன தன்)

நிற்பார் நிற்க;
நிலையா க;
நில்லோம் இனிநாம்
செல்வோ மே;
பொற்பால் ஒப்பாம்
திருமே னிப்
புயங்கன்; ஆள்வான்
பொன்னடிக் கே;
நிற்பீர் எல்லாம்
தாழா தே;
நிற்கும் பரிசே
ஒருப்படு மின்;
பிற்பால் நின்று
நாள்கணித் தால்
பெறுதற்(கு) அரியன்
பெம்மா னே; (139)

---

மாணிக்கவாசகரின் பரிவை—பக்தியைப் படம் எழுதிக் காட்டுவது போலக் காட்டுகிறது தமிழ். பாடலைப் பாடப்பாட வார்த்தையில் இருக்கிற தாளம் நடனமாடுவது தெரியும். அந்தத் தாளந் தான் சங்கீதம். அது கவியாய் உருவெடுக்கிறது.

# பயத்தை விட்டால் போதும்

உலகில் ஆங்காங்கு அருளாளர்கள் தோன்றி இருக்கிறார்கள். மக்களின் துயரத்தையும் அறியாமையையும் கண்டு உருகி இருக்கிறார்கள்.

கருணாகரமூர்த்திகளாகிய அந்த உத்தமர்கள் மக்களின் பயத்தை நீக்குவதற்கும், தைர்யத்தை உண்டாக்குவதற்கும் வீர தீரத்தோடு செயல்பட்டார்கள்.

அறியாமையும் மடமையும் தவிடு பொடியாய் நொறுங்கு வதற்காக அவர்கள் அஞ்சாமல் போராடினார்கள். வீறு கொண்டு எழுங்கள் என்று ஜனங்களை அவர்கள் தட்டி எழுப்பினார்கள். கண்ணைத் திறந்து பாருங்கள், கொடுமையை எட்டி மிதியுங்கள், நல்லதைச்செய்யுங்கள், அல்லதைவிடுங்கள் என்று முழங்கினார்கள்.

அவர்களுடைய சொல் அமிர்தமாக இருந்தது. ஆனால் வெட்டொன்று துண்டிரண்டாகவே ஒவ்வொரு சொல்லும் விழுந்தன. பேரம் கீரம் ஒன்றும் இல்லாமல், பொருத்தில்அடித்தது மாதிரி இருந்தன ஒவ்வொரு சொல்லும்.

அருளாளர்களுடைய சொல்லைப் பார்க்கிற பொழுது நமக்கு என்ன தெரிகிறது? அவர்கள் எல்லோரும் பெரிய பெரிய புரட்சிக் காரர்கள் என்று தெரிகிறது. பொய்யையும் கொடுமையையும் தொடர்ந்து எதிர்த்து அழித்த வீரர்கள் என்று தெரிகிறது. அதற்காகச் சர்வ பரித் தியாகம் செய்த தீரர்கள் என்று தெரிகிறது.

மாணிக்கவாசகரும் அருளாளர்தான். பெரிய புரட்சிக்காரர் தான். வீரதீரம் மிக்க பெரிய புரட்சியையே உண்டாக்கியவர்

மாணிக்கவாசகர். "சோம்பலிலும் மூடத்தனத்திலும் கிடந்து உழல்கிற மக்களை எப்படி அவர் தட்டி எழுப்புகிறார் என்று பாருங்கள்.

ஆணவம், திமிர், பொறாமை ஆகிய பிசாசுகளின் பிடியில் அகப்பட்டு உழலும் அன்பர்களே! அவற்றை உதறி எறியுங்கள். காலடியில் போட்டு அவற்றை மிதியுங்கள். அதற்காகக் கூரிய வாளையே கையில் ஏந்துங்கள். அதாவது அன்பு, அருள், மெய்யுணர்வு என்னும் ஞானவாளைத் தைர்யமாக எடுங்கள். கையில் பிடியுங்கள்.

எல்லாம் அவன் செயலே என்னும் நாதத்தைப் போர் முரசாக வைத்து முழங்குங்கள். பக்திப் பரவசம் என்னும் குதிரை மீதேறி, தெள்ளத் தெளிந்த மதிக்குடை நீழலில் அஞ்சாமல் அணிவகுத்து வாருங்கள்.

திருநீறுதான் கவசம். எதிரியின் எந்த ஆயுதமும் ஊடுருவ முடியாத கவசம்.

"வாருங்கள், வாருங்கள், ஆனந்தமயமான சத்திய உலகம். நம் வரவை எதிர்பார்த்து நிற்கிறது. தயங்காதீர்கள். சோர்வடையாதீர்கள்" என்று புரட்சிகரமாக முழங்குகிறார் மாணிக்கவாசகர்.

(தானான தானான
தான தனனான)

ஞானவாள் ஏந்தும் ஐயர்
நாதப் பறைஅறைமின்,
மானமா ஏறும், ஐயர்
மதிவெண் குடைகவிமின்,
ஆனநீற் றுக்கவசம்
அடையப் புகுமின்கள்;
வானஊர் கொள்வோம்நாம்;
மாயப்படை வாராமே. (140)

---

மானமா - பக்திப் பரவசமாகிய குதிரை. மா - குதிரை. ஆனநீற்று கவசம் - திருநீறுதான் போர்க்கவசம். பசுஞ்சாணத்தை எருவாக்கி உண்டான திருநீறு. ஆன் - பசு.

# நம்முள் நாம்

மனிதன் ஒரு அற்புதமான பிராணி. மனிதனிடம் மூன்று தத்துவங்கள் இருக்கின்றன. உடம்பு, உயிர், உணர்ச்சி என்னும் மூன்று தத்துவங்கள் இருக்கின்றன. இந்த மூன்றும் அற்புத மானவை. அழகுமயமானவை.

மேலே குறிப்பிட்ட மூன்று தத்துவங்களும் இணைந்து சுருதி பிறழாமல் செயல்படுகிற அளவு தான் மனிதன். இதில் உணர்ச்சி என்னும் சிந்தனைச்செல்வம் விலகிவிட்டால் போதும், மனிதன் மனிதனாக இருக்க மாட்டான். வேறு பிராணியே ஆகிவிடுவான்.

உயிரும் உடம்பும் கூடிக்குலாவிச் சேர்ந்திருக்கிற பொழுது மனிதன் எவ்வளவு அழகாக இருக்கிறான்? கந்தர்வன் கூட அவனுடன் போட்டி போட முடியாது. மனிதனுடைய காரியங் களில் தான் அப்பொழுது எத்தனை எத்தனை விந்தைகளும் அற்புதங்களும் நிறைந்துள்ளன?

ஆனால் உடம்பைவிட்டு உயிர் நழுவிப்போய் விட்டாலோ அழகும் போய்விடுகிறது. அற்புதமும் போய்விடுகிறது. எல்லாம் அலங்கோலமாய்ச் சப்பள சளபுள என்று ஆகிவிடுகிறது உடம்பு.

இனி, உயிரின் கதையும் அப்படித்தான். உடம்போடு சேர்ந்து செயல்படுகிற பொழுதுதான் உயிருக்கு மரியாதை. அப்பொழுது தான் அது இன்பமயமாக ஒளிரும், உல்லாசமும் சந்தோஷமும் அப்பொழுதுதான் உயிரிடமிருந்து ஜொலிக்கும். உடம்பைவிட்டு வெளியேறி அங்கும் இங்கும் அது சுற்றித்திரிகிற பொழுது அழகு போய்விடுகிறது. பிசாசாகவே ஆகிவிடுகிறது.

உடம்பும் உயிரும் கூடி இயங்குவதுதான் ஆனந்தம். அதுதான் வாழ்க்கை, அதுதான் கலை. அதுதான் மோட்சம், அதாவது விடுதலை.

ஒன்றை விட்டு ஒன்று ஓடிப்போவது விடுதலை ஆகாது. மனிதன் ஆனந்தமயமானவன். ஆனால் ஆனந்தத்தை இழந்து விட்டான் மனிதன். இழந்துவிட்ட காரணத்தால் அதை எப்படி யாவது அடைந்து விடவேண்டும் என்று துடிக்கிறான். அது காரணமாக ஆனந்தமானது தன்னிடம் இல்லையே என்று பதறுகிறான். வேறு எங்கேயோ, எட்டாத பரவெளியில் கட்டம் கட்டமாகக் கட்டப்பட்டு தொங்கவிடப்பட்டுள்ளது இன்பம் என்று மயங்குகிறான். மோட்சலோகம் என்றும் சொர்க்கலோகம் என்றும் புலம்பிப்புலம்பி வாடுகிறான்.

உண்மையான ஆனந்தம், அதாவது சொர்க்கம் என்பது நாம் தான். நம்மைப் போலவே ஒவ்வொருவரும் ஆனந்தமயமான மோட்சந்தான். நமது வீடு, தெரு, ஊர், நாடு, உலகம் எல்லாமே ஆனந்தம்தான். இவ்வளவையும் விட்டு விட்டு வேறு எங்கு போய்க் காண முடியும் ஆனந்தமயமாகிய இன்பத்தை - அதாவது மோட்சத்தை?

நாமும் நம்மைச் சேர்ந்தவர்களும் அன்போடு சேர்ந்து வாழ்வதுதான் ஆனந்தம். இந்த நினைப்பு வந்துவிட்டாலே போதும்! அப்பொழுதே பேரானந்த மயமாகிவிடுகிறான் மனிதன்.

மனைவி மக்களோடு சேர்ந்து அன்போடு குடும்பம் நடத்துகிற காரியமானது உயிரும் உடம்பும் சேர்ந்து செயல்படுகிற காரியமே தான். குடும்பம் நடத்தத் தெரியாமல் சிதறி ஓடுவது விடுதலை ஆகாது. குடும்பத்தோடு சேர்ந்து வீட்டில் ஆனந்தமாக வாழ்வதே இன்பம். இதை உணர்ந்த நம் முன்னோர்கள் மோட்சத்திற்கு வீடு என்றே பெயரிட்டார்கள். காடு என்றோ, மலை என்றோ நதிக்கரை என்றோ, குகை என்றோ அவர்கள் பெயர் வைக்க வில்லை.

மனைவி மக்களோடு வீட்டில் இருந்து வாழ்வதுதான் உண்மையான விடுதலை. இந்த விடுதலையை உணர்ந்து இன்புறுவதற்கு உடம்பும் மனமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். சுத்தமாக இருக்க வேண்டும். உயிரும் உடம்பும் துணவனும் மனைவியுமாகச் சேர்ந்து நடத்துகிற குடும்பந்தான்

ஆதிக்குடும்பம். அந்தத் தம்பதிகளின் செல்வக் குழந்தைதான் மனம் என்னும் உணர்ச்சி. அற்புதத்திலும் அற்புதமான மனம் எப்படி உண்டாகியது என்று யோசித்துப் பார்த்தாலே போதும். ஆனந்தமானது ஊற்றுக்கண் திறந்து பொங்கிவிடும். கருணாகர மூர்த்தியாகிய கடவுளே சிந்தனையின் மீது ஏறி அமர்ந்திருப்பது தெரியும். அமர்ந்திருந்து மனதை உருக்குகிற விந்தையையும் பார்க்கலாம். உருகும் உணர்ச்சியோ, அன்பாகப்பூத்து 'நான்' என்னும் இருளை விரட்டி அடிக்கிறதையும் பார்க்கலாம்.

மனதின் அற்புதத்தைப் பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறார் மாணிக்கவாசகர்.

''என்னுடைய சிந்தையையே - ஊராகக் கொண்டான் இறைவன்'' என்று பரவசப்படுகிறார். அவருடைய பரவசமும் பக்தியும் எப்படிக் கவியாகப் புறப்பட்டு வருகின்றன என்பதைப் பார்ப்போம்.

வெண்பா

''இன்பம் பெருக்கி,
இருள் அகற்றி, எஞ்ஞான்றும்
துன்பம் தொடரா
வகை அறுத்து, — அன்பமைத்து
சீரார் பெருந்துறையான்,
என்னுடைய சிந்தையையே
ஊராகக் கொண்டான்,
உவந்து'' (141)

படலம் படலமாக உணர்ச்சிகள் முளைத்து சிறகடித்து பறந்து வருகிற மனதை, இறைவன் எழுந்தருளி இருக்கும் கோவிலாகப் பார்க்கிறார் மாணிக்கவாசகர். பிறகு, அக்கோவில் இறைவனுக் குரிய வாகனமாகவே தெரிகிறது,

2

''மனம் என்னும் குதிரைமேலேறி எம்பெருமான் என்னைத் தேடிவந்தான் என்றும், வந்து என்னோடு கலந்து மருவி விட்டான் என்றும்'' சொல்கிறார் மாணிக்கவாசகர் .

இப்பொழுது நான் வேறு, அவன் வேறு இல்லை என்கிறார் மாணிக்கவாசகர். உணர்ச்சியிலும், உயிரிலும் மட்டும் அல்ல,

உடம்பு முழுவதும், உச்சிமுதல் உள்ளங்கால் வரை உடம்பு முழுவதும் அவன் என்னுடன் கலந்து கரைந்து விட்டான் என்கிறார் மாணிக்கவாசகர்.

இனிப் பாடல் முழுவதையும் பார்ப்போம்.

''மூவரும் முப்பத்து
முக்கோடி எண்ணுற்ற
தேவரும் காணாச்
சிவபெருமான்; மாஏறி,
வையகத்தே வந்தான்
அவன்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பவெளி
வீடு. (142)

---

(மா - குதிரை, மனமாகிய குதிரை. மெய்யகம் - உடம்பு முழுவதும்)

குறிப்பு - பசி என்று ஒன்று வருகிறது. அதை ஆற்றுவதற்கு, எதை எதையோ சாப்பிடுகிறோம். தானியங்கள் என்ன, காய் என்ன, கனி என்ன, நெய் என்ன, தண்ணீரென்று எல்லாமே உணவாகிப் பசியை ஆற்றி விடுகின்றன. மதுரமான மாம்பழத்தி லிருந்து, குடலை உருவுகிற அளவுக்குக் கசக்கும் பாகல்காய் வரை எத்தனையோ விதமான உணவுகள், உப்பு, புளி, மிளகாய் முதலியன எல்லாமே உணவாகி விடுகின்றன.

நாம் உண்ணும் ஆகாரம், பருகும் நீர் அவ்வளவையும் ரத்த மாக மாற்றிவிடுகிறது நம் உடம்பு. அந்த ரத்தத்தை உச்சி முதல் உள்ளங்கால் வரைக் கொண்டு பல ஆயிரம் அம்சங்களுக்கும் உயிரூட்டி விடுகின்றது உடம்பின் அற்புதம்.

பண்டங்கள் பார்வைக்கு தினுசு தினுசாக இருக்கின்றன. ஒன்றோடொன்று ஒட்டாதபடி விலகி நிற்கின்றன. ஆயிரக்கணக் கில் வேறுபட்டு நிற்கின்றன. ஆனால் அவ்வளவையும் ஒரே வகை யான ரத்தமாக மாற்றிவிடுகிறது உடம்பு. அந்த ஒரே வகையான ரத்தத்தைக் கண்ணென்றும், காதென்றும், நகம் என்றும், ரோமம் என்றும், தோல் என்றும், எலும்பென்றும் தினுசு தினுசாக உள்ள அங்கங்களாக உருவாக்கி வளர்த்து விடுகிறது உடம்பு. இந்த அற்புதத்தை உடம்பில் நடைபெறும் அற்புதத்தைப் பார்த்தால் ஆனந்தமானது அப்படியே தேனாகச் சொரியாதா? உடம்பைப்

3

கடவுள்த் தத்துவம் என்பது எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது. நமது உடம்பு, மனம், நாம் எல்லாமே கடவுள்மயந்தான். கடவுளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. இந்த உண்மை ஒட்டி நிற்பதில்லை. 'நான்' என்பது முழுவதும் கரைந்து விடுவதில்லை. 'நான்' என்பது முற்றும் கரையாமல் சாதாரண மக்களிடம் நின்றால் அது பல தவறுகளுக்கு இடம் கொடுக்கிறது. ஆனால் ஞானிகளிடமும் பக்தர்களிடமும் கரையாமல் நிற்கிற 'நான்' என்பதோ இறைவனை அவர்கள் அனுபவிக்க ஒரு சாதனமாகவே விளங்குகிறது.

மாணிக்கவாசகரிடம் இருக்கிற 'நான்' என்பது, எப்படி இன்புற்று இறுமாப்புக் கொள்ளுகிறது என்று பாருங்கள்.

> ''யாவர்க்கும் மேலாம்
> அளவிலாச் சீருடையான்
> யாவர்க்கும் கீழாம்
> அடியேனை - யாவரும்
> பெற்றறியா இன்பத்துள்
> வைத்தான்; அப். பெம்மாற்கு
> மற்றறியேன் செய்யும்கைம்
> மாறு'' (143)

ஞானிகளுக்கும், ஞான நுட்பங்களுக்குமே புலப்படாமல், அப்பாலைக்கு அப்பாலாய் நிற்கிற மூலதத்துவம், ஈடும் இணையும் இல்லாத பெருமான், அன்பனாய், காதலனாய், என்னைத்தேடி வந்துவிட்டான். அற்பனிலும் அற்பனாகிய என்னை நாடி அல்லவா வந்துவிட்டான்! என்பதில் ஆனந்தம் பொங்குகிறது.

பொய் என்று சொல்லத் தோன்றாது. மெய்யென்று முன்னோர்கள் பெயர் வைத்திருக்கிறார்களே! அதை எண்ணி எண்ணி வியப்படைவோம்.

வியப்படைய வியப்படைய நம் உடம்பு இறைவன் எழுந்தருளி இருக்கும் சந்நிதானமாகத் தோன்றும். இறைவனாகவே தோன்றும். மாணிக்கவாசகர் உடம்பின் அற்புதத்தை அப்படிப் பார்த்து அனுபவிக்கிறார்.

''மெய்யகத்தே இன்பவெளி வீடு'' என்று ஆடிப்பாடிக் கும்மாளிபோட்டே அனுபவிக்கிறார்.

மூலதத்துவத்தை நான் கண்டுகொண்டேன்'' என்றால் அது ஆணவம்! ''என்மீது கருணைகொண்டு என்னையல்லவா தேடி வந்து விட்டது மூலதத்துவம்'' என்பது ஆணவம் அன்று, பக்தி! ஞானப்பிரகாசமாகிய பக்தியேதான்!

என்னை, என் மனதை. என் உடம்பை எல்லாவற்றையுமே எனக்கு விளக்கிக் காட்ட என்னிடம் வந்து குடிபுகுந்தான் எம்பெருமான்! அவனுடைய அருளைப் பாராட்டுவதற்குக்கூட அருகதை அற்றவனாக இருக்கிறேன் ''நான்'' என்று உருகிக் கரைகிறார் மாணிக்கவாசகர்.

4

இனி, கடைசியாக ஒரு பாடல்.

''திருப்பெருந்துறையில் கோவில் கொண்டு எழுந்தருளி இருக்கிறான் பெருமான். அவன்தான் என்னுள்வந்து குடியேறினான். என்னை உணர்ச்சிமயமாக உருக்கினான். தன்னையே, எனக்குத் தந்து விட்டான். இதில் எனக்கு எவ்வளவோ லாபம். ஆனாலும் அந்த லாபத்தில் ஒரு நஷ்டமும் இருக்கவே செய்கிறது. என்ன நஷ்டம் இது? வலியவந்து எம்பெருமான் என்னிடம் கொட்டிய அன்பை, வேறு ஒருவரும் பார்க்கவில்லையே! பார்த்துப் பரவசப் படவில்லையே! இது எவ்வளவு பெரிய நஷ்டம்?'' என்று தவிக்கிறார் மாணிக்கவாசகர்.

'அடியவர்களை ஆனந்தத்தில் கரையவைக்கும் பேராளன்' என்று எம்பெருமானைப் போற்றுகிறவர்களை நான் பார்த்தால் என்ன செய்வேன் தெரியுமா? ''தெய்வத்திற்கும் தெய்வமான சித்தபுருஷரே!'' என்று அவரிடம் கண்ணீர் வடித்துக் கதறுவேன். அவர் காலில் நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து என்னை ஏற்றுக் கொண்டருளவேண்டும் என்று மன்றாடுவேன், ''மெய்ஞ்ஞான விளக்கே, கருணைக் கடலே'' என்று முழங்குவேன். ஆடுவேன். பாடுவேன்.

அப்படி எல்லாம் துள்ளியும் குதித்தும் சுற்றிச் சுற்றி வந்தும் அனுபவித்தால்தான் இறைவனுடைய கருணைக்கு ஓரளவாவது நான் கைம்மாறு செய்தவனாவேன்.

அந்தப் பாக்கியம் எனக்கு எப்பொழுது கிட்டும் என்று ஏங்குகிறார் மாணிக்கவாசகர்.

இதோ வருகிறது வெண்பா,

'ஆர்க்கோ! அரற்றுகோ!
ஆடுகோ! பாடுகோ!
பார்க்கோ! பரம்பரனே
என்றுரைக்கோ! — தீர்ப்பரிய
ஆனந்த மால்ஏற்றும்
அத்தன் பெருந்துறையான்
தான்; என்பார் யார் ஒருவர்த்?
தாழ்ந்து'' (144)

பக்தி என்பது கண்ணால் பார்க்க முடியாதது. அப்படியானால் அதைக் கையால் தொட முடியுமா? முடியாது. ஆனாலும் மாணிக்கவாசகருடைய பாடல்கள், பக்தியை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றன. நம் கைகளால் தொட்டு நாம் அனுபவிக்கும்படி செய்கின்றன. அவ்வளவும் தமிழ் செய்கிற காரியம்.

---

(ஆர்க்கோ - ஆரவாரிப்பேனா? அரற்றுகோ - தேனே, அமுதே என்று கதறி அழைப்பேனா? பரம்பரனே என்று உரைக்கோ - நீர் தான் வழிகாட்ட வந்த தெய்வம் என்று பக்திப்பரவசத்தில் திளைப்பேனா? தீர்ப்பரிய ஆனந்தமால் ஏற்றும் அத்தன் - நீங்காத இன்பத்தில் மயங்க வைக்கும் பெருமான். பெருந்துறையான்தான்- திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருக்கும் பெருமான்தான். என்பார்யார் - என்று தெரிந்து சொல்கிறவர்கள் யாரோ - அவர் களை நான் கண்டால், தாழ்ந்து - காலில் விழுந்து வணங்கி, ஆட மாட்டேனா? பாடமாட்டேனா? எல்லாம் செய்து காட்டுவேன் என்பது கருத்து)

## என்ன செய்வேன் நான்

ஒரு பொருள் நமக்கு உகந்தது ஆகிவிட்டால், நம்முடைய காரியம் எல்லாவற்றுக்கும் அதுவே துணை என்று தோன்றும். அது இல்லாமல் எதுவும் இல்லை என்றுகூடத் தோன்றும்.

உணர்ச்சியோடு உணர்ச்சியாய் ஒரு பொருள் இப்படிக் கலந்து மருவமருவ அதன் பெருமை ஒவ்வொன்றாய் பரந்து விரியும். தெளிவாகத் தெரியும்.

உள்ளம் இளகி இப்படிக் கசிகிறதையே அன்பு, என்கிறோம். காதல் என்கிறோம். பக்தி என்கிறோம். மூன்றும் வாய்திறந்து பேச ஆரம்பித்து விட்டால் பெருமிதமாகவே பேசும். ஒய்யாரமாகவே பேசும். தங்குதடை இல்லாமல் விண்ணும் மண்ணும் எதிரொலிக்கும்படி கம்பீரமாகவே பேசும்.

இறைவனுடைய அருளுக்கு ஏற்ற பாத்திரமாகிவிட்டார் மாணிக்கவாசகர்.

மாணிக்கவாசகருக்கு இறைவன் ஒருவனே உகந்த பொருள். இறைவனைச் சுவைத்துச் சுவைத்து ருசி காண்கிறார் மாணிக்கவாசகர்.

இறைவனுடைய பெருமை படலம் படலமாக ஒளிவீசுகிறது. தன்னுடைய எளிமையும் கண்ணெதிரே நிற்கிறது. கண்ணீர் கசிகிறது மாணிக்கவாசகருக்கு.

''உண்மையைப் பிட்டுபிட்டு விளக்குகிற சயன்ஸ் (வேதங்கள்) கூட எம்பெருமான் பக்கத்தில் வரமுடியாது. அவனை எட்டி நின்று சேவிக்கக்கூட அவைகளுக்கு யோக்கியதை இல்லை.

சிருஷ்டிக்கு அதிதேவதையாகிய பிரம்மா என்ன? பேரண்டம் முழுவதையும் ஊட்டி வளர்க்கும் திருமால் என்ன, இவர்கள்கூட அவனை இனம் காணமுடியவில்லை.

அப்பாலைக்கு அப்பாலாய் - எல்லாமாய் நிற்கும் பெருமான், ஒன்றுக்கும் உதவாத என்னைத் தேடி வந்து ஆண்டு கொண்டான். என்னவனாகி விட்டான்.

அற்புதம் என்றால் இதுவல்லவா அற்புதம். எம்பெருமான் அருளுக்கும் கொடைக்கும் இணை உண்டா? கைம்மாறு உண்டா?

அப்படி முழங்குகிறார் மாணிக்கவாசகர். உலக மக்கள் எல்லாரும் காது கொடுத்துக் கேட்கும்படி பெரு முழக்கமாகவே முழங்கியவர் மாணிக்கவாசகர்.

பண்டாய நான்மறையும்
பாலணுகா; மால்அயனும்
கண்டாரும் இல்லை;
கடையேனைத் — தொண்டாகக்
கொண்டருளும் கோகழிஎம்
கோமாற்கென் நெஞ்சமே
உண்டாமோ கைம்மா(று)
உரை (145)

இளைஞனும் யுவதியும் காதலர்களாகி விட்டார்கள். உறவு நன்றாகப் பழுத்துக் கனிந்துவிட்டது. ஒருவரை ஒருவர் விட்டு விலக முடியவில்லை. அன்பு ஊறிஊறிப் பெருகுகிறது.

ஒருநாள் யுவதி இளைஞனிடம் குழைந்து குழைந்து கொஞ்சினாள். காதலனின் கழுத்தை வளைத்துக் கொண்டு கேட்டாள். 'என்னை நீங்கள் மதிக்கிறீர்களா'' என்று! சட்டென்று காதலன் சொன்னான். ''இல்லை, உன்னை நான் மதிக்கவில்லை'' என்று.

திடுக்கிட்டுப் போனாள் காதலி. ஆனாலும் சமாளித்துக் கொண்டாள். ஒன்றுமே நடக்காதது போலச் சமாளித்துக் கொண்டாள்.

---

பண்டுஆய நால்மறை - அடிப்படையான முல தத்துவங்களை விளக்கும் பலவகை சாஸ்திரங்கள். பால்அணுகா - இறைவனை எட்டி நின்று கூடப் பார்த்தது இல்லை. மால் - திருமால். அயன்- பிரம்மா. கோகழி - திருப்பெருந்துறை.

குறிப்பு :- அற்புத ரசம் பாட்டில் தொட்ட தொட்ட இடம் எல்லாம் சுரக்கிறது.

ஆனாலும் அவள் மனதை ஏதோ ஒன்று குடைந்து கொண்டே இருந்தது. ஒருநாள் காதலன் மிக்க உல்லாசத்தோடு இருக்கிற பொழுது பக்குவமாகக் கேட்டாள் காதலி. ''என்னை ஏன் நீங்கள் மதிக்க மாட்டேன் என்கிறீர்கள்?'' என்று குழைந்து குழைந்து கேட்டாள். காதலன் சொன்னான். ''உன்னை நான் மதிக்க மாட்டேன் என்கிறேனா? கனாக்கண்டாயா நீ? பைத்தியமே நீ என் பக்கத்தில் இருக்கும் பொழுது எனக்கு என்ன ஞாபகம் இருக்கிறது? ஒன்றுமே இல்லை. உன்னைத்தவிர ஒன்றுமே இல்லை. எல்லாவற்றையும் மறந்து விடுகிறேன். உணர்ச்சியே இல்லாத நிலையில் நான் எப்படி மதிக்க முடியும்? இப்படி முடித்தான் காதலனாகிய வாலிபன். மேல் நாட்டு ஆசிரியர் எழுதிய கதை ஒன்றில் இப்படி ஒரு கட்டம். இப்படி ஒரு பேச்சு. இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் தான் மேல்நாட்டாசிரியர். ஆனால் நம் தமிழ் நாட்டில் இருபது நூற்றாண்டுகளுக்குமுன் வாழ்ந்த முத்தொள்ளாயிர ஆசிரியர் சொல்கிறதைப் பார்ப்போம்.

பாண்டியன் மேல் காதல் கொண்டாள் ஒரு பெண். காதல் மெள்ள மெள்ள வெறியாகவே ஏறிவிட்டது. தோழி பார்த்தாள். பாண்டியனிடம் போனாள். பெண்ணைச் சந்திப்பதற்கு ஒத்துக் கொண்டான் பாண்டியன்.

விபரத்தைப் பெண்ணிடம் சொன்னாள். தோழி இப்பொழுது பெண்ணின்பாடு பெரும்பாடாய்ப் போய்விட்டது.

''மாலையில் பூந்தோட்டத்துக்கு வந்து விடுவான். அப்படி வந்தபின் அவனை எப்படி நேருக்கு நேர் நின்று பார்க்க முடியும்? வெட்கம் இல்லாமல், நாணம் இல்லாமல் அவன் எதிரில் எப்படி நிற்கமுடியும்? தைரியமாக நின்றால் பெண்மை என்னும் தெய்வப் பண்பின் கதி என்னாவது? சரி, அவனைப் பார்த்து அனுபவிக்கா விட்டால், இந்த ஆசை நோயின் பிடியிலிருந்து எப்படித் தப்ப முடியும்? என்னை அணு அணுவாகத் தின்கிறதே இந்த ஆசை நோய்? இதற்கு நான் என்ன செய்ய?

இப்படித் தவியாய்த் தவிக்கிறாள். பெண். பெண்ணின் தத்தளிப்பைப் பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறது தமிழ். கவிஞரும் அனுபவிக்கிறார். தமிழும் அனுபவிக்கிறது. கவிஞரைக் கருவியாக வைத்து தமிழ் எப்படி அனுபவத்தை வெளியிடுகிறது என்று பாருங்கள்.

நாணாக்கால் பெண்மை
நலன்என்னாம்? முன்நின்று
காணாக்கால் கைவளையும்
சோருமால்; காணேன்நான்
வண்டெவ்வம் தீர்தார்
வயமான் வழுதியைக்
கண்டெவ்வம் தீர்வதோர்
ஆறு.

மேல்நாட்டுக் கதை முத்தொள்ளாயிரப் பாடல் இரண்டும் மன இயலின் அடிப்படையான அம்சம் ஒன்றை விளக்குகிறது.

அன்பிலோ, பக்தியிலோ, முழுக்க முழுக்க ஈடுபட்டு விட்டால், அதோடு அதாகக் கரைந்துவிட வேண்டியதுதான். பிறகு, தனி என்பது இல்லை. பார்வை, பேச்சு ஒன்றுக்கும் இடமே இல்லை.

இனி, இறைவன் நேரில் வந்து தனக்குக் காட்சி கொடுக்கப் போகிறான் என்று தெளிவாகி விட்டது மாணிக்கவாசருக்கு.

அப்படி அவன் எதிரில் வந்து நிற்கும் பொழுது என் கதி என்ன என்று மயங்குகிறார் மாணிக்கவாசகர்.

---

(நாணாக்கால் பெண்மை நலன் என்னாம்-வெட்கத்தால் தலை கவிழாமல் நிமிர்ந்து பார்த்தால் பெண்மைகு உயிரில்லை. ஒளி இல்லை. மானங்கெட்ட பிழைப்புத்தான் அது. முன்நின்று காணாக்கால் கைவளையும் சோரும் - ஆசைதீரப் பார்த்து அனுபவிக்காவிட்டாலோ, புத்தியே சிதறிவிடுகிறது. சாப்பிட முடியவில்லை. தூங்க முடியவில்லை. உடல் மெலிந்து விடுகிறது. கையில் அணிந்த வளையல்கள் கழன்று ஓடும் அளவுக்கு உடம்பு மெலிந்து விடுகிறது. காணேன் நான்-என்ன செய்வதென்று ஒன்றும் தெரியவில்லை எனக்கு.

வண்டு எவ்வம் தீர்தார் வயமான் வழுதியை-வண்டுகளின் பசியைப் போக்கும் அளவுக்கு தேன் சொட்டும் மாலை அணிந்த பாண்டியனை. பாயும் குதிரை மேலேறிப் பவனிவரும் பாண்டியனை - கண்டு எவ்வம் தீர்வதோர் ஆறு காணேன் நான்-பார்த்து அனுபவித்து நிம்மதி பெற வழி தெரியாமல் திகைக் கிறேன், பாவியாகிய நான்.)

''பக்தர்களாகிய மீன்களைத் தேடி ஆனந்த வலை வீசும் இறைவன், என் எதிரில் வந்து நின்றால், அவனுடைய அருளை யும் பொலிவையும் நான் நேருக்கு நேராக நின்று எப்படிப் பார்க்க முடியும்?''

பெண்ணானவள் தன்னையே தன் கணவனுக்கு அர்ப்பணித்து விடுகிறாள். நாணத்தோடும் கூச்சத்தோடும் அர்ப்பணித்து விடுகிறாள். அதுதான் காரிகையார்களின் வாழ்வு. அவர்கள் வாழ்வு போல எனக்கும் கிடைக்குமா? என்னை நாடிவரும் இறைவனிடம் என்னை அப்படியே நான் ஒப்படைக்க முடியுமா?

அவனைக் கண்டு களிப்பதற்காக எத்தனை எத்தனை ஜென்மங்கள் எடுத்து வந்திருக்கிறேன். அவ்வளவும் அவனை நான் பார்த்தவுடன் எனக்கு மறந்துவிடும். ஒன்றுமே ஞாபகத்துக்கு வராது. எது பற்றியும் அவனிடம் சொல்ல முடியாது நான்.

திருமாலாலும் தேடிக் காணமுடியாத திருப்பாதங்கள் இரண்டும் என்முன் வந்து நிற்கும். ஆனாலும் அவற்றைத் தொட்டு வணங்கக்கூட எனக்கு உணர்ச்சி இருக்காது.

அவனுடைய புகழைப் பாடமுடியுமா? பாடிப்பாடி ஆட முடியுமா? அவனோடு சேர்ந்து விட்டால் ஒன்றுமே முடியாதே!

அவனுடைய கொடி, குடை, யானை, தேர் ஒன்றைக்கூடப் பார்க்க முடியாது. அவற்றைப் புகழவும் முடியாது. பேரண்டம் முழுவதும் நிறைந்து, அண்டபிண்ட சராசரங்களாய் விளைந்த அந்த அற்புதம் (வேதகம்) என் கண்முன் வந்து வெளிப்படையாகக் காட்சி கொடுக்கத்தானே செய்யும்? காட்சி கொடுக்காமல் என்னை எப்படி ஏமாற்றும்? நிச்சயம் என்னைத் தேடி வ்ரும். ஆனால் என்னால் தான் ஒன்றுமே செய்ய முடியாதே.

இப்படி ஏங்கித் தவிக்கிறார் மாணிக்கவாசகர். அவருடைய ஏக்கமும் தவிப்பும் எப்படி எக்களிப்போடு தமிழில் வந்து நடனமாடுகின்றன என்று பாருங்கள்.

தானன தன்னன
தன்னன தன்னன
தன்னன தானன
தன்

கண்கள் இரண்டும்
அவன்கழல் கண்டு
களிப்பன ஆகா
தே;
காரிகை யார்கள்தம்
வாழ்வில்என் வாழ்வு
கடைப்படும் ஆகா
தே;
மண்களில் வந்து
பிறந்திடும் ஆறு
மறப்பன ஆகா
தே;
மாலறி யாமலர்ப்
பாதம் இரண்டும்
வணங்குதும் ஆகா
தே;
பண்களி கூர்தரு
பாடலோ(டு) ஆடல்
பயின்றிடும் ஆகா
தே;
பாண்டிநன் நாடுடை
யான்படை யாட்சிகள்
பாடுதும் ஆகா
தே;
விண்களி கூர்வதோர்
வேதகம் வந்து
வெளிப்படும் ஆகா
தே;
மீன்வலை வீசிய
கானவன் வந்து
வெளிப்படும் ஆய்விடி
னே!

---

காரிகையார் - பெண்கள். மால் - திருமால். பண் - இசை. படையாட்சி - யானை, குதிரை போன்ற பரிவாரங்கள். விண் - பிரபஞ்சத்துக்கு மூலமான பெருவெளி.

குறிப்பு :- அற்புதமான பாடல். அற்புதரசம் அப்படியே பாடலில் பொங்குகிறது.

# என்னை இழந்தேன் அவனானேன்

மனிதர்கள் எல்லோரும் ஒன்று போலவே இருக்கிறார்கள்· உயர்வு, தாழ்வு, நல்லது, கெட்டது என்பதெல்லாம் தோற்றந் தான். உண்மையில் மனிதர்கள் எல்லோரும் ஒரே அச்சுத்தான், ஒரே வார்ப்புத்தான்.

ஆனாலும் மனிதர்களில் சான்றோர்கள் என்று ஒரு வர்க்கம் உண்டாகிவிடுகிறது. இந்த வர்க்கத்தார் அபூர்வமாகவே இருப் பார்கள். இவர்களுடைய நினைப்பும் போக்கும் தனித்தே இருக்கும்.

கஷ்ட நஷ்டம் என்று வந்தால் மனிதர்கள் அலறுவார்கள். எனக்கா இப்படி வருவது என்று துடிப்பார்கள். எப்படி எனக்கு இந்தத் தொல்லை வரலாம் என்று தவிப்பார்கள்.

கஷ்டம் என்பது தனக்கு மட்டும் வரக்கூடாது என்பது தான் ஒவ்வொருவனுடைய விருப்பமும். மனிதர்களின் பொதுவான சுபாவம் இது.

ஆனால், சான்றோர்கள் தொல்லைகளுக்கு ஆளானால், அவமானத்துக்கு இரையானால் தங்களைப் பற்றி யோசிக்க மாட்டார்கள். ''என்னையே இது இந்தப் பாடுபடுத்துகிற தென்றால், சாதாரண மக்களை இது என்ன பாடுபடுத்தும்'' என்று மற்றவர்களுக்காக வேதனைப்படுவார்கள்.

மற்றவர்கள் கஷ்டப்படக்கூடாது என்பதற்காகவே தீமையை எதிர்த்துப் போராடுவார்கள். மற்றவர்கள் சௌகர்யமாக இருக்க. வேண்டும் என்பதற்காகவே துறுதுறு வென்று செயல் படுவார்கள்.

தங்களை மற்றவர்களோடு சேர்த்து வைத்தே பார்ப்பார்கள். தாம்வேறு. பிறர்வேறு என்று பிரித்துப் பார்க்க மாட்டார்கள். எல்லாவிபரமும் இவர்களுக்குத் தெரியும். பல துறைகள்பற்றிய அனுபவமும் இவர்களிடம் உண்டு. ஆனாலும் தம்மைச் சுற்றி உள்ளவர்கள் அறியாமையிலும் மூடத்தனத்திலும் கிடந்து உழல்வதைப் பார்த்து இவர்கள் வேதனைப்படுவார்கள். மடத்தனமும் தடித்தனமும் தங்களையே காலடியில் போட்டு மிதி மிதி என்று நசுக்குவது போலத் துடிப்பார்கள்.

மனிதர்களுக்குள் வேறுபாடு இவ்வளவுதான். தன்னலம் அற்ற சான்றாண்மை சிலரிடம் மட்டும் இருக்கிறது. அவர்களைத் தவிர மற்ற எல்லோரும் ஒன்றுதான்.

மாணிக்கவாசகர் சான்றாண்மை நிறைந்தவர். மகாபெரிய ஞானி. ஆனந்தபரவசத்தில் திளைக்கிறவர் மாணிக்கவாசகர். எல்லோருமே ஆனந்த பரவசத்தில் திளைக்கவேண்டும் என்று ஆத்திரப் படுகிறார் மாணிக்கவாசகர்.

தேடிப்போக வேண்டாம். நம்மிடமே இருக்கிறது ஆனந்தம். ஆனாலும் ஆனந்தத்தை இழந்து விடுகிறோம். அமிர்தம் நிறைந்த கிண்ணத்தைக் குப்புறக் கவிழ்த்து விடுகிறோம். பிறகு, குய்யோ, முறையோ என்று கூப்பாடு போடுகிறோம்.

இந்தப் பைத்தியகாரத்தனத்தை—சர்வவியாபகமாய் உள்ள அறிவற்ற நிலையை உலகில் பார்க்கிறார் மாணிக்கவாசகர்.

தாமே ஆனந்தத்தை இழந்துவிட்டது போல் தவிக்கிறார். பொம்மைக்குத் தோல் போர்த்தி ஆடவிடுவார்கள். அதற்குப் பொம்மலாட்டம் என்று பெயர். பாவைக்கூத்து என்றும் சொல்வார்கள். என்வாழ்க்கையும் உயிரற்ற பொம்மலாட்டமாக அல்லவா போய்விட்டது என்று ஆற்றாமைப்படுகிறார் மாணிக்க வாசகர்.

நிர்க்கதியாய் நிற்கும் மனிதர்களை நோக்கி உண்டாகிற இரக்கம் அப்படி எல்லாம் புழுங்கித் தவிக்கச் செய்கிறது,

கரையில் நின்று கையை நீட்டுகிறான் இறைவன். வாவா என்று ஆவலோடு கையை நீட்டுகிறான் இறைவன். நானோ சாக்கடையில் கிடந்து குதிக்கிறேன். கும்மாளி போடுகிறேன்.

"அவன் கையைப் பிடித்து நான் கரையேசுறுவது என்றைக்கு"

இப்படி எல்லாம் மாணிக்கவாசகரின் உணர்ச்சியைக் குழைத்துக் குழைத்துப் பிசைகிறது அருள் ஒளி — அதாவது சான்றாண்மை.

(தான தான
தான தன்
தான தான
தான தன்)

சீலம் இன்றி,
நோன்பின் றி,
செறிவே இன்றி
அறிவின் றி;
தோலின் பாவைக்
கூத்தாட் டாய்,
சுழன்று விழுந்து
கிடப்பே னை;
மாலும் காட்டி,
வழிகாட்டி டி,
வாரா உலக
நெறிஏ றக்
கோலம் காட்டி
ஆண்டா னைக்;
கொடியேன் என்றோ
கூடுவ தே.

இறைவனுக்கு என்மேல் எவ்வளவோ ஆசை. என்னை ஒரு உருப்படி ஆக்குவதற்கு அவன் எத்தனை சிரமப்பட்டிருக்கிறான்· தன்னோடு என்னை எப்படியாவது சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக அவன் எடுத்த முயற்சிகள் பல.

---

சீலம்-நல்லொழுக்கம், நீதி. நோன்பு-தவம், ஒருமை உணர்ச்சியோடு செயலில் ஈடுபடல். செறிவு-அடக்கம். அறிவு என்பது வெறும் புள்ளிவிபரம் அல்ல. நீதியும் செயல்திறனும் மரியாதையும் சேர்ந்த ஞானம். மாலும்காட்டி-திருவருள் ஒளியைக்காட்டி. வழிகாட்டி-கடைத்தேறும் மார்க்கமும் இன்னதென்று காட்டி. வாரா உலக நெறி ஏறக் கோலம் காட்டி ஆண்டானை-நிலைத்த பேரானந்தத்தில் ஒன்றித் திளைக்க உபாயமும் காட்டிய இறைவனை நான் கலந்து மருவுவது எப்பொழுது?

(தானான தானான
தானான தானான)

முத்திநெறி அறியாத
மூர்க்கரொடு முயல்வேனை;
பத்திநெறி அறிவித்துப்
பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனை ஆண்டான்;
அத்தன் எனக்(கு) அருளியவா(று)
ஆர்பெறுவார் அச்சோவே?

இறைவனுக்கு வரம்பு என்ற ஒன்று இல்லை. வரம்புக்கு உட்பட்ட வடிவமும் இல்லை. உருவமோ, நிறமோ, பெயரோ இல்லாத அற்புதந்தான் இறைவன். எல்லையற்ற ஆனந்த நடனந் தான் இறைவன்.

அன்பர்களுக்கு அருள்பாலிக்க அவர்களை நாடி வருவான் இறைவன். அப்பொழுது ஒரு உருவத்தோடு தானே வரவேண்டி இருக்கிறது! நண்பர்களாக வருவான், குருமூர்த்திகளாகவும் வருவான். அப்படி வந்து ''இதுதான் என் உருவம்'' என்று காட்டு வான்.

இனி, அன்பர்களுக்கு, தன்குணத்தைக் காட்டவேண்டும் என்று நினைத்தால், அற்புதங்களைக் காட்டி ஆவலை உண்டாக்குவான்.

அன்பர்களைச் சேர்த்துக் கொள்வதில் இறைவனுக்கு எல்லை யில்லாத ஆவல்.

நெறியல்லா நெறிதன்னை
நெறியாக நினைவேனை
சிறுநெறிகள் சேராமே
சிவநெறியே சேரும்வண்ணம்

---

பத்தி-பக்தி. பாறும்வண்ணம்-அழியும்படி. சித்தமலம் அறுவித்து-அறிவோடு ஒட்டி நிற்கும் ஆணவமாகிய களிம்பைத் துடைத்து. அத்தன்-அப்பன், இறைவன். அச்சோவே-அடடா என்ன அதிசயம் இது!

குறிஒன்றும் இல்லாத
கூத்தன்தன் கூத்தைஎனக்(கு)
அறிவண்ணம் அருளியவா(று)
ஆர்பெறுவார் அச்சோவே!

கரியை வயிரமாக்கி விடுகிறது ஒரு தத்துவம். கரியை விட மட்டமானவன் நான். படுகேவலமான என்னையே மனிதனாக்கி விட்டான் இறைவன். அதுமட்டுமா? தனக்கு உகந்தவனாகவும் என்னை ஆக்கிவிட்டான்? அங்கீகரித்தும் விட்டான்.

இந்த அதிசயத்தை விட வேறு அதிசயம் உலகில் என்ன இருக்கிறது.

செம்மைநலம் அறியாத
சிதடரொடும் திரிவேனை,
மும்மைமலம் அறுவித்த
முதலாய முதல்வன்தான்;
நம்மையும்ஓர் பொருளாக்கி,
நாய்சிவிகை ஏற்றுவித்தான்!
அம்மஎனக்(கு) அருளியவா(று)
ஆர்பெறுவார் அச்சோவே!!

---

நெறி அல்லாநெறி - அன்பே இல்லாத கொடிய செயல்கள். குறி ஒன்றும் இல்லாத கூத்தன்-பேரோவடிவமோ இல்லாத இறைவன். சிவநெறிசேரும் வண்ணம் - நான் உண்மையை உணர்ந்துபரவசப் படுவதற்காக. எனக்கு கூத்தை அறிவண்ணம் அருளியவாறு - நான் அவனுடைய அற்புதத்தைக் கண்டு களிக்கும்படி ஒரு உருவத்தில் வந்து என்னோடு உறவாடினான். ஆர்பெறுவார் அச் சோவே - இந்தப் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. வேறுயாருக்குக் கிடைக்கும் இது!

செம்மைநலம் - அருள்நிலை. சிதடர் - மூர்க்கர். மும்மை மலம் - ஆணவம், கன்மம், மயக்கம் என்னும் மூன்று விஷம். நாய் - படு மட்டமான என்னை. சிவிகை - பல்லக்கு. ராஜபதவி. அம்ம - அடடா! என்ன அற்புதம் இது.

# கவியாய் அவதாரம் எடுக்கிறார் கடவுள்

எங்கும் ஒருபடித்தாய் நிறைந்திருக்கிறது கடவுள்த் தத்துவம். ஒரே ஜோதிமயமாய் நிறைந்திருக்கிறது கடவுள்த் தத்துவம். அதில் இருட்டடிப்பு இல்லை, ஒளிவுமறைவு இல்லை, ஏமாத்துக் கச்சவடம் இல்லை. ஒரே வெட்டவெளிச்சமாய் இருக்கிறது கடவுள்த் தத்துவம்.

தெள்ளத் தெளிந்த ஒன்றைப் பற்றி சொல்ல என்ன இருக்கிறது?

விண்நிறைந்து மண்நிறைந்து
மிக்காய் விளங்கொளியாய்
எண் இறந்து எல்லை
இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன்
புகலும்ஆ(று) ஒன்றறியேன்.

நம்முடைய நிலைமையைக் கொஞ்சம் பின்நோக்கிப் பார்த்தால், அடடா! எங்கிருந்து வந்திருக்கிறோம்? எப்படி எப்படி உருமாறி வந்திருக்கிறோம் என்பது தெரியும். ஆனால் நாம் பார்ப்பதில்லை. மாணிக்கவாசகர் பார்க்கிறார். சொல்கிறார்.

புல்லாகிப், பூடாய்ப்,
புழுவாய், மரம்ஆகிப்
பல்விருகம் ஆகிப்,
பறவையாய்ப், பாம்பாகி,
கல்லா மனிதராய்ப்
பேயாய்க் கணங்களாய்.

---

எண்இறந்து - அளந்து கணக்கிட முடியாதபடி. புகலும் ஆறு ஒன்று அறியேன் - இப்படி என்று எடுத்துச் சொல்ல முடியாமல் திகைத்து நிற்கிறேன்.

விருகம் - மிருகம். கணம் - பூதகணம்.

வல்லசுரர் ஆகி,
முனிவராய்த், தேவராய்;
செல்லாஅ நின்றஇத்
தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும்
பிறந்திளைத்தேன் எம்பெருமான்.

கண்டகாட்சியை இறைவனிடமே நேரில் நின்று சொல்கிறார். பெருமானே! மேலும் கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், நீ தான் இத்தனை வேஷமும் போட்டு வந்திருக்கிறாய் என்பது தெரிகிறது. புதிது புதிதாகப் பிறந்ததும் நீதான்! கஷ்டப்பட்டதும் நீதான்! அதுமட்டுமா? இவ்வளவுக்கும் அதிகாரி நான்தான் என்று என்னை மயங்க வைப்பதும் நீ தான்!!

உன்னுடைய அருளால் இந்த உண்மையும் எனக்கு விளங்கி விட்டது.

மெய்யேஉன் பொன்னடிகள்
கண்டின்று வீடுற்றேன்;
மெய்யா! விமலா!
விடைப்பாகா! வேதங்கள்
ஐயா எனஓங்க
ஆழ்ந்த கன்ற நுண்ணியனே!
பொய்யா யினஎல்லாம்
போய்அகல வந்தருளி,
மெய்ஞ்ஞான(ம்) ஆக
மிளர்கின்ற மெய்ச்சுடரே!

---

செல்லாஅநின்ற - தடை இல்லாமல் போய்க் கொண்டிருக்கிற. தாவர சங்கமத்துள் - உடம்போடு ஒட்டிப் பிறக்கிற உயிர்த்தத்துவத்தின் பரிணாம வளர்ச்சியில் - அதாவது ஜீவப்பிரவாகத்தில். எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்-நான் எடுக்காத வேஷமே இல்லை. என்காலடி படாத இடமே இல்லை. எம்பெருமான் - என் உயிருக்குயிரான நாயகனே!

மெய்யே - தெள்ளத்தெளிய. உன் பொன் அடிகள் கண்டு - எல்லாம் இறைவனுடைய செயல்தான் என்னும் உண்மையைத் தெரிந்து. வீடுஉற்றேன் - ஆனந்த பரவசத்துக்கு ஆளாய் விட்டேன். மெய்யா - சந்தேகத்துக்கு ஆளாகாதவனே! விமலா - குறை இல்லாதவனே! விடைப்பாகா - சகல சக்திகளுக்கும் ஆதாரமானவனே!]

உண்மை நேருக்கு நேராகத் தெரிந்து விட்டதால் மாணிக்க வாசகர் உருகி விடுகிறார். "பெருமானே! பெருமானே என்று வேதங்கள் எல்லாம் உன்னைத்தேடி அலைகின்றன. அவைகள் உன்னைப் பார்க்க முடியாமல்த் தவிக்கின்றன. ஆனால், நீயோ, என் முன் வந்து நிற்கிறாய். உன்னை நான் தொட்டுப் பிடித்து விளையாடும் அளவுக்கு என்னை உரசிக் கொண்டே நிற்கிறாய். உன்னுடைய கருணையை எப்படி எடுத்துச் சொல்வேன் நான்?" என்று துள்ளுகிறார் மாணிக்கவாசகர். அவர் துள்ளிக் குதித்து இறைவனை நோக்கி எப்படிக் கதறுகிறார் என்று பாருங்கள்.

"தாயில்ச் சிறந்த
தயாவான தத்துவனே!
மாசற்ற சோதி
மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே! தேனார்
அமுதே! சிவபுரனே
பேராது நின்ற
பெருங்கருணைப் பேராறே!
ஓராதார் உள்ளத்(து)
ஒளிக்கும் ஒளியானே!
நள்ளிருளில் நட்டம்
பயின்றாடும் நாதனே!
தில்லையுள்க் கூத்தனே
தென்பாண்டி நாட்டானே!
அல்லல்ப் பிறவி
அறுப்பானே ஓ என்று."

நம்மைப்பற்றிய உண்மை - நாம் என்பதாக ஒன்றும் இல்லை. எல்லாம் கடவுளுடைய செயலே என்னும் உண்மை தெரிந்து விட்டது என்றால், அதைநாம் கண்டு தெரிந்தது என்று சொல்லக்

---

சோதி மலர்ந்த மலர்ச்சுடர் - திவ்யமான பிரகாசமே இதழ் இதழாக விரிந்த ஒளிமலர் தான் இறைவன். பேராது நின்ற- வற்றாமல் நிலைத்து நிற்கிற. ஓராதார் - உண்மை உணர்ச்சி இல்லாதவர். ஒளிக்கும் ஒளியான்-இறைவன் பிரகாசமயமானவன் தான். ஆனாலும் உணர்ச்சி இல்லாதவர் கண்ணோ குருட்டுக்கண். நள்இருள் - நடுச்சாம இருட்டு. நட்டம் - நடனம், கூத்து. அல்லல்- துன்பம்,

கூடாது. கடவுளே வலிய வந்து உண்மையை உணர்த்தினான். அதுதான் முறை என்று தான் சொல்ல வேண்டும்.

இறைவன் தன்னிடம் இருக்கிறான். தன்னை எப்படி எல்லாமோ பிசைந்து பிசைந்து குழைக்கிறான். அதனால் உடல் உருகுகிறது. உள்ளம் உருகுகிறது. உயிரே கசிந்து கசிந்து உருகுகிறது. இந்தப் பரவச நிலையில் திளைக்கிறார் மாணிக்கவாசகர்.

ஆனந்த பரவசம் இசையோடும் தாளத்தோடும் வார்த்தைகளாகச் சிறகடித்து வருகின்றன.

அப்படி வருகிற பாடல்களையும் அனுபவிக்கிறார் மாணிக்கவாசகர். பாடல்களைக் கேட்டு அனுபவிக்க இறைவனே அவர் மடியில் வந்து உட்கார்ந்து கொள்கிறான்.

எப்படி இருக்கும் மாணிக்கவாசகருக்கு? ''அடடா! வார்த்தைகளுக்குக் கட்டுப்படாத பெருமான். என் வார்த்தைகளைத் தேடி என்னிடம் வந்து விட்டான். நானாகவே அவன் ஆகிவிட்டான். நானும் அவனாக ஆகிவிட்டேன்.

''நான் மாணிக்கவாசகன் இல்லை. இறைவன் மயம்.''

இனிப்பாடல்,

சிவன் அவன்என் சிந்தையுள்
நின்ற அதனால்,
அவன்அரு ளாலே
அவன்தாள் வணங்கி,
சொல்லற்(கு) அரியானைச்
சொல்லி அவனடிக்கீழ்
சொல்லிய பாட்டின்
பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர்; சிவபுரத்தின்
உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப்
பணிந்து.

மாணிக்கவாசகருடைய பாடலை இனி முழு உருவத்தில் பார்ப்போம்.

விண்நிறைந்து மண் நிறைந்து
மிக்காய் விளங்கொளியாய்
எண்இறந்து எல்லை
இலாதானே! நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன்
புகலுமா(று) ஒன்றறியேன்!
புல்லாகிப் பூடாய்ப்
புழுவாய் மரமாகி,

பல்விருகம் ஆகிப்
பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப்
பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி
முனிவராய் தேவராய்
செல்லாஅ நின்ற இத்
தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும்
பிறந்திளைத்தேன்; எம்பெருமான்!
மெய்யேஉன் பொன்னடிகள்
கண்டின்று வீடுற்றேன்
மெய்யா! விமலா
விடைப்பாகா! வேதங்கள்
ஐயா எனஓங்கி
ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!
பொய்யா யினஎல்லாம்
போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான(ம்) ஆக
மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
தாயில்ச் சிறந்த
தயாவான தத்துவனே!

---

சொல்லற்கு அரியானை - வார்த்தைகளால் எடுத்து விளக்க முடியாத பேராளனை. சொல்லி - ஆனாலும் பாடலாகப் பாடி, சொல்லிய - பாடிய பாசுரங்களின். சொல்லுவார் - பாடிக் காட்டு கிறவர்கள். செல்வர் - அவர்கள் தாம் சிவநேசச் செல்வர்கள். அவர் கள் இறைவனோடு இறைவனாய்ச் சேர்ந்தே பரிமளிக்கிறார்கள்.

மாசற்ற சோதி
மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே! தேனார்
அமுதே! சிவபுரனே
பேராது நின்ற
பெருங்கருணைப் பேராறே!
ஓராதார் நெஞ்சத்து
ஒளிக்கு ஒளியானே!
நள்ளிருளில் நட்டம்
பயின்றாடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே
தென்பாண்டி நாட்டானே!
அல்லல் பிறவி
அறுப்பானே! ஒஎன்று
சிவனவன் சிந்தையுள்
நின்ற அதனால்
அவனரு ளாலே
அவன்தாள் வணங்கி
சொல்லற்(கு) அரியானைச்
சொல்லி அவனடிக்கீழ்
சொல்லிய பாட்டின்
பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர்; சிவபுரத்தின்
உள்ளார், சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப்
பணிந்து''

அற்புதமான பாடல். கலிவெண்பா என்னும் வகையைச் சேர்ந்தது பாடல். என்ன வகை என்பது முக்கியம் அல்ல.

பாடலைப் பாடப்பாட உள்ளம் உருகிவிடும். உண்மைக்கு ஊக்கம் உண்டாகும். உலகம் முழுவதும் கண்டு களிக்கும்படி ஆவேசமாக எழுந்து நிற்கும் உண்மை.

அப்படி ஒரு மந்திரமாக ஒலிக்கிறது பாட்டு.

# நாமாவது ஒன்றாவது

அறிவு, அறிவு என்று நாம் சொல்கிறோமே, உண்மையில் அது அறிவு அல்ல. இங்கொன்றும் அங்கொன்றுமாய்த் தேடிச் சேர்த்து வைத்திருக்கிற அனுபவத்தையே அறிவு என்று நினைக்கிறோம். அனுபவம் ஒவ்வொன்றும் பிழைப்பை நோக்கி வந்தவை தாம். உண்மைக்கும் நம் அறிவுக்கும் சம்பந்தமே இல்லை.

அறிவு என்று நாம் நினைக்கிறதை இது காரணமாகவே பொய்யறிவு என்று சொல்கிறார்கள். புல்லறிவு என்றும் சொல். கிறார்கள்.

நம்முடைய பொய்யறிவில் உயிரில்லை, உணர்ச்சி இல்லை. ஒளி என்பது இல்லவே இல்லை. அதனால் அது வேறு இது வேறு என்று பிரித்துப் பார்க்கிறது. ஒன்று பெரிது, ஒன்று சிறிது, அது மேல், இது கீழ், அது நீளம், இது குட்டை என்றெல்லாம் பேதத்தை உண்டாக்குகிறது.

உண்மையில் பேதம் என்பது இல்லை. ஒரு புல்லில் நடக்கிறதும் இறைவனுடைய செயல்தான். ஒரு மரத்தில் நடக்கிறதும் இறைவனுடைய செயல் தான். ஒரு அணுவுக்குள் நடக்கிற காரியமும், ஒரு நட்சத்திரத்தில் நடக்கிற காரியமும் எல்லாம் இறைவனுடைய காரியமே.

தாமரைக்குள் நடக்கிற காரியமும் அற்புதமாக இருக்கிறது. பசுவின் மடியில் நடக்கிற காரியமும் அற்புதமாக இருக்கிறது. நமது உடம்பில், உணர்ச்சியில் நடக்கிற காரியங்களும் அற்புதமாக இருக்கின்றன. எல்லாம் இறைவனுடைய காரியங்களே.

ஆனாலும் அது வேறு இது வேறு என்று பேதப்படுத்துகிறது அறிவு. இந்தக் கிறுக்குப் பிடித்த அறிவை நம்பித்தான் நாம் வண்டியை ஓட்டுகிறோம். ஏன்? அந்தக் கிறுக்கு மயமாகவே இருக்கிறோம். நமக்கும், கிறுக்குக்கும் வித்தியாசமே இல்லை. நாம் தான் கிறுக்கு; கிறுக்குத்தான் நாம்.

பிறகு, நம்மை ஒரு பொருள் என்று மதிக்க முடியுமா? நம்முடைய காரியம் அப்படி இருக்கட்டும்.

பேரண்டம் முழுவதும் இறைவனுடைய செயல் தான். அந்தச் செயலையே அருள் என்கிறோம். உபசாரமாக அந்த அருளை இறைவனுடைய திருவடி என்றும் சொல்கிறோம்.

சதா ஆனந்த நடனம் ஆடிக் கொண்டிருக்கிறது அந்தத் திருவடி என்றும் சொல்கிறோம்.

அண்டபிண்ட சராசரம் அவ்வளவையும் செயல்படுத்துகிற அற்புதத்தையே நடனம் என்று சொல்லி இருக்கிறது.

மாணிக்கவாசகரும் அப்படியே சொல்கிறார்.

''தில்லை மூதூர்
ஆடிய திருவடி
பல்உயிர் எல்லாம்
பயின்றனன் ஆகி''

நாம் என்பது இப்பொழுது இல்லை என்று ஆகிவிட்டது. எல்லாம் அவன் செயலே என்பதும் ஆகிவிட்டது. ஆனாலும் நம்முன் அவன் வந்து நிற்கிறான். ஓட்டுகிறான், உறவாடுகிறான், தண்ணீராய் நம்மை உருக்கியும் விடுகிறான்.

இதுவும் ஒரு அதிசயந்தான்.

இந்த அதிசயத்தை எப்படிக் குதித்துக் கொண்டு சொல்கிறார் மாணிக்கவாசகர்?

எவ்வெவர் தன்மையும்
தன்வயிற் படுத்து
தானே ஆகிய
தயாபரன் எம்இறை;
எப்பெரும் தன்மையும்
எவ்வெவர் திறமும்
அப்பரி(சு) அதனால்
ஆண்டுகொண் டருளி,

ஊனம் தன்னை
ஒருங்குடன் அறுக்கும்
ஆனந் தம்மே
ஆறா அருளின்;
ஒலிதரு கயிலை
உயர்கிழ வோனே!'

இனிப் பாடல் முழுவதையும் பார்ப்போம்.

தில்லை மூதூர்
ஆடிய திருவடி
பல்லுயிர் எல்லாம்
பயின்றனன் ஆகி
எவ்வெவர் தன்மையும்
தன்வயிற் படுத்தும்
தானே ஆகிய
தயாபரன் எம்மிறை
எப்பெரும் தன்மையும்
எவ்வெவர் திறமும்
அப்பரி(சு) அதனால்
ஆண்டுகொண்(டு) அருளி
ஊனந் தன்னை
ஒருங்குடன் அறுக்கும்
ஆனந்த தம்மே
ஆறா அருளினன்
ஒலிதரு கயிலை
உயர்கிழ வோனே''

---

தன்வயின் படுத்து - தன்மயமே என்பதை நிரூபித்து. தயாபரன்- கருணைமயமானவன். ஊனம் தன்னை - உடம்பாய் நிற்கிற ஆணவத்தை. ஒருங்குடன் அறுக்கும் ஆனந்தம் - வேரறக் களையும் உண்மை ஒளி. அது ஆனந்தமயமான ஆறாகப் பெருகுகிறது, பெருகி ஆணவத்தைக் கரைக்கிறது.

# பார்த்தால் போதும், பிறகு ஆசை உண்டாகிவிடும்.

நம்மிடம் பல விஷயங்கள் கண்ணாமூச்சி விளையாடுகின்றன. அப்படி விளையாடுகிற காரியங்களுள் தூரம் என்பதும் ஒன்று.

இரண்டு பேர் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். , ஒவ்வொரு வரும். ஒவ்வொரு போக்கு. அவர்களைப் பற்றிச் சொல்கிற பொழுது, "அவருக்கும் இவருக்கும் தூரம் அதிகம்" என்று வருகிறது பேச்சு.

இனி, மாட்டு வண்டியில் பிரயாணம் செய்த காலத்தில், திருச்செந்தூர், கன்னியாகுமரி, ராமேஸ்வரம் என்று போய் வந்தோம். அப்படி அடிக்கடி போய் வருகிற நமக்கு, காசிக்கு ஒரு தடவை போய் வர வேண்டும் என்று ஞாபகம் வந்தது.

ஞாபகத்தோடு கூடவே "காசி நகரம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது! எட்டாத தூரத்தில் அல்லவா இருக்கிறது" என்று தெரிகிறது. அதாவது தூரம் தெரிகிறது.

மாட்டுவண்டி போய் ரயில், மோட்டார் இவைகள் பிரயாணத்துக்கு வந்தன. பம்பாய், கல்கத்தா, டெல்லி என்று அடிக்கடி போய் வருவதுண்டு. ஆனாலும் சிங்கப்பூர், கெய்ரோ, ரங்கூன் இவை எல்லாம் தூரமாகவே தெரிந்தன.

விமானப் போக்குவரத்து அதிகமானவுடன் கானடா, ஆஸ்ட்ரேலியா, பிரேஜில் முதலிய இடங்கள் தாம் தூரமாகத் தெரிகின்றன. மற்றவை அப்படித் தெரிவதில்லை.

ராக்கட் வந்ததோ இல்லையோ, சந்திர மண்டலமே பக்கத்தில் வந்துவிட்டது. இரண்டரை லட்சம் மைல் தூரம் சாதாரணம் என்றாகிவிட்டது. சூரியன், செவ்வாய், புதன் இவைகள்தாம் கொஞ்சம் தூரத்தே நிற்பது போல் இருக்கின்றன. வியாழன், சனி, முதலியவை எட்டாத தூரத்தில் உள்ளன போலத் தோன்றுகின்றன. மற்றபடி கனடா, ஆஸ்ட்ரேலியா எல்லாம் பக்கத்தில் தான்.

நமக்கும் சூரியனுக்கும் உள்ள தூரம் ஒன்பது கோடி மைல். ஆனால் வானவெளியில் பூத்துக் குலுங்குகிற நட்சத்திரங்களின் தூரத்தைப் பார்க்கிறபொழுது லட்சம், கோடி, நூறுகோடி, ஆயிரம் கோடி என்னும் எண்கள் ஒன்றும் பிரயோசனப்படுவதில்லை. அப்படி கற்பனைக்கு எட்டாத தூரத்தில் உள்ளன, ஒவ்வொரு நட்சத்திரமும்.

அப்படிக் கோடான கோடி நட்சத்திரங்கள், கோடான கோடி அண்டங்கள். கோடி கோடி அகண்டங்கள். இவ்வளவும் இந்தப் பிரபஞ்ச வெளியில் மிதக்கின்றன.

ஜன்னல் வழியாகச் சூரிய ஒளிவரும். பஞ்சுப் பொதிபோல் கற்றை கற்றையாகவே வரும். அந்த ஒளிக்கற்றையில் ஒளித் துகள்கள் - தூசுகள் ஆயிரக்கணக்கில் ஆடும். இதை நாம் பார்க்கிறோம்.

பூமி, சூரியன், பிர்மாண்டமான நட்சத்திரங்கள் மட்டும் அல்ல, அண்டங்கள் என்ன, அகண்டங்கள் என்ன, எல்லாமே, இறைவனுக்கு முன்னால் பொடிப் பொடி தூசுகள்தாம். அணுத் துகள்களிலும் பொடிப் பொடித் துகள்தாம்.

இந்த அரிய உண்மை வார்த்தைகளில் துள்ளிக் குதித்தோடி வந்துவிடுகிறது.

எப்படி வருகிறது என்று பார்ப்போம்.

அண்டப் பகுதியின்
உண்டைப் பிறக்கம்
அளப்பரும் — தன்மைய;
வளப்பெரும் காட்சிய;
ஒன்றனுக்(கு) ஒன்று
நின்றெழில் பகரின்,

நூற்றொரு கோடியின்
மேற்பட விரிந்தன;
இல்நுழைக் கதிரின்
நுண்அணுப் புரைய
சிறிய ஆக
பெரியோன் தெரியின்.

கடவுளுடைய செயலைப் பார்க்கிறபொழுது அண்டம். பேரண்டம் இவைகூட சிறிய சிறிய அணுவாகத் தோன்றுகின்றன.

அளவிட முடியாதவன் இறைவன். ஆனாலும் பக்தி என்றால், அது எங்கிருந்தாலும் அதைத் தேடி வருகிறான் பெருமான்.

பத்தி வலையில்ப்
படுவோன் காண்க:
ஒருவன் என்னும்
ஒருவன் காண்க;
அணுத்தரும் தன்மை
இலையோன் காண்க.
அரியதில் அரிய
அரியோன் காண்க
மருவிஎப் பொருளும்
வளர்ப்போன் காண்க;
நூலுணர்வு) உணரா
நுண்ணியோன் காண்க.

இனிப் பாடல் முழுவதையும் சேர்த்துப் பார்க்கலாம்.

---

(உண்டைப் பிறக்கம் - உருண்டை உருண்டையாய் ஓடிக் கொண்டிருக்கிற கூட்டம். அளப்பரும் தன்மைய - ஒன்றுக்கு ஒன்று அளந்து சொல்ல முடியாதபடி எட்டாத தூரத்தில் நின்று ஓடுகின்றன. வளப்பெரும் காட்சி - ஒவ்வொன்றும் கற்பனைக்கு அடங்காத விசாலம் உடையவை.

இல் - வீடு. கதிரின் - ஒளிக்கற்றையில், புரைய - போன்றன. பெரியோன் - இறைவன்.

{படுவோன் - சிக்குகிறான். அப்படிச் சிக்கும் இறைவனை அவன் ஒருவனே உண்மை என்பதை. காண்க - மனமே; நீ, கண்டு தெளிவாயாக. அணுத்தரு தன்மை இலையோன் - வெளியில் போனால் அண்டங்களாய், அகண்டங்களாய், போகப் போகப் போய்க் கொண்டே இருக்கிறான் இறைவன். அப்படியே உள்ளே

அண்டப் பகுதியின்
உண்டைப் பிறக்கம்
அளப்பரும் தன்மைய;
வளப்பெருங் காட்சிய;
ஒன்றனுக்(கு) ஒன்று
நின்றெழின் பகரின்
நூற்றொரு கோடியின்
மேற்பட விரிந்தன;
இல்நுழைக் கதிரின்
நுண்அணுப் புரைய
சிறிய ஆகப்
பெரியோன் தெரியின்.
பத்தி வலையில்ப்
படுவோன் காண்க;
ஒருவன் என்னும்
ஒருவன் காண்க;
அணுத்தரும் தன்மை
இலையோன் காண்க
அரியதில் அரிய
அரியோன் காண்க;
மருவிளப் பொருளும்
வளர்ப்போன் காண்க;
நூல்உணர்(வு) உணரா
நுண்ணியோன் காண்க.

அற்புதமான பாடல். பாடப்பாட மனதுக்கு அமைதி உண்டாகும். ஆனந்தம் உண்டாகும்.

''அடடா! எவ்வளவு பெரிய பாக்கியசாலி நாம்'' என்னும் தெளிவே வந்துவிடும். வாழவாழ வாழ்க்கைக்கு ஊக்கமும் எழுச்சியும் கொடுக்கிற மந்திரமாக இருக்கிறது பாட்டு.

---

போனால், அணு, துகள், கோண் என்று பரமாணுவுக்கும் பரமாணுவாய்ப் போகிறான். அவன் இல்லாமல் வேறு ஒன்றும் இல்லை.

அரியதில் - அரிய நுட்பத்துக்கும் நுட்பமாய், மருவி-தாயாய் மருவி நின்று. நூல் உணர்வு உணரா நுண்ணியோன் - வெறும் புத்தகப் படிப்பால் வந்த பொய்யறிவுக்கு அகப்படாதவன். ஆராய்ச்சி, பட்டம், பதவி இவை எவ்வளவு தடபுடலாக இருந்தாலும் சரி. அவற்றுக்கு மசியமாட்டான் இறைவன். அப்படி நளினமும் சாதுர்யமும் நிறைந்த சதுரப்பாடுடையவன், [நுண்ணியோன், இறைவன்.]

# எனக்கு நாயகன் அவனே

மாணிக்கவாசகர் இறைவனுடைய லீலா விநோதத்தை—ஆனந்த தாண்டவத்தையே கண்ணாரக் கண்டு விட்டார். பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டார்.

ஆனந்த பரவசம் வந்தால் சும்மா இருக்கவிடுமா? மாணிக்க வாசகர் ஆடுகிறார், பாடுகிறார், ''பெருமானே! பெருமானே!'' என்று கூப்பாடு போடுகிறார்.

திம்திம் என்று குதிக்கிறார். துள்ளி விளையாடுகிறார். இறை வனுடைய தோளைப் பிடித்தே தொங்கி ஊஞ்சலாடுகிறார்.

எப்படி என்று பார்ப்போம்.

தோழா! போற்றி;
துணைவா போற்றி;
வாழ்வே! போற்றி; என்
வைப்பே! போற்றி;
முத்தா போற்றி
முதல்வா போற்றி
அத்தா போற்றி
அரனே போற்றி
உரை உணர்(வு) இறந்த
ஒருவ போற்றி
விரிகடல் உலகின்
விளைவே போற்றி
அருமையின் எளிய
அழகே போற்றி

பாரிடை ஐந்தாய்ப்
பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய்
நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த்
திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய்
மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய்
விளைந்தாய் போற்றி
குற்றா லத்தெம்
கூத்தா போற்றி
தென்னா டுடைய
சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும்
இறைவா போற்றி
அத்திக்(கு) அருளிய
அரசே போற்றி
புலிமுலை புல்வாய்க்(கு)
அருளினை போற்றி
அருவமும் உருவமும்
ஆனாய் போற்றி
துரியமும் இறந்த
சுடரே போற்றி
தெரிவரி தாகிய
தெளிவே போற்றி
அடியொடு நடுஈ(று)
ஆனாய் போற்றி
ஒழிவற நிறைந்த
ஒருவ போற்றி
பிழைப்பு வாய்ப்பு ஒன்(று)
அறியா நாயேன்
குழைத்தசொல் மாலை;
கொண்டருள் போற்றி
போற்றி போற்றி
புராண காரண!

போற்றி போற்றி
சயசய போற்றி

---

(தோழா போற்றி - ஒட்டி உறவாடும் தோழனே! பணிந்து வணங்குகிறேன். ஏற்றுக் கொள்ள வேண்டும் என்னை. வைப்பு - பொக்கிஷம். முத்தா - முத்துப்போன்ற பிரகாசம் நிறைந்தவனே! உரை உணர்வு இறந்த ஒருவ - வார்த்தைகளையும் அவற்றின் அர்த்தங்களையும் கடந்த நாயகனே.

பார் - ஜடம். வளி, காற்று. வெளி - ஆகாயம்.

உஷ்ணம், மின்சாரம், காந்தம், தோற்றம், மாற்றம் என்னும் ஐந்து அம்சங்கள் ஜடப் பொருளில் இருக்கின்றன. நீரிலோ மாற்றம் ஒன்று மட்டும் இல்லை. மற்ற நான்கும் இருக்கின்றன. தீயில் மூன்று அம்சங்கள் உண்டு. தோற்றமும் மாற்றமும் இல்லை. காற்றில், உஷ்ணமும் இருக்கிறது, குளிரும் இருக்கிறது. ஆகாயத்தில் வேறு ஒன்றும் இல்லை. ஆகாயம் ஒன்று மட்டும் இருக்கிறது. நிர்மலமாய் எங்கும் ஒருபடித்தாய் இருக்கிறது ஆகாயம். அத்திக்கு - யானைக்கு. புல்வாய்க்கு - மான்குட்டிக்கு. துரியம் - தெளிந்த யோகநிலை. தெரிவரிதாகிய தெளிவே போற்றி - இறைவன் நேருக்கு நேராக இருக்கிறான்.

எங்கும் இருக்கிறான். அவன் ஒருவனே இருக்கிறான். பளிங்கு போல் தெள்ளத்தெளிய இருக்கிறான். ஆனால் அவனைப் பார்க்க முடியவில்லை. உணர முடியவில்லை. அனுபவிக்கவும் முடியவில்லை. இந்த அதிசயத்தை என்னென்று சொல்ல! புத்தியானது வேறொரு காரியத்தில் அழுத்தமாய் ஊன்றி நிற்கிறபொழுது, கையில் பேனாவை வைத்துக் கொண்டே தேடுவோம். மூக்கில் கண்ணாடி இருக்கும். அதையும் எங்கே, எங்கே என்று தேடுவோம். அப்படித்தான் இறைவனையும் பார்க்க முடியாமல் தத்தளிக்கிறோம். நம் கூடவே இருக்கிறான் இறைவன்.

ஆனாலும் நம் புத்தி எங்கெங்கோ ஓடுகிறது. அங்கங்கே அழுத்தமாய்க் காலூன்றி நிற்கிறது. நம்மிடம் உள்ள இறைவனை நாம் பார்க்க முடியவில்லை. அப்படியானால் ஒரே பிரகாசமயமான இறைவன் தெரிய முடியாதபடி ஒளிந்திருக்கிறான் என்று அவன் மேல் பழியைப் போட வேண்டியதுதான்.

அப்படிப் பழி போட்டுப் பேசுகிற உலகத்தின் சார்பில் நின்று சொல்கிறார் மாணிக்கவாசகர்.

தெரிவரி தாகிய தெளிவே'' என்றே சொல்லி விடுகிறார்.

பிழைப்பு வாய்ப்பு ஒன்று அறியா நாயேன் - சந்தர்ப்பம், சூழ்நிலை ஒன்றும்தெரியாத மூடன்நான். குழைத்த சொல்மாலை- ஆனாலும் என்னுடைய வார்த்தைகளை - பொருளற்ற சொற்களை - வெறும் மழலைச் சொற்கள்தாம் - ஆனாலும் அவற்றை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும் பெருமானே! என்று முறையிடுகிறார் மாணிக்கவாசகர்.)

குறிப்பு :- அற்புதமான பாடல். தியானம், யோகம், தவம் என்றெல்லாம் சொல்கிறோமே! மாணிக்கவாசகர் பாடல்களை அனுபவித்துப் பாடினால் போதும். எல்லாம் தாமாக வந்துவிடும்.

கண்ணை மூடிக்கொண்டு பூசை அறையில் நின்று மணிக் கணக்கில் புலம்ப வேண்டியதில்லை.

நாலு பேருடன் சேர்ந்து மாணிக்கவாசகர் பாடல்களைப் பாடி அனுபவித்தாலே போதும்.

ஆனந்த பரவசத்துக்கு ஆளாகிவிடுவோம் நாம்.

ஏன், தனியாக இருந்து மாணிக்கவாசகர் பாடலைப் பாடி அனுபவித்தாலும் போதும். இறைவன் நம்முடன் சேர்ந்து நம்மை அவனுக்குக் கூட்டாளி ஆக்கிக் கொள்வான்.

பிறகு நாம் தனி அல்ல.

# பாட்டு முதற்குறிப்பு அகராதி



| வ.எ | பாட்டு | பக்கம் |
|---|---|---|
| 1. | அண்டப் பகுதியின் | 405 |
| 2. | அண்ணாமலையான் | 99 |
| 3. | அது பழச்சுவை என | 227 |
| 4. | அத்தனே | 331 |
| 5. | அப்பார் சடையப்பன் | 110 |
| 6. | அம்பரமாம் புள்ளித்தோல | 188 |
| 7. | அம்மையே அப்பா | 329 |
| 8. | அரிக்கும் பிரமற்கும் | 166 |
| 9. | அருளுடைச்சுடரே | 333 |
| 10. | அருந்தவருக்கு | 183 |
| 11. | அவமாய தேவர் | 165 |
| 12. | அறவையேன் மனமே | 334 |
| 13. | அறிவனே அமுதே | 60 |
| 14. | அன்பினால் அடியேன் | 247 |
| 15. | ஆடுகின்றிலை | 42 |
| 16. | ஆயமொழிக்கிள்ளாய் | 223 |
| 17. | ஆர்க்கோ அரற்றுகோ | 381 |
| 18. | ஆர்த்தபிறவி | 97 |
| 19. | ஆவா அரிஅயன் | 163 |
| 20. | இத் தேவர் தேவர் | 131 |
| 21. | இரந்திரந்து | 249 |
| 22. | இன்பம் பெருக்கி | 377 |
| 23. | இன்பால் மொழிக்கிள்ளாய் | 223 |
| 24. | இன்றெனக் கருளி | 252 |
| 25. | ஈரம்பு கண்டிலம் | 215 |
| 26. | உடையாள் உன்தன் | 236 |
| 27. | உண்டொர் தெண்பொருள் | 63 |
| 28 | உருகிப் பெருகி | 178 |
| 29. | உருத் தெரியாக் காலத்தே | 313 |
| 30. | உவலைச் சமயங்கள் | 170 |
| 31. | உள்ளப் படாத | 140 |

| | | |
|---|---|---|
| 32. | உற்றாரை | 345 |
| 33. | உன்னற்கரியசீர் | 210 |
| 34. | உன்னை உகப்பன் | 218 |
| 35. | ஊனாய் உயிராய் | 105 |
| 36. | எந்தை என்தாய் | 199 |
| 37. | எந்தையாய் எம் | 58 |
| 38. | என்னப்பன் எம்பிரான் | 186 |
| 39. | என்னை அப்பா அஞ்சல் | 84 |
| 40. | ஏதம் இலா இன்சொல் | 221 |
| 41. | ஏரார் இளங்கிளியே | 221 |
| 42. | ஒன்றாய் முளைத்தெழுந்து | 141 |
| 43. | கட்டறுத்தெனை | 61 |
| 44. | கண்கள் இரண்டும் | 387 |
| 45. | கண்ணஞ் சனத்தர் | 208 |
| 46. | கண்ணப்பன் | 129 |
| 47. | கயல்மாண்ட | 161 |
| 48. | கரணங்கள் எல்லாம் | 135 |
| 49. | கலந்து நின்னடியார் | 318 |
| 50. | கல் நார் உரித்தென்ன | 158 |
| 51. | கள்வன் கடியன் | 137 |
| 52. | கறங்கோலை | 162 |
| 53. | காணும தொழிந்தேன் | 356 |
| 54. | காலம் உண்டாகவே | 327 |
| 55. | கிஞ்சுகவாய் | 222 |
| 56. | கிளிவந்தமென்மொழி | 110 |
| 57. | குலம்பாடி | 181 |
| 58. | கூறும்நாவே | 320 |
| 59. | கேட்டாரும் | 32 |
| 60. | கொள்ளுங்கில் | 57 |
| 61. | கொள்ளேன் | 6 |
| 62. | கொன்றைமதியமும் | 211 |
| 63. | சட்டோ நினைக்க | 132 |
| 64. | சாதிகுலம் | 311 |
| 65. | சிந்தனைநின் | 35 |
| 66. | சிரிப்பார் களிப்பார் | 244 |
| 67. | சிரிப்பிப்பன் | 93 |

| | | |
|---|---|---|
| 68. | சீரார் திருவடி | 196 |
| 69. | சீலம் இன்றி | 390 |
| 70. | சூடுவேன் | 107 |
| 71. | செம்மைநலம் | 392 |
| 72. | செல்வம் நல்குரவு | 59 |
| 73. | சோதியே | 296 |
| 74. | ஞானவாள் | 374 |
| 75. | தந்ததுன்தன்னை | 255 |
| 76. | தரிக்கிலேன் | 65 |
| 77. | தாரகை போலும் | 90 |
| 78. | திண்போர் விடையான் | 193 |
| 79. | திருந்துவார் | 300 |
| 80. | தில்லைமூதூர் | 401 |
| 81. | தினைத்துணை | 128 |
| 82. | துடிகொள்ளுநர் | 269 |
| 83. | துப்பனே | 288 |
| 84. | தேவதேவன் மெய்ச் | 348 |
| 85. | தேனாடு கொன்றை | 198 |
| 86. | தேன்புக்கதண்பனை | 187 |
| 87. | தையலோர் பாகத்தர் | 209 |
| 88. | தோலும் துகிலும் | 153 |
| 89. | தோழா போற்றி | 406 |
| 90. | நங்கைமீர் | 350 |
| 91. | நாடகத்தால் | 9 |
| 92. | நாயில்க் கடைப்பட்ட | 195 |
| 93. | நாயேனைத் 'தன்னடிகள் | 142 |
| 94. | நித்தம்மணாளர் | 207 |
| 95. | நிருத்தனே | 262 |
| 96. | நிற்பார் நிற்க | 372 |
| 97. | நீண்டகரத்தன் | 208 |
| 98. | நெக்குநெக்குள் | 262 |
| 99. | நெறியல்லாநெறி | 391 |
| 100. | பண்டாய | 383 |
| 101. | பண்பட்ட | 195 |
| 102. | பாடிமால் | 266 |

| | | |
|---|---|---|
| 103. | பாடிற்றிலேன் | 87 |
| 104. | பாரார்விசும்புளார் | 104 |
| 105. | பார்பாடும் | 171 |
| 106. | பாரொடுவிண்ணாய் | 264 |
| 107. | பாரோர்விண்ணோர் | 259 |
| 108. | பால்நினைந்து | 336 |
| 109. | பிணிஎலாம் | 326 |
| 110. | புத்தன் முதலாய | 202 |
| 111. | புற்றில்வாழ் | 324 |
| 112. | புன்புலால் | 340 |
| 113. | பூணொணாததோர் | 304 |
| 114. | பூதங்கள் ஐந்தாகி | 309 |
| 115. | பூதங்கள் தோறும் | 227 |
| 116. | பூவேறு | 126 |
| 117. | பெற்றி பிறர்க்காய | 115 |
| 118. | பேசப்பட்டேன் | 67 |
| 119. | பொய்யனேன்அகம் | 258 |
| 120. | பொய்யாய செல்வத்தே | 149 |
| 121. | போற்றி அருளுக | 100 |
| 122. | போற்றி என்றும் | 56 |
| 123. | மாடு நகைவாள் | 120 |
| 124. | மாலே பிரமனே | 168 |
| 125. | முத்தனை | 352 |
| 126. | முத்திக்குழன்று | 177 |
| 127. | முத்திநெறி | 391 |
| 128. | முன்னானை | 111 |
| 129. | முன்னைப்பழம் | 96 |
| 130. | மூவரும் முப்பத்து | 378 |
| 131. | மெய்தான்அரும்பி | 3 |
| 132. | மெய்யனேவிகிர்தா | 291 |
| 133. | மேலைவானவரும் | 52 |
| 134. | யானேதும் பிறப்பஞ்சேன் | 12 |
| 135. | யானேபொய் | 72 |
| 136. | யாவர்க்கும் மேலாம் | 379 |
| 137. | வண்ணந்தான் | 39 |
| 138. | வன்னெஞ்சக்கள்வன் | 136 |

139. வாள்த்தடம் 118
140. வாழ்கின்றாய் 24
141. வாழ்த்துவதும் 21
142. வானநாடரும் 75
143. வானாகி 16
144. வான்கெட்டு 179
145. விச்சதன்றியே 80
146. விண்ணிறைந்து 397
147. விண்ணோர் முழுமுதல் 158
148. வினையிலே கிடந்தேனை 30
149. வெள்ளந்தாழ் 27
150. வேதமும் வேள்வியும் 121
151. வேத மொழியர் 210
152. வைத்தநிதி பெண்டிர் 132
153. வையகம் எல்லாம் 119

## பிழைதிருத்தம்

| பக்கம் | வரி. | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 9 | 16 | தன்னன தன்ன் னனன | தன்னன தன்னனன |
| 44 | 19 | வருகிறவகள் | வருகிறவர்கள் |
| 45 | 5 | ஓட | ஓடி |
| ,, | 16 | அழுக்காக | அமுக்காக |
| 55 | 8 | திரும்பிக்கூப் | திரும்பிக்கூடப் |
| 67 | 16 | ஒதுங்கினார் | ஒதுங்கினர் |
| 82 | 1 | அடிகல்லி | அடைக்கல்லில் |
| 84 | 34 | தளிதுத் | தவித்து |
| 91 | 22 | போனீர் | போவீர் |
| 92 | 2 | விடுவேன்னு | விடுவேன் |
| 106 | 3 | தேனுய் | தேனார் |
| 110 | 18 | அற்புதம் | அற்புதன் |
| 111 | 34 | பின்னான்எம் | பின்னானை |
| 118 | 13 | மருகுகிறார் | மறுகுகிறார் |
| 121 | 13 | ஆய்இன்பமும் | இன்பமும் |
| 122 | 12 | நாயை | தாயை |
| 125 | 32 | பாகத்தில் | பாதத்தில் |
| 129 | 3 | சுன்னப்பன் | என்னப்பன் |
| 148 | 30 | தெவஒளிய் | தெய்வஒளி |
| 188 | 30 | அடை | ஆடை |
| 194 | 22 | உவர்த்தனாயில் | உவர்த்தரையில் |
| 198 | 26 | பாதாலத்தை | பாதலத்தை |
| 208 | 14 | கண்ணஞ்சனத்தார் | கண்ணஞ்சனத்தர் |
| 225 | 6 | இத்தனைக் | இத்தனை |
| 248 | 23 | உயிர்வார்க்கத் | உயிர்வர்க்கத் |
| 261 | 10 | தரையாகக் | தரையாக |
| 269 | 30 | தழலி | தழலின் |
| 278 | 28 | என்ன அநியாயம் ஞானு சிரியர் அங்கு இல்லை | என்ன அநியாயம்! ஞானாசிரியர் அங்கு இல்லை!! |
| 279 | 1 | எங்குக் | எங்கு |
| ,, | 30 | அவர்களை | அவர்களே |

| | | | |
|---|---|---|---|
| 280 | 24 | காணாம்ல் | காணாமல் |
| 288 | 23 | என்றும் | என்னும் |
| 296 | 10 | பால்கொள்வென் | பால்கொள்வெண் |
| 300 | 37 | என்னுடைய | என்னுடை |
| 303 | 32,33 | சொல்கிறார். மாணிக்கவாசகர் | சொல்கிறார் மாணிக்கவாசகர். |
| 305 | 3 | என்றிம் | என்னும் |
| 315 | 27 | சொல்லிக்கொடுக்க | சொல்லிக்கொடுத்த |
| 319 | 13-14வது வரிகளை-குறிப்புஎன்னும் பகுதியோடு சேர்த்து வாசிக்க வேண்டும். | | |
| 322 | 14 | மச்சானமார் | மச்சான்மார் |
| 333 | 7 | யேகத்தினி | யோகத்தின் |
| 351 | 26 | காணிக்கையாகத | காணிக்கையாகக் |
| 354 | 8 | சுழலும் | கழலும் |
| 384 | 6 | பைத்தியமேநீ | பைத்தியமே! நீ |
| ,, | 24 | சொன்னாள். தோழி | சொன்னாள் தோழி. |
| 390 | 34 | போரானந்தம் | பேரானந்தம் |
| 396 | 1-2 | உணர்த்தினான். அது தான் முறை என்றுதான் சொல்லவேண்டும் | உணர்த்தினான் என்று தான் சொல்லவேண்டும் அதுதான் முறை |
| 397 | 11 | கல்லாய் மனிதராய் | கல்லா மனிதராய் |
| 398 | 8 | ஒளிக்கு | ஒளிக்கும் |